2451/அ31/85

வெளியீடு 1 ...
ஆணையர்
இ ஆவணக்காப்பகம் மற்றும்
வரலாற்று ஆராய்ச்சி
11 APR 1
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர், சென்னை-8.

[Issued 4-2-85

2794

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஏப்ரல் 12, 1984 - தொகுதி LXV எண் 3
Thursday the 12th April 1984 - Volume LXV No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly Secretariat, Fort St. George.
Madras - 600 009

விலை: ரூ. 3-50 காசுகள்] [Price Rs. 3-50 pais

D
Y211.3 N84
N84.65.3 f4
136255

உள்ளடக்கம்.

12–4–1984.

பக்கங்கள்

1. வினாக்கள்—விடைகள் : .. ..
உடுக்குறியிட்ட வினாக்கள் 303 – 326

2. தகவல் கோரல் : .. .. ..

(அ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை 326—327

(ஆ) திரு. சிவசாமி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து விலகிவிட்டதாக அறிக்கை கொடுத்துள்ளது. 327—328

(இ) குடிநீர் வடிகால் வாரியப் பாறியாளர்கள் உண்ணாவிரதம். 328—329

(ஈ) விவசாயப் பம்பு செட்டுகளுக்கான வைப்புத் தொகையை அதிகப்படுத்துவது. 329

3. ஒத்திவைப்புத் தீர்மானம் : .. ..
கும்பகோணம் காவல் நிலையத்தில் ஒருவர் இறந்துள்ளதாகக் கூறப்படுவது. 329—335

4. கவன ஈர்ப்பு : .. .. ..
காவேரிப்பட்டினம் ஒன்றியம் தேவீரஹள்ளி ஏரிக்குத் தென்பெண்ணை ஆற்றிலிருந்து தண்ணீர் விடுவது. 335—337

5. அறிக்கை அளித்தல் : .. .. .. 35
அரசு உறுதிமொழிக் குழு.

6. வரவு-செலவுத் திட்டம் 1984–85—வாக்கெடுப்பு : (தொடர்ச்சி)

(அ) கோரிக்கை எண். 27 —கதர்த் தொழில் 337—369

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி 337—338
360—369

திரு. பாபு ஜனார்த்தனன் 338—342

திரு. த. மாரிமுத்து 342—345

திரு. டி. மணி 345—350

| | |
|---|---|
| திரு. ஆர். நவநீத கிருஷ்ணபாண்டியன் | 350—352 |
| திரு. இரா. கருப்பையா | 352—355 |
| திரு. எல். இளையபெருமாள் | 355—360 |
| (ஆ) கோரிக்கை எண் 21 —மீனவளம் | 369—414 |
| மாண்புமிகு திரு. க. கலைமணி | 369—370 408—414 |
| திரு. இல. பலராமன் | 370—376 |
| திரு. இரா. அமிர்தராஜ் | 376—381 |
| திரு. டி. மணி | 382—387 |
| திரு. இரா. கருப்பையா | 387—392 |
| திரு. பி. முகமது இஸ்மாயில் | 392—396 |
| திரு. எம். எஸ். மாணிக்கம் | 396—400 |
| திரு. ப. பொன்னுரங்கம் | 400—408 |
| 7. பேரவைமுன் வைக்கப்பெறும் ஏடுகள் .. | 414 |


## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1984, ஏப்ரல் 12, வியாழக்கிழமை.

பங்குனி 30, ருத்ரோத்காரி—திருவள்ளுவர் ஆண்டு 2015

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :

''கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கம் கடிந்து செயல்''.

மனம் கலங்காமல் ஆராய்ந்து துணிந்து ஏற்ற தொழிலைச் சோர்வு கொள்ளாமல் காலம் தாழ்த்தாமல் செய்து முடிக்க வேண்டும்.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள் 558, 559, 560, 561 ஆகியவை மாண்புமிகு அமைச்சர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளிவைக்கப்பெறுகின்றன.

தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகத்தின் மூலம் உரம் மற்றும் பூச்சி மருந்து விற்பனை செய்யும் திட்டம்.

450 —(*வினா எண்.21105) திரு .எஸ்.டி.உகம் சந்த்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) Agro Industries Corporation மூலம் உரங்கள், பூச்சி மருந்துகள் நேரிடையாக விவசாயிகளுக்கு Retail மூலம் விற்கப் படுமா ?

(ஆ) மதுராந்தகம் 'தாய் நிறுவன' கிளையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) மற்றும் (ஆ) ஆம். தற்போது தேர்வாய்வாக தமிழ்நாடு வேளாண் தொழில் கள் கழகத்தின் மதுராந்தகம் கிளையில் உரம், பூச்சி மருந் துகள் ஆகியவை சில்லறை விற்பனையில் நேரிடையாக, விவ சாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வேளாண்மைக் கூடங்களில் விற்கக்கூடிய பொருள்களின் விலைகளைப் பொறுத்த மட்டில், விலையிலே வித்தியாசம் இருக்கிறது. முன்னாலே எல்லாம் மானியம் கொடுத்து, ஓரளவிற்கு விலைகள் குறைக்கப்பட்டிருந்தது. அது போலவே மீண்டும் மானியம் கொடுத்து விலைகளைக் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வெள்ளத்தினால் சேதம், அல்லது வறட்சியினால் தாக்குதல் ஏற்படுகிற நேரத்திலே தான் மானியம் கொடுத்து, உரம், பூச்சி மருந்துகளைத் தர முடியும். சாதாரண காலங்களில் தருவதற்கு இயலாது.

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அக்ரோ இன்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் மூலமாகவோ அல்லது வேறு வேளாண்மைத் துறையின் மூலமாகவோ அல்லது இந்த மருந்துகள் விற்கின்ற கடைகளின் மூலமாகவோ உரம், பூச்சி மருந்துகள் ஆகியவை, எப்படியாயினும் சரி- என்னுடைய பகுதியிலே மருந்துகளே இல்லாமல் இருக்கின்றன. ஆகவே அவைகளையெல்லாம் சரியாகக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா இன்னொன்று. டிராக்டர்களை, அக்ரோ இன்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் மற்றும் வருவாய் அதிகம் உள்ள பல இன்டஸ்ட்ரீஸ்கள் எல்லாம் முன்னாலே விவசாயிகளுக்கு வாடகைக்கு விட்டு வந்தார்கள். அது தற்போது அறவே நின்று போயிருக்கிறது அதையும் செயல்படுத்த அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண் தொழில்கள் கழகத்தின் சார்பாக விவசாயிகளுக்கு இயந்திரக் கலப்பையை வாடகைக்கு விடுகிற முயற்சி மறுபடியும் மேற்கொள்ளப்படுகிறது என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல அவர்களுடைய மாவட்டப் பகுதிகளிலே உரம், பூச்சி மருந்துகள் இல்லை அல்லது பற்றாக்குறையாக இருக்கிறது என்கிற நிலை இருக்குமானால், நிச்சயமாகக் கவனிக்கப்படும். ஏனென்றால் அரசினுடைய கையிருப்பு அளவு குறைவாக இல்லை, தேவையான அளவுக்கு இருக்கிறது என்கிற நிலைமை இருக்கிறது. ஆகவே, அவைகளையும் வழங்க அரசு ஏற்பாடு செய்யும்.

**திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் :** துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் பூச்சி மருந்துகளை அடிக்கிறபோது ஒரு வயலிலே அடித்து விட்டு மறு வயலிலே அடிக்கவில்லை





என்று சொன்னால், இரண்டு நாட்கள் கழித்து, மருந்து அடிக்காத வயலிலிருந்து பூச்சிகள் மருந்து அடித்த வயலுக்கு வந்து ஒட்டிக்கொள்ளுகின்றன. ஆகவே, அக்ரோ இன்டஸ்ட்ரீஸ் மூலமாக உரம் அல்லது பூச்சி மருந்துகளை ஒட்டு மொத்தமாக ஒரு பகுதியிலே அல்லது ஒரு கண்மாயின் பாசனப் பகுதிகள் அனைத்திற்கும் என்ற வகையில், வேளாண் தொழில்கள் கழகம் மூலமாக அடிப்பதற்கு அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, வேளாண் தொழில்கள் கழகம் என்பது ஒரு தனி அமைப்பு. உரம், பூச்சி மருந்து போன்றவைகளை விவசாயிகளுக்கு விற்பனை செய்கிற ஒரு அமைப்பு. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது போல, ஒட்டு மொத்தமாக மருந்து தெளிப்பதற்கு ஏற்பாடு செய்வது என்பது, சில நேரங்களிலே, சில இடங்களிலே ஏற்படுகிற சில நோய்த் தாக்குதல்களை ஒட்டி, நாமம வேளாண்மைத் துறை மூலமாக செய்து வருகிறோம்.

**திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, இந்த வேளாண்மைத் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பிக்கப்பட்ட காலத்திலே சில இடங்களிலே அதற்கு வேண்டிய டிராக்டர்கள் வழங்கப்பட்டு, வாடகைக்குக் கொடுக்கப்பட்டன. இப்போது அவையெல்லாம் செயலற்று இருப்பதன் காரணமாக சிறு விவசாயிகள் தாங்கள் சொந்தமாக டிராக்டர்கள் வாங்க முடியாததன் காரணமாக வேளாண் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு டிராக்டர்கள் வழங்க ஏற்பாடு செய்து சிறு, விவசாயிகளுக்கும், டிராக்டர்கள் வாங்கமுடியாதவர்களுக்கும் மலிவான வாடகையில் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்வார்களா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** கேள்வி வேளாண் தொழில்கள் கழகம் சம்பந்தப்பட்டது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவது வேளாண்மை தொழில் சேவை சங்கத்தைப்பற்றி, என்கோபடிக் பற்றியது என்று கருதுகிறேன். எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு டிராக்டர்கள் விவசாயப் பெரு மக்களுக்கு வாடகைக்கு வழங்குவதற்கு இந்தத் துறை ஒட்டுமொத்தமாக ஆராயும்.

சணல் பயிரிடுவதற்கான சாத்தியக்கூறுகளைக் கண்டறிய மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள்.

*451*-*வினா எண் *21144* **திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலத்தில் சணல் பயிரிடுவதற்கான சாத்தியக் கூறுகளைக் கண்டறிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

[1984 ஏப்ரல் 12

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து** : (அ) ஆம்.

(ஆ) தமிழ் நாட்டில் சணல் சாகுபடி பற்றிய பரிசோதனை பாத்திகள் 1971-72ம் ஆண்டில் தஞ்சாவூர் மாவட்டம், கும்ப கோணம் கோட்டத்தில் காமாட்சிபுரம் கிராமத்தில் தனியார் ஒருவர் வயலில் வேளாண்மைத்துறையால் அமைக்கப்பட்டது. அதிகச் செலவு செய்து சணல் உற்பத்தி செய்து பார்த்ததில், பதப்படுத்துவதிலும், நல்ல விலைக்கு விற்பனை செய்வதிலும் பல இன்னல்கள் ஏற்பட்டன என்று தெரியவந்துள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் தமிழ் நாட்டில் சணல் பயிர் தனிப்பயிராகவோ/கலப்புப் பயிராகவோ சாகுபடி செய்ய இயலும் எனக் கருத்து தெரிவித்துள்ளது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் செயல்படும் சணல் ஆராய்ச்சி நிலையம் துணை மையமாக, மைய வேளாண்மை ஆராய்ச்சிக் குழுவின் (ICAR ) திட்டத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது. புதிய இரகங்களின் இனப்பெருக்கம் மற்றும் மதிப் பாய்வு போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நுண் அணுக்கள், மதிப்பாய்வு போன்ற பணிகளும் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. கலப்பினம் மூலமாக இனப்பெருக்கம் செய்யப் பட்டு இந்த வகைகளை (Cultures ) ஜே.ஆர்.ஓ. 878, ஜே.ஆர்.ஓ. 7835 மற்றும் ஜே.ஆர்.ஓ. 7447 போன்ற இரகங் களுடன் சரிபார்க்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு ஆண்டும் இனப்பெருக்கம் மூலமாக, புதிய கண்டுபிடிப்பு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதன் மூலமாக புதிய வகைகளான (Cul ures) டி.ஜே.ஓ. 121, டி.ஜே.ஓ. 122, டி.ஜே.ஓ. 123, டி.ஜே.ஓ. 124 மற்றும் டி.ஜே.ஓ. 127 போன்றவைகள் ஆராய்ச்சியின் மூலம் மகசூலைக் கண்டறிய அனுசரணை ஆராய்ச்சிப் பாத்திகள் (Compara.ve yeld trials) அமைக்கப்பட்டு வருகின்றன. அதைத் தவிர ஒருங்கிணைந்த ஆராய்ச்சி பத்திகள் (Coordinate Trials) ஒவ்வொரு ஆண்டும், அகில இந்திய கருத்தரங்கில் முடிவெடுப்பதற்கேற்ப நடத்தப் பட்டு வருகின்றன.

ஒருபோக சாகுபடி நிலங்களில் பயறுவகைகளைப் பயிரிடும் திட்டம்.

452—(*வினா எண். 21981) திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒருபோக சாகுபடி இடங்களில் பயறு வகைகளைப் பயிரிடும் திட்டத்தைச் செயல்படுத்த அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) இதற்காக விவசாயிகளுக்கு விசேஷப்பயிற்சி அளிக்கப்படுமா ?



1984 ஏப்ரல் 12]

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து** : (அ) ஆம். நடப்பு கோடைப் பருவத்தில் ஒரு போக நெல் தரிசுகளில் பயறு வகைகள் சாகுபடி செய்ய மாபெரும் திட்டம் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

(ஆ) ஆம். ஊராட்சி ஒன்றியத்தில் ஆண்டிற்கு நூறு விவசாயிகள் வீதம் பயறு சாகுபடி நுணுக்கங்களைப் பற்றிய பயிற்சி அளிக்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : வினாக்கள் 562 முதல் 565 வரை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக் கிணங்க தள்ளிவைக்கப்படுகின்றன.

திரு. கு. ரமணி : பல அமைச்சர்கள் கேள்விகளுக்குப் பதில் சொல்வதற்கு இங்கே வரமுடியவில்லையென்றால் எங்களுக்கு துணைக் கேள்விகள் கேட்க வாய்ப்புக் கிடைப்பதே கஷ்டமாகிவிடும்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு** : துணைத் தலவர் அவர்களே, அமைச்சர்களும் மனிதர்கள்தான். கேள்விகள் அஜெண்டாவிலே சேர்க்கப்பட்ட பின்னால் ஏதாவது தவிர்க்க முடியாத காரணத்தினாலே ஒரு சிலர் வெளியூருக்குப் போய் விடுகிறார்கள்; அல்லது உடல்நலம் சரியில்லை என்ற நிலைமை ஏற்பட்டால் ஒழிய மற்றபடி எல்லோரும் வந்து விடுகிறார்கள். இன்றைக்கு தள்ளிவைக்கப்படுகின்ற கேள்விகள் இன்னொரு நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றனவே தவிர, ரத்து செய்யப்படுவதில்லை. அவை இன்னொரு நாளைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. சோ. அழகர்சாமி** : பாயிண்ட் ஆப் ஆர்டர்.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : : கேள்வி நேரத் தில் பாயிண்ட் ஆப் ஆர்டர் கிடையாது. (குறுக்கீடு) கூடுமான வரையில் கேள்வி நேரத்தில் அமைச்சர்கள் இங்கே வருவது நல்லது. வராமல் இருப்பதைத் தவிர்க்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. ச., இராமச்சந்திரன்** : துணைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அரிய ஆணையை முடிந்தவரையில் அமைச்சர்கள் நிறைவேற்றப் பாடுபடுவோம் என்று தெரிவித்துக் கொண்டு, கேள்வி நேரத்திலே ஒழுங்குப் பிரச்சினை எழுப்புவது சரியல்ல என்ற தங்களுடைய தீர்ப்பையும் அமல்படுத்த வேண்டு மென்று நான் கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : கேள்வி நேரத் திலே அமைச்சர்கள் வராமல் இருப்பதைத் தவிர்க்க வேண்டும். கேள்வி நேரம் என்பது ஜனநாயகத்திலே ஒரு முக்கியமான நேரமாகக் கருதப்பட வேண்டும். (குறுக்கீடு) இதற்கு மேலே என்ன வார்த்தைகளை நான் பயன்படுத்துவது ? நான் உத்தர விடுகிறேன்.

னதுபோல், இந்தத் திட்டங்கள் கைவிடப்பட்டு கூட்டுறவுத் துறையில் கொண்டு வரப்பட்டு இப்போது கூட்டுறவுத் துறையில் இருக்கின்ற சங்கங்களிலே உற்பத்தி செய்யப்படுகிற துணிகளை ஏற்றுமதி செய்வதற்காகத்தான் இந்த கோ-ஆப்டெக்ஸ் இண்டர்நேஷனல் என்ற பிரத்தியேகமான அமைப்பை ஏற்படுத்தி அந்த கோ-ஆப்டெக்ஸ் இண்டர்நேஷனல் மூலமாக வெளிநாடுகளுக்கு துணிகளை ஏற்றுமதி செய்கிறோம். இந்த கோ-ஆப்டெக்ஸ் இண்டர்நேஷனல் மூலமாக ஏற்றுமதி செய்கின்ற துணிகளை பிரதம சங்கங்களிலிருந்து வாங்கி தலைமை சங்கமாக இருக்கிற கோ-ஆப்டெக்ஸ் மூலமாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஏற்கெனவே நான் சொன்னதுபோல் ஒரு கோடி ரூபாய்க்கு ஏற்றுமதியானது இனிமேல் வெளிநாடுகளில் இன்னும் நம் சந்தைகளை பிடிப்பதற்காக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற அந்த சாத்தியக் கூறுகளை அரசு மட்டத்தில் பல்வேறு நிலைகளில் ஆய்ந்து வருகிறோம். இந்த ஆண்டு ஏறத்தாழ $1\frac{1}{2}$ கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி ஆகும் என்று எதிர்பார்க்கிறோம்.

திரு. க. ரங்கசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தனியார் துறையைச் சேர்ந்தவர்கள் வெளிநாடுகளுக்கு கைத்தறித் துணிகளை ஏற்றுமதி செய்து மிக இலாபகரமாக வியாபாரம் செய்கிறார்கள். அரசுத்துறையில் இயங்கிவருகின்ற கரூர் மற்றும் குறிஞ்சிப்பாடியில் அமைக்கப்பட்டுள்ள ஏற்றுமதி வளர்ச்சித் திட்டங்கள் நஷ்டத்தில் இயங்குகின்றன என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதற்கு இரண்டு காரணங்கள் சொல்லப்படுகின்றன. ஒன்று, குறிப்பிட்ட காலத்தில் அவற்றை அனுப்ப வேண்டும் என்பது. இன்னொன்று, தேவையான, நல்ல வடிவமைப்புள்ள டிசைன்களை நாம் உருவாக்க வேண்டும் என்பது இந்த இரண்டிலும் அரசாங்கம் கவனம் செலுத்தி இவற்றினை இலாபகரமாகக் கொண்டுவர அரசு முயற்சி எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, நான் சொன்னது, ஏற்றுமதி வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் கரூர் மற்றும் குறிஞ்சிப்பாடி ஆகிய இடங்களில் ஆரம்பிக்கப்பட்ட திட்டம் நஷ்டத்தில் இயங்குகின்றன என்பதன் அடிப்படையில் அவை கூட்டுறவுத் துறையின் கீழ் கொண்டுவரப்பட்டது. ஆனால் கோ-ஆப்டெக்ஸ் இண்டர்நேஷனல் மூலம் அனுப்பப்படுகிறவை நஷ்டத்தில் இயங்கவில்லை. ஆனாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனைப்பற்றி—குறித்த காலத்தில் அனுப்புவது, டிஸைன் போன்றவை குறித்து இந்த அரசு கவனம் செலுத்தி வருகிறது. தொடர்ந்து கவனம் செலுத்தும்.

திரு. செ. செம்மலை : தலைவர் அவர்களே, கைத்தறி ஏற்றுமதி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கரூர், குறிஞ்சிப்பாடி போன்ற இடங்களில் மொத்தம் எவ்வளவு தறிகள் செயல்பட்டு



வந்தன என்ற விவரத்தையும், இந்த வளர்ச்சித் திட்டத்தை மேலும் விரிவுபடுத்த அல்லது தமிழ்நாட்டில் உள்ள வேறு சில இடங்களில் இதை விரிவுபடுத்த அரசாங்கம் பரிசீலித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, ஆயிரம் தறிகள் உள்ளடக்கியதாக இந்த இரண்டு இடங்களில் ஏற்றுமதி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செயல்பட்டதாக ஏற்கனவே சொன்னேன். இந்த இரண்டும் நஷ்டத்தில் இயங்கியதன் காரணமாக, குறிஞ்சிப்பாடி, கரூர் இவற்றில் அமைக்கப்பட்டவை—20—10—1980, 19—2—1980 ஆகிய தேதிகள் முதற்கொண்டு இந்த இரண்டு திட்டங்களும் கூட்டுறவு அமைப்பாக மாற்றியமைக்கப்பட்டு கூட்டுறவுத் துறையில் கொண்டு வரப்பட்டது என்று ஏற்கெனவே விளக்கம் சொல்லியிருக்கிறேன்.

டாக்டர் கே. சமரசம்: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டு பட்டு, கைத்தறித் துணிகளுக்கு வெளிநாடுகளில் கிராக்கி மிக அதிகமாக உள்ளது. மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் அமெரிக்காவிற்கு ஐக்கிய நாடுகள் சபைக்கு சென்றிருந்தபோது தமிழ்நாட்டு லுங்கிகளை அங்கே விரும்பி வேண்டி கேட்டிருக்கிறார்கள். அதே போல் ஹாங்காங்கில் இந்தத் துணிகளைப் பதப்படுத்தி வண்ணப்படுத்தி மிக நல்லமுறையில் ஒரே நேரத்தில் நூறு துணிகள் கட்டிங் செய்து தயாரிக்கக்கூடிய நிலையை எல்லாம் உருவாக்கியிருக்கிறார்கள். எனவே, தமிழ்நாட்டில் தேங்கிக் கிடக்கக்கூடிய கைத்தறித் துணிகளை நல்ல முறையில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய வகையில் நவீன முறையில் அதைத் தயாரித்து கோ-ஆப்டெக்ஸ் மூலம் அனுப்பி, கைத்தறித் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில் நவீன ரகங்களை உற்பத்தி செய்ய தமிழ்நாட்டிலிருந்து ஒரு வல்லுநர் குழுவை ஹாங்காங்கிற்கு அனுப்பி, அதன் மூலம் கைத்தறித் தொழிலாளர்களுக்கு உதவுகின்ற திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசாங்கம் முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, ஏற்கெனவே கைத்தறித்துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. அரங்கநாயகம் மற்றும் இந்தத் துறை இயக்குநர், செயலாளர் ஆகியோரைக் கொண்ட ஒரு குழு வெளிநாடுகளுக்கெல்லாம் சென்று ஆய்வு செய்து வந்திருக்கின்றார்கள். அந்த அடிப்படையில்தான் சிங்கப்பூரில் ஒரு கோ-ஆப்டெக்ஸ் இண்டர்நேஷனல் தன்னுடைய அங்காடி ஒன்றை அங்கே திறந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் கூறியுள்ள யோசனையும் பரிசீலிக்கலாம்.

திரு. க. இரா. சின்னராசு : தலைவர் அவர்களே, கைத்தறித் துணிகள் எந்தெந்த ஆண்டுகளில் எவ்வளவு எவ்வளவு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது என்பதையும், எந்தெந்த நாடுகளில் நம்முடைய அரசாங்கத்தின் சார்பாக அங்காடிகள்

திறந்து கைத்தறித் துணிகளை விற்பனை செய்ய அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கின்றது என்பதையும் அறிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல் 1980-லிருந்து 50 இலட்சம் ரூபாய், 75 இலட்சம், ஒரு கோடி, ஒன்றரைக் கோடி ரூபாய் என்று படிப்படியாக ஏற்றுமதியின் அளவு உயர்ந்து கொண்டே போகிறது. நாம் இப்போது திறந்திருக்கின்ற அங்காடி — சிங்கப்பூரில் மட்டும்தான் நேரடியாக நாம் நம்முடைய அங்காடியைத் திறந்திருக்கிறோம். சிங்கப்பூர் வழியாக அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளுக்கெல்லாம் இப்போது அனுப்பிக் கொண்டிருக்கிறோம்.

(முற்பகல் 9—20)

திரு. சா. கிருட்டிணமூர்த்தி: : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் இன்றைக்கு கைத்தறித் துணிகள் தேங்கி இருப்பது அரசுக்குத் தெரியுமா ? இப்படித் துணிகள் தேங்கி இருப்பதன் காரணமாக இன்றைக்குக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் கூலி கூட கொடுக்க முடியாத நிலைமையில், இன்றைக்கு சங்கங்கள் எல்லாம் நிறைந்திருக்கின்றன. இதற்காக அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றது என்பதை நான் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றிலிருந்து துவங்கி இன்னும் ஒரு மாத காலத்திற்கு தமிழ்நாடு முழுவதும் கைத்தறிக் கண்காட்சி நடத்தப்பட இருக்கின்றது. சென்னையிலே மாண்புமிகு ஆளுநர் அவர்கள் துவக்கியிருக்கின்றார்கள். இந்த ஒரு மாத காலமும் 20 சதவீதத்திலிருந்து 40 சதவீதம் வரை ரிபேட் கொடுக்க அரசு முன்வந்திருக்கின்றது. இதன் மூலமாக ஏறக்குறைய 21 கோடி ரூபாய்க்கு இந்த ஒரு மாத காலத்திலே மட்டும் சென்னை உட்பட 11 மையங்களில் விற்பனை ஆகும் என்று எதிர்பார்க்கிறோம். அதன் காரணமாக இப்போது இருக்கின்ற தேக்கம் பெருமளவுக்குக் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. தி. அன்பழகன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறித் துணி விற்பனையின் போது தமிழக அரசு கொடுக்கின்ற சிறப்புத் தள்ளுபடியைப் போன்று ஏற்றுமதி செய்யப்படுகின்ற துணிகளுக்கும் சிறப்புத் தள்ளுபடி கொடுத்து விற்பனையை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன். மற்ற உலக நாடுகளில் உள்ள எந்தெந்த இடங்களுக்கு புதிதாக இந்த கைத்தறித் துணியை ஏற்றுமதி செய்வதற்கான முயற்சியினை அரசு எடுத்துக் கொண்டிருக்கின்றது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, துணைக் கேள்விகள் மூலக்கேள்வியிலிருந்து விலகி எங்கோ போய்க் கொண்டிருக்கின்றன. நானும் பதில் சொல்லிக் கொண்டே இருக்கிறேன். இப்போதைக்கு சிங்கப்பூர் தவிர மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பது போல் வேறு எந்த நாடுகளிலும் உடனடியாக அங்காடி திறக்கின்ற எண்ணம் இப்போது பரிசீலனையில் இல்லை.

அறந்தாங்கியில கட்டப்பட்டுவரும் நூற்பாலை.

567 — (*வினா எண் 22770) திரு. பெ. திருமாறன்: மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி நூற்பாலை எப்பொழுது செயல்படத் தொடங்கும் ?

(ஆ) அதன் திட்ட மதிப்பீடு எவ்வளவு ?

(இ) எத்தனை பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) நூற்பாலையின் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டு ஆலை இவ்வாண்டு இறுதிக்குள் செயல்படத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

(ஆ) ஏறக்குறைய ரூபாய் 750 இலட்சம்.

(இ) 704 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அறந்தாங்கி நூற்பாலை செயல்படத் தொடங்குகின்ற போது புதுக்கோட்டை மக்களுக்கு முன்னுரிமை அளித்து அங்குள்ள மக்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்புக்களை அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு; துணைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை, தர்மபுரி, தேனி, திருநெல்வேலி மாவட்டத்தில் எட்டையபுரம், இராமநாதபுரம், ஆகிய ஐந்து இடங்களில் ஏறக்குறைய 35 கோடி ரூபாயிலே கூட்டுறவுத் துறைக்கு உட்பட்டு வர இருக்கின்ற நூற்பாலைகளில் அந்தந்த மாவட்ட மக்களுக்கு, முன்னுரிமை கொடுத்து எம்ப்ளாய்மென்ட் எக்சேஞ்ச் மூலமாக எடுப்பார்கள். ஒன் தர்ட் எம்ப்ளாய்மென்ட் எக்சேஞ்ச் மூலமாக அந்தந்த மாவட்டங்களிலிருந்து எடுக்கப்படும். இன்னொரு ஒன் தர்ட் அந்தந்தப் பகுதிகளில் இருக்கின்ற, வறுமைக் கோட்டிற்கும் கீழே உள்ள ஆதிதிரா-

விட மக்களின் லிஸ்டிலே இருந்து எடுக்கப்படும். அதாவது அதுபற்றி டி. டி. ஓ. அவர்களும், பி. டி. ஓ. அவர்களும் கொடுக்கின்ற லிஸ்டிலே இருந்து எடுக்கப்படும். இன்னொரு ஒன்றா்ட் வேறு நாடுகளிலிருந்து வந்திருக்கின்ற அகதிகளின் லிஸ்டிலே இருந்து எடுக்கப்படும். இப்படி அந்தந்த மாவட்டங்களின் உள்ளே இருப்பவர்களுக்குத்தான் வேலைவாய்ப்புகள் தரப்படுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ரா. கு. பெருமாள் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அறந்தாங்கி கூட்டுறவு நூற்பாலை பற்றி அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்ற போது எட்டையபுரம் பற்றியும் சொன்னார்கள். அதற்காக நன்றி. ஆதி திராவிட மக்களுக்கு வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக இல்லாமல் டி. டி. ஓ. மற்றும் பி. டி. ஓ. அவர்களுக்கு மனு கொடுத்து, அதன்படி அவர்கள் அனுப்புகின்ற லிஸ்டிலே இருந்து எடுப்பதாக அமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். அதற்காகவும் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எட்டையபுரத்தைப் பொறுத்த வரையிலே புதூர் ஊராட்சி ஒன்றியம் அந்த லிஸ்டிலே இருந்து விடுபட்டுப் போய் இருக்கின்றது. ஆகவே அதையும் சேர்த்துக்கொள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக உத்தரவிடுவார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னது போல் மாவட்ட அளவிலே ஏற்படுத்தப்படுகின்ற கூட்டுறவு நூற்பாலைகளில் அந்தந்த மாவட்ட அளவிலே இருக்கின்ற ஊராட்சி ஒன்றியங்களிலே இருந்துதான் வேலைக்கு ஆட்களை எடுத்துக்கொள்வார்கள். ஆனால் அப்ப அருகாமையில் இருக்கின்ற ஊராட்சி ஒன்றியங்கள் ஏதேனும் விடுபட்டுப் போய் இருந்தால் அவற்றையும் சேர்த்துக்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுறுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆர். மணிமாறன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்டத்திற்கு ஒரு கூட்டுறவு நூற்பாலை என்ற அரசினுடைய கொள்கையின் அடிப்படையில் அதாவது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு நூற்பாலை இருக்க வேண்டும் என்ற அளவிலே இன்றைக்குக் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டு இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் கோவை மாவட்டம் ஒன்றாக இருந்தபோது தாராபுரத்திலே ஒரு கூட்டுறவு நூற்பாலை இருந்தது. இன்றைக்கு பெரியார் மாவட்டம் பிரிக்கப்பட்ட நிலையில் தாராபுரம் பெரியார் மாவட்டத்தோடு ஐக்கியப்படுத்தப்பட்டு விட்டதால் கோவை மாவட்டத்தில் கூட்டுறவு நூற்பாலை இல்லை. எனவே கோவை மாவட்டத்தில் கூட்டுறவு நூற்பாலை அமைக்கின்ற திட்டம் அரசினுடைய பரிசீலனையில் இருப்பதாக அறிகிறேன். திருப்பூரிலே கூட அமைக்க இருப்பதாக அமைச்சர் அவர்கள் ஏற்கனவே இங்கே அறிவித்திருக்கிறார்கள். அது எந்த அளவிலே இருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சௌத் இந்தியாவினுடைய மான்செஸ்டரே கோயம்புத்தூர்தானே.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** துணைத் தலைவர் அவர்களே, நீங்களே சொன்னதுபோல் தென் இந்தியாவினுடைய மான்செஸ்டர் என்று அழைக்கப்படும் கோயம்புத்தூர் நகரைச் சுற்றி ஏறக்குறைய 150 நூற்பாலைகள் தனியார் துறையிலே நடத்தப்பட்டு வருகின்றன. இருந்தாலும் கூட்டுறவுத் துறையிலே அந்த மாவட்டத்திலே நூற்பாலை இல்லை. ஆனால் இப்பொழுது உடனடியாக அந்த மாவட்டத்திலே கூட்டுறவுத் துறையிலே நூற்பாலை துவங்குகிற திட்டம் எதுவும் அரசினுடைய பரிசீலனையில் இல்லை.

**திரு. செ. சிவசாமி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அறந்தாங்கி உள்பட மாநிலத்தில் 5 இடங்களில் நூற்பாலை ஆரம்பிக்கப்படுவதாக சொல்லப்பட்டது. குறிப்பாக, இராமநாதபுரத்தில் ஆரம்பிக்கப்படுவதாக சொல்லப்பட்டது. அங்கே ஆரம்பிக்கப்பட்டு விட்டதா ? ஆட்கள் எடுக்கப்படுகிறார்களா ? எத்தனை பேர்கள் எடுக்கப்படுகிறார்கள் ? அதனுடைய விவரங்களை அமைச்சர் அவர்கள் கொடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் முதுகுளத்தூர் தாலுகாவில் ஒரு கூட்டுறவு நூற்பாலை ஆரம்பிக்க அரசு திட்டமிட்டிருக்கிறது. நான் சொன்னேன், ஏற்கனவே 5 இடங்களில் 3 இடங்களில் பணிகள் தொடங்கி, கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. நீடாங்கரையிலே ஆயத்த நிலையிலே இருக்கின்றது. விரைவிலே கட்டுமானப் பணிகள் தொடங்கும். வேலைக்கு ஆட்கள் விரைவிலே எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.

**திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு நூற்பாலைகளிலே வேலைக்கு ஆட்கள் சேர்ப்பது சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்பொழுது எட்டயபுரத்திலே கூட்டுறவு நூற்பாலைக்கு ஆட்கள் சேர்ப்பது சம்பந்தமாக டி. டி. ஓ., பி. டி. ஓ. மூலமாக, ஆதி திராவிட மக்களுக்கு மனுக்கள் கொடுக்கப்படுவதாகச் சொன்னார்கள். அந்த மனுக்களைக் கொடுக்கிற நேரத்தில், ஒரு கிராம சேவக் மூலம் 10 மனுக்கள் கொடுத்து, அவர்கள் மூலமாக அனுப்புவது என்று சொல்லக்கூடிய நேரத்தில் ** ** பல தகுதி உடையவர்களுக்கு மனுவே கிடைக்கவில்லை. ஆகவே, அங்குள்ள வேலை தேடித்தரும் அலுவலத்தின் மூலமாக, நம்பர்களைப் பெற்று போட வேண்டும். அல்லது மனுக்களைப்

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

போடச் சொல்லி, தகுதி உள்ளவர்களைத் தேர்ந்தெடுக்கலாம். 10 மனுக்களைக் கொடுத்து நீங்களே அந்த ஆட்களை அனுப்புங்கள் என்று சொன்னால் ** ** அதை விட்டுவிட்டு, தகுதி உள்ளவர்களை எல்லாம் மனுக்களைப் போடச் சொல்லி உரிய சதவீதம் தேர்ந்தெடுக்கும் முறையை ஏற்படுத்தினால் ஆதி திராவிட மக்களுக்கு நன்மை பயக்கும். அதைச் செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கிராம சேவக்குகள் மூலமாக, மனுக்களை எம்.டி.யே கொடுத்து அனுப்பி ஆட்களை எடுப்பது அல்ல. அதுபோல் நடைமுறையில் இல்லை. வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்கள் என்று ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழே ஒரு துணை இயக்குநர், அதுபோல் தாசில்தார் டி.டி.ஓ., பி.டி.ஓ. இவர்கள் எல்லாம் சேர்ந்த குழு வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள ஆதி திராவிட மக்கள் என்ற ஒரு லிஸ்ட் அவர்கள் வைத்திருக்கிறார்கள். அந்த லிஸ்டிலேயிருந்து அவர்கள் அனுப்புகிறார்கள். இன்டர்வியூவிக்கு ஒரு கமிட்டி இருக்கிறது. எந்தப் பகுதியோ, அந்தப் பகுதி உதவி இயக்குநர், அந்த மில்லினுடைய எம். டி., ஐ.ஆர். டி.பி. யிலேயிருந்து துணை இயக்குநர், இப்படி 3, 4 பேர்கள் சேர்ந்து கமிட்டி இருக்கும். அந்தக் கமிட்டி, முன்னால் குறிப்பிட்ட லிஸ்டிலேயிருந்து தேர்வு செய்கிறார்களே தவிர, அவர்கள் சொல்வது போல் மில் எம். டி. யே. பெயர்களையும், பார்ம்களையும் கொடுப்பதில்லை. இதில் எந்தத் தவறும் நடக்க எந்தவிதமான வாய்ப்பும் இல்லை. எம்ப்ளாய்மென்ட் எக்சேஞ்சில் ஆதி திராவிட மக்கள், வேலை தேடுபவர்கள் அனைவரும் பதிவு செய்வதில்லை. குறிப்பாக, படித்தவர்கள்தான் அங்கே பதிவு செய்திருப்பார்கள். படிக்காத பெருமக்கள், அந்தந்தப் பகுதியிலே இருக்கிற வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிற ஆதி திராவிட மக்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டுமென்கிற நல்ல நோக்கத்தோடு கொண்டு வரப்படுகிற இதிலேயும் தயவுசெய்து குறை சொல்ல வேண்டாம்.

**திரு. ரா. கு. பெருமாள் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய கோவில்பட்டி சட்டமன்ற உறுப்பினர் அந்த ஊராட்சி ஒன்றியம் மூலமாக மனுக்கள் கொடுக்கும்போது ** ** என்று சொன்னார்கள்.................

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அப்பொழுதே கவனித்தேன். கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டு கூடாது. ஆகவே, குற்றச்சாட்டு பகுதிகள் நீக்கப்படுகின்றன.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. சோ. அழகர்சாமி :** ஆதி திராவிட மக்கள் அத்தனை பேரையுமே மனுக்களைப் போடச் சொல்லி, அந்த மனுக்களைப் பெற்று தகுதியானவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்று சொல்கிறேனே தவிர, வேறல்ல.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** அதிகாரிகளுடைய ஒரு குழு இருந்து தேர்வு செய்கிற அந்த லிஸ்டிலேயே தவறு நடக்கிறது என்று சந்தேகப்பட்டால் ஒட்டு மொத்தமாக எம்.டியிடம் அந்தப் பகுதியில் இருக்கிற எல்லா ஆதி திராவிட மக்களும் மனு செய்யலாம் என்று வைத்து, நியமித்தால், நாளைக்கு கட்சிக்காரர்களையே அங்கே போட்டுவிட்டார்கள் என்பது போன்ற குற்றச்சாட்டு பின்னாலே சொல்வதற்கு வாய்ப்பிருக்கிறது. குறிப்பிட்ட விண்ணப்பம் என்பது கிடையாது. ஏற்கனவே வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கிற ஆதி திராவிட பெருமக்களைக் கொண்ட லிஸ்ட் ஒன்று ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் வைத்திருக்கிறார்கள். இதிலே விண்ணப்பம் என்கிற பிரச்சினையே இல்லை. விண்ணப்பம் என்பதே கிடையாது. இன்டர்வியூ கமிட்டிக்கு அவர்கள் அனுப்புகின்ற லிஸ்டை வைத்துக்கொண்டு, ஆட்களை தேர்வு செய்கிறார்கள்.

(முற்பகல் 9.30.)

**திரு. ரா. கு. பெருமாள்;** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு நூற்பாலையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பது சம்பந்தமாக நான் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களோடும், மானேஜிங் டைரக்டர் அவர்களோடும் தொடர்பு கொண்டேன். அவர்கள் அதிலே 25 பேர்களை தேர்ந்தெடுக்கப் போவதாகச் சொன்னார்கள். ஆனால், பல்லாயிரக்கணக்கான மக்களிடமிருந்து விண்ணப்பங்கள் வாங்கியிருக்கிறார்கள். எனவே, அதிலே கூடுதலான ஆட்களை அமர்த்துவதற்கு அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 12,000 ஸ்பிண்டில்கள் இருக்கின்ற ஒரு நூற்பாலைக்கு 350 பேர்கள் தேவைப்படும். 25,000 ஸ்பிண்டில்கள் கொண்ட ஒரு நூற்பாலைக்கு 700 பேர்கள் தேவைப்படுவார்கள். எனவே, தேவைப்படுகின்ற அளவுக்கு ஆட்கள் எடுக்க முடியுமே தவிர, ஆட்களை எடுக்க வேண்டுமென்பதற்காக 1,000, 2,000 பேர்களைத் தேர்வு செய்து வைத்துக்கொள்ள முடியாது.

**திரு. இரா. கருப்பையா :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக்கூட்டுறவு நூற்பாலையில் வேலையில் வைப்பது சம்பந்தமாக மூன்றில் ஒரு பகுதியினர் வறுமைக்

கோட்டிற்கு கீழே இருக்கின்ற ஆதி திராவிட மக்களுக்கு வாய்ப்பளிக்கின்ற முறையில் பீ. டி. ஓ., டி.டி.ஓ., தாசில்தார் ஆகியோர்களின் மூலமாக லிஸ்ட் அனுப்பப்பட்டு தேர்ந்தெடுக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதிலே முறைகேடுகள் நடப்பதற்கு வாய்ப்பிருக்கின்றது என்ற காரணத்தினால், தகுதியுள்ள அனைவரும் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்வதற்கான ஏற்பாடுகள் செய்து, அதன்மூலமாக ஒரு முறையை ஏற்படுத்த அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எம்பிளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சிலே இருந்து ஆட்கள் எடுக்கப்படுகிறது. எம்பிளாய்மென்ட் எக்ஸ்சேஞ்ச் எடுத்ததுபோக, வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கின்ற ஆதி திராவிட பெருமக்களுக்கும் மூன்றிலே ஒரு பங்கு கொடுக்க வேண்டுமென்ற உணர்வோடுதான் ஏற்கனவே வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்ற அந்த லிஸ்ட் இன்டர்வியூ கமிட்டிக்கு அனுப்பப்படுகிறது. இன்டர்வியூ கமிட்டி தான் அந்த லிஸ்டிலே இருந்து யார் யார் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமா, அவர்களை தேர்வு செய்கிறார்கள். இதுவும் எம்பிளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சிலே இருக்கின்ற ஒரு அதிகாரி அனுப்புகின்ற லிஸ்ட்தான். ஆனால், அந்தப் பகுதியிலே இருக்கின்ற அரிசன மக்கள், 5-வது 4-வது படித்தவர்கள் என்பதால், அங்குள்ள எம்பிளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சிலே பதிவு செய்ய வாய்ப்பில்லை. எனவே, அங்குள்ள பீ. டி. ஓ., டி. டி. ஓ., ஆகியவர்களிடம் கையால் மனுக்களை எழுதிக் கொடுக்கிறார்கள். அதற்கென்று பிரத்தியேகமான பாரம் கிடையாது. எனவே, அவர்கள் அதைப் பதிவு செய்து கொண்டு, அந்த லிஸ்டிலே இருந்து ஆட்களை அனுப்புகிறார்கள். அதுதான் இப்போது நடைமுறையில் இருக்கிறது.

திரு. க. இரா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த கூட்டுறவு நூற்பாலையில் வேலைக்கு ஆள் எடுக்கிறபோது, ஆதி திராவிட மக்களுக்கு ஏதாவது கல்வித் தகுதி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா? அதேபோல் பின்தங்கிய மக்களுக்கும், சாதாரண தொழிலாளர்களுக்கும் ஏதாவது கல்வித் தகுதி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா? அதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எட்டாம் வகுப்பு ஏழாம் வகுப்பு பாஸ் செய்திருக்க வேண்டும். அதற்கு மேல் கல்வித் தகுதி இருக்க வேண்டும் என்று இப்போது இருக்கிறது.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நூற்பாலைகளுக்கு தாழ்த்தப்பட்ட அரிசன மக்களைச் சேர்ப்பதினால், மைய அரசு ஏதாகிலும் தமிழக



அரசுக்கு மைய ஒருங்கிணைந்த திட்டத்தின் கீழ் உதவித் தொகை அளிக்க உத்தரவிட்டிருக்கிறதா? அவ்வாறு கொடுக்கப்படுமானால், எவ்வளவு தொகை கொடுக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட பெருமக்களைச் சேர்ப்பதனால், ஐ. ஆர். டி. பி. திட்டத்தின் மூலம் நிதி உதவி செய்யப்படுகிறது.

திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு நூற்பாலைகளில் வேலைக்கு ஆட்கள் அமர்த்தப்படுகின்றபோது, இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் அகதிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டுமென்று அரசு உத்தரவிட்டுள்ளதா? அந்த முறையில் ஆட்கள் எடுக்கப்படுகின்றார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, ஆம். சம்பந்தப்பட்ட அந்த இயக்குநர் அந்த லிஸ்டை அனுப்புகிறார்.

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கூட்டுறவு நூற்பாலை அல்லது தனியார் நூற்பாலையில் ஆட்களைச் சேர்ப்பதற்குத் தனிப்பட்ட முறையில் 5,000 ரூபாய் டெபாசிட் செய்ய வேண்டும் அல்லது ஒரு ஆண்டு சம்பளம் இல்லாமல் வேலை செய்ய வேண்டும் என்றும், அப்படியிருந்தால்தான் நிரந்தரமாக்கப்படும் என்ற நிலைமை இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இவ்வாறு செய்வது முறையா? இது முறை அல்ல என்றால் அது குறித்து அரசு நடவடிக்கை எடுக்குமா? மேலும், மலைவாசி மக்களுக்கு வேலை வாய்ப்பு கொடுத்தால் மத்திய அரசு அவர்களுக்காகக் குறிப்பிட்ட தொகை வட்டியில்லாமல் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறதே, அப்படிக் கொடுக்கிறது என்றால் அந்தத் தொகை எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, கூட்டுறவு நூற்பாலைகளில் வேலைக்கு ஆட்களை எடுக்கின்றபொழுது இதுபோன்ற டெபாசிட் வாங்கப்படுவதில்லை. ஆனால் தனியார் நூற்பாலைகளில் யாராவது அப்படிபணம் வாங்கிக்கொண்டு சேர்த்தார்களேயானால் அதுகுறித்து மாண்புமிகு லேபர் மினிஸ்டர் திரு. இராகவானந்தம் அவர்களிடம் தெரிவித்தால் அரசு சார்பில் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். மலைவாசி மக்களைப் பொறுத்தவரையில் ஷெட்யூல்ட் , ட்ரைப்ஸைப் பொறுத்தவரையில் வேலைக்கு ஆட்களை எடுக்கும்பொழுது மைய அரசு ஓரளவுக்கு உதவி செய்கிறது. எவ்வளவு தொகை என்ற குறிப்புகள் தற்போது என்னிடத்தில் இல்லை.

## மண்டபத்திலுள்ள நாடற்ற அகதிகள் எண்ணிக்கை

568—(*வினா எண். 21211)—திரு. செ. சிவசாமி: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மண்டபத்தில் நாடற்ற அகதிகள் எத்தனைபேர் உள்ளனர்?

(ஆ) மறுவாழ்வுக்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) மண்டபம் முகாமில் 1,166 ஆதரவற்ற நபர்கள் உள்ளனர். அவர்களில் நாடற்றவர்கள் 189 நபர்கள்.

(ஆ) தற்சமயம் அவர்களுக்கு முகாமில் நிவாரண உதவிகள் வழங்கப்படுகின்றன. மறுவாழ்வு உதவி வழங்க மத்திய அரசு ஆணைகள் வந்தவுடன் அதுவும் வழங்கப்படும்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, சிலோனிலிருந்து வரும் அகதிகளுக்காக மண்டபத்திலுள்ள கேம்பிலே கிட்டத்தட்ட 1,166 பேர்கள் இருப்பதில்: 189 பேர்கள் அகதிகளாக நாடற்றவர்களாக இருப்பதாகச் சொல்லப்பட்டது. சிரிமாவோ பண்டாரநாயகா அக்ரிமெண்டின் பிரகாரம் 1166 பேர்கள் வந்திருந்தாலும்கூட, நாடற்றவர்களாக வந்திருக்கக்கூடியவர்களுக்கு எந்தவிதமான வசதியும் அங்கே இல்லாத நிலைமை இருக்கிறது. நானே அந்த முகாமிற்குச் சென்று பார்த்தேன். அப்பொழுது அவர்களுக்குக் கொடுத்தது நாள் ஒன்றுக்கு 86 காசுதான். அதுபற்றி கலெக்டரைச் சந்தித்து இப்படி 86 காசு கொடுப்பது என்பது சரியான முறை அல்ல; அதைக் கூடுதலாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். பிறகு ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு இரண்டு ரூபாய் சில்லறை கொடுக்கப்படுகிறது. இதுவும் அநியாயமானதுதான். இதைப் பார்க்கின்றபொழுது இந்தியாவிற்கு ஏன் திரும்பி வந்தோம், சிங்கள வெறியர்களிடமே சிக்கிச் செத்திருக்கலாமே என்று அவர்கள் சொல்லுகின்ற அளவிற்கு நிலைமைகள் இருக்கின்றன. இப்படி அவர்கள் வெந்து வேதனைப்படுகின்ற அளவிற்குக் கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, மீண்டும் இதைப் பரிசீலித்து அதிகமான உதவிகள் அவர்களுக்குச் செய்ய ஏற்பாடுகள் செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கலவரத்தால் பாதிக்கப்பட்டு முகாமில் அனுமதிக்கப்பட்ட, ஒப்பந்தத்தில் வராத ஆதர



வற்றவர்களுக்கு வேண்டிய உதவிகளைத் தமிழக அரசு நிவாரண உதவியாகச் செய்து வருகிறது. மறுவாழ்வு சம்பந்தப்பட்ட உதவிகள் குறித்து நாம் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதி, அனுப்பப்பட்டு இருக்கிறது; மத்திய அரசும் ஒரு கடிதத்தை மாநில அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஒரு உதவியையும் சரியான முறையில் அவர்களுக்குக் கொடுக்கவில்லை என்ற விவரத்தை இங்கே தெரிவித்திருக்கிறார்கள். எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற விவரங்களின்படி வீட்டிற்கு அவசியமான பொருட்களான பாத்திரங்கள், படுக்கை, பாய், சேலை, சட்டை ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு குடும்பத்திற்கும் சுமார் ஐந்து நபர்களைக் கொண்ட குடும்பத்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 357.50 வழங்கப்படுகிறது. மேலும் மலிவு விலையில் ஒரு கிலோ அரிசி 57 பைசாவுக்கு வழங்கப்படுகிறது. மிகவும் குறைவான விலைக்கு அவர்களுக்கு அரிசி கொடுக்கப்படுகிறது.

(முற்பகல் 9-40).

அதோடு மட்டுமல்லாமல் ஆதரவற்றவர்கள் குடும்பத்திலுள்ள படித்தவேலையில் ஆர்வம்உள்ள இளைஞர்களுக்கு வாழ்க்கைக்குத் தேவையான பல்வேறு துறைகளில் சமூக நலப் பணியினரால் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசாங்கத்திலிருந்து மாநில அரசிற்கு ஒரு கடிதம் கூட வந்துள்ளது. அந்த விவரத்தைத் தெரிவிக்கலாம் என்று நினைக்கிறேன். இலங்கையிலிருந்து வந்துள்ள ஆதரவற்றவர்கள் (அகதிகள்) மறுவாழ்வு பற்றி மத்திய அரசுக்கு கடிதம் எழுதப்பட்டது. மத்திய அரசின் வெளிநாட்டு விவகாரத் துறையின் 14-12-1983 நாளிட்ட கடிதத்தில், இந்த ஆதரவற்றவர்களுக்கு மறுவாழ்வு உதவி அளிப்பது பற்றி கூறப்பட்டுள்ளது. அதாவது, இலங்கையில் இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்டு இந்தியா வந்துள்ள ஆதரவற்றவர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் புகலிடம் அளிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளது. இலங்கையில் நிலைமைகள் சரியானதும் இவர்கள் இலங்கைக்குத் திரும்பிச்சென்று விடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கையில் சிறுபான்மையினராக இருக்கும் தமிழர்களிடையே நம்பிக்கை மற்றும் பாதுகாப்பு உணர்வுகளை ஏற்படுத்துவதற்கு அரசியல்ரீதியான தீர்வுஏற்பட வேண்டும். மேற் சொன்ன வகையில், நிரந்தர தீர்வு ஏற்பட இந்திய அரசு எல்லா முயற்சிகளையும் எடுத்து வருகிறது. இத்தருணத்தில், தற்காலிகமாக இந்தியாவிற்கு வந்திருக்கும் ஆதரவற்றவர்கள், நிரந்தரமாகத் தங்குவதற்கு உதவிகள் அளிப்பது விரும்பத் தக்கதல்ல என்று மத்திய அரசு வெளி நாட்டு விவகாரத் துறை தெரிவித்துள்ளது.

திரு. செ. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைதியான சூழ்நிலை ஏற்பட்ட பிற்பாடு அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்படும் என்று சொன்

னார்கள். அமைதியான சூழ்நிலை இருக்காலும் ஏற்படப் போவதில்லை. 30 பேர்களுக்கு மேல் சுட்டுக் கொன்றிருப்பதாக இன்றைக்கு பேப்பரிலே செய்தி வந்திருக்கிறது. தமிழர்கள் அந்த நாட்டிலிருந்து வந்து கொண்டே இருக்கிறார்கள். அது தொடர்ச்சியாக நடந்து கொண்டிருக்கிறது. அமைதி எப்போது ஏற்படப் போகிறது? எப்போது அந்தத் தமிழர்களுக்கு உதவி செய்யப்படும். என்ற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இந்த நிலைமையில் மனிதாபிமான அடிப்படையில் உதவிகளைச் செய்வதை ஒழுங்காக நல்லபடியாகச் செய்வதோடு இன்னும் பல உதவிகளைச் செய்ய வேண்டும். அந்த கேம்பில் இருப்பவர்கள் மாதக் கணக்கிலே இருக்கிறார்கள் என்றும், மாதத்திற்கு இவ்வளவு ரூபாய் கொடுத்தோம் என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மாதக் கணக்கிலே அங்கே யாரும் தங்குவதில்லை. வந்து ஒன்றிரண்டு நாட்கள் தங்க வைத்து ஏதாவது வேலைக்கு அனுப்பி விடுகிறார்கள். ஒரு சில பேர்களை ஊர்களுக்கே அனுப்பி விடுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வியைச் சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

திரு. செ. சிவசாமி: துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சூழ்நிலையில் அங்கே தங்கியிருக்கக் கூடியகாலத்தில் அவர்களுக்கு வயிற்றுக்குப்போதுமான அளவிற்கு சாப்பாடாவது கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது இருந்து வருகிற அமைதியற்ற சூழ்நிலை பற்றி குறிப்பிட்டார்கள். மூலக் கேள்வி இலங்கையிலிருந்து தாயகம் வந்திருக்கிற அந்த அகதிகளுக்கு அளிக்கப்படும் நிவாரண உதவிகள் மற்றும் மறுவாழ்வு உதவிகளைப் பற்றியதாகும். அந்த அடிப்படையில் தான் நான் ஏற்கெனவே என்னுடைய பதிலைச் சொல்லி இருக்கிறேன். ஒரு குடும்பத்திற்கு தேவையான நிவாரண உதவிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மலிவு விலையில் கிலோ ஒன்றிற்கு 57 பைசா விதம் அரிசி அவர்களுக்கு வழங்கப்படுகிறது. அந்த வகையில் இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு வந்துள்ள அந்த அகதிகளை, தமிழக அரசைப் பொறுத்தவரையில் அவர்களை நல்ல முறையில் பாதுகாத்து அவர்களுக்கு வேண்டிய நிவாரண உதவிகளை செய்து வருகிறது என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் இலங்கையிலிருந்து தமிழகம் வந்தடைந்த அகதிகள், ஆதரவற்றவர்கள் எண்ணிக்கை எவ்வளவு? அவர்களுக்கு கொடுக்கப்பட்ட பாதுகாப்பு வசதிகள் என்னென்ன என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இலங்கையில் சமீபத்தில் ஏற்பட்ட கலவரத்தால் பாதிக்கப்பட்ட நபர்கள் 24-7-1983க்குப் பிறகு 31-1-1984 முடிய மொத்தம் 35,394 பேர்கள் இந்தியா வந்துள்ளனர். இவர்களில் 9,407 பேர்கள் சாஸ்திரி-சிரிமாவோ ஒப்பந்தத்தின் கீழ் அடங்கியவர்களாகும். இவர்களைத் தவிர 25,987 பேர்கள் கலவரத்தால் பாதிக்கப்பட்டு ஆதரவற்றவர்களாக இந்தியா வந்துள்ளனர்.

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நாடற்ற அகதிகள் என்ற பட்டியலில் இன்று திராவிட இன மக்கள் தான் தென் பகுதியில் அதிகமாக பாதிக்கப்பட்டு தமிழ் நாட்டிலே குடியேறக் கூடிய ஒரு துர்ப்பாக்கிய நிலை இருக்கிறது. அவர்கள் துன்பமுறாமல் இன்பமாக வாழ்வதற்கு வங்கத்திலே வந்த அகதிகளைப் போல இவர்களுக்கும் அதிக உதவிசெய்ய வேண்டுமென்ற கோரிக்கையை தமிழகஅரசு மத்திய அரசிடம் தெரிவித்து, மத்திய அரசு ஏதாவது அதிக உதவிகளை இந்த நாடற்றவர்கள் என்ற பட்டியலிலே இருக்கிறவர்களுக்கு, தமிழகத்தில் குடியமர்த்தப்பட்டிருக்கிற இந்த திராவிட மக்களுக்குச் செய்ய முன் வந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். அப்படி உதவுகிறதென்றால் என்னென்ன விதத்திலே உதவுகிறது என்பதை அவர்கள் அமைச்சர் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் வந்தவுடன் அவர்களுக்கு நிவாரண உதவி கொடுக்கப்படுகிறது. மறுவாழ்வு உதவி பற்றி மாநில அரசு மத்திய அரசுக்கு கடிதம் எழுதியிருக்கிறது. மத்திய அரசும் மாநில அரசுக்கு கடிதம் அனுப்பியிருக்கிறது என்ற விபரத்தையும் நான் முன்பே குறிப்பிட்டு இருக்கிறேன். அந்த அடிப்படையில் தான் இலங்கை அகதிகளுக்கு மறுவாழ்வு கொடுப்பதைப் பற்றி மத்திய அரசு வெளிவிவகாரத்துறை அமைச்சகம் நமக்குக் கடிதம் எழுதியிருக்கிறது. அவர்களின் 14-12-1983ஆம் தேதிய கடிதத்தில் அவர்களுக்கு இப்போது தற்காலிகமாக மறுவாழ்வு உதவி அளிப்பது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை இனக் கலரவத்தால் பாதிக்கப்பட்டு இந்தியா வம்சாவளி மக்களுக்கு ஆதரவு கொடுத்து, மனிதாபிமான அடிப்படையில் புகலிடம் அளிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இலங்கை நிலைமை சீரானதும் அவர்கள் இலங்கைக்குத் திரும்பிச் சென்று விடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கையில் சிறுபான்மையாக இருக்கும் தமிழர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தவும், பாதுகாப்பு உணர்வு ஏற்படுத்தவும் அரசியல் ரீதியான தீர்வு ஏற்பட வேண்டும். மேற் சொன்ன வகையில் நிரந்தர தீர்வு ஏற்பட இந்திய அரசு எல்லா முயற்சிகளையும் எடுத்து வருகிறது. இத்தருணத்தில் தற்காலிகமாக இந்தியாவிற்கு வந்திருக்கும் ஆதரவற்றவர்களை நிரந்தரமாகத் தங்க வைப்பது விரும்பத்தக்கதல்ல என்று மத்திய அரசு வெளி விவகாரத்துறை தெரிவித்திருக்கிறது.

**மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்:** துணைத் தலைவர் அவர்களே, நாடற்ற அகதிகள் என்ற நிலைமையை நாம் ஏற்றுக் கொள்வதில்லை. அவர்களுடைய நாடு இலங்கை. அங்கே ஏற்பட்டுள்ள சூழ்நிலை காரணமாக அவர்கள் இங்கே அகதிகளாக வருகிறார்கள். அவர்களுக்கு மறுவாழ்வு அளித்து, பாதுகாப்புத் தருகிறோம். ஸ்டேட்லெஸ் பர்சென்ஸ் (Stateless Persons) ரெப்ஃயூஜிஸ் என்பதை நாம் ஏற்றுக் கொள்ள தில்லை.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மண்டபம் முகாமில் எவ்வளவு வீடுகள் உள்ளன ? இலங்கையில் இருந்து அதிகமான அளவில் அகதிகள் வருவதன் காரணமாக அதிகமான வீடுகள் கட்ட அரசு முன்வருமா ? அதிகமான அளவில் இலங்கையில் இருந்து அகதிகள் வருகின்ற காரணத்தால் அவர்களைப் பராமரிக்க அதிகமான அளவிலே அரசு அதிகாரிகளை நியமிக்க அரசுக்கு உத்தேசம் உள்ளதா !?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மண்டபம் முகாமில் எத்தனை வீடுகள் இருக்கின்றன என்ற விபரம் தற்போது இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் விபரங்கள் சேகரித்துக் கொடுக்கப் படும்.

**திரு. ஏ. சி. சண்முகம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இலங்கையில் இருந்து வந்திருக்கிற அகதிகள் தமிழர்கள் அதிகமாக வாழ்ந்து வரும் அந்தமான் தீவிலே சென்று குடியேற மனுக் கொடுத்திருப்பதாக அறிகிறேன். அங்கே பல தீவுகளிலே ஆட்கள் இல்லை. எனவே அப்படிப்பட்ட தீவுகளுக்கு அவர்களை அனுப்புவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும்படி மத்திய அரசிற்கு மாநில அரசு சொல்லுமா ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. தனியாகக் கேள்வி போட வேண்டும்.

**திரு. ஜி. மூர்த்தி:** துணைத் தலைவர் அவர்களே, மண்டபம் முகாமில் இப்போது தங்கியிருக்கின்ற அகதிகளுக்குக் கொடுக்கப் படும் உதவித் தொகையை உயர்த்திக் கொடுப்பதற்கு அரசிடம் ஏதேனும் செயற் குறிப்பு உள்ளதா ? அங்கே வந்து தங்குபவர்களிடம் வட நாட்டில் வந்துள்ள இரண்டு வட்டிக் கடைக் காரர்கள் அவர்களின் சொத்துக்களைச் சுரண்டுவதாக புகார் வந்திருக்கிறது. அவர்களை அங்கேயிருந்து வெளியேற்றுவதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இலங்கையில் இருந்து இந்தியா வந்துள்ள அகதிகளுக்கு மாதம் ரூபாய் 357.50 வழங்கப்படு



கிறது. அரிசி ஒரு கிலோ 57 பைசா என்று வழங்கப்படுகிறது. வட நாட்டில் இருந்து வந்திருப்பவர்கள் அவர்களுடைய பொருட்களைச் சுரண்டுவதைப் பற்றி உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். , அதற்குத்தான் முகாமே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு வேண்டிய அதிகாரிகள் அங்கே இருக்கிறார்கள், ஒரு குறிப்பிட்ட அளவு பொருட்களைத்தான் அவர்கள் கொண்டு வரலாம் என்று வரையறை செய்யப்பட்டிருக்கிறது. அதற்குட் பட்டுத்தான் அவர்கள் கொண்டு வரலாம். அளவுக்கு மேலே கொண்டு வந்தால் கஸ்டம்ஸ் துறை போன்றவர்கள் சோதனையிட்டு பிடித்து எடுத்துக் கொண்டு விடுவார்கள்.

**திரு ரா. கு. பெருமாள் :** துணைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டம் கோயில்பட்டியிலும், முகவை மாவட்டம் சாத்தூரிலும் இலங்கை தமிழர்கள் குடும்பங்கள் பல வாழ்ந்து வருகின்றன. தமிழக அரசு மூலமாக குடிசை போட்டிருக்கிறார்கள். இங்கேயே தங்குவதற்கு அவர்கள் சம்மதிக்கிறார்கள். கூட்டுறவு நூற்பாலை தேயிலைத் தோட்டங்கள் போன்றவற்றில் வேலை செய்ய அவர்கள் சம்மதிக்கிறார்கள். அப்படிப் பட்டவர்களுக்கு அங்கே வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** தலைவர் அவர்களே, மூலக் கேள்வி மண்டபம் முகாமில் தங்கியிருப்பவர்களைப் பற்றியதாகும். திருநெல்வேலி மாவட்டத்தில் தங்கியுள்ளவர்களைப் பற்றி இங்கே மூலக் கேள்வி இல்லை. அவர்களுக்கு நூற்பாலையில் வேலை கொடுப்பதைப் பற்றியும் குறிப்பு இல்லை. அது பற்றி தனிக் கேள்வி போட்டால் மாண்புமிகு உறுப்பினருக்கு பதில் கொடுக்கப்படும்.

(முற்பகல் 9—50).

**திரு. து. புருஷோத்தமன்;** சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். இந்தப் பேரவை உறுப்பினர் பதவியை இராஜிநாமா செய்து விட்ட உறுப்பினர் ஒருவர் அவை நடவடிக்கைகளில் பங்குகொண்டு கேள்வி கேட்கலாமா ? அவர் எப்படி அவை நடவடிக்கைகளில் கலந்து கொள்ளலாம் ? (குறுக்கீடு) உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்தவர் கேள்வி கேட்கிறார். அதனால்தான் இப்போது நான் இந்த ஒழுங்குப் பிரச்னையை எழுப்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் தயவுசெய்து உட்கார வேண்டும். கேள்வி நேரத்தில் பாயின்ட் ஆஃப் ஆர்டர் வேண்டாம். (குறுக்கீடு).

**மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்:** நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். கேள்வி நேரம் முடிந்த பின் விளக்கங்கள் கேட்கவோ, ஒழுங்குப் பிரச்சனை

எழுப்பவோ செய்யலாம். கேள்வி நேரம் முடிவதற்கு இன்னும் கொஞ்ச நேரம்தான் இருக்கிறது. அதுவரை பொறுத்துக் கொள்ளலாம்.

பள்ளப்பட்டி கிராமத்தில் உலக வங்கி உதவியுடன் ஆட்டுப் பண்ணை அமைக்கும் திட்டம்.

569—*(வினா எண். 21947—திரு. க. வெ. வீரானம்பலம் :) மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் சட்டமன்றத் தொகுதி கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியம் பள்ளப்பட்டி கிராமத்தில் உலக வங்கிக் கடன் உதவியுடன் ஆட்டுப்பண்ணை அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிட்டுப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(அ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை.

திரு.என். சங்கரய்யா: மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்களே, கரூரிலே 87 நாட்களாக நடைபெற்று வருகின்ற பஞ்சாலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தின் காரணமாக நூற்றுக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அந்தப் பிரச்சனை இன்னும் தீர்க்கப்படவில்லை. அர்த்தால் நடக்கிறது. அதுபற்றி எங்கள் கட்சியின் சார்பிலே ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம். மற்றும் பல கட்சியினரும் அதுபற்றி ஒத்திவைப்புத்தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள் (மணியடிக்கப்பெற்றது). ஏற்கனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிம்சன் பிரச்னையைப் பற்றிப் பேசும் போது கரூர் பிரச்சனையும் பேசித் தீர்க்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் கரூர் பிரச்சனை எடுத்துக்கொள்ளப்படவில்லை. நான் முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது, நீண்ட நாட்களாக அங்கே போராட்டம் நடந்து



கொண்டிருக்கிறது. சர்வ கட்சி அர்த்தால் நடக்கிறது. அரசாங்கத்தின் சார்பில் அதிலே தலையிட்டு, அதற்கு ஒரு தீர்வு காணவேண்டும். அதற்காக ........ (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் அவர்களும், இந்தியக்கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் அவர்களும், கரூர் தொழிலாளர் பிரச்சினை பற்றி இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்களுடைய உணர்வை அரசு நன்கு மதிக்கிறது. அதில் என்ன நிலைமை என்பதைப் பற்றியும், எத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதைப் பற்றியும், திடீரென்று இப்போது அரசாங்கத்தின் சார்பில் அறிவிப்பது சாத்தியமல்ல. இருந்தாலும், அந்த உணர்விற்கு மதிப்புக் கொடுத்து, உரிய நடவடிக்கைகள் மேற்கொளளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்றைக்கு நாம் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ள இருக்கிறோம். சாதாரணமாக ஒவ்வொரு நாளும் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது. தாங்கள் இதுபற்றி கொடுத்துள்ள தீர்மானமும் எடுத்துக் கொள்ளப்படும்.

(ஆ) திரு. செ. சிவசாமி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து விலகி விட்டதாக அறிக்கை கொடுத்துள்ளது.

திரு. பி. வின்சென்ட் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சிவசாமி அவர்கள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து விலகி விட்டதாக தகவல் வந்துள்ளது. விலகல் கடிதம் பேரவைத் தலைவர் அவர்களுக்கு வந்து விட்டதா ? அவர் தனியாக இடம் கேட்டுள்ளாரா ? தனி இடம் எப்போது ஒதுக்கப்படும் ?

திரு. து. புருஷோத்தமன் : தலைவர் அவர்களே, நான் இதுவரையில் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து மரியாதைக்குரிய திரு சிவசாமி ராஜிநாமா செய்துள்ளது பற்றிச் சொல்லவில்லை. அவர் எம். எல். ஏ. பதவியை ராஜிநாமா செய்துவிட்டு, அவை நடவடிக்கையில் பங்கு கொள்ளலாமா என்றுதான் கேட்டேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எம். எல். ஏ. பதவியை ராஜிநாமாச் செய்து, எனக்கு கடிதம் அனுப்பி இருந்தாலும், அதை நான் ஏற்றுக்கொள்ளும் வரையில், அவர் அவையில் அமரலாம். அவை நடவடிக்கையில் பங்கு கொள்ளலாம். திரு புருஷோத்தமன் அவர்களே தாம் எம். எல். ஏ. பதவியை ராஜிநாமா செய்துவிட்டதாக ஒரு தாளில் எழுதிக் கொடுத்து

விட்டால், உடனே அது அமலுக்கு வந்து விடாது. அதைப் பேரவைத் தலைவர் ஏற்றுக்கொள்ளும் வரை அவர் உறுப்பினராக செயல்படலாம்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, நான் கட்சியில் இருந்து விலகிவிட்டது குறித்து நேற்றைக்கே விவரமான அறிக்கை சமர்ப்பித்து இருக்கிறேன். எம். எல். ஏ. பதவியை ராஜிநாமாச் செய்யவில்லை. கட்சியில் இருந்து ராஜிநாமாச் செய்துவிட்டேன் என்பதை எழுதி, அவசரமாக டைப் பண்ணியதில், பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டதாக டைப் பிழை ஏற்பட்டுவிட்டது. அதை வைத்துக்கொண்டு மதிப்பிற்குரிய நண்பர் கூறுவது தவறு.

**(இ) குடிநீர் வடிகால் வாரியப் பொறியாளர்கள் உண்ணாவிரதம்**

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழ்நாடு பூராவும், குடிநீர்ப் பிரச்சினை. குடிநீர்ப் பிரச்னை மிக முக்கியமானது. குடிநீர் வடிகால் வாரியப் பொறியாளர்கள் கடந்த 2, 3 நாட்களாக உண்ணா விரதம் மேற்கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதுபற்றி நோட்டீஸ் கொடுங்கள். (குறுக்கீடு) கொடுத்திருந்தால் ஆய்வில் இருக்கும்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் கும்பகோணம், வேட்டமங்கலம் கிராமத்தில் அரிஜன மக்கள் அரசாங்கப் பாலத்தில் பிணம் எடுத்துக் செல்வதில் ஏற்பட்ட பதட்ட நிலை பற்றி ஒரு கவன ஈர்ப்பு கொடுத்து, 3 தினங்கள் ஆகிறது. இதனால் பெரும் அடிதடி....... (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரு நாளைக்கு 1, 2 தான் எடுத்துக் கொள்ள முடியும். ஒவ்வொரு உறுப்பினரும், அவரவர்களுடைய பிரச்சினை தான் முக்கியம் என்று சொல்கிறார்கள். ஒரு நாளைக்கு 10 எடுத்துக் கொள்ள வேண்டுமென்றால், ரூலை மாற்ற வேண்டும். பிறகு தான் எடுத்துக் கொள்ள முடியும். ** 1, 2 எடுக்கலாம் என்று தான் இருக்கிறது. **

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னையிலுள்ள பேசின் பிரிட்ஜ் அனல் மின்சார நிலையத்தை மூடி விடுவதாக அரசு அறிவித்துள்ளதால், தொழிலாளர் மத்தியிலும், பொதுமக்கள் மத்தியிலும்.... (குறுக்கீடு).

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதைப் பற்றி நோட்டீஸ் ஏற்கனவே கொடுத்திருக்கிறீர்கள். அது ஆய்விலே இருக்கின்றது. ஒவ்வொன்றாக எடுத்துக் கொள்ளப் படும்.

**ஈ. விவசாய பம்புசெட்டுகளுக்கான வைப்புத் தொகையை அதிகப்படுத்துவது.**

திரு. ஜே. எஸ். இராசு: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயக் காரியங்களுக்காக பம்ப்செட் வைத்து, விவசாயம் செய்யக் கூடிய விவசாயிகள் ஏற்கனவே பம்ப்செட் வைக்க முற்பட்டபோது டெபாசிட் கட்டுவதற்கு என்று ஒரு முறை இருக்கிறது. அப்படிக் கட்டிய டெபாசிட் போதாது. அடிசனல் டெபாசிட் அதிக அளவில் கட்டவேண்டும் என்று எங்களுடைய பெரம்பலூர் தொகுதி மற்றும் உள்ள பல்வேறு இடங்களில் உள்ள மின்சாரத் துறையினர் வலியுறுத்தி வருகிறார்கள். அப்படிக் கட்டுவதை.......

(முற்பகல் 10-00.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது point of order லே வராது. உங்களுக்கு நடைமுறைகள் தெரியும். (குறுக்கீடு) இன்றைக்கு வேறு ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

## 3. ஒத்தி வைப்புத் தீர்மானம்.

**கும்பகோணம் காவல் நிலையத்தில் ஒருவர் இறந்துள்ளதாகக் கூறப்படுவது.**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் ரா. உமாநாத், எம். செல்லமுத்து, ரா. கிருஷ்ணன், இரெ. இராசமாணிக்கம், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், இரா. கருப்பையா, தி. கா. நல்லப்பன், பொ. உத்திராபதி, செ. சிவசாமி, எம். ஆறுமுகம், ப. நெடுமாறன், ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன், மற்றும் திரு. எஸ். என். இராமசாமி ஆகியோர் '' கும்பகோணம் போலீஸ் ஸ்டேஷன் லாக்கப்பில் ஏற்பட்டுள்ள மரணத்தின் விபரத்தை அறிய 9-4-1984 அன்று கூடிய மக்கள் மீது போலீஸார் எவ்வித முன்னறிவிப்புமின்றி தடியடிப் பிரயோகம் நடத்தியதால் பலருக்குக் காயம் ஏற்பட்டுள்ளதால் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் '' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

விட்டால், உடனே அது அமலுக்கு வந்து விடாது. அதைப் பேரவைத் தலைவர் ஏற்றுக்கொள்ளும் வரை அவர் உறுப்பினராக செயல்படலாம்,

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, நான் கட்சியில் இருந்து விலகிவிட்டது குறித்து நேற்றைக்கே விவரமான அறிக்கை சமர்ப்பித்து இருக்கிறேன். எம். எல். ஏ. பதவியை ராஜிநாமாச் செய்யவில்லை. கட்சியில் இருந்து ராஜிநாமாச் செய்துவிட்டேன் என்பதை எழுதி, அவசரமாக டைப் பண்ணியதில், பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டதாக டைப் பிழை ஏற்பட்டுவிட்டது. அதை வைத்துக்கொண்டு மதிப்பிற்குரிய நண்பர் கூறுவது தவறு.

(இ) குடிநீர் வடிகால் வாரியப் பொறியாளர்கள் உண்ணாவிரதம்

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழ்நாடு பூராவும், குடிநீர்ப் பிரச்சினை. குடிநீர்ப் பிரச்னை மிக முக்கியமானது. குடிநீர் வடிகால் வாரியப் பொறியாளர்கள் கடந்த 2, 3 நாட்களாக உண்ணா விரதம் மேற்கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதுபற்றி நோட்டீஸ் கொடுங்கள். (குறுக்கீடு) கொடுத்திருந்தால் ஆய்வில் இருக்கும்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் கும்பகோணம், வேட்டமங்கலம் கிராமத்தில் அரிஜன மக்கள் அரசாங்கப் பாலத்தில் பிணம் எடுத்துச் செல்வதில் ஏற்பட்ட பதட்ட நிலை பற்றி ஒரு கவன ஈர்ப்பு கொடுத்து, 3 தினங்கள் ஆகிறது. இதனால் பெரும் அடிதடி......., (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரு நாளைக்கு 1, 2 தான் எடுத்துக் கொள்ள முடியும். ஒவ்வொரு உறுப்பினரும், அவரவர்களுடைய பிரச்சினை தான் முக்கியம் என்று சொல்கிறார்கள். ஒரு நாளைக்கு 10 எடுத்துக் கொள்ள வேண்டுமென்றால், ரூலை மாற்ற வேண்டும். பிறகு தான் எடுத்துக் கொள்ள முடியும். ** 1, 2 எடுக்கலாம் என்று தான் இருக்கிறது. **

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னையிலுள்ள பேசின் பிரிட்ஜ் அனல் மின்சார நிலையத்தை மூடி விடுவதாக அரசு அறிவித்துள்ளதால், தொழிலாளர் மத்தியிலும், பொதுமக்கள் மத்தியிலும்.... (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதைப் பற்றி நோட்டீஸ் ஏற்கனவே கொடுத்திருக்கிறீர்கள். அது ஆய்விலே இருக்கின்றது. ஒவ்வொன்றாக எடுத்துக் கொள்ளப் படும்.

ஈ. விவசாய பம்புசெட்டுகளுக்கான வைப்புத் தொகையை அதிகப்படுத்துவது.

திரு. ஜே. எஸ். இராசு: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயக் காரியங்களுக்காக பம்ப்செட் வைத்து, விவசாயம் செய்யக் கூடிய விவசாயிகள் ஏற்கனவே பம்ப்செட் வைக்க முற்பட்டபோது டெபாசிட் கட்டுவதற்கு என்று ஒரு முறை இருக்கிறது. அப்படிக் கட்டிய டெபாசிட் போதாது, அடிசனல் டெபாசிட் அதிக அளவில் கட்டவேண்டும் என்று எங்களுடைய பெரம்பலூர் தொகுதி மற்றும் உள்ள பல்வேறு இடங்களில் உள்ள மின்சாரத் துறையினர் வலியுறுத்தி வருகிறார்கள். அப்படிக் கட்டுவதை.......

(முற்பகல் 10—00.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது point of order லே வராது. உங்களுக்கு நடைமுறைகள் தெரியும். (குறுக்கீடு) இன்றைக்கு வேறு ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

3. ஒத்தி வைப்புத் தீர்மானம்.

கும்பகோணம் காவல் நிலையத்தில் ஒருவர் இறந்துள்ளதாகக் கூறப்படுவது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் ரா. உமாநாத், எம். செல்லமுத்து, ரா. கிருஷ்ணன், இரெ. இராசமாணிக்கம், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், இரா. கருப்பையா, தி. கா. நல்லப்பன், பொ. உத்திராபதி, செ. சிவசாமி, எம். ஆறுமுகம், ப. நெடுமாறன், ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன், மற்றும் திரு. எஸ். என். இராமசாமி ஆகியோர் ''கும்பகோணம் போலீஸ் ஸ்டேஷன் லாக்கப்பில் ஏற்பட்டுள்ள மரணத்தின் விபரத்தை அறிய 9–4–1984 அன்று கூடிய மக்கள் மீது போலீஸார் எவ்வித முன்னறிவிப்புமின்றி தடியடிப் பிரயோகம் நடத்தியதால் பலருக்குக் காயம் ஏற்பட்டுள்ளதால் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கும்பகோணத்தில் நடைபெற்ற மரணம் இருக்கிறதே, அது எங்களுக்குக் கிடைத்த தகவலின் படி லாக்கப்பில் தான் ஏற்பட்டிருக்கிறது. ஆரம்பத்திலே கூட அமைச்சர் அவர்கள் இதற்கு மறுப்பு தெரிவித்து இருக்கிறார்கள். ஏற்கனவே சந்தேகத்தின் அடிப்படையிலே ஒரு புகார் கொடுக்கப்பட்டு, அந்தப் புகாருக்காக போலீஸ் ஸ்டேசனுக்கு அழைத்துச் செல்லுகின்றபோது, புகார் கொடுத்தவரே, அரைகுறையாக உயிர்போகும் நிலைக்கு அடித்து, போலீஸ் ஸ்டேசனில் கொண்டு போய் ஒப்படைத்திருக்கிறார். அங்கே போனபிறகு அவர்களும் அடித்து இருக்கிறார்கள். அடித்ததற்குப் பிறகு, அங்கே அந்த நபர் இறந்து விட்டார். இறந்ததை மறைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு சம்பந்தப்பட்ட நபர் போலீசின் உதவியோடு, அதைக் குளத்திலே கொண்டு போய் போட்டுவிட்டார். அது குளத்திலே மிதந்த பிணம் என்று இப்போது பேசிக்கொள்கிறார்கள், அந்த நபரை அழைத்துக்கொண்டு போனதை எல்லாம் பார்த்த மக்கள், இது உண்மையிலே குளத்திலே கிடந்த பிரேதம்அல்ல. ஏற்கனவே அழைத்துக்கொண்டு போனதை நாங்கள் பார்த்திருக்கிறோம். ஆகவே போலீஸ் ஸ்டேசனுக்குப் போன நபர் அடிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கிறார். அது என்ன விவரம் என்று தெரியவேண்டும். என்பதற்காக ஊரிலே இருக்கக் கூடிய அனைத்து, சர்வ கட்சித் தலைவர்களும், பிரதிநிதிகளும், பொதுமக்களும் போலீஸ் ஸ்டேசனுக்குச் சென்று ஆதைப் பற்றிய விவரங்கள் தங்களுக்குத் தெரிய வேண்டும். என்ற முறையிலேயும், நீதி விசாரணை வேண்டும் என்ற முறையிலேயும் முறையிட்டு இருக்கிறார்கள். நீங்கள் உடனடியாக கலைந்து போக வேண்டும் என்ற அறிவிப்பைக் கூடச் சொல்லாமல், திடீரென்று லத்தி சார்ஜ் செய்து மக்களை அடித்து விரட்டியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, இதைத் தொடர்ந்து பல்வேறு இயக்கங்கள் போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கின்றன. இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை. இன்னும் இதுபோன்ற பல்வேறு விஷயங்கள் இதிலே அடங்கியிருக்கின்றன. குறிப்பாக இதைப் பற்றி சட்டமன்றத்திலே பல தடவைகள் நாம் பேசியிருக்கிறோம். இந்த லாக்கப்பில் செல்லுகின்றவர்கள், சந்தேகத்தின் அடிப்படையிலே போலீஸ் ஸ்டேசனுக்குக் கொண்டு போகக் கூடிய நபர்கள் மீண்டும் உயிரோடு திரும்பி வருவதற்கான சாத்தியப்பாடுகள் இல்லாத நிலைமையில் மேலும் மேலும் இது மாதிரி நிலைமைகள் வந்து கொண்டிருக்கிற ஒரு அபாயகரமான நிலைமை இருப்பதன் காரணமாக, இதைப் பற்றி விரிவாக விவாதித்து இதற்கு ஒரு முடிவு கட்டவேண்டும் என்ற முறையிலே, இதைப்பற்றி விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



திரு.. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்அவர்களே, கும்பகோணத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியானது ஏதோ தற்செயலாக அல்லது தனியாக நடைபெற்ற ஒருநிகழ்ச்சியாக கருதிக் கொள்வதற்கில்லை. விசாரணைக்காக காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்படுகிறவர்கள். அழைத்துச் செல்லக் கூடிய நேரத்திலே நல்ல முறையிலே சென்றாலும் அவர்கள் அங்கே கடுமையாகத் தாக்கப்படுகிறார்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் ஏதோ அவர்களுக்கு அங்கேயே உயிர் போகக் கூடிய நிலை ஏற்பட்டால் உடனடியாக தற்கொலை என்கிற வகையிலே அதற்குப் பெயர் புனைந்து, அவர்கள் குளத்திலே குதித்து இறந்து விட்டார்கள் அல்லது தூக்குக் கயிற்றைப் போட்டு கொண்டு இறந்து விட்டார்கள் என்கிற முறையிலே நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இது தினசரி அதிகரித்துக் கொண்டு இருக்கிறது.

இந்தச் சட்டமன்றத்திலேயே கூட பல்வேறு சந்தர்ப்பங்களிலே இத்தகைய பல்வேறு நிகழ்ச்சிகளைப் பற்றி நாம் பேசியிருக்கிறோம். ஆனாலும் தொடர்ந்து இந்த நிலை நீடித்துக் கொண்டேயிருக்கிறது. நாம் கடைசியாக சென்ற மாதத்திலே மீஞ்சூரிலே காவல் நிலையத்திலே மாணிக்கம் என்கிற ஒருவர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டவர், தற்கொலை செய்து கொண்டார் என்பதைப் பற்றி விவாதித்தோம். அப்போது, அவர் தான் போட்டிருந்த சட்டையை வைத்து தூக்கிலிட்டுக் கொண்டார் என்கிற செய்தியினை பேசுகிற நேரத்தில், அது அந்த அளவுக்கு உண்மையாக இருக்க முடியாது என்று காவல் துறை அதிகாரிகள் மீது கூட நடவடிக்கை எடுத்திருப்பதாக நம்முடைய மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்கூட அவையிலே அறிவித்திருக்கிறார்கள்.

ஆகவே, அந்த முறையிலே அது எவ்வளவோ தடுத்து நிறுத்தப்பட்டும், இம்மாதிரியான நிகழ்ச்சிகள் இனி தொடராது என்று அன்றையதினம் இந்த அவையிலே கூறியும், இது தொடர்ந்து நடந்து கொண்டுதான் இருக்கிறது. இப்போது கும்பகோணத்தில் கூட சென்ற பத்து தினங்களுக்கு முன்னதாக அப்படி ஒரு சம்பவம் நடைபெற்றிருக்கிறது.

இதிலே வேடிக்கை என்னவென்றால், நியாயம் கோரி அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அவர்கள் கடுமையாக காவல் துறையால் தாக்கப்படுகிறார்கள். அவர்கள் தாக்கப்படுவதோடு மட்டும் அல்லாமல், அவர்கள் மீதும் வழக்குப் போடப்படுகிறது. அதாவது குதிரை கீழே தள்ளியதும் அல்லாமல், குழியையும் பறித்தது என்று சொல்வார்களே அது போன்ற கதையிலே நிகழ்ச்சிகள் இன்றைய தினம் நடந்து கொண்டிருக்கின்றன. இம்மாதிரியான நிலைமையிலே காவல் துறையினரால் காவல் நிலையத்திற்கு, விசாரணைக்காக அழைத்துச்செல்லப்படக் கூடியவர்களை சித்திரவதை செய்யக் கூடிய நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

சட்டமன்றத்திலே இதைப்பற்றி நாம் பேசிக் கொண்டேயிருக்கிறோம். இவைகளுக்காக ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொண்டு வந்து, அதற்கு அரசுத் தரப்பிலே பதில் கொடுத்துவிட்டு, அத்தோடு அந்தப் பிரச்னை முடிந்து விட்டது என்கிற நிலையில் இருக்கிற காரணத்தினாலேதான், இந்த நிலைமை தொடர்ந்து நீடிக்கிறது. ஆகவே இந்தச் சந்தர்ப்பத்திலே நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புவது, இம்மாதிரியான நிகழ்ச்சிகள் எதிர் காலத்தில் எப்போதும், எந்தச் சந்தர்ப்பத்திலும் ஏற்படாமல் தடுக்க வேண்டியது அரசினுடைய பொறுப்பு மட்டும் அல்ல, நம் அனைவருடைய பொறுப்பாகவும் இருக்கிறது. ஆகவே, எந்தக் காரணத்தாலே இந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் ஏற்படுகின்றன என்பதை முழுவதுமாக விவாதிப்பதற்காகவும், இம்மாதிரியான நிகழ்ச்சிகள் தொடராமல் தடுப்பதற்கு எடுக்க வேண்டிய அனைத்து நடவடிக்கைகள் பற்றியும், முழுவதுமாக இந்த அவையிலே விவாதிப்பதற்சாகவும், இந்த அவையின் இதர நிகழ்ச்சிகளை ஒத்திவைக்க வேண்டும் என்று நான் மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்கள் மூலமாக கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-10)

திரு. ஆர். நவநீத கிருஷ்ண பாண்டியன் : துணைத் தலைவர் அவர்களே, கும்பகோணத்திலே நடந்த இந்த சம்பவம் துரதிருஷ்டவசமானது. இந்தப் பிரச்சினை பற்றிச் சொல்கிற போது குளத்திலே விழுந்து இறந்து விட்டார் என்று சொன்னார்கள். எங்களுக்குக் கிடைத்த தகவலின் படி போலீஸ் ஸ்டேஷனில் இறந்து அதற்குப் பிறகு குளத்திலே தூக்கி எறியப்பட்டார் என்று வந்து இருக்கிறது. காவல் துறை அதிகாரிகள் கொடுத்த தகவலை உண்மை என்று எடுத்துக்கொள்ளாமல் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று விசாரணை செய்தால் உண்மையைப் புரிந்துகொள்ளமுடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுபோன்ற சம்பவங்கள் பல இடங்களிலே பலமாதிரியாக நடந்திருக்கின்றன. சட்டமன்றத்திலே ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொண்டு வந்து விவாதித்துக் கொண்டிருக்கிறோம். இதுபோன்று சட்டமன்றத்திற்கு வராமலும் பத்திரிகைகளிலே வராமலும் போலீஸ் ஸ்டேஷன்களிலே மரணம் அடைந்தவர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இந்த முறை தவிர்க்கப்பட, நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று பல முறைகள் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

காவல் துறை அதிகாரிகள் சில நேரங்களில் கடுமையாகத் தண்டிக்கக் கூடிய நிலைமை இருப்பதால் இப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படுகிறது. அப்படித்தண்டிக்கிற நேரத்திலே உடனடியாக சிகிச்சை அளித்தால் அவர்கள் பிழைத்து விட முடியும். ஆனால் பக்கத்திலே மருத்துவ மனை இல்லாத இல்லாத காரணத்தினாலே அதிக தூரத்திலே உள்ள



மருந்துவமனைக்கு அழைத்துச் செல்கிறார்கள். ஆகவே சிகிச்சை அளித்து பலன் அளிக்காத நிலையில் அவர்கள் இறந்துவிடுகிறார்கள். எனவே ஒவ்வொரு காவல் நிலையத்திற்கு அருகிலும் ஒரு மருத்துவ மனையை அமைக்கின்ற பணியை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும். அப்படி அமைத்தால் அந்த கிராம மக்களுக்கும் அது பயனுடையதாக இருக்கும், காவல் துறைக்கு ஏற்படக்கூடிய ஒரு கெட்ட பெயரும் இல்லாமல் அதைத் தவிர்க்க கூடிய முறையிலே உடனடியாக சிகிச்சை அளிப்பதற்கும் வசதியாக இருக்கும் என்று கூறி இதைப்பற்றி மேலும் பல விரிவான விளக்கங்களைப் பேசவேண்டியிருப்பதால் அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இது பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. :. இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1-3-1984 அன்று கும்பகோணம் நகரில் காலை 10 மணிக்கு அருள்மிகு சாரங்கபாணி கோயில் பொற்றாமரைக் குளத்தில் ஆண் பிரேதம் ஒன்று மிதப்பதைக் கண்ட அக்கோயில் ஊழியர் தேவராஜன் கும்பகோணம் வடக்கு காவல் நிலையத்தில் புகார் செய்தார். இவ் வழக்கு குற்ற எண் 224/84-ல் இ. பி. கோ. பிரிவு 174-ன்கீழ் பதிவு செய்யப்பட்டது. முதலில் அது யாருடைய பிரேதம் என்று அடையாளம் கண்டு பிடிக்க முடியவில்லை. பிரேத பரிசோதனை முடிந்து, சங்கராச்சாரியார் மடம் மூலம் உடல் அடக்கம் செய்யப்பட்டது. பிரேத பரிசோதனை அறிக்கையில் இறந்தவர் நீரில் மூழ்கியதால் மூச்சு அடைத்து இறந்துவிட்டதாக தெரியவந்தது.. பிரேதத்தில் உள் காயமோ, வெளிக்காயமோ இல்லை. புலன் விசாரணையில் இறந்தவர் மயிலாடுதுறை, கூறைநாடு, ஆயக்கார தெருவினைச் சார்ந்த பிரகாசம் மகன் சிங்காரவேலு (வயது 24) என்று தெரிய வந்தது. அதன்பிறகு நீதி விசாரணை கோரி, கும்பகோணம் இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பாண்டியன் தலைமையில் 3 காங்கிரஸ்காரர்களும், ஜனதா கட்சியைச் சேர்ந்த ஒருவரும் 8-4-1984 அன்று காலை 10 மணியளவில் கும்பகோணம் உச்சிப் பிள்ளையார் கோயில் முன்பு உண்ணாவிரதம் இருந்தனர். சிங்காரவேலுவின் மரணத்தைக் குறித்த உண்மைகளை அறிய தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர், கும்பகோணம் சார் ஆட்சியரை காவல் துறை நிலை ஆணை எண் 145-ன்கீழ் விரிவான விசாரணை நடத்தி அறிக்கை அனுப்புமாறு ஆணையிட்டுள்ளார். விசாரணை அறிக்கை அரசுக்குக் கிடைத்தவுடன் தக்க பரிசிலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆனால், 9-4-1984 அன்று இரவு 8-30 மணியளவில் உண்ணாவிரதம் இருந்தவர்கள் பொதுக்கூட்டம் நடத்துவது போல் ஒலிபெருக்கிவைத்துப் பேசியும் போலீசை தரக்குறைவாகத் திட்டியும் போக்குவரத்திற்கு இடையூறு விளைவித்தனர் அப்போது அவ்வழியே சென்ற கும்பகோணம் வடக்கு காவல்நிலைய சட்டம் ஒழுங்கு உதவி ஆய்வாளர் இதைக் கேட்டபொழுது, அவரை மரியாதை குறைவாகத்திட்டி தாக்க முற்பட்டனர். உதவி ஆய்வாளர் காவல் நிலையத்திற்குச் சென்று காவலர்களை

அழைத்துவந்து கூட்டத்தை கலைக்க முற்பட்டார். அப்போது உண்ணாவிரதம் இருந்தவர்களும், அவர்களுடைய ஆதரவாள 5 களும் காவல் துறையினரைக் கல்லெறிந்து தாக்கினர். உதவி ஆய்வாளர் மற்றும் 3 காவலர்கள் காயமுற்றனர். போலீசார் கலவரத்தைத் தடுப்பதற்காக கலகக்காரர்களை துரத்தினர். இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் கொடுத்த புகாரின் பேரில் கும்ப கோணம் தெற்கு காவல் நிலைய குற்ற எண் 396/84 இல் 147, 148, 332, 336, இ. பி. கோ. பிரிவுகளின்கீழ் பாண்டியன் மற்றும் 6 நபர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

குடந்தை ஆய்வாளர் தன் குழுவினருடன் சென்று இரவு 10-30 மணியளவில் பாண்டியன் மற்றும் கூடியிருந்தவர்களைப் பிடிக்க சென்றபோது கல்லை எறிந்துபோலீசைத் தாக்கினார்கள். இதில் 3 காவலர்கள் காயமுற்றனர். கூட்டத்தினரைக் காவல் துறையினர் லேசாகப் பலப் பிரயோகம் செய்து கட்டுப்படுத்தி பாண்டியன் உள்ளிட்ட 17 நபர்களைப் பிடித்து இரவு 10-45 மணிக்குத் தெற்கு காவல் நிலைய குற்ற எண் 397/84-ல் 147, 148, 332, 336, இ. பி. கோ. பிரிவுகளின்கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. கலவரத்தில் சம்பந்தப்பட்ட 17 நபர்களில் 14 நபர்கள் காயமடைந்துள்ளனர். திருவாளர்கள் பா. சந்திரன், பாலாஜி ஆகிய இருவரும் குடந்தை அரசு மருத்துவமனையில் உள்நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றனர். நிலைமை அமைதியாக உள்ளது.

இது குறித்துப் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் காவல் நிலையத்தில் தாக்கியதால் அந்தக் கைதி இறந்ததாகவும் இறந்ததற்குப் பிறகு குளத்திலே எறியப்பட்டதாகவும் தெரிவித் திருக்கிறார்கள். உண்மைகள் என்ன என்பது விசாரணையின் போது நன்றாகத் தெரியவரும். இங்கே எதிர்க்கட்சிகள் சார்பில் எழுப்பப்படுகிறபோது ஆளுங்கட்சி சாரபிலே அதற்குப் பதில் தரப் படுகிறபோது அதோடு முடிந்து விடுகிறது, அதனால் காவல் நிலையங்களிலே இத்தகைய சாவுகள் தொடர்ந்த வண்ணம் இருக் கின்றன என்ற கருத்தை எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் சொன் னார்கள். அது சரியல்ல. இங்கே நீங்கள் எழுப்புகிறபோதும் அரசு அதைப்பற்றி பதில் அளிக்கும் போதும் அது சம்பந்தமாக தீவிரமாக விசாரணை செய்யப்படுகிறது. ஆகவே விசாரித்து குற்றம் புரிந்து இருந்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் படுகிறது. ஆகவே மக்களிடம் ஒரு விழிப்புணர்ச்சி ஏற்படுவதற் காக இத்தகைய விவாதங்கள் இங்கே பயன்படுகின்றன என்பதை நான் மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குப்பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே சட்டப் பேரவையிலே எழுப்புவதாலே பயன் இல்லை என்ற கருத்துக்கு வருவது ஜன நாயகத்திற்கு ஏற்றதாகாது என்பதை எல்லோரும் எற்றுக்கொள் வார்கள் என்று நான் அறிகிறேன். ஆகவே நிலைமைகள் எல் லாம் அரசின் கவனத்தில் இருக்கின்ற காரணத்தால் அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இதை விவாதிக்க வேண்டியது இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மின் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை யென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

## 4. கவன ஈர்ப்பு.

### காவிரிப்பட்டனம் ஒன்றியம் தேவீரஹள்ளி ஏரிக்குத் தென்பெண்ணை ஆற்றிலிருந்து தண்ணீர் விடுவது.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் துணைத் தலைவர் அவர் களே, ''காவேரிப்பட்டினம் ஒன்றியம் தேவீரஹள்ளி ஏரிக்கு தென்பெண்ணை ஆற்றிலிருந்து சென்று கொண்டிருந்த கால்வாய் மூடப்பெற்றுள்ளதால் விவசாயம் பாதிக்கப் பெற்றுள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேவீரஹள்ளி ஏரி பொதுப் பணித் துறையால் பராமரிக்கப்பட்டு வரும் ஆற்று முறைப் பாசன ஏரி யாகும். இந்த ஏரி தென்பெண்ணை ஆற்றில் கட்டப்பட்ட நெடுங்கல் அணைக்கட்டிலிருந்து வலது புறமாகப் பிரியும் கால் வாயால் பாசனம் பெறுகிறது. இந்த ஏரி 99.47 ஏக்கரை ஆயக் கட்டாக கொண்டுள்ளது. இவ்வேரியின் வரத்துக் கால்வாய் 300.08 ஏக்கர் நிலங்களுக்கு நேரிடையாகவும் பாசனம் அளிக்கிறது. நேரிடைப் பாசனம் பெறும் ஆயக்கட்டுதாரர்களுக்கு வாரத்தில் ஐந்து நாட்களுக்கும், மேற்கண்ட ஏரிக்கு வாரத்தில் இரண்டு நாட்களுக்கும நீர் விடப்படுகிறது. இது ஏரிப் பாசனத்திற்குப் போதுமானது. தற்சமயம் ஏரியில் மூன்று அடி தண்ணீர் உள்ளது. ஆகவே ஏரிப் பாசன விவசாயிகள் பாதிக்கப்படும் நிலை ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் காவேரிப்பட்டினம் தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் உள்ள தென்பெண்ணை ஆற்றி லிருந்து தேவீரஹள்ளி ஏரிக்குச் செல்லும் கால்வாய் தூர்ந்து போயும் மதகு பழுதடைந்து உள்ளதாலும் ஏரிக்குச் செல்லும் தண்ணீர் வழியல் பாசன நிலங்களுக்கு சில நேரங்களில் மிக குறைந்த தண்ணீர் செல்கின்ற நேரத்தில் மற்றவர்கள் பயன் படுத்துகின்ற காரணத்தாலும் ஆகவே இந்த காரணங்களினால் தேவையான தண்ணீர் ஏரிக்குப் போகாததால் ஏரியின்கீழ் பாசனம் பெறும் விவசாயகள் பெரிதும் பாதிக்கப்பட்டுக் கொண்டு இருக் கிறார்கள். ஆகவே ஏரியல் தண்ணீர் நிரம்பவும், பாசன வசதி பெருகவும், தடைகள் நீங்கவும் அரசு என்ன நடவடிக்கைகளை

மேற்கொண்டு இருக்கிறது, மேற்கொள்ள இருக்கிறது என்ற விவரங்களை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்தது போல நெடுங்கல் அணைக்கட்டில் இருந்து வலது புறமாகப் பிரியும் கால்வாயால் பாசனம் பெறுகிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறியது போல் தேவீரஹள்ளி ஏரி வாயிலாக ஒரு பாசனப் பகுதி ஆயக்கட்டுப் பகுதி பாசன வசதி பெறுகிறது. இன்னொரு பக்கத்தில் நேரிடையாகவே வரப்புக் கால்வாயின் வாயிலாக ஒரு பகுதி பாசன வசதி பெற்றுக்கொண்டு இருக்கிறது. இந்த சூழ்நிலையில் புதிதாக மாற்றங்கள் ஏற்படுத்துவதற்கு தேவையில்லை என்று இங்கே எனக்கு தரப்பட்டு இருக்கிற குறிப்புகள் தெரிவிக்கின்றன. ஏற்கெனவே இந்த ஏரியில் 3 அடி தண்ணீர் இருப்பதாக இங்கே கொடுத்துள்ள குறிப்பில் சொல்லப்பட்டு இருக்கிறது. இந்தக் காரணங்களினால் எந்த விதமான மாற்றங்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதிர் பார்க்கிறார்கள் என்று தெரியவில்லை. இருந்தாலும் அவர்கள் கூறியதுபோல் ஒழுங்காக சட்டர்கள் அடைக்கப்பட்டு இருக்கிறதா? என அறிந்து அவைகளை பழுதுபார்க்கும் சூழ்நிலை இருக்குமானால் அவைகள் எல்லாம் நிச்சயமாகக் கவனிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-20).

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தக் கதவுகள் பழுதடைந்திருக்கின்றன என்பது கூட அல்ல, கதவுகளே இல்லை. தண்ணீர் வந்து கால்வாய்க்குச் செல்லும்பொழுது, வெள்ளப்பெருக்கு ஏற்பட்டால் மேடாக ஆகிறது. அந்த மேடு எடுக்கப்படுவதில்லை. எனவே, கதவுகளைப் போட்டு சீர் செய்ய வேண்டும். ஏரிக்குத் தண்ணீர் செல்லும் வழித்தடத்தில் பாசன நிலம் இருக்கிறது. குறைந்த தண்ணீர் வரும்பொழுது அவர்கள் அந்தத் தண்ணீரைத் கட்டிவிடுகிறார்கள் ; எனவே தண்ணீர் ஏரிக்குச் செல்வதில்லை, எனவே, தண்ணீர் ஏரிக்குச் செல்லும் வழிக்கு ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக் கொகள்கிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, எனக்குத் தரப்பட்டிருக்கின்ற குறிப்புகளின்படி ஏறக்குறைய ஐந்து நாட்கள் நேரடியாகப் பாசனம் பெறும் ஆயக்கட்டுதாரர்களுக்கும், இரண்டு நாட்கள் தேவீரஹள்ளி ஏரிக்கும் நீர் விடப்படுகிறது. இந்த முறையில் தற்போது பாசனம் செய்யப்பட்டுக்கொண்டு வருகிறது. தற்சமயம் தேவீரஹள்ளி ஏரியில் மூன்று அடி தண்ணீர் இருப்பதாகச் சொல்லப்



பட்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் மாண்புமிகு உறுப்பினரவர்கள் எதை எதிர்பார்க்கிறார்கள் என்று தெரியவில்லை. தனியாக அவர்களுக்கு ஏதாவது குறைபாடுகள் இருந்து, அவைகளைச் சொன்னால், அதில் தனிக் கவனம் செலுத்தி, அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 5. அறிக்கை அளித்தல்

### அரசு உறுதிமொழிக் குழு

திரு. பி. முகமது இஸ்மாயில் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அரசு உறுதிமொழிக் குழுவின் ஆறாவது (ஏழாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை அளிக்கிறேன்.

## 6. வரவு—செலவுத் திட்டம் 1984-85 வாக்கெடுப்பு (தொடர்ச்சி).

### (அ) கோரிக்கை எண் 27—கதர்த் தொழில்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 27—கதர்த் தொழில் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,29,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

திரு. சு. பாலன் : தலைவரவர்களே, குடிசைப் பகுதியில் உள்ளவர்கள் ஓய்வு நேரங்களில் கதர்த் தொழிலில் ஈடுபட்டு தங்கள்வருவாயை அதிகரிக்க குடிசை தொழில் ஏற்படுத்த தக்க நடவடிக்கை எடுக்காதது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மான்த்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 27—கதர்த் தொழில் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,29,00,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானமும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, அரசின் கொள்கை பற்றிய குறிப்பு** அச்சிடப்பெற்று மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வைக்கப்பெற்

** 415-426ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

றுள்ளது. அவற்றை நான் பேசியதாக நடவடிக்கைக் குறிப்பிலே பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்த பின்னால் நான் என்னுடைய பதிலில் விடை அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்றைக்கு இரண்டு மானியங்கள் பற்றி விவாதிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஒவ்வொரு மானியக் கோரிக்கையையும் ஒன்றரை மணி நேரத்திற்குள் முடிக்க வேண்டும். இப்பொழுது மணி 10-23 ஆகிறது. இந்த முதல் மானியக் கோரிக்கையை 12-00 மணிக்குள் முடித்தாக வேண்டும். அந்த வகையில் உறுப்பினர்கள் பேசி முடித்துக்கொள்ளவேண்டும்.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, கதர்த் துறை மானியத்தின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

உத்தமர் காந்தியார் அவர்கள் இந்திய நாட்டில் உள்ள கிராமப் புறங்களில் வாழ்கின்ற ஏழை எளிய மக்கள், வறுமையிலே வாடுகின்ற மக்கள் நல்லமுறையிலே தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக, அந்த மக்கள் கதர் நூலை நூற்க வேண்டும்; அந்த நூலிலே நெய்யப்பெற்ற கதர் ஆடைகளை மக்கள் அணிய வேண்டும் என்று கருதினார்கள். , கிராமங்களிலே உள்ள ஏழை எளிய மக்கள் கதர் நூலை நூற்று, அந்தக் கதர் நூலின் மூலம் நெய்யப்படும் ஆடைகளை மக்கள் வாங்க வேண்டும் ; அப்படி வாங்கினால்தான் இந்திய நாட்டிலுள்ள ஏழை எளிய மக்களுக்கு ஒரு வாழ்வு அளித்தது போல் ஆகும் என்று கருதி உத்தமர் காந்தியார் அவர்கள் கதரைப் பயன்படுத்தினார்கள்.

ஒரு காலத்திலே, கதர் என்றால் காங்கிரஸ் ; காங்கிரஸ் என்றால் கதர் என்று சொல்லக்கூடிய நிலைமை இருந்தது. கதர் மானியத்திலே பேசுகின்ற இந்த நேரத்தில், அந்த உணர்வு வர வேண்டும் என்பதற்காக கதரால் நெய்யப்பெற்ற பட்டுத் துணியை நான் மேலே அணிந்து கொண்டிருக்கிறேன். ஆனால் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எதிர்க்கட்சித் தலைவரவர்கள் டெரிகாட்டன் துணியை இந்தக் கதர் மானியத்தின்பொழுது அணிந்துகொண்டு வந்திருக்கிறார்கள். கதரைப்பற்றி இப்போது காங்கிரஸ் காரர்களுக்குச் சந்தேகம் வந்துவிட்டதோ என்று ஐயுறத்தக்க அளவுக்கு இன்றைக்கு........



திரு. எல். இளையபெருமாள்: மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாபு ஜனார்த்தனன் அவர்கள் காங்கிரஸ்காரர்களுக்குச் சந்தேகம் வந்துவிட்டது என்று சொன்னார்கள். எப்போதும் எங்களுக்குச் சந்தேகம் இல்லை. ஏழைகளுக்கு உதவிகரமாக இருப்பதற்காக உப தொழிலாக இந்தத் தொழில் இருந்து அவர்களுக்குப் பயன்படவேண்டும், என்ற வகையிலே உத்தமர் காந்தி அவர்கள் ஏழைகளுக்கான திட்டமாக இந்தத் தொழிலைக் கொண்டுவந்தார்கள். அந்தத் திட்டத்தை ஒரு காங்கிரஸ்காரர்கூட மறக்கவில்லை ; மறக்கவும் மாட்டோம். எனவே சந்தேகம் என்ற வார்த்தைக்கே இடம் வேண்டாம் என்பதை அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப் : தலைவர் அவர்களே, பாலியஸ்டர் காதி என்ற ஒன்று இருக்கின்றது. அதுபற்றி அவருக்குத் தெரியாது என்று நான் நினைக்கிறேன். எனவே அவர்கள் அதனைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனன்: மாற்றுத் தலைவர் அவர்களே. காதியிலே பாலியஸ்டர் துணி வந்திருக்கின்றது என்றும், அதை அணிந்திருப்பதாகவும் மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள்........(குறுக்கீடு)........அது இருக்கிறது என்று சொன்னார்கள். அதை அணியவில்லைபோல் தெரிகிறது. ஆகவே அப்படிப்பட்ட உணர்வுகள் இந்த மானியக் கோரிக்கையிலே பேசுகின்ற நேரத்திலே வரவேண்டும் என்பதற்காக நான் அதுபற்றி வற்புறுத்துகிறேனே தவிர வேறு ஒன்றும் இல்லை. ஆனால் குறிப்பாக கதர் என்பது ஒரு கட்சிக்கு மட்டும் உரியது என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. எல்லோரும் அதை அணியவேண்டும் என்ற கருத்திலேதான் நான் அதைச் சொன்னேனே தவிர வேறு ஒன்றும் இல்லை. சுதந்திரம் பெறுவதற்காகவும், கிராமப்புறத்திலே இருக்கின்ற ஏழை எளிய மக்கள் மகிழ்ச்சியோடுவாழவேண்டும் என்ற கருத்திலேயும் தான் உத்தமர் காந்தியார் அவர்கள் அந்தத் திட்டத்தினைக் கொண்டுவந்தார்கள். இந்தியாவிலே கிராமப்புறங்களிலே பெரிய, பெரிய தொழிற் சாலைகளும், மற்ற நூற்பாலைகளும் ஏற்படுத்த முடியாது என்ற நிலையிலே அங்கே இருக்கின்ற ஏழை எளிய மக்கள் கதர் நூலை நூற்று கதர் ஆடை நெய்து அவற்றை விற்பனை செய்து தங்களுடைய வறுமையைப் போக்கிக்கொள்ளவேண்டும் என்ற உணர்வோடும், சுதந்திர உணர்ச்சியை மக்களிடையே ஊட்ட வேண்டும் என்ற உணர்வோடும் தான் உத்தமர் காந்தியார் அவர்கள் அதனை ஏற்படுத்தினார்கள். அந்த வகையிலே இன்றையதினம் இந்த கதர் மானியத்திலே பேசுகின்ற வாய்ப்பிலே என்னுடைய கருத்து என்னவென்றால் கிராமப்புறங்களில் பல பகுதிகளில் இந்தத் தொழிலில்ஏழை எளிய மக்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அதிலே இருந்து வருகின்ற அந்தச் சிறிய ஊதியம் அவர்களுக்கு வாழ்க்கை நடத்துகின்ற அளவுக்கு இருக்கின்றது என்று சொன்

னால் அது மிகையாகாது. ஆனால் அவர்களுக்குக் கொடுக்கப்படு கின்ற கூலி மிகவும் குறைவாக இருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவிப்பது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

கதர் வாரியத்திலே இராட்டை நூற்கும் தொழிலாளர்களுக்கு 5 ரூபாய் 5½ ரூபாய் என்ற அளவிலேதான் தருகிறார்கள். அரசு பலவகையிலே மானியம் தந்தாலும்கூட கிராமப்புறங்களில் இருக் கின்றஅந்த நூற்பு செய்கின்ற தொழிலாளர்கள் வறுமையில் இருப்பதன் காரணத்தாலும், அதிலும் குறிப்பாக ஆதி திராவிட மக்கள் வறுமையிலே இருக்கின்ற காரணத்தாலும் அந்தக் கூலி உயர்வை அரசு மானியம் கொடுத்தாவது உயர்த்த வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

நெசவாளர்களுக்குக் கொடுக்கப்படக் கூடிய கூலியும் மிகக் குறைந்த அளவிலே இருக்கின்றது. 15 ரூபாய் என்ற அள்விலே தான் கதர் நெசவாளர்களுக்கு கூலி கொடுக்கப்படுகின்றது. ஆனால் கைத்தறி சம்பந்தப்பட்ட வரையில் அந்த நெசவாளர் களுக்கு ஓரளவிற்கு நல்ல கூலி கிடைக்கின்றது. அது கூட அவ்ர் களுக்குப் போதுமானதாக இல்லைதான். ஆனால் கதர்த் தொழி லாளர்களுக்கு மிகக் குறைந்த கூலி அதாவது 15 ரூபாய் என்ற அளவிற்குத்தான் கொடுக்கப்படுகின்றது ; எனவே அதை உயர்த்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இந்த கதர் விற்பனை என்பதைப் பொறுத்தவரை யிலே நாம் ஒரு கொள்கையைக் கடைப் பிடித்துக்கொண்டிருக் கின்றோம். அதவாது 10 விழுக்காடு என்ற அளவிலே தள்ளு படியினை கதர் விற்பனைக்காகத் தருகிறார்கள். கைத்தறி நெசவாளர்களுக்கெல்லாம் எப்படி 30 விழுக்காடு என்றெல்லாம் கொடுத்து அதன்படி அந்த கைத்தறி நெசவாளர்கள் எல்லாம் எப்படி பயன் அடைகிறார்களோ அதேபோல் கிராமங்களில் இருக்கின்ற கதர் நூற்பு செய்கின்ற அந்தத் தொழிலாளர்களுக் கும் பயன் கிடைக்கின்ற வகையிலே அந்த விற்பனையையும் அதி கரிக்க 10 விழுக்காடு என்று இருப்பதை 30 விழுக்காடு என்று அதிகரிக்கவேண்டும் என்று என்னுடைய கட்சியின் சார்பிலே நான் என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-30)

கதர் நூற்பு என்பது ஒரு உணர்ச்சியுள்ள தொழிலாக இல்லா திருக்கிற காரணத்தால் ஆங்காங்கு வட்டத் தலைநகர அளவிலே கதர் நூற்பு செய்கின்ற ஒரு டிரெயினிங் சென்டர் ஏற்படுத்தி னால் வேலையில்லாத படித்த இளைஞர்கள், பெண்மணிகள் அங்கே பயிற்சி பெற்று, பலன் அடையக்கூடிய வாய்ப்பு ஏற் படும். ஆகவே, ஒவ்வொரு வட்டத்திலும் நூற்பு டிரெயினிங் சென்டரை ஏற்படுத்த வேண்டும். கல்லூரிக்கு மாணவர்களைச்



சேர்ப்பது போல், பாலிடெக்னிக்குக்கு மாணவர்களைச் சேர்ப்பது போல், இந்தக் கதர் நூற்பு பயிற்சி பெறுவதற்கு டிரெயினிங் சென்டர் ஏற்படுத்தி, அவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும்.

பனைத் தொழில் கதர் வாரியத்திலே இருக்கிறது. கிரா மத்திலே, எல்லா இடங்களிலும் பனை மரங்கள் நன்றாக இருக்கின்றன. ஆனால் கொடுத்திருக்கிற கொள்கைக் குறிப் பேட்டில் குறிப்பிட்ட மாவட்டத்தில்தான் பனைத் தொழில் செய்வதற்கான வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. எல்லா மாவட்டங்களிலும் பனைத் தொழில் செய்வதற்கு அரசு ஒரு கொள்கை முடிவு எடுக்க வேண்டுமென்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக வட ஆற்காடு மாவட்டத்தில் பனை மரங்கள் ஏராளமாக இருக் கின்றன, ஆனால், அங்கே பனை சம்பந்தப்பட்ட தொழில்கள் போதுமானதாக இல்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர் களுக்குத் தெரிவித்து, வட ஆற்காடு மாவட்டத்தில் பனைத் தொழில் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டு மென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கதர் வாரியத்தாலே, எங்கள் ம்ாவட்டத்திலே, நெட்டி மரத்திலே இருந்து மலர் மாலை போன்று ஆளுயர மாலைகள் தயாரிக்கப்படுகின்றன. ரூ.75, ரூ. 100 என்று மதிப்பிடக்கூடிய அளவுக்கு, இன்றையதினம் இந்த நெட்டி மரத்திலேயிருந்து ரோஜாப்பூ, மல்லிகைப்பூ மலர் மாலைகளைப்போல் செய்து விற்கிறார்கள். செய்யாறு வட்டத்தில் திருப்பனங்குடி என்ற கிராமத்தில் நெட்டி மரத்திலேயிருந்து பட்டை எடுத்து மலர் மாலை தொடுக்கின்ற ஒரு கூட்டுறவுத் தொழிற்கூடத்தை, கதர் வாரியத்தின் சார்பில் ஏற்படுத்தித் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை இந்த நேரத்தில் கேட்டுக்கொள் கிறேன்.

கதர் சம்பந்தப்பட்ட தொழில் மையங்களை ஒவ்வொரு வட்டத்திலேயும் ஏற்படுத்த வேண்டுமென்பதை இந்த நேரத்திலே ஒரு கொள்கை முடிவாக எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். எல்லா இடங்களிலும் இப்படி உற்பத்தி செய்தால் அதிக மார்ஜின் தேவைப்படாது. ஆகவே, எல்லா இடங்களி லும், ஒவ்வொரு மாவட்டத்திலும் தலைநகரிலே விற்பனை நிலையம் இருப்பதுபோல், ஒவ்வொரு வட்டத் தலைநகரிலும் கதர் விற்பனை நிலையம் நிறுவப்பட வேண்டும். உதாரணமாக வட ஆற்காடு மாவட்டத்திலே ஜோலார்பேட்டை ஜங்க்ஷன் இருக்கிறது. அப்படிப்பட்ட இடத்திலே ஒரு கதர் விற்பனை நிலையம் இல்லை. ஆகவே, பல இடங்களிலும், குறிப்பாக, ஒவ்வொரு வட்டத் தலை நகரிலும் கதர் விற்பனை நிலையத் யத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற கொள்கையை அரசு வகுத் துக் கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள் கிறேன்,

விற்பனை ஊழியர்களுக்குப் போதுமான அளவுக்கு அங்கே ஊதியம் கிடைக்கவில்லை. இப்படியெல்லாம் பெருக்கி, கதர் தொழிலை அபிவிருத்தி செய்வதால், அங்கேயிருக்கிற ஊழியர் க்ளுக்கு ஊதியம் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக் கையைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே தெரி வித்துக்கொள்கிறேன்.

காந்தியாருக்கும் கதருக்கும் மிக நெருங்கிய சம்பந்தம் இருக் கிற காரணத்தால், எல்லா விற்பனை நிலையங்களிலும் காந்தி யார் படத்தை வைக்க வேண்டும். அதே போல் கதர் சம்பந்தப் பட்ட தொழிற்சாலை இருக்கிற, உப தொழில்கள் இருக்கிற இடங்களிலே உத்தமர் காந்தியாருடைய படத்தை கட்டாய மாக வைக்க வேண்டுமென்று அரசு உத்திரவிட வேண்டு மென்று என்னுடைய கழகத்தின் சார்பிலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தக் கதர்க் கிராமத் தொழில்கள் வாரியத்தாலே செய்யப் படுகின்ற பல பொருள்களுக்கு நல்ல மார்கெட் இருக்கிறது. கதர் வாரியத்தாலே செய்யப்படுகின்ற தீப்பெட்டிக்கு நல்ல மார்க்கெட் இருக்கிறது. விலையும் மிகக் குறைவாக வேறு இருக்கிறது. ஆகவே, அதை விரிவுசெய்ய தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கதர் பட்டுக்கு நல்ல மார்க்கெட் இருக்கிறது. அதற்கு நல்ல ரிபேட் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொண்டு, கதர் சம்பந்தப்பட்ட, உப தொழில்கள் சம்பந்தப் பட்ட, விற்பனைக் கடைகள் போன்ற அனைத்து இடங்களிலும் உத்தமர் காந்தியாருடைய படங்களை வைக்க ஆவன செய்ய வேண்டும். அவர் பொன்மொழிகளை எழுத வேண்டுமென்று தெரிவித்துக்கொண்டு, உத்தமர் காந்தியாருடைய மனம் சாந்தி அடைய கதர் அணிய வேண்டுமென்ற கோரிக்கையை வைத்து முடிக்கிறேன்.

**திரு.த. மாரிமுத்து:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நடந்து கொண்டிருக்கிற கதர் மானியக் கோரிக்கை விவாதத்தலே நான் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு முதலில் என் நன்றி யைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கோரிக்கையில் நல்ல ஆலோசனைகளையும், கருத்துக்களையும் வழங்கினார்கள். என்னுடைய கருத்துக்களையும் இந்த மாமன்றத்தில் எடுத்து வைப்பதில் நான் பெருமைப்படுகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சி ஏற்பட்ட பிறகு எப்படி தந்தை பெரியார் அவர்களுடைய எண்ணங்களை, லட்சியங்களை நிறை வேற்றி வருகிறதோ, எப்படி பேரறிஞர் அண்ணா அவர்களின் லட்சியக்கனவுகளை நிறைவேற்றிக்கொண்டு வருகிறதோ அதைப்போலவே காந்தியார் அவர்களின் எண்ணங்களையும் லட்சியங்களையும் இந்த நாட்டிலே பரப்புவதில் திட்டங்களை



செயல்படுத்தி வருவதில் இந்த அரசு முனைந்து நிற்கிறது என்பதைப் பெருமையாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு திரு. ஜனார்த்தனன் அவர்கள் கதர் விற்பனை நிலை யங்களில் காந்தியடிகளின் படங்களை மாட்ட வேண்டுமென்று சொன்னார்கள். கதர் துணியிலே நெய்த உத்தமர் காந்தி யடிகள் படங்கள் ஒவ்வொரு விற்பனை நிலையத்திலும் இருப் பதைத்தான் நான் சென்ற போது பார்த்து இருக்கிறேன். மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் அந்த நிலையங்களுக்கு அதிகமாக போய் இருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். அப்படி எங்கேயாவது இல்லாமல் இருந்தால் அதை வைப்பதற்கான ஏற்பாட்டை இந்த அரசு கண்டிப்பாகச் செய்யும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். அண்ணல் காந்தியடிகள் அவர்கள் காண விரும் பிய லட்சிய எண்ணங்களில் கதர்த் தொழிலும் ஒன்றாகும். அந்தத் துறையை நல்ல முறையில் மாண்புமிகு புரட்சித் தலை வர் அவர்களுடைய அரசு செயல்படுத்தி வருகிறது.

விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட இந்தியத் திரு நாட்டில் விவசாயம் இல்லாத காலங்களில் வேறு உப தொழில் கள் ஏதும் இல்லாத நலிவுற்ற ஏழை எளிய மக்களுக்கு கதர்த் தொழில் ஒரு அற்புதமான கிராமத் தொழிலாகும். குறைந்த மூலதனத்தில் இருந்த இடத்திலேயே ஏற்படுத்திக் கொள்ளும் வேலை வாய்ப்புகள் மூலம் கிராம மக்களுடைய வாழ்க்கையில் மறுமலர்ச்சியை இந்தத் தொழில் உண்டாக்குகிறது.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் அரசு நிறுவனங்கள், மாநகராட்சி நிறுவனங்கள், அரசு தொடர்புடைய மற்ற நிறுவனங்கள் தங்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் கிராமக் கைத்தொழில் துறையின் மூல மாகவே பெற்றுக்கொள்ள வேண்டுமென ஆணை பிறப்பித்த தன் காரணமாக கிராமத் தொழில் துறையில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரி வித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

கிராமங்களிலே உள்ள கைம்பெண்கள், மற்றும் படித்த பெண்கள் காந்தீய முறையில் பணிகளைப் பெற்றுச் செய்வதால் அண்ணல் காந்தி அடிகள் அவர்களுடைய ஆத்மா மகிழ்ச்சி அடையும்; அந்தவகையில் இந்தத் துறை நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது என்பதை பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு ஆண்டிற்காண்டு விற்பனை யில் நல்ல முன்னேற்றத்தை கண்டு 1983-ஆம் ஆண்டில் 9 கோடியே 43 லட்சத்து 36 ஆயிரம் ரூபாய்க்கு கதர் விற்பனை செய்திருப்பதை காந்தியடிகள் மீது பற்றுள்ளவர்களும், காங் கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்தவர்களும் பாராட்ட கடமைப் பட்டிருக்கிறார்கள்.

கதர் வாரியத்திலே தயார் செய்யப்படுகிற சோப்பு மிகச் சிறந்ததாக இருக்கிறது. இந்தச் சோப்பு பொதுமக்களாலே பெரிதும் வரவேற்கப்படுகிறது. அதைப்போலவே காலணிகளைப் பொறுத்தவரையில் அவைகளும் மிகச் சிறப்பாக அமைந்திருக்கின்றன. அவைகளும் பொதுமக்களால் பெரிதும் வரவேற்கப்படுகின்றன. இவைகள் எல்லாம் இந்தத் தொழிலில் எந்த அளவிற்கு அக்கறைக் கொண்டு இந்த அரசு செயல்பட்டு வருகிறது என்பதற்கு நல்ல சான்றுகளாகும்.

அதைப்போலவே பனை மரத் தொழிலை நல்லமுறையில் விரிவுபடுத்தி கிராம மக்கள் பயன்பெறும் வண்ணம் திட்டமிட்டு செயல்படுத்தி வருகிறது. பனை மரப் பொருட்களை நல்ல முறையில் தயார் செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிற அளவிற்கு முன்னேற்றம் அடைந்திருப்பது பெரிதும் பாராட்டிற்குரிய செயலாகும். பல மாவட்டங்களில் மையங்கள் அமைத்து, பல லட்சக்கணக்கான ரூபாய் ஒதுக்கி வேலை வாய்ப்பு அளிப்பதோடு, பனைத் தொழிலையும் சிறப்பித்து வரும் வாரியத்தை பாராட்டுகிற இந்த நேரத்திலே, ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். சென்ற ஆண்டு புதுக்கோட்டை மாவட்டத்திற்கு 4.80 லட்சம் ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. மற்ற மாவட்டங்களை பார்க்கிறபோது இது மிகவும் குறைந்தத் தொகையாக இருக்கிறது. ஆகவே இந்த ஆண்டு கொஞ்சம் கூடுதலான தொகையை ஒதுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

குளத்தூர் தொகுதியில் பனை மரங்கள் அதிகமாக உள்ளதால், புதுக்கோட்டை மாவட்டத்தில் அது பின்தங்கிய பகுதியாக இருப்பதால், அங்கே பனைத் தொழில் நிலையங்களை ஏற்படுத்தி கொடுத்து, அந்த மக்களுக்கு மறு வாழ்வு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மண் பாண்டத் தொழில் செய்பவர்கள், தச்சுத் தொழில், காலணித் தொழில் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளவர்கள் பிற்பட்டவர்களிலும் மிகவும் பிற்பட்டவர்கள் என்று சொல்லக்கூடிய அளவிற்கு தள்ளப்பட்டுள்ளார்கள். வேகமாக முன்னேறிக் கொண்டு வரும் இந்த நவீன காலத்தில் இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் மிகவும் பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டார்கள். இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வேறு தொழில் செய்ய செல்ல முடியாது என்பதாலே இந்த மூன்று தொழில்களில்ஈடுபட்டுள்ளவர்களுக்கு நல்லவகையில் ஏராளமான சலுகைகளை அளித்து, அந்த மக்களைக் கை தூக்கிவிட வேண்டும் என்கிற என்னுடைய பணிவான வேண்டுகோளை இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



தமிழ்நாட்டு மக்களின் முன்னேற்றத்தில் கண்ணும் கருத்துமாக இருந்து, அதிக அக்கறையோடு செயல்பட்டு வரும் புரட்சித் தலைவருடைய அரசு பள்ளிக் கல்வி சீரமைப்பானாலும் சரி, பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதாக இருந்தாலும் சரி, தாய் சேய் நல விடுதிகள் அமைப்பதாக இருந்தாலும் சரி, ஏழை மக்களுக்கு வேஷ்டி சேலை வழங்குவதானாலும் சரி, ஆதித் திராவிட மக்களுக்கு அதிக சலுகை அளிப்பதானாலும் சரி, தாய்மொழி தமிழ் மொழியை வளர்ப்பதானாலும் சரி, அறிஞர் பெருமக்களை பாராட்டுவதானாலும் சரி, ஆன்றோர்களைப் பாராட்டுவதானாலும் சரி, கலைஞர்களைக் கை தூக்கி விடுவதானாலும் சரி, விவசாய மக்களுக்கு கடனைத் தள்ளுபடி செய்வதானாலும் சரி, கிராமங்களுக்கு இணைப்புச் சாலை போடுவதானாலும் சரி, குடிநீர் பிரச்னையைத் தீர்த்து வைப்பதிலும் சரி, குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்குவதிலும் சரி, குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடுகளை அமைத்துக் கொடுப்பதிலும் சரி, ஏழை குழந்தைகளுக்கு சத்துணவு அளிப்பதிலும் சரி, எங்கள் டாக்டர் இதய தெய்வம் புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல் அவர்களுடைய அரசு மத்திய அரசு அமைச்சர்களாலே பாரட்டப்படுவதோடு, இந்தியாவிலேயே தமிழக அரசு எப்படி ஒரு முன்னோடி அரசாக விளங்குகிறதோ அதே போல் எந்த மாநில அரசும் அளிக்காததள்ளுபடியை இந்த கதர் துறை வாரியம் பாலியஸ்டர் துணிக்கு 10 சதவீதம் தள்ளுபடி செய்துள்ள செயல்பாடு ஒன்றே கதர் துறையிலே மற்ற. மாநிலங்களைக் காட்டிலும் சிறப்பாக, எடுத்துக்காட்டாக, முன்னோடியாக இந்த அரசு விளங்குகிறது, திகழ்கிறது என்பதாலே தமிழக அரசை நான் மனமுவந்து பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்; பாராட்டுகிறேன்.

கதர்த்துறை நிர்வாகத்தை நல்ல முறையிலே செயல்படுத்தி வரும் அமைச்சர் அவர்களையும் பாராட்டி, இந்த மானியக் கோரிக்கை மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கும் நன்றி கூறி, பாராட்டி, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தையும் தெரிவித்து, இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று, அமர்கிறேன். நன்றி.

திரு. டி. மணி: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த கதர் கிராம தொழில் குறித்து இங்கே அறிமுகம் செய்யப்பட்டு இருக்கும் மானியக் கோரிக்கை மீது நான் சார்ந்து இருக்கும் இயக்கத்தின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாக இந்தக் கதர் துணியைப் பற்றி பல்வேறு விவரங்களைச் சொல்லியிருந்தாலும் கூட, இந்தக் கதர்த் துணியை உருவாக்குவதற்கு நிறைய பெண்கள் அமர்த்தப்பட்டு இருக்கிறார்கள். இந்தக் கதர் துணியை உற்பத்தி செய்பவர்கள், அம்பர் சர்க்காவில் வேலை செய்பவர்கள் ஆகியோருக்குக் கொடுக்கப்படுகிற சம்பளம் ரூ. 5.25 என்று சென்ற ஆண்டு சொல்லப்பட்டு இருந்தது. இந்த ஆண்டும் அதே ரூ. 5.25 பைசா என்று தான்

சொல்லப்பட்டு இருக்கிறது. அந்த அம்பர் சர்க்காவிலே வேலை செய்யும் பெண்களுக்கு ஒரு சிட்டத்திற்கு 22 காசு தான் தரப்படுகிறது. ஒரு இடத்தில் 50 பெண்கள் வேலை செய்கிறார்கள் என்று சொன்னால், அதிலே ஒரு 5-6 பேர்கள் தான் துரிதமாக அந்தப் பணியைச் செய்து அந்தத் தொகையைப் பெற முடிகிறது. மற்றவர்கள் எல்லாம் 5 ரூபாய்க்குக் கீழே தான் வருமானம் பெற முடிகிறது. ஆகவே, இந்த அம்பர் சர்க்காவிலே வேலை செய்கிற பெண்களுக்கு நியாயமான சம்பளம் வருகின்ற முறையில், விவசாயக் கூலிகளுக்கு குறைந்தபட்ச சம்பளம் நிர்ணயிக்கப்பட்டு உள்ளது போல், குறைந்த பட்சம் இவர்களுக்கும் 8 ரூபாய் கொடுத்தால், அந்தத் துணியை உற்பத்தி செய்கிறவர்களை கை தூக்கி விட்டதாக அமையும். ஆகவே, அந்த வகையில் சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கதர் துறையில் வேலை செய்பவர்கள் கைத்தறித் துறையில் இருப்பவர்களை விட சம்பளம் குறைவாக வாங்கிக் கொண்டு இருக்கிறார்கள். அதனால் அவர்களுடைய அபிவிருத்தியும் குறைவாக இருக்கிறது. ஆகவே, அதை உயர்த்திக் கொடுக்க இந்தத் துறைக்கு அதிகமான மானியம் மத்திய அரசிடமிருந்து பெற்று இந்தத் துறையை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு அறிக்கையில் இந்த அம்பர் சர்க்கா சென்டர்கள் 425 என்று சொல்லியிருந்தார்கள். இந்த ஆண்டு 75 சென்டர்கள் தான் அதிகப்படுத்தப்பட்டு இருக்கின்றன. இது போதுமானதாக இல்லை.

காரணம் தமிழ்நாட்டில் இருக்கிற பல்வேறு கிராமங்களில் வேலையற்றிருக்கிற ஏழை எளிய பெண்கள் இந்தத் தொழிலில் ஈடுபட வேண்டுமென்றால், அவர்களுக்கு இப்படிப்பட்ட வேலைகளில் அதிக வாய்ப்புத் தர வேண்டுமென்றால், மத்திய அரசிடமிருந்து அதிகப்படியான நிதி உதவியை மானியமாகப் பெற்று, அதிகப்படியான சென்டர்களை ஏற்படுத்தினால் தான் முடியும். அப்படியானால் தான் அந்தப் பெண்களுக்கு நிரந்தரமான வேலை வாய்ப்பு கொடுக்க முடியும். அவர்களும் விரும்பி இந்தத் தொழிலில் ஈடுபடுவார்கள். அந்த வகையில் இதிலே பல்வேறு அபிவிருத்திப் பணிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்த பனை மரத் தொழில் பற்றிச் சொல்லி இருக்கிறார்கள். பனை மரம் என்று சொல்லும் போது, 1982 ஆம் ஆண்டில் முன்னாள் அமைச்சர் தகவல் சொல்லும்போது, 5 கோடிக்கு அதிகமான பனை மரங்கள் இருப்பதாகவும், அதிலே ஏறத்தாழ 60 இலட்சம் பனை மரங்கள் தான் பயனளிக்கின்ற நிலைமையில் இருப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நான் சொல்ல விரும்புவது—இந்தத் தொழிலிலே, குறிப்பாக பதநீர் இறக்கும் தொழிலில் 20,000-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். ஒரு நாளைக்கு ஒரு தொழி



லாளி 20 அல்லது 25 பனை மரங்கள் தான் ஏறி இறங்க முடியும் இன்றைக்கு அந்தத் தொழிலாளர்களுக்கு போதுமான வருமானம் இல்லாத காரணத்தால் அவர்கள் எல்லாம் சாரி, சாரியாக வேறு தொழில் பார்க்கச் செல்லும் துர்ப்பாக்கியமான ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

நான் சார்ந்திருக்கிற கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு மிகவும் குறைந்த வருமானம் தான் கிடைக்கிறது என்ற காரணத்தால் அவர்கள் இந்தத் தொழிலை விட்டுவிட்டு, மாற்றுத் தொழில்களுக்குச் செல்லுகின்ற நிலைமை இருக்கிறது. இன்றைக்கு சாதாரணமாக கொத்தனாருக்கு கையாளாக வேலை செய்யும் ஒரு தொழிலாளிக்கு மதிய உணவு போக, ஒரு நாளைக்கு 22 ரூபாய்க்கு அதிகமாகச் சம்பளம் கிடைக்கிறது. ஆனால் காலையிலும் ஏறி, இறங்கி, மாலையிலும் ஏறி, இறங்கி பனைமரத் தொழில் செய்பவர்களுக்கு ஒரு நாளைக்கு 10 ரூபாய்க்கும் குறைவாகத்தான் வருமானம் கிடைக்கிறது.

அது மட்டுமல்ல. பனை மரம் ஏறுகின்ற தொழிலாளி மட்டும் இதில் சம்பந்தப்பட்டிருக்கவில்லை. அந்தத் தொழிலாளியின் மனைவி மற்றும் குடும்பத்தினரும் இந்தத் தொழிலில் ஈடுபட்டால்தான் இந்த அளவுக்கு சம்பளம் கிடைக்கும். அவர்கள் இறக்கிக் கொண்டுவரும் பதநீரை அவர்களுடைய மனைவிமார்களோ அல்லது குடும்பத்திலுள்ள மற்றவர்களோ காய்ச்சி, கருப்பட்டியாக்க வேண்டும். அதற்கு அதிகமாக விறகு தேவைப்படுகிறது. விறகு விலை கூட இன்றைக்கு அதிகமாக இருக்கிறது. ஆகவே, இந்தத் தொழிலில் இருக்கிற கஷ்டங்களுக்கு ஏற்ப, சிரமங்களுக்கு ஏற்ப வருமானம் இல்லை. அதனால் இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் இன்றைக்குச் சாரி, சாரியாக வேறு தொழில்களை நாடிச் செல்லுகின்ற ஒரு துர்பாக்கியமான நிலைமை தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையைப் போக்க வேண்டுமென்றால் அவர்களுக்குப் போதுமான வருமானமும், பாதுகாப்பும் கிடைக்க வேண்டும்.

அது மட்டுமல்ல. இந்த பனை பொருள் உற்பத்தி நிலையங்கள் என்று சொல்லுகின்ற ஏற்பாட்டைப் பற்றிச் சொல்லி இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் பனை மரத் தொழிலாளர்கள் எங்கே அதிகமாக இருக்கிறார்கள் என்று ஒரு சர்வே செய்ய வேண்டும். கடந்த நான்கு ஆண்டுகளாக முனைப்பாக அவர்களுடைய வாழ்க்கை மறுமலர்ச்சிக்கு என்ன திட்டங்களைச் சொல்லியிருக்கிறார்கள் என்றால் இந்த பனைபொருள் திட்டம் தான். பல இலட்சம் ரூபாய்க்கான பனை பொருள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்திருக்கிறார்கள். இருந்தாலும் அபிவிருத்தி போதுமானதாக இல்லை. 1982 ஆம் ஆண்டிலே இங்கே ஒரு தகவலைச் சொல்லும் போது கன்னியாகுமரி மாவட்டத்தில் அதங்கோட்டில் ஒரு பனை பொருள் உற்பத்திச் சென்டர் அமைக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால்

இன்றைய தினம் அறிவித்திருக்கின்ற பட்டியலில் அதங்கோடு காணப்படவில்லை. என்ன காரணம் என்று தெரியவில்லை. எந்த எந்த இடங்களிலே இந்தத் தொழில் அதிகமாக நடைபெறுகிறது என்பதை சர்வே செய்து கண்டறிய வேண்டும். எங்கே அதிகமான அளவில் இந்தத் தொழிலாளர்கள் இருக்கிறார்களோ அங்கே இந்த சென்டர்களை அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்காக அந்தப் பகுதிகளிலே உள்ளவர்களிடம் பணம் கேட்காமல், முழுவதையும் மானிய அடிப்படையிலேயே செய்ய வேண்டும். மாநிலம் முழுவதிலும் எந்த எந்த மாவட்டத்தில் இந்த பனை பொருள் தொழிலை அபிவிருத்தி செய்ய முடியுமோ அங்கெல்லாம் தகுந்த அபிவிருத்தி ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதுவும் துரிதமாகச் செய்ய வேண்டும். இந்தத் தொழிலில் ஈடுபடுகின்றவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அது மட்டுமல்ல. பனை மரம் ஏறும் தொழிலாளர்களுக்கு விபத்து ஏற்பட்டால் அவர்கள் குடும்பத்திற்கு ஆயிரம் ரூபாய் உதவி நிதி அளிப்பது என்ற ஒரு ஏற்பாடு இருந்தது. அதை மாற்றி இப்போது 5,000 ரூபாய் அளிக்க அனுமதி அளித்திருக்கிறார்கள். ஆனால் அந்தப் பணம் அவர்களுக்கு சரியாகப் போய்ச் சேரவில்லை. காரணம் பனை மரத்திலிருந்து விழுந்து விபத்து ஏற்பட்டால் அதற்கான சர்டிபிகேட் வாங்குவதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. சாதரணமாக ஒரு ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பனை மரத் தொழிலாளி இறந்து விட்டால் அவரை மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்ல மாட்டார்கள்; போலீஸ் ஸ்டேஷனுக்கு எடுத்துச் செல்ல மாட்டார்கள். போலீஸ் சர்டிபிகேட் இருந்தால் தான் அவர்களுக்கு இந்த உதவி கிடைக்கும் என்ற நிலை இருக்கிறது. போலீஸ் ஸ்டேஷனுக்கு போகாதயால் ஆர். டி. ஓ. அல்லது தாசில்தார் லெவலில் இருக்கிறவர்கள் சான்றளித்தால் போதுமானது என்று சட்டத்தைத் திருத்தி, விபத்து ஏற்பட்டவுடன் அந்தக் குடும்பத்திற்கு 5,000 ரூபாய் உதவித் தொகை கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் விபத்துக்குள்ளான நூற்றுக் கணக்கான பனைமரத் தொழிலாளர் குடும்பங்களுக்கு இந்த உதவி இன்னும் கிடைக்கவில்லை. மூன்றாண்டு காலத்திற்கு மேலாகியும் உதவி கிடைக்கவில்லை; கால தாமதம் ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் எல்லோருக்கும் விரைவிலே உதவித் தொகை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. பனைமரத் தொழிலில் ஈடுபட்டு இறந்து போனவர்கள் ஒருபுறமிருக்க, எந்தவிதமான தொழிலும் செய்ய முடியாமல் உடல் ஊனமுற்றவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள்.



அவர்களுக்கும் வழங்கப்படுகின்ற உதவித் தொகையை அதிகப்படுத்தி, காலா காலத்தில் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். விபத்து நடந்தது என்று தெரிந்த உடனேயே உதவித் தொகையைக் கொடுக்க வழிவகைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

அடுத்ததாக நம்முடைய தேன் உற்பத்தியைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இந்தியாவிலேயே அதிகப்படியான தேனை உற்பத்தி செய்கின்ற மாநிலம் நம்முடைய தமிழகம் தான். இந்த மாலநிலத்திலே அதிகப்படியான தேன் உற்பத்தியாகிற மாவட்டம் குமரி மாவட்டம் தான். அங்கே மலைப் பாங்கான இடங்களில் வாழ்கின்ற பழங்குடியினருக்கான திட்டம் இது என்று சொல்கிறார்கள். அந்த திட்டத்திலே கூட, நீலகிரி, கொல்லிமலை, ஜவ்வாது மலை போன்ற இன்னும் பல பகுதிகளைச் சொன்னாலும், குமரி மாவட்டத்திலுள்ள அந்தப் பழங்குடியினருக்கு தேன் பெட்டிகளை வழங்கினாலும், ஒட்டுமொத்தமாக அதன் மூலமாக அவர்களுடைய வருவாயைப் பெருக்க முடிந்ததா என்பதைப் பற்றி ஆய்வு நடத்த வேண்டும். தேன் வளர்ச்சிக் கழகம் என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்த வேண்டும். இந்தத் துறையிலே இன்று மார்த்தாண்டத்திலே இந்த ஆண்டு தேனீ வளர்ப்பில், ஒரு கூட்டுறவுச் சங்கம் வைத்திருக்கிறார்கள். அதில் 1,200 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். கடந்த ஆண்டு, 1983-ல் மட்டும், இதிலே இலட்சக்கணக்கான கிலோ தேனை உற்பத்தி செய்திருக்கிறார்கள். இந்த தேனானது, 1.80 இலட்சம் கிலோ அளவிற்கு அந்தக் கூட்டிறவுச் சங்கத்திலே முடங்கிக் கிடக்கிறது.

அதிலே கதர் கிராம வாரியம் போன்ற பல்வேறு வகையான சங்கங்கள் இருக்கின்றன. இந்தச் சங்கங்களை எல்லாம் ஒருங்கிணைத்து, தனியார் துறைக்கு அதை கொடுக்காமல், இந்தக் கூட்டுறவுத் துறையின் மூலம் கொடுப்பதன் மூலம், வெளி மாவட்டங்களிலும், வெளி மாநிலங்களிலும், இன்னும் இதர பகுதிகளிலும், தேவையான சந்தைகளைக் கண்டுபிடிக்க முடியும். தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து, இந்த ஆண்டு தேனை வாங்கி, இலட்சக்கணக்கான ரூபாய்களை மான்யமாக தந்தால் தான், இந்தத் தொழிலை ஊக்குவிக்கவும் இருக்கின்ற தேனை காலா காலத்தில் விற்கவும் முடியும். ஆகவே இந்த முறையில் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கனவே சேலம் மாவட்டத்தில் தும்பை சேகரிக்கிறார்கள். குமரி மாவட்டத்திலுள்ள குளச்சலிலும் தும்பை சேகரிக்கிறார்கள். சேலம் மாவட்டத்தில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு ரூ. 15 சில்லரை காசு கிடைக்கிறது. ஆனால் குளச்சலில் வேலை செய்பவர்களுக்கு ரூ. 10 சில்லரை காசு தான் சம்பளமாக கிடைக்கிறது. ஆக இரண்டு பேரும் ஒரே தொழிலைத் தான் செய்கிறார்கள். குளச்சலில் 500 பேர்கள் அதிகமாக வேலை வாய்ப்பு பெறுவதற்கு ஆண்டு முழுவதும் தும்பு கிடைக்கிறது

அந்தத் தும்பை மட்டும் சரிவர பராமரித்து ஏற்றுமதி செய்வதற்கான நிலைமையை ஏற்படுத்த வேண்டும். அந்த தும்பிலிருந்து பிரஷ்களைச் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். ஏற்கனவே அந்த வாரியத்தின் கையிலே அந்தப் பகுதி இருக்கிறது. குளச்சலில் உள்ள கட்டிடங்கள் பழைய காலத்திலே, வெள்ளையர்கள் விட்டுச் சென்ற பகுதிகளாகவே இருக்கின்றன. அவை பழுது பார்க்கப்படவில்லை. சலவைத் தொழிலாளர்கள் என்று அவர்களைச் சொல்லும் நிலைமை இருக்கிறது. அதைப் போக்க இந்தத் துறை நேரடியாக அவர்களைக் கொண்டுவர வேண்டும். அந்த வகையில் இடைத் தரகர்களிடமிருந்து இந்த தொழிலாளர்களைப் பாதுகாக்க வேண்டும். குறைந்தபட்சம் அவர்களுக்கு ரூ. 15 சம்பளமாக கிடைக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதன் மூலம், இந்தத் தும்புத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கான ஒரு வாய்ப்பை உருவாக்க முடியும். பதநீரை எடுக்கும் போது, பாம் கோலா தயாரிப்பதன் மூலம், இந்தத் துறையை விஸ்தரிக்க முடியும். அதைப் போல தேனைப் பொறுத்த வரையிலும், இந்த வகையில் பிரச்சினைகளை அணுகி, வேண்டிய காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, கதர் மற்றும் கிராமத் தொழில் மானியக் கோரிக்கை மீது நான் சார்ந்துள்ள காந்தி-காமராஜ் தேசீய காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நாவலர் அவர்கள் இந்த ஆண்டு அறிவித்த நிதிநிலை அறிக்கையில் 1983—84 ஆம் ஆண்டில், கதர் கிராமத் தொழில் வாரியம், ரூ. 83.79 கோடி மதிப்பிற்குப் பொருள்களை விற்கத் திட்டமிட்டுள்ளது. அடுத்த ஆண்டில், இது ரூ. 101.51 கோடியாக் உயர்த்தப்பட உள்ளது. 1984-85 ஆம் ஆண்டில் கூடுதலாக 32,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும். 41,476 கைவினைஞர்களுக்கு நிதியுதவி அளிக்க வாரியம் வகை செய்து உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

ஆனால் இந்தக் கொள்கைக் குறிப்பிலே, இதைப் பற்றிய விரிவான விளக்கங்கள் இல்லை. இன்றைக்கு கைவினைக் கலைஞர்கள் என்று சொல்கிற போது, தச்சுத் தொழில் செய்பவர்கள், அழகிய மண்பாண்டங்கள் செய்பவர்கள், பனை மரத்திலிருந்து கிடைக்கக்கூடிய பொருள்களை வைத்து பலவிதமான அற்புதமான சிருஷ்டிகளை உருவாக்குபவர்கள், இன்னும் இது போன்று இருப்பவர்கள் மிகவும் வறுமையிலே வாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் போதிய வருமானம் இல்லாமல், வறுமைக் கோட்டுக்குக் கீழே தங்களுடைய வாழ்க்கையை அமைத்துக் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நிரந்தரமாக உதவி செய்யக் கூடிய முறையிலே, நிதி உதவிகளைச் செய்ய வேண்டும் என்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.



கிராம மக்களைப் பொறுத்த வரையிலும், கதர்த் தொழிலில் இன்று அதிகமான அளவில் அம்பர் சர்க்காவை நம்பித்தான் இருக்கிறார்கள். அம்பர் சர்க்காவை நூற்பவர்கள், கூடுமான வரையில் உடல் ஊனமுற்றவர்கள், வயதானவர்கள், கைம்பெண்கள், இப்படிப்பட்டவர்கள் தான் அந்தத் தொழிலைச் செய்கிறார்கள். ஆனால் அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய சம்பளமோ மிகவும் குறைந்த ஊதியமாக இருக்கிறது. இந்தத் தொழிலை வைத்துத்தான் அவர்கள் தங்களுடைய வாழ்க்கையை நடத்த வேண்டிய இருக்கிறது. எனவே அவர்களுக்கு கூடுதலாக கூலி கொடுக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று நான கேட்டுக்கொள்கிறேன்.

கதரைப் பொறுத்த வரைக்கும் இன்றைக்கு அதனுடைய விலை கொஞ்சம் கூடுதலாக இருக்கிறது என்பதற்காக கதர்த் துணியை உடுத்துவதில்லை. ஆனால் காங்கிரஸ் தலைவர்கள் மட்டுமல்லாமல் காங்கிரஸ் தலைவர்களுடைய போக்கு பிடிக்காமல் வெளியே வந்தவர்கள் கூட கதரை கட்டாயமாக உடுத்துவது என்ற கொள்கையை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எந்த விலையாக இருந்தாலும் அதை வாங்கிக் கொள்வார்கள். ஆனால் சாதாரண மக்கள், கைத்தறித் துணியை வாங்குவதற்கு தயங்குகிறார்கள். இது அதிக நாள் உழைக்கவில்லை என்ற காரணத்தைச் சொல்கிறார்கள். தற்போது கைத்தறியிலே பாலியஸ்டர் துணி உற்பத்தியாகிக் கொண்டு இருக்கிறது. கிட்டத்தட்ட ஒரு பாலியஸ்டர் துணியைவிட இந்தத் துணி இப்போது சிறப்பான உழைப்பைத் தருகிறது. எனவே கதர் பாலியஸ்டர் துணி உற்பத்தியை அதிகமாக்குகின்ற முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், கதர் பாலியஸ்டரை காக்கி நிறத்திலே தயாரித்து அதைக் காவல் துறையைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு வழங்க வேண்டும் என்ற முறையிலே இந்த அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

நெசவாளர்களைப் பொறுத்தவரையிலும், அது கைத்தறியாக இருக்கட்டும், கதராக இருக்கட்டும், அந்தத் தொழிலிலே ஈடுபடுபவர்கள் எல்லாம் மிகவும் பின்தங்கிய மோசமான நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு சரியான வீட்டு வசதிகள் கிடையாது. ஒரு வீட்டிலே ஒரு தறிதான் போட முடியும். அவர்களுக்கு இரண்டு மக்கள் இருந்தால், அந்த இரண்டு மக்களுக்கும் தறி போடுவதற்கு இடம் கிடையாது. வேறு வீட்டு மனை பட்டாக்கள் இருந்தாலும், வீடு கட்டுவதற்கு அவர்களுக்கு வாய்ப்பும், வசதியும் இல்லை. எனவே அவர்களுக்கு அரசாங்கமே வீடு கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுடைய வாழ்க்கைத் தரம் சிறப்பாக அமைவதற்கு வழி வகை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அது போன்று, கைத்தறி மற்றும் கதர் துணிகளை விரிவாக உபயோகப்படுத்த, கதர் மற்றும் கைத்தறி வாரம் என்ற ஒன்றை ஏற்படுத்தி, ஒவ்வொரு கல்லூரிகளிலும், ஆண்கள், பெண்கள் கல்லூரிகளிலும் கூட வாரத்தில் ஒரு நாளாவது கதர் கட்ட வேண்டும் என்ற ஒரு நியதியை ஏற்படுத்தினால் இந்தக் கதர் உற்பத்தியும் பெருகும். இந்த உற்பத்தி பெருகுகின்ற நேரத்திலே அவர்களுடைய வாழ்வும் வளம் பெறும் என்று கூறி, கைத்தறித் தொழில் மிகவும் முக்கியமான தொழில், அண்ணல் காந்தி அடிகள் ஆசிர்வாதத்தோடு நிறைவேற்றப்பட்ட அந்தத் தொழிலுக்கு இந்த மானியக் கோரிக்கையிலே, 2 கோடியே 29 இலட்சம் என்று ஒதுக்கி இருப்பது காணாது. இன்னும் அதிகமான நிதி ஒதுக்கம் செய்து, இந்த ஏழை எளிய நெசவாளர்களுடைய குடும்பங்களை வாழ வைக்க வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.

திரு. இரா. கருப்பையா : மாற்றுத் தலைவர் அவர்களே, கைத்தறித் தொழில் சம்பந்தமாக மானியக் கோரிக்கையின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். கைத்தறித் தொழில் என்பது நம்முடைய நாட்டின் தேசிய இயக்கம், மக்களுக்கு சுதேசி உணர்வை உண்டாக்க வேண்டும் என்ற உணர்வோடு தேசப் பிதா மகாத்மா காந்தி அடிகளால் அது துவக்கப்பட்டு, இன்றைக்கு அது தட்டுத் தடுமாறி, பல்வேறு நிலைகளிலும் அது ஒரு இயக்கமாக இருந்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

(முற்பகல் 11–00)

இது நம்முடைய தேசத்தின் விடுதலைக்காக, ஒரு உணர்வை மக்களிடையே ஏற்படுத்த வேண்டும், நம்முடைய நாட்டு மக்கள் அனைவரும் சுதேசி துணியை அணிந்து, அந்நிய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக உணர்வு கொள்ளவும், நம்முடைய நாட்டில் இருக்கிற செல்வங்களை எடுத்துக் கொண்டு போய், அதன் மூலம் அங்கே துணிகளையும் பொருள்களையும் உற்பத்தி செய்துக் கொண்டு வந்து மறுபடியும் இங்கேயே விற்பனை செய்வதைத் தடுக்கவும், நம் நாட்டில் உற்பத்தியாகக் கூடிய செல்வங்களும், நம் நாட்டின் செல்வங்களும் வெளி நாட்டுக்குச் செல்லக் கூடாது என்பதற்காகவும், அப்போது துவங்கப்பட்ட ஒரு இயக்கம் இது. அப்படி மக்களுடைய இயக்கமாக பாதுகாக்க வேண்டிய ஒரு இயக்கம், இன்றைய தினம் அரசாங்கத்தினுடைய ஆதரவு இருந்தால்தான் நன்கு செயல்பட முடியும் என்ற நிலையில் இருக்கிறது.

அதே நேரத்தில் இந்த இயக்கத்தை எடுத்து நடத்த வேண்டும் அதன் மூலம் கிராமங்களிலே இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிற வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள லட்சக் கணக்கான மக்கள், அதிலும் குறிப்பாக தாய்மார்கள் இந்தத் தொழிலிலே ஈடுபட்டு வருகிறார்கள். அவர்கள் தங்கள் வாழ்க்கையை நல்ல முறையில் நடத்துவதற்காக, பல்வேறு முறைகளில் உதவி செய்ய வேண்டும் என்ற அடிப்படையிலே, புதிய புதிய கிராமத் கைத் தொழில்



களையும் இணைத்து இன்றையதினம் இது நடத்தப்பட்டு வருகிறது. ஆனால் அப்படி இருந்தாலும் தேவையான ஊக்கத்தை கொடுக்க முடியாத நிலைமையில் தான் இன்றளவும் இந்தத் தொழில் இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அரசு இதற்காக ஒதுக்கியிருக்கிற நிதி ஒதுக்கத்தைப் பார்க்கிற நேரத்தில் ஏதோ சம்பிரதாயத்திற்குத்தான் ஒதுக்கப் பட்டிருப்பதாகத் தெரிகிறதே தவிர, இதுவும் ஒரு முக்கியமான இயக்கம் என்ற வகையில் கதர் தொழிலை பாதுகாக்க வேண்டும் என்ற அடிப்படையில் இல்லை என்று நான் கருதுகிறேன்.

ஏனென்றால் மிக அதிகமான அளவில் கிராமப்புறங்களிலே இருக்கிற லட்சக்கணக்கான ஏழை மக்கள் இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் குடும்பங்களிலே, குடும்ப வேலையையும் செய்துக் கொண்டு, இடையிடையே ராட்டை சுற்றுவது, நூல் நூற்பது, துணி நெய்வது போன்ற காரியங்களையும் செய்யக்கூடிய அளவிலே பயன் உள்ளதாக இந்தத் தொழில் இருக்கிறது. ஆகவே அவர்களுக்கு உதவி செய்யும் வகையில் இன்னும் அதிகமான அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்திருக்க வேண்டும்.

அத்தோடு இன்றையதினம் நம்முடைய தமிழகத்திலே, தமிழகத்திலே ஏன், இந்தியாவிலேயே கூட, கதர் துணி விற்பனை என்பது எந்தக் காலத்திலே அதிகமாக இருக்கிறது என்றால், தள்ளுபடி மானியம் எந்தக் காலத்தில் அதிகமாக அளிக்கப்படுகிறதோ அந்தக் காலத்திலேதான் விற்பனையும் அதிகமாக இருக்கிறதுஎன்பது இன்றைய தினம் இருக்கிற யதார்த்தமான உண்மை. ஆகவே, நிரந்தரமாக இந்தத் தொழிலைப் பாதுகாக்க வேண்டும் என்றால் வருடத்திற்கு 60 நாள் அல்லது 75 நாள், என்று தேசியத் தலைவர்களுடைய நினைவு நாட்கள் கொண்டாடப்படுகிறதோ அந்த நாட்களிலும், மற்றும் பண்டிகை நாட்களிலும் என்று குறிப்பிட்டு, மானியம் வழங்குவதை விடுத்து, நிரந்தரமாக மானிய உதவி அளித்து வருடம் முழுவதும் அளித்து இந்தக் கதரை ஊக்குவித்தாக வேண்டும். இந்தத் தொழிலுக்கு வாய்ப்பைத் தேடித் தரவேண்டும் என்றால், அதன் மூலமாக இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற குடும்பங்களுக்கு வாழ்வு அளிக்க வேண்டுமென்றால், நிரந்தரமாக இந்தத் தள்ளுபடி மானியத்தை அளிக்க வேண்டும். கைத்தறியாக இருநதாலும் கூட இந்த நிலைமையிலே தான் தமிழகத்திலே இன்றைக்கு இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்தத் தள்ளுபடி மானியத்தை மத்திய அரசாங்கத்தினுடைய நிதியிலிருந்தும் ஓரளவு பெறுகிறோம். மாநில அரசும் ஓரளவு ஈடு செய்கிறது என்றாலும், முழுவதுமாக மத்திய அரசாங்கத்திடமிருந்து, இதற்குத் தேவையான நிதி ஆதாரத்தைப் பெற்று, நிரந்தரமாக இதை ஊக்குவிக்கக்கூடிய முறையிலே இந்த மானியத்தை வருடம் முழுவதும் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக நான் தோல் தொழில் சம்பந்தமாக ஒரு முக்கிய விவரத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். இன்றையதினம் இது கதர் வாரியத்தின் கீழே இருந்து கொண்டு செயல்படுகிறது. பல்வேறு இடங்களிலே நவீன முறையிலே தோல் தொழிற்சாலை களை துவக்கி நடத்திக் கொண்டு வருகிறோம். அந்தந்தக் காலத் திலே ஏற்படுகிற விஞ்ஞான வளர்ச்சியைக் கருத்திலே கொண்டு இந்தத் தோல் தொழிலில் இன்றைய தினம் பல மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்றாலும், பல்வேறு இடங்களிலே இருக் கும் இந்தத் தோல் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய கூட்டுறவு அமைப்புகள் நல்ல முறையில் செயல்படுவதற்கு அரசாங்கம் தேவையான கவனத்தைச் செலுத்த வேண்டும்.

உதாரணமாக திருச்சியிலே செம்பட்டியிலே மிகவும் பழமை யான தோல் பதனிடும் தொழிலாளர்கள் கூட்டுறவு அமைப்புச் சங்கம் இருக்கிறது. அந்த அமைப்பு கடந்த பல ஆண்டுக் கால மாக, அரசாங்கத்தின் உதவி இல்லாமல் செயல்பட முடியாத நிலைமையில் இருக்கிறது என்று குறிப்பிட்டு, அதை புனரமைத்து நல்ல முறையில் செயல்படுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

காலணி பெட்டிகள் தயாரிப்பு தொழிற்கூடங்கள் சென்ற ஆண்டு, அதாவது 1982-83 ஆம் ஆண்டு 500 பெட்டிகளை தயாரித்துக் கொடுத்திருக்கிறது. இப்படி 500 என்பதைக் காட்டி லும் அதை ஆயிரமாக உயர்த்தி தயாரிக்கும்படிச் செய்தால் அவர்களுக்கு ஆண்டுதோறும் வேலை கொடுப்பதற்கு உதவியாக இருக்கும். ஏனென்றால், இந்தத் தொழிலிலே பெரும்பாலும் ஈடுபட்டிருப்பவர்கள் ஏழை ஆதித் திராவிட மக்கள். இந்தத் தொழிலின் மூலம் தான் தங்களுடைய வாழ்க்கைக்கு வழி தேடிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தில் அவர்கள் இருப்பதால், அவர் களுடைய குடும்பங்களை வாழ வைக்கின்ற முறையிலே, அவர் களுக்கு உதவி செய்கின்ற முறையிலே இந்த எண்ணிக்கையை உயர்த்திக் கொடுப்பதுதான் பயன் உள்ளதாக இருக்கும். 1983-84 ஆம் ஆண்டில் 500 பெட்டிகள் வழங்குவதாக அறிவிக்கப்பட் டிருக்கிறது. 1983-84 இப்போது முடிந்து விட்டது. 1984-85 ஆம் ஆண்டுக்கு அதைப் போன்று வழங்குவதற்குத் திட்டம் இருக் கிறதா என்பதைக் கொள்கைக் குறிப்பிலே பார்க்க முடியவில்லை. அந்த அடிப்படையில் ஆயிரம் பெட்டிகளாக உயர்த்திக் கொடுப் பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிற ஏழை மக்களுக்கு அவர் கள் பெற்று வரக்கூடிய வருமானம் அரசு அறிக்கையிலே குறிப் பிட்டிருப்பதைப் பார்க்கிற போது, 4, $4\frac{1}{2}$, 5 ரூபாய் என்ற அளவுக் குத்தான் கொடுக்கப்படுகிறது. அவர்கள் வருமானத்தைப் பெருக் கக்கூடிய அளவில் அதை உயர்த்திக் கொடுக்க வேண்டும். அவர் களுக்கு நிரந்தரமான வேலை கொடுப்பதற்கும் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.





கதர் வாரிய ஊழியர்களுடைய நிலையினை உயர்த்துவதற் காக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறி இந்த மானியத்திலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக நான் மாற்றுத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : மாற்றுத் தலைவர் அவர்களே இன்று கிராம கதர் தொழில் மானியக் கோரிக்கையின் மீது நான் சார்ந்து இருக்கிற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த வாரியம் உத்தமர் காந்தியடிகளால் தேசிய விடுதலையின் போது மக்கள் ஆதரவோடு தொடங்கப்பட்டது. இன்றைய நிலையில் அது அரசாங்கத்தின் ஆதரவோடு நிலைக்க முடியும் என்ற நிலை இருக்கிறது. அரசாங்கமும் இந்தத் தொழிலில் ஈடுபடுகிறவர் களுக்கு ஏனைய தொழிலில் ஈடுபடுகிறவர்களுக்குச் சட்டங்கள், செய்கிற வசதி வாய்ப்புகளைப் போன்று செய்வதாக இல்லை. 1960 ஆம் ஆண்டு இந்த வாரியம் ஆரம்பிக்கப்பட்டது. 16 கிராமத் தொழில்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து இருப்பதாக இந்த அறிக்கையிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. மட் பாண்டங் கள் செய்தல், தச்சுத் தொழில், தோல் தொழில், பனைத் தொழில் பிரம்பு மூங்கில் தொழில் இவற்றிற்காக பயிற்சி கொடுத்தோம் என்கிறார்கள். 1960 முதல் 1984 ஆம் ஆண்டு வரையில் ஆயிரக் கணக்கான மக்களுக்கு உதவி கொடுத்து இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் எத்தனை பேர்கள் இந்தத் தொழிலை தொடர்ந்து செய்கிறார்கள். சுயவேலையில் செய்கிறார்களா ? அரசாங்கக் கடன் பெற்று தொழில் செய்கிறார்களா ? எந்த எந்தப் பகுதிகளிலே செய்கிறார்கள் என்று தெரிவித்திருந்தால் சந்தோஷமடைய முடியும். அரசாங்கம் கொடுத்த பணத்திலே பயிற்சி பெற்று எத்தனை பேர்கள் தொடர்ந்து இந்தத் தொழி லிலே ஈடுபட்டு இருக்கிறார்கள் என்ற குறிப்பை தெளிவாகக் கொடுத்திருந்தால் சந்தோஷப்பட்டிருக்க முடியும். அந்தக் குறிப்பு இல்லை. அவர்களுக்கு 4 ஆவது பக்கத்திலே 15 ஆவது பாரா வில் சொல்லியிருக்கிறார்கள், எத்தனை பேர்களுக்கு என்ன என்ன தொழில்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் எத்தனை பேர்கள் பயிற்சி பெற்றார்கள், அவர்கள் தொடர்ந்து தொழிலில் ஈடுபட்டு வருகிறார்களா ? என்ற விவரம் இல்லை. அதைப் போலவே 7 ஆவது பக்கத்திலே 28.15 லட்சம் இதுகாறும் பழங்குடியினருக்குக் கொடுத்திருக்கிறோம் என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. 1945 நபர்கள் பயன் பெற்றிருக்கிறார்கள், என்று சொல்லப்பட்டிருக்கிறது. பலன் அடைந்தவர்கள் என்றால் சுயதேவை முயற்சியில் தொழில் செய்கிறவர்கள் எத்தனை பேர் கள், அரசாங்க மானியம் பெற்று தொழிலைச் செய்கிறவர்கள் எத்தனை பேர்கள் என்ற விவரம் இருந்தால் வளர்ச்சியின் முன் னேற்றத்தில் இந்தத் துறையினர் எவ்வளவு அக்கறை கொண் டிருக்கிறார்கள் என்று பெருமிதத்தோடு சொல்ல முடியும். ஆனால் அந்தக் குறிப்பு இங்கே கொடுக்கப்படவில்லை. 7 ஆவது பக்கத்திலே மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் என்ற முறை யிலே ஒதுக்கீடு 5 லட்சம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

கூட்டுறவுச் சங்கங்களை அமைக்க 40 லட்ச ரூபாய் வழங்கியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பயன் பெற்றவர்கள் எத்தனை பேர்கள் என்ற விவரம் இருந்தால் துறைக்கு ஒரு நல்ல பெயர் இருந்திருக்கும். 8 ஆவது பக்கத்திலே 3 ஆவது பாராவிலே கிராமப் பகுதி வேலை வாய்ப்புத் திட்டம் என்ற முறையிலே 10.83 லட்ச ரூபாய் கொடுத்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். மேம்பாட்டுத் திட்டங்கள் என்றால் எந்த எந்த இடங்களில் கொடுத்தோம் என்று சொல்லியிருக்கிறார்கள். 100 கதர் நெசவாளர்களுக்கு உதவி செய்திருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதி திராவிடர் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் தென் ஆற்காடு மாவட்டத்தில் கடலூர் பகுதியில் மாலுமியாபேட்டை என்ற ஊர் இருக்கிறது. அங்கே 500 குடும்பங்கள் இந்தத் தொழிலைச் செய்து வருகிறார்கள். அவர்கள் உதவிக்காக இந்தத் துறையை அணுகியபோது அரசாங்க உதவியும் கிடைக்கவில்லை, பேங்க் உதவியும் கிடைக்கவில்லை. மாஸ்டர் வீவர்களிடம் அவர்கள் பணி செய்து கொண்டிருக்கிறார்கள். மனு கொடுத்தும் இதுவரையில் என்ன பயன் ஏற்பட்டது என்று தெரியவில்லை.

(முற்பகல் 11-10)

அதுபோலவே திருநல்லாறு வட்டத்தில் தென்காசி பகுதியில் ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த இந்த நெசவாளர்களுக்கு அது போல தென்ஆற்காடு மாவட்டத்தில் காட்டுமன்னார்கோவில் தாலுக்காவில் கோடித்தெரு என்ற இடத்தில் இந்த மக்கள் வாழ்கிறார்கள். அவர்கள் அந்தத் துறையை அணுகியும் பலன்கிடைக்கவில்லை. அரசிடம் பணம் இல்லையோ என்று கூட விரக்தி வந்து இருக்கிறது. 2 கோடி ரூபாய்க்கு மேல் என்கிறார்கள். குறைந்தபட்சம் 5 கோடி ரூபாயாவது ஒதுக்கினால் இந்த ஏழை மக்களுக்கு வாய்ப்பு கிடைக்கும். குறிப்பாக எனக்கு முன்பு பேசிய சகோதரர் திரு. பாபு ஜனார்த்தனம் அவர்களும், கம்யூனிஸ்ட் கட்சியைச்சேர்ந்த தலைவர் திரு. கருப்பையா அவர்களும் மிக ஆர்வத்தோடும் இந்த உண்மையான திட்டம் உத்தமர் காந்தி திட்டம் கிராமந்திர மக்களுக்கு குறைந்த செலவில் அவர்களுடைய பொருளாதாரம் மேம்பாடு அடையக்கூடிய நிலையில் உருவாக்கப்படுகின்ற திட்டம் என்று அவர்கள் கருத்து தெரிவித்து மகிழ்ச்சியை தெரிவித்தார்கள். உத்தமர் காந்தி கொள்கை சிறந்த கொள்கை என்று அவர்கள் சொன்னதற்கு அவர்களைப் பாராட்டுகிறேன். அரசையும் பாராட்டுகிறேன். ஆனால், இது ஏதோ அரசின் உதவியை பெறுவதற்காக செய்கிறோம் என்று இல்லாமல் உண்மையாக இந்தத் திட்டம் அன்று மக்கள் திட்டமாக தேசிய விடுதலை இயக்கத் தலைவர்கள் உண்டாக்கினார்கள். ஆனால், இன்றைய நிலைமையில் அரசாங்கத்தின் சார்பில் நடக்கிறது. கைத்தறி நெசவாளர்களும் கஷ்டப்படுகிறார்கள், அவர்களுக்கு கொடுப்பதிலே எனக்கு வேற்றுக் கருத்து கிடையாது. ஆனால், கைத்தறி நெசவாளர்களுக்கு



என்ன செய்கிறோமோ அந்தக் கைத்தறி நெசவாளர்களுடைய நிலைமையைவிட இவர்கள் நிலைமை மிகவும் மோசமான நிலைமை. இந்த பெண்களுக்கு 5 ரூபாய் 5¼ ரூபாய் கூலியாகக் கிடைக்கிறது. அதை குறைந்தபட்சம் 8 ரூபாயாக கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இங்கே சென்னையிலே சூளைப் பகுதியில் 68 ஆவது டிவிஷனில் 500 குடும்பங்கள் பொம்மைகள் செய்கிறார்கள்: கைவினைஞர்கள். அதற்கு மத்திய அரசு 3 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. அவர்கள் வாழ்கின்ற இடம் கார்ப்பரேஷனுக்குச் சொந்தமான இடம். மத்திய அரசு மட்டும் அல்லாமல் நம்முடைய மாநில அரசும் இந்த கைவினைஞர்களுக்கு உதவி செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஒரு பிராஜெக்ட் தயார் செய்து கொடுத்து இருக்கிறார்கள். சிலம் கிளியரன்ஸ் போர்டு சேர்மேன் இடமும், மாவட்ட ஆட்சித் தலைவர் இடமும் அந்த பேப்பர் 5 ஆண்டுகளாக பென்டிங்கில் இருக்கிறது. மத்திய அரசு 3 இலட்சம் ரூபாய் ஒதுக்கியும், மாநில அரசு இவர்களுக்கு உதவி செய்வதற்கு என்று ஒதுக்கியும் ஏதோ ஒவ்வொரு துறையில் உள்ளவர்கள் நான் உயர்ந்தவன, நான் உயர்ந்தவன் என்றுச்சொலலி அந்த கோ-ஆர்டினேஷன் கோ-ஆப்பரேஷன் என்று சொல்வார்களே அந்த ஒத்துழைப்பு இல்லாத காரணத்தால் மத்திய அரசு கொடுத்த பணம் மாநில அரசால் செய்யவேண்டி இருந்தும் அது இதுவரையில் பயன்படுத்தப்படவிலலை. அவர்கள் நல்ல அழகிய பொம்மைகளை செய்கிறார்கள். அந்த அழகிய பொம்மைகளுக்கு நல்ல விற்பனை இருக்கிறது. அது மட்டும் அல்லாமல் சென்னையில் பல இடங்களில் ஷோ ரூம்கள் வைத்து இருக்கிறோம். அதுபோன்ற இடங்களில் அந்தக் கைவினைஞர்கள் செய்கின்ற பொம்மைகளை வாங்கி வைத்தால் வெளிநாட்டவர்கள் வருகின்றபோது அவர்களுக்கு ஒரு விற்பனையாக இது கிடைக்கும். நம்முடைய திறமையையும் வெளிநாட்டவர்கள் புரிந்துகொள்ள முடியும். அதே சமயத்தில் ஏழை எளிய மக்களுக்கு வாழ்வு அளிக்கின்ற நல்ல காரியத்தை இந்தத்துறை செய்கிறது என்ற நல்ல பெயரை, நாம் எடுப்பதற்கு வாய்ப்பு இருக்கும். அதைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதைப் போலவே ஆதி திராவிடர்களுக்கு காலணி பெட்டிகள் 500 என்று இருக்கிறது. இதில் எனக்கு ஒரு சந்தேகம். ஆதி திராவிடத் துறை குறிப்பில் நாங்கள் 500 கொடுக்கிறோம் என்று சொல்லி இருக்கிறார்கள். கதர் வாரியத்தில் நாங்கள் 500 கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆக 500-ம் 500-ம் சேர்ந்து ஆயிரம் கொடுத்தீர்களா ? யார் கொடுத்தது உண்மை? இதை நான் ஆதி திராவிட நலத்துறையின் மீது பேசியபோது கதர் துறை மூலமாக அவர்கள் கொடுக்கவில்லை அது ஏதோ தவறாக இருக்கிறது நாங்கள் தான் கொடுத்தோம் என்று எனக்கு பதில் சொன்னார்கள். ஆனால், மீண்டும் இந்தத்துறை வருகிறபோது தாங்கள் கொடுத்ததாக சொல்கிறார்கள். அதிலே 1983-84 என்று தான் சொன்னார்கள். 1984—85-க்கு கொடுக்கப் போகிறீர்களா? இலலை இந்தத் திட்டத்தை கைவிட்டுவிட்டீர்களா? என்ன, என்று விளக்கத்தில் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பேற்

கொண்டும் இந்தத் தோல் தொழிலில் குறிப்பாகத் தமிழகத்தில் விற்கின்ற இந்தப் பூட்ஸ், செப்பல் போன்றவைகளுக்கு எல்லாம் நல்ல முறையில் செய்வதால் வெளிநாடுகளில் நல்ல கிராக்கி இருக்கிறது. இங்கே சகோதரர் திரு. கருப்பையா அவர்கள் சொன்னதுபோல் திருச்சியில் கூட்டுறவுச் சங்கம் இருக்கிறது. திண்டுக்கல்லில் இருக்கிறது. அரசு மானியம் கொடுத்து இருக்கிறது. யாரோ ஒரு அதிகாரி திண்டுக்கல்லில் தவறு செய்ததால் அந்த லெதர் கோ-ஆப்பரேட்டிவ் மூலமாக மேனியூபேக்சர் செய்யக்கூடிய டெப்போவில் அதைக் காலம் கடத்தி நிறுத்தி வைத்து இருப்பதாக எனக்குச் சென்ற ஆண்டு கிடைத்த தகவல். ஆனால், அரசு அதை கோ-ஆப்பரேட்டிவ் என்ற முறையில் விட்டதோ அல்லது நம்முடைய கிராமத் தொழில் என்ற முறையில் விட்டதோ என்று எனக்கு அது சரியாக புரியவில்லை. ஆனால், ஒன்று மட்டும் உண்மை. அவர்கள் அருந்ததியார்கள்; தோல் தொழில் செய்கிறார்கள். அரசாங்கம் பணம் கொடுத்திருக்கிறது ; காதி கிராமோத்ய டிபார்ட்மெண்ட் மூலம் பணம் கொடுக்கப்படுகிறது. அதுவரையில் எனக்கு நிச்சயமாகத் தெரியும். எனவே, இதைப்பற்றி விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறைந்தது ஆயிரம் பெட்டிகளாவது கொடுப்பதற்கு நாம் ஏற்பாடு செய்ய வேண்டும். ஆதி திராவிடர் நலத் துறையிலிருந்து பணம் வந்து நம்முடைய துறையின் மூலம் செய்து, ஏதோ அவர்கள் 500 கொடுக்கிறார்கள், நாமும் 500 கொடுக்கிறோம் என்று இரண்டு பேர்களும் கொடுத்து ஆயிரம் பேர்களுக்கு உதவி செய்வதாக, அவைக்குத் தவறான தகவலைக் கொடுக்கக் கூடாது. இதைத் திருத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமச் சிறுதொழில்களைப் பொறுத்தவரையில் செக்குத் தொழில் இருக்கிறது. அதில் எண்ணெய் ஆட்டுகின்ற தொழிலைச் செய்கின்ற ஒரு சமுதாயம் இருக்கிறது. நூறாண்டுகளாக அவர்கள் செய்து வருகிறார்கள். விஞ்ஞான ரீதியில் வேகமாகச் செய்ய வேண்டுமென்று கொடுப்பீர்களானால் அதைப்பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால், குடும்பப் பிரச்சினை காரணமாக இந்தத் தொழிலைச் செய்து கொண்டிருக்கின்ற, நூறாண்டுக் காலமாக இந்தத் தொழிலைச் செய்து கொண்டிருக்கின்ற அந்த நலிந்த மக்களாகிய வாணிய சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்களே அவர்களைக் கூப்பிட்டு அவர்களுக்கு இந்த உதவிகளைச் செய்தால், உண்மையிலேயே கிராமங்களில் கல்வியில்லாமல், பொருளாதார வசதி இல்லாமல் இருக்கின்ற நலிந்த நிலையில் வாழ்கின்ற அந்த மக்களுக்குத் துணை செய்வதாக இருக்கும். விஞ்ஞான ரீதியில் செய்வதைப் பற்றி ஆட்சேபணை இல்லை. ஆனால், நலிந்த அந்த மக்களைக் காப்பாற்றும் வகையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



இதுபோன்றே, கருமார் தொழில் செய்பவர்கள், தச்சுத் தொழில் செய்பவர்கள், மண்பாண்டத் தொழில் செய்பவர்கள் ஆகியவர்கள் இருக்கிறார்கள். அவர்களது நலன்களையும் கவனிக்க வேண்டும்.

இன்னொன்றும் நடக்கிறது. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலேயும் கருமார் பட்டறை என்றும், தச்சுப் பட்டறை என்றும் வைத்தார்கள். ஆனால், இன்றைக்கு அவைகளுக்கும்கூட விற்பனை வரியை சேல்ஸ் டாக்ஸ் டிபார்ட்மெண்டார் போடுகிறார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், தென்னார்க்காடு மாவட்டத்தில், தியாகதுர்க்கம், குமராட்சி, திருநாவலூர் போன்ற இடங்களில் சேல்ஸ் டாக்ஸ் டிபார்ட்மெண்டிலேயிருந்து கமிஷனர் பேரிலேயே கேஸ் போட்டிருக்கிறார்கள். கிராமத் தொழில்கள் மூலமாக வேலைவாய்ப்புக்கு உதவி செய்கிறோம் என்று சொன்னால் போதாது. இவ்வாறு சேல்ஸ் டாக்ஸ் டிபார்ட்மெண்ட்டில் செய்வதால் அவர்கள் அதை நிறுத்தி விட்டார்கள். இது உள்ளாட்சித் துறை அமைச்சர் கவனிக்க வேண்டிய விஷயம் என்று சொல்லி விடக்கூடாது. காதி வில்லேஜ் திட்டத்தின் மூலம் இந்த மக்களுக்கு நாம் விடுதலை அளித்திருக்கிறோம். இப்படிச் சட்டம் இருந்தும், இதே தொழிலைச் செய்யும் அந்த மக்களுக்குத் துணை செய்கின்ற அதிகாரிகளின் பேரிலே சேல்ஸ் டாக்ஸ் டிபார்ட்மெண்ட் கேஸ் போட்டிருக்கிறது. இதையெல்லாம் கவனித்து, ஒரு நிர்வாகத்திலே இருப்பவர்களும், மற்றொரு நிர்வாகத்திலே இருப்பவர்களும் ஒருங்கிணைந்து செயல்பட்டு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்னிணைப்பு பற்றிச் சொல்ல வேண்டுமென்றால் தொழில் செய்பவர்களுக்கு எத்தனை பேர்களுக்கு மின்னிணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவிக்க வேண்டும்.

தேனீப் பெட்டிகள் கொடுப்பதைப் பொறுத்தவரையில் உப தொழிலாகச் செய்வதற்கு ஒவ்வொருவருக்கும் கொடுத்தோம். ஆனால், இப்பொழுது அது நிறுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. அவைகளை மீண்டும் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கொள்கையும் திட்டங்களும் என்ற புத்தகத்தில் எட்டாவது பக்கத்தில், 1984-85-ஆம் ஆண்டில் 10 இலட்சம் ரூபாயில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ள திட்டங்களைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. 1983-84-ஆம் ஆண்டில் இத்தனை இலட்சம் ரூபாய் என்று இப்படிச் சொல்கிறீர்களே தவிர இதன் மூலமாக எத்தனை பேர் பயன் அடைந்திருக்கிறார்கள் ; அல்லது பயன் பெறுவார்கள் என்ற தன்மைகளையும் விளக்கியிருந்தால் சிறந்ததாக இருந்திருக்கும்.

கடைசியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். விவசாயத் தொழிலாளர்களுக்குக் கிடைக்கின்ற கூலி அளவிலாவது இந்தத் தொழில்களிலே ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்களுக்குக் கிடைக்பதற்கு அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் திட்டத்தை உத்தமர் காந்தியார் அவர்கள் ஏழை எளிய மக்களின் வாழ்வுக்காகவும், தேச விடுதலைப் போராட்டக் காலத்தில் பொதுமக்களுக்குப் பயன்படுவதற்காகவும் கொண்டு வந்தார்கள். எனவே, இன்றைக்கு உள்ள அந்த நலிந்த மக்களுக்கு நல்லது செய்வோம் என்று சொல்லும்பொழுது, மத்திய அரசாங்கம் பணம் கொடுக்கின்ற பொழுது, அதைப் பயன்படுத்திக் கொள்வதில் சற்றுக் காலதாமதம் ஏற்பட்டாலும்கூட, இன்னும் நமக்கு நஷ்டம் வந்துவிடவில்லை ; மத்திய அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கைக்குக் குறைந்தபட்சம் ஐந்துகோடி ரூபாயாவது கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். முதலமைச்சரவர்கள் இங்கே இல்லாவிட்டாலும், நிதியமைச்சரவர்கள் இங்கே இல்லாவிட்டாலும், ஏழை எளிய மக்களின் நல்வாழ்வுக்கு உறுதுணையாக விளங்குவோம் என்று உறுதி கொடுத்தவர்கள், வருங்காலத்திலாவது இந்த மானியக் கோரிக்கைக்கு ஐந்து கோடி ரூபாய்களைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு, இந்தச் சந்தர்ப்பத்தைக் கொடுத்தமைக்காக நன்றி கூறி, விடை பெறுகிறேன்.

**மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, கதர்த்தொழில் மானியக் கோரிக்கையின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள். ஒவ்வொருவரும் பேசும்பொழுது தங்களுடைய கருத்துக்களையும், அவரவர்கள் உள்ள மாவட்டங்களில் என்னென்ன தொழில்கள் இந்தக் கதர் கிராமத் தொழில் மூலம் செய்யப்படுகின்றன என்று சொல்லி, ...ங்கள் மாவட்டத்தில் இதுபோன்ற தொழில்களை ஆரம்பிக்க வேண்டுமென்ற கருத்துக்களையும் இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பாபு ஜனார்த்தனன் அவர்கள் பேசுகின்றபொழுது, வடாற்காடு மாவட்டத்தில் பனைத் தொழில் பண்ணை ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையை இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள். நான்



அதுபற்றி எடுத்துக்கூற ஆசைப்படுகிறேன். வடாற்காடு மாவட்டத்தில் வந்தவாசி ஊராட்சி ஒன்றியத்தில் 18.67 இலட்சத்திலே மாமண்டூரிலே பனைப்பண்ணைத் தொழில் ஆரம்பிக்க அரசு முடிவெடுத்திருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதன் மூலமாக, நலிந்த மக்கள் சுமார் 881 பேர்களுக்கு பயிற்சி கொடுத்து வேலைவாய்ப்பளிக்கவும் அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-20]

இந்த மாமன்றத்திலே பேசிய அனைத்து உறுப்பினர்களும் ஓரே கருத்தினைத்தான் மிகவும் அழுத்தமாக இங்கே எடுத்துச் சொன்னதை நான் கவனித்துக்கொண்டிருந்தேன். அது என்னவென்றால் கிராமிய நூற்பு நிலையங்கள் இப்போது தமிழகத்திலே செயல்பட்டுக்கொண்டு வருகின்றன. அங்கே பணிபுரியும் பெண்களுக்குக் கொடுக்கப்படுகின்ற கூலியினை அதிகரித்துக் கொடுக்க வேண்டும் என்ற கருத்தினைத்தான் பேசிய அனைத்து உறுப்பினர்களும் இங்கே அழுத்தந்திருத்தமாக எடுத்துச் சொன்னார்கள். ஏற்கெனவே கேள்வி நேரங்களிலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களும் இதேபோன்ற கருத்தினை உடைய கேள்விகளைத்தான் எழுப்பினார்கள். அப்போது நான் பதில் அளிக்கும்போது கிராமிய நூற்பு நிலையங்களில் பணிபுரியும் பெண்களுக்கு கூலி உயர்வு அளிக்க வேண்டிய சூழ்நிலை பற்றி அகில இந்திய காதிக்மிஷன் தான் முடிவு செய்ய வேண்டும் என்ற கருத்தினை நான் அப்போது எடுத்துச் சொன்னேன்.

இப்போது 1—4—1984-லிருந்து அவர்களுக்குக் கூலி உயர்வு அளிக்கப்பட வேண்டிய ஆணையைப் பிறப்பித்திருக்கிறார்கள். 1—4—1984 முதல் 6 கதிர் இராட்டை நூற்புத்திட்டத்திற்கு 2 பைசாவும் 12 கதிர் இராட்டை நூற்புத் திட்டத்திற்கு ஒரு பைசாவும் கூலி உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் அவர்களுக்கு நாள் ஒன்றுக்குக் கூடுதலாக 50 பைசா முதல் 75 பைசா வரை கிடைக்கும்.

மேலும் நெசவாளர்களுக்கும் கூலியை அதிகமாக்கிக் கொடுக்க வேண்டும் என்ற கருத்தினை இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துத் தெரிவித்தார்கள். இப்போது நெசவாளர்கள் நாள் ஒன்றுக்கு 12 ரூபாயிலிருந்து 15 ரூபாய் வரை பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். சிட்டத்திற்கு 4 பைசா என்று கூலியை உயர்த்தினால் அவர்களுக்கு மேற்கொண்டும் 2½ ரூபாயி லிருந்து 3 ரூபாய் வரை நாள் ஒன்றுக்கு அதிகப்படியாகக் கூலி கிடைக்கும் என்ற வகையிலே அவ்வாறு கூலி உயர்வு செய்யப்பட்டிருக்கின்றது என்பதை நான் இந்த மன்றத்திலே கதர் கிராமத் தொழில் மானியத்தில் பேசிய அனைத்து உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. பாபு ஜனார்த்தனன்
அவர்கள் ஒவ்வொரு வட்டத் தலைமையிடத்திலும் கதர் அங்
காடிகளைத் திறக்க வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படை
யில் தன்னுடைய கருத்தினைத் தெரிவித்தார்கள். மாண்புமிகு
உறுப்பினர்கள் அவர்கள் கருத்துக்களை ஏற்று அரசு அதற்கு
வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதை நான் இந்த
நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.
ஜோலார்பேட்டைக்கு அருகே உள்ள திருப்பத்தூரில் கதர் அங்
காடி ஒன்று இயங்கிக்கொண்டிருக்கின்றது. ஜோலார்ப்பேட்
டையில் விற்பனை வாய்ப்பு எப்படி இருக்கும் என்பது பற்றி
ஆராய்ந்து அதற்கு வேண்டிய நடவடிக்கையை அரசு எடுக்கும்
என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. மாரிமுத்து அவர்கள்
புதுக்கோட்டை மாவட்டத்திலே உள்ள கதர் கிராமத் தொழில்
வாரியம் எந்த அளவுக்குச் செயல்பட்டுக்கொண்டு வருகின்றது
என்றும் இன்னும் எந்த அளவுக்குச் செயல்பட வேண்டும் என்றும்
இங்கே சொன்னார்கள்., புதுக்கோட்டை மாவட்டத்தை எடுத்
துக்கொண்டால் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ்
ரூபாய் 2.40 இலட்சம் செலவில் 160 பேர்களுக்கு பயன் அளிக்
கின்ற வகையில் பனைத்திட்டம் ஒன்று இயங்கி வருகின்றது.

அது தவிர, கோவில்பட்டியில் பனை தும்பு சுத்திகரிப்பு நிலை
யம் ஒன்று அரசால் ஏற்படுத்தப்பட்டு உள்ளது என்பதை இந்த
நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் நவநீதகிருஷ்ணபாண்டியன் அவர்கள்
பேசும்பொழுது கூலி உயர்வு பற்றி பேசிவிட்டு பின்னால் நெச
வாளர்களுக்கு வீட்டுவசதி வேண்டுமென்ற கருத்தினை எடுத்துக்
கூறினார்கள். இப்பொழுது கதர் கிராமத் தொழில் வாரியத்தின்
மூலம் கதர் நெசவாளர்களுக்கு ரூ. 1,000 மானியமாக வழங்கப்
பட்டு வருகிறது. இந்த மானியமாக வழங்கப்படும் தொகை
ஆண்டு ஒன்றுக்கு 500 பேர்களுக்கு பயன்படும் வகையில் இந்தத்
திட்டம் தமிழகத்தில் செயல்பட்டு வருகிறது என்பதை இந்த
நேரத்திலே தெரிவித்துக்கொண்டு இதுவரையில் இந்தத்
திட்டத்தின் மூலம் 383 பேர்களுக்கு நிதி உதவி அளிக்கப்பட்
டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொண்டு, இந்தத் திட்டம்
1981–82 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது
என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இந்த நேரத்தில்
தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தத் துறையைப் பொறுத்தமட்டில், இந்த மன்றத்திலேயே
மிக அதிகமாக அக்கறை கொண்டுள்ள உறுப்பினர் என்ற முறை
யில் மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்களை நான் பாராட்டக்
கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் துறை எந்த விதத்தில்



வளர்ச்சி அடைய வேண்டும், எந்த அளவுக்குத் திட்டங்கள் தீட்ட
வேண்டுமென்று நல்ல முறையில் தன்னுடைய கருத்தினை இந்த
மாமன்றத்தில் அடிக்கடி எடுத்துக் கூறுகின்றார். ஆகவே,
அவரை இந்த நேரத்தில் இந்தத் துறையின் அமைச்சர் என்ற
முறையில் பாராட்ட விரும்புகிறேன்.

அவர் தன்னுடைய குமரி மாவட்டத்தில் என்ன, என்ன வசதி
கள் செய்ய வேண்டும், அங்கு பணி புரியும் தொழிலாளர்களுக்கு
எந்த வகையில் திட்டங்கள் நல்லமுறையில் செயல்பட்டு வரு
கின்றன என்பதைச் சொல்லி, ஆயினும் ஒருசில சலுகைகள்
கிடைக்காமல் இருக்கின்றன என்ற கருத்தினையும் இங்கு எடுத்
துரைத்திருக்கின்றார். கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆதங்கோடு
கிராமத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ்
பனைத் தொழில் திட்டம் ஆரம்பிக்க அரசின் பரிசீலனையில்
இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்க்குத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

மேலும் மாண்புமிகு உறுப்பினர் கன்னியாகுமரி மாவட்டத்தில்
செயல்பட்டுக் கொண்டு வரும் தேனீ வளர்ப்புக் கூட்டுறவு
நிறுவனத்தைப் பற்றி எடுத்துக் கூறினார்கள். அந்தக்
கூட்டுறவு சங்கத்தைப் பற்றி அடிக்கடி இங்கே எடுத்துக் கூறி
இருக்கிறேன். எவ்வாறு அந்தக் கூட்டுறவுச் சங்கம் செயல்பட்டு
வருகிறது ? தேன் எவ்வளவு இருப்பு இருக்கிறது ? அதற்கு அரசு
என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது என்ற கருத்தினையும்
ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்து இருக்கிறேன்.

இங்கு பேசிய அனைத்து உறுப்பினர்களுக்கும் காலணி தொழி
லாளர்களுக்கு வழங்கப்படும் பெட்டிக் கூடங்கள் பற்றி குறிப்
பிட்டு, 1983–84 ஆம் ஆண்டில் 500 பெட்டிக்கூடங்கள் அளிக்க
திட்டமிடப்பட்டுள்ளது பற்றி கொள்கை விளக்கக் குறிப்பில் வைக்
கப்பட்டிருக்கிற கருத்தினைக் கூறி, அவர்களுக்குக் கொடுக்கும்
எண்ணிக்கையை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்ற கருத்
தினை இங்கு எடுத்துக் கூறி இருக்கிறார்கள். அவர்களுடைய
கருத்துக்களை ஏற்று பரிசீலனை செய்து, அதற்கு வேண்டிய
நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்
துக்கொள்கிறேன்.

மேலும் பனைமரம் ஏறும் தொழிலாளர்கள் விபத்திற்கு உள்
ளாகும்போது, அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய தொகை
குறித்த காலத்தில் கிடைக்காமல் இருச்கிறது என்ற கருத்தினை
எடுத்துரைத்தார்கள். இன்று கதர், கிராமத் தொழில் வாரியத்
தின் மூலம் இந்தத் தொழிலாளர்களுக்குச் சிறு விபத்து ஏற்படும்
போது ரூ. 100-ம் பெரு விபத்து ஏற்பட்டால் ரூ. 500-ம் மரண
விபத்து ஏற்படும்போது ரூ. 1,000-மும் கொடுக்கப்பட்டு வந்தது.
அதை உயர்த்துகின்ற வகையல் இப்பொழுது ரூ. 5,000 ஆக
உயர்த்தப்பட்டு இருக்கிறது.

இந்தத் தொகைக் கொடுப்பதும் கூட இன்று கதர் கிராமத் தொழில் வாரியம் மூலம் நாம் கொடுக்கவில்லை; இந்த 5,000 ரூபாய் வருவாய்த்துறை மூலம் அளிக்கப்பட்டு வருகிறது. சில இடங்களில் இந்தப்பணம் வழங்குவது தாமதமாவதாகவும், ஒரு சில இடங்களில் கிடைக்காமல் இருக்கிறது என்றும் விண்ணப் பங்கள் மூலம் தெரிவித்து இருக்கிறார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் இந்தக் கருத்தை எடுத்துரைத்து இருக் கிறேன். இதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கண்டிப்பாக எடுப்பார்கள். அவர்களுக்கு விரைவாக இந்தத் தொகை கிடைக்க வழிவகைச் செய்வார்கள் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

இங்கே பேசிய இளையபெருமாள் அவர்கள் ஒரு கருத்தைக் கூறினார்கள். ஆதிதிராவிட மக்களுக்காக மேம்பாட்டுத் திட்டத் தின் கீழ் பலவித திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன; பயிற்சி நிலையங்களில் பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது; ஆனால் அது எத்தனை பேர்களுக்கு பயிற்சி கொடுக்கப்படுகிறது? எவ் வளவு ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது என்ற விவரங்கள் இந்த கொள்கைக் குறிப்பிலே இல்லையென்ற கருத்தை எடுத்துக் கூறினார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அந்த விவரங் களை நான் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் திட்டச்செலவு ரூபாய் 28.15 லட்சம்; இதன்மூலமாக 1945 நபர்கள் பயன டைந்து உள்ளனர் ; மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் திட்டச் செலவு ரூபாய் 40 லட்சம்; இதன் மூலம் 590 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

அதைப்போல பனைப்பொருள் பண்ணை ஆரம்பிக்கப்பட்டு அதிலே பயிற்சி பெறும் பெண்களுக்கு கூட்டுறவுச் சங்கம் ஆரம் பிக்கப்பட்டு, அதன் மூலமாக அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று கதர் கிராமத் தொழில் வாரியத்தை எடுத்துக் கொள் வோமானால் தமிழகத்திலே தான் இந்தத் துறை நல்லமுறையில் செயல்படுகிறது. தமிழகத்தில் உள்ள ஏழை, எளிய மக்களுக்கும், நலிந்த மக்களுக்கும் நிரந்தர வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கிற முறையிலே இந்தக் கதர் கிராமத்தொழில் வாரியம் செயல்பட்டு வருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள் கிறேன். அவ்வாறு செயல்படுவதினால் இன்றைக்கு இந்தியாவில் நமது கதர் வாரியம் இரண்டாவது இடத்தையும், கிராமத் தொழில் துறை முதல் இடத்தையும் வகிக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்கிறேன் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறினார்கள். அந்த வாய்மொழிக்கு ஏற்ப இன்றைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தங்களுடைய ஆட்சியில் நல்ல பல திட்டங்களை இந்தத் துறை யில் தீட்டி, அவற்றை தமிழகத்தில் செயல்படுத்தி, ஏழை மக்க ளின் வறுமையை போக்கி அவர்களுடைய வாழ்க்கை மேம்பாடு அடையச் செய்து இருக்கிறார்கள்.

இங்குே பேசிய உறுப்பினர்கள் சிலர் காந்தியடிகள் கனவை நனவாக்கும் வகையில் தமிழக முதல்வர் புரட்சித்தலைவர் இந்தத் துறைக்கென்று ஒரு தனி அமைச்சரவை நியமித்துள்ளார் என்று கூறினார்கள். அந்தவகையில கதர் துறையும், கிராமத் தொழில் வாரியமும் நல்ல பல திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகின்றன. கிராமங்களில் உள்ள மக்கள் மேலும் மேலும் வேலை வாய்ப்பைப் பெற திட்டங்கள் தீட்டப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையிலும் கதர் கிராம கைத்தொழில் வாரியத்தின் மூலமாக சுமார் 5 லட்சம் பேருக்கு மேல் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு இருக்கிறது இந்த ஆண்டு கொள்கை விளக்கக்குறிப்பிலே கொடுக்கப்பட்டு இருக்கிறது. 32,000 பேர்களுக்கு இந்த ஆண்டு வேலைவாய்ப்பு அளிக்க இருக்கிறோம். கதர் கிராம தொழில் வாரியத்தை எடுத்துக்கொண்டால், குறிப்பாக பெண்களுக்கு அதிகம் வேலை வாய்ப்பு கொடுக்கும் வகையில் இந்தத் துறை செயலாற்றி வருகிறது என்பதை நான் தெரிவித்து கொள்கிறேன்.

மேலும் இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் பாபு சனார்த்தனன் அவர்கள் தாலுக்கா அளவில் கதர் அங்காடிகளைத் துவக்கவேண்டும் என்று கூறினார்கள். கதர் விற்பனையைப் பெருக்க ஒவ்வொரு தாலுக்கா தலைநகரிலும் விற்பனை அங்காடி களைத் துவக்க அரசாங்கம் முடிவு எடுத்துள்ளது. தமிழகத்தில் 57 தாலுக்கா தலைநகரங்களில படிப்படியாக இந்தத் கதர் அங்காடிகள் துவங்கப்படும். நம்முடைய தமிழகத்திலே மட்டும் இந்தத் கதர் அங்காடிகலளத் திறப்பது மட்டுமின்றி வெளி மாநிலங்களிலும் இந்தக் கதர் அங்காடிகளைத் திறக்கவேண்டும் என்ற எண்ணத்தில் இந்தத் தமிழக அரசு டெல்லி, பம்பாய், கல்கத்தா, ஹைதராபாத், பெங்களூர் ஆகிய இடங்களிலும் இந்தக் கதர் அங்காடிகளை வாரியத்தின் மூலம் திறப்புதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்பதை இந்த நேரத் தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் பல புதிய திட்டங்களை அறிவித்து இருக்கிறோம். அந்த அடிப்படை யில் சேலம் அருகில் இருக்கக்கூடிய ஆட்டையாம்பட்டியில் பாலியஸ்டர் நூற்பு நெசவு ஆலையை 50 லட்சம் ரூபாய் செலவில் சிறப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்

1984-85 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட திட்டங்களை மேற்கொள்ள அரசு திட்டமிட்டுள்ளது:—

(1) குழி தறிகளை நவீனப்படுத்த 100 கதர் நெசவாளர்களுக்கு உதவி அளிக்க 1 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

2. ஜெக்கார்டு பெட்டிகள் வாங்கி 200 கதர் நெசவாளர்களுக்கு வினியோகிக்க ரூ. 33,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

3. பாலிவஸ்திரா நேசவரில் அபிவிருத்தி செய்ய 50 நெசவாளர்களுக்கு உதவி அளிக்க ரூ. 50,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

4. மட்பாண்ட கைவினைஞர்களுக்காக பொது சேவை தொழில் நிலையம் நிறுவும் திட்டத்திற்காக 6 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

5. பனந்தும்பு சேகரித்தல், அப்பொருட்களில் வடிவமைப்பு செய்தல் மற்றும் தூரிகை தயாரிப்பு நிலையம் நிறுவும் திட்டம் ஆகியவற்றிற்காக 3 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் ஒன்றைக் கூறினார்கள். ஆதிதிராவிடர்களுக்கு என்று பல்வேறு திட்டங்களைத் தீட்டி, அதன் மூலம் அவர்களுக்கு இந்தத்துறை மூலம் வேலைவாய்ப்பு அளிக்கவேண்டும் என்றும், எந்தெந்த மாவட்டத்தில் எந்த அளவிற்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டது என்பதையும் கேட்டார்கள். நான் அதற்கு பதில் அளிக்க விரும்புகிறேன். இவ்வாரியம் ஆதிதிராவிட மக்களுக்கு என்று பல்வேறு திட்டங்களைத் தீட்டி அதன் மூலம் பல்வேறு வகையில் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுத்து இருக்கிறது. அதன் வாயிலாக அவர்கள் வறுமைக் கோட்டிற்கு மேலே கொண்டு வரப்பட்டு இருக்கிறார்கள். அந்த வகையில் இந்த வாரியம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. எத்தனை பேர்கள், இந்த சிறப்புமேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் வேலைவாய்ப்பு பெற்றிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்து இருக்கிறேன். மேலும் ஒரு கருத்தைச் சொன்னார்கள். மத்திய அரசு அதிகமாக தொகையைக் கொடுத்து இருக்கிறது. அதை நல்ல முறையில் செலவிடவேண்டும் என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அவர்களுக்கு ஒரு கருத்தை நான் கூற ஆசைப்படுகிறேன்.

(முற்பகல் 11-40)

மத்திய அரசின் கதர்கிராமத் தொழில் ஆணைக் குழு கடந்த மூன்று ஆண்டுகளில் இந்த வாரியத்திற்கு அளித்த நிதியுதவியின் அளவு குறைந்து கொண்டே வந்திருக்கிறது. 1981-8



ஆம் ஆண்டில் 405.74 இலட்சம் ரூபாய் கடனாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் 72.09 இலட்சம் மானியமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1982-83 ஆம் ஆண்டில் 106.06 இலட்சம் ரூபாய் கடனாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் 63.83 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டிருக்கிறது. 1983-84 ஆம் ஆண்டில் 524.61 இலட்சம் ரூபாய் கடனாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் மானியமாக 51.70 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதைப் பார்க்கும்போது மத்திய அரசு நமக்கு குறைந்த அளவிலேதான் கடன் கொடுக்கிறது, நிதி உதவி அளிக்கிறது என்பது தெரியும்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த கதர் கிராமத் தொழில் வாரியத்தில் என்னென்ன பணிகள் நடைபெறுகின்றன, என்னென்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று கேட்டதோடு இதற்கு அரசு இன்னும் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஆவலையும் எடுத்து வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புவது, நமக்கு அளிக்கும் தொகையை மத்திய அரசு இன்னும் அதிகமாகக் கொடுக்க தமிழக அரசுக்கு அவர்கள் துணையாக இருக்க வேண்டுமென்பதுதான். நாங்கள் அதிக நிதி உதவி பெற நீங்கள் எல்லாம் துணையாக நிற்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அகில இந்திய காதி கமிஷன் மீட்டிங் சமீபத்தில் கோவையில் நடைபெற்றது. அப்போது அங்கே அகில இந்திய கதர் வாரிய உறுப்பினர்கள் அனைவரும் அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டார்கள். அந்தக் கூட்டத்தில் தமிழ்நாட்டில் கதர் கிராமத் தொழில் வாரியம், நல்லமுறையில், சிறப்பான முறையில் செயல்பட்டு வருவதாக அவர்கள் எல்லாம் பாராட்டினார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அவர்கள் எல்லாம் பாராட்டியது மட்டுமல்ல. தமிழ்நாட்டில் கதர் கிராமத் தொழில் வாரியம் எவ்வாறு செயல்பட்டு வருகிறதோ அதைப்போன்று நம்முடைய மாநிலங்களிலும் தமிழ்நாட்டை ஒரு முன்னோடியாகக் கொண்டு கதர் கிராமத் தொழில் வாரியங்களைச் செயல்படுத்த வேண்டும் என்றும், தமிழ்நாட்டிலே கடைபிடிக்கின்ற வழிமுறைகளை நாமும் கடைபிடிக்க வேண்டுமென்றும் வலியுறுத்திக் கூறினார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அண்ணல் காந்தியடிகளின் உயர் கொள்கையான கதர் கிராமத் திட்டத்தை சீருடனும் சிறப்புடனும் அகில இந்தியாவிலேயே முன்னோடியாகச் செயல்படுத்தி வருவது நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு ஒன்றுதான். நான் ஏற்

கெனவே கூறியதைப்போல கோவையில் நடைபெற்ற அகில இந்திய கதர் வாரிய உறுப்பினர்கள் மாநாட்டில் இந்தக் கருத்தைச் சொல்லி நம்முடைய அரசைப் பாராட்டினார்கள்.

கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகின்ற ஒரு திறவுகோலாக விளங்குவது இந்த கதர் கிராமத் தொழில் என்பதைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய இந்த அரசு சிறப்பான முறையில் இந்தத் துறையில் செயல்பட்டு வருகிறது.

" கிராம வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சி " என்று அன்றைக்கு அண்ணல் காந்தியடிகள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அவர்களுடைய வாய்மொழிக்கு ஏற்ப மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்கு அந்தக் கொள்கையைப் பின்பற்றி, கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கு நல்ல பல திட்டங்களைத் தீட்டி, இப்போது தமிழ்நாட்டில் செயல்படுத்தி வருகிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

கிராமப்புற நூற்பு நிலையங்களைப் பற்றி இங்கு மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெரிவித்தார்கள். தமிழகத்திலே 506 கிராமிய நூற்பு நிலையங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த ஒவ்வொரு நூற்பு நிலையத்திலும் 30 பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு புதியதாக 100 நூற்பு நிலையங்கள் செயல்படுத்தப்பட இருக்கின்றன என்பதனை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்ணல் காந்தியடிகள் கனவை நினைவாக்குகின்ற வகையில் இன்று புரட்சித் தலைவர் அவர்கள், அண்ணல் காந்தியடிகள் பிரகடனப்படுத்தியதை கிராம மக்களின் இதய தெய்வமாக இருக்கும் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு, இன்னும் இந்த ஆண்டு பலவிதத் திட்டங்களை, ஏழை எளிய மக்களுக்கும், ஙகவினைஞர்களுக்கும், பெண்களுக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கின்ற வகையில் நல்ல திட்டங்களை அரசு தீட்ட இருக்கிறது. அது போன்று மேலும் பலவித தொழில்கள் செய்து வரும், மண்பாண்டம், தச்சுத் தொழில் செய்பவர்கள், பனை மரத் தொழிலாளர்கள், இன்னும் பலவித தொழில் செய்பவர்கள், அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதனை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய கருத்துக்களில் ஒரு சில கருத்துக்கள் விடுபட்டு இருப்பினும், அவற்றை அரசு ஏற்று, பரிசீலனை செய்து, அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதனை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே மாண்புமிகு



உறுப்பினர் அவர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானத்தைத் திரும்பப் பெற்று, இந்த மான்யக் கோரிக்கையை நிறைவேற்றி தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. வே. இரா. ஜெயராமன்):** விவாதம் முடிவுற்றது ; இனி வாக்கெடுப்பு.

திரு. சு. பர்லன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால், அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. வே. இரா. ஜெயராமன்):** பேரவை முன்னுள்ள கேள்வி—

" மானியக் கோரிக்கை எண். 27—கதர்த் தொழில் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,29,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

(ஆ) கோரிக்கை எண். 21—மீனளம்.

**மாண்புமிகு திரு. க. கலைமணி :** மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

" மானியக் கோரிக்கை எண். 21—மீனளம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,80,85,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ".

**திரு. கெ. சொக்கலிங்கம் :** மாற்றுத் தலைவர் அவர்களே, மீனவர்களுக்குக் கடன் வழங்குவதில் தாமதம் ஏற்படுவது குறித்து, குறிப்பாக திருப்போரூர் தொகுதியில் உள்ள மீனவர்களுக்கு வலை வழங்குவதில் மானியம் குறைந்துள்ளது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

" மானியக் கோரிக்கை எண் 21—மீனளம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 5,80,85,000-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்.

**திரு. டி. மணி :** துணைத் தலைவர் அவர்களே, மீன் பிடித்து கரைக்கு வந்ததும் அதை சந்தைக் கடைகளுக்கு துரிதமாக எடுத்துச் செல்ல வாகன வசதி செய்யாதது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 21—மீனளம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,80,85,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வே. இரா. ஜெயராமன்): மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

(முற்பகல் 11-50)

மாண்புமிகு திரு. க. கலைமணி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மீனளம் பற்றி விளக்கமாக கொள்கை விளக்கக் குறிப்பில் ** கொடுக்கப்பட்டு அது அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது. அவைகளை நான் உரையாற்றியதாக கருதிக் கொண்டு, அதை அவைக் குறிப்பில் சேர்த்துக்கொள்ளு மாறு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துக்களைக் கேட்ட பிறகு, அரசின் சார்பிலே ஏதாவது சொல்வதாக இருந்தால் பின்னாலே சொல்கிறேன் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டு வரப் பட்டிருக்கக்கூடிய இந்த மானியக் கோரிக்கையில் 5 கோடியே 85 இலட்சத்திற்கு மேற்பட்ட தொகையைக் கேட்டு, அதற்கான திட்ட மதிப்பீட்டையும் இந்த கொள்கை விளக்கக் குறிப்பிலே தந்திருக்கிறார்கள். இந்தத் துறை இயற்கையோடு ஒத்துப் போகக் கூடிய துறையாகவும், இயற்கை வழங்கக் கூடிய மூலப் பொருள்களை நாம் பாதுகாத்து, அதை மக்களுக்கு எப்படி பயன்படுத்த வேண்டும் என்று ஒரு நிலைக்கு ஆளாக்கவேண்டிய ஒரு துறையாகவும் இருக்கிறது. இயற்கைச் செல்வங்களை எந்த அளவிற்கு மக்கள் பாதுகாக்கிறார்களோ, அந்த அளவிற்கு மக்களுடைய வாழ்க்கைக்கு உறுதுணையாக இருக்கும் என்பது இயற்கையின் நியதி, அது ஆண்டவன் படைப்பு, அதை நல்ல முறையில் பாதுகாத்து, மக்களுடைய வாழ்க்கைக்கு உதவிகரமாக இருக்க வேண்டும் என்ற ஒருங் கிணைந்த துறையாக இந்த துறை இயங்கிக்கொண்டிருக்கின்றது. மீன் என்பது ஒரு மனித வளர்ச்சிக்கு மனித இயக்கத்திற்கு, உணவாக ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு பண்டமாக அது ஆக்கப் பட்டிருக்கிறது. இதை பெரும்பகுதி மக்கள். இன்றைக்கு உண்ணக்கூடிய நிலையில்இருக்கிறார்கள். இந்த மக்களுக்கு இந்தப் பண்டத்தை எப்படி வழங்கி, அதனால் அவர்களுக்கு இருக்கக் கூடிய ஊட்டச் சத்தை அதிகமாக வழங்குவதற்கு அரசு என்ன செய்ய வேண்டும். அரசு அதில் ஆக்கபூர்வமாக எப்படி இருக்க வேண்டும் என்பதைபற்றி நிதிநிலை அறிக்கையில் கொண்டு

** 427—444-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.



வரக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமையில் இந்தத் துறையின் அமைச்சராக பொறுப்பேற்று இருக்கக்கூடிய வர் இளைஞராக இருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல முறையில் செயலாற்ற வேண்டும் என்ற நோக்கம்தான் காங்கிரஸ் பேரியக்கத்தின் லட்சியமாக இருக்கிறது. இந்தத் தொழிலை, மீன், மீனைச் சார்ந்த தொழிலை, கடல் பொருள் களை, சேகரிப்பதிலே ஈடுபட்டு இருக்கக்கூடிய மக்கள், ஏறக் குறைய 7 லட்சம் பேர்கள் என்று கணக்கிட்டு இருக்கிறார்கள். அதை நம்பி இருக்கக்கூடிய கடல் வளம், நமக்கு, தமிழகத்திற்கு என இருக்கக்கூடியது 1,000 கிலோ மீட்டர் கடற்கரையும், 3.69 லட்சம் எக்டேர் பரப்புள்ள உள்நாட்டு நீர் நிலைகளும் இருக்கின்றன என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட் டிருக்கிறது. ஆனால் இந்த மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கிறதா என்று பார்க்கும் போது, இந்தத் தொழிலை நம்பி இருக்கக்கூடிய மக்களுடைய நிலை உயர்ந்து இருக்கிறதா என்று பார்க்கும்போது, நாம் எதிர்பார்க்கும் அளவிற்கு ஆரம் பத்தில் அவர்களுக்கு திட்டம் தீட்டியபோது, சுதந்திர காலத்தில் அதற்கு முன்னாலே இருந்த நிலையில், சுதந்திரம் வந்த பின்னால் காங்கிரஸ் ஆட்சி பொறுப்பேற்ற பின்னால் அவர்கள் வளர்ச்சிக்கு, ஆக்கபூர்வமாக உறுதுணையாக இருந்த நிலைகள் எல்லாம் மாறி இன்றைய தினம் அந்த மக்களுக்கு எந்தவித வளர்ச்சியும் இல்லை என்ற நிலைமை இருக்கிறது.

அவர்களுக்கு அன்றைக்கு விசைப் படகுகள் வழங்கப்பட்டன. அமரர் காமராஜ் அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது. விசைப் படகுகள் வழங்கினார்கள். அவர்கள் மீன் பிடிப்பதற்கு என நைலான் போன்ற நூல்கள் மானியமாக வழங்கப்பட்டன. அவைகள் எல்லாம் இப்போது நடை முறையில் இருக்கிறதா? என்று பார்த்தால், விசைப் படகுகளும் வழங்கவில்லை. மீன் பிடிக்கத் தேவையான நூல்களும் வழங்கவில்லை என்ற நிலை தான் தமிழகத்தில் இருந்துகொண்டிருக்கிறது. இதை மாற்று வதற்கு அரசு ஏதாகிலும் முயற்சி செய்கிறதா என்று பார்த்தால், ஆண்டுதோறும் கொடுக்கக்கூடிய ஒரு கொள்கை குறிப்பாகவே இது இருந்து கொண்டிருக்கிறதே தவிர, அந்த வளங்களைப் பாதுகாத்து, மக்களுக்கு நல்ல பலனை ஏற்படுத்துவதற்கு, அல் லது பொதுமக்கள் உண்ணக்கூடிய உணவுகளைப் பெருக்குவதற்கு திட்டங்கள் இருக்கின்றனவா? என்று பார்த்தால்இல்லை. ஆனால் நம்முடைய தமிழகத்தைப் பொறுத்த மட்டில், இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலையில் கடல் செல்வங்களை அள்ளிச் செல்வதற்கு அன்னிய நாடுகள் முயன்றுகொண்டு இருப்பதை நாம் பார்க்கிறோம். கடந்த 2 மாதத்திற்கு, 1 மாதத்திற்கு முன்னாலே, என்று கருதுகிறேன். ஸ்ரீலங்கா நாட்டு விசைப் படகை, தமிழகம் பிடித்தது. அதில் இருக்கக்கூடிய மீனின் அளவுபற்றிக் குறிப்பிடும்போது, அது லட்சக்கணக்கான டன் ஆயிரக்கணக்கான டன் என்ற அளவிலே நாம் இந்த செய்திகளை பத்திரிகையின் வாயிலாக அறிந்தோம்.

தைவான், இந்தோனேசியா போன்ற நாடுகளெல்லாம் நம் முடைய கடல் செல்வத்தை அள்ளிச் செலவதற்கு அனுமதி மறுப் பதும், தடுப்பதும், மத்திய அரசின் பொறுப்பாக இருந்தாலும், அதைக் கண்காணிப்பது மாநில அரசினுடைய கடமையாகும் என்ற அளவில் அதை பாதுகாத்து தமிழக மீனவர்களுக்கு உறு துணையாக இருக்க வேணடும் என்பதை இந்த அரசு முழுமையாக ஏற்றுக் கொள்ளும் என்று நம்புகிறேன். அதற்கு என்ன திட் டத்தை இந்த அரசு தீட்டியிருக்கிறது என்று பார்க்கும் போது, எந்தத் திட்டமும் இல்லை என்பதை அறிகிறேன்.

இடைப்பட்ட காலத்திலே ஸ்ரீலங்காவிற்கும், அங்கே இருக்கக் கூடிய தமிழர்களுக்கும் இடையில் ஏற்பட்டிருக்கக்கூடிய சில சூழ்நிலைகளில் இந்தியா கருத்து வேறுபட்டு இருக்கிறது. தமிழகமும் அதிலே உள்ளடங்கி யிருக்கிற காரணத்தால், தமிழக மீனவர்களுக்கு இலங்கையின் கடற்கரை ஓரங்களில் பாதுகாப்பு இல்லை என்ற அளவில், அவர்கள் வங்காள விரிகுடாவில் மீன் பிடிக்கச் செல்லும்போது, அல்லது இந்து மகா சமுத்திரத்திலே மீன் பிடிக்கச் செல்லும்போது, பிரச்சனைகள் புதிதாக உரு வாகிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, தமிழக மீனவர்களுக்கு பாது காப்பு இல்லை என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்கு மைய அரசு பல நிலைகளில் பாதுகாப்பு அளித்தாலும், தமிழக அரசு உறுதுணையாக இருக்க வேண்டும் என்பதைத்தான் இந்த நேரத்தில் நான் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு நம்முடைய தமிழக அரசுமேலும் நல்ல முறையில் நடவடிக்கை எடுத்து, மைய அரசுக்கு உறுதுணையாக இருக்கவேண்டும் என்றும் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

6—வது ஐந்தாண்டு திட்டத்தில் கடல் மீன் உற்பத்தியை 2.17 லட்சம் என்பதை 3 லட்சம் டன்களாக மாற்றுவதற்கு திட்டமிட்டிருக்கிறோம் என்று ஒரு நிலையை நம்முடைய அரசு ஏற்படுத்திக் கொண்டிருந்தாலும், அந்த உற்பத்தியைச் செய் வதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா? அல்லது எதுவும் கொள்கை குறிப்பில், அன்றாடம் சொல்வதைப் போன்றுதான் சொல்கிறீர்களா என்று தெரியவில்லை. ஏனென்றால் விசைப் படகுகளை வாங்குவதற்கோ அல்லது வலைகளை மேலும் அபி விருத்திச் செய்வதற்கோ நாம் ஏதாகிலும் திட்டம் வைத்திருக் கிறோமா என்றால், நான் முன்பே குறிப்பிட்டதைப் போல எதுவும் இல்லை. ஆகவே, இதிலே எப்படி உற்பத்தி செய்யப் போகி றீர்கள்? அல்லது எப்படி அதிகமான மீன்களைப் பிடிக்கப் போகிறீர்கள் என்கிற விவரத்தை நீங்கள் அளிக்க வேண்டும். அரசு அதை சற்று ஆழ்ந்து பரிசீலிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

உள்நாட்டு மீன் உற்பத்தியை 0.60 லட்சம் டன் என்ற நிலையி லிருந்து 2.10 லட்சம் அளவுக்கு மீன்களை அபிவிருத்திச் செய் வோம்என்ற ஒரு நிலையையும் கொள்கைக் குறிப்பேட்டிலே கூறி



யிருக்கிறீர்கள். திடீரென்று இந்த அளவுக்கு எப்படி உற்பத்தி செய்யப் போகிறீர்கள்? அலலது ஏதோ புள்ளி விவரத்திற்காக இதைச் சொல்கிறீர்களோ என்றுபார்க்கும்போதுஎனக்கு புரியாத ஒரு நிலை தான் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை விளக்குவார் என்று நம்புகிறேன். உள்நாட்டு தேவை என்பது அதிகமாக இருக்கிற காரணத்தால், இது மக்கள் விரும்பிச் சாப்பிடக் கூடிய பொருளாக, ஏழை எளிய மக்களும் சாப்பிடக் கூடிய அளவில், வசதி வாய்ப்பு உள்ளவர்களும் சாப்பிடக் கூடிய அளவில் இருப்பதால், அதை எப்படி சரி செய்யப் போகிறீர்கள்? இந்தப் புள்ளி விவரம் ஒரே முற்றாக 3, 4 மடங்கு உயர்த்தக் கூடிய அளவுக்கு இருக்கிறதே, எந்த திட்டத்தின் அடிப்படையில் இதை வைத்திருக்கிறீர்கள் என்பதைத்தான் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

வெளிநாடுகளிலே வயல் வெளிகளில் 4 அங்குலம், 6 அங்குலம் உள்ள நீர்த்தேக்கத்திலே மீன்களை வளர்க்கலாமா என்ற ஆராய்ச் சியை செய்துக் கொண்டிருக்கிறார்கள். அது போன்ற திட்டம் ஏதாவது இருக்கிறதா? அல்லது வேறு ஏதாவது புதிய திட்டத்தைக் கொண்டு வரப் போகிறீர்களா? அப்படி கிராம மக்கள், சாதாரண மக்கள், வயல்களிலே மீன்களை வளர்க்கக் கூடிய திட்டம் ஏதா வது இருக்கிறதா என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே அறிந் துக் கொள்ள விரும்புகிறேன். அப்படி ஏதாவது திட்டங்கள் இருந்தால், அதை அமல்படுத்துவதற்கு என்ன வழி முறைகளை வைத்திருக்கிறீர்கள் என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர் கள் தம்முடைய உரையில் சுட்டிக் காட்ட வேண்டும் என்று இந்த நேரத்திலே கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

(நண்பகல் 12-00)

அடுத்து மீன்களைத் தவிர்த்து, கடல் செல்வம் என்பது முத்துக்கள், சங்குகள் போன்றவைகள், இந்தச் சங்கு குளிப்பவர் கள் திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில் இருந் தாலும், அந்தச் சங்குகளை வாங்குவது அரசாங்கத்தினுடைய நிறுவனமாக இருந்துக் கொண்டிருக்கிறது. அந்த அரசாங்க நிறு வனம் அந்தச் சங்குகள் மூலமாக உற்பத்திச் செய்யக் கூடிய பொருள்களை ஏதாவது செய்கிறதா என்றால் இல்லை. இன் றைய நவநாகரீக காலத்திலே சங்குகளிலிருந்து பெண்கள் அணியக்கூடிய பல பொருள்களை தயாரிப்பதாக இருந்தாலும், சரி அல்லது வேறு பல பொருள்களை உற்பத்தி செய்வதாக இருந்தாலும் சரி, அதற்கென ஏதாவது தொழிலகம் இருக்கிறதா என்று பார்த்தால், இல்லை என்பதோடு மட்டும் அல்ல அந்தச் சங்குகளை வேறு மாநிலங்களுக்கு விற்கக் கூடிய நிலையில் தான் தமிழக அரசு இருந்துக் கொண்டிருக்கிறது. கடலிலே செலலக் கூடிய மீனவர்கள் சங்கு குளித்து கடினமாக பாடுபட்டு எடுத்துக் கொண்டு வருகிற சங்குகளை வெளிமாநிலங் களுக்கு அனுப்பி அங்கே அவர்கள் அவைகளை வேறு பொருள் களாக மாற்றி விற்கக் கூடிய நிலைமை இருக்கிறது. இங்கேயே

அந்தப் பொருள்களை உற்பத்தி செய்வதில்லை என்ற நிலை
இருக்கிறது ஆகவே அப்படி உற்பத்தி செய்வதற்கான திட்டங்
களைத் தீட்ட வேண்டுமென்று நான் ஆலோசனையாகத் தெரி
வித்துக் கொள்கிறேன்.

மைய அரசு நேஷனல் கோஆப்பரேடிவ் டெவலப்மென்ட்
கார்ப்பரேஷன் என்ற நிறுவனத்தின் மூலமாக இந்தத் துறைக்கு
வழங்கப் கூடிய பணம் எந்த முறையில் பயன்படுத்துகிறார்கள்
என்ற விளக்கத்தை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.
இதற்கென தேசிய மட்டத்தில் இருக்கக்கூடிய என்.சி.டி.சி. வழங்கு
கிற நிதியை நல்ல முறையில் மீனவர்களுக்கு வழங்குகிறார்களா
என்று பார்க்க முடியவில்லை. சாதாரண ஏழை எளிய மீனவர்
களுக்கு அந்தத் தொகை போய்ச் சேர்கின்ற முறையிலே திட்டங்
கள் ஏதாவது இருக்கின்றனவா என்று பார்த்தால் ஏதும் இல்லை
என்றுதான் தெரிகிறது. ஆகவே அதை நல்ல முறையிலே பயன்
படுத்துவதற்கான நிலைமையை ஏற்படுத்த இந்தத்துறை திட்டங்
களைத் தீட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நீண்ட நெடுங்காலமாக புராதனமாக முத்துக் குளிக்கும்
தொழில் வளர்ச்சியடைந்து வந்திருக்கிறது. இந்தத் தொழில்
தமிழகத்திலிருந்து வெளிநாடுகளுக்கு முத்து ஏற்றுமதி செய்த
வரலாறு இருக்கிறது. 1961 ஆம் ஆண்டிலிருந்து இன்றைய வரை
யில் செயல்படுகிறதா? முத்துஇல்லையா? தேர்ச்சி மிக்கமுத்துக்கள்
இல்லையா? இவைகளைப் பற்றியெல்லாம் இந்தக் கொள்கைக்
குறிப்பிலே ஏதும் சொல்லப்படவில்லை. ஸ்பிக் நிறுவனத்திற்கு
குத்தகைக்கு விட்டிருக்கிறோம். அவர்கள் பரிட்சார்த்தமாக
செய்கிறார்கள் அல்லது நவீன முறையில் உற்பத்தி செய்கிறோம்
என்ற குறிப்புதான் இருக்கிறதே தவிர புராதனமாக இருக்கக்
கூடிய இந்தத் தொழில் அதனுடைய வருமானம் இப்போது
என்ன ஆனது முத்து குளிக்கும் தொழிலையே தமிழகம் இழந்து
விட்டதா? அதற்கான சூழ்நிலைகள் இல்லாமல் போய் விட்டதா
என்பதையெல்லாம் அமைச்சர் அவர்கள் விளக்குவார்கள்என்று
நான் கருதுகிறேன். இந்த விஷயத்திலே இந்த அரசு தேவையான
நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டுமென்று நான் இந்த
நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

மீனவர்கள் சங்கங்கள் கிராமங்களிலே இருக்கின்றன. சில
பினாமி பெயரால்இருக்கின்றன என்பதை இந்த அவையிலே பலர்
சுட்டிக்காட்டினார்கள். ஏதாவது வசதி வாய்ப்பு உள்ளவர்கள்
சங்கத் தலைவர்களாக இருக்கிறார்கள். ஏரிகளிலே குத்தகை
எடுத்துக் கொண்டு வருவாய் பெறக்கூடிய நிலைமை இருக்
கிறது. இந்த நிலைமையைப் போக்கி சாதாரண அங்கத்தினர்
களாக இருக்கிற மீனவர்களுக்கு உறுதுணையாக இருக்கக் கூடிய
முறையிலே மாற்றியமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்
கிறேன். இந்த நிலையைப் பற்றி பல முறை நான் இந்த அவையிலே
எடுத்துச் சொல்லி கேட்டுக் கொண்டும் எந்த விதமான



நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அந்த நிலை போக்கப்
பட வேண்டுமென்பது எங்களுடைய அபிலாஷையாக இருக்கிறது.
ஆகவே அதைச் செய்வதற்கு அரசு முன்வர வேண்டுமென்று
நான் கேட்டுக் கொள்கிறேன். கிராமப் புறங்களிலே-வருவாய்த்
துறை பொறுப்பாக இருந்தாலும் கூட—மீன் பட்டாக்கள் என்ற
நிலை இருக்கிறது, அது போக்கப்பட வேண்டும். ஏரிகளிலே
மீன் குத்தகைகளை பஞ்சாயத்திற்கோ ஒன்றியத்திற்கோ விடு
வதற்கு அரசாங்கம் முன் வரவேண்டும். இது நீண்ட நாள்
பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது. அதை செய்வதற்
கான சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்த வரையில் எங்கள் மாவட்டத்திலே
பல உள்நாட்டு மீன் உற்பத்தி நிலையங்கள் என்ற ரீதியில் மீன்
வளர்ச்சிக் கழகம் பல நிலைகளில் 54 மீன் விற்பனை நிலையங்
களை ஏற்படுத்திக்கொண்டிருந்தாலும் மீன் அங்கே கிடைக்கிறதா
என்றால் இல்லை. சாத்தனூர் அணையில் அதிகமான மீன்கள்
உற்பத்தியானாலும் அந்தப் பகுதி மக்களுக்கு கூட்டுறவு சங்கம்
மூலமாகவோ அலலது சூப்பர் மார்க்கட் மூலமாகவோ மீன்கள்
கிடைக்கவில்லை, விற்பனை செய்யப்பட்டாலும் போதுமான
அளவுக்கு கிடைக்கவில்லை என்ற குறை இருக்கிறது.
அந்தப் பகுதி மக்களுக்கு போதுமான அளவுக்கு வழங்குவதற்
கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
அது எங்கோ வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு முன்னால்
உள்நாட்டுத் தேவையை அந்தப் பகுதியில் இருக்கக் கூடிய மக்கள்
நுகர்வதற்கானசூழ்நிலையைஉருவாக்குவதற்கானநடவடிக்கையை
எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கூறிக் கொண்டு தமிழ்
நாட்டு மீன் வளர்ச்சிக் கழகம் மூலம் கருவாடு போன்றவைகள்
அதாவது டிரை பிஷ் போன்றவைகளை பக்குவப்படுத்தி
விற்பனைச் செய்வதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.
பல்ஆண்டுகளாக அது தனியார் வியாபாரமாக இருக்கிறதே தவிர
இதை அரசு தரப்பில் இந்தக் கழகம் மேற்கொள்ளவில்லை.
அதை விரும்பி உண்ணக்கூடிய மக்கள் நல்லவை
களாக கிடைக்காமல் வெறும் நாறக்கூடிய நிலையில் அது தனி
யார்களால் விற்கக்கூடிய நிலை இருக்கிறது. அதை நல்ல முறையில்
பக்குவப்படுத்தி மக்களுக்கு விநியோகிப்பதற்கான சூழ்நிலையை
உருவாக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கூறிக் கொண்டு,
ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில்
கண்ணாடி இழைப் படகுகள், நைலான் வலைகள் போன்ற
திட்டங்களை நீங்கள் வழங்கியதாக இங்கே கொள்கை விளக்கக்
குறிப்பில் கூறியிருக்கிறீர்கள். அது எந்த அளவுக்கு சாதாரண
மாக தொழில் புரிபவர்களுக்கு பயன்படுகிறது என்ற நிலையை
அறிய விரும்புகிறேன். இதை நல்ல முறையில் செயல்படுத்த
வேண்டும். இந்த ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்
தின் மத்திய அரசு எவ்வளவோ ஆர்வமாக இருந்தாலும் 83-91
லட்சம் ரூபாய் அளவுக்கு இந்தத் திட்டங்கள் தீட்டி இருந்தாலும்

அவை நல்ல முறையில் பயன்படுவதற்கு சாதாரண மக்களுக்கு இவை நல்ல முறையில் ஆக்கபூர்வமாக ஏற்றுக் கொள்வதற்கு நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கூறிக் கொண்டு இறால் போன்றவைகளை இன்றைக்கு மக்கள் விரும்பி அதிகமான அளவுக்கு சாப்பிட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இதன் விலை கிலோ 40 ரூபாயிலிருந்து 100 ரூபாய் வரை விற்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இவைகள் மலிவான விலையில் கிடைப்பதற்கு அரசு உறுதுணையாக இருக்க வேண்டும் மீன்வளர்ச்சி கழகம் மூலம் ஆக்க பூர்வமாக இதைச் செய்வதற்கு சூழ்நிலையை உருவாக்க வேண்டும். கிராமங்களில் கிணறுகளில் வயல்களில் மீன்வளர்ச்சிக்கு பிரத்தியேகமான திட்டங்களை மேற்கொண்டு இப்போது அடை மழை பெய்து இருக்கிற காரணத்தால் இந்த ஆண்டு நிரந்தரமாக தண்ணீர் இருக்கக் கூடிய சூழ்நிலைஇருப்பதால்கிராமப்புற மக்கள் சாதாரணமாக உண்ணக் கூடிய ஏழை எளிய மக்களின் உணவாக இருக்கிற இந்த மீன் உற்பத்தியை நல்லமுறையில் ஏற்படுத்துவதற்காக ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டும் என்று இந்தநேரத்தில் கூறி இந்தத்துறை நல்ல முறையில் செயல் பட வேண்டும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இளைஞராக இருக்கிறார்கள், அந்த சமுதாய மக்களின் பிரதிநிதியாக அமைச்சராக பொறுப்பு ஏற்று இருப்பதால், நல்ல முறையில் செயலாற்ற வேண்டும் என்று கூறி, இந்தப் பகுதி மக்கள் இதை நம்பி இருக்க கூடிய மக்களுக்கு இந்தத் துறையே நல்ல முறையில் செயல்படுத்தி சீரான திட்டங்களைத்தீட்டி மேலும் நல்ல முறையில் செயல்பட இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டு விடை பெறுகிறேன். நன்றி வணக்கம்.

*திரு. இரா. அமிர்தராஜ்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மீன்வளத் துறைஅமைச்சர் அவர்கள் கொண்டு வந்து இருக்கக்கூடிய மானிய கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை சொல்லலாம் என்று ஆசைப்படுகிறேன். இன்றைக்கு தமிழகத்தில் இருக்கின்ற மீனவ மக்கள் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளக் கூடிய அளவுக்கு பொருளாதாரத் துறையில் முன்னேறிக் கொண்டு இருக்கிற அளவுக்கு எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் முற்போக்கான திட்டங்களை தீட்டிக் கொடுத்ததன் மூலம் கடந்தகால வரலாற்றை விட இன்றைக்கு முனைப்பான பாதையில் அமைதியாக தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொண்டு இருக்கிறார்கள் என்பதற்கு பல சான்றுகளை இங்கே என்னால் எடுத்து வைக்க முடியும். எனக்கு முன்னால் பேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த நண்பர் தற்போது மீனவ மக்களின் வாழ்க்கைத் தரம் குறைந்து இருப்பதாகச் சொன்னார்கள். நான் அதை மறுத்து ஒரு சில உதாரணங்களை எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன். 1976-ஆம் ஆண்டுக்கு முன்னால் நெல்லை மாவட்டத்தில் கடற்கரையில்



வாழ்கின்ற மீனவ மக்கள் பகுதிகளுக்கு சாலை வசதி இல்லாமல் இருந்தது. அது மட்டும் அல்லாமல் போக்குவரத்து வசதிகூட இல்லாமல், மின் விளக்கு வசதி இல்லாமல், தங்களுக்கு குடியிருக்க மனை இல்லாத ஒரு சூழ்நிலை அன்றைக்கு இருந்தது. எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவர் அவர்கள் பொறுப்பு ஏற்ற பிறகு தான் மீனவ மக்களுக்கு பல நன்மைகள் செய்யப்பட்டு வருகின்றன. குடியிருப்பு மனை அதிகமாக கட்டிக் கொடுத்து அங்கே மின் விளக்கு வசதி செய்து கொடுத்து கடற்கரை வரை வாகனங்கள் சென்று தொழில் மூலம் கிடைக்கின்ற மீன்களை வெளி இடங்களுக்கு எடுத்துச் செல்லக்கூடிய அளவுக்கு அழகான முறையில் அகலமான தார் சாலை அமைத்துக் கொடுத்து, போட் வந்து வெளியே தங்குகின்ற இடம் வரை சென்று திரும்புகின்ற அளவுக்கு மணல் பாங்கான இடத்தில் கருங்கற்களை பரப்பி சிமென்ட் மூலம் பூசப்பட்டு எந்த விதமான சிக்கலான சூழ்நிலை இல்லாத அளவுக்கு போக்குவரத்து வசதி உண்டாக்கிக் கொடுத்தது இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவர் அவர்கள் அரசு என்பதை நான் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

ஆகவே, புரட்சித் தலைவரவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பிறகுதான் மீனவர் சமுதாயம் நிம்மதியாக வாழத் தொடங்கியிருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12–10)

அது மட்டுமல்ல, இயந்திரப் படகுக்காரர்களுக்கும், நாட்டுப் படகுக்கரார்களுக்கும் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து இருந்து வருகின்ற பிரச்சினைகளையும், தகராறுகளையும், சண்டைகளையும் சுமுகமாகத் தீர்த்துக்கொள்ளும் அளவிற்கு, நாட்டுப் படகுகளைப் பயன்படுத்துகின்ற மீனவர்கள் பாதுகாப்பு பெறுகின்ற அளவிற்கு அவர்களுடைய தொழிலை அமைதியாகச் செய்கின்ற சூழ்நிலலையை உருவாக்கித் தந்தவர் டாக்டர் புரட்சித் தலைவரவர்கள் என்பதை இந்த நேரத்தில் நினைவுபடுத்த கடமைப்பட்டிருக்கிறேன்.

மீனவ மக்கள் அதிகமாகப் பயன்படுத்துகின்ற நாட்டுப் படகுகள், வள்ளம், கட்டுமரம் போன்றவைகளுக்குப் பதிலாகக் கண்ணாடிப் படகுகளையும் அதைபோல இணைப்பு வலைகளையும், நாட்டு படகுகளின் உள்ளேயும் வெளியேயும் மெஷின்களைப் பொருத்து தங்களுடைய தொழிலை அவர்கள் விரைவாகச் செய்து மீன்களை அதிகமாகப் பிடிக்கின்ற அளவிற்கு சூழ்நிலைகளை உருவாக்கித் தந்தது புரட்சித் தலைவர் அவர்களின் அரசு என்பதையும் நான் இந்த நேரத்தில் கோடிட்டுக்காட்டக் கடமைப்படிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியில், குறிப்பாக, புன்னக்காயல், காயல்பட்டினம், ஆலந்தலை, அமலிநகர், மணப்பாடு, குலசேரப்பட்டணம் போன்ற இடங்களில் ஏறக்குறைய 30,000 ஜனத்தொகைகும் மேற்பட்டவர்கள் அந்தத் தொழிலை நம்பி வாழ்கிறார்கள். அந்த மக்களுக்குப் பல நன்மைகளைச் செய்து தருகின்ற இந்த அரசு, கடந்த ஒன்றிரண்டு மாதங்களுக்கு முன் மீனளத் துறையின் பொறுப்பை ஏற்றிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் திரு. கலைமணி அவர்கள் திருச்செந்தூர் பகுதிக்கு விஜயம் செய்தார்கள். ஆண்டாண்டு காலமாக அமலிநகர் பகுதியில் வாழுகின்ற மீனவ சகோதரர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய குடியிருப்பு மனைகளை சுற்றிலும் அடிக்கடி மணல் மூடிக்கொள்கின்ற இன்னல்களைப் பற்றிச் சொல்கின்றபொழுது, அவர்கள் நேரடியாக அந்த இடத்தைப் பார்வையிட்டு, அந்த மக்களின் குறைபாடுகளை நேரில் கேட்டுத் தெரிந்துகொண்டு, அந்த மணல் மேட்டை அகற்றுவ்தற்கு விரைவான நடவடிக்கை என்று கூட சொல்லாமல், இராணுவ நடவடிக்கையைப் போல எடுத்து, இன்றைக்கு அந்த மணல் திட்டுக்களை அகற்றுகின்ற நல்ல சூழ்நிலையை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படிப்பட்ட சூழ்நிலை ஆண்டாண்டு தோறும் நடைபெறுகிறது. எதிர்பாராத சூழ்நிலைகளில் மீனவ மக்களின் குடியிருப்பு மனைகளைச் சுற்றிலும் மணல் மேடு சூழ்ந்து அவர்கள் தங்களுடைய வீட்டிற்குள்கூட பிரவேசிக்க முடியாத சூழ்நிலை அடிக்கடி ஏற்படுகிறது. எனவே, இதற்கு நிரந்தரமாக ஒரு பரிகாரம் கண்டு, இனிமேல் அப்படிப்பட்ட சூழ்நிலை உருவாகாமல் தடுப்பதற்கு, கடல் அரிப்புத் தடுப்பு திட்டத்தின் கீழோ அல்லது வேறு எந்தத் திட்டத்தின் கீழோ செய்ய வேண்டும். அமலிநகர் பகுதியில் மணல் மூடாமல் பாதுகாப்பு தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிக்கிறேன்.

ஆலந்தலை பகுதியிலும், அமலிநகர் பகுதியிலேயும் குடியிருப்பு பகுதிகளிலே ஏறக்குறைய 15 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்து, தடுப்புச் சுவர் கட்டுவதற்கு அமைச்சரவர்கள் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அந்தப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

இந்தச் சங்கடங்களெல்லாம் இன்று, நேற்று ஏற்பட்டவை அல்ல. ஏறக்குறைய 30, 40 ஆண்டுகளுக்கு மேலாக இப்படிப்பட்ட குறைபாடுகள் இருந்துகொண்டுதான் இருந்தன. ஆனால் அவற்றையெல்லாம் கண்டும் காணாததுபோல இருந்தவர்கள் இன்றைக்குக் குறைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம், இப்பொழுது தடுப்புச் சுவர் கட்டப்படுவதைப் பற்றி நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.



புரட்சித் தலைவரவர்களின் ஆட்சி ஏற்பட்டதற்குப் பிறகு புன்னக்காயலில் நூறு வீடுகளும், அமலிநகரில் நூறு வீடுகளும், ஆலந்தலையில் நூறு வீடுகளும், மணப்பாட்டில் நூறு வீடுகளும் கட்டப்பட்டிருக்கின்றன. இதை நன்றியுணர்வோடு நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பருவ மழை தவறிப் பெய்த நேரத்தில் புன்னக்காயல் பகுதி தாமிரபரணி ஆற்றின் வெள்ளத்தால் சூழப்பட்டு, அங்கேயுள்ள மக்கள் தங்கள் இல்லங்களில் குடியிருக்க முடியாத நிலை ஏற்பட்டது. இது ஆண்டுதோறும் நடைபெறுகின்ற ஒரு உண்மையான நிகழ்ச்சியாகும். தாமிரபரணி ஆறு கடலில் கலக்கும் இடத்தில் புன்னக்காயல் மக்கள் இருப்பதால், அந்த ஆற்றின் சீற்றத்திலிருந்து அந்த மக்களைக் காப்பாற்றும் வகையில் அந்தக் கரையைப் பலப்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களிடம் வேண்டுகோள் வைத்து, அந்தப் பகுதி மக்களை வெள்ளத்தால் ஏற்படும் ஆபத்திலிருந்து காப்பாற்றும் வகையில் நிரந்தரமான நிவாரணம் கிடைக்கும் விதத்தில் நல்ல திட்டங்களை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் தீப்பிடிக்காத வீடுகளை அவர்களுக்கு உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல இன்றைக்குக் கடற்கரைப் பகுதிகளிலே வாழ்கின்ற மீனவமக்களுக்கு வீடுகளைக்கட்டிக்கொடுக்கிறார்கள். அவர்கள், எப்படி மீன்பிடித் தொழிலைத் தொடர்ந்து செய்கிறார்களோ அதேபோல் தான் என்னுடைய தொகுதியில் தெற்காத்தூர் பகுதியில் 50 குடும்பங்களுக்கும் மேற்பட்டவர்கள் நகரப்புறத்தில் இருக்கிறார்கள். அவர்களும் இதே தொழிலை நம்பித்தான் அங்கே இருக்கிறார்கள். எனவே அவர்களுக்கும் குடியிருப்பு மனை கட்டிக் கொடுக்கவேண்டும் என்று அதிகாரிகளைக் கேட்டபோது அவர்கள் கடற்கரைப் பகுதியிலே இருக்கின்ற மக்களுக்குத்தான் வீட்டை அளிக்க முடியும், நகர்ப்புறங்களிலே இருப்பவர்களுக்குக் கொடுக்க இயலாது என்ற சூழ்நிலையைத் தெரிவித்து வருகிறார்கள். ஆனால் அவர்களும் அதே மீன்பிடித் தொழிலைத்தான் செய்து வருகின்றார்கள் என்ற காரணத்தால் அந்த மீனவ மக்களுக்கும் குடியிருப்பு மனைகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று நான் அன்போடு ஒரு வேண்டுகோளினை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருச்செந்தூரிலே மீன்பிடிக்கின்ற மக்கள் ஏறத்தாழ 30 ஆயிரத்திற்கும் மேல் இருப்பதாகச் சொன்னேன். மீன்களுக்கான குளிரூட்டும் நிலையம் அங்கே இல்லை. எனவே திருச்செந்தூரை மையமாக வைத்து மீன் குளிரூட்டும் நிலையத்தை அமைத்துக் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இன்றைக்கு வலை பின்னுகின்ற தொழிற்சாலையைச் சென்னையிலே நிறுவ இருக்கிறார்கள் என்பதைப்பற்றி குறிப்பிலே பார்த்தேன். ஆனால் சென்னை நகரத்திலே பல தொழிற்சாலைகள் இருக்கின்றன. மேலும் இங்கே பலவிதமான வாய்ப்பு வசதிகளும், தொழில்களும் தொழிலாளர்களுக்குக் கிடைக்கின்றன. ஆனால் நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மீனவ மக்களுக்காக வலை பின்னுகின்ற தொழிற்சாலை அரசின் சார்பிலேயும் இல்லை; கூட்டுறவுச் சங்கங்களின் சார்பிலேயும் இல்லை. ஆகவே அந்த மக்கள் பயன் பெறுகின்ற வகையிலேயும் தாய்மார்கள் அந்தத் தொழிலைக் கற்றுக்கொள்கின்ற அளவிலேயும் அங்கே குலசேகரப்பட்டணத்திலேயோ அல்லது குலசேக்ரப்பட்டணத்திற்கும், மணப்பாட்டுக்கும் இடைப்பட்ட இடத்திலேயோ வலை பின்னுகின்ற ஒரு தொழிற்சாலையை அமைக்கவேண்டும் என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கடன்களை வழங்குகின்றபோது ஒருசில மீனவச் சகோதரர்களை உறுப்பினர்களாகச் சேர்ப்பதற்குக் கூட தயக்கம் காட்டுகிறார்கள். அப்படித் தயக்கம் காட்டுகின்ற அப்படிப்பட்ட குறிப்பிட்ட சங்கங்கள் முறையாகச் செயல்படுவதற்கான வழிவகைகளைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். மீனவச் சகோதரர்கள் வங்கிகளிலே போய் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய சலுகைகளைப்பற்றி நேரடியாகக் கேட்டால் கூட அவற்றைப் பெறுவதிலே சிரமங்கள் இருக்கின்றன. சான்றிதழ்கள், ஜாமீன் செக்யூரிட்டி போன்றவைகளைக் கொடுக்கவேண்டிய நிலைமைகள் இருக்கின்றன. இவற்றை எல்லாம் கொடுக்க முடியாத சூழ்நிலையில் மீனவ மக்கள் பலபேர் இருக்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்டவர்களுக்கு எல்லாம் உடனடியாக உதவி கிடைக்கின்ற வகையிலே அரசு அந்த வங்கிகளுக்குத் தாக்கீதுகளை அனுப்பவேண்டும்; ஏனென்றால் அவர்களுக்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய அந்த உபகரணங்களை அதாவது போட், வலை போன்ற அந்த உபகரணங்களைக் கூட அவர்களால் பெற முடியாத சூழ்நிலைதான் இன்றைக்கு நிலவிக் கொண்டிருக்கிறது.

தூத்துக்குடி, புன்னக்காயல் போன்ற பகுதிகளில் உப்பளங்கள் இருக்கின்றன; கழிமுகங்கள் இருக்கின்றன. அவற்றிலே நல்ல இரால் மீன்களை வளர்க்க முடியும். எனவே அப்படிப்பட்ட இடங்களைத் தேர்ந்தெடுத்து இரால் மீன்களை வளர்க்கின்ற முயற்சியினை அரசு மேற்கொள்ளவேண்டும். இரால் மீன்களைப் பொறுத்தவரையில் அவை குறைந்து கொண்டே வருகின்றன. அதற்குக் காரணம் என்னவென்றால் இயந்திரப் படகு வைத்திருப்பவர்கள் கடலுக்கு அடியிலே இருக்கின்ற மண்ணோடு மீன்களை வாரிச் செல்கின்ற



காரணத்தால் இரால் மீன்களின் முட்டைகள் எல்லாம் வெளியே கொண்டுவரப்பட்டு இன்றைக்கு இரால் மீன் வம்சமே அழிக்கப்பட்டுக்கொண்டு வருகின்ற சூழ்நிலை உருவாக்கப் பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆகவே அதனைக் கட்டுப்படுத்துகின்ற வகையிலே எல்லோருமே நாட்டுப் படகுகளைப் பயன்படுத்துகின்ற அளவுக்கு ஒரு சூழ்நிலையை உருவாக்கவேண்டும். இல்லை என்றால் அந்த இரால் மீன்களை வளர்ப்பதற்கு அகில இந்திய ரீதியில் பல நடவடிக்கைகளை எடுப்பது போல் அந்த இரால் மீன் முட்டைகளை எல்லாம் வெளியே கொண்டுவராமல் இருப்பதற்கான ஒரு நடவடிக்கையை எடுத்து அதை நிறைவேற்ற வேண்டும். இல்லை என்றால் அந்த் இரால் மீன் வம்சமே அழிக்கப்பட்டுப் போய்விடும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12–20)

கூட்டுறவுச் சங்கங்களுக்குப் போதிய வாகன வசதி இல்லை. அதாவது அவர்கள் பிடிக்கின்ற மீன்களை விற்பதற்குரிய வாகன வசதி இல்லை. இன்றைக்குப் பல இடங்களிலும் போக்குவரத்து வசதிகளையும், மின் விளக்கு வசதிகளையும் செய்து கொடுத்திருப்பது போல் இந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கும் வாகன வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும். தனியார்களிடத்திலே லாரிகளும் மற்ற வாகன வசதிகளும் இருக்கின்ற காரணத்தால் கூட்டுறவுச் சங்கங்களோடு அவர்கள் போட்டியிடக்கூடிய அளவுக்கு, கூட்டுறவுச் சங்கங்களையே மிஞ்சுகின்ற அளவுக்கு மீன் பிடிக்கின்ற சகோதரர்களுக்கு முன் பணத்தை அளித்து அந்த மீன்களை எல்லாம் வாங்கிக் கொண்டு போய் தனியார்கள் கொழுந்த இலாபம் சம்பாதிக்கக்கூடிய நிலமை இன்றைக்கு இருக்கின்றது. இந்த நிலமையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஊக்கம் கொடுப்பதோடு, அவர்களுக்கு கடன் தொகைகளைக் கொடுப்பதோடு, வாகன வசதிகளையும் செய்து கொடுத்து அந்த மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் திறம்பட நடத்தப்படுகின்ற சூழ்நிலையை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் மீனவ மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு இந்த அரசு நல்ல காரியங்களைச் செய்து முன்னேற்றப் பாதையில் அவர்களை நடத்திச் செல்ல பல திட்டங்களை இங்கே சொல்லி இருக்கிறார்கள். அவைகளை எல்லாம் நிறைவேற்றி, மீனவ மக்கள் மேலும் முன்னேற்றப் பாதையில் நடக்க வழிவகை செய்ய வேண்டுமென்றுகேட்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்,

திரு. டி. மணி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மீனளத் துறையின் சார்பிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியக் கோரிக்கையின் மீது நான் சார்ந்திருக்கிற இயக்கத்தின் சார்பிலே சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக, இந்த மீன்வளம் என்று சொல்லுகின்றபொழுதே, எந்த அளவிற்கு நம்முடைய நாட்டு மக்கள் அரிசியை உணவாக ஏற்றுக் கொள்கிறார்களோ, அந்த அளவிற்கு, ஏன், அதிகப்படியாக, இந்த மீனைப் பயன்படுத்துகின்ற ஒரு நிலையைத் தமிழ் நாட்டிலே நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். ஆகவே, அதற்காக எந்த அளவுக்கு மீனை அதிகப்படியாக உற்பத்தி செய்தாலும், இயற்கையான செல்வத்தை நாம் சுரண்டுகின்ற முறையிலேதான் தமிழ்நாட்டிலே இருக்கின்ற இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான மக்களுக்கு ஒரு உணவுப் பொருள் என்ற முறையில், எந்த அளவிற்கு அதை எடுத்துக் கொள்ள முடியுமோ அந்த அளவிற்கு அதிகமாக எடுத்துக் கொண்டால்தான் நம்முடைய தமிழக மக்களுடைய சுய தேவையைப் பூர்த்தி செய்வதோடு, அண்டை அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலமாக, அன்னியச் செலாவணியைப் பெற்றுக்கொள்வதற்கான ஒரு வாய்ப்பையும் பெற்று வருகிறோம். இருந்தாலும்கூட இன்று குறிப்பாக நாம் சொல்வோமானால் இறால் மீனை எடுத்துக் கொண்டாலும் கல் இறால் என்று சொல்கின்ற மீனை எடுத்துக் கொண்டாலும் அந்த மீன்களை அதிகப்படியாக நாம் கடலிலேயிருந்து எடுத்து வரும்போது அது எந்த அளவிற்கு அரசாங்கத்திற்கு வருவாய் தருகிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். நம்முடைய மீன் துறையினுடைய சார்பிலே ஒரு மீன் வளர்ச்சிக் கழகம் என்று சொல்கின்ற ஒரு அமைப்பு இருக்கிறது. அந்த அமைப்பின் மூலமாக எந்த அளவிற்கு இதை நாம் ஏற்றுமதி செய்கிறோம் என்று பார்த்தால், நாம் நேரடியாக இந்த மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக ஏற்றுமதி செய்கிறோமா என்று பார்த்தால் இல்லை. அதைத் தனியார்களுக்கு நாம் ஒப்பந்தத்தின் மூலமாகக் கொடுத்திருக்கிறோம். அதிலே கூட சில முறைகேடுகள் இருப்பதாகத் தோன்றுகிறது. குறிப்பாக, இரண்டு விதமான டெண்டர்கள். ஒன்று உயர்ந்த டெண்டர், இன்னொன்று குறைவான டெண்டர். இந்த இரண்டு டெண்டர்களையும் இந்த இறால் மீனை ஏற்றுமதி செய்வதற்கு, அதைப் பதப்படுத்தி பாக்கிங் செய்வதற்கான முறையை காண்ட்ராக்டர்களுக்கு விடும்போது அதிகப் படியான டெண்டரைக் கேட்டவர்களுக்கு இந்த பாக்கிங் செய்து ஏற்றுமதி செய்கின்ற டெண்டர்களைக் கொடுத்திருக்கிறார்கள். ஏற்கனவே வட மாநிலத்திலே இருந்து வருகின்ற ஒரு ஆங்கில ஏட்டிலே இந்தச் செய்தி வந்திருக்கிறது. இவற்றின் மூலமாக, பல கோடிக் கணக்கான ரூபாய்களுக்கான முறைகேடுகள் இந்தத் துறையிலே நடந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது என்ன என்று நாம் ஆய்வு நடத்த வேண்டும், சிந்திக்க வேண்டும்.



அது மட்டுமல்ல, நான் உங்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், நம்முடைய மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக அந்த மீனைப் பதப்படுத்துவதும் பாக்கிங் செய்வதும் நம்மால் நேரடியாக செய்யப்பட்டால், நம்முடைய தமிழக அரசுக்குப் பல கோடி ரூபாய் வருமானம் கிடைக்கும் என்ற முறையில் இந்தத் துறை அதை எடுத்துக் கொள்ள வேண்டுமென பணிவன்போடு மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அது மட்டுமல்ல, ஆழ்கடலிலே அதிகப்படியான மீனைப் பிடிப்பதற்கு, கடந்த 4 ஆண்டுகாலமாக, இழுவைக் கப்பல்களைப் பயன்படுத்துகிறோம். அது அதிகமான முன்னேற்றப் பாதையிலே செல்வதாகத் தோன்றவில்லை. ஆகவே, ஆழ் கடலில் மீன் பிடிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதன் மூலமாக, நம்முடைய தமிழ்நாட்டிலே, நம்முடைய மக்களுடைய தேவைகளை இந்தத் துறையின் மூலமாகப் பூர்த்தி செய்துகொள்ள முடியும்.

அதோடு ஏற்கனவே ஆய்வு நடத்துவதற்காக தமிழகத்திற்கு மத்திய அரசாங்கத்திலிருந்து வந்திருக்கிற ஒரு கப்பல் இருக்கிறது. அது பல்வேறு மாநிலங்களில் தன்னுடைய ஆய்வை நடத்தும்போது, நான் ஏற்கனவே, சில மாதங்களுக்கு முன்னால், கொச்சியிலே அந்தக் கப்பலைப் பார்க்கின்ற சந்தர்ப்பம் ஏற்பட்டது. பல மைல்களுக்குக் கீழே இருக்கிற கடல் செல்வங்களை, மீனைப் பிடிப்பதற்கும், எந்தப் பகுதியிலே மீன் இருக்கிறது என்று ஆய்வு நடத்துவதற்கும் அதில் சாத்தியக் கூறு இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே அந்த முறையில் இன்னும் இந்தச் செல்வத்தை பெருக்கிக் கொள்வதற்கு நம்முடைய தமிழகத்தின் கடலோரம் என்று சொல்கிற ஆயிரம் கிலோ மீட்டர் வரையில் இருக்கிற பகுதியில் இந்தச் செல்வத்தை நாம் எடுத்துக்கொள்வதற்கு, உரிய ஆய்வுகளை நடத்துவதற்கு அதிகப்படியான கப்பல்களை மத்திய அரசிடமிருந்து கேட்டு பெற்றுக் கொள்வதன் மூலமாக இந்தத் துறையில் வளர்ச்சியைக் கொண்டு வர முடியும்.

மீன்பிடி படகுகளைப் பொறுத்தவரையில் நாட்டுப் படகுக்காரர்களுக்கும், விசைப்படகுக்காரர்களுக்கும் பல இடங்களில் மோதல்கள் ஏற்பட்டு வருகின்றன. ஏற்கனவே தமிழக அரசு மூன்று மைல்களுக்கு அப்பால் தான் விசைப்படகுக்காரர்கள் மீன் பிடிக்க வேண்டுமென்ற நிபந்தனை கொண்டு வந்த பிறகும், அது நீதி மன்றத்திற்குள்ளே சென்று சில தடைகளை அவர்கள் ஏற்படுத்திக் கொண்டாலும், நீதிமன்றத்திலே அவர்கள் வாங்கியிருக்கிற அந்த உத்தரவை ரத்து செய்வதற்காக நம்முடைய இந்தத் துறை என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன். நம்முடைய கோட்டையிலே இருந்து பார்த்தாலே தெரியும்.

நம்முடைய சென்னையின் கடற்கரையிலே விசைப்படகுகாரர்கள் கடலோரத்தில் மீன் பிடிக்கிறார்கள். ஆகவே கட்டுமரக்காரர்கள் வல்லத்தைப் பயன்படுத்துகிறவர்கள், எங்களுடைய பகுதியிலே சொல்வார்கள் கரைமடிகாரர்கள் என்று- அப்படியென்றால் கரையிலே மீன் பிடிக்கிறவர்கள்— அப்படிப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு தருகிறவகையிலே ஏற்பாட்டைச் செய்வதன் மூலமாக இந்தத் துறையை இன்னும் அபிவிருத்தி செய்ய முடியும்.

மீன்பிடி தொழிலில் ஈடுபடுபவர்களுக்குப் பயன்படுகிற படகு, மரங்கள், வல்லம், வலை, அதிலே பயன்படுகிற வடம் என்று சொல்லப்படுகிற ரோப், இவைகள் எல்லாம் விலை உயர்ந்து இருக்கிறது. ஆகவே இவைகளை மானிய விலையிலோ, இலவசமாகவோ அவர்களுக்கு தருவதற்கு ஏற்பாட்டைச் செய்வதன் மூலமாக இந்தத் துறையை இன்னும் அபிவிருத்தி செய்ய முடியும்.

அதைப்போல பல்வேறு இடங்களில் சிறிய சிறிய மீன்பிடித் துறைமுகங்கள் வரவேண்டும். நான் இதைச் சொல்கிறபோது பெரிய அளவிலே ஆனதல்ல. அவர்கள் தங்களுடைய படகுகளை அந்த மீன்பிடித் துறைமுகத்திற்குக் கொண்டுவந்து அந்த மீன்களை சுலபமாக கரையில் கொண்டு செல்வதற்கான வாய்ப்பைத் தர வேண்டும். குறிப்பாக குமரி மாவட்டத்தில் சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகம் கட்டப்படும் என்று ஒரு கொள்கை இருக்கிறது. ஏதோ வேலைகள் ஆரம்பித்து இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. நான் அப்படிப்பட்ட துறைமுகத்தைச் சொல்லவில்லை. கேரளாவிலே சத்திகுளக்கரை என்ற பகுதியிலே எப்படி அலையை கட்டுப்படுத்தி இன்றைக்கு மீன் பிடிக்கிற படகுகளை வேகமாக கரையிலே கொண்டு வந்து மீன்களைஇறக்குவதற்கு வழிவகை செய்திருக்கிறார்களோ அதைப் போல நம்முடைய மாநிலத்தில் அதிகப்படியாக மீனவ மக்கள், மீன்பிடி படகுகள் இருக்கிற இடங்களில், இப்படிப் பட்ட ஒட்டுச்சட்டி என்று சொல்கிற சிறிய சிறிய மீன் பிடி படகுகளை கரையிலே சேர்க்கிற வகையிலே ஏற்பாட்டைச் செய்யவேண்டும். அதைச் செய்கிற நேரத்திலே தாம்பிரபரணி ஆறு சங்கமம் ஆகிற பகுதியில் ஏரணியல் பக்கத்திலே 'பேக் வாட்டர் சிஸ்டத்தை' அமலாக்கினால்தான் இந்தத் திட்டத்தைச் செய்ய முடியும். அதைப்போல குளச்சல் பகுதியில் இன்னும் மலைப்பாங்கான பகுதி இருக்கிறது. அந்தப் பகுதியிலே சிறிய மீன்பிடி துறைமுகத்தை ஏற்படுத்தினால் நீரோடியிலிருந்து மண்டைக்காடு வரையில் வருகிற......

திரு. ஜே. எஸ். இராசு : மாற்றுத்தலைவர் அவர்களே, மன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கோரம் இருக்கிறதா என்பதை கவனிக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர்** (டாக்டர் கே. சமரசம் : கோரத்திற்கு மேலே இரண்டு உறுப்பினர்கள் இருக்கிறார்கள். உட்காருங்கள்.



திரு. டி. மணி: மாற்றுத் தலைவர் அவர்களே, அந்தந்தப் பகுதியிலே சிறிய துறைமுகங்களை அமைத்துக் கொண்டால் இந்த விசைப் படகுக்காரர்கள் ஆழ்கடலில் மீன் பிடித்து கரையிலே கொண்டு வருவதற்கு சாத்தியமாகும். அதைப்போல கரையிலே கொண்டு வந்த பிறகு அதை சந்தைக்கு எடுத்துச் செல்வதற்கான வாகன வசதிகள் இன்றைக்கு தனியார்களிடத்தில் தான் இருக்கின்றன. இப்படி இருப்பதால் மீனவ மக்களுக்கு பயனில்லாமல் இருக்கிறது. ஆகவே கூட்டுறவுச் சங்கங்களுக்கு அதிகப்படியான மானியத்தைக் கொடுத்து, ஆயிரக்கணக்கான மீனவ மக்களை அந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்கள் ஆக்கினால் தான் இடைத்தரகர்கள் எடுத்துச் செல்லாத ஒரு நிலையை ஏற்படுத்த முடியும். அந்த வகையிலே வாகன வசதிகளை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தால் பயனுள்ளதாக இருக்கும். என்னுடைய பகுதியிலே 14 மைல்கள் மீனை சுமந்து சந்தைக்கு வருகிறார்கள். தேங்காய்ப்பட்டணத்திலிருந்து தொடுவட்டிக்கு வருகிறார்கள். குளச்சலிலிருந்து திருவிதான்கோட்டிற்கு வருகிறார்கள். இப்படி ஏழும், ஏழும் 14 மைல்கள் வருகிறார்கள். இன்றைக்கு தாய்மார்களுக்கு அதிகமான காரியங்களைச் செய்து வருகிற தமிழக அரசாங்கம் இந்தப் பிரச்னையை எண்ணிப் பார்க்க வேண்டும். தாய்மார்கள் சுமந்து வருகிற மீனை லாரியிலோ, வண்டியிலோ ஏற்றிச் செல்வதற்கான வசதியை செய்து தரவேண்டும். அதன் மூலமாக அவர்கள் வாழ்க்கையிலே ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

(பிற்பகல் 12-30)

அதைப்போல கடலோர சாலைகளை எடுத்துக்கொண்டால் எல்லாப் பகுதிகளிலும் கடலோரச் சாலைகள் சரியாக இருக்கிறதா என்று கேட்டால் இல்லையென்றுதான் சொல்ல முடியும். நீரோடியிலிருந்து ஏரனியல் துறை வரையில் வண்டி வாகனங்கள் செல்ல முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆக மொத்தத்தில் கடலில் கிடைக்கும் மீனை எடுத்துச் செல்வதற்கு கடலோரச் சாலைகளைச் சிறப்பாக, செம்மையாக அமைத்துத் தரவேண்டும். அது ஒன்றுதான் அவர்களுக்கு வாழ வழிவகை செய்வதால், அதைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அவர்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொடுக்கப்படவில்லை இரணியில் பகுதியில் தூத்தூர் என்ற இடத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்காத காரணத்தால், அந்தக் கடலோரப் பகுதியில் வசிக்கும் மக்கள், அந்தப் பகுதியின் பக்கத்திலே உள்ள ஏ.வி.எம். கால்வாயில் செல்லும் சாக்கடைத் தண்ணீரைப் பயன்படுத்தும் துர்பாக்கியமான சூழ்நிலை ஏற்பட்டது என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மீனவ கிராமத்தில் அவர்களுக்கு வைத்திய உதவி அறவே இல்லாமல் இருக்கிறது. மருந்துகள் இருந்தால் டாக்டர்கள் இல்லை. டாக்டர்கள் இருந்தால் மருந்துகள் இல்லை என்ற நிலை இருக்கிறது. குறிப்பாக தேங்காய்ப்பட்டிணத்தில் டாக்டர்கள் இல்லை, மருந்துகள் இல்லை. தூத் தூர் ஆகிய இடத்தில் டாக்டர்கள் இருந்தும் மருந்துகள் இல்லை என்கின்ற நிலைமை இருக்கிறது. படுக்கை வசதி இல்லாத நிலை இருக்கிறது. ஆகவே, மீனவ கிராமங்கள் என்று வருகிறபோது அவர்களுக்கு வைத்திய உதவி மிக தேவையான முக்கியமான பிரச்சினையாக இருப்பதால் அதற்கு தேவையான வகையில் ஏற்பாடுகளைச் செய்து , அந்த மக்களுக்கு பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உள்நாட்டு மீன் வளத்தைப் பொறுத்த வரையில், ஏற்கனவே பல்வேறு காரியங்களை செய்து இருக்கிறார்கள். இந்த நேரத்தில் நான் ஒன்றை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். குமரி மாவட்டத்தில் இந்தத் துறை புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்பதற்குச் சான்றாகத்தான் இங்கே தரப்பட்டுள்ள கொள்கை விளக்கக் குறிப்பு இருக்கிறது. குமரி மாவட்டத்தில் 4—5 இடங்களில் குளங்கள் இருக்கின்றன. ஆயிரக்கணக்கான ரூபாய் அளவிற்கு அவற்றில் இருந்து மீன்களைப் பிடித்து அங்கே விற்பனை செய்கிறார்கள். 1983-84-ல் சிற் றூர் நீர்த்தேக்கத்தில் தண்ணீர் திறந்து விடும்படியான நிர்பந்தம் ஏற்பட்டது. அப்போது ஆயிரக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள மீனைப் பிடித்தார்கள். ஆனால் கொள்கைக் குறிப்பிலே அது பற்றி தகவல் காணோம். பேச்சிப்பாறை நீர்த்தேக்கத்திலே ஒரு மீன் 40 கிலோ எடை இருக்கும் அளவிற்கு உள்ள மீன்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட வகையில் மிக வேகமாக வளர்ந்து வரும் இந்த மீனளத்துறை கட்லா, மிருகா போன்ற பல்வேறு மீன்களை தண்ணீர் வெள்ளம்போல் வராத பகுதியில். தண்ணீர் வற்றாமல் ஆண்டுதோறும் இருக்கும் குளங்களில் வளர்ப்பதால், நல்ல வருமானம் கிடைக்கும். எந்த அளவிற்கு கிராமப் பகுதியில் இந்த மீனளத்தை விஸ்தரிக்க முடியுமோ அந்த அளவிற்கு விஸ்தரித்தால்தான், மீனவ மக்களின் வருமானத்தைப் பெருக்கவும், அவர்களுடைய வாழ்க்கைத் தேவையைப் பூர்த்தி செய்கிற வகையிலும், அவர்களுடைய வாழ்க்கையை மேம்படுத்துகிற வகையிலும் செய்ய முடியும். ஆகவே, அந்த ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு சமாசாரத்தையும் நான் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். குரும்பனை நீரோடை பகுதியில் இருக்கும் ஆயிரக்கணக்கான படகுகள் அங்கே மீன்பிடி துறைமுகம் இல்லாத காரணத்தால், கொச்சியில், கண்ணனூரில், தலைச்சேரியில், மற்றும் சில பகுதிகளில் சென்று விடுகின்றன. அதன் காரணமாக அவர்கள் பிடித்த மீன்கள் அனைத்தும் கேரளாவிற்குச் சென்று விடுகின்றன. அதை வாங்கிக்கொள்கிற முதலாளிகளிடத்தில் அவர்கள் அடிமைகளைப்போல் நிற்கவேண்டியிருக்கிறது. அவர்கள் நேரடியாக தாங்களே அந்தமீன்களை விற்க முடியாத காரணத்தால், அந்த முதலாளிகள் பணம் தரும்



வரையில் காத்துக் கிடக்கவேண்டியிருக்கிறது. சில நேரங்களில் 7—8 நாட்கள் கழித்துத்தான் பணம் தருகிறார்கள். சில நேரங்களில் ஒரு மாதம் கூட ஆகிறது. அந்த மீன்களை அவர்கள் ஆக்ஷன் போட்டு விலை நிர்ணயிப்பதும் இல்லை. ஆகவே, அந்த மீனவர்களுடைய உழைப்புக்கு ஏற்ற வகையில், அவர்கள் பிடித்த மீன் அளவிற்கு ஏற்ற வகையில் பணம் கிடைப்பது இல்லை. நம்முடைய மாநிலத்தில் உள்ள 1,000 படகுகளில் இருந்து கிடைக்கின்ற மீன்கள் அங்கே செல்வ தோடு மட்டுமல்லாமல் அந்தப் படகுகளில் வே லசெய்கிற சுமார் 5,000 பேருடைய வருமானம் அடுத்த மாநிலத்திற்குச் செல்கிறது என்றும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, அந்தப் பகுதியில் ஒரு போட்-ஜெட்டி கட்ட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படி ஒரு போட்-ஜெட்டி அமைத்துக் கொடுப்பதன் மூலம் தான் அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க முடியும் என்பதோடு மட்டுமல்லாமல், அவர்களுடைய வாழ்க்கையிலே ஒரு பெரிய மாற்றத்தையும் ஏற்படுத்த முடியும், அவர்கள் பிடிக்கிற மீன் நம் மாநிலத்திற்கும் கிடைக்கும் நிலை ஏற்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்திலே ஒரு நிலை முன்னாலே இருந்தது. ஒரு பகுதியில் மீனவர் படகுகளும், மற்றொரு பகுதியில் விவேகானந்தா ராக்கிற்கு செல்வதற்காக உள்ள படகுகளும் இருந்தது. அவர்களிடையே சில கோளாறு ஏற்பட்டது. அதன் காரணமாக பல பிரச்னைகள் எழுந்தன. அப்போது, விவேகானந்தா ராக்கிற்குச் செல்வதற்கு பாலம் கட்டப்படும் என்று சொல்லப்பட்டது. ஆனால் இன்று வரையில் அது கட்டப்படவில்லை. அந்தப் பாலத்தைக் கட்டுவதன் மூலம் தான் அந்தப் படகுக்காரர்களிடையே ஒரு இணக்கமான சூழ்நிலை உருவாகும். அவர்களுக்கு இடையே உள்ள மோதலைத் தடுக்க முடியும். ஆகவே, அந்தத் தொழிலாளர்களிடையே ஒரு நிரந்தரமான அமைதி சூழ்நிலையை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறி, என் உரையை முடிக்கிறேன்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு மாற்றுத் தலைவ ரவர்களே, இந்த மீனளத்துறை மானியக் கோரிக்கையை நம் முடைய மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் அவர்கள் சமர்ப் பித்திருக்கிறார்கள். அதிலே எங்கள் கட்சியின் சார்பாக நான் ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

நம்முடைய தமிழ் நாட்டு கடற்கரைப் பகுதி ஆயிரம் கிலோ மீட்டர் எல்லை என்ற அளவுக்கு இருக்கிறது. அது தவிர தமிழ் நாடு முழுவதும் 3.69 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவு கொண்ட பகுதி இன்றையதினம் இந்த மீனளத் துறையில் பயன் படுத்தக்கூடிய அளவுக்கு இருக்கிறது என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 6 வது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் சுமார் 5.10 இலட்சம் டன் அளவுக்கு மீன் உற்பத்திச் செய்ய வேண்டுமென்ற திட்டத்தை குறியீடாக வைத்துள்ளார்கள். நம்முடைய

தமிழ் நாட்டு மக்கள் தொகை கணக்கை எடுத்துக் கொண்டால்
5 கோடி பேர் இருக்கிறார்கள். நம்முடைய குறிக்கோள்,
குறியீடு இவை அனைத்தையும் நம்முடைய மக்கள் தொகைக்
கணக்கோடு ஒப்பிட்டுப் பார்த்தால், புரதச் சத்து நிறைந்துள்ள
ஒரு சத்துணவான மீன் வளம் நமக்கு மிகவும் குறைவாகவே
இருக்கிறது என்பது தெரியும். இதிலே நாம் மிகவும் பின்
தங்கியிருக்கிறோம். என்பதை ஆரம்பத்திலேயே குறிப்பிட
விரும்புகிறேன்.

நாம் நிர்ணயித்திருக்கிற குறியீடு சுமார் 5 இலட்சம் டன்
நம்முடைய மாநிலத் தேவை ஒருபுறமிருக்க, இந்திய நாட்டின்
தேவையையும் நாம் பார்க்க வேண்டியிருக்கிறது. அதாவது
இந்திய நாட்டுத் தேவையான அந்நியச் செலாவணியை
ஈட்டித்தரக்கூடிய இறால் போன்ற மீன்களைப் பிடித்து ஏற்று
மதி செய்வதற்கான கடமையையும் நிறைவேற்றுகின்ற பொறுப்பு
இன்னொருபுறம் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்பு
கிறேன்.

இறால் மீனை உற்பத்திச் செய்வது என்பது நமக்குச் சாத்திய
மானதாக இல்லை. ஏனென்றால் ஆழ்கடலிலே சென்று அதைப்
பிடிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். மீன்
துறையைப் பொறுத்த வரையில் மீன் ஒரு சிறந்த சத்துணவு
என்பதால் இந்தத் துறையிலே நாம் அதிகக் கவனம் செலுத்த
வேண்டியவர்களாக இருக்கிறோம். இன்றைய தினம் இந்தத்
துறையில் தமிழ் நாட்டில் சுமார் 3 இலட்சம் மீனைத் தொழி
லாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் நாட்டுப் படகுகள்,
விசைப்படகுகள் மூலம் கடலிலே சென்று மீன் பிடித்தும், பெரிய
ஏரிகள், குளம் குட்டைகளில் மீன் பிடித்தும் தங்களுடைய
வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய
தொழிலுக்கு நல்லவிதமான வசதிகளைச் செய்து கொடுப்பதன்
மூலமாக அவர்கள் வாழ்க்கை மறுமலர்ச்சியடையச் செய்யும்
பொறுப்பு இந்த அரசுக்கு இருக்கிறது.

நாட்டுப் படகிலே சென்று மீன்பிடிக்கும் நாட்டுப்படகு மீன்
பிடித்தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கடலிலே
சென்று ஒரு குறிப்பிட்ட எல்லை அளவிலே சென்று மீன் பிடிப்
பதற்கான வாய்ப்பைத்தான் பெற முடியும். அந்த எல்லையை
நாம் 3 மைல் தூரம் என்று வைத்திருக்கிறோம்.
அந்த எல்லைக்குள்ளே இன்றையதினம் விசைப்படகு ஆனால்
களும் மீன் பிடித்து வருவதால் நாட்டுப் படகு மீனவர்
வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்படுகிறது. விசைப்படகு மீனவர்களின்
களுக்கும் நாட்டுப்படகு மீனவர்களுக்கும் இந்தத் மீனவர்
ஒரு பெரிய போட்டி இருந்து கொண்டிருக்கிறது. தொழிலிலே
தமிழ் நாட்டில் பல்வேறு பகுதிகளில் அதனால்
தகராறுகள் ஏற்படுகின்றன. சென்னையிலும், அவ்வப்போது பெரிய
இராமநாதபுரம் போன்ற புதுக்கோட்டை,
மாவட்டங்களிலும் கடற்கரைப்



பகுதிகளில் பெரிய சர்ச்சைகள் ஏற்பட்டு பல்வேறு கொலைகள்
நடைபெறக்கூடிய அளவுக்கு போயிருக்கிறது. என்பதை இந்த
நேரத்தில் நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர
விரும்புகிறேன்.

அரசாங்கம் இந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்காக ஒரு குறிப்
பிட்ட அளவுக்கு எல்லையை நிர்ணயித்து, ஒழுங்குபடுத்த நட
வடிக்கை எடுத்தாலும், இன்றையதினம் அந்த எல்லை வரை
முறையை சரியான முறையில் அமுல்படுத்தி அதற்கான நட
வடிக்கை எடுக்க முடியவில்லை. அதனால் நாட்டுப் படகு
மீனவர்களுடைய வாழ்க்கை சீர்குலைந்துள்ளது. அவர்கள்
தொழில் செய்வது சிரமமாக இருக்கிறது.

(பிற்பகல் 12-40)

இந்தப் பிரச்னை சம்பந்தமாக உயர்நீதிமன்றத்தில் ஒரு
தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் அதை அமுல்
படுத்த முடியாமல் இருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்பு
கிறேன். ஆகவே, இந்தப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு, அரசு.
இந்த நாட்டுப் படகு மீனவர்களுடைய நலன்களைப் பாதுகாப்
பதற்கு, அவர்களுடைய வாழ்க்கையைப் பாதுகாப்பதற்கு கடுமை
யான நடவடிக்கைகளை எடுக்க முன்வர வேண்டுமென்று இந்தச்
சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இது ஒருபுறமிருக்க, அதே நரத்தில் இன்றையதினம்,
இந்தியாவில் இருக்கின்ற ஏகபோக முதலாளிகள், டாட்டா,
பிர்லா போன்றவர்கள், இதிலே ஈடுபடக்கூடிய நிலைமை ஏற்
பட்டிருக்கிறது. இந்தோ பிரிட்டானியா பிஸ்கட்ஸ் கம்பெனி
இருக்கிறது. அவாகள கூட, இன்றையத்தினம் விசைப் படகு
களையும், ட்ராலர்களையும் அதாவது பெரிய இயந்திரக் கப்பல்
களையும் பயன்படுத்தி மீன் பிடிக்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது.
இந்த சிறு தொழிலில் அந்தப் பெரிய தொழிலதிபர்கள் ஈடு
படுவது, அந்தச் சிறு மீனவர்களுடைய தொழிலை அழிப்பது
போல் ஆகும். இன்றையத்தினம் கிராமப்புறங்களில் இருக்கின்ற,
நாட்டுப் படகுகளை வைத்திருக்கக் கூடிய தொழிலாளர்களுடன்,
இந்த மாதிரி ஏகபோக முதலாளிகள், இந்தத் தொழில்
போட்டியிடுவதால், இந்த ஏழை மீனவத் தொழிலாளர்களு
டைய வாழ்க்கைப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை அரசினு
டைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆகவே
இந்த மாதிரியான நிலைமை இன்றையத்தினம் இருக்கிறது.
இந்த நிலைமைகளிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்கான
சரியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்பதைப்பற்றி
யும் நான் சுட்டிக்காட்டுவதற்கு விரும்புகிறேன்.

அடுத்து, நம்முடைய அரசாங்கம், இன்றையதினம், மீனவர்
களுடைய நிலையை மேம்படுத்துவதற்காக, அவர்களை பாது
காப்பதற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள்.
அதிலே மீனவர்களுடைய துயர் துடைப்புத் திட்டம் என்ற அடிப்

படையல், கப்பல்ல் மீன் பிடிக்கச் செல்லக் கூடிய நிலைமையில், அவர்கள் இறந்துவிட்டால், அவர்களுடைய குடும்பத்திற்கு ரூபாய் 5,000 நஷ்ட ஈடாகக் கொடுக்கப்படுவதாகவும், முதலில் ரூபாய் 2,000மும் மீதமுள்ள தொகையை 30 தவணைகளில் ரூபாய் 100 வீதமும் கொடுப்பது என்கிற திட்டத்தை இன்றையத் தினம் அறிவித்து, நிறைவேற்றி வருவதாகக் குறிப்பிட்டார்கள். இன்றையதினம் ரூபாய் 5,000 கொடுப்பது என்பது; அதனு டைய மதிப்பு என்ன என்பதை அறிவோம். அதை ரூபாய் 10,000 ஆக உயர்த்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டும். அதை இந்த மானியக் கோரிக்கையிலே ஏற்று, அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்கள் என்று நம்புகிறேன்.

மத்திய அரசாங்கம் மீனவர் விபத்து காப்புறுதித் திட்டத்தை அமல் படுத்தவேண்டுமென்று அறிவித்திருக்கிறார்கள். கொள்கை அறிக்கையிலே சுட்டிக் காட்டியிருப்பது இந்தக் 1,03,839 மீனவர்களிலே 37,666 மீனவர்கள் தான் தமிழகத்தில் இந்தத் திட்டத்திலே சேர்ந்துள்ளனவீர் என்று இதுவரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்றையதினம் அறிக்கையிலே எண்ணிக்கை சரியாக காட்டப்படவில்லை என்றாலும், இருக்கின்ற களுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது என்றாலும், மீனவர் இருக்கின்ற அந்த ஒரு இலட்சம் மீனவர்களைக் கூட, காட்டி யாக இந்தத் திட்டத்தில் கொண்டுவர முடியாத நிலைமை முழுமை பது மிகவும் வருந்தத்தக்கது. அனைத்து மீனவர்களையும், இருப் விபத்து காப்புறுதித் திட்டத்தில் கொண்டுவருவதற்கான ஏற்பாடு இந்த களை அரசு மேற்கொண்டு அதை முழுமையாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மீனவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படக் கூடிய நிலைமை சம்பந்தமாக அரசாங்கம் இந்த அறிக்கையிலே சுட்டிக் காட்டி இருக்கிறார்கள். 254 கடல் மீனவர் சங்கங்களும், 198 உள்நாட்டு மீனவ கூட்டுறவுச் சங்கங்களும் இருக்கின்றன. பெரும்பாலும் கூட்டுறவுச் சங்கங்களின் நிதி நிலைமை திருப்தி கரமாக இல்லை. அப்படியென்றால், அந்த மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் எப்படி செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன் என்பது அரசாங்கத்திற்குத் தெரியும். இன்றைய தினம் சரியாக செயல்பட முடியாத நிலைமை இருக்கிறது என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். அந்த நிலைமையை மாற்றுவதற்கு அப்படிப் பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு, இன்றைய தினம், அரசாங் கமே பங்குத் தொகை அல்லது மான்யம் உதவிகளைக் கொடுத்து, இந்தச் சங்கங்களை செயல்படச் செய்ய வேண்டும். வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களைப் பற்றி நாம் சொல்கிறோம். வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் அனைவரும் இந்த மீனவத் தொழிலாளர்கள் தான். அதள பாதாளத்தில் இருக்கக் கூடியவர்கள் இந்த மீனவர்கள். அவர்களுடைய வாழ்க்கை எப்படி இருக்கிறது என்றால், உணவை சமைத்துச் சாப்பிடக் கூட முடியாத நிலைமை இருக்கிறது. கடலில் கிடைக்கக் கூடிய



மீன் குஞ்சுகளை அவர்கள் பொறித்து அதை ஓரளவிற்கு, உணவாகச் சாப்பிடுகின்ற நிலைமையில் அவர்களுடைய வாழ்க்கையை அமைத்திருக்கிறார்கள். இந்த மீனவர்களின் பாதுகாப்பிற்காக அமைக்கப்பட்டிருக்கக்கூடிய இந்தக் கூட்டுற வுச் சங்கங்கள் செயல்படுவதற்காக தேவையான நிதியுதவியை, தங்குதடையின்றி முழுமையாக கொடுக்க வேண்டுமென்ற பொறுப்பை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆகவே, அந்த முறையிலே அதைப் பாதுகாக்க முடியும். அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மீன் 5 இலட்சம் டன் உற்பத்தி செய்ய வேண்டும் என்பது குறியீடு. ஆனால் விற்பனை நிலையங்கள் தமிழ்நாட் டிலே மொத்தமாக, இருப்பதோ 103, சென்னை நகரத்திலே இருப்பது 59, மற்ற பல்வேறு மாவட்டங்களில் இருப்பது 54. அப்படியானால், தமிழ்நாட்டிலே மீன் வாங்கிச் சாப்பிடுகின்ற மக்கள் குறைவாக இருக்கிறார்களா? அதிகமான அளவிற்கு நாளுக்குநாள் இன்றையதினம் இது சத்துள்ள உணவு என்ற முறையில், அதை வாங்கிச் சாப்பிடக்கூடிய மக்கள், அதிகமாகிக் கொண்டு வருகிறார்கள். ஆகவே, அதிகமான அளவிலே, எல்லா நகரங்களிலும், குறைந்தபட்சம் இந்த ஆண்டிலேயாவது, அனைத்து முனிசிபல் நகரங்களிலேயும் மீன் விற்பனை நிலையங் களை துவக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதே சமயத்தில் விற்பனைக் கணக்கைப் பார்த்தால் ஆச்சரியம். அதுவும் இந்த ஆண்டில் 756 டன்தான் விற்பனை செய்யப்பட்டி இருக்கிறது. ஆகவே, இன்றையதினம் இதைப் பல மடங்கு அதிகப்படுத்தி, விற்பனைச் செய்வதற்கான முறையிலே, அனைத்து நகரங்களிலும், விற்பனை நிலையங்களை ஏற்படுத்தச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக நான் கூறவிரும்புவது, நல்ல விலை உயர்ந்த முத்துச்சிப்பிகளை இன்றையதினம் ஆழ்கடலிலே இருந்து எடுத்து அதை வெளியிலே எடுத்துக் கொண்டு வரக்கூடிய இந்தப் பணியைச் செய்யக் கூடிய தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அந்தத் தொழிலில் ஈடுபடக்கூடிய தொழிலாளர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் குறைந்து வருகிறது. விலை உயர்ந்த, விலை மதிக்க முடியாத அந்த முத்துச்சிப்பிகளை எடுப்பதற் காகவும், அந்தத் தொழிலைப் பாதுகாப்பதற்கான முறையிலே அரசாங்கம் விசேஷப் பயிற்சிகளை அளிப்பதோடு மட்டுமல்லாமல், அந்தக் குடும்பங்களைப் பாதுகாத்து, இந்தத் தொழிலில் அவர் களை ஈடுபடுத்த வேண்டியது, அந்தப் பணியில் ஈடுபடுத்த வேண்டியது அரசினுடைய கடமை என்ற முறையில், அதை நிறைவேற்றுவதற்கு விசேஷ நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இந்தத் துறைக்கு என்று ஒதுக்கி இருக்கக்கூடிய தொகையானது மிகவும் குறைவு. வெறும 5 கோடியே 80 இலட்சத்து 85 ஆயிரம் என்று இந்தக் குறைந்த தொகையை

வைத்துக் கொண்டு எப்படி இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள 3 இலட்சம் தொழிலாளர்களை பாதுகாக்க முடியும். தமிழ்நாட்டிலே உள்ள மக்களுக்கு சத்துள்ள உணவை உற்பத்தி செய்து தரக்கூடிய, கொடுக்கக்கூடிய இந்த மீனளத்துறை எவ்வாறு இந்தத் தொகையை வைத்து அதைச் செய்ய முடியும். என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. ஆகவே, அந்த முறையில் அதிகமான அளவிலே நிதி ஒதுக்கம் செய்து, இந்த மீன் வளத்தைப் பாதுகாக்கவேண்டும், இந்தத் துறையிலே ஈடுபட்டு இருக்கின்ற 3 இலட்சத்திற்கும் அதிகமாக உள்ள தொழிலாளர்களையும் அவர்களுடைய குடும்பத்தையும் பாதுகாக்கவேண்டும் என்றும் கேட்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

திரு. பி. முகமது இஸ்மாயில் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மீன் வளத்துறை மானியக் கோரிக்கையின் மீது நடைபெறுகின்ற விவாதத்தில் பங்குபெற்று, மீனவ மக்களுடைய சில கோரிக்கைகளை அல்லது தேவைகளை அரசின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகின்றேன்.

தமிழ்நாடு மீன் வளத்திலே இந்தியாவிலேயே மூன்றாவது இடம் வகிக்கின்றது என்று இங்கே குறிப்பிட்டு இருக்கிறார்கள். மகாராஷ்டிர மாநிலம், அதற்கு அடுத்து கேரள மாநிலம், அதற்கு அடுத்தபடியாக நம்முடைய தமிழ்நாடு இருக்கின்றது என்று சொல்லப்பட்டு இருக்கிறது. ஏறக்குறைய இந்த நாடு ஒட்டு மொத்தமாக உற்பத்தி செய்கின்ற மீன் அளவில் 15 சதவீதம் தான் உற்பத்தி செய்து கொண்டு இருக்கிறோம். மேலும் இந்த உற்பத்தியை அதிகரிப்பதற்கு மேலும் ஆக்கபூர்வமான நல்ல திட்டங்களை அமுல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்காக நான் என்னுடைய பாராட்டைத் தெரிவிக்கிறேன்.

சாதாரணமாக உற்பத்தி செய்யப்படுகின்ற இந்த மீன் அளவில் 70 சதவீதத்திற்கு அதிகமாக நாட்டுப் படகுகளை வைத்திருக்கின்றவர்களும், கட்டுமரம் வைத்திருக்கின்றவர்களும் வள்ளங்கள் வைத்திருக்கின்றவர்களும். இந்த மீன்பிடிப்புத் தொழில் மூலமாகக் கொண்டு வருகிறார்கள். அவர்கள் உபயோகப்படுத்துகின்ற கருவிகளை நவீனப்படுத்துவதற்காக, என்ஜின்கள் பொருத்துவதற்காக அரசு இன்றைய தினம் நல்ல முறையில் அவர்களுக்கு உதவிசெய்து கொண்டு வருகின்றது. இதற்காக அரசாங்கம் கடன் வழங்குகின்ற திட்டத்தை அமுலாக்கி வருகிறது. அதற்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன். 80 சதவீதம் கடனாகவும், 20 சதவீதம் மானியமாகவும் வழங்குகின்ற நல்ல திட்டத்தை அரசு அமுல்படுத்தியிருக்கிறது. அதே வேளையிலே விசைப் படகுகளை வழங்குகின்ற திட்டத்தில் இப்போது நீங்கள் ஏற்படுத்தியிருக்கிற மாற்றத்திற்காக இந்த அரசை நான் நிச்சயமாக பாராட்டுகிறேன். இதற்கு முன்னாலே எல்லாம் விசைப் படகுகள் தனியார்களுக்கு அல்லது 5 நபர்களை ஒன்றாக இணைத்து வைத்து, ரெஜிஸ்ட்ரேசன் செய்து,



விண்ணப்பம் தருவதாக இருந்தால் அவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிலையை மாற்றி, அவைகள் முழுமையாக கூட்டுறவு நிறுவனங்களுக்கு மட்டும்தான் அளிக்கப்பட வேண்டும் என்ற புதிய மாற்றத்தை இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது. இதை நான் பாராட்டுகிறேன்.

(பிற்பகல் 12-50)

எனக்கு முன்னர் பேசிய கம்யூனிஸ்ட் கட்சி தோழர் கருப்பையா அவர்களும் அதைச் சொன்னார்கள். சிலர் தனி நபர்களாக இருப்பதோடு மட்டுமல்லாமல் தொழிலில் எத்தகைய ஈடுபாடும் இல்லாத சில தனவந்தர்கள், தங்களுடைய பண வசதியை வைத்துக் கொண்டு, இது போன்ற படகுகளை வாங்கி, வேலை ஆட்களை அமர்த்தி, அதனால் வருகிற பணத்தை அவர்களே அனுபவிக்கிற நிலைமை உருவாகியிருக்கிறது என்று சுட்டிக் காட்டினார்கள். அந்த நிலையை மாற்றுகின்ற வகையில் அரசு மேற்கொண்டிருக்கிற இம்மாதிரியான திட்டத்தை வரவேற்கிற அதே நேரத்தில், அதனால் வருகிற ஆதாயம் பூராவும் மீனவத் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிற அத்தனை பேருக்கும் பகிர்ந்து அளிக்கின்ற வகையில், இந்தத் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் மீனவத் தொழிலாளர்கள் அனைவரையும், இந்தக் கூட்டுறவு இயக்கங்களில் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அநேகமாக இருக்கிற தொழிலாளர்களில் ஒரு சிறிய பகுதியினர் மட்டுமே கூட்டுறவுச் சங்கங்களில் தங்களை இணைத்துக் கொண்டு அந்தப் பலனை அனுபவித்துக் கொண்டு வருகிறார்கள். எஞ்சி இருக்கிறவர்களுக்கு, கூட்டுறவுத் துறையால் ஏற்படுகின்ற நன்மைகளை விளக்கி கூறி, அவர்களும் அந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் தங்களை உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்கிறபோது, மின்விசைப் படகுகளால் வருகிற ஆதாயம், எல்லோரும் பகிர்ந்து பெறுகிற ஒரு நல்ல நிலை உருவாகும் என்பதைச் சுட்டிக் காட்டி, கூட்டுறவுத் துறைக்கு அதிகமான ஆக்கம் ஏற்படுத்துவதற்கான ஒரு சூழ்நிலையை மீனளத் துறை, மீனவப் பெருங்குடி மக்கள் மத்தியில் பரப்ப வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் தொழிலிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கும் நலிந்தவர்களுக்கு கணிசமான உதவிகளைச் செய்ய அரசாங்கம் முன் வந்திருக்கிறது. அவர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டத்தை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். சென்ற ஆண்டு இதற்காக 100 லட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்திருப்பதாக கொள்கை விளக்கக் குறிப்பேடு சுட்டிக் காட்டுகிறது. வருகிற நிதி ஆண்டிலேயும் அதேபோல 100 லட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்திருப்ப

தாகத் தெரிகிறது. அதை வைத்துக் கொண்டு நிச்சயமாக
மீனவுப் பெருங்குடி மக்களுக்கு அதிகமான நன்மைகளை நாம்
செய்து விட முடியாது என்ற கருத்தை உடையவன்
நான்.

நான் இன்றைக்கு அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்வது
மீனவர்கள் அநேகமாக கடலோரப் பகுதிகளில் குடிசைகளை
எழுப்பிக் கொண்டு, குறுகிய வட்டத்தில் மட்டும் தங்கியிருக்கி
றார்கள். அவர்கள் செய்கிற தொழில் அனேகமாக கடலையே
நம்பியிருக்கிற காரணத்தால், அவர்களுடைய மீன் பிடித்
தொழிலுக்காகப் பயன்படுத்துகின்ற கருவிகளை கடற்புறத்தி
லேயே வைத்து காப்பாற்ற வேண்டிய நிலை இருக்கிற காரணத்
தால், வேறு பகுதிகளில் அவர்களை குடி அமர்த்துவதற்கு வழி
இல்லாத நிலையில், சிறிய கடற்புற பரப்புகளை மட்டும்
வைத்துக் கொண்டு, அவர்கள் குடி அமர்த்திக் கொண்டிருக்
கிறார்கள்.

நாம் இப்போது மேற்கொண்டிருக்கிற திட்டங்களை அமல்
படுத்துவதாக இருந்தால், பரவலாக வீடுகளை அல்லது
சிறிய குடிசைகளை அவர்களுக்கு அமைத்துத் தரும்போது
நிச்சயமாக அந்தப் பகுதிகளில் அவர்களை குடி அமர்த்த
முடியாது. எனவே நான் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்வது
சென்னை போன்ற பெரு நகரங்களில் எல்லாம், உயர்வாக
கட்டியிருக்கிற சில அடுக்கு மாடிக் கட்டிடங்களைப் போல
சிறு சிறு வசதி படைத்த வீடுகளை, அடுக்கு மாடிக் கட்டிடங்
களாக ஏற்படுத்தி தருவதோடு, மீனவ மக்கள் அதிகமாக
வசிக்கிற பகுதியில் அத்தகைய கட்டிடங்களைக் கட்டி
தருவதால் மட்டும்தான், இந்தப் பிரச்னைக்கு நாம் தீர்வு
காண முடியும் என்பதைச் சொல்லி, இப்போது இருக்கிற
நிலையில் குறுகிய வட்டத்திற்குள் அவர்கள் அதிகமாக வாழ்கிற
காரணத்தால், சுகாதாரக் கேடு நிறைந்த சூழ்நிலையில் வாழ்ந்து
நோய்களை அவர்களாகவே வரவழைத்துக் கொள்கிற
சூழ்நிலை இருப்பதை மாற்றி அமைப்பதற்கு இந்த் கருத்தை
அரசாங்கம் தீவிரமாகப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று
நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இவர்களுக்கு இன்ஷூரன்ஸ் திட்டம் அமல்
நடத்தப் போகிறதாக சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.
களுக்கு மிக அதிகமாக நன்மைகளை தருகிற திட்டமாக இன்ஷீ
யூரன்ஸ் திட்டம் இருப்பதே பெரும்பான்மையான மீனவ குடி
மக்களுக்கு தெரியாமல் இருக்கிறது. அவர்கள் வெறும்
3 ரூபாயை மட்டும் தந்தால், உயிரிழப்பு ஏற்படுகிற போது
வாரிசுதாரர்களுக்கு 15 ஆயிரம் வருகிற ஒரு சூழ்நிலை
இருக்கிறது. வெறும் 3 ரூபாயை அவர்கள் தரவேண்டும்.
3 ரூபாயை இந்த மாநில சர்க்கார் தருகிறது. எஞ்சி இருக்கிற
6 ரூபாயை மத்திய சர்க்கார் தருகிற திட்டத்தை நாம் அமல்
நடத்துவதற்கு முற்பட்டுக் கொண்டிருக்கிறோம்,



ஆனால் இப்படிப்பட்ட ஒரு திட்டம் இருப்பதாகவோ அதில் அவர்களுக்கு அதிகமான நன்மைகள் ஏற்படுவதோ பெரும்பான்மையான மக்களுக்குத் தெரியாமல் இருக்கிற காரணத்தால், மீன் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் அதை அவர்கள் மத்தியில் பரப்புவதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று முக்கியமாக நான் கூறவிரும்புவது, மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறவர்கள் சாதாரணமாக சேமிப்பு மனப்பான்மையே இல்லாதவர்கள். நான், மீனவர்கள் அதிகமாக வாழ்ந்து வருகிற பகுதியில் இருந்து வருகிற காரணத்தால், அவர்களுடைய வாழ்க்கைத் தரம் எனக்கு நன்றாகத் தெரியும். சில மாதங்களில் அதிகமான மீன்கள் அவர்களுக்கு கிடைக்கிறது. அதிகமான வருவாயை அவர்களால் ஈட்ட முடிகிறது. அப்படி அதிகமான வருவாயை ஈட்டுகிற போது, அதையும் செலவழிக்கின்ற ஒரு பழக்கம்தான் அவர்கள் மத்தியில் நான் பார்க்க முடிகிறது. எனவே, அவர்கள் மத்தியில் சேமிப்பு உணர்ச்சியை ஏற்படுத்துவதற்கு, நீங்கள் இப்போது கொண்டு வந்திருக்கக்கூடிய ஒரு திட்டம் ஓரளவிற்கு பயன் அளிக்கும். அதையே சற்று ஆழமாக பயன் உள்ள முறையில் ஆக்குவதற்கு அரசாங்கம் கவனம் செலுத்துமா என்று நான் அறிய விரும்புகிறேன் ? இப்போது மீன் பிடிப்பு அதிகமாகக் கிடைக்கும் 9 மாதங்களில் மாதம் ஒன்றுக்கு 10 ரூபாய் வீதம் அவர்கள் தரவேண்டும் என்றும், அப்படி 9 மாதங்களில் அவர்கள் தருகிற பணம் 90 ரூபாய் வருகிறபோது, அரசு தன்னுடைய முதலீடாக ரூ. 90 தந்து மொத்தம் 180 ரூபாயை வைத்துக் கொண்டு, எஞ்சியிருக்கின்ற அதிக வருவாய் அவர்களுக்கு வராத 3 மாதங்களிலே, அதை மாதம் 60 ரூபாயாக பகிர்ந்து அளிப்பதான திட்டத்தை நீங்கள் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். நான் அரசாங்கத்துக்குச் சொல்ல ஆசைப்படுவது, மீனவர்கள் அதிகமான வருமானத்தைப் பெறுகிறபோது இந்த 10 ரூபாய் மட்டும் அல்ல, 20 ரூபாயோ 25 ரூபாயோ மாதந்தோறும் நீங்கள் தரவேண்டுமென்று சொன்னால்கூட அவர்கள் தருவதற்குத் தயாராக இருக்கிறார்கள். அதிகமாக அவர்கள் தருகிற பணத்திற்கு ஈடாக இந்த அரசாங்கம் பணம் தருவதாக இருந்தால் மாதம் ஒன்றுக்கு இப்போது 60 ரூபாய் மட்டும் தருகிற திட்டத்தை அதிகமாகப் பணம் தருகிற திட்டமாக உயர்த்த முடியும். அவர்களுக்கு அதிகமான வசதிகளை நீங்கள் ஈட்ட முடியும் என்பதை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்து அதை தீவிரமாகப் பரிசீலனை செய்து அமல் நடத்துவதற்கு முயற்சி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக ஒன்று கூற விரும்புகிறேன். செங்கற்பட்டு மாவட்டத்திலே மதுராந்தகம் ஏரியில் கிடைக்கிற மீனை அங்கே இருக்கிற மீன் பிடிக்கிறவர்கள் இரண்டு பங்கு பகுதியாகவும் விவசாயிகள் ஒரு பங்கு ஆகவும் இதுவரையில் பிரித்து கொண்டு வருகிற ஒரு திட்டம் அமல் நடத்தப்பட்ட

தாக நான் கேள்விப்பட்டேன். ஆனால் அண்மையில் அமைச்சர்
அவர்கள் அங்கே சென்றிருந்தபோது இந்த நிலையில் சிறிது
மாற்றம் ஏற்படுத்தியதாகவும் அதற்கு எதிராக அங்குள்ள
மக்கள் அந்தப் பலனை இதுவரை அனுபவித்து வந்துள்ள
வர்கள் உங்கள் கவனத்திற்கு சில மனுக்களைத் தந்தி
ருப்பதாகவும் நான் அறிகிறேன். ஏற்கனவே அவர்கள்
அந்த உரிமையை நீதிமன்றங்களுக்கு சென்று நிலைநாட்டி
யிருக்கிறார்கள். ஏறத்தாழ 67-இல் அதற்கான உருவம் தந்து
அங்குள்ள விவசாயிகள், மீன் பிடிக்கிறவர்கள் பெறுகிற மீனை
3 கூறுகளாக வைத்து விவசாயிகளுக்கு ஒரு பங்கும் மீனவர்
களுக்கு 2 பங்கும் பங்கிட்டுக் கொள்ள வேண்டுமென்ற
ஒரு நிலை அவர்கள் மத்தியில் இருந்து வந்ததாக சொல்கிறார்கள்.
அது உண்மையாக இருந்தால் அத்தகைய நிலை நீடித்து
இருப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்யவேண்டு
மென்று கேட்டுக்கொண்டு பல திட்டங்களை இந்த அரசு
வைத்திருந்தாலும் அந்தத் திட்டங்களை அமல் நடத்துவதில்
காலகேடு, கால சுணக்கம் ஏற்படுகிறது- எனக்கு முன்னாலே
பேசிய நண்பர் சுட்டிக்காட்டியதைப் போல மீன்பிடி துறை
முகங்கள் கட்டுவது பற்றிப் பலகாலமாக பேசப்படுகிறது.
குறிப்பாக சின்னமுட்டம் திட்டம் பலகாலமாக பேசப்படு
கிறது. இதுவரையில் அது உருப்பெற்றதாகத் தெரிய
வில்லை. அதைப் போலவே சிறிய சிறிய துறைமுகங்கள் ஏற்
படுவதற்கான திட்டம் பலகாலமாக பேசப்பட்டு வருகிறது. அவை
கள் துரிதமாக செயல்படுவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகள்
எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். சிறிய
துறைமுகங்கள் அல்லது இறங்கு துறைகள், தங்கு துறைகள்
அமைக்க நம்முடைய மாநில அரசு சில கொள்கைகளுக்கு
உருவம் தந்து அவைகளை நிறைவேற்றுகிற நிலையில் ஏதோ
மத்திய அரசு அதற்கான நிதி உதவி செய்ய முன்வந்த காரணத்தி
னால் அவர்களுடைய ஒப்புதலுக்காக அந்தத் திட்டங்கள் அனுப்
பப்பட்டதாக கொள்கைக் குறிப்பில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கி
றது. அதை வேகமாக அமல்படுத்துவதற்கு மத்திய அரசை
வற்புறுத்தி அந்தத் திட்டங்கள் மிகச் சீக்கிரமாக அமல் நடத்தப்
படக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டு
வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : பேரவை மாற்றுத் தலைவர்
அவர்களே, மீனளம் பற்றிய மானியக் கோரிக்கையின்மீது பேசு
வதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக்
கொண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் மீனவ நண்ப
ராக, படகோட்டியாக, படத்திலே மட்டும் நடிக்காமல்
வாழ்க்கையில் அல்லல் படுகிற கடலில், கரையில் தவிக்க விட்டு
விட்டு சென்று உயிரோடு திரும்புவார்களா என்ற நிலையில்
இருக்கிற அந்த மீனவ மக்களுக்காக பாடுபட வேண்டுமென்ற
அளவிலே மீனவ சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவரை அந்தத்
துறைக்குப் பொறுப்பேற்க வைத்து அவரை அமைச்சராக



அமர்த்தி மீனவ மக்களின் நலனில் அக்கறைகாட்டி வருகிறார்கள். அந்த நிலையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதற்கு முன்னாலே மீன்துறை எப்படி கவனிக்கப்பட்டது என்பதை எல்லாம் எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். மீன்பிடித் தொழிலிலே அக்கறை இல்லாதவர்கள் பணக்காரர்களாக இருக்கிறார்கள். கரையிலிருந்து வாழ்ந்து கொண்டு கடலுக்கு சம்பந்தம் இல்லாதவர்கள் எல்லாம் தங்களிடம் பணம் இருக்கிறது என்ற ஒரே காரணத்திற்காக பெரும் விசைப் படகுகளை வாங்கி அதிலே கூலிக்கு மீனவர்களை அமர்த்தி வருமானத்தைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்ட காரணத்தினால் கடலிலே மீன்பிடித்துக் கொண்டிருக்கிற கட்டு மரத்தை வைத்துக் கொண்டிருக்கிற நாட்டுப் படகை நம்பிக்கொண்டிருக்கிற மீனவர்களுக்கு, அவர்களுக்கு வருமானத்தைக் குறைக்க வேண்டுமென்று அந்த போட்டி உணர்வின் காரணமாக மீனவர்களின் வலையை அறுக்கக்கூடிய நிலைமையை விசைப்படகு மீனவர்கள் செய்துவருகிறார்கள். அந்த நிலைமையை எல்லாம் மாற்ற வேண்டுமென்பதற்காக கடலிலே 3 மைல்களுக்குள்ளே விசைப் படகுக்காரர்கள் மீன்பிடிக்கக் கூடாது என்ற சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அது மட்டுமல்ல, பகலிலே விசைப் படகுக்காரர்கள் மீன் பிடிக்கத் கூடாது என்று அகில இந்தியாவிற்கும் தமிழகம் முன்னோடியாக ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தாலும்கூட அந்தச் சட்டத்தைத் தடுத்து இன்று உயர் நீதிமன்றத்திலே தடைவாங்கி விசைப்படகு பணக்காரர்கள் எல்லாம் அந்தச் சட்டத்தைத் தடுத்து இருக்கிறார்கள். எனவே அமைச்சர் அவர்களும், புரட்சித் தலைவர் அவர்களும் இந்தச் சட்டத்தை அமல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கட்டுமர நாட்டுப்படகு மீனவர்கள் சார்பிலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1–00)

அதைப் போலவே இங்கே மீனவர்களுக்காக பல்வேறு அடிப்படை வசதிகளை அமைப்பதற்காக, மீனவ கிராமங்களுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதற்காக அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதுபோல சிறிய துறைமுகங்கள், இறங்கு தளங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. அதைப்போல கடற்கரையில் இருக்கிற அந்தக் குடிசைகளில் வாழ்கின்ற மீனவர்கள் புயல் காலங்களில் பாதிக்கக்கூடிய நிலைமை இருக்கிற காரணத்தால் பல்வேறு நல்ல வீடுகளை கட்டிக் கொடுக்கிற திட்டத்தை இந்த அரசு செயலாற்றி வருகிறது. அது மட்டும் அல்லாமல் பல்வேறு போக்குவரத்து வசதிகளை அந்த மீனவ கூட்டுறவுச் சங்கங்களுக்கு வாகன வசதிகளை உருவாக்கித் தந்து

இருக்கிறது. அந்த வகையில் இந்த அரசு பல்வேறு நலத் திட்டங்
களை ஆங்கு நிறைவேற்றி வருகிறது. அதைத் தொடர்ந்து
இன்னும் அதிகமான அளவில் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாகச் சொல்லப்
போனால் கடற்கரை ஓரமாக இருக்கிற அப்படிப்பட்ட மீனவ
கிராமங்களுக்கு எல்லாம் இங்கே எனக்கு முன்னால் பேசிய
மாண்புமிகு உறுப்பினர் திரு. அமிர்தராஜ் அவர்கள் குறிப்
பிட்டதைப் போல் பெரும் மணலால் சூழப்பட்டு இருக்கிற கிரா
மங்களாக இருக்கிறது. அப்படிப்பட்ட பகுதிகளுக்கு மெயின்
ரோடிலிருந்து அங்கே போகக்கூடிய பாதை நல்ல பாதையாக
இல்லாமல் இருக்கிற காரணத்தாலும் மீனவ கிராமங்களுக்கு
சாலை அமைக்கிற திட்டத்தில் இந்த ஆண்டு 28 லட்சம் ரூபாய்
ஒதுக்கியிருக்கிறார்கள். சொல்லப்போனால் இந்தத் தொகை
போதாது என்று சொல்லவேண்டும். இதற்கு முன்னால்
அங்கே மீனவ கிராமங்களுக்கு சாலை அமைக்கிறபோது அங்கே
கப்பிச் சாலை வைப்பதற்கு ஒரு ஆண்டும், அதற்கு பின்னால்
கருங்கல் போடுவதற்கு இன்னும் 2, 3 ஆண்டுகளை எடுத்துக்
கொண்டு அதற்கு பிறகு தான் அந்தச் சாலைக்கு தார் போடு
வார்கள். அப்படிப் போடுகிற போது புதிதாகவே அந்தச் சாலை
களை போடவேண்டிய நிலைமை எல்லாம் இருந்தது. ஆனால்
டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி பொறுப்புக்கு
வந்த பிறகு தான் மீனவ கிராமங்களுக்கு சாலை அமைக்கிற
போது முதலிலேயே தார் சாலை அமைக்கிற பணியை இங்கே
நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். அப்படி அமைத்ததன் மூலம்
அந்தச் சாலைகள் நிரந்தரமான சாலைகளாக இருக்கும். இல்லை
என்று சொன்னால் மழையிலே அந்தக் கற்கள் எல்லாம் வெளியே
போய் கப்பி பயன்படாத நிலையில் அந்தச் சாலைகள்
சீர் கெட்டு அழியக்கூடிய நிலைமை இருந்தது. எனவே இப்
போது தார் சாலையாக அமைக்கின்ற பணியை நான் பாராட்டு
கிறேன். ஆனால் இந்த 28 லட்சம் ரூபாய் என்று அங்கே
இருக்கக்கூடிய அந்த மீனவ கிராமங்களுக்கு சாலைகள் அமைக்கப்
படுகிறது என்றால் அது போதாது. குறிப்பாகச் சொல்லப்
போனால் என்னுடைய தொகுதியில் 12 மீனவ கிராமங்கள்
இருக்கிறபோது இன்று ஒரே ஒரு கிராமத்திற்குத்தான் 5 லட்சம்
ரூபாய் ஒதுக்கப்பட்டு அங்கே தார் சாலை அமைக்கக்கூடிய பணி
நடைபெற்று வருகிறது. அந்த 12 கிராமங்களுக்கும் அந்த
தார் சாலை அமைத்துக் கொடுத்தால் தான் அவர்கள் பிடிக்கின்ற
மீனை கரைக்கு கொண்டு வந்து நகரங்களில் நல்ல விலைக்கு
விற்க முடியும். இன்னும் குறிப்பாகச் சொல்லப் போனால் என்
தொகுதியில் ஆற்காட்டுத் துறையில் தான் பிடிக்கப்படுகிற
மீன்களை எல்லாம் தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத்திற்கு விற்கக்
கூடிய ஒரு செயல்முறை இருக்கிறது. மற்ற மீனவ கிராமங்
களை விட அதிகமான மீனை தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழ
கத்திற்கு அந்த ஆற்காட்டுத் துறையிலிருந்து விற்றுக்கொண்டு
இருக்கிறார்கள். அந்த அளவுக்கு அங்கே அரசோடு ஒத்துழைப்புத்
தருகிற அந்த மீனவ கிராமத்தில் குடிநீர் வசதி இன்று குறைவாக
இருக்கிறது. அதையும் கூட இந்த வெள்ள நிவாரணத்தில்



எடுத்து அங்கே குடிநீர் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து இருந்தாலும் இன்னும் நிரந்தரமாக அந்தப் பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல் அந்தக் கிராமத்திலிருந்து 50 ஆண்டுகளுக்கு முன்னால் பர்மாவுக்கு கப்பல் விட்டு இருக்கிறார்கள். அப்போது விசைப் படகு இல்லாமல் இருந்தாலும் கூட பாய் மரங்களைக் கட்டி ரங்கோனுக்கு கப்பல் பயணம் செய்து அங்கே வியாபாரம் நடத்தப்பட்டு இருக்கிறது. ஆனால் அங்கே ஒரு துறைமுகம் இல்லாமல் இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு துறைமுகத்தை இன்று உருவாக்கினால் அந்த மீனவ மக்களுக்கும் பயன்படும். அதுபோல அந்தத் துறைமுகத்தின் மூலமாக அங்கே கிடைக்கின்ற உப்பைக்கூட வெளி இடங்களுக்கு எடுத்துச் செல்ல முடியும். எனவே அந்த ஆற்காட்டுத் துறையில் இன்று ஒரு சிறிய இறங்கு தளம் அமைப்பதற்கான கருத்துரு பரிசீலிக்கப்படுவதாக இந்தக்கொள்கை விளக்கக் குறிப்பில் கூறப்பட்டிருக்கிறது. எனவே அதை பெரிய துறைமுகமாக நல்ல ஒரு மீன்பிடித் துறைமுகமாக அமைத்தால் அதை நல்ல துறைமுகமாக பயன்படுத்துவதற்கு வாய்ப்பாக இருக்கும். எனவே 50 ஆண்டுகளுக்கு முன்னால் அது துறைமுகமாக பயன்படுத்தப்பட்ட இடம் என்பதை நான் குறிப்பிட்டு கூற விரும்புகிறேன்.

அதேபோல் புஷ்பவனம், வெள்ளப்பள்ளம், வனமாதேவி போன்ற கிராமங்களிலே இருக்கக்கூடிய மீனவர்களுக்கு அங்கே சாலை அமைக்கிறபோது வனமாதேவி மீனவ கிராமத்திற்கு சாலை அமைக்கப்பட்டபோது அதைத் தடுத்து நிறுத்தி விட்டார்கள். அதற்கும் ஒரு தார் சாலை அமைத்துத் தர வேண்டும்.

அதேபோல் அங்கே வழிகாட்டி விளக்குகள் இன்று அமைக்கப்பட்டு செயல்படாமல் இருக்கின்றன. அவைகள் இன்றைய தினம் மின்சாரத்தால் இயங்குகிற காரணத்தால் மின்சாரம் அடிக்கடி பழுதுபடுகின்றபோது அங்கே அந்த விளக்குகள் எரிவது இல்லை. எனவே வழி காட்டி விளக்குகளை அமைக்கிற போது அவைகளை கேஸ் விளக்குகளாக அமைத்தால் அது சிறப்பாக பயன் ஆற்ற முடியும். எனவே கேஸ் விளக்குகளை அமைத்து அதைப்பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, புஷ்பவனம் கிராமத்திலே வழிகாட்டி விளக்கு அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு அங்கேயுள்ள மீனவ கிராமங்களுக்கு வீடுகள் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு, அது அரசின் அனுமதிக்காகக் காத்திருக்கிறது. அப்படிப்பட்ட இடமான ஆற்காட்டுத் துறையிலே மீனவர்களுக்கான வீடுகளைக் கட்டுவதற்காக அனுமதிக்கப்பட்ட இடம் அரசாங்க நிலமோ, அங்கே

உள்ள தனிப்பட்ட பட்டா நிலமோ இல்லாததாலே, அது கோயி
லுக்கு மட்டுமே சொந்தமாக இருப்பதன் காரணத்தாலே அந்தக்
கோயில் இடத்திலேயிருந்து அந்த நிலத்தை அந்தக் கூட்டு
றவுச் சங்கம் நீண்டகாலக் குத்தகைக்குக் கேட்டிருக்கிறது.
அதை விரைவுபடுத்தி, அந்த் நிலத்தைப்பெற்று, அதன்மூலம்
வீடுகள் கட்டுவதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்
சர்வர்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

சிறுத்தலைக்காடு கிராமத்திலே' மீன் பிடிக்கின்றபொழுது,
கோடியக் கரைக்கும் சிறுத்தலைக் காட்டுக்கும் இடையே மூன்று
ஆறுகள் இடையிலே இருக்கின்றன. அந்த ஆறுகளின் மூல
மாக விரால் போன்ற மீன்களைப் பிடித்து வந்தார்கள். ஆனால்,
1978 ஆம் ஆண்டு வெள்ளம் வந்தபொழுது அதனால் அந்த
ஆறுகள் தூர்ந்து, நன்றாக இருக்கின்ற ஒரேயொரு ஆற்றில்
கோடியக்கரை மக்கள் பயன்படுத்துவதா, சிறுத்தலைக்காட்டு
மக்கள் பயன்படுத்துவதா என்ற தகராறு வந்து, அது ஒரு
கிராமத்திற்குச் சொந்தம் என்று தீர்ப்பு அளிக்கப்பட்டத
னாலே, கோடிக்கரையிலே உள்ள மீனவர்கள் தொழிலில்
பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படி இரண்டாயிரம்பேர்
பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, மணவாய்க்கால் என்று
சொல்லப்படுகின்ற அந்த ஆற்றையும், புது ஆற்றையும்
வெட்டிக் கொடுக்க வேண்டும். அதைப்போல மாம்பாஞ்சான்
வாய்க்கால் என்று சொல்லப்படுகின்ற அந்த சிறுத்தலைக் காட்டி
லுள்ள ஆற்றையும் வெட்டிக் கொடுப்பதன் மூலம் சுமார், 3,000
மீனவர் குடும்பங்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்
பவர்கள் வருமானம்பெற்று வாழ முடியும். எனவே, அதைச்
செய்து கொடுக்க வேண்டும்.

வேதாரண்யம் ஒன்றியத்திலே ஒரு உள்நாட்டு மீனவர்
கூட்டுறவுச் சங்கம் இல்லாமல் இருக்கிறது. வெளியில்
இருப்பவர்கள், மன்னார்குடியைச் சேர்ந்தவர்களும்,
துறைப்பூண்டியைச் சேர்ந்தவர்களும் தான் அங்கே உறுப்பினர்
களாக இருக்கிறார்கள். வேதாரண்யம் ஒன்றியத்திலே இருப்
பவர்கள் நூறு பேர்கள் கூட இந்தக் கூட்டுறவுச் சங்கத்திலே
உறுப்பினர்களாகச் சேர்க்கப்படாமல் இருக்கிறார்கள். ஆகவே
அதற்காக தனியாக உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்
கத்தை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு,
மீனவர் நலனில் அக்கறை எடுத்துக்கொண்டிருக்கின்ற இந்த
அரசுக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களுக்கும் மீண்டும்
நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன், வணக்கம்.

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு மாற்றுத் தலைவ
அவர்களே, இந்த மானியத்தின் மீது ஒரு சில கருத்துக்களைச்
சொல்ல விழைகிறேன். மானியக் கோரிக்கை எண் 21 இல்
5,80,85,000 ரூபாயை நமது மாண்புமிகு அமைச்சரவர்கள்
கோருகிறார்கள். ஆனால், பாலிசி நோட்டின் கடைசிப் பக்கத்
தில் 95,000 என்று இருக்கும்.



ஆவணக்காப்பக ... 600 008
13625

அதே மாதிரி பட்ஜெட்டைப் பார்க்கும் பொழுது ... ரம்
கூடுதலாக இருக்கிறது. ஏன் இந்த மாற்றம் என்று எனக்குத்
தெரியவில்லை. அதைத் திருத்திக் கொள்ள வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, செங்கற்பட்டு மாவட்டத்தில் கல்பாக்கம் அணு
மின் நிலையம் அமைப்பதற்காக நிலத்தை ஆர்ஜிதம் செய்த
பொழுது அந்த இடத்தில் உள்ள மீனவர்களுக்கு வீடு கட்டிக்
கொடுக்கப்பட்டு, அந்த அணு மின் நிலையம் அமைக்கப்பட்டிருக்
கிறது. இது செங்கற்பட்டு மாவட்டத்தின் தென் பகுதியில்.
ஆனால் வட பகுதியில் உள்ள திருமலை நகர் என்ற ஒரு பகுதி
யில் ஸ்ரீஹரிகோட்டா என்ற இடம் ராக்கெட் தளத்திற்குப்
பக்கத்தில் அமைந்திருக்கிறது. ராக்கெட் தளத்தை விரிவாக்கு
வதற்காக அந்த நிலம் ராக்கெட் தளத்திற்குத் தேவையாக
இருக்கிறது என்று கேட்டு, மீனவர்கள் அதைத் தருவதற்கும்
இருக்கிறார்கள். என்னுடைய வேண்டுகோள், மத்திய அர
சாங்கம் இந்த இடத்தில் அணுமின் நிலையம் அமைக்கும்
பொழுது அங்கே வீடு கட்டித் தர இசைவு தந்து கட்டித்
தந்திருப்பதைப்போல, ராக்கெட் தளத்திற்கு அடுத்துள்ள பகுதி
யான திருமலை நகர் என்ற கடலை ஒட்டிய அந்தப் பகுதியில்
உள்ள மீனவர்களுக்கும் வீடு கட்டித் தர வேண்டும் என்று
மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்த வேண்டும். இல்லை
யென்றால் மாநில அரசே முன் வந்து வீடு கட்டித் தர வேண்டு
மென்று நான் முதலில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கடந்த ஏழெட்டு ஆண்டுகளாக இந்த இலாகாவிற்கு
என்று இருந்த பிஷரீஸ் அட்வைசரி போர்டு என்று இருந்து,
அதிலே பல அதிகாரிகளும், சட்டமன்ற உறுப்பினர்களும், மீனவர்
பெருங்குடி மக்களைச் சேர்ந்த முக்கியஸ்தர்களும் அங்கம் வகித்
தார்கள். ஆனால், இது நாள் வரையில் அந்த போர்டு
அமைக்கவில்லை என்று நான் கருதுகிறேன். ஆகவே, அமைச்சர்
அதையும் அமைப்பதற்கு ஆவன செய்வார்கள் என்று கருது
கிறேன். அந்த அவசியத்தை இப்பொழுதுள்ள மீன் வளத்துறை
அமைச்சரவர்கள் அறிந்தவர்கள் என்ற காரணத்தால்.

நம்முடைய தற்போதைய மீன் வளத்துறை அமைச்சரவர்
கள் விசைப் படகாளர் ; விசைப் படகுக்குச் சொந்தக்காரர்.
ஆகையினாலே, அந்த விவகாரமெல்லாம் தெளிவாக அறிந்திருப்
பவர். அவர் இந்த ஆண்டு தன்னுடைய பாலிசி நோட்டிலே
Inshore fishing stati n என்று
சொல்லியிருக்கிறார்கள். ஐந்து இடங்களிலே இருக்கின்றன ; இயங்கி வருகின்றன.
அது முன்பே ஏற்பட்டது தான் ; இப்பொழுது ஏற்பட்டது
அல்ல ; முந்தைய ஆட்சியில் ஏற்பட்டதுதான் , நான் இல்லை
யென்று சொல்லவில்லை. ஆனால் அந்த ஸ்டேஷனுக்கு இப்
பொழுது ஐந்து இலட்சம் ரூபாய் செலவு செய்து இரண்டு விசைப்
படகுகளைக் கூட வாங்கப் போவதாகப் பாலிசி நோட்டிலே
இருக்கிறது.

(திரு. ப. பொன்னுரங்கம்) [1984 ஏப்ரல் 12

நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை மெத்தப் பணி
வோடு கேட்டுக் கொள்கிறேன். நமது மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் விசைப் படகுக்குச் சொந்தக்காரர். அவர் மீனவர்.
ஆகவே அந்த ஸ்டேஷனால் என்ன பயன் என்பதை அவரிடத்
திலே இருந்து நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். சர்வே
பண்ணுவதற்குப் பயன்படுகின்றது என்று பாலிசி நோட்டிலே
சொல்லி இருக்கிறார்கள். எங்கே போய் சர்வே பண்ணுகிறார்
கள் ? 20 பாதம்ஸ் போய் சர்வே பண்ணுகிறார்கள். ஆனால்
இப்போது விசைப் படகுகள் 50 பாதம்ஸ் வரை கூட போகின்றன.
இப்படிப்பட்ட நிலைமையில் 20 பாதம்ஸ் சர்வே பண்ணுவதற்
காக ஒரு ஸ்டேஷன் அவசியம்தானா ? அதற்கென்று நிதி
ஒதுக்கியது அவசியம்தானா ? எனவே அருள் கூர்ந்து சிந்தித்துப்
பார்க்க வேண்டும். அதனால் எந்தவிதமான பலனும் இல்லை.
எனவே நல்ல காரியங்களைத் துணிந்து ஆற்ற வேண்டும் என்று
நான் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் அந்தத் துறைக்கு
அந்தச் சமூகத்தைச் சேர்ந்த ஒருவரே அமைச்சராக வந்திருக்
கின்ற காரணத்தால் நல்ல காரியங்களை ஆற்ற வேண்டும் என்று
நான் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-10)

அடுத்து சிறு சிறு துறைமுகங்களைக் கட்டுவதிலே கால தாம
தம் ஏற்படுகின்றது என்று எனக்கு முன்னாலே பேசியவர்கள்
கூடச் சொன்னார்கள். நீங்கள் இதற்குப் புதிது. இப்போது
இராமநாதபுரம் வாலி நோக்கத்திலே கையாண்டது பற்றிச்
சொல்லி இருக்கிறீர்கள். ஆனால் யார் கையாண்டது என்று
திரு. எட்மண்ட் 1977-78 லேயே சொல்லிவிட்டார்.
We have sent proposals for clearance by the Central Government
என்று அப்போது சொல்லி இருக்கிறார்கள். அவர் சொன்னார் ;
அடுத்து நாவலர் வந்தார். போன ஆண்டு கூட நாவலருக்கும்
எனக்கும் சர்ச்சை வந்தது. ஹார்பருக்கும், இன்ஃப்ராஸ்ட்ரக்
சருக்கும் என்று இரண்டு விதமான ஃபெசிலிட்டீஸ்க்காக கவர்ன்
மென்ட் ஆஃப் இண்டியாவிலே இருந்து ச்ளியரன்ஸ் வந்திருக்கின்
றது. ஒன்று டு கன்ஸ்ட்ரக்ட் ஹார்பர் அட் வாலிநோக்கம்.
இன்னொன்று அடிப்படை வசதிகளை அமைப்பது. இப்படி
இரண்டு திட்டம். இந்த இரண்டு திட்டத்திலே கூட சர்ச்சை
வந்தது. மத்திய சர்க்காருடைய க்ளியரன்ஸ் வந்து விட்டது
என்று எல்லாம் கிட்டத்தட்ட ஐந்தாறு வருஷங்களாகச் சொல்லிக்
கொண்டிருக்கிறீர்கள். இந்த ஆண்டு இராமநாதபுரத்திலே
வாலி நோக்கம் என்று சொல்கிறீர்கள். ஆனால் நடை முறைப்
படுத்துவது இல்லை என்பது தான் என்னுடைய தாழ்மையான
கருத்தாகும்.

அடுத்து எனக்கு முன்னாலே பேசிய திரு. கருப்பையா அவர்
களும் மற்றவர்களும் சொன்னார்கள். நீங்கள் கூட மீனவ
ரிடத்திலே அக்கறை கொண்டு நடத்தப்படுகின்ற திட்டம் அது
என்று சொன்னீர்கள். ஆனால் ப்ராக்ட்டிகலாகப் பார்க்க



1984 ஏப்ரல் 12] (திரு. ப. பொன்னுரங்கம்)

வேண்டும். மாதம் 10, 10 ரூபாய் என்று 9 மாதங்களுக்கு
90 ரூபாய் வாங்கிக் கொண்டு அரசு ஒரு 90 ரூபாய் போட்டு
சைக்ளோன் பீரியடிலே மூன்று மாதங்களுக்கு மாதம் 60 ரூபாய்
என்ற அளவிலே ஒரு குடும்பத்திற்கு என்று கொடுத்தால் அதை
வைத்து அவர்கள் என்ன செய்வார்கள் ? எனவே
தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒரு நாளைக்கு
2 ரூபாய் என்றால் அதை வைத்துக் கொண்டு என்ன பண்ணு
வார்கள் ? மீனவர்களைப் பொறுத்த வரையில் அவர்களுடைய
தொழில் காரணமாக 90 சதவீதம் பேர் குடிப்பவர்கள். அப்படிப்
பட்டவர்களால் நீங்கள் கொடுக்கின்ற இந்தப் பணத்தை வைத்து
100 மில்லி கூட வாங்க முடியாது. இப்படிப்பட்ட ஒரு அவல
நிலைமை இருக்கின்றது. ஆகவே ஒரு நாளைக்கு 2 ரூபாய்
என்று சொல்லிக் கொண்டு இதையும் ஒரு திட்டம் என்று சொல்
கிறீர்கள் ? இதை எல்லாம் மீனவர் நலத் திட்டம் என்று சொல்
கிறீர்கள். இது ஒரு திட்டமே அல்ல. மீனவர்களுக்குச்
செய்கின்ற நன்மையே அல்ல.

அடுத்து நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பையா
அவர்கள் கூடச் சொன்னார்கள் இன்சூரன்ஸ் திட்டம் என்று.
இது ப்யூர்லி கவர்ன்மென்ட் ஆஃப் இண்டியா திட்டம். இது
நம்முடைய ஸ்டேட்டுக்கு மட்டுமல்ல ; ஆல் ஓவர் இண்டியா.
அதாவது எங்கெங்கு கோஸ்டல் ஏரியா இருக்கின்றதோ அங்கே
எல்லாம் பயன் படுகின்ற இன்சூரன்ஸ் திட்டம். அதற்கு மத்திய
சர்க்கார் 50 சதவீதம் தருகின்றது. அதாவது தாய் மாதிரி
நடந்து கொள்கின்றது. 12 ரூபாயிலே 6 ரூபாய் மத்திய அரசு
தருகின்றது. மீதியுள்ள 6 ரூபாயைப் பொறுத்த வரையில்
மாநில அரசு என்ன செய்கின்றது என்றால், மீன்காரா, நீ ஒரு
3 ரூபாய் கொடு, நான் ஒரு 3 ரூபாய் கொடுக்கிறேன் என்று
சொல்கின்றது. ஆகவே இதிலே மத்திய சர்க்காருக்கு இருக்
கின்ற அக்கறை கூட மாநில சர்க்காருக்கு இல்லை என்கின்ற
போதுதான் உள்ளபடியே வேதனைக்குரிய ஒன்றாக இருக்கின்றது.

எனக்கு முன்னாலே திரு. பலராமன் அவர்கள் பேசுகின்ற
போது நீங்கள் சொன்னதையே தான் சொல்கிறீர்கள் என்று
சொன்னார்கள். ஆனால் எதை வைத்து அவர்கள் அவ்வாறு
சொன்னார்களோ தெரியவில்லை. நீங்கள் சொன்னதையே
தான் சொல்கிறீர்கள் என்பது உங்களுடைய பாலிசி நோட்டைப்
பார்த்தால் இளியராகத் தெரிகின்றது. 100-க்கு 70 சதவீதம்
கட்டு மரம் பீப்பிள்ஸ்-ம் வல்லம் பீப்பிள்ஸ்-ம் தான் வந்து
கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இந்த பாலிசி
நோட்டிலே இந்த மாதிரி செய்பவர்களுக்கு என்ன
செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

The production from the traditional sector accounts for over 70
percent of the marine fish landings in the State. Therefore, it was felt
necessary that assistance was required to improve the efficiency of the
traditional boats catamarans and vallams. The State Working Group

of the Planning Commission has endorsed the above view and proposed to give separate allocation for extending financial assistance to the traditonal fishermen for distributton of fibre glass boats, mechanisation of traditional crafts, with inboard/outboard motors, combination nets etc., என்று இந்த பாலிசி நோட்டிலே சொல்லப்பட்டிருக்கிறது.

ஆனால், நாவலர், 1981-82-லே, இந்த டிமான்டிலே சொல் லும்போது இதே ரீசனைக் காட்டி "The State Working Group of Planning Commission has endorsed the above view and proposed to give separate allocation for extending financial assistance to the traditional fishermen for distribution of fibre glass boats, mechanisation of traditional crafts, with inboard/out-board motors, combination nets, etc." என்று சொல்லியிருக்கிறார். வார்த்தை கூட மாறவில்லை. நீங்கள் மீனவர் என்பதாலே உங்களிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன். 1981—82-லே நாவலர் இதையே சொன்னார். இப்பொழுது நீங்கள் அதையே ரிப்பீட் செய்கிறீர்கள். ஆகவே தான் திரு. பலராமன் சொன்னார், சொன்னதையே சொல் கிறீர்கள் என்று. ஆகவே, இனிமேலாவது இதில் எல்லாம் நாட்டம் செலுத்தி, தயவு செய்து இது போன்ற, தவறுகள் நடைபெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, டிரெயினீசுக்காக, கடலூர் மற்றும் நாகப்பட்டினம் போன்ற இடங்களில் டிரெயினிங் சென்டர்கள் ஆரம்பித்திருக் கிறார்கள். அதற்காக ரூ. 17 இலட்சம் என்று மானியக் கோரிக்கையிலே சொல்லி இருக்கிறீர்கள். ஒரு ஆண்டுக்கு மொத்தம் எவ்வளவு பேர்கள் பணியாற்றுகிறார்கள் என்றால், 4, 5 சென்டர்களிலும் சேர்த்து 310. அவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் ஸ்டைபன்ட் ரூ. 75 கொடுக்க வேண்டும். ஆனால், நான் கணக்குப் போட்டுப் பார்த்தால் ரூ. 2.79 இலட்சம் ஆகிறது. ஆனால், ஒதுக்குகிற பணம் ரூ. 17 இலட்சம். எதற்கு ? அதையெல்லாம் நீங்கள் டீப்பாக கவனிக்க வேண்டுமென்று பணி வன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

நீங்கள் சொன்னதை எல்லாம் செய்யவில்லை. முன்னாலே இருந்தவர்கள் செய்யவில்லையென்று சொல்கிறீர்கள். நீங்கள் செய்வீர்கள் என்ற நம்பிக்கையில் கேட்கிறேன். திரு. எட்மண்ட் அமைச்சராக இருந்தார். 1979-80-ல் அப்பொழுது ஒரு அறிவிப்பு தருகிறார்.



I quote from Policy note of 1979-80 "Two community Centres are proposed to be constructed at a cost of Rs. 1.65 lakhs each one at Nochikuppam and another one in North Madras to enable fishermen to avail themselves of these halls for conducting meetings, marriages etc.''

நான் மற்றவற்றிற்கெல்லாம் போகவில்லை. ஆனால், 1979-80-ல் நாவலரே ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்லி இருக்கிறார். ரூ. 1.65 இலட்சம் ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்லி இருக்கிறார். ஆனால் அதற்குப் பிறகு இடிக்கிறார்கள். நொச்சிக் குப்பத்தில் மீனவர் போட்டிருக்கிற குடிசைகளை எல்லாம் இடிக்கிறார்கள். அங்கே திட்டமும் உண்டு, மீனவர் குப்பங்கள் உண்டு. ஆனால் அங்கே ஹால்ஸ் கட்டவில்லை. இருப்பதை இடிக்கிறார்கள். இதையெல்லாம் அமைச்சருடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அமைச்சர் புதி யவர்.

அதேபோல் திரு. எட்மண்ட் அமைச்சராக இருந்தபோது மீன் வைத்துக் கொண்டு வர ஐஸ் பாக்ஸ் தருகிறேன் என்று அறிவித்தார். இப்பொழுது அதை கன்டினியூ செய்கிறீர்களா என்று தெரியவில்லை. 75 சதவீதம் மீன் பிடிப்பவர்களுக்கு நவீன முறையில் மீன் பாதுசாக்க உதவ வேண்டுமென்று அபிப் பிராயம் எல்லாம் தெரிவிக்கப்பட்டது. மைய அரசு விரும்பு கிறது, பிளானிங் கமிஷன் விரும்புகிறது.

(பிற்பகல் 1-20)

நாவலர் அவர்கள் இந்தத் துறையில் இருந்தபோது கடந்த ஆண்டிற்கு முன்னாலே ஒரு புதுமையான திட்டம் கொண்டு வந் தார். உங்களுக்குத் தெரியும். அதற்கு இரண்டு லட்சம் ரூபாய் ஒதுக்கி இருக்கிறேன் என்று அறிவித்து இருந்தார்கள். இரண்டு லட்சம் ஒதுக்கினால் போதுமா என்று கேட்ட உடனே அந்தத் திட்டத்தை கைவிட்டு விட்டார்கள். இப்போது அந்தத் திட்டமே கிடையாது. ஆகவே ஒன்றைக் கொண்டு வருவது—பின்னாலே விட்டுவிடுவது என்பது நல்லதல்ல. நீங்கள் புதியதாக வந்திருக் கிறீர்கள். இதை முறையாக முறைப்படுத்துவீர்கள் என்று நான் எண்ணுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்து நாம் ஒரு திட்டத்தை ஆரம்பித்தால் அதைச் சரியாக செய்வதில்லை. பலராமன் அவர்கள் கூட சொன்னார்கள். சங்கு குளிப்பு தொழிலாளர்களுக்கு ஒரு சட்டம் கூட கொண்டு வந் தோம். எட்மண்ட் அவர்கள் அமைச்சராக இருந்தபோது, போன டேர்மில், சங்கு குளிக்கிற தொழிலாளர்களுக்கு பயன்படுகிற அளவிற்கு, தனிப்பட்ட முதலாளிகள் கொள்ளை அடிக்கிற கார ணத்தால், தொழிலாளர்கள் பயன்பெறுகிற அளவிற்கு, அவர் களுக்கு நியாயமான விலை கிடைக்க, சங்குகளை நாங்கள் கொள் முதல்-புரொக்யூர் பண்ணுகிறோம் என்று சொன்னார்கள். என்ன

நடந்தது தெரியுமா? அதைத் தான் மணி அவர்கள் சொன்
னார்கள். புரொக்யூர் பண்ணுகிறபோது ' பை போர்ஸ் ', ஏதோ
சட்டம் இருக்கிறது. இவ்வளவு தான் விலை; அதற்கு மேல்
முடியாது; இத்தனை சங்குகள் என்றால் இவ்வளவு தான் விலை
என்று அதிகாரிகள் நிர்ணயித்து, அதிலே தரமான சங்குகளைப்
பொறுக்கி எடுத்துக் கொள்கிறார்கள். மீதி சங்குகள் தான்
நம்முடைய கவர்ன்மெண்ட் கணக்கிலே வருகிறது. இதை
அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன். அடுத்து எனக்கு முன்னாலே பேசிய மணி அவர்கள்
ஒன்றைக் குறிப்பிட்டுப் பேசினார்கள். வட நாட்டிலிருந்து வரு
கின்ற ஒரு ஆங்கிலப் பத்திரிகையில் வந்த செய்தியை சொன்னார்
கள். மத்திய சர்க்கார் விதிகளை தளர்த்திய காரணத்தால்,
முன்னாலே ரெஸ்ட்ரிக்ஷன் இருந்தது; குறிப்பிட்ட இடத்திற்கு
மேலே தான் மீன் பிடிக்க வேண்டுமென்று இருந்தது; அதை
இப்போது தளர்த்திய காரணத்தால் வெளி நாடுகளிலிருந்து
வந்து இங்கே மீன் பிடிக்கிறார்கள். அவர்கள் என்ன செய்
கிறார்கள் என்றால் நிறைய மீன் பிடித்துக் கொள்கிறார்கள்.
எந்த இடத்திலே மீன் பிடிக்கிறார்கள் என்றால், கடலில் ஒரு
இடத்தை நிர்ணயித்து இருக்கிறார்கள். Exclusive
Economic Zone என்று அந்த இடத்திற்குப் பெயர். அங்கே
வந்து மீன் பிடித்துக் கொண்டு போகலாம். இப்போது தடுத்து
விட்டார்கள். ஆனால் போவதற்கு முன்னாலே என்ன செய்ய
வேண்டும் என்றால் எவ்வளவு மீன் பிடித்தார்கள் என்று மாநில
அரசிற்கோ, மத்திய அரசிற்கோ தெரிவிக்க வேண்டும். அதைத்
தெரிவிக்கிறபோது சர்டிபிகேட் கொடுக்கிற கம்பெனிகளுக்கு
கணிசமான பெர்செண்ட் மீன் பிடித்த அன்னிய படகுக்காரர்கள்
தருகிறார்கள். லட்சக்கணக்கில் தருகிறார்கள்; நான் அறிந்த
மட்டில் இந்த நிலை இருக்கிறது. நம்முடைய பிஷரிஸ் டெவலப்
மெண்ட் கார்ப்பரேஷன், மற்றும் ரிடையர் ஆன ஐ.ஏ.எஸ். அதி
காரிகள் சிலரும் தனித்தனியாக விண்ணப்பம் போட்டதாக நான்
அறிகிறேன். ஆனால் என்ன காரணத்தாலோ ரிடையர் ஆன
ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்குக் கிடைக்கவில்லை. நம்முடைய
மாநிலத்தில் இயங்கிக் கொண்டிருக்கிற அந்த கார்ப்பரேஷனுக்கு
தர மறுத்து டாக்டர் பாலி என்ற நபருக்கு கொடுக்க வெகு
வேகமாக சிபார்சு செய்யப்பட்டு அது அவருக்கு கிடைத்து இருப்
பதாக அறிகிறேன். பாலி என்றால் யார் என்று உங்களுக்குத்
தெரியும். இன்னும் விளக்கமாக சொல்ல வேண்டுமென்றால்
வைஜயந்திமாலாவின் கணவர் தான் அவர். அவருக்கு வெகு
வேகமாக சிபார்சு செய்ததாக அறிகிறேன். இது நல்லதல்ல.
ஆதாயம் தனிப்பட்ட நபர்களிடத்தில் செல்வதை விட நம்மு
டைய பிஷரிஸ் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷனுக்கு வரட்டும்;
அது தான் முறை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மணி
யடிக்கப்பெற்றது).

துணைத் தலைவர் அவர்களே, சீக்கிரத்தில் முடித்து விடு
கிறேன். ரெத்தினராஜ் அவர்கள் கூட ஒரு வெட்டுத் தீர்மானம்
கொடுத்திருக்கிறார்கள். இறந்த உடனே 2, 3 மாதங்களுக்குள்





பட்டுவாடா பண்ண வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்
கள். நான் அமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு
சிலவற்றைக் கொண்டு வருகிறேன். மதிவாணன், நடேசன் என்ற
இருவர் கடந்த 19-8-1982 அன்று—இரண்டு ஆண்டுகள் ஆகிறது-
இறந்திருக்கிறார்கள். காசிமேடு பகுதியில் கட்டு மரத்தில்
சென்று இறந்து இருக்கிறார்கள். இதுவரையில் பட்டுவாடா
ஆகவில்லை அந்த பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு. அதைப்
போல தாழங்குப்பத்தைச் சேர்ந்த பஞ்சநாதன் என்பவர்
22–9–1982 இல் தொழில் செய்யும் போது கட்டு மரத்தில் அடி
பட்டு காலமானார். அவர் உடல் கிடைத்தது. எல்லா சர்டிபி
கேட்டுகளும் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இதுவரையில் எது
வும் பட்டுவாடா ஆகவில்லை. ஆகவே இது குறித்து அமைச்சர்
அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன்.

இந்த பாலிசி நோட்டில் இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி
சொல்லவில்லை. ராமேஸ்வரத்தில் மீனவர்கள் மிகுந்த அளவிற்
குக் கொடுமைப்படுத்தப்பட்டு இருக்கிறார்கள் என்பது நமக்
குத் தெரியும். அது பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கூட கொடுக்
கப்பட்டு இருக்கிறது. அதைப் பற்றியும் ஒரு வார்த்தை பாலிசி
நோட்டில் ஒன்றும் சொல்லப்படவில்லை. சமீபத்தில் கூட
3 லட்சம் ரூபாய் மதிப்புள்ள இறால் மீன்களை 20 படகுகளில்
இருந்து இலங்கா நேவல் படையைச் சேர்ந்த முரடர்கள்
பிடித்து வைத்துக் கொண்டு விட்டார்கள். அதைப் பற்றியும்
இதிலே ஒன்றும் சொல்லவில்லை. ரெஸ்கியூ படை வாங்கு
கிறோம் என்று சொன்னோம். வாங்கிவிட்டோமா? 1979–லேயே
சொன்னோம். அங்கே கடற்படை ரோந்து வருகிறது என்று
பாலிசி நோட்டில் சொல்லியிருக்கிறார்கள். கடந்த ஆண்டு,
அதற்கு முந்திய ஆண்டு இது சொல்லப்பட்டு இருக்கிறது. அப்படி
ரோந்து இருந்தால் இந்த மாதிரி பாதிப்பு ஏற்படுமா? இது
போன்ற குறைகளை, நீங்கள் புதிதாக அமைச்சராக வந்து இருப்
பதால், அதைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். 9,900
சொச்சம் வீடுகள் கட்டப் போவதாகச் சொல்லியிருக்கிறீர்கள்.
அதாவது 6 ஆவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள் கட்டி
முடிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். இதற்காக இந்த
ஆண்டு 100 லட்சம், போன ஆண்டு 100 லட்சம் ஒதுக்கியிருக்
கிறீர்கள். இந்தத் திட்டத்தை அரிசன வீட்டு வசதி வாரியத்
துடன் சேர்ந்து கட்டுகிறோம் என்று சொல்கிறீர்கள். நான் இது
குறித்து ஒன்றைச் சொல்கிறேன். இந்தத் திட்டமே அதாவது
100 லட்சம் ரூபாய் ஒதுக்கும் திட்டமே கலைஞர் ஆட்சி காலத்
திலே கொண்டு வரப்பட்டது. நான் கூட நாவலரிடம் பலமுறை
மானியக் கோரிக்கை விவாதம் நடந்தபோது கேட்டேன். அவரும்
ஒப்புக்கொண்டு இருக்கிறார். தி.மு.க. ஆட்சியில் கட்டப்பட்ட
வீடுகள் அப்படியே இருக்கின்றன. அவற்றிற்காக ஒதுக்கிய பணம்

என்ன ஆயிற்று என்று நான் கேட்டபோது, இது குறித்து ஐயப்
படலாமா என்று சொன்னார்கள். ஆகவே, இதிலே கருத்த
கவனம் செலுத்தி, அதற்காக ஒதுக்கப்பட்ட பணம் முறையாக
சாங்ஷன் செய்யப்பட்டு, அந்த வீடுகள் முறையாகக் கட்டுவதற்
குப் பயன்படுத்தப்பட வேண்டும். இப்போது அவ்வாறு முறை
யாகப் பயன்படுத்தப்பட வில்லை என்று அறிகிறேன். ஆகவே,
இது போன்ற குறைபாடுகளைத் தவிர்க்க வேண்டும்.

இந்த மானியக் கோரிக்கையைப் பார்க்கிற போது, இது
ஏதோ ஓதுவது போல் இருக்கிறது. முன்பு எட்மண்ட் ஓதினார்.
பின்னர் நாவலர் ஓதினார். அதையேதான் இப்போது நீங்கள்
ஓதுகிறீர்கள் என்று சொல்லி, என் உரையை முடிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. கலைமணி :** மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, மீனவ மானியக் கோரிக்கை மீது
7 உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லி
இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் பொன்னுரங்கம் அவர்
கள் இங்கே சொன்னார்கள். 10,000 ரூபாய் வித்தியாசம் ஏற்
பட்டு இருக்கிறது என்று. அந்த 10,000 ரூபாய் வித்தியாசம்
இருப்பதற்குக் காரணம் அரசு ஏகபோக உரிமைக்காக சங்கு
குளிப்பதற்காக தனியாகச் சாட்டப்பட்ட சார்ஜ் தொகை அது.
இது சென்ற ஆண்டும் ஒப்புதலுக்கு வந்து உரிமை வழங்கப்பட்டு
இருக்கிறது. அந்தத் தொகை கொடுக்கப்பட்டு இருக்கிறது.

அடுத்து பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி உறுப்பினர்கள்
சொன்னார்கள். ராக்கெட் தளத்தில் வீடுகள் கட்டுவதைப் பற்றி
சொன்னார்கள். அரசு அதைப் பரிசீலித்துச் செய்யும். மீனவர்
களுக்கு ஆலோசனைக் குழு அமைக்கப்படவில்லை என்று சொன்
னார்கள். அது சம்பந்தமாக அரசுக்குக் கீழே இருக்கும் அதிகாரி
களிடமிருந்து விவரங்களைக் கேட்டு இருக்கிறோம். விரைவில்
அதுவும் அமைக்கப்படும் என்பதையும் சொல்லிக் கொள்கிறேன்.

துறைமுகம் கட்டுவது தாமதமாகிறது என்று சொன்னார்கள்.
அதிகமாகக் கட்டவில்லை என்று சொன்னார்கள். துறைமுகத்
திற்கு என்று தனியாக மீன் துறையில் பொறியாளர்களை
அமைத்து விரைவாக அதற்காக உரிய பணிகள் நடைபெற்று
வருகின்றன என்ற நல்ல செய்தியை இங்கே நான் தெரிவித்துக்
கொள்கிறேன்.

அவர்கள் சொல்கிறபோது ஆங்கிலப் பத்திரிகையில் வந்த ஒரு
குறைபாட்டைச் சொன்னார்கள். பிளிட்ஸ் பத்திரிகையில் வந்த
செய்தியைச் சொன்னார்கள். இந்த அரசு அயல்நாட்டு படகுக்
காரர்களுக்கு மீன்பிடி உரிமை தருவதற்கு சலுகை வழங்கியதாகச்



சொன்னார்கள். இது முற்றிலும் தவறு. அயல் நாட்டுக்காரர்
களுக்கு மீன்பிடி உரிமை வழங்க நமக்கு அதிகாரம் இல்லை.
அது மத்திய அரசுக்கு இருக்கிறது. அவர்கள் நேரடியாக மத்திய
அரசுக்கு மனு போடுகிறார்கள். நாம் அதற்குப் பரிந்துரை கூட
செய்யத் தேவையில்லை. மத்திய அரசிடம் அனுமதி பெற்று
அவர்கள் நடத்திக் கொண்டு வருகிறார்கள். ஆகவே, அந்தக்
குற்றச்சாட்டுக்கும் நயக்கும் சம்பந்தம் இல்லை என்பதைத் தெரி
வித்துக் கொள்கிறேன். வைஜயந்திமாலா அவர்களின் கணவர்
பாலி அவர்களுக்குக் கூட விரைவாகக் கொடுக்கப்பட்டது என்று
சொன்னார்கள். அவர்கள் நேரடியாக மத்திய அரசுக்கு மனுவைப்
போட்டு நேரடியாகப் பெற்றுக் கொண்டு இருக்கிறார்கள்.
அதற்காக இந்த அரசிலிருந்து எந்த சிபாரிசும் செய்யப்படவில்லை
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1—30)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவையின் முன்
அனுமதியுடன் அலுவல் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. க. கலைமணி :** அந்த பிளிட்ஸ் பத்திரிகையில்
வந்த மற்றொரு செய்தியை மாண்புமிகு உறுப்பினர் திரு.
மணி அவர்கள் சொன்னார்கள். மீன் வளர்ச்சிக் கழகத்தின்
மூலம் இரண்டு இழுவைப் படகுகள் மீன் பிடித்துக் கொண்டிருக்
கின்றன. அதைப் பதப்படுத்துகின்ற முறைக்கும் அதை ஏற்று
மதி செய்வதற்கும் ஒரு தனியார் கம்பெனிக்குக் கொடுத்ததிலே
தவறு நடந்திருக்கிறது என்று அந்தப் பத்திரிகையிலே கூறியிருப்ப
தாகச் சொன்னார்கள். நாம் டென்டர் கேட்டபோது இரண்டு
கம்பெனிகள்தான் பட்டியல் அனுப்பியிருந்தார்கள். அதிலே,
ஜார்ஜ் மைசோ 5½ ரூபாய் என்றும், ஈஸ்ட் கோஸ்ட் 4 ரூபாய்
என்றும் டென்டர் அனுப்பியிருந்தார்கள். அந்த டென்டர்களை
நாம் முடிவு செய்த பின்னால் சில கம்பெனிகள் தாமதமாக
பட்டியல் அனுப்பினார்கள். ஏற்கெனவே நாம் பரிசீலித்துக்
குறைந்த விலைப் பட்டியல் அனுப்பிய கம்பெனிக்குத்தான்
கொடுத்திருக்கிறோம். அது கூட இந்த ஆண்டு, நாமே பதப்
படுத்தி வெளிநாட்டுக்கு அனுப்புவதைவிட நேரடியாகத் துறை
முகத்திலேயே விற்றுவிடுவது இலாபகரமாக இருக்கிறது என்று
கருதி, இந்த ஆண்டு நாம் நேரிடையாக விற்கும் முயற்சியில்
இருக்கிறோம். ஆகவே, மீனவத் துறையில் இதுபோன்ற குற்றச்
சாட்டுக்கள் எதுவும் சரியில்லை என்பதை மாண்புமிகு உறுப்
பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பலராமன் அவர்கள் கூறும்
போது ஒன்றைச் சொன்னார்கள். மீனவர்களுக்கு இராமேஸ்
வரத்தில் பாதுகாப்பு இல்லை; அவர்களுடைய பாதுகாப்புக்கு
சரியான நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னார்கள்.
இராமேஸ்வரத்தில் இருக்கிற மீனவர்கள் அங்கு இருக்கிற கடல்
பகுதியில் மீன் குறைவாக இருக்கிறது என்ற காரணத்தால் மற்ற

பகுதிகளுக்கு மீன்பிடிக்கச் செல்லும்போது காற்று, மற்ற கார
ணங்களால் எல்லையைத் தாண்டிவிடுகிற சூழ்நிலை ஏற்படுகிறது
என்று சொல்கிறார்கள். அப்படி தவறுதலாக எல்லையைத்
தாண்டிச் சென்றுவிட்டார்கள் என்று சொல்லும்போது அவர்
களை நல்ல முறையில் திருப்பி அனுப்ப ஏற்பாடு செய்ய
வேண்டுமென்று நாம் மத்திய அரசுக்குச் சொல்கிறோம். மத்திய
அரசு ரோந்துப் படை போட்டிருக்கிறது. மத்திய அரசுதான்
அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படிப்பட்ட
சந்தர்ப்பங்களில் மத்திய அரசு வெளிவிவகார அமைச்சருக்கும் தூத
ருக்கும் எடுத்துச் சொல்லி, தவறுதலாகச் சென்றவர்களை எல்
லாம் மீட்டுத்தந்திருக்கிறோம். ஆகவே, இது முழுக்க முழுக்க
மத்திய அரசின் பணியாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

அடுத்து, சங்கு விற்பனையைப் பற்றிச் சொன்னார்கள். சங்
கினால் செய்யப்பட்ட பொருள்களை தமிழ்நாட்டு மக்கள்,
விரும்பி வாங்குவதில்லை. ஆனால், மேற்கு வங்கத்தில் விரும்பி
வாங்குகிறார்கள். அதனால், எங்கே சங்குக்கு மார்க்கெட் இருக்
கிறதோ அங்கே விற்பனை செய்கிறோம் என்பதை அவர்களுக்
குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, முத்துக் குளிப்பு பற்றிச் சொன்னார்கள்.
இப்போது தரமான, தேவையான முத்துக்கள் கிடைப்பதில்லை.
ஆகவே, தமிழ்நாட்டில் தற்போது முத்துக் குளிப்பதை நிறுத்தி
வைத்திருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில். தெரிவித்துக்
கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பையா அவர்கள் கூறும்
போது ஒன்றைச் சொன்னார்கள். கடலிலே மீன்பிடிக்கச் செல்
லும்போது விபத்தில் இறந்துவிட்டால் இறந்தவர் குடும்பத்திற்கு
5,000 ரூபாய் உதவித் தொகை வழங்கப்படுகிறது, அதை
10,000 ரூபாயாக்க வேண்டுமென்று சொன்னார்கள். நாம்
5,000 ரூபாய் கொடுத்து வந்தாலும், மத்திய அரசின் பரிந்
துரையின் அடிப்படையில் இன்ஷூரன்ஸ் திட்டத்தின் மூலம்,
அவர்களுக்கு 15,000 ரூபாய் கிடைக்கும். இன்ஷூரன்ஸ் திட்
டத்தை இந்த ஆண்டு முதல் தமிழ்நாட்டில் அமுல்படுத்த இருக்
கிறோம். அதற்கு 12 ரூபாய் பிரிமியம் கட்ட வேண்டும்.
மத்திய அரசு 6 ரூபாயும், மாநில அரசு 6 ரூபாயுமாக இந்தப் பிரி
மியத்தைக் கட்டுகிறோம். ஏற்கெனவே, மீனவர்கள் 3 ரூபாயும்
மாநில அரசு 3 ரூபாயும் பிரிமியம் கட்ட வேண்டும் என்று இருந்
தது. மீனவர்களுடைய பின்தங்கிய நிலைமையின் காரணமாக
மூன்றில் ஒரு பகுதி மீனவர்கள் இந்தப் பணத்தைக் கட்ட முன்
வரவில்லை. அதனால், அவர்கள் இந்தத் திட்டத்தின் பலனை
அடைய முடியாத நிலை ஏற்பட்டுவிடும். 3 ரூபாய் கட்டினால்
தான் இந்த நிவாரணத்தை அவர்கள் பெறும் தகுதி பெறு
வார்கள்; இல்லை என்றால் இழந்துவிடுவார்கள். இதை எண்
ணிப்பார்த்த மாண்புமிகு புரட்சித் தலைவர், மீனவ நண்பர்



அரசு மீனவர் செலுத்த வேண்டிய மூன்று ரூபாயையும் நாமே
ஏற்று, மாநில அரசே 6 ரூபாயாகக் கட்டிவிடலாம் என்றுகூட
சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, மத்திய அரசு 6 ரூபாயும்
மாநில அரசு 6 ரூபாயும் கட்டுவது என்ற திட்டத்தை ஏற்று,
அதைச் செயல்படுத்த இருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்
பினர் திரு. கருப்பையா அவர்களுக்குத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

அடுத்து, குளச்சல் பகுதியில் துறைமுகம் கட்டுவதுபற்றிச்
சொன்னார்கள். இந்த ஆட்சியில் பெரிய அளவில் 5 துறை
முகங்களை இந்த ஆண்டில் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்
பட்டிருக்கிறது. மேற்கொண்டு 15 துறைமுகங்கள் கட்டுவதற்கு,
பெங்களூரில் இருக்கக் கூடிய அதனுடைய ஆய்வு இயக்ககம்,
அதாவது மீன் துறைமுகம் கட்டுகின்ற இயக்ககம் ஆய்வின்படி
எங்கெங்கு கட்ட வேண்டும் என்று சொல்கிறார்களோ, அங்
கெல்லாம் அவைகளை கட்டுவதற்கான நடவடிக்கைகளை எடுக்
கிறோம். 15 இடங்கள் ஆய்வில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்
பினர் திரு. மணி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதையும்
நாங்கள் ஆய்வு செய்து, அது தகுந்ததாக இருக்குமானால், அதை
யும் ஏற்று, நிச்சயமாக செய்வோம் என்பதை இந்த நேரத்திலே
கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நம் மாநிலத்தில் மொத்த மீன்பிடிப்பில் 70 விழுக்காடு,
நாட்டுப் படகுகள் உபயோகித்து சிறிய சிறிய அளவில் மீன்பிடி
தொழில் நடத்தும் மீனவர்கள் மூலமே கிடைக்கிறது. எனவே,
இச்சிறிய மீனவர்களின் நலன்களைப் பேணிப் பாதுகாக்க பல
மீனவர் நலத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
அதனால்தான் கண்ணாடி இழைப் படகுகளையும், அவர்கள் பயன்
படுத்துகின்ற படகுகளின் உள்புறமும், வெளிப்புறமும் பொருத்
தப்படுகிற என்ஜின் மூலமாக, அதிக அளவில் மீன்பிடிக்கும் திறனை
அதிகப்படுத்த வேண்டுமென்று திட்டங்களை நிறைவேற்றுவதற்
கான பல்வேறு முயற்சிகளையெல்லாம் மேற்கொண்டிருக்கிறோம்.
மீனவர்கள் வசிப்பதற்குரிய வீடுகளையும் இலவசமாகக் கட்டிக்
கொண்டிருக்கிறார்கள். 1980–81 வரை 9,931 வீடுகள் கட்டு
வதற்கு இந்த அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதற்கென ரூ. 680
இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதுவரை 7,545 வீடுகள்
கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள வீடுகள் ஆறாவது
ஐந்தாண்டுத் திட்டத்திற்குள் கட்டிமுடிக்கப்படும். இந்தத்
திட்டம் இதற்கு முன்னாலே தமிழ்நாடு ஆதி திராவிட வீட்டு
வசதி மேம்பாட்டுக் கழகம் மூலம் செயல்பட்டு வந்தது.
அதனுடைய தாமதத்தைக் கருதி, அரசு மீன் துறையின் தனிப்
பொறுப்பின்கீழ் பொறியியல் பிரிவை உருவாக்கி, அதன்மூலம்
இனிமேல் தொடர்ந்து நிறைவேற்றி, விரைவாக செயல்பட
வேண்டுமென்று அரசு தீர்மானித்துள்ளது. அதன்படி, 1983–84
ஆம் ஆண்டில், 1,373 வீடுகள் ரூ. 190 இலட்சத்திற்கு மேற்
படாமல் செலவு செய்வதற்கான தொகையை ஒதுக்கியிருக்கி
றோம். மீனவர்கள் குடி இருக்கின்ற பகுதிகளில் அவர்கள் பிடிக்

[திரு. க. கலைமணி] [1984 ஏப்ரல் 12

கின்ற மீன்கள் அதிக அளவில், குறித்த இடத்திற்குச் செல்ல
வேண்டுமென்பதற்காக இணைப்புச் சாலை வசதிகளை எல்
லாம் இந்த அரசு அதிக அளவிலே செய்துகொண்டிருக்கிறது.
1980-ஆம் ஆண்டிலிருந்து கணிசமான நிதி ஒதுக்கீடு
வந்துள்ளது. ரூபாய் 119 இலட்சம செலவில் 56 இணைப்புச்
சாலைகள் போட அரசு ஒப்புதல் அளித்து, பணிகள் பெருமளவில்
முடிந்துவிட்டன. 1983-84 ஆம் ஆண்டில் ரூ. 62.5 இலட்
சம் செலவில் 20 இணைப்புச் சாலைகள் அமைப்பதற்கு அரசு
ஒப்புதல் வழங்கியுள்ளது. இப்பணியினைத் தொடர்ந்து செயல்
படுத்துவதற்காக 1984-85 ஆம் ஆண்டில் ரூ. 28 இலட்சம்
நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அடுத்ததாக, மீனவர்களின் துயர் நிவாரண நிதி. இதற்கு
முன்னாலே குறிப்பிட்டதைப் போல, அவர்கள் இறந்துபடுவார்
களானால், அவர்களுடைய குடும்பத்திற்கு நஷ்ட ஈடாக ரூபாய்
5,000 வழங்குகின்ற நிதியுதவியை புரட்சித் தலைவர் அவர்கள்
1978 ஆம் ஆண்டிலிருந்து கொடுக்க வேண்டுமென்பதாக உத்
தரவிட்டிருக்கிறார்கள். அந்த நிதியுதவிக்கு பதிலாகத்தான் இப்
போது இன்ஷூரன்ஸ் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள்.
அதன் மூலம், இன்றைக்கு மீனவர்கள் நான் குறிப்பிட்டதைப்
போல், மத்திய அரசு ரூ. 6, மாநில அரசு ரூ. 3, உறுப்பினர் ரூ. 3-ம்
கொடுக்க வேண்டியிருந்தது. ஆனால், இந்த ரூ. 3-ஐயும் கூட,
இந்த அரசே ஏற்றுக்கொள்ளலாம் என்று புரட்சித் தலைவர்
அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் குடும்பத்திற்கு
ரூ. 15,000 வரை மீனவர்கள் இறந்துவிட்டால், வழங்குகின்ற
நிலையில் கூட, உடலில் ஏதாவது ஒரு பகுதியில் நிரந்தர ஊனம்
ஏற்பட்டால், பகுதிப் பணமாக ரூ. 7,500 வழங்குகின்ற நிலையில்,
அதன்மூலம் அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் சூழ்நிலையை
இந்த அரசு தந்திருக்கிறது.

சேமிப்பு நிவாரணத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள்
சொன்னார்கள். மாதம் ஒன்றுக்கு ரூ. 10, 10 ஆக வசூல்
செய்து, ரூ. 90-ஒடு அரசு ரூ. 90-ஐச் சேர்த்து, ரூ. 180-ஆக
தருவது, பருவ நிலை சரி இல்லாத காலங்களில், மீன்பிடிப்பு
இல்லாத காலங்களில் மட்டும் மாதம் ரூ. 60 வழங்குகின்ற
இந்தத் திட்டம், மிகவும் சொற்பமான ரூபாய் என்று சொன்
னார்கள். அவர்கள் மீன் பிடிக்காத அந்த 3 மாத காலங்களில்,
கடல் கொந்தளிப்புக் காலங்களில், ஏதாவது உதவி செய்யவேண்டு
மென்ற நல்ல நோக்கத்தோடுதான் இந்தத் திட்டத்தை அறி
வித்திருக்கிறார்கள். அதன் மூலம் மேலும் நல்ல வரவேற்பு
தமிழகத்திலே உள்ள மீனவர்கள் மத்தியிலே இருக்கிறது. ரூ. 10,
10 ஆக அவர்கள் கொடுத்து, இந்தத் திட்டத்தில் பயனடைகிற
அளவிற்கு அவர்கள் இதை ஆதரித்திருக்கிறார்கள் என்ற
செய்தியை உங்கள் மத்தியில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



1984 ஏப்ரல் 12] [திரு. க. கலைமணி]

மீன்பிடிப்பு மேற்கொள்வதற்காக 20 விழுக்காடு மான்
யத்துடனும், 80 விழுக்காடு கடன் உதவியுடனும், பல்வேறு திட்
டங்களை எல்லாம் மீனவர்களுக்காக அரசு செய்து வருகிறது.
அவர்கள் வைத்திருக்கிற நாட்டுப் படகுகளுக்கு மோட்டார்,
பொருத்துவதற்கும், வலைகள் வாங்குவதற்கும் போன்ற பல்வேறு
கடன் உதவிகளை எல்லாம் அரசு பல்வேறு நிதி நிறுவனங்கள்
மூலம் அளித்து வருகிறது. விசைப் படகுகளை தனி நபர்களுக்கு
வழங்கிவந்தார்கள். அதை மாற்றி கூட்டுறவுச் சங்கங்களுக்கு
வழங்குவதன் மூலம், அந்தச் சங்கங்களிலே இருக்கின்ற ஒட்டு
மொத்தமான உறுப்பினர்கள் பயன்பெறத் தக்க வகையில், எல்
லோரும் பயனடைய வேண்டும் என்ற முறையில் இனிமேல் விசைப்
படகுகளை வழங்கும்போது, தனி நபர்களுக்கு வழங்குவதை
விடுத்து, கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்குகின்ற முறையை அரசு
மேற்கொண்டிருக்கிறது என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்பு
கிறேன்.

(பிற்பகல் 1-40)

புதிய மீன்பிடித் துறைமுகங்களில் அதிக அளவில் இப்போது
வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதன் மூலம்,
மீன்பிடி விசைப்படகுகளை பாதுகாப்பாக நிறுத்துவதற்கும்,
அதிலே உள்ள மீன்களை இறக்குவதற்கும், அவர்களுக்கு மேலும்
வசதிகளைச் செய்வதற்கும், மீனவர்களுடைய மேம்பாட்டிற்கும்,
பொருளாதார வளர்ச்சிக்கும், இந்த அரசு செயலாற்றிக்
கொண்டிருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும், உள்நாட்டு மீன்வளத்
தைப் பொறுத்த வரையில், மீன்குஞ்சுகள் தேவைக்கும், மீன்
குஞ்சுகள் உற்பத்திக்கும் பெரிய அளவில் இடைவெளி உள்ளது.
நம் நாட்டில், உள்நாட்டு நீர்நிலைகளில் சேகரிப்புச் செய்வதற்குத்
தேவையான மீன்குஞ்சுகளின் எண்ணிக்கை 360 மில்லியன்களாக
இருக்கையில், தற்போதைய மீன்குஞ்சு உற்பத்தியின் அளவு
மொத்தத்தில் 130 மில்லியன்கள் மட்டும் இருப்பதால், மீன்
குஞ்சுகள் உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய இயற்கை முறையில்
போதிய வாய்ப்பில்லை என்பதை இந்த அரசு உணர்ந்து, மீன்
குஞ்சு உற்பத்திக்கு தூண்டுதல்மூலம் மீன்குஞ்சு உற்பத்தி முறை
பின்பற்றப்படுகிறது என்பதையும் இந்தத் தருணத்தில் நான்
சொல்லிக்கொள்கிறேன். இதன் மூலம் உள்நாட்டில் இருக்கின்ற
மீனவர்களுக்கு வாய்ப்பு அளிக்கவும், மீன் உற்பத்தியை அதிக
அளவில் செய்யவும், மீன் உண்பவர்களுக்கு அதிக அளவில் மலி
வான விலையில், நியாயமான விலையில் மீன் கிடைக்கவும் அரசு
திட்டமிட்டு இருக்கிறது. மீன் வளர்ப்போர் மேம்பாட்டு
முகமை என்ற பெயரில் வேலையற்று இருக்கிற மீனவர்களுக்கு
ஏரி குளங்களைத் தந்து அவர்கள் மீன் வளர்ப்பதற்கு அரசின்
மூலமாக மானியத்துடன் கடன்களை எல்லாம் வழங்கி மீன்களை
எல்லாம் அதிக அளவிலே வளர்த்து அவர்கள் தங்கள் வருவாய்
யைப் பெருக்குவதற்கும், அதன் மூலம் அவர்கள் வேலைவாய்ப்

பைப்பெறவும் முடியும். அதோடு, மற்ற மக்களுக்கும் நல்ல
புரதச்சத்து மிகுந்த மீன் உணவு அளிக்கின்ற இந்தத் திட்டத்தை
இந்த அரசு செயலாற்றி வருகிறது என்பதை எல்லாம் எடுத்துச்
சொல்லி, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்
டுந் தீர்மானங்களை திரும்பப் பெற்று, இந்த மானியத்தை
நிறைவேற்றித் தருமாறு கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவாதம் முடி
வுற்றது ; இப்போது வாக்கெடுப்பு.

திருவாளர்கள் கெ. சொக்கலிங்கம், டி. மணி ஆகியவர்க
ளுடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன்,
திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்
னுள்ள கேள்வி.

" மானியக் கோரிக்கை எண். 21—மீனளம் என்ற தலைப்
பின் கீழ் ரூ. 5,80,85,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு
வழங்கப்பெற வேண்டும் ".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று,
நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்
பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின்
இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 16—4—1984
காலை 9—00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1—42 மணிக்கு ஒத்திவைக்கப்
பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும் எதுவுமில்லை

ஆ. அறிக்கைகள் அறிவிப்புகள் ஏனைய தாள்கள்

118. கோரிக்கை எண். 27— தமிழ்நாடு கதர்—கிராமத்
தொழில் வாரியத்தின் கொள்கையும், திட்டங்களும் பற்றிய
குறிப்பு, 1984—85 (தமிழ், ஆங்கிலம்)

119. கோரிக்கை எண். 21—மீன் வளத்துறை பற்றிய
கொள்கை விளக்கக் குறிப்பு, 1984—85. (தமிழ், ஆங்கிலம்)

120. 1984—85—ஆம் ஆண்டின் மீன் வளத்துறை பற்றிய
செயல்வினை முறைத் திட்டம். (ஆங்கிலம்)

121. 1983—84—ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக்
குழுவின் ஆறாவது அறிக்கை. (ஏழாவது சட்டமன்றப் பேரவை



## இணைப்பு I.

(337..ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண். 27.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்.

கொள்கையும் திட்டங்களும்.

கதர் கிராமத் தொழில்களின் வளர்ச்சியைத் தீவிரப்படுத்துவதற்காக 1960 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் ஏற்படுத்தப்பட்டது. கதர் கிராமத் தொழில் திட்டத்தின் குறிக்கோள் குறைந்த மூலதனத்தில் நலிவுற்ற மக்களுக்காக அவரவர் இருப்பிடங்களிலேயே கூடங்களை நிறுவி ஓரளவு வேலை வாய்ப்பை ஏற்படுத்தி அதன் மூலம் கதர் மற்றும் கிராமத் தொழில்களை ஆங்காங்கே கிடைக்கும் பொருட்களைக் கொண்டு கிராம கைவினைஞர்களின் இருப்பிடங்களுக்கருகிலேயே குறைந்த மூலதனத்தில் வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தருவதாகும். இவ்வடிப்படை நோக்கங்களிலேயே பயிற்சி அளிப்பது உட்பட கிராமத் தொழில் உற்பத்தி வளர்ச்சிக்கான திட்டங்களை வகுத்து அவற்றை மாநிலம் முழுமையும், செயல்படுத்துவது இவ்வாரியத்தின் தலையாய பணியாகும்.

2. கதர் கிராமத் தொழில் ஆணைக்குழுவினால் கிராமத் தொழில்கள் என வகைப்படுத்தப்பட்ட 26 தொழில்களில் கீழ்க்கண்ட 16 கிராமத் தொழில்களையும், கதர் தொழிலையும், இவ்வாரியம் செயல்படுத்தி வருகிறது.

1. பனைத் தொழில்.

2. செக்கு எண்ணெய்.

3. கைக்குத்தல் அரிசி மற்றும் தானியங்களையும் பருப்பு வகைகளையும் செய்முறைப்படுத்துதல்.

4. தோல் தொழில்.

5. மட்பாண்டம் (செங்கற்கள், ஓடுகள்).

6. சுண்ணாம்புக்கல் மற்றும் சுண்ணாம்பு சூளை (காளவாய்).

7. தேனீ வளர்த்தல்.

8. தச்சு கருமார் தொழில்.

9. பழங்களைப் பதப்படுத்துதலும், பாதுகாத்தலும்.

10. கையாடல்செய்யப்பட்ட காகிதம்.

11. வெல்லம் மற்றும் கந்தசாரி சர்க்கரை.

12. சமையலுக்குப் பயன்படாத எண்ணெய் மற்றும் சோப்பு

13. நார் தொழில்.

14. பிரம்பு மூங்கில்.

15. பாலி வஸ்திரா.

16. லோக் வஸ்திரா.

3. தமிழ்நாடு அரசால் கிராமத் தொழில்கள் என அறிவிக்கப்பட்ட பின் வரும் தொழில்களையும் இவ்வாரியம் ஊக்குவித்து வளர்த்து வருகிறது. :—

1. ஊதுபத்தி.

2. சிகைக்காய்த்தூள்.

3. பற்பொடி.

4. நீலகிரித் தைலம்.

4. இவ்வாரியம் கைராட்டை மற்றும் அம்பர் ராட்டை நூற்பாளர்களுக்கு பஞ்சினை விற்று அவர்களது நூலை கொள்முதல் செய்வதன் மூலம் அவர்களை தொடர்ந்து ஆதரித்து வருகிறது. வாரியத்தின் கீழ் 500 கிராமிய நூற்பு நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்நிலையங்களில் 6 கதிர் அல்லது 12 கதிர் உள்ள ராட்டைகள் உள்ளன. இவற்றைப் பெரும்பாலும் பெண்களே இயக்கி வருகின்றனர். இவ்வகை ராட்டைகள் நூற்கும் நூற்பாளர்கள் ஒரு நாளைக்கு சராசரி கூலி ரூ. 5-லிருந்து ரூ. 5.25 வரையில் பெறுகின்றனர். இவ்வாறு கொள்முதல் மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட நூலை வாரியமே தனது 81 நிலையங்கள் மூலமாக துணியாக நெசவு செய்ய நெசவாளர்களுக்கு வழங்குகிறது. நெசவாளர்கள் நாள் ஒன்றுக்கு ரூ. 15 கூலியாக பெறுகின்றனர். கதரில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களுக்கு, அவர்களது ஊதியத்தில் 8 விழுக்காடு ஊக்க ஊதியமும் வழங்கப்படுகிறது.

5. ஏற்கனவே உள்ள 2 பஞ்சுடைத்து பட்டை போடும் இயந்திரம் மற்றும் 104 பஞ்சுடைக்கும் கருவிகளுடன், கூடுதலாக இவ்வாண்டு 1 பஞ்சுடைத்து பட்டை போடும் இயந்திரம் வாங்கப்



பட்டுள்ளது. இந்த 104 பஞ்சுடைக்கும் கருவிகளில் 73 கருவிகள் இயங்கி வருகின்றன. 5 கருவிகளுக்கு மின் இணைப்பு கிடைக்க வேண்டியுள்ளது. எஞ்சியுள்ள கருவிகள் நிறுவும் பணி பல்வேறு கட்டங்களில் உள்ளது.

6. வாரியத்தின் கீழ் 17 பட்டு உற்பத்தி நிலையங்களும் 6 பட்டு முறுக்கும் நிலையங்களும் உள்ளன. வாரியத்தின் பட்டாடைகள் தங்களுக்கென்று ஒரு நற்பெயரை ஏற்படுத்தி கொண்டுள்ளன.

7. நூல் உற்பத்தி 1981–82 ஆம் ஆண்டில் 355·72 இலட்சம் சிட்டங்களாக இருந்தது. 1982–83-ல் 377.92 இலட்சம் சிட்டங்களாக உயர்ந்துள்ளது. 1983 டிசம்பர் மாதம் முடிய 328.60 இலட்சம் சிட்டங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. 1981–82ல் கதர் துணி உற்பத்தியின் மதிப்பு ரூ. 657.78 இலட்சமாக இருந்தது, 1982–83-ல் ரூ. 739.87 இலட்சத்தை அடைந்துள்ளது. டிசம்பர் 1983 வரை ரூ. 546.88 இலட்சம் மதிப்புள்ள துணி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

8. 1981–82-ல் ரூ. 256.81 இலட்சம் மதிப்புள்ள பட்டுத் துணி உற்பத்தி செய்யப்பட்டது. 1982–83ல் ரூ. 272.23 இலட்சமாக உயர்ந்தது. டிசம்பர் 1983 முடிய ரூ. 197.54 இலட்சம் மதிப்புள்ள பட்டு துணி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

9. வாரியம் மஸ்லின் கதர் உற்பத்தி செய்யும் பொருட்டு முன்மாதிரியாக கன்னியாகுமரி மாவட்டத்தில் உற்பத்தியை தொடங்கியுள்ளது. மஸ்லின் கதர் உற்பத்தியில் கிடைத்துள்ள ஆதரவைக் கொண்டு மேலும் பல மஸ்லின் கதர் உற்பத்தி நிலையங்களை தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில் ஏற்படுத்த கருதியுள்ளது.

10. வாரியம் ஏற்கனவே பவானிசாகரில் உள்ள சாய சலவை அச்சு அலகுடன், 1983-84 ல் மேற்கொண்டு 3 சாய அலகுகளை முறையே தாராபுரத்திலும், ஜலகண்டபுரத்திலும், தஞ்சாவூரிலும் ஏற்படுத்தியுள்ளது. டிசம்பர் 1983 ஆம் ஆண்டு வரை ரூ. 240 இலட்சம் மதிப்புள்ள துணிகள் செய்முறை செய்யப்பட்டன.

11. மாநில அரசு திரு. காமராஜ், பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார் ஆகியவர்களது பிறந்த நாள் விழாக்களை யொட்டி ஆண்டுதோறும் 10 விழுக்காடு 30 நாட்களுக்கும் மற்றும் விழாக்காலங்களையொட்டி 5 விழுக்காடு 60 நாட்களுக்கும் கதர் விற்பனையில் தள்ளுபடி அளித்து வந்தது. விழாக்காலங்களுக்கு வழங்கும் தள்ளுபடியை 5 விழுக்காட்டிலிருந்து

10 விழுக்காடாக 1983–84-ல் அரசு உயர்த்தியுள்ளது. மொத்தத்தில் 1983–84 முதல் 10 விழுக்காடு தள்ளுபடியை 90 நாட்களுக்கு அரசு அனுமதித்துள்ளது.

12. 1983-84-ல் தமிழக அரசு முதன் முறையாக விழாக் காலங்களில் விற்கப்படும் பாலியஸ்டர் துணிகளுக்கு 60 நாட்களுக்கு 10 விழுக்காடு தள்ளுபடி அளிக்க அனுமதித்துள்ளது. பாலியஸ்டர் துணி விற்பனைக்கு தமிழ் நாட்டில்தான் மாநில அரசின் உதவியோடு தள்ளுபடி அளிக்கப்படுகிறது. இத்தகைய தள்ளுபடி இந்நாட்டில் வேறெங்கும் மாநில அரசு உதவியுடன் அளிக்கப்படவில்லை.

13. கதர் விற்பனைக்கென 155 கதர் அங்காடிகள் உள்ளன. 1981–82-ல் ரூ. 785.85 இலட்சம் மதிப்புள்ள கதர் விற்பனை செய்யப்பட்டது. இது 1982–83-ல் ரூ. 903.68 இலட்சத்திற்கு உயர்ந்தது. 1983 டிசம்பர் திங்கள் முடிய ரூ. 943.36 இலட்சம் கதர் விற்பனை செய்யப்பட்டது.

14. 1982-83-ல் 1,711 நபர்களுக்கு கூடுதல் வேலைவாய்ப்பு கதர் திட்டத்தின் மூலம் ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளது. 1983–84 டிசம்பர் வரை 1,830 நபர்களுக்கு கூடுதல் வேலை வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

15. வழிமுறையாக நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளோர்களின் எண்ணிக்கை குறைந்து வருவதால் அக்குறையை நீக்கவும் அதே நேரத்தில் கிராமப்புறங்களில் கூடுதல் வேலைவாய்ப்பளிக்கவும் புது மாதிரி தறி அலகுகளை அமைக்கும் திட்டம் வரையப்பட்டுள்ளது. ஒவ்வொரு அலகிலும் 40 நெசவாளர்களும் 10 உதவியாளர்களுமாக குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களையும் பழங்குடியினரையும் இத்தொழிலில் ஈடுபடுத்தி அவர்களுக்கு ஒரு நிலையான வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தரவுள்ளது.

கிராமத் தொழில்கள்.

16. கிராமத் தொழில்கள் கிராமப்புறங்களில் கிடைக்கின்ற மூலப்பொருட்களைக் கொண்டும், மனித சக்தியினைக் கொண்டும் நுகர்பொருட்கள் உற்பத்தி செய்யும் வகையில் அமையப்பெற்றுள்ளன. குறைந்த மூலதனத்தில் அதிகமாக வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித் தரக்கூடிய வகையில் கிராமத் தொழில்கள் அமையப்பெற்றுள்ளன. வாரியம் 1983–84 ஆம் ஆண்டில் கூடுதலாக அதிக அளவில் வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித் தர முனைந்துள்ளது.



17. வாரியத்தின்கீழ் டிசம்பர் 1983 முடிய 174 துறை பிரிவுகளும் 1,261 தொழில் கூட்டுறவு சங்கங்களும் செயல்படுகின்றன. 41,476 கைவினைஞர்களுக்கு தத்தம் தொழிலை சிறப்புற ஏற்று நடத்திட ஏதுவாக நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. 1981–82-ல் கிராமத் தொழில்களின் உற்பத்தி, விற்பனை முறையே ரூ. 5,403.41 இலட்சமாகவும், ரூ. 5,844.88 இலட்சமாகவும் இருந்தன. அவை 1982–83-ல் முறையே ரூ. 6,512.02 இலட்சமாகவும், ரூ. 7,150.88 இலட்சமாகவும் உயர்ந்துள்ளன. 1983 டிசம்பர் திங்கள் முடிய உற்பத்தி விற்பனை முறையே ரூ. 3,683.62 இலட்சமும், ரூ. 3,[illegible]53.90 இலட்சமும் ஆகும். இதுவரை 4.89 இலட்சம் பேர்களுக்கு நிலையான வேலை வாய்ப்பு கிராமத் தொழில்களின் மூலம் ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளது. மற்றும் பின்வரும் கிராமத் தொழில்கள் அதிக வேலை வாய்ப்பு அளிக்கக்கூடியன என கண்டறிந்து நடப்பு திட்ட காலத்தில் அவற்றினை பெருமளவில நிறைவேற்றிட திட்டமிடப்பட்டு வாரியம் செயலாற்றி வருகிறது.

பனைத் தொழில் :

18. தமிழகத்தில் மிகவும் அதிக அளவில் பனைமரங்கள் உள்ளன. பனைமரங்களை மிகச் சிறந்த அளவில் பயன்படுத்திட அவற்றிலிருந்து கிடைக்கும் பல பொருட்களையும் ஒரே இடத்தில் உற்பத்தி செய்யும் நிலையங்கள் செங்கற்பட்டு மாவட்டத்தில் மாதாவரம், தர்மபுரி மாவட்டத்தில் மாத்தூர், திருநெல்வேலி மாவட்டத்தில் அருந்ததியர்புரம், சேலம் மாவட்டத்தில் ஜலகண்டபுரம், கோவை மாவட்டத்தில் கிணத்துக்கடவு, இராமநாதபுரம் மாவட்டத்தில் மாரியூர், தென்னாற்காடு மாவட்டத்தில் மா. பொதியூர் மற்றும் புதுக்கோட்டை டவுன் ஆகிய இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள மாவட்டங்களில் இத்தகைய உற்பத்தி நிலையங்களை அமைத்திடவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

19. 1983–84–ல் டிசம்பர் திங்கள் முடிய 4.15 இலட்சம் பாட்டில்கள் பாம்கூலா உற்பத்தி செய்யப்பட்டன. 1982–83 ஆம் ஆண்டில் ரூ. 30.24 இலட்சம் மதிப்புள்ள பனை பொருட்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

20. நுங்கினையும், பனை வெல்லத்தையும் நீண்ட நாட்களுக்கு பாதுகாத்திடவும், பதனீரில் உள்ள சுண்ணாம்பு நெடியை குறைத்து பருகிட ஏதுவாக இருப்பதற்கும், பனை மரங்களின் உயரத்தைக் குறைப்பதற்கும், கோவை வேளாண்மை பல்கலைக்கழகம் செய்து வரும் ஆராய்ச்சி திருப்தியளிக்கும் வகையில் முன்னேறி வருகிறது.

கிராமிய எண்ணெய் :

21. இந்த திட்ட காலத்தில் இதுகாறும் 3,428 மின் விசைச்
செக்குகள் விநியோகம் செய்யப்பட்டன. எடுத்துச் செல்லக்
கூடிய வகையில் அமையப்பெற்ற மின்விசை செக்குகள் 350,
ஆரம்ப கட்டமாக இவ்வாண்டில் அளிக்க நடவடிக்கை மேற்
கொள்ளப்பட்டுள்ளது.

உண்ணா எண்ணெய் மற்றும் சோப்பு :

22. 40 உண்ணா எண்ணெய் வித்துக்கள் சேகரிக்கும் நிலையங்
கள் வாரியத்தின்கீழ் செயல்பட்டு வருகின்றன. எண்ணெய் வித்
துக்கள் சேகரிப்பதன் மூலம் கிராமத்தில் உள்ள மக்களுக்கு பயன்
தரக்கூடிய வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது. ஏற்கனவேயுள்ள
30 சோப்பு அலகுகளுடன் 1983-84-ல மேலும் கூடுதலாக 5
சோப்பு அலகுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சலவை சோப்புத்
தூள் உற்பத்தியையும் வாரியம் தற்போது மேற்கொண்டுள்ளது.

தோல் தொழில் :

23. காலணி தயாரிப்பாளரின் நலன் கருதி வழங்கப்பட்ட
'காலணி பெட்டி கூடங்கள்' எல்லோரின் பாராட்டையும் பெற்ற
தாகும். வாரியம் 1982-83 ஆம் ஆண்டில் 500 "பெட்டி
கூடங்களை" அளித்துள்ளது. 1983-84 ஆம் ஆண்டில் மேலும்
500 "பெட்டி கூடங்கள்" அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

கைமுறைக் காகிதம் :

24. வாரியத்தின் கீழ் 10 கைமுறை காகித அலகுகள் செயல்
பட்டு வருகின்றன. அரசு அலுவலகங்களின் தேவையில் ஒரு
பகுதியை கைமுறை காகிதமாகவே வாங்க வேண்டும் என்ற வாரி
யத்தின் கோரிக்கையை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. இது
கைமுறை காகித அலகுகள் உற்பத்தியையும், விற்பனையையும்
பெருக்கிட கிடைத்த ஒரு புதிய வாய்ப்பாகும்.

கிராமத் தொழில் பொருட்கள் விற்பனை :

25. கிராமத் தொழில் பொருட்களின் தரம் யாவரும் அறிந்த
தாகும். கிராமத் தொழில் பொருட்களின் தேவைகள் நகர்ப்புற
மக்களிடையே நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே வருகிறது.
பெருகி வரும் தேவையினை பூர்த்தி செய்யும் வகையில் இப்
பொருட்களை நகரத்தின் குடியிருப்பு பகுதிகளில் விற்பனை
செய்யும் பொருட்டு சென்னை நகரில் முன்னோடித் திட்டமாக
20 பெட்டி கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.





26. சிறப்புத் திட்டங்கள் :

(அ) ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் :

இம்மாநிலத்திலுள்ள பழங்குடியினர்களின் பொருளாதார
நிலையினை உயர்த்துவதற்கும் அவர்களுக்கு வேலை வாய்ப்பு
ஏற்படுத்தித் தரவும் அரசு ரூ. 28.15 இலட்சம் இதுகாறும் வழங்
கியுள்ளது. இத்திட்டத்தின்படி தேனீ பெட்டிகள், தச்சு,
கொல்லு தொழில் கருவிகள் வாங்க நிதியுதவியும் அரசின் உதவித்
தொகையினைக் கொண்டு அளிக்கப்படுகிறது. பிரம்பு
மற்றும் மூங்கில் தொழிலில் பழங்குடியினருக்கு பயிற்சியும்
அளிக்கப்படுகிறது. இதுகாறும் இத்திட்டத்தின்கீழ் 1945 நபர்கள்
பயனடைந்துள்ளார்கள். சேலம் மாவட்டத்தில் கொல்லி மலை,
கல்ராயன் மலை மற்றும் வட ஆற்காடு மாவட்டத்தில் ஜவ்வாது
மலை ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் கதர் மற்றும்
கிராமத் தொழில் திட்டங்களை தீவிரமாக செயல்படுத்த
தனி உதவி இயக்குநர்களின் அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட்டன.
1984-85-ல் பல்வகை திட்டங்களை செயல்படுத்த ரூ. 10.00
இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஆ) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் :

அரசு நீலகிரி மாவட்டத்தில் தேனீப்பெட்டிகள் வழங்கவும்
தைலம் காய்ச்சும் கருவிகள் வழங்கவும், எண்ணெய் மற்றும்
ரொட்டி தயாரிக்கும் கூட்டுறவு சங்கங்களை ஏற்படுத்துவதற்
காகவும் ரூ. 40.00 இலட்சம் வழங்கியுள்ளது. 1984—85-ம் ஆண்டு
அரசு இத்திட்டத்தை தொடர்ந்து நடத்திட ரூ. 5 லட்சம்
ஒதுக்கீடு செய்துள்ளது.

(இ) வறட்சிப் பகுதிகளுக்கான திட்டம் :

தர்மபுரி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் வளர்ச்சிப்
பணிக்காக ரூ. 129.09 இலட்சம் அரசு வழங்கியுள்ளது.

(ஈ) சுய வேலை வாய்ப்புத் திட்டம் :

கிராமிய கைவினைஞர்கள் அவரவர் செய்யும் தொழிலில்
தேர்ச்சி பெறும் பொருட்டு 4,277 பேர்களுக்கு பயிற்சி அளிக்க
ரூ. 17.92 இலட்சம் அரசு அனுமதித்துள்ளது.

(உ) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் :

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அரசு
அளிக்கும் அனைத்து சலுகைகளையும் பெற்று பல்வேறு திட்டங்
கள் நிறைவேற்றிவரப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ்

வறுமைக்கோட்டிற்கு கீழேயுள்ள 10206 கைவினைஞர்களுக்கு பயிற்சியளித்து இன்ன பிற வசதிகளை ஏற்படுத்தித்தர இதுகாறும் அரசு ரூ. 113.20 இலட்சம் வழங்கியுள்ளது.

(ஊ) சிறப்பு மேம்பாட்டுத் திட்டம் மற்றும் கிளஸ்டர் அபிவிருத்தி திட்டம் :

அரசு ஆதி திராவிட மக்களுக்கு கிராமப் புறங்களில் வேலை வாய்ப்பு ஏற்படுத்தி அவர்கள் கதர் கிராமத் தொழில் திட்டங்களில் ஈடுபடும் பொருட்டு சிறப்பு மேம்பாட்டுத் திட்டம் மற்றும் கிளஸ்டர் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் வழிவகை செய்துள்ளது.

27. 1984–85 ஆம் ஆண்டுக்கான திட்டங்கள்.

1984–85 ஆம் ஆண்டில் (கீழ்க் கண்ட திட்டங்களை). மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது :—

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1. குழி தறிகளை நவீனப்படுத்த 100 கதர் நெசவாளர்களுக்கு உதவி அளித்தல் .. | 1.00 |
| 2. ஜெக்கார்டுபெட்டிகள் வாங்கி 200 கதர் நெசவாளர்களுக்கு விநியோகித்தல் .. | 0.33 |
| 3. பாலிவஸ்திரா நெசவில் அபிவிருத்தி செய்ய 50 நெசவாளர்களுக்கு உதவி அளித்தல் .. | 0.50 |
| 4. மட்பாண்ட கைவினைஞர்களுக்காக பொது சேவை தொழில் நிலையம் நிறுவும் திட்டம் | 6.00 |
| 5. பனந்தும்பு சேகரித்தல், அப்பொருட்களில் வடிவமைப்பு செய்தல் மற்றும் தூரிகை தயாரிப்பு நிலையம் நிறுவும் திட்டம் .. | 3.00 |
| | 10.83 |

வாரியத்தின் நிதி நிலை.

28. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் அரசின் வரவு, செலவு திட்ட அமைப்பினை பின்பற்றி முறையே கதர், நிதி, கிராமத் தொழில் நிதி என இரண்டு தலைப்பு கணக்குகளின் கீழ் தனது வரவு செலவு திட்டங்களை தயாரிக்கிறது.



29. கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு : இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனது நிதி உதவி கொள்கையின் படி பல திட்டங்களை அமுலாக்கி நடத்த நிதி உதவி அளிக்கிறது. வணிக முறை சாராத இனங்களில் வரவுக்கும் செலவுக்கும் இடையே ஏற்படுகிற நிகர வித்தியாசத் தொகையினை தமிழ் நாடு அரசு ஈடுசெய்து உதவுகிறது.

30. 1983–84 ஆம் ஆண்டின் ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டத்தின் கீழ் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு கீழ்க் கண்ட நிதிகளை ஒதுக்கியுள்ளது.

| | கதர் கிராமத்தொழில் ஆணைக்குழுவிடமிருந்து. | | வங்கிகளிடமிருந்து. |
|---|---|---|---|
| | மானியம். | கடன். | கடன். |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1. கதர் .. .. | 2.16 | 239.02 | 421.51 |
| 2. கிராமத் தொழில்கள் | 49.54 | 285.59 | 570.20 |
| | 51.70 | 524.61 | 991.71 |

[1984 ஏப்ரல் 12

31. கதர் கிராமத் தொழில் ஆணைக்குழுவின் நிதி உதவியை தவிர தமிழ்நாடு அரசால் வாரியத்தில் ஒப்படைக்கப்படும் சிறப்புத் திட்டங்களை செயல்படுத்த, தமிழ்நாடு அரசிடமிருந்து நிதி உதவி இவ்வாரியத்திற்கு கிடைக்கிறது. தமிழ்நாடு அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி உதவியின் விவரம் பின்வருமாறு :—

| | 1983-84 | 1984-85 |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1. மாநில அரசிடமிருந்து கிடைக்கும் மானியங்கள் :— | | |
| (1) கதர் நிதிக்கான நிகர செலவின மானியம் .. .. .. | 46.75 | 49.10 |
| (2) கிராமத் தொழில் நிதிக்கான நிகர செலவின மானியம் .. | 54.50 | 56.25 |
| (3) தணிக்கை கட்டணம் .. .. | 18.00 | 18.90 |
| (4) கதர் விற்பனையில் தள்ளுபடி .. | 60.00 | 65.00 |
| (5) மற்ற சிறப்புத் திட்டங்களை செயல்படுத்த .. .. | 43.21 | 39.75 |
| | 222.46 | 229.00 |
| 2. தமிழ்நாடு அரசிடமிருந்து கிடைக்கும் கடன் :— | | |
| இதர சிறப்புத் திட்டங்களை செயல்படுத்த .. .. | 1.93 | 0.01 |
| மொத்தம் .. | 224.39 | 229.01 |



1984 ஏப்ரல் 12]

கோரிக்கை எண். 27 கதர்—1984-85.

321. கிராமக் கைத்தொழில்களும், சிறுதொழில்களும் :

1. திட்டத்தில் சேராதவை:—

| | | (ரூபாய்களில்) |
|---|---|---|
| AA | கதர் வளர்ச்சிக்காக தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்—09 உதவி மானியங்கள் .. .. .. | 49,10,000 |
| AB | தணிக்கைக் கட்டணங்கள் செலுத்த தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு மானியங்கள்—09 உதவி மானியங்கள் .. .. .. | 18,90,000 |
| AD | கிராமத் தொழில் நிதிக்காக தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு மானியங்கள்—09 உதவி மானியங்கள் .. .. .. .. | 56,25,000 |
| AF | பதநீர் இறக்குவோர் துயர் தணிப்பு மறுவாழ்வுக்காக தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு மானியங்கள்—09 உதவி மானியங்கள் | 10,000 |

2. மாநிலத் திட்டம் :—

| | | |
|---|---|---|
| JC | கதர் துணி விற்பனை மீது தள்ளுபடி —09 உதவி மானியங்கள் .. .. | 65,00,000 |
| JF | கதர் வளர்ச்சிக்கான புதிய திட்டங்கள் 09— உதவி மானியங்கள் .. .. | 13,34,000 |
| AM | பழங்குடியினர் பகுதிகள் துணைத் திட்டம் .. .. .. .. | .... |
| JA | பழங்குடியினருக்கு தேனீ வளர்க்கும் பெட்டிகள் வழங்கல் 01 சம்பளங்கள் 09—உதவி மானியங்கள் .. .. | 10,00,000 |
| JH | நீலகிரி மாவட்டத்தில் தேனீ வளர்ப்பு கிராமத் தொழில் வாரியத்திற்கு மானியங்கள்—09 உதவி மானியங்கள் .. | 4,00,000 |

(ரூபாய்களில்)

| | | |
|---|---|---|
| JJ | நீலகிரி மாவட்டத்தில் தைலங்கள் வடிக்கவும், தைலங்கள் வடிக்கும் இயந்திரங்கள் வழங்கவும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு மானியங்கள்—09 உதவி மானியங்கள் .. .. | 1,00,000 |
| JK | கண்ணாடிக்கல் மேம்பாட்டுப் பிரிவுக்கான தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு மானியம்—09 உதவி மானியங்கள் .. .. .. | 31,000 |
| JL | நார் சேகரித்தல், வடிவமைப்பு செய்தல் பிரஷ் தயாரிக்கும் பிரிவு ஏற்படுத்தும் திட்டத்திற்கு மானியங்கள்—09 உதவி மானியங்கள் .. .. .. | 3,00,000 |
| JM | மட்பாண்ட கைவினைஞர்களுக்குப் பொது சேவை நிலையத்தை ஏற்படுத்துவதற்காக தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்துக்கு மானியங்கள்—09 உதவி மானியங்கள் .. .. .. .. | 6,00,000 |
| JN | மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்புதியத் திட்டத்திற்கு ஒட்டு மொத்த நிதி ஒதுக்கம் .. .. .. | 2,00,000 |
| | மொத்தம் — | 2,29,00,000 |





## இணைப்பு II

(370-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க).

மீன் வளத் துறை.

கொள்கை விளக்கக் குறிப்பு 1984-85

புரதச் சத்து நிறைந்த மீன் சாதாரண மக்களும் மலிவான விலைக்கு வாங்கி உண்ணும் ஒரு உணவாகத் தொடர்ந்து விளங்குகின்றது. இந்த மீன் உணவின் உற்பத்தியைப் பெரிய அளவில் அதிகரிப்பு செய்து மக்களுக்கு நியாயமான விலையில் கிடைக்கச் செய்வதும் அதே சமயம் அந்த மீனைப் பிடித்துக்கொண்டு வரும் மீனவர்களுக்கும் போதிய வருமானம் கிடைக்கச் செய்வதும் அரசின் முக்கிய நோக்கமாக இருந்து வருகிறது. நம் தமிழகம் மீன்வளம் மிக்க நாடு என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவர். இம்மீன்வளம் மிகச் சிறப்பு வாய்ந்ததும் பல்வகைப்பட்டதும் ஆகும் என்பதையும் அவர்கள் அறிவர். சுமார் 1000 கிலோ மீட்டர் நீளமுள்ள நமது கடற்கரையோரப் பகுதியும் அதைச் சார்ந்த கடற்பரப்பும் மீன் பிடிப்பு செய்வதற்கும் நல்ல வாய்ப்புகள் அளிக்கின்றன. அதே போன்று, தமிழகத்தில் உள்ள சுமார் 3.69 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவுள்ள உள்நாட்டு நீர்நிலைகளும் உவர் நீர்ப் பரப்புகளும் உள்நாட்டு மீன்வளப் பெருக்கத்திற்கு வாய்ப்புகள் தருகின்றன. கடல் மீன் பிடிப்பில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தை வகிக்கிறது. முதல் இடத்தை மகாராஷ்டிர மாநிலமும் இரண்டாவது இடத்தைக் கேரள மாநிலமும் வகிக்கின்றன. உள்நாட்டு மீன் வளத்தில் நம் மாநிலம் மேற்கு வங்கத்திற்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தை வகிக்கிறது. நம் நாட்டு மொத்த மீன் உற்பத்தியில் 15 விழுக்காடு தமிழ்நாட்டின் பங்காகும். கடல் மீன் பிடிப்பு எனத் தனியாக எடுத்துக் கொண்டால் அது 19 விழுக்காடு ஆகும். உள்நாட்டு மீன் உற்பத்தி 18 விழுக்காடு ஆகும்.

2. கடல் உள்நாடு மற்றும் உவர் நீர் மீன் வளத் திட்டப் பணிகளைச் செயல்படுத்துவது மாநில மீன் துறையின் பொறுப்பாகும்.

3. மேலே குறிப்பிட்டுள்ள நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு ஆறாவது ஐந்தாவது திட்ட கால இறுதிக்குள் கடல் மீன் உற்பத்தியை 2.17 இலட்சம் டன்னிலிருந்து 3.00 இலட்சம் டன்னாகவும் உள்நாட்டு மீன் உற்பத்தியை 1.60 இலட்சம் டன்னிலிருந்து 2.10 இலட்சம் டன்னாகவும் பெருக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

3.1. சிறு தொழில் மீனவர்களின் மீன் பிடிப்புத் திறனையும் வருவாயையும் பெருக்குவதற்கேதுவாக அவர்களிடையேயுள்ள கலன்கள் மற்றும் கருவிகளின் செயல் திறனை மேம்பாடு அடையச் செய்தல்.

3.2. ஆழ்கடல் மீன் வளத்தைப் பயன்படுத்திக் கொள்ள மீன்பிடி நாவாய்களின் எண்ணிக்கையைப் பெருக்குதல்.

3.3. கடல் மீன் வளம் சார்ந்த நடவடிக்கைகளில் விரைவான முன்னேற்றம் அடைய உதவி செய்யும் வகையில் மீன் இறக்கும் இட வசதி, தங்குதுறை வசதி, மீன்பிடி துறைமுக வசதி போன்ற அடிப்படை வசதிகளை உருவாக்குதல்.

3.4. கூட்டுறவுச் சங்கங்களின் ஒத்துழைப்புடன் உள்நாட்டு நீர் நிலைகளில் மீன் வளர்ப்பு, உவர் நீர் நிலைகளில் இறால் வளர்ப்பு போன்றவைகளை மேற்கொண்டு உற்பத்தியைப் பெருக்குதல்.

3.5. மீன் பிடிப்பு மற்றும் மீன் விற்பனையைத் தாங்களாகவே மேற்கொள்வதற்கேதுவாக நிதியுதவியளித்து மீனவர் கூட்டுறவுகளுக்குப் புது வலிமையூட்டுதல்.

3.6. மீன் விற்பனையைச் சீரான முறையில விரிவுபடுத்தி அதன் மூலம் பொது மக்களுக்கு நியாய விலையில் மீன் கிடைப்பதற்கு உத்திரவாதமளித்தல்.

3.7. நம் தமிழகத்தில் ஆண்டு முழுவதும் நீர் நிறைந்திருக்கிற நீர்நிலைகளையும், மழைக்காலங்களில் மட்டும் நீர் இருக்கக்கூடிய நீர்நிலைகளையும் இவை இரண்டிற்கும் இடைப்பட்ட, அதாவது வருடத்திற்கு 9 மாதங்களில் நீர் இருக்கக்கூடிய நீர் நிலைகளையும் மீன் வளர்ப்பிற்கு உட்படுத்துதல்.

3.8. தமிழகத்தில் பரவலாக உள்ள உவர் நீர் நிலைகளில் மீன் உற்பத்தியைப் பெருக்குவதற்கு அந்த நீர்நிலைகளை மீன் வளர்ப்பிற்கும், நண்டு நத்தை போன்ற உயிரின வளர்ப்பிற்கும் உட்படுத்துதல்.

3.9. மீன் பிடிக் கிராமங்களில் அடிப்படையான மற்றும் அத்தியாவசியமான வசதிகளைச் செய்து கொடுத்தல்.

4. கடல் மீன் வளம் :

தொடர்ந்து ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்திலும் மீன்பிடி இயந்திரப் படகுகளை அறிமுகப்படுத்தும் திட்டத்தில் அதிகக் கவனம் செலுத்தப்பட்டது. இது குறித்துச் செயல்படுத்தப்பட்ட பல திட்டங்களின் காரணத்தால் 1961-62-ல் 93,280 டன்னாக இருந்த கடல் மீன் உற்பத்தி 1971-72-ல் 2,12,937 டன்னாகவும், 1982-83ல் 2,60,000 டன்னாகவும் உயர்ந்துள்ளது. மாநிலத்தில் பிடிக்கப்படும் மீன் உற்பத்தியில் 70 விழுக்காடு நாட்டுக் கலன்களால் பிடிக்கப்படுகிறது. எனவே நாட்டுப் படகுகள், கட்டுமரங்கள், வள்ளங்கள் போன்றவைகளின் மீன்பிடி திறனை அதிகரிப்பதற்கு உதவி அளிக்க வேண்டியதன் அவசியம் உணரப்பட்டது. திட்டக் கமிஷனின் மாநில செயற்குழு மேற்கண்ட நோக்கத்திற்கு ஆதரவு தெரிவித்து



நாட்டுப் படகுதாரர்களுக்கு கண்ணாடியிழைப் படகுகளை வழங்குதல், நாட்டுப் படகுகளுக்கு உட்புறம்/வெளிப்புறம் பொருத்தப்பட்ட இயந்திரங்களை வைத்து நாட்டுப் படகுகளை இயந்திரமயமாக்குதல், இணைப்பு வலைகளை வழங்குதல் போன்றவற்றிற்கு நிதி ஒதுக்கீடு வழங்க முன் மொழிந்தது. பல்வகை மீன் பிடிப்பு மேற்கொள்வதற்கு 20 விழுக்காடு மானியத்துடனும் 80 விழுக்காடு கடன் உதவியுடனும் உட்புறம்/வெளிப்புறம் மோட்டார் பொருத்தப்பட்ட படகுகள் வலைகளுடன் வாங்குவதற்கான திட்டம் அங்கீகரிக்கப்பட்டது. அரசாங்கமும் தற்பொழுது விசைப் படகுகள் வழங்கும் முறையை மாற்றி தனி மீனவர்களுக்கு வழங்குவதை கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்குவதாக தீர்மானித்துள்ளது. அவ்வாறு வழங்கப்படும் இயந்திரப் படகுகளைக் கொண்டு கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களால் பங்கு அடிப்படையில் வரிசைப்படி குறிப்பிடப்பட்ட காலம் வரை மீன் பிடிப்பு மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தினால் பெருமளவில் பயனடைவோர் மீனவ சமுதாயத்தினர்.

4.1. அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தல்.

நாட்டுக் கலன்கள் பயன்படுத்தப்படும் மீன் பிடிக் கிராமங்களில் கரையோர வசதிகள் செய்து கொடுப்பதற்கு மத்திய அரசு 50 விழுக்காடு நிதியுதவி மானியமாக அளிக்க முன் வந்துள்ளது. இந்த நிதியுதவியைப் பயன்படுத்தி மேற்படி மீன் பிடிக் கிராமங்களில் கரையோர வசதிகள் செய்து கொடுக்கும் பொருட்டு, மீன்துறை, 200-க்கு மேற்பட்ட மீனவ குடும்பங்கள் வாழும் 33 மீன் பிடிக் கிராமங்களைத் தேர்ந்தெடுத்துள்ளது. இதற்காக, மீன்துறை ஒரு ''மாதிரி வடிவமைப்பும்'' இதற்காகும் செலவின மதிப்பீடும் தயார் செய்துள்ளது. இத்திட்டத்தின் முதற்படியாக, 10 மீன்பிடிக் கிராமங்களில் அடிப்படை கரையோர வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக, மைய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின் கீழ் நிதியுதவி வேண்டி மைய அரசிற்குப் பரிந்துரை செய்வதற்கான ஒரு கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

4.2. வழிகாட்டி விளக்குகள் அமைத்தல் :

இரவு நேரங்களில் தங்களுடைய கலன்களைப் பத்திரமாகக் கரைக்கு செலுத்துவதற்கேதுவாக உதவக் கூடிய வழிகாட்டி விளக்குகள் ஒரு முக்கியமான கரையோர வசதியாகும். அரசு மொத்தம் 40 மீன்பிடி கிராமங்களில் வழிகாட்டி விளக்குகள் அமைக்க ரூ. 11.10 இலட்சம் நிதி ஒப்புதல் வழங்கியுள்ளது.

4.3. அண்மைக் கடல் அளவாய்வு நிலையங்கள்:

சென்னை, கடலூர், மல்லிப்பட்டினம், இராமேஸ்வரம்., கன்னியாகுமரி ஆகிய ஐந்து இடங்களில் அண்மைக் கடல் அளவாய்வு நிலையங்களை மீன்துறை நிறுவியுள்ளது. இந்த நிலை

யங்க்ள், கடலில் 20 அடி ஆழ அளவில் ஆய்வு செய்து விசைப்
படகுகளைக் கொண்டு மீன்பிடிக்க தகுந்த இடங்களைக் கண்
டறிந்து மீன் பிடித் தொழிலுக்கு ஊன்றுகோலாக இருந்து
வருகின்றன. ஒவ்வொரு அளவாய்வு நிலையத்திற்கும், பல்வேறு
அளவுள்ள விசைப் படகுகள், ஒரு குறிப்பிட்ட கடற் பகுதியை
அளவை செய்வதற்கு என அளிக்கப்பட்டுள்ளன. இந்த அளவைப்
பணியின் பயனாக விசைப் படகுகள் தமிழ்நாட்டுக் கரையைச்
சார்ந்த கடற் பகுதிகள் முழுவதிலும் சென்று மீன் பிடிக்க
இயலுகிறது. மேலும் இறால் மீன்கள் மிகுதியாகக் கிடைக்கும்
இடங்களும் கண்டறிய முடிகிறது. இந்த ஆய்வுப் பணியின்
விளைவாக தமிழ்நாட்டுக் கடலோரங்களில் விசைப் படகுகளின்
மூலம் நடக்கும் மீன்பிடித் தொழில் அதிகரித்துள்ளது. மீன்கள்
மற்றும் இறால் மீன்கள் உணவிற்காகவும் மற்றும் ஏற்றுமதி
செய்வதற்காகவும், அதிகமாகப் பிடிக்கப்பட்டு வருகின்றன.
அளவை, நிலையங்களிலுள்ள விசைப் படகுகள் பல ஆண்டுகளாக
அளவைப் பணியில் ஈடுபட்டு வருவதால் சில படகுகள் பழு
தடைந்து விட்டன. சேதமடைந்த இந்த படகுகளைப் பழுது
பார்த்தாலும், அவைகளுக்கு ஆகும் செலவு சிக்கனமாக
இருக்காது. எனவே, கழித்தொதுக்கப்பட்ட படகுகளுக்குப்
பதிலாக நவீன இயந்திரங்கள் பொருத்தப்பட்ட புதிய படகு
களை வழங்கலாம் என்றும் இத்திட்டத்தை ஒட்டு மொத்தமாக
அல்லாமல் படிப்படியாக நிறைவேற்றலாம் என்றும் உத்தே
சிக்கப்பட்டுள்ளது. முதற் கட்டமாக ரூ. 12.01 இலட்சம்
செலவில் 9.75 மீட்டர் நீளமுள்ள நான்கு மர விசைப் படகுகள்
வாங்கலாம் எனக் கருதப்பட்டது. எனினும் முதற்கண் இரண்டு
படகுகள் மட்டும் வாங்கலாம் என்று முடிவு செய்யப்பட்டு
அதற்காக 1984-85-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில்
ரூ. 5.91 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5. கரையோர வசதிகள் :

கடல் கொந்தளிப்பு மற்றும் கடுமையான பருவ நிலைக்
காலங்களில் மீன்பிடி இயந்திரப் படகுகள் பாதுகாப்பாகத்
தங்குவதற்குப் பொருத்தமான இடங்களில் மீன்பிடித் துறைமுகங்
களும், இறங்கு துறைகளும் மத்திய அரசின் உதவியுடன் கட்டப்
பட்டு வருவதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள்.

இத்திட்டத்தின் கீழ் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள
சின்னமுட்டத்தில் ஒரு பெரிய மீன்பிடித் துறைமுகமும்,
இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள வாலிநோக்கத்தில் மற்று
மொரு மீன்பிடித் துறைமுகமும் அமைப்பதற்கு நடவடிக்கைகள்
மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், தஞ்சாவூர் மாவட்டத்
திலுள்ள பழையாறில் ஒரு இறங்கு தோணித் துறையும், இராம
நாதபுரம் மாவட்டத்திலுள்ள தொண்டியில் ஒரு இறங்கு தோணித்
துறையும், புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கோட்டைப்
பட்டினத்தில் ஒரு இறங்கு தோணித் துறையும் அமைக்க ஆணை
பிறப்பிக்கப்பட்டு கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.





மாநிலத் துறைமுக அலுவலர் மற்றும் பெங்களூரிலுள்ள மீன்பிடித் துறைமுக முதலீட்டு முன்னாய்வு இயக்குநரையும் கலந்தாலோசித்து, தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள பரங்கிப்பேட்டை, தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஆற்காட்டுத்துறை மற்றும் திருமுல்லைவாசல், இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஏர்வாடி மற்றும் பாம்பன், செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள பழவேற்காடு, கோவளம், கடப்பாக்கம் மற்றும் எண்ணூர், புதுக்கோட்டை, மாவட்டத்திலுள்ள ஜெகதாப்பட்டினம் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள காயல்பட்டினம், வீரபாண்டியன் பட்டினம் மற்றும் மணப்பாடு, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள முட்டம் மற்றும் கொளச்சல் ஆகிய இடங்கள் சிறிய இறங்கு துறைகள் கட்டுவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

மேலே கூறப்பட்ட இடங்களில் சிறிய இறங்கு துறைகள் கட்டுவதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளனவா என்பது பற்றி மீன் வளத்துறையில் தனிப் பொறியியல் பிரிவு தனிக் கவனம் செலுத்தி ஆய்வு செய்து வருகிறது. ஆய்வு அறிக்கை பெறப்பட்ட பின்னர் மேலே குறிப்பிட்டுள்ள இடங்களில் மைய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின்கீழ் இறங்கு துறைகள் கட்டுவதற்கான செயற் குறிப்பு மைய அரசுக்கு அனுப்பி வைக்கப்படும்.

6. உள்நாட்டு மீன்வளம் :

தற்பொழுது தமிழகத்தில் மீன் குஞ்சுகள் தேவைக்கும், மீன் குஞ்சுகள் உற்பத்திக்கும் பெரிய அளவில் இடைவெளி உள்ளது. நம்நாட்டில், உள்நாட்டு நீர்நிலைகளில் சேகரிப்பு செய்வதற்குத் தேவையான மீன் குஞ்சுகளின் எண்ணிக்கை 360 மில்லியன்களாக இருக்கையில் தற்போதைய மீன் குஞ்சு உற்பத்தியின் அளவு மொத்தத்தில் 130 மில்லியன்கள் மட்டுமே (1982-83). இந்த மீன் குஞ்சுகள் உற்பத்தியை அதிகரிக்க இயற்கை முறையில் போதிய வாய்ப்பில்லை. எனவே, மீன் குஞ்சு உற்பத்திக்குத் தூண்டுதல் மூலம் மீன்குஞ்சு உற்பத்தி முறை பின்பற்றப்படுகிறது. ஆண்டு முழுமைக்குமான மீன்குஞ்சு தேவைகளைப் பூர்த்தி செய்ய நுண் மீன்குஞ்சுகளை விரலளவு மீன்குஞ்சுகளாக வளர்த்தெடுக்க போதிய மீன் பண்ணைகள் அமைக்கப்படவேண்டும். தற்போது வைகை அணை மீன் பண்ணையில் 0.1000 ஹெக்டேர் பரப்பு கொண்ட சினை மீன் வளர்ப்பிடங்களும் உள்ளன. இந்த உற்பத்தி நிலையத்திற்குஇலக்காக 10 மில்லியன் நுண்மீன் குஞ்சுகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த வளர்ப்பிடத்தில் 2 மில்லியன் மீன் குஞ்சுகளை வளர்ப்பு செய்ய இயலும். எனவே, வைகை அணை மீன் பண்ணையில் உள்ள மீன் குஞ்சு வளர்ப்பிடங்களுக்குப் பக்கத்திலேயே கூடுதலாக நுண் மீன் குஞ்சுகளை வளர்ப்பு செய்ய 12 சிமெண்ட் தொட்டிகள் கட்ட 1984-85-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 2 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

6.1. தமிழ்நாட்டின் உள்நாட்டு நீர்நிலைகளில், சேகரிப்பு செய்து மீன் உற்பத்தியைப் பெருக்கப் போதுமான அளவு

[1984 ஏப்ரல் 12

தரமுள்ள மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படாததற்கு, மீன்
குஞ்சுகளை வளர்க்கத் தேவையான வளர்ப்பிடங்கள் இல்லாததே
காரணம். நமக்கு உடனடியாகக் குறைந்தபட்சம் 100 மில்லியன்
மீன் குஞ்சுகள் உள்நாட்டு நீர்நிலைகளில் சேகரிக்கத் தேவை என
எடுத்துக்கொண்டால், அதற்குத் தற்போதுள்ள இடத்தைவிட
கூடுதலாக 24 ஹெக்டேர் பரப்புள்ள மீன்குஞ்சு வளர்ப்பிடங்கள்
அவசியம். இந்த அளவிற்கு மீன் குஞ்சு வளர்ப்பிடங்களைக்
கட்டிச் செயல்படுத்த ரூ. 192 இலட்சங்கள் செலவாகும். உடனடி
யாக இவ்வளவு பெரிய தொகையை முதலீடு செய்வது என்பது
கடினம்.

இத்தகைய நிலையைச் சமாளிக்க தற்போது. மீன்துறை
ப்ளாஸ்டிக் வலையால் ஆன கூண்டுகளை அமைத்துஅவற்றைத்
தகுந்த நீர்நிலைகளில் மிதக்க விட்டு மீன் குஞ்சுகள் வளர்ப்பிடங்
களாகப் பயன்படுத்துகிறது. இந்த முறையில் மிதக்கும் கூண்டு
களில் மீன் குஞ்சுகள் விரைவில் வளர்ச்சியடைவதோடு 70 சத
விதம் முதல் 80 சதவீதம் வரை நுண் மீன் குஞ்சுகளை
விரலளவு மீன் குஞ்சுகளாகப் பெற வாய்ப்புள்ளது. எனவே,
வேலூர் அகழி, பாலாறு-பொரந்தலாறு மற்றும் மேட்டூர் நீர்த்
தேக்கங்களில் இந்த மிதக்கும் கூண்டுகளில் மீன் வளர்க்கும்
முறைகளை மேற்கொள்ளலாம் என உத்தேசிக்கப்பட்டுள்ளது.
இத்திட்டத்தின் மூலம் சுமார் 51 இலட்சம் விரலளவு மீன்
குஞ்சுகள் பெற முடியும். ஆண்டு இறுதியில் இம்முறை மூலம் மீன்
உற்பத்தி 1,000 டன் களாக இருக்கும். இத்திட்டத்தை 1984-
85-ஆம் ஆண்டில் செயல்படுத்த ரூ. 1.58 இலட்சம் நிதி ஒதுக்கீடு
செய்யப்பட்டுள்ளது.

6.2. தமிழ்நாட்டிலுள்ள் நீர்த்தேங்கங்களிலும் குளங்களிலும்
நல்ல தரமுள்ள மீன் குஞ்சுகளை சேகரிப்பு செய்து அதன் மூலம்
மீன் உற்பத்தியைப் பெருக்கவும் நீர்த்தேக்கங்களின் எல்லாப்
பகுதிகளிலும் திட்டமிட்டு ஒழுங்கான முறையில் மீன் பிடிப்பு
நடத்தவும் மீன் துறை, கண்ணாடி இழைப் படகுகளையும்,
பரிசல்களையும் உபயோகித்து வருகிறது. 1982-83-ஆம் ஆண்டில்
ரூ. 6.75 இலட்சம் செலவில் 15 கண்ணாடி இழைப் படகுகளும்
25 பரிசல்களும் வாங்கி அவற்றை 15 நீர்த்தேக்கங்களிலும் 18 நீர்
நிலைகளிலும் உபயோகிக்க ஆணை வழங்கப்பட்டது. 1984-85
ஆம் ஆண்டில் மதுரை, தென்னாற்காடு, வடாற்காடு, திருச்சிராப்
பள்ளி, தர்மபுரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களிலுள்ள
நீர்த்தேக்கங்களிலும், நீர் நிலைகளிலும் உபயோகப்படுத்த 20
கண்ணாடி இழைப் பரிசல்கள் வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்
டுள்ளது. இதற்கென 1984-85-ஆம் ஆண்டு வரவு-செலவுத்
திட்டத்தில், ரூ. 60,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
இவ்வகை கண்ணாடி இழைப் பரிசல் பத்தாண்டுக் காலம் உழைக்
கும் இவற்றின் பராமரிப்புச் செலவும் மிகக் குறைவு.

6.3. தற்போது தஞ்சாவூர்வெப்ஸ்டர் அகழியில் அற்றகரத்தின்
கழிவுநீர் விடப்படுவதால் அகழி நீர் சேறும் சகதியுமாகி மீன்
உற்பத்திக்கு ஏற்றதாக இல்லாமல் உள்ளது. இந்த அகழியில்



உள்ள நீரை நவீன தொழில் நுட்பத்துடன் மீன் வளர்ப்பிற்கு
முற்றிலும் பயன்படுத்த மீன் துறை இயக்குநர், ரூ. 48,000
செலவில் இவ்வகழியைப் புதுப்பிக்கவும் பழுது பார்க்கவும் திட்
டம் தீட்டியுள்ளார். இதற்கான முதற்கண் இந்த அகழியில்
கடந்த 30 ஆண்டுக்காலமாக சேர்ந்துள்ள சேறு மற்றும் சகதி
யினையும் அழுக்கடைந்த நீரினையும் அகற்றிய பின் பெரிய
அணைக்கட்டு கால்வாயிலிருந்து கிடைக்கும் நன்னீர்
அகழியில் விடப்படும். பின்னர் அகழிக்கு நீர் வரும். மற்றும்
வெளியேறும் பகுதிகளில் புதிய கம்பி வலைதடுப்புகள் பொருத்தி
வைக்கப்படும். இவ்வாறு அகழியைப் புதுப்பித்து நீர் நிரப்பினால்
ஆண்டொன்றுக்கு ரூ. 12,000 மதிப்புள்ள 2,000 கிலோ நல்ல
தரமான மீன்களை உற்பத்தி செய்ய இயலும். இத்திட்டத்தைச்
செயல்படுத்த 1984-85 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில்
ரூ. 48,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

6.4. தேசிய மீன் குஞ்சு உற்பத்தித் திட்டம் என்ற திட்டத்
துன் கீழ் ஒவ்வொன்றும் 10 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட
இரண்டு மீன் குஞ்சு பண்ணைகள் நம் மாநிலத்தில் அமைப்பதற்கு
மத்திய அரசு கடனுதவியளிக்க முன் வந்துள்ளது. தகுந்த
இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் பண்ணை யமைக்கும் பணி
கள் துவங்கப்படும்.

7. மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் :

நம் மாநிலத்தில் உள்ள உள்நாட்டு நீர்நிலைகளில் மீன்
உற்பத்தி குறைவாக இருந்து வருகிறது. இந்நீர்நிலைகளில்
நல்ல மேற்பார்வைத் திறனுடன் கூட்டு இன மீன் வளர்ப்பு மேற்
கொண்டால் மீன் உற்பத்தியை ஒரு ஹெக்டேருக்கு 1500 கிலோ
வரை உயர்த்த முடியும் எனக் கண்டறியப்பட்டது. மேலும்,
மீன் வளர்ப்பில் ஈடுபாடு உடைய தனிப்பட்டவர்களுக்கும் ஊக்கம்
அளித்தாலும் மீன் உற்பத்தி அதிகரிக்கும் என்ற நோக்கங்களுடன்
மாநிலங்களில் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளை
அமைத்துஅவைசெயல்படமத்தியஅரசு உதவியளிக்கிறது. மத்திய
அரசுஉதவியுடன் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும்
தர்மபுரி மாவட்டங்களில் முதன் முதலில் மீன் வளர்ப்போர்
மேம்பாட்டு முகமைகள் ஆரம்பிக்கப்பட்டன. இவை சிறப்பாகச்
செயல்பட்டமையால், 1980-81 ஆம் ஆண்டில் செங்கற்பட்டு,
தென்னாற்காடு மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களிலும்
முகமைகள் ஆரம்பிக்கப்பட்டன. 1982-83 ஆம் ஆண்டில்
பெரியார், புதுக்கோட்டை, வடாற்காடு மற்றும் கன்னியாகுமரி
மாவட்டங்களில் மேலும் நான்கு முகமைகள் துவங்கப்பட்டன.
எனவே, நம் மாநிலத்தில் தற்போது பதினொன்று மீன் வளர்ப்
போர் முகமைகள் செயல்படுகின்றன. இவற்றில் தஞ்சாவூர்,
திருச்சிராப்பள்ளி, மதுரை, தர்மபுரி மற்றும் தென்னாற்காடு
ஆகிய மாவட்டங்களில் செயல்படும் ஐந்துமுகமைகளுக்கு மட்டுமே

மத்திய அரசு நிதியுதவி அளிக்கிறது. மற்ற முகமைகளுக்காகும் செலவினங்களை மாநில அரசே முழுமையாக ஏற்கிறது. இம் முகமைகளுக்கும் நிதியுதவி அளிக்க வேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளோம்.

மீன் வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளுவதற்காக இதுவரை சுமார் 2,616 ஹெக்டேர் உள்நாட்டு நீர்நிலைகள் மீன்வளர்ப் போர் மேம்பாட்டு முகமைகளால் எடுத்துக் கொள்ளப்பட்டு 2,538 மீன் வளர்ப்போர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. இதனால் ஹெக்டேர் ஒன்றுக்கு 250 கிலோ வாக' இருந்த சராசரி மீன் உற்பத்தி சுமார் 750 கிலோவாக உயர்ந்துள்ளது. இம்முகமை கள் உள்நாட்டு மீனவர்களின் பொருளாதார நிலையை உயர்த்து வதோடு நகரங்கள் மற்றும் கிராமப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு நியாயமான விலையில் மீன் கிடைக்க வழி வகை செய்கின்றன.

8. உவர்நீர் இறால் பண்ணைத் திட்டம் :

மத்திய அரசு இறால் குஞ்சு பொறிப்பகத்துடன் கூடிய உவர் நீர் இறால் பண்ணைகள் அமைக்கும் ஒரு திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. மத்திய அரசு பொறுப்பேற்கும் இத்திட்டத் தின் கீழ் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள நீலங்கரை என்னும் இடத்தில் ரூ. 21 இலட்சம் செலவில் ஒரு இறால் குஞ்சு பொறிப் பகம் நிறுவும் திட்டத்திற்கு மாநில அரசு அங்கீகாரம் அளித் துள்ளது. மேலும் 150 ஹெக்டேர் பரப்பளவுக்குச் செங்கற்பட்டு மாவட்டத்தில் பழவேற்காடு, தஞ்சை மாவட்டத்தில் தொண்டியக் காடு, இராமநாதபுரம் மாவட்டத்தில் வாலிநோக்கம் ஆகிய மூன்று இடங்களில் இறால் மீன்பண்ணைகள் நிறுவுவதற்கும் திட்டங்கள் வரையப்பட்டுள்ளன. இத்திட்டங்கள் யாவும் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக்கழகம் மூலம் செயல்படுத்தப்படும். இவற்றுக்காகும் செலவில்சரிபாதியே மைய அரசு ஏற்கும்.

9. மீனவர் நலத் திட்டங்கள் :

நம் மாநிலத்தின் மொத்த மீன் உற்பத்தியில் சுமார் 70 விழுக் காடு நாட்டுப் படகுகளைக் கொண்டு சிறிய அளவில் மீன் பிடிப்பு நடத்தி வாழும் மீனவர்கள் வாயிலாகவே கிடைக்கிறது. எனவே, இந்த மீனவர்கள் நலனைக் கருத்தில் கொண்டு அவர்களை மேலும் ஊக்குவிக்கும் வகையிலும் அதன் மூலம் மாநிலத்தின் மீன் உற்பத்தியை மேலும் பெருக்கும் வகையிலும் அரசு முனைந்து செயல்படுகிறது. இதற்கென பல மீனவர் நலத் திட்டங்களை அரசு மேற்கொண்டுள்ளது. திட்டங்கள் சிலவற்றின் விவரங்கள் பின்வருமாறு.

9.1. வீடு மற்றும் அடிப்படை வசதிகளை அளிப்பதற்கான விரி வான திட்டம் :

நமது அரசு கடல் மீனவர்களுக்காக 9,931 வீடுகள் தமிழ் நாடு ஆதி திராவிட வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம் மூலம் கட்



வதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். இதுவரை 7,535 வீடுகள் இக்கழகத்தால்கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள வீடுகள், ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள் கட்டி முடிக்கப்படும்.

மேலும், 1983-84 ஆம் ஆண்டில் 1,373 வீடுகள், ரூ. 100
இலட்சத்திற்கு மேற்படாமல் செலவு செய்து மீனளத் துறையின்
கட்டுப்பாட்டில் உள்ள தனிப் பொறியியல் பிரிவினால் கட்டு
கு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. நடப்பு நிதி
யாண்டிற்கும் சென்ற நிதியாண்டு போன்று ரூ. 100 இலட்சம்
நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

9.2, இணைப்புச் சாலைகள் :

கடற்கரையோரப் பகுதிகளில் இணைப்புச் சாலை வசதிகள்
இல்லாவிட்டால் மீன்களை மிகக் குறைந்த விலைக்கே விற்று
மீனவர்கள் நட்டமடைவார்கள் என்ற உண்மையை உணர்ந்து,
மீனவர் கிராமங்கள் மற்றும் குடியிருப்புகளையும் மீன் விற்பனை
நிலையங்களையும் இணைக்க சாலைகள் அமைக்கும் திட்டம்
ஒன்றினை 1980 ஆம் ஆண்டிலிருந்து இந்த அரசு செயல்படுத்தி
வருகிறது. ரூ. 130 இலட்சம் செலவில் 52 இணைப்புச் சாலை
கள் போட அரசு ஒப்புதல் அளித்து பணிகள் பெருமளவில் முடிந்து
விட்டன. 1983-84 ஆம் ஆண்டில் ரூ. 62.5 இலட்சம் செல
வில் 20 இணைப்புச் சாலைகள் அமைப்பதற்கு ஆணைகள் வெளி
யிடப்பட்டுள்ளன. இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக
1984-85 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 28 இலட்
சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

9.3. மீனவர்கள் துயர் துடைப்பு நிவாரணநிதி :

இத்திட்டம் 1978 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படு
கிறது. இத்திட்டத்தின் கீழ் கடலில் மீன் பிடிக்கும் அல்லது
சங்கு குளிக்கும் மீனவர் தொழிலில் ஈடுபட்டு இருக்கும்பொழுது
இறந்தால் அவர்கள் குடும்ப நிவாரணத்திற்கு ரூ. 5,000 நிதி
யுதவி அளிக்கப்படுகிறது. இத்தொகையில் முதல் தவணை
யாக ரூ. 2,000 உடனடியாகவும் மீதமுள்ள ரூ. 3,000 அக்குடும்
பத்திற்கு 30 தவணைகளில் மாதம் ரூ. 100 வீதம் வழங்கப்படு
கிறது. 31-1-1984 முடிய 291 குடும்பங்களுக்கு மேற்படி
உதவித் தொகையாக ரூ. 13,55,950 வழங்கப்பட்டுள்ளது.

9.4 காப்புத் திட்டம்.

மேலே கூறப்பட்ட திட்டத்திற்குப் பதிலாக மைய அரசு
பரிந்துரைத்துள்ள மீனவர் விபத்து காப்பீடுதிட்டமொன்றை6
செயல்படுத்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இத்திட்டத்தின்
கீழ் மீனவர்களுக்கு ரூ. 15,000 வரையில் காப்பீடு செய்யப்
பட்டுள்ளது. அதற்காக அவர்கள் செலுத்த வேண்டிய வரு

டாந்திர பகுதிக் கட்டணம் ரூபாய் 12 மட்டுமே. இத் திட்டத்தில் சேர்ந்துள்ள மீனவர் ஒருவர் மரணமடைந்தால் அல்லது ஈடுசெய்ய முடியாத உடல் ஊனம் ஏற்பட்டால் அவரது குடும்பத்திற்கு ரூ. 15,000 வழங்கப்படும். அவ்வாறின்றி அவரது உடலில் ஏதாவது ஒரு பகுதியில் நிரந்தர ஊனம் ஏற்பட்டுவிட்டால் ரூ. 7,500 வழங்கப்படும். இத் திட்டத்தில் மீனவர்கள் வருடாந்திர பகுதிக் கட்டணமாகச் செலுத்தும் ரூ. 12-ல் பாதி பணம் ரூ. 6-ஐ மத்திய அரசும், மீதி ரூ. 6-ஐ மாநில அரசும் காப்பீடு செய்துள்ள மீனவர்களும் சரிபாதியாக மேற்கொள்ளுவார்கள். இதனால் 1,03,839 மீனவர்கள் (86,299 கடல் மீனவர்கள், 17,540 உள்நாட்டு மீனவர்கள்) குடும்பங்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்படும். இத் திட்டத்தில் இதுவரையில் 37,666 மீனவர்கள் சேர்ந்துள்ளார்கள்.

9.5 மீனவர்களுக்கான சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம் :

கடுமையான பருவ நிலை காரணமாக கடலுக்கு போக முடியாத நிலையினாலோ அல்லது கடல் பருவ நிலை காரணமாக மீன்களின் இடப்பெயர்ச்சி காரணமாகவோ ஆண்டில் மூன்று மாதம் நிரந்தர வருமான வாய்ப்பு இல்லாது இருக்கும் காலத்தில் கடல் மீனவர்களுக்கு நிவாரணம் வழங்கும் திட்டம் ஒன்றை அரசு 1982-ல் அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களாக உள்ள மீனவர்களிடமிருந்து வருவாய் ஈட்டும் 9 மாதங்களில் மாதம் ஒன்றுக்கு ரூ. 10 வீதம் வசூலிக்கப்பட்டு, அவ்வாறு சேர்ந்த ரூ. 90 உடன் அரசு ரூ. 90 சேர்த்து மொத்தம் 180 வருவாய் இல்லாத மூன்று மாதங்களில் மாதம் ஒன்றுக்கு ரூ. 60 வீதம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு மீனவர்களிடமிருந்து நல்ல வரவேற்பு கிடைத்திருப்பதுடன் பல நூற்றுக்கணக்கான மீனவர்கள் மண்டல உதவி இயக்குநர்களிடம் ரூ. 10 வீதம் செலுத்தத் தொடங்கியுள்ளார்கள். இத்திட்டத்தை செயல்படுத்தும் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் இதை வசூலிப்பது மற்றும் இது பற்றிய வரவு-செலவுக் கணக்குகளை நிர்வகிப்பதற்கு பொறுப்பேற்கும். இதுவரை 7,288 மீனவர்கள் இத்திட்டத்தின் கீழ்சேர்ந்துள்ளார்கள். இம் மீனவர்களிடமிருந்து 1984 ஜனவரித் திங்கள் வரை ரூ. 3.72 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.

10. மீனவர் கூட்டுறவு ச் சங்கங்கள் :

இம்மாநிலத்தில் 284 கடல் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களும், 198 உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கங்களும், 15 மகளிர் கூட்டுறவுச் சங்கங்களும் செயல்படுகின்றன. இச்சங்கங்களின் நடவடிக்கைகள் கூர்ந்து கவனிக்கப்பட்டு வருகின்றன. தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் மற்றும் மாநில அரசால் படகுகள் வலைகள், போக்குவரத்து ஊர்திகள் மற்றும் மீன் விற்பனைக்காக நிதியுதவி அளிக்கப்படுகிறது. இவ்வுதவி 80 விழுக்காடு



கடனாகவும் 20 விழுக்காடு மானியமாகவும் மீனவர் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிறது. தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் 1978-79 முதல் 46 மீனவ கூட்டுறவுச் சங்கங்களுக்கு 183.63 இலட்சம் நிதியுதவி அளித்துள்ளது. ரூ. 229.28 இலட்சம் நிதியுதவி அளிக்கக் கோரி தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்திற்குச் கருத்துருக்கள் அனுப்பப் பட்டுள்ளன. தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து பெருமளவில் நிதியுதவி பெறும் மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும்.

10.1. மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பெருமளவில் நிதியுதவி அளிக்கப்படுவதால் இக்கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படும் முறையை சீர்படுத்தி மேம்பாடு செய்தல் அவசியமாகும். சங்கங்களின் நிர்வாகத் திறனை மேம்படுத்த 1983-84 ஆம் ஆண்டில் 200 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களை தேர்ந்தெடுத்து, சங்கத்திற்கு ஒரு எழுத்தர் வீதம் நியமனம் செய்யப்பட்டுள்ளது. என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். மேலும் 1984-85 ஆம் ஆண்டிலும் இத்திட்டத்தை விரிவுபடுத்துவதற்காக ரூ. 2 இலட்சம் வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் பெரும்பாலான கூட்டுறவுச் சங்கங்களின் நிதி நிலை திருப்திகரமாக இல்லை. எனவே 1984-85 ஆம் ஆண்டில் நிர்வாக நிதியுதவியாக ரூ.2 இலட்சம் 1984-85 ஆம் வருட வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

10.2. பல நிதியுதவி வழங்கும் நிறுவனங்களால் 89 மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் ரூ. 379.63 இலட்சம் நிதியுதவி பெற்று பயனடைந்துள்ளன. மீதம் உள்ள சங்கங்கள் நிதியுதவி பெறாமல் இருக்கின்றன. நிதியுதவி வழங்கும் நிறுவனங்கள், சங்கங்களில் உள்ள பங்கு முதலீட்டு தொகையை அடிப்படையாக வைத்து நிதியுதவி வழங்குகின்றன. பங்கு முதலீட்டுத் தொகையை அதிகரிப்பதற்கு வாய்ப்புகளும், வசதிகளும், இல்லாத நிறைய சங்கங்கள் நிதியுதவி வழங்கும் நிறுவனத்திடமிருந்து நிதியுதவி பெற இயலவில்லை. எனவே, நலிந்த மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு முதலீட்டுத் தொகையை அதிகரிக்க 1984-85 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

10.3. பெரும்பாலான கூட்டுறவு நிறுவனங்களின் நிதிநிலை திருப்திகரமாக இல்லை. மேலும், மீன் விற்பனை மற்றும் மீனவர்களுக்குத் தேவையான மீன் பிடி உபகரணங்கள் வாங்கவும் போதுமான முதலீடும் இல்லை. டில்லியில் உள்ள தேசிய கூட்டுறவு அபிவிருத்திக் கழகம் இந்தக் கூட்டுறவு நிறுவனங்களுக்கு நடைமுறை முதலீட்டு கடன்கள் வழங்குவதற்கும் தேவையான நிதி உதவியை அளிப்பதில்லை.

## இணைப்புகள்

மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் குறையைப் போக்க 1981–82 மற்றும் 1982–83 ஆம் ஆண்டுகளில் நடைமுறை முதலீட்டுக் கடனாக ரூ.5 இலட்சம் வீதம் வழங்கப்பட்டது. கூட்டுறவுச் சங்கங்களின் நடைமுறை முதலீட்டை உயர்த்துவதற்காக நிதி உதவியளிக்க முடிவெடுக்கப்பட்டு 1984–85ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திலும் ரூ. 2.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

### 10.4. மீனவ மகளிர் விரிவாக்கப் பணி :

மீனவப் பெண்டிரிடையே வலை பின்னுதல், சுகாதார முறை யில் மீன் வியாபாரம் செய்தல், இறால் குஞ்சுகள் சேகரித்தல், கடல்பாசி வளர்த்தல் போன்ற செயல்களில் பயிற்சி அளித்து விளம்பரமும் செய்து அதன் வாயிலாக அப்பெண்டிரும் மீனவ சமுதாய முன்னேற்றத்தில் பங்கேற்பதுடன் அவர்கள் குடும்பத் திற்குக் கூடுதல் வருவாய் ஈட்டித் தர வழி செய்யும் நோக்கத் தோடு மீனவப் பெண்களுக்கென கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப் பட்டு வருகின்றன. இதுவரை சென்னை மாவட்டத்தில் ஆறு சங்கங்களும், செங்கற்பட்டு மாவட்டத்தில் நான்கு சங்கங்களும், தஞ்சை மாவட்டத்தில் இரண்டும், தென்னாற்காடு மாவட்டத்தில் ஒன்றும், திருநெல்வேலி மாவட்டத்தில் இரண்டு சங்கங்களும் நிறுவப்பட்டு செயலாற்றி வருகின்றன.

### 11. வறட்சிப் பணிக்கான திட்டம் :

இத்திட்டத்தின்கீழ் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பிலவக்கல், தருமபுரி மாவட்டத்திலுள்ள கிருஷ்ணகிரி, ஹொகேனக்கல், பாம்பாறு மற்றும் சின்னாறு ஆகிய நீர்த்தேக்கங் களுக்கு அருகில் அடிப்படை வசதிகளை அமைப்பதற்கு மீன் துறை தாராளமாக நிதியுதவி பெற்றுள்ளது. இவ்விடங்களில் தேவையான மீன் குஞ்சுகளை அதிக அளவில் உற்பத்தி செய் வதற்கும் நீர்த்தேக்கங்கள் மற்றும் உள்நாட்டு பரப்புகளில் அவற்றை சேமித்து வைப்பதற்கும் மீன்பண்ணைகள் மற்றும் மீன் நாற்றங்கால்கள் ஏற்படுத்தப்படுகின்றன. மேற்குறிப்பிட்ட இரு மாவட்டங்களில் இந்த வசதிகளை ஏற்படுத்த, 1983-84 ஆம் ஆண்டு இறுதிவரை மீன் துறை ரூ. 68.19 இலட்சம் பெற்றுள்ளது.

11.1. இத்திட்டத்தின் கீழ் இந்த இரண்டு மாவட்டங்களிலும் உள்ள நீர்நிலைகளில் மீன் குஞ்சு இருப்பு செய்வதற்கும், மீன் பிடிப்பதற்கும் மற்றும் மீன் குஞ்சு உற்பத்திக்குத் தேவையான வசதிகளை அமைத்துக் கொடுக்கும் பொருட்டு 1984– 85ஆம் ஆண்டில் ரூ. 31.30 இலட்சம் உதவி பெற மீன் துறை வழி வகை செய்துள்ளது.



## இணைப்புகள்

### 2. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்:

இத்திட்டத்தின் கீழ் சிறிய அளவில் மீன் பிடி தொழில் செய்யும் மீனவர்களுக்கு கூடுதல் நிதியுதவி அளிக்கப்படுகிறது. மீன் பிடி இயந்திரப்படகுகள், கண்ணாடி இழைப் படகுகள், நாட்டுப் படகுகள், மீன் பிடிக் கருவிகள் மற்றும் தளவாடங்கள் முதலியன வாங்குவதற்கு மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர் களுக்கு மானிய உதவி வழங்கப்படுகிறது. 1982–83 ஆம் ஆண்டு முடிய கீழ்க்குறிப்பிடும் கருவிகளும், தளவாடங்களும், வாங்குவதற்கு மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் மற்றும் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் ஆகியவற்றிற்கு மான்யமாக ரூ. 83.91 இலட்சம் வழங்கப் பட்டுள்ளது.

(1) கண்ணாடி இழைப் படகுகள்.
(2) நைலான் வலைகள்.
(3) மீன் ஏற்றிச்செல்லும் வாகனங்கள்.
(4) மீன் பாதுகாப்பு பெட்டிகள்.
(5) உறையவைப்பு சாதனங்கள்.
(6) கட்டுமரங்கள்.
(7) பரிசல்கள்.
(8) இரு சக்கர வண்டிகள் மற்றும்,
(9) மீன் பண்ணைகள் அமைத்தல்.

### 13. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

இத்திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில் அவலாஞ்சி என்னுமிடத்தில் உள்ள 'ட்ரவுட்' மீன்குஞ்சுப் பண்ணையை நவீன முறையில் மேம்பாடுத்துவதற்காக ரூ. 4.19 இலட்சம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. உதகமண்டலத்திற்கு வருகை தரும் உல்லாசப் பயணிகளைக் கவரும் வண்ணம் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

### 14. தேசிய கடற்பூங்கா:

மன்னார் வளைகுடாப் பகுதியில் மண்டபத்திலிருந்து தூத்துக்குடி வரையிலுள்ள 21 சிறிய தீவுகளை உள்ளடக்கிய அப்பகுதிகளில் காணும் அபூர்வ தாவரங்கள் மற்றும் உயிரினங் களைப் பேணிப் பாதுகாக்கவும் இதன் மூலம் சுற்றுலாப் பயணிகளைக் கவரவும் ஒரு தேசிய கடற்பூங்கா அமைக்க அரசு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது என்பதை மாண்பு மிகு உறுப்பினர்கள் அறிவார்கள். இதற்காக திட்ட அறிக்கையொன்றை வரைந்தளிக்க நியமிக்கப்பட்டுள்ள வல்லுநர்

குழு தமது அறிக்கையை 1984-ஆம் ஆண்டு சூன், திங்கள் இறுதிக்குள் அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடல்வாழ் உயிரினப் பூங்கா அமைப்பதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட இராமநாதபுரம் மாவட்ட கடற்பகுதியில் இருக்கும் நல்லத் தண்ணீர்தீவு மற்றும் முயல் தீவு ஆகிய இரு தீவுகளில் தனியார் சிலருக்குச் சொந்தமான நிலங்கள் உள்ளன. நல்லத் தண்ணீர் தீவில் தனியாருக்குச் சொந்தமான 32.31.0 ஹெக் டேர் நிலத்தையும் முயல் தீவில் 129.03.5 ஹெக்டேர் நிலத்தையும் ரூ. 10.42 இலட்சம் செலவில் கையகப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 15. தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் பணிகள் :

மீன் வளத்தைப் பெருக்கும் திட்டங்களை வியாபார நோக்குடன் நிறைவேற்ற 1974 ஆம் ஆண்டு சூலைத் திங்கள் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக்கழகம் அமைக்கப்பட்டது. இந் நிறுவனம் மீன் பிடி விசைப்படகுகள் மற்றும் நாவாய்களை இயக்கி மீன் பிடித்தல், மீன் வளர்ப்பு, உள்நாட்டு நீர்தேக்கங் களில் மீன் பிடிப்பு நடத்துதல், பதனப்படுத்துதல், ஏற்றுமதி மற்றும் உள்ளூர் மீன் விற்பனை ஆகிய பணிகளை மேற் கொண்டுள்ளது.

### 15.1. உள்நாட்டு மீன் வளம் :

தற்போது தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப் பாட்டில் சாத்தனூர், பவானிசாகர், ஆழியாறு, அமராவதி, மற்றும் திருமூர்த்தி நகர் நீர்தேக்கங்களில் மீன்பிடிப்பு நடத்தப்படுகிறது. 1982-83 ஆம் ஆண்டில், இந்நீர்தேக்கங் களிலிருந்து ரூ. 46.70 இலட்சம் மதிப்புள்ள 605 டன் மீன்கள் பிடிக்கப்பட்டுள்ளன. மேலும், பில்லூர், சோலையார், மேல் ஆழியாறு, உப்பாறு, மஞ்சளாறு மற்றும் பாலாறு-பொரந்த லாறு ஆகிய ஆறு நீர்த்தேக்கங்கள் மீன்பிடிப்புக்காக தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இந்த நீர்த்தேக்கங்களிலிருந்து மீன் உற்பத்தி செய்து முறைப் படி மீன் பிடிப்பதன் மூலம் உள்நாட்டுச் சந்தைகளில் அதிக அளவில் மீன்கள் நியாயமான விலையில் பொதுமக்களுக்குக் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

### 15.2. மீன் விற்பனை :

மக்களுக்கு நல்ல முறையில் குறைந்த விலைக்கு மீன்கள் கிடைக்கவும், மீனவர்களுக்கு அவர்கள் பிடித்த மீன்களுக்கு நல்ல விலை கிடைக்கவும், மீன் விற்பனையை ஒழுங்குபடுத்த வும் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் செயல்பட்டு வருகிறது.

மேற்சொன்ன நோக்கத்துடன் இந்நிறுவனம் சென்னை நகரில் 59 சில்லறை மீன் விற்பனை நிலையங்களையும், மதுரை, கோவை, பெரியார், திருச்சிராப்பள்ளி மற்றும்



வடாற்காடு மாவட்டங்களில் 54 மீன் விற்பனை நிலையங் களையும் நடத்தி வருகிறது. சராசரியாக மாதந்தோறும் இம்மீன் விற்பனை நிலையங்கள் மூலம் சுமார் 63 டன்கள் மீன் விற்பனை செய்யப்படுகிறது. மீன் விற்பனையை மேலும் பல இடங்களில் நடத்தவும், விற்பனையை மேன்மேலும் பெருக்கவும், இன்னும் பல விற்பனை நிலையங் களை வரும் ஆண்டுகளில் நடத்த இந்நிறுவனம் உத்தேசித்து உள்ளது.

### 15.3. மெக்சிகன் இழுபடகுகளை இயக்குதல் :

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் இறக்குமதி செய்யப் பட்ட இரு மெக்சிகன் இழுபடகுகளைத் தற்போது இயக்கு கின்றது. அவை முக்கியமாக இறால் மீன் பிடிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. 1982-83 ஆம் ஆண்டில் 85.425 டன்கள் இறாலும் 64.277 டன்கள் மற்ற மீன்களும் இப்படகு களைக் கொண்டு பிடிக்கப்பட்டது. அவற்றின் மொத்த மதிப்பு ரூ. 71.73 இலட்சம் ஆகும்.

1981–82, 1982-83 மற்றும் 1983-84 ஆகிய மூன்று ஆண்டுகளில் இவ்விரு இழுபடகுகளை இயக்கி பிடிக்கப்பட்ட மீன்களின் அளவு அதனால் கிடைத்த வருவாய் மற்றும் நிகர லாபம் பற்றிய விவரங்கள் பின்வருமாறு :—

| வருடம். | பிடிக்கப் பட்ட இறால் மீன்களின் அளவு (கி.கி.) | பிடிக்கப் பட்ட மீன்களின் அளவு (கி.கி.) | பிடிக்கப் பட்ட மீன்களின் விற்பனை மூலம் கிடைத்த வருவாய். | நிகர இலாபம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | (ரூபாய் இலட்சங்கள்). | |
| 1981-82 .. | 99,589 | 36,329 | 63.94 | 19.21 |
| 1982-83 .. | 85,425 | 64,277 | 71.73 | 15.99 |
| 1983-84 .. (டிசம்பர் 83 முடிய) | 76, 168 | 23,815 | 64.82 | 23.57 |

இறக்குமதி செய்யப்பட்ட இவ்விரு இழுபடகுகளும் மிகச் சிறந்த முறையில் செயல்பட்டு வருகின்றன. இதனால் கிடைத்த அனுபவத்தைக் கொண்டு மேலும் பல பெரிய கலங்களை வாங்கி ஆழ்கடல் மீன்பிடிப்பதற்குப் பயன்படுத்த முடியும் என்று தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் நம்பிக்கை கொண்டுள்ளது.

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் 1983 பிப்ரவரி திங்கள் முதல் இறால் மீன்களை ஏற்றுமதி செய்யத் தொடங்கியுள்ளது. இதுவரையில் ரூ. 70.45 இலட்சம் மதிப்புள்ள 75 டன்கள் இறால் மீன் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இக்கழகம் ரூ. 1.84 இலட்சம் மதிப்புள்ள 22.5 டன்கள் உலர் வெள்ளை கொக்கி மீனையும் ஸ்ரீ லங்காவிற்கு ஏற்றுமதி செய்துள்ளது.

15.4. முத்துச் சிப்பி வளர்ப்புத் திட்டம் :

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம், ஸ்பிக் நிறுவனத்துடன் இணைந்து, முத்துச்சிப்பிகளை வளர்த்து செயற்கை முறையில் முத்துக்களை உற்பத்தி செய்யும் நோக்கத்துடன் "தமிழ்நாடு முத்து லிமிடெட்" என்ற ஒரு நிறுவனத்தை அமைக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இக்கூட்டு நிறுவனத்திற்கு மூலதனமாக தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் ரூ. 10 இலட்சம் கொடுக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்த நிறுவனம் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது. மேலும், முத்துச்சிப்பிகளை சேகரித்து முத்துக்களை பிரித்தெடுப்பதற்காக அவற்றை கூடுகளில் வைத்து வளர்க்க தொடங்கியுள்ளது. விரைவில் அறுவடை செய்ய ஆரம்பிக்கப்படும்.

15.5. மீன்பிடி வலை பின்னும் தொழிற்சாலை அமைத்தல்:

ஆண்டொன்றிற்கு 100 டன் எடையுள்ள மீன்பிடி வலைகள் பின்னக்கூடிய 13 மீன்பிடி வலை பின்னும் தொழிற்சாலைகள் தமிழ்நாட்டிலும், பாண்டிச்சேரியிலும் உள்ளன. தமிழ்நாட்டில் ஒரு வருடத்திற்கு 250 டன் வலைகள் தேவைப்படுகின்றன என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 13 மீன்பிடி வலை பின்னும் தொழிற்சாலைகள் பின்னும் வலைகள் மீனவர்களின் தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்யவில்லை. எனவே, 20 டன்கள் வலைபின்னும் தொழிற்சாலை ஒன்றை சென்னையில் நிறுவ கழகம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்காக ரூ. 20.00 இலட்சத்தை அரசு பங்கு மூலதனமாக வழங்க 1984–85 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கிடு செய்யப்பட்டுள்ளது.

வரவு-செலவு—ஒரு கண்ணோட்டம்

| கணக்குத் தலைப்பு. (1) | கணக்குகள் 1982–83. (2) | வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 1983–84. (3) | திருத்திய மதிப்பீடு 1983–84. (4) | வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 1984–85. (5) |
|---|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| மீனளம் ரெவின்யூ (312) | | | | |
| திட்டம் .. | 144.07 | 167.02 | 181.59 | 224.11 |
| திட்டத்தில் சேராதது | 294.66 | 15.49 | 273.71 | 234.72 |
| மீனளம் மூலதனம் (512) | | | | |
| திட்டம் .. | 97.74 | 204.12 | 283.79 | 343.94 |
| திட்டத்தில் சேராதது | 1.75 | 0.11 | 2.40 | 0.02 |
| மீனளம் கடன் (712) திட்டம் .. | 7.18 | 8.04 | 8.57 | 26.42 |
| திட்டத்தில் சேராதது | 20.00 | 0.02 | 0.02 | 0.02 |
| கூட்டுறவு ரெவின்யூ (298) திட்டம். .. | 16.86 | 18.17 | 18.35 | 8.79 |
| திட்டத்தில் சேராதது | 12.29 | 11.95 | 12.70 | 13.13 |
| கூட்டுறவு மூலதனம் (498) திட்டம் .. | 17.41 | 0.01 | 1.38 | 5.01 |
| திட்டத்தில் சேராதது | —2.05 | .. | .. | .. |
| கூட்டுறவு கடன் (698) திட்டம் .. | 41.17 | 0.02 | 0.84 | 2.52 |
| வீட்டுவசதி ரெவின்யூ (823) திட்டம் .. | 100.00 | 100.00 | 100.00 | 100.00 |
| வீட்டுவசதி மூலதனம் (483) திட்டம் .. | .. | 0.02 | 5.05 | 1.00 |
| வீட்டுவசதி கடன் (683) திட்டம் .. | .. | 0.01 | 0.01 | 0.01 |
| பொதுப்பணிகள் | | | | |
| ரெவின்யூ (259) திட்டத்தில் சேராது | 0.02 | 0.15 | 0.20 | 0.20 |
| பகுதி மேம்பாடு (308) திட்டம் .. | .. | .. | 4.19 | .. |
| சாலைகளும் பாலங்களும் (537) .. திட்டம் .. | 30.15 | 25.97 | 25.97 | 28.00 |
| இயற்கை பாதிப்புகள் (695) | | | | |
| திட்டத்தில் சேராதது | 0.09 | 0.30 | 0.40 | 0.30 |
| மொத்தம் .. | 681.34 | 751.40 | 883.17 | 988.19 |

வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு—1984–85.

| கணக்குத் தலைப்பு. | | திட்டம். | திட்டத்தில் சேராதது. | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| ரெவின்யூ | .. | 332.90 | 248.05 | 580.95 |
| மூலதனம் | .. | 377.95 | 0.02 | 377.97 |
| கடன் | .. | 28.95 | 0.32 | 29.27 |
| மொத்தம் | .. | 739.80 | 824.39 | 988.19 |

மீன்வளத் துறையின் வருவாய்.

| கணக்குத் தலைப்பு. | | கணக்குகள் 1982–83 | திட்ட மதிப்பீடு 1983–84 | திருத்தப்பட்ட மதிப்பீடு 1983–84 | திட்ட மதிப்பீடு 1984-85 |
|---|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய்.இலட்சத்தில்) | | | |
| மீனளம் (112) | .. | 106.99 | 82.88 | 129.75 | 102.29 |

16. முடிவுரை :

மீன்வளத்தைக் பெருக்குவதிலும், மீனவர்களின் பொருளாதார நிலையைச் சீராக்குவதிலும் தற்போதைய அரசு பின்பற்றி வரும் கொள்கையை விளக்க முயன்று அதை இங்கே சுருங்கக் கூறியுள்ளேன். இயற்கையிலேயே இந்த கொள்கை மாறக்கூடாதது அல்ல. காலம் மற்றும் சூழ்நிலைக் குத் தகுந்தவாறு இந்த கொள்கையில் மாறுபாடு ஏற்படலாம். பொது மக்கள் அனைவரின் ஒத்துழைப்புடன். இந்நாட்டின் மீன்பிடி தொழிலில் இம்மாநிலம் சிறந்த ஓர் இடத்தைப் பெற முடியுமென நான் உறுதியாக நம்புகிறேன். அதன் மூலம் நல்ல புரதச் சத்துள்ள மீன் உணவை மக்களுக்கு வழங்கவும் முடியும், அந்நியச் செலாவணியை ஈட்டுவதற்குரிய வழிமுறைகளை செயலாக்கவும் முடியும் எனவும் நான் உறுதியாக நம்புகிறேன்.

LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS,

IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A Venkatasubban & Company, Vellore (North Arcot District).
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-10.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagohi & Company, 286, R.B. Gandhi Street, Calcutta-11.

Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.

2307 | A4 85

2794

ஆணையர் ... ஆவணக்காப்பகம் மற்றும் ... ஆராய்ச்சி ...
2 ...
... ஆவணக்காப்பகம் ... -8.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

திங்கட்கிழமை, ஏப்ரல் 16, 1984—தொகுதி LXV எண் 4

Monday, 16th April 1984—Volume LXV No. 4

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

**Legislative Assembly Secretariat, Fort St. George, Madras-600 009**

விலை ரூ. 3-50 காசுகள்]

[Price Rs. 3-50 Paise

## உள்ளடக்கம்.

16—4—1984


பக்கங்கள்

1. வினாக்கள்—விடைகள்—

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. 445–486

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் .. .. 487–547

2. அறிவிப்புகள்—

(அ) உறுப்பினர் திரு. ப. நெடுமாறன் கைது செய்யப் பெற்றுள்ளது. 547–548

(ஆ) பேரவை அலுவல் .. .. ... 616–617

3. ஒத்திவைப்புத் தீர்மானம்—

மதுரையில் கைது செய்யப்பெற்ற பலரும் விடுதலையான பின்பும் உறுப்பினர் திரு. ப.நெடுமாறன் விடுதலை செய்யப் படாதது. 548–575

4. கவன ஈர்ப்பு—

அம்பத்தூர் தொழிற்பேட்டை தொழிலாளர் குடியிருப்புப் பகுதியில் கழிவு நீர் குடிநீரோடு கலப்பது. 575–577

5. வரவு-செலவுத் திட்டம் 1984–85 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண். 25—சின்கோனா.

(ஆ) கோரிக்கை எண். 45—காட்டுவளத் துறை

(இ) கோரிக்கை எண். 47—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல்.

(ஈ) கோரிக்கை எண். 55—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு

} 578-639

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் 578, 579, 580, 593, 623–637

திரு. ந. சிவஞானம் .. ... ... 581–585

திரு. ஆர். ரங்கசாமி .. ... ... 586–591

திரு. பாபு ஜனார்த்தனன் .. .. 591–598
திரு. கோவைத்தம்பி .. .. 598–604
திரு. ஜே. ஹேமச்சந்திரன் .. .. 604–609
திரு. கே. உச்சி .. .. 609–612
திரு. ஏ. டி. கருப்பையா .. .. 612–616
திரு. மா. சின்னராசு .. .. 617–619
திரு. கே. கல்லன் .. .. 619–623
6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 639–640


2794

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1984, ஏப்ரல் 16, திங்கட்கிழமை

சித்திரை 4, ரக்தாக்ஷீ—திருவள்ளுவர் ஆண்டு 2015.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

*' மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்*
*காடும் உடையது அரண் '.*

மணி போல் தெளிந்த நீரும், வெட்ட வெளியான நிலமும் மலையும், அழகிய நிழல் உடைய காடும் ஆகிய இவை நான்கும் உடையதே அரண் ஆகும்.

1. வினாக்கள்—விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

திருவண்ணாமலை, செங்கம் வட்டங்களிலுள்ள தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் 1981 மற்றும் 1982ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட கடன் தொகை.

570. (*வினா எண் 17469) திரு த. வேணுகோபால் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை, செங்கம் ஆகிய இரு வட்டங்களில் உள்ள தேசியமயமாக்கப்பட்ட வங்கியின் மூலம் ஏழைகளுக்கும், விவசாயிகளுக்கும் தொழில் துவங்குவதற்கு 1981-ம் ஆண்டு ஜனவரியில் இருந்து 1982-ம் ஆண்டு முடிய வழங்கிய கடன் தொகை எவ்வளவு ?

[1984 ஏப்ரல் 16

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் ;

(ரூ. இலட்சத்தில்)

| | ஆண்டு. | |
|---|---|---|
| | 1981 | 1982 (ஜூன் முடிய) |
| **திருவண்ணாமலை வட்டம்.** | | |
| விவசாயத்திற்கு அளிக்கப்பட்ட கடன். | 49·37 | 59·89 |
| விவசாய சம்பந்தப்பட்ட தொழில்களுக்கு அளிக்கப்பட்ட கடன். | 4·59 | 26·48 |
| மற்றவை (சிறு தொழில் சுய வேலை வாய்ப்பு முதலியன). | 8·68 | 16·09 |
| ஆக மொத்தம் .. | 62·64 | 102·46 |
| **செங்கம் வட்டம்.** | | |
| விவசாயத்திற்கு அளிக்கப்பட்ட கடன் | 37·73 | 44·62 |
| விவசாய சம்பந்தப்பட்ட தொழில்களுக்கு அளிக்கப்பட்ட கடன். | 2·48 | 12·25 |
| மற்றவை (சிறு தொழில் சுயவேலை வாய்ப்பு முதலியன). | 5·39 | 11·80 |
| மொத்தம் .. | 45·60 | 68.67 |



1984 ஏப்ரல் 16]

**திரு. த. வேணுகோபால் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தேசீய மயமாக்கப் பட்ட வங்கிகளின் மூலம் வழங்கிய கடன்களைப்பற்றி எல்லாம் சொன்னார்கள். ஆனால், சிறு விவசாயிகளாக இருந்தாலும் சரி, சிறு தொழில் செய்பவர்களாக இருந்தாலும் சரி, அவரிகளுக்கு சொந்தமாக நிலம் இல்லாத காரணத்தினாலும், அல்லது புறம்போக்கு நிலத்தில் வீடு கட்டிக் கொண்டிருப்பவர்களாக இருந்தாலும், அவர்களுக்கு வீட்டு மனைப்பட்டா இல்லாத காரணத்தினாலும், இன்னும் பல பேர் சிறு விவசாயிகள் பட்டியலில் இல்லாத காரணத்தினாலும், அவர்களுக்கு தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் கடன் வழங்குவதில்லை. அப்படிப் பட்டவர்களுக்கு, நிலம் சொந்தமாக இல்லை என்றாலும், புறம்போக்கில் வீடு கட்டிக் கொண்டிருந்தாலும், வங்கிகள் மூலம் கடன் கிடைக்க அரசு உரிய நடவடிக்கையை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கடன்கள் தேசீய மயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலமாக அளிக்கப்படுவது, இதற்கு ரிசர்வ் வங்கி சிலபல கட்டுத் திட்டங்களை வைத்திருக்கிறது. அந்தக் கட்டுத்திட்டங்களின் அடிப்படையில்தான், திருவண்ணா மலை வட்டத்திலும் செங்கம் வட்டத்திலும் உள்ள வங்கிகள் கடன்களை வழங்கியிருக்கின்றன. திருவண்ணாமலை வட்டத்தில் தேசீயமயமாக்கப்பட்ட வங்கிகள் 8-ம், தனியார் வங்கிகள் 7-ம் சேர்ந்துதான் இப்படிப்பட்ட கடன்களை வழங்கி யிருக்கின்றன. அதுபோலவே செங்கம் வட்டத்தில், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் 6-ம் தனியார் வங்கிகள் 5-ம் சேர்ந்து கடன்களை வழங்கியிருக்கின்றன. சிலபல விதிமுறைகளை வைத்துக்கொண்டு அதன் அடிப்படையில்தான் அந்தக் கடன்களை வழங்கியிருக்கிறார்கள். மாற்று முறைகளில் தர வேண்டுமென்றால், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலமாகவோ, அல்லது வேறு பல திட்டங்களின் மூலமாகவோ அளிக்க முயலலாமே தவிர, இந்த வகையிலே, விதிக்கப்பட்டிருக்கிற விதிமுறைகளின் அடிப்படையில்தான் வழங்க இயலும்.

**திரு. த. வேணுகோபால் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் வட்டத்தை பின்தங்கிய வட்டமாக அரசு அறிவித்திருக்கிறது. அதுபோல் திருவண்ணாமலையில் இருக்கிற ஒரு பகுதியைக் கூட பின்தங்கிய பகுதியாக அரசு அறிவித்திருக் கிறது. அப்படி இருக்கின்ற சூழ்நிலையில், அந்தப் பகுதிகளில், வங்கிகளின் கடன் பெற வேண்டுமானால், ஊராட்சி ஒன்றியங்கள் அதற்குப் பரிந்துரை செய்தால்தான், வங்கிகள் கடன்களை வழங்குவதாகச் சொல்லப்படுகிறதே, அந்த முறையை மாற்று வதற்கு, நேரிடையாக வங்கிகளுக்கு மனு செய்தால், அவர்களுக்கு கடன் கிடைக்கும் வகையில், உரிய நடவடிக்கையை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன். ஏனென்றால், ஊராட்சி

ஒன்றியங்களின் மூலமாக சிபாரிசு செய்து கடன்களை வழங்கு
வதில் பல சிக்கல்கள் ஏற்படுவதை நாங்கள் எல்லாம் பார்த்து
வருகிறோம். ஆகவே, அத்தகைய சிக்கல்களை போக்க,
நேரிடையாக மனுக்களை ஏற்று, வங்கிகள் கடன் தொகையை
வழங்க, அரசு சிபாரிசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவர்
அவர்களே, நான் முதலிலே கூறியபடி தேசியமயமாக்கப்பட்ட
வங்கிகள், பிற வங்கிகள் கடன் வழங்குவதற்காக விதிமுறைகளை
ரிசர்வ் வங்கியும் மத்திய அரசும் தான் வகுக்கிறார்கள். நாம்
வகுக்கிற அத்தகைய விதிமுறைகளை அவர்கள் பின்பற்று
வதில்லை. அவர்கள் எந்த விதிமுறைகளை வகுக்கிறார்களோ
அந்த விதிமுறைகளைத்தான் கடன் வழங்குகிறபோது மற்றைய
பொறுப்புகளை ஏற்றுக் கொள்கிறபோது—ஏற்றுக் கொள்ள
வேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த வகையிலேதான்
விதிமுறைகள் வகுக்கப்பட்டு அவைகள் கடைப்பிடிக்கப்படு
கின்றன. வேறு பல முறைகளிலே சுய வேலைவாய்ப்புத் திட்டம்
என்ற முறையிலே பொதுவாக எல்லோரும் வாங்குகிற அளவுக்கு
வருகிறபோது செக்யூரிட்டி இல்லாமல் 500 ரூபாய் முதல்
25 ஆயிரம் ரூபாய் வரையில் கடன் வழங்குகிற வேறு ஏற்பாடுகள்
இருக்கின்றன. அந்த வகையில் சென்ற ஆண்டு 1 லட்சத்து
75 ஆயிரம் பேர்கள் பலன் பெற்றார்கள் என்று தெரிவித்
திருக்கிறேன். அதைப்போலவே இந்த ஆண்டும் 1 லட்சத்து
75 ஆயிரம் பேர்களுக்குக் கொடுக்கிற அளவுக்கு ஏற்பாடுகள்
நடைபெறுகின்றன. அதிலே நாம் எந்த மாற்றமும் செய்வதற்
கில்லை. எந்த மாற்றமும் மத்திய அரசும் ரிசர்வ் வங்கியும்தான்
செய்ய வேண்டும்.

**திரு. தி. அன்பழகன்** : தலைவர் அவர்களே, சில இடங்
களிலே ஒரு சில கிராமப் பகுதிகளிலே எந்த வங்கியும் கடன்
கொடுக்க முடியாத காரணத்தினால்—சில இடங்களிலே வங்கிக்
கடன்களை சிலர் திரும்பக் கட்டாத காரணத்தினாலே அந்தப்
பகுதியிலே தேசீயமயமாகக்கப்பட்ட வங்கிகள் கடன்தர
முன்வருவதில்லை—இந்தக் குறைபாடுகளை நீக்கி அனைத்துக்
கிராமங்களுக்கும் அந்த வங்கிகள் கடன் தருவதற்கான
ஏற்பாடுகளைச் செய்ய அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவர்
அவர்களே, தேசீயமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாகவும் பிற
வங்கிகள் மூலமாகவும் நலிந்த சமுதாயத்தினருக்குக் கடன்கள்
வழங்க வேண்டுமென்ற முறையிலே சுலபமான முறையிலே
எளிதான முறையிலே வழங்க வேண்டுமென்பதற்காக
அவர்கள் விதிமுறைகளை வகுத்திருக்கிறார்கள். அதை
இப்போதுகூட தளர்த்தி இருக்கிறார்கள். குறைந்த பட்சம்
முன்பணக் கடன் என்ற முறையிலே 40 சதவீதம் நலிந்த





பிரிவினருக்காவது போகவேண்டுமென்று விதிமுறை வகுக்கப்பட்டி
ருக்கிறது. வங்கிகள் கொடுக்கிற பணம் திரும்ப வருகிற
இடங்களிலே அவர்கள் தாராளமாகக் கடன் வழங்குகிற நிலைமை
இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப் போன்று
வங்கிகள் வழங்குகிற கடன்களை பலபேர்கள் திரும்பச்
செலுத்தாததன் காரணமாக வங்கிகள் கடன் தர முன்வருவ
தில்லை. அது நியாயந்தான். வங்கிகள் கொடுக்கிற கடன்களை
திரும்பச் செலுத்தித்தான் ஆக வேண்டும். அப்படிச்
செலுத்துகிற சூழ்நிலை வருமானால் வங்கிகளின் மூலமாகக்
கடன்கள் வழங்குகின்ற ஒரு சூழ்நிலை உருவாக இயலும்.

**திரு. கே. ஆர். சுந்தரம்** : தலைவர் அவர்களே, தேசீய
மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாக நிலமற்ற ஏழை விவசாயி
களுக்கு, ஊரக வளர்ச்சி போன்ற பல்வேறு திட்டங்களில்
அவர்கள் வளர்ச்சி பெறுவதற்கு நிதி உதவி செய்யப்படுவதாக
அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். திருவண்ணாமலையிலே
மட்டுமல்ல, குடியாத்தம் பகுதியில் ஏற்கனவே கடன் வாங்கிய
வர்கள் கட்டாத காரணத்தினால் அந்தத் திட்டத்திற்கு கடன்
வழங்காமல் இருக்கிறார்களே, ஏழை எளிய மக்கள் முன்னேறு
வதற்காக அரசு அறிவித்துள்ள இந்தத் தொகையை ஊராட்சி
மன்றம் சிபாரிசு செய்தும்கூட வழங்காமல் இருக்கிறார்களே,
அந்த நிலைமையைப் போக்கி, அதை வழங்கச் செய்வதற்கு
அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவர்
அவர்களே, நியாயமான அடிப்படையில் ஏழை எளிய விவசாயி
களுக்கும் மற்றவர்களுக்கும் கிடைக்க வேண்டிய கடன்கள்
கிடைக்காமல் இருக்கிற நிலை இருக்குமானால் அதை அரசின்
கவனத்திற்குக் கொண்டு வந்தால் வங்கிகளுடைய கவனத்திற்கு
அதைக் கொண்டுவர அரசு முயலும். உள்ளபடியே அவர்கள்
வகுத்திருக்கிற விதிமுறைகளை மாற்ற வேண்டுமானால்
அது நம்மால் முடியாது. நியாயமாக கிடைக்க வேண்டிய
அளவுக்கு கிடைக்கவில்லை. அவர்கள் வேண்டுமென்றே
கொடுக்க மறுக்கிறார்கள். கொடுக்க இயலாது என்று சொல்
கிறார்கள் என்ற அளவுக்கு நிலைமைகள் உணரப்படுமானால்
அதுபற்றி அந்த அந்த வங்கிகளுக்குத் தெரிவிக்கப்பட்டு தக்க
நடவடிக்கைகளை எடுக்க அரசு முயலும்.

**திரு என். 'வரதராஜன்** : தலைவர் அவர்களே, இந்த
வங்கிகளே பெரிய தொழில்களைப் பாதுகாக்கிறார்கள் என்ற
காரணத்தினால்தான் தேசவுடைமை ஆக்கப்பட்டன. இன்று
நலிந்த பிரிவினருக்கு 40 சதவீதம் அளவுக்குக் கடன் கொடுக்
கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால்
அவர்கள் கொடுத்த புள்ளி விவரத்திலே பார்த்தால் கடலிலே
கரைத்த பெருங்காயம் போன்றுதான் சிறிய தொகையாக அது
இருக்கிறது. மத்திய அரசுதான் விதிமுறைகளை வகுக்க

வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது மாநில அரசு 40 சதவீதம் சிறு தொழில்களுக்கும் விவசாயிகளுக்கும் கிடைக்கிற மாதிரி ஏற்பாடு செய்ய வேண்டுமென்று பலமாக மத்திய அரசை வற்புறுத்துவார்களா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, நலிந்த பிரிவினருக்கு குறைந்த அளவு 40 சத வீதமாவது வழங்கப்பட வேண்டுமென்றுதான் விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. சிலபல வங்கிகள் 45 50 சதவீதம் என்ற அளவுக்குக்கூட நலிந்த பிரிவினருக்கு வழங்கியிருக்கிறார்கள். குறைந்த பட்சம் 40 சதவீதம் வழங்க வேண்டும் என்பதுதான். ஆகவே விவசாயிகளுக்கும் கடன் வாங்குவோருக்கும் வங்கிகளுக்கும் இடையில் பணிகளைச் செம்மைப்படுத்துவதற்கு நிதி நிறுவனங்கள் துறை என்ற தனி துறையை நாம் சென்ற ஆண்டு அமைத்திருக்கிறோம். அந்தத் துறைக்கென்று தனியாக ஒரு ஆணையர் மற்றும் செயலரும், துணைச் செயலரும், மற்றும் நிதி நிறுவன சீர்மைப் பிரிவிற்காக மூன்று இணை இயக்குநர்களும் இருக்கின்றனர். அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப்போன்று சங்கடங்களைத் தீர்ப்பதற்கும் போக்குவதற்கும் அரசு முயற்சிகளை எடுத்து வருகிறது.

(முற்பகல் 9–10)

**திரு. எஸ். ஆண்டித்தேவர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசுடைமை யாக்கப்பட்ட வங்கிகளும், மற்ற வங்கிகளும் நலிந்த பிரிவின ருக்கும், சிறு விவசாயிகளுக்கும் 40 சதவீதம் கடன் கொடுக்க வேண்டும் என்று விதி இருக்கிறது என்று சொன்னார்கள். அப்படி விதி இருந்தாலும் ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக தமிழக அரசு கொடுக்கின்ற 1-ல் 4 பங்கு மானியத்தை கொடுக்காமல் ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் அனுப்பிய மனுக்களுக்கு அரசுடைமையாக்கப் பட்ட வங்கிகள் கொடுக்க மறுக்கிறது. அப்படிப்பட்ட நியாயமான நலிந்த பிரிவினருக்கு தமிழம அரசு மானியத்தை கொடுக்கிறோம் என்று சொன்னதற்கு பிறகு அப்படி கொடுக்காமல் இருக்கும் வங்கிகள் கொடுக்கச் செய்வதற்கு அரசு ஏதாவது ஆணை பிறப்பிக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடுக்காமல் இருப்பார் களானால் அதற்கான காரணம் என்ன என்பதை நாம் கண்டு அறிய வேண்டும். ஆகவே, நியாயமான அடிப்படையில் கொடுக் காமல் இருப்பார்களானால் கொடுக்க செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அந்த வகையில் நிதி நிறுவனம் என்ற துறை இப்போது பணியாற்றி வருகிறது. அப்படி நியாயமான குறைபாடுகள் இருக்குமானால் நிதி நிறுவனத்துறையின் கவனத் திற்கு அது கொண்டு வரப்படுமானால் உரிய வங்கிகளோடு தொடர்புகொண்டு தக்க ஏற்பாடுகளைச் செய்வதற்கு அரசு முயலும்.





## சிறுசேமிப்புப்பற்றி பிரச்சாரம் செய்ய திரைப்படம் தயாரிக்கும் திட்டம்.

571 (*வினா எண். 22015) **திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிறுசேமிப்புப் பற்றி மக்களிடையே பிரச்சாரம் செய்யும் வகையில் திரைப்படம் தயாரிக்க அரசு முடிவு செய்துள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** சிறுசேமிப்புப் பற்றி மக்களிடையே பிரச்சாரம் செய்யும் வகையில் திரைப்படம் தயாரிக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**டாக்டர் கே. சமரசம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படிப்பு அறிவு என்பது தமிழகத்தில் மிகுதியான தேவையான அளவுக்கு வளராத இந்த சூழ்நிலையில் கண்ணுற்றல் அல்லது பார்த்தல், கேட்டல் இவைகள் மூலமாக, அதிக அளவுக்கு தங்கள் சொந்த வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டிய இந்த சூழ்நிலையில் 3 தலைமுறைக்கு வாழ்க்கையை இப்படித்தான் அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற நல்ல கருத்துக்களை சினிமா மூலம் எடுத்துக் காட்டிய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருக்கின்றபோது, சிக்கனம், கஞ்சத் தனம், செலவினம் இவைகளுக்கு இலக்கணமாக இப்போது நிதி அமைச்சராக டாக்டர் நாவலர் அவர்கள் இருக்கின்றபோது அவர்கள் நல்ல முறையில் இதை தயாரித்து பல்வேறு கோணங் களில் இந்த படத்தின் மூலம் எடுத்துக் காட்ட அரசு முன்வருமா ? அதற்கான முயற்சிகளை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே கூறியபடி சிறுசேமிப்புப்பற்றி மக்களிடத்தில் தெளிவான நல்ல கருத்துக் களைப் பரப்ப வேண்டும். அதற்காக செய்தி விளக்கத் திரைப் படம் பயன்படும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் செய்தி விளக்கத் திரைப்படம் ஒன்றை தயாரிப்பதற்கான முயற்சியை சிறு சேமிப்புத் துறை எடுத்து வருகிறது. அதற்கு ஆகும் செலவு 2 இலட்சத்து 71 ஆயிரம் ரூபாய் என்று அந்தத் திரைப்படத்துறை அரசுக்கு எழுதியிருக்கிறது. அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் அப்படிப்பட்ட செய்தி விளக்கத் திரைப்படம் எடுத்து மக்களுக்கு போட்டு காண்பிப்பதன் மூலம் மக்கள் இன்னும் தெளிவு பெறலாம் என்று அரசு எதிர்பார்க்கிறது.

[1984 ஏப்ரல் 16

**சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் மொழி போராட்ட வீரர்களுக்கு மனைப்பட்டா வழங்கும் திட்டம்.**

572 (*வினா எண். 16754) **திரு. வேடசந்தூர் வி. பி. பால சுப்பிரமணியன் :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சொந்த வீடு இல்லாத சுதந்திரப் போராட்ட வீரர்கள், மொழிப்போரில் ஈடுபட்டோர் ஆகியோருக்கு முன்னுரிமை அளித்து மனைக்கட்டுக்கள் வழங்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ்.டி. ரோமசுந்தரம் :** (அ) மற்றும் (ஆ) சொந்த வீடு இல்லாத சுதந்திர போராட்ட வீரர்களுக்கு முன்னுரிமை அளித்து மனைப்பட்டா வழங்குவதற்கு அரசு ஆணை இருக்கிறது. அதுபோல தமிழ் மொழிக்காகவும், தமிழ் பண் பாட்டிற்காகவும் இன்னல்கள் பல ஏற்று பல வீரர்களுக்கு ஏற்கனவே அரசால் வழங்கப்பட்ட மாத ஊதிய திட்டம் உச்ச நீதிமன்ற தீர்ப்பின் காரணமாக கைவிடப்பட்டுள்ளது.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொழிப் போரில் ஈடுபட்ட வீரர்களுக்கு வழங்கப்பட்ட சலுகை உச்ச நீதிமன்ற தீர்ப்பால் நிறுத்தப்பட்டுள்ளது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உச்ச நீதிமன்றத்தில் யார் அந்த வழக்கைப் போட்டார்கள் ? அதுவும் அல்லாமல் அதிலே இந்த வீட்டுமனை வழங்குகின்ற சலுகையும் ரத்துசெய்யவேண்டும் என்று உச்சநீதி மன்றத்தால் சொல்லப்பட்டு இருக்கிறதா ? என்ற விளக்கங் களையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்திற்கு யார் வழக்கை கொண்டு போனார்கள் என்ற குறிப்பு என்னிடத்தில் இல்லை. ஆனால் என்னிடத்தில் சொல்லப்பட்டது, வழக்கைத் கொண்டு போனவர்கள் தமிழ்நாட்டில் உள்ளவர்கள்தான். தமிழ் மொழி பேசுகிறவர்கள்தான் கொண்டு போனார்கள் என்றும், தமிழ் உணர்வு உடையவர்கள்தான் கொண்டு போனார் கள் என்றும், தமிழ் காற்று நுகர்பவர்கள்தான் கொண்டு போனார்கள் என்றும், தமிழ் நாட்டில் மற்ற தமிழ் மக்களோடு வாழ்பவர்கள்தான் கொண்டு போனார்கள் என்ற குறிப்பு என்னிடத்தில் இல்லை என்றாலும் அது என்னிடத்தில் சொல்லப் பட்டிருக்கிறது.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுமனை வழங்குவதில் **சுதந்திரப் போராட்ட வீரர்களைப் பொறுத்தவரையில் 1-ஏ என்ற**



1984 ஏப்ரல் 16]

*முறையில் முன்னுரிமை கொடுத்து அரசு ஆணை பிறப்பித்திருக் கிறது. அது போல் குறைந்த பட்சம் வீட்டு மனைப் பட்டாக்களை வழங்குவதிலாவது இந்த மொழிப்போராட்ட வீரர்களுக்கு முன்னுரிமை கொடுத்து வழங்குவதற்கு அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் மொழிக்காகவும், தமிழ்ப் பண்பாட்டுக்காக்வும் இன்னல்கள் பல ஏற்ற தியாகிகளுக்காக ஏற்கனவே அரசால் வழங்கப்பட்ட மாத ஊதியத்தைக் கொடுக்க முடியாமல் உச்ச நீதி மன்றத்திற்கு, தமிழ் நாட்டிலே உள்ளவர்கள் சென்று அது தடை விதித்து, அதற்குப் பிறகு நீதிமன்றத்திலே அவர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பளித்தாலும், இந்த அரசு அப்படிப்பட்டவர்களுக்கு எப்படியும் உதவி செய்ய வேண்டு மென்று ஒரு சட்ட முன் வடிவைக் கொண்டு வந்து இங்கே நிறை வேற்றியிருக்கிறது. அந்தச் சட்ட முன்வடிவு மேலவையிலும், பேரவையிலும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதற்கான விதி முறைகளை அரசு வகுத்துக் கொண்டிருக்கிறது. விதிமுறைகளை வகுத்தவுடன் அவர்களுக்கு எல்லாவிதமான உரிமைகளை-பட்டா கொடுப்பதைப் பற்றியும், ஓய்வூதியம் கொடுப்பதைப் பற்றியும், அவர்களுடைய சந்ததிகளுக்கு உதவி செய்வதைப் பற்றியும் இந்த அரசு நன்கு பரிசீலித்து ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**திரு. ந. சிவஞானம் :** *மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு வீட்டு மனைகள் கொடுப்ப தாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வீட்டு மனைகளில் வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு அரசுக்கு உத்தேசம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** *பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் அரசினுடைய குறிப்பில் இல்லை.*

**திரு. சு. பாலன் :** *மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, மொழிப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்ற வீரர்களுக்கு மாத ஊதியம் கொடுக்கப்பட்டிருந்தது. அது கோர்ட்டுக்குச் சென்றதால் நிறுத்தப்பட்டதாகவும், அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்திலே இந்த அரசு சட்டம் கொண்டு வந்திருப்பதாகவும் மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஏற்கனவே, 75 ரூபாய் மாத ஊதியம் கொடுக்கப்பட்டதை 150 ரூபாயாகக் கொடுக்கப் போகிறோம் என்று அறிவிக்கப் பட்டிருந்ததே, அதற்கு இந்தச் சட்டத்திலே வழிவகை செய்யப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவரவர்களே, இந்த அரசினுடைய நல்லெண்ணத்தின் காரணமாகத்தான், உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்புக்குப் பிறகு கூட, சட்ட முன்வடிவைக் கொண்டு வந்து நிறைவேற்றி யிருக்கிறது. விதிமுறைகளை வகுக்க இருக்கிறது. ஆனால், ஓய்வூதியத்தைப் பொறுத்தவரையில் பெரிய அளவில், நல்ல படியாக இந்த அரசு கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கோவைத் தம்பி :** மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, சுதந்திரத்தினுடைய சுவையைச் சுவைக்க மொழி உணர்வு வேண்டும் ; மொழி உணர்வை வெளிப்படுத்த சுதந்திரம் வேண்டும். இந்த இரண்டு போராட்டங்களிலும் இரத்தம் சிந்தி பாடுபட்ட தியாகிகளுக்கு, அவர்கள் சமாதியில் வைக்கப் பட்ட மலர் வளையங்களின் காரணமாக மலர் மாலைகளைப் பெற்றுக்கொண்டிருக்கின்றோம். நாம் அவர்களுக்குச் செய்யும் உதவி சம்பந்தமாக உச்ச நீதிமன்றத்தில் சென்று, அது தடை விதித்தது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்தத் தமிழரின் பெயரை இந்த மன்றத்தில் அறிவிப்பார்களா ? அந்தத் மொழி உணர்வுக்காகப் பாடுபட்ட தியாகிகளுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக என்ன எதிர்காலத் திட்டத்தை அரசு வைத்திருக் கிறது என்பதை அறிய விரும்பு விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவரவர்களே, அரசு வைத்திருக்கின்ற திட்டம்தான் நான் சொன்னது. இங்கே சட்ட முன் வடிவைக் கொண்டு வந்து நிறை வேற்றியிருக்கிறோம் ; நிறைவேற்றி அதற்கு ஆளுநர் அவர்களின் அனுமதியைப் பெற்றிருக்கிறோம். விதிமுறைகளைப்பற்றி பரிசீலனையில் இருக்கிறது. அந்த விதிமுறைகளின்படி, தமிழுக்காக, தமிழ் மொழிக்காக தமிழ்ப் பண்பாட்டிற்காக இன்னல்களை அனுபவித்தவர்கள் யாரானாலும் அவர்களைக் குறித்து ஜாதிமத வேறுபாடுகளைப் பார்க்காமல், அவர்கள் எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று பார்க்காமல் தமிழ் மொழி உணர்வை மட்டும் கொண்டு அவர்களுக்கு எல்லாவிதமான உதவிகளையும் இந்த அரசு செய்யும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றவர் யார் என்று குறிப்பிடுகின்றபொழுது, பெயர் தெரிய வில்லை. உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றவர், ஒன்று தமிழ் நாட்டிலேயே உள்ளவர் ; இரண்டு, தமிழ் உணர்வு படைத்தவர் ; மூன்று, தமிழ்க் காற்றை நுகர்பவர் ; நான்கு, தமிழ் மக்களோடு சேர்ந்து இருப்பவர் என்று நான் தெரிவித்து விட்டேன்.

**திரு. இரே. இராசமாணிக்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட வீரர் களுக்கும், மொழிப் போரில் ஈடுபட்ட வீரர்களுக்கும்—சொந்த





மாகக் குடியிருப்பதற்குக் கூட இல்லாமல் இருப்பவர்களுக்கு—மனைகளை வழங்குவதோடு கூட, வீடு கட்டிக் கொடுக்கப் படுமா என்று கேட்டபொழுது அதற்கு அமைச்சரவர்கள் பதில் சொல்லும் நேரத்தில், அதற்கான குறிப்பு இல்லை என்று சொன்னார்கள். இப்படி மொழிக்காக, நாட்டுக்காகப் பாடுபட்ட தியாகிகளுக்கு, வீடு இல்லாதவர்களுக்குக் கண்டடிப்பாக அரசின் சார்பாக வீடு கட்டிக் கொடுக்க அமைச்சர் அவர்கள் முன்னுரிமை அளித்து ஆவன செய்வார்களா ?

*(முற்பகல் 9–20)*

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே, சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட வீரர்களுக்கு நிலங்கள் கொடுக்கப்படுகின்றன ; வீட்டுமனைப் பட்டா கொடுக் கப்படுகின்றன. அவர்களுக்கு அவர்களுடைய ஏழ்மைக்குத் தகுந்த படி வேண்டிய உதவிகளை இந்த அரசு கொடுக்கின்றது ; வீட்டு மனைப் பட்டா கொடுக்கின்றது. அதுமட்டுமல்லாமல் மத்திய அரசு உதவி ஊதியமும் தருகின்றது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆண்டித் தேவர் :** தலைவர் அவர்களே, சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கும், மொழிப் போராட்ட வீரர்களுக்கும் வீட்டுமனை கொடுப்பதில் முன்னுரிமை கொடுக்கப் படும் என்று சொன்னர்கள். அவ்வாறு கொடுப்பதைப் பொறுத்தவரையில் ஐ. என். ஏ. வீரர்கள் சேர்க்கப்பட்டிருக் கிறார்களா ? அவர்களுக்கும் கொடுக்கப்படுகின்றதா ? ஐ.என்.ஏ. வீரர்கள் குறித்து என்ன நடவடிக்கையை அரசு எடுத்திருக் கின்றது ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** தலைவர் அவர்களே, ஐ. என். ஏ. வீரர்கள் பற்றி மத்தியப் பேரரசினிடத்திலே கேட்கப்பட்டு, நாடாளுமன்றத்திலே கேட்கப்பட்டு. அதன்படி மத்திய அரசு அதற்காக ஒரு விதிமுறையினை வகுத்திருக்கின்றது. அதற்கேற்றவாறு அவர்களுக்கும் உதவி செய்யப்படும்.

**ரெட்டணை கிராமம் அண்ணா நகரில் புறம்போக்கு நிலத்தில் வீடு கட்டி வாழ்ந்து வரும் ஏழைக் குடும்பங்களுக்கு மனைப்பட்டா வழங்கும் திட்டம்.**

*573—(*வினா எண். 18778)* **திரு. கே. எம். தங்கமணி :** மண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பார—

(அ) திண்டிவனம் வட்டம் ரெட்டணை கிராமம் அண்ணா நகரில் புறம்போக்கு இடங்களில் வீடுகட்டி வாழ்ந்துவரும் ஏழை குடும்பங்களுக்கு மனைப் பட்டா தர வேண்டும் என அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில். அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) ஆம்.

(ஆ) ரெட்டணை கிராமம் மேற்படி அண்ணா நகரில் 28 வீடுகள் உள்ளன. அவற்றிலே 4 வீடுகளுக்கு மட்டும் தான். 10 வருடங்களுக்கு மேலாக அவர்கள் அங்கே இருக்கின்ற காரணத்தால் வீட்டுமனைப் பட்டா கொடுக்க அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. எம். தங்கமணி : தலைவர் அவர்களே, நீண்ட நெடு நாட்களாக அந்த ரெட்டணை கிராமத்தில் உள்ள ஏழை எளியவர்கள் குடிசைகளுக்கு மனைப் பட்டா வேண்டும் என்று கேட்டு வருகிறார்கள். இப்போது அவர்களில் 4 பேர்களுக்கு மட்டும்தான் மனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்வதாக அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அங்கே மீதி இருப்பவர்களையும் கணக்கில் எடுத்துக்கொண்டு அவர்களுக்கும் மனைப் பட்டா வழங்க ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, 4 பேர்கள் மட்டும்தான் 10 ஆண்டுகளாக அங்கே இருக்கிறார்கள் ; மற்றவர்கள் 10 ஆண்டுகளாக அங்கே இல்லை என்பதற்காக மட்டும் அது மறுக்கப்படவில்லை. மற்றவர்கள் எல்லாம் அங்கே அருகாமையில் ஓராண்டுகளுக்கு முன்புதான் குடிவந்திருக்கிறார்கள். ஆகவே, அரசு மற்றவர்களுக்கெல்லாம் மனைப் பட்டா கொடுப்பதற்கு மறுப்பதற்குக் காரணம் அது மந்தைவெளிப் புறம்போக்கு நிலம் என்பதால் மட்டுமல்ல. அங்கே அருகாமையில் ஆறு ஓடுகின்றது. அங்கே மாடுகள் எல்லாம் தண்ணீர் குடிப்பதற்காக வருகின்றபோது அவை நிற்பதற்குக்கூட இடம் இல்லை. அந்த ஊரில் இருப்பவர்களிடத்திலே எல்லாம் கேட்டபோது சிலபேருக்கு வீட்டுமனைப் பட்டா கொடுப்பதால் கிராமத்திலே இருக்கக்கூடிய மாடுகள் தண்ணீர் குடிக்கப்போவதற்கும், தண்ணீர் குடித்துவிட்டு வெளியே வருவதற்கும் நிலம் இல்லாமல் போகின்றது என்று அந்த ஊரில் உள்ளவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். மேலும் எல்லா கிராமங்களிலும் மந்தைவெளிப் புறம்போக்கு தேவைப் படுகிறது என்பதால் மந்தைவெளிப் புறம் போக்கு, மேய்ச்சல் தரைப் புறம்போக்கு ஆகியவற்றைப் பொறுத்தவரையில் ஆலோசனை செய்து அவற்றிலே பட்டா கொடுப்பதால் உள்ள இன்னல்களை எல்லாம் கவனித்துத்தான் அரசு முடிவு எடுக்கின்றது.

திரு. கே. எம். தங்கமணி : தலைவர் அவர்களே. ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்று கூறிய பேரறிஞர் அண்ணா அவர்களின் கருத்திற்கேற்ப அந்த ரெட்டணை



கிராமத்திலே உள்ள அண்ணா நகரில் குடியிருக்கின்ற அந்த ஏழை எளியவர்களுக்குப் பட்டா கொடுக்க வேண்டும். அங்கே சில ஆதிக்க சக்திகள் அதனை மந்தவெளிப் புறம்போக்கு என்றும், அதானால் அங்கே அவர்களுக்குப் பட்டா வழங்கக்கூடாது என்றும் சில இடர்பாடுகளை, செய்து வருவதாக நான் அறிகிறேன். அந்த இடர்பாடுகளை மாண்புமிகு அமைச்சர் அவர்களாவது நீக்கி அங்கே ஏழைகளுக்கு மனைப் பட்டா வழங்க ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, அந்த குறிப்பிட்ட இடத்திலே பல்வேறு விதமான மரங்கள் இருக்கின்றன. புளியமரம் மற்றும் பல மரங்கள் அங்கே இருக்கின்றன. அந்த மரங்களை அரசு ஏலத்திற்கு விடுகின்ற நிலைமைகள் எல்லாம் இருக்கின்றன. இவற்றை எல்லாம் எண்ணிப் பார்த்து மந்தைவெளிப் புறம்போக்கு அந்த ஊருக்கு தேவைதானா இல்லையா என்பதையும் அங்கே மனைப் பட்டா கொடுத்துவிட வேண்டுமா என்பதையும் மீண்டும் ஒரு முறை வேண்டுமானால் நான் பரிசீலிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 574, 575 ஆகிய இரண்டையும் சேர்த்து எடுத்துக் கொள்ளப்பெறும்.

பீடித் தொழிலாளர்களுக்கான குறைந்த பட்சக் கூலி நிர்ணயம்.

*574—(வினா எண் 12114)—திரு. கு. ரமணி:—மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பீடித் தொழிலில் குறைந்தபட்சக் கூலி ரூ. 7—லிருந்து ரூ. 8 வரையில் நிர்ணயிக்கப்பட வேண்டுமென்று மாநிலத் தொழிலாளர் நல அமைச்சர்கள் மத்திய அரசுக்கு ஆலோசனை கொடுத்துள்ளது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது மத்திய அரசு எடுத்த முடிவு தரப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராசுவானந்தம் : (அ) மற்றும் (ஆ) புதுடெல்லியில் 11—9—1981-ல் மைய அரசின் தொழிலாளர் நல அமைச்சரின் தலைமையின்கீழ் சில மாநிலங்களின் தொழிலாளர் நல அமைச்சர்கள் கூட்டத்தில், பீடித் தொழிலுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 7.00-லிருந்து ரூ. 8.00 வரை குறைந்த அளவு ஊதியம் நிர்ணயிப்பது என்ற ஒரு மித்த முடிவு எடுக்கப்பட்டு இதன் மேல் தக்க நடவடிக்கை எடுக்கும்படி மாநில அரசுகளை மைய அரசு கேட்டுக்கொண்டது. இதனைக் கருத்தில் கொண்டு பீடி சுற்றும் தொழிலாளருக்கு தமிழ் நாட்டில் 12—3—1982 முதல் குறைந்த அளவு ஊதிய வீதங்கள்

1,000 ஜாடி பீடிகள் சுற்ற ரூ. 7.20, 1,000 சாதா பீடிகள் சுற்ற ரூ. 7.00 என்று திருத்தியமைக்கப்பட்டன. பீடி சுற்றும் தொழில் தவிர பீடி மற்றும் சுருட்டுத் தொழிலில் ஈடுபட்டுள்ள பிற தொழிலாளர்களுக்கு 21—2—1983 முதல் குறைந்த அளவு ஊதிய வீதங்கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

575—(*வினா எண் 16997)—திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பீடித் தொழிலாளர்களுக்குத் தமிழக அரசு நியமனம் செய்த குறைந்தபட்ச சம்பளக் கமிட்டியின் பரிந்துரை தமிழக அரசுக்குக் கிடைத்துவிட்டதா ?

(ஆ) ஆம். எனில், அந்த அறிக்கை எப்போது வெளியிடப் படும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) பீடி மற்றும் சுருட்டு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள பீடி சுற்றும் தொழிலாளர் நீங்கலாக மற்ற தொழிலாளர்களுக்கான குறைந்த பட்ச ஊதியக் குழுவின் அறிக்கை அரசிற்கு வந்துவிட்டது.

(ஆ) பீடி சுற்றும் வேலை தவிர பீடி மற்றும் சுருட்டு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தொழிலாளருக்கு குழு மூறையைப் பின்பற்றி அதன் அறிக்கையின் அடிப்படையில் 21—2—1983 மூதல் குறைந்த அளவு ஊதிய வீதங்கள் திருத்தியமைக்கப் பட்டுள்ளன. பீடி சுற்றும் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர் களுக்கு ஏற்கனவே அறிவிக்கை மூறையைப் பின்பற்றி 12—3—1982 முதல் குறைந்த அளவு ஊதிய வீதங்கள் திருத்தியமைக்கப்பட்டன.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே. அமைச்சர் அவர்கள் விடை அளிக்கும்போது ரூ. 7லிருந்து ரூ. 8வரை கூலி என்பது 12—3—1982 முதல் கொடுப்பதற்கான முடிவு ஏற்பட்டுள்ளது என்று கூறினார்கள். ஆனால் ஏற்கனவே பீடித் தொழிலாளர்கள் செய்து கொண்டிருக்கும்படியான ஒப்பந்தத்தின்படியே அவர் களுக்கு எட்டு ரூபாய் கிடைத்து வருகிறது. அப்படியானால் இந்த குறைந்தபட்ச கூலி நிர்ணயத்தின் மூலம் அவர்களுக்கு அதிப்படியான கூலி எவ்வளவு கிடைத்துள்ளது ? அந்த முறையில் இது ஆலோசிக்கப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, ஆயிரம் ஜாடி பீடிக்கு ரூ. 5.50 என்றிருந்ததை ரூ. 7.20 ஆக உயர்த்தினோம், ஆனால் சென்னை, சேலம், திருச்சி, வட ஆற்காடு மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில்





பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கான ஊதிய விகிதங்களை கீழ்க் கண்டவாறு உயர்த்த தொழில் தகராறு சட்டம் 12 (3)ன்கீழ் ஒப்பந்தங்கள் 1983-ல் ஏற்பட்டுள்ளது. ஆயிரம் சாதா பீடிகள் சுற்ற ரூ. 7.80 என்றும், ஆயிரம் ஜாடி பீடிகள் சுற்ற ரூபாய் எட்டு என்றும் ஒப்பந்தம் போட்டிருக்கின்றார்கள். இந்தக் கூலி விகிதம் தமிழ்நாடு பூராவும் இருக்க வேண்டும் என்று சொல்வதற்கு இதையே குறைந்த பட்ச ஊதியமாக நிர்ணயிப்பதற்கு வேண்டிய முன் அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது ; தக்க நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படும்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியை நான் சட்டமன்றத் துறைக்கு அனுப்பி பல மாதங்கள், ஏன் ஒரு வருடம் கூட ஆகியிருக்கும் என்று நான் கருதுகிறேன். அதனால்தான் இப்போது வரக் கூடிய பதில் இப்போதைய நிலைக்கு முரண்பாடாக இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் உணர்வார்கள் என்று நான் நினைக்கிறேன். இந்த ஒப்பந்தம் ஏற்பட்டு ஒரு ஆண்டுக்கு மேலாகிறது. இந்தக் காலத்திற்குள்ளே ஐம்பது புள்ளிக்குமேல் விலைவாசி ஏறியிருக் கிறது என்று நினைக்கிறேன். அப்படியானால் மத்திய அரசின் தலைமையில் மாநில தொழிலாளர் நலத் துறை அமைச்சர்கள் கலந்து கொண்டு எடுத்த முடிவின்படி ஐம்பது புள்ளி உயர்வு ஏற்பட்டால் அல்லது இரண்டு ஆண்டுகள் முடிந்து விட்டால் இந்த குறைந்த பட்சக் கூலி விகிதத்தை அதிகப்படுத்த வேண்டும் என்ற முடிவு இருக்கிறதே, அதன்படி இந்த எட்டு ரூபாய்க்கு மேல் விலைவாசியேற்றத்திற்கு ஈடுகட்டும் முறையில் அவர்களுக்கு அதிகப்படியாகக் கூலி கிடைக்கும் முறையில் திருத்தி அமைப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ் இராகவானந்தம் : தலைவர் அவர்களே, முதலில் சாதா பீடிக்கு ரூ. 7.80 என்றும், ஜாடி பீடிக்கு ரூ. 8 என்றும் தமிழகத்தில் உள்ள எல்லாத் தொழிலாளர் களுக்கும் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்துவிட்டு பின்னர் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன ஆலோசனையை பரிசீலனை செய்யலாம்.

திரு. என். ஏ. பூங்காவனம் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியைக் கொடுத்து ஏறக்குறைய ஒரு ஆண்டுக்கு மேல் ஆகியிருக்கும். இந்தக் கேள்வியை அனுப்புகிறபோது கூலி நிர்ணயக் குழுவின் நடவடிக்கைகள் விரைவாக வரவேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடுதான் அனுப்பப்பட்டது. ஆனால் அதற்குப் பின்னர் முடிவுக்கு வருவதற்கு முன்னர் போராட்டம் துவங்கி நாடு முழுவதும் கூலி உயர்வு கிடைக்க ஒரு ஏற்பாடு செய்து ஆணையர் முன்னால் ஒரு உடன்பாடு ஏற்பட்டது. ஆனால் உடன்பாடு ஏற்பட்டதற்குப் பின்னால் 50 சதவீதத்திற்கு மேல் பஞ்சப்படி இப்போது கொடுக்கிறார்கள்.

பத்து காசு என்று. 50 சதவிகிதம் உயர்ந்திருக்கிற காரணத்தினால் அதற்காக வேண்டி ஏதாவது புது ஆணை பிறப்பித்து அந்த அடிப்படையில் கொடுக்க வேண்டும் என்று அரசு அறிவித்துள்ளதா ?

(முற்பகல் 9-30)

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத் தான் நான் முதலிலேயே சொன்னேன். 12 (3) ஒப்பந்தப் பிரகாரம், சென்னை, சேலம், திருச்சி, வட ஆற்காடு மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் உள்ள தொழிலாளர்களுக்கு மட்டும் சாதா பீடிக்கு ஆயிரத்திற்கு ரூ. 7.80 என்றும், ஜாடி பீடிக்கு ரூ. 8 என்றும் கொடுக்கப்படுகிறது. ஆனால் தமிழகத்திலுள்ள ஏனைய மாவட்டங்களிலுள்ள தொழிலாளர்கள் அந்த அளவுக்கு வாங்கவில்லை. எனவே, நோடிபிகேஷன் மெதட் மூலம் அறிவிப்பு கொடுத்து, தமிழகம் பூராவும் குறைந்த பட்சம் கூலியை நிர்ணயித்து விடப் போகிறோம். அதற்கு வேண்டிய நடவடிக்கை துரிதமாக எடுக்கப்பட்டு வருகிறது. சட்ட சிக்கல் இருந்ததால் அதிலே கொஞ்சம் தாமதம் ஏற்பட்டது. அதை உடனே நடவடிக்கைக்கு கொண்டு வருகிறபோது, அதற்கு நோடிபிகேஷன் கொடுத்த பிறகு, மறு பரிசீலனை செய்யும்போது, மாண்புமிகு உறுப்பினர்கள் ரமணி, பூங்காவனம் ஆகியோர்கள் சொன்ன கருத்துக்களை மனதிலே வைத்து, எங்கள் கருத்தையும் அதிலே பொருத்தி, அதிலே என்ன செய்ய முடியும் என்று பார்ப்போம்.

**திரு. என். ஏ. பூங்காவனம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 50 புள்ளி உயர்வு இப்போது உயர்ந்திருக்கிறது. பீடித் தொழிலாளர்கள் நிர்வாகத்திற்கும், தொழிலாளர்களுக்கும் இடையே ஒரு உடன்பாடு ஏற்படுகிறபோது, ஏற்கனவே இந்தத் தேதியிலிருந்து 10 காசு உயர்வு ஆயிரத்திற்கு என்று கொடுக்கக் கூடிய நிலை வந்தபோது அதை அமுலாக்குகின்ற காலத்தில், ஐந்து மாதங்கள் கடந்துவிட்ட காரணத்தால், ஒவ்வொரு தொழிலாளருக்கும் ரூ. 10 தர வேண்டும். அந்த தேதியிலிருந்து கொடுக்கவேண்டுமென்று ஒரு உடன்பாடு ஏற்பட்டதாகச் சொல்லுகிறார்கள். அந்த அடிப்படையிலே வட ஆற்காடு மாவட்டத்தில், வாணியம்பாடியில் தொழிலாளகளுக்கு அந்த பத்து ரூபாயைக் கொடுக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அரசு ஏதேனும் அதன்மீது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தகவலை அரசுக்கு கொண்டு வந்தால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும். குறைந்த பட்ச கூலியை நிர்ணயிப்பதிலே இரண்டு வகைகள் உண்டு.





ஒன்று, குழுவை நியமித்து, அந்தக் குழுவின் பரிந்துரைகளைப் பரிசீலனை செய்து கொடுப்பதாகும், இன்னொன்று, நோடிபிகேஷன் மெதட். அரசாங்கமே நோடிபிகேஷன் கொடுத்து நிர்ணயிப்பதாகும். அரசாங்கமே நோடிபிகேஷன் கொடுத்து குறைந்த பட்சக் கூலியை நிர்ணயிப்போமானால், அதிலே தொழிலாளர்களுடைய பிரதிநிதிகளின் கருத்து பிரதிபலிக்குமா என்பது சந்தேகத்திற்குரிய விஷயம். எனவே, கமிட்டி மெதட்தான் சிறந்தது என்று அரசு கருதுகிறது. எனவே, இந்த ரூ. 7.80, ரூ. 8 என்பதைக் கொடுத்த பின்னர், குழு முறையை விரைவில் கொண்டு வந்து, அதைப்பற்றி பரிசீலனை செய்யும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் பற்றி என்னிடம் புகார் கொடுத்தால், எங்கே என்று சொன்னால், அதுபற்றி நிச்சயமாக தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ரா. உமாநாத் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறுகிறபோது, போன வருஷம் 1983 மார்ச்சில், மாநில ரீதியில் ஏற்பட்டிருக்கக் கூடிய கூலி சம்பந்தமான ஒப்பந்தத்தை அமுல் நடத்துவதற்கான நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார். என்னுடைய கேள்வி, அந்த ஒப்பந்தம் நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக அல்ல. அந்த ஒப்பந்தம் செய்தபிறகு, சுமார் 50 வாழ்க்கைப் புள்ளி உயர்ந்திருக்கிறது. ஆகவே, இப்போது இந்த ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு, 50 புள்ளி உயர்ந்த பிறகு, உடனடியாக அதற்கு ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை? என்ன செய்யப் போகிறீர்கள் ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 50 புள்ளிகள் மட்டுமல்ல, இரண்டு ஆண்டுகள் ஆகி விட்டதா என்பதைப் பார்க்க வேண்டும். உடனடியாக குறைந்தபட்சக் கூலியை நிர்ணயிப்பதற்கு இரண்டு முறைகள் இருக்கின்றன. ஒன்று நோடிபிகேஷன் மெதட். அரசாங்கம் நோடிபிகேஷன் கொடுத்து, கூலியை நிர்ணயிப்பது, இன்னொன்று குழு மெதட். குழுவை நியமித்து, அந்தக் குழுவின் பரிந்துரையைக் கேட்டு, அதைப் பரிசீலித்து கொடுப்பதாகும். இரண்டாவது முறையைத்தான் நல்லது என்று இந்த அரசு கருதுகிறது. குழுவை நியமித்தால், அதிலே தொழிலாளர்களின் பிரதிநிதிகள் இருப்பார்கள். நோடிபிகேஷன் மெதட் (Notification Method) சிரமம். அரசு ஒரு கூலியை நிர்ணயம் செய்தால், மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள், இந்த அரசு ரூ. 25 நிர்ணயிக்கக் கூடாதா, ரூ. 23-ஐத் தானே நிர்ணயித்திருக்கிறது என்று பேச ஆரம்பிப்பார்; அதிலே அரசியல்கூட வந்துவிடும். இந்த அரசு ஜனநாயக முறையில் இது இருக்க வேண்டுமென்பதற்காக குழு மெதடைப் பின்பற்ற இருக்கிறது. அந்த முறையில் ஒரு குழுவைப் போட்டு, பரிசீலனை செய்ததற்குப் பின்னால், அறிவிப்பு கொடுத்த

பின்னால் இரண்டு ஆண்டுகளைத் தாண்டி விட்டதா, 50 புள்ளிகள் தாண்டி விட்டதா என்பதைப் பார்த்து, குழு மெதட் மூலம், குறைந்தபட்சக் கூலியை நிர்ணயிப்பதற்கு இந்த அரசு நிச்சயமாக, பரிசீலனை செய்யும்.

**திரு. கி. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளர்களுக்குப் பல நிறுவனங்கள் ஒழுங்காக சம்பளத்தைக் கொடுப்பதில்லை என்ற குறை இருந்து வருகிறது. உதாரணமாக, திருப்பத்தூர், வாணியம்பாடி போன்ற தாலூகா பகுதிகளில் இருக்கிற ஒரு தொழிலாளி ஒரு கிலோ இலையை வைத்து பீடி உற்பத்தி செய்கின்றபொழுது, இடையே ஷார்ட்டேஜ் ஏற்படுகிறது என்று சொல்லி, சம்பளத்திலே பிடித்தம் செய்து விடுகின்றனர் நிறுவனத்தினர். ஆகவே, அப்படிப் பட்ட குறையைப் போக்கி, அவர்களுக்கு நியாயமான சம்பளம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இதையெல்லாம் மனதிலே வைத்துதான் தமிழக அரசு எல்லா தொழில்களுக்கும் நல்ல தொழிற்சங்கங்கள் இருக்க வேண்டும், தொழிற்சங்கங்கள் நல்ல முறையிலே வளர வேண்டுமென்று விரும்புகிறது. ஏனவே, தொழிற்சங்கம் அமைத்து, அப்படிப்பட்ட குறைகளை உரிய அதிகாரிகளுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார்களானால், அந்தக் குறைகளைத் தீர்க்க அரசு எல்லா நடவடிக்கைகளும் எடுத்துக் கொள்ளும்.

**திரு. ரா. கு. பெருமாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்ற பொழுது பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கு சேலம், செங்கல்பட்டு, வட ஆற்காடு மாவட்டங்களிலே கூலி நிர்ணயம் செய்யப் பட்டுள்ளது என்று சொன்னார்கள். குறிப்பாக, நெல்லை மாவட்டத்திலே, கடைய நல்லூர், மற்றும் மேலப்பாளையத்திலே பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் பீடி சுற்றுகின்ற தொழிலை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தக் கூலி நிர்ணயத்தை உடனடியாக அமுல்படுத்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொன்னேன். திருநெல்வேலியில் முக்கூடல் பகுதியிலே இருக்கிறவர்களுக் கெல்லாம் நூாடி பீடிக்கு ரூ. 5.50 என்று இருந்ததை, ரூ. 7.20 என்றும் சாதா பீடிக்கு ரூ. 5.25 என்று இருந்ததை ரூ. 7.00 ஆகவும் அரசு நிர்ணயித்தது. இது மிகவும் குறைவானது. ஆனால், சென்னை, திருச்சி, சேலம், வட ஆற்காடு மாவட்டங் களில் வலுவான தொழிற்சங்கங்கள் இருக்கின்றன. கூட்டு பேர முயற்சியின் காரணமாக, 12 (3) செட்டில்மென்டில், அங்கே





ரூ. 7.20-ஐ ரூ. 8 என்று வாங்கினார்கள். இந்த ரூ. 8-ஐ திருநெல்வேலியிலே இருக்கக் கூடியவர்களுக்கு, மற்றும் மதுரையிலே இருக்கக் கூடியவர்களுக்கு, தர்மபுரி மாவட்டத்திலே இருக்கக் கூடியவர்களுக்கு, கோயம்புத்தூர் மாவட்டத்திலே இருக்கக் கூடியவர்களுக்கு—எல்லா மாவட்டங்களுக்கும்—கிடைக்க வேண்டுமென்று இதையே குறைந்த பட்ச ஊதியமாக, நோடிபிகேஷன் மெதட் மூலமாகக் கொடுப்பதற்கு அரசு முயற்சி மேற்கொண்டிருக்கிறது. அப்பொழுது முக்கூடலில் இருக்கிற வர்கள், திருநெல்வேலி மாவட்டத்தில் இருக்கக் கூடியவர்கள் பலன் பெறுவார்கள்.

**திரு. ரா. கிருஷ்ணன் :** பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 5 இலட்சம் பீடித் தொழிலாளர்கள் இருந்து கொண்டிருக்கக்கூடிய நெல்லை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், ரூ. 7, ரூ. 8 என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கக் கூடிய. கூலி கூட முழுமையாக வழங்கப்படவில்லையென்பதுதான் உண்மை. ஏற்கனவே கம்பெனி கொடுக்கக் கூடியது இந்த மாதிரி இருக்க, எல். 2 லைசன்ஸ் பெற்று, கிராமப்புறங்களில் பீடியைத் தயார் செய்கின்றவர்களுக்கு அதைவிட குறைவாகத்தான் கொடுக்கிறார்கள். கிட்டத்தட்ட ரூ. 5, ரூ. 5.25 என்று சொல்லி, அதிலே இலை ஷார்ட்டேஜ் என்று குறைத்து, ரூ. 4.50தான் ஆயிரம் பீடிக்கு இன்றைக்குக் கொடுக்கின்ற நிலைமை சாதாரணமாக இருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட ஒரு குறைபாட்டைத் தீர்ப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் மேல் நடவடிக்கை எடுப்பதற்கு சட்டத்தில் இடம் உண்டு. குறைந்த சம்பளத்தைக் கொடுத்து ஏமாற்றும் கம்பெனி நிர்வாகத்தினர்மீது நடவடிக்கை எடுப்பதற்கு அரசு உடனடியாக சட்டத்தின் மூலமாக ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பீடித் தொழிலாளர் களுடைய அவல நிலையைப் போக்குவதற்கு 3 வழிகள்தான் உண்டு. ஒன்று நல்ல தொழிற்சங்கங்கள் அமைத்து, அது தொழிலாளர்களுக்காகப் பாடுபட்டு, அவர்கள் பிரச்னையை அவ்வப்போது எடுத்து அரசிடத்தில் கொடுப்பது. இரண்டாவது, நல்ல அரசு இப்பொழுதிருக்கிற காரணத்தால், அந்தத் தொழிற் சங்கங்கள் கொடுக்கக் கூடிய பிரச்னைகளை நன்றாகக் கவனித்து நடவடிக்கை எடுப்பது. மூன்றாவது கூட்டுறவு முறையிலே பீடி உற்பத்தி செய்ய முயற்சி எடுக்க வேண்டும். அதைப்பற்றி அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. கேரளத்திலே இருக்கிற டினேஷ் பீடி என்று கருதுகிறேன். அந்தப் பெயர் சரியா என்று ஞாபகம் இல்லை எனக்கு. ஆகவே, கூட்டுறவு முறையிலே உற்பத்தி செய்ய வேண்டும். இந்த 3 முறையிலே அட்டாக் செய்ய வேண்டும். அரசினுடைய தீவிரமான முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. நல்ல தொழிற்சங்கங்கள் அமைத்து செயல்பட வேண்டும். அந்தத் தொழிற்சங்கங்கள் கொடுக்கின்ற

புகார்கள்மீது நாம் நடவடிக்கை எடுக்கும்போது கூட்டுறவு முறையிலே உற்பத்தி செய்ய வேண்டும். இது கைத்தறி நெசவாளர்களுக்குக் கூடப் பொருந்தும்.

**விவசாயத் தொழிலாளர்களின் குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் குறித்த ஹரிபாஸ்கர் குழுவின் அறிக்கை.**

576—(*வினா எண். 17016) **திரு. என். பழனிவேல்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயத் தொழிலாளர்களின் குறைந்தபட்சக் கூலி நிர்ணயம்பற்றி ஆராய்ந்த ஹரிபாஸ்கர் குழு தனது அறிக்கையை அரசுக்கு அளித்து விட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) ஆம்.

(ஆ) குழுவின் அறிக்கையை அரசு ஆராய்ந்து, விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்கான குறைந்த அளவு ஊதிய வீதங்களை தஞ்சாவூர் மாவட்டத்தின் கிழக்குப் பகுதி தவிர தமிழ் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு 5—4—1983 முதல் மாற்றியமைத்துள்ளது.

(முற்பகல் 9-40)

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச கூலி நிர்ணயிப்பு சம்பந்தமாக ஹரிபாஸ்கர் குழு தனது அறிக்கையில் என்ன சொல்லியிருக்கிறது ? அதன்படி இப்போது 1983ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 5ஆம் நாள் முதல் அந்தக் கூலி அமலில் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அந்தக் கூலி கிழக்குத் தஞ்சைக்கு இல்லை என்று சொல்லுகிறார்கள். கிழக்குத் தஞ்சைக்கும் அதை விஸ்தரிக்க அரசு முயற்சிக்குமா ? அதோடு, ஏற்கனவே நிர்ணயித்த கூலி இன்று பல இடங்களில் கொடுக்கப்படாமல் இருக்கிறதே, அதை நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்லியது போல் விவசாயிகளுக்கு வலுவான விவசாய சங்கம் இல்லாத காரணத்தால் விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச கூலி கிடைக்காமல் இருக்கிறதே, அதை வாங்கிக் கொடுப்பதற்கும் அரசு துரித நடவடிக்கை எடுக்குமா ?



**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவர் அவர்களே, கிழக்குத் தஞ்சை மாவட்டத்தில் இருப்பவர்களுக்கு ஃபேர் வேஜஸ் (Fair wages) என்று இதை விட அதிகமாகக் கொடுக்கப்படுகிறது. ஆகவே, மற்ற இடங்களுக்குத்தான் இந்தக் குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயும் செய்து இருக்கிறோம். என்னுடைய மானியக் கோரிக்கை விவாதத்தின்போது விவசாயத் தொழிலாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட கூலி கொடுக்கப்படாவிட்டால், என்ன செய்ய வேண்டும் என்று முழுவதும் எடுத்துச் சொன்னேன். அதைப் போலவே, ' உழைப்பவர் உலகத்தில் ' நான் வேண்டுகோள் விடுத்துள்ளதையும் படித்தேன். நீங்கள் அப்போது இங்கே இல்லை என்பது என்னுடைய ஞாபகம். தங்களுக்கு என்று இப்போது நான் என்ன வேண்டுகோள் விடுத்தேன் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். அப்படி குறைந்த பட்ச கூலி கிடைக்கவில்லையென்றால் எந்தெந்த அதிகாரிகளிடத்தில் சொல்லவேண்டும் என்றால், சரக வருவாய் ஆய்வாளர், உதவி வட்டாட்சியர், வட்டாட்சியர்; கோட்ட வருவாய் அதிகாரி, மாவட்ட வருவாய் அதிகாரி, மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர், சட்டத்தின் 19 (1)வது பிரிவின்கீழ் ஆய்வாளர்களாக நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். நிலக்கிழார்கள் யாராவது குறைவாகக் கூலி கொடுக்கிறார்கள் என்றால் அந்த அதிகாரிகளிடத்தில் புகார் செய்யலாம். அதன் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் நான் சொல்ல விரும்புவது, அரசே கிராமப் புறங்களில் இருக்கும் தொழிலாளர்களுக்கு சட்டதிட்டங்களையெல்லாம் எடுத்துச் சொல்லி, எப்படி அவர்கள் இயங்கவேண்டும் என்பதற்கு ஆர்கனைசர்ஸ் என்ற முறையில் சிலரை நியமிப்பதாக இருக்கிறோம். இதிலே அவர்களுக்குச் செய்யவேண்டியது எதுவாக இருந்தாலும், அந்த விவசாயிகளுடைய இயக்கம் நல்ல வகையில் வளர்ந்து,—நான் நல்ல என்று சொல்வதை மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் கூர்ந்து கவனிக்கிறார்கள்—அவர்கள் முறையாக கான்ஸ்டிட்யூஷனலாக **செயல்படுவார்களானால் நாம் எல்லோரும் சேர்ந்து இன்றைய தினம் இருக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கு இருக்கும் பிரச்னைகளை அவல நிலையைப் போக்குவதற்கு முடியும் என்பதில் இந்த அரசு அசைக்க முடியாத நம்பிக்கை வைத்து இருக்கிறது.

**திரு. ரா. உமாநாத் :** மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் கூர்ந்து கவனிக்கிறார்கள் என்று சொல்லிவிட்டு,**
என்று எதற்காக ஒரு சார்ஜ் செய்ய வேண்டும். அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பில் இருந்து நீக்க உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** நான் அவரைக் குறிப்பிட்டு எதுவும் சொல்லவில்லை.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1984 ஏப்ரல் 16

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் பெயரைச் சொல்லி விட்டு, அதைச் சொன்னதால் அவர் நீக்க வேண்டும் என்று கேட்கிறார். அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பில் இருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அவர்களுக்கு வழங்கப்படுகின்ற குறைந்தபட்சக் கூலி இன்றைய விலைவாசி ஏற்றத்திற்குப் போதுமானதாக இல்லை. ஆகவே, அதை மறுபரிசீலனை செய்து இன்றைய விலைவாசி ஏற்றத்திற்குத் தகுந்தாற்போல் அவர்களுக்குக் கூலி நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ? இன்றைக்கு நிர்ணயிக்கப் பட்ட கூலி பெற்றுத் தருவதற்காக நியமிக்கப்பட்டுள்ள அதிகாரி களைப் பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது ஏதோ பெயரளவுக்கு இருக்கிறதே தவிர உண்மையிலேயே கிராமங்களில் உள்ள விவசாயிகளுக்கு அதைப் பெற்றுத் தந்து இருக்கிறார்களா ? அப்படியானால் எத்தனை பேருக்கு அப்படி பெற்றுத் தந்து இருக் கிறார்கள் என்கிற பட்டியலை இங்கே கொடுத்தால் நன்றாக இருக்கும். புதிதாக கூலியை நிர்ணயிக்க அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூலி நிர்ணயிக்கப்பட்டது 1983ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 5ஆம் தேதியில் இப்போது ஒரு வருடம் ஆகியிருக்கிறது. ஆகவே, இது பற்றி பரிசீலனை செய்யலாம். இந்த அரசைப் பொறுத்த வரையிலும் கூட மிக வேதனையோடு சொல்லிக் கொள்கிறேன், நாம் நிர்ணயித்த கூலியை சரியாகக் கொடுக்கவில்லை என்று தெரிகிறது. அதற் காக இந்த அரசு மிகவும் வருந்துகிறது. அப்படி வருந்தி மட்டும் உட்கார்ந்து விட முடியாது. ஆகவே, அதற்காக ஒரு தனி அமைப்பு உருவாக்கலாமா என்பதைப் பற்றி இந்த அரசு பரி சீலித்துக் கொண்டு இருக்கிறது. அது மட்டுமல்லாமல், 1984–85 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் நிலமற்ற உழவுத் தொழிலா ளர்கள், சிறு உழவர்கள் ஆகியோருக்கு காப்புறுதித் திட்டம் கொண்டுவரப்படவுள்ளது. இந்த அரசைப் பொறுத்தவரையில் விவசாயத் தொழிலாளர்கள், சிறு விவசாயிகள் பிரச்னையில் மிக அதிகமான ஆர்வத்தோடு இருக்கிறது என்பதையும், மாண்புமிகு உறுப்பினர் சொன்ன பிரச்சினையையும் அரசு பரிசீலனை செய்யும் என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : தலைவரவர்களே, குறைந்த பட்சக் கூலி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கூலி கொடுக்கப் படாவிட்டால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் புகார் கொடுக்க லாம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.



1984 ஏப்ரல் 16]

இப்போது விலேஜ் ஆபீசர்கள், ரெவின்யூ அதிகாரிகள் இருக்கிறார்கள். அவாகள் எல்லாம் அன்றாடம் கூலித் தொழிலாளர்களோடு நெருங்கிப் பழகுகின்ற சூழ்நிலை இருப்பதால் இந்த அதிகாரங்கள் அவர்களிடம் விடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர் களே, இப்போதே ரெவின்யூ அதிகாரிகளிடம் தான் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. சரக வருவாய் ஆய்வாளர், உதவி கோட்டாட்சி யர், கோட்டாச்சியர், கோட்ட வருவாய் அதிகாரி, மாவட்ட வருவாய் அதிகாரி, மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் இந்தச் சட்டத்தின் 19 (1)-வது பிரிவின்படி ஆய்வாளர்களாக நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். அவர்களிடம் கம்ப்ளையின்ட் போனால் அதன் மீது நடவடிக்கை எடுப்பார்கள். நான் ஏற்கனவே சொன்னதைப் போல சிறப்பாகச் செயல்படுத்த இன்னும் சரியான ஆர்கனை சேஷன் உருவாகவில்லை. முதலிலேயே சரியான ஆர்கனைசேஷனை உருவாக்க வேண்டும். கிராமங்களில் இருக்கிற விவசாயத் தொழி லாளர்கள் அமைப்பு ரீதியாக வளர நகரங்களில் இருக்கிற இன் டஸ்ட்ரியல் ஒர்க்கர்ஸ் உதவி செய்ய வேண்டும் என்பது லெனின் தத்துவம். அந்தத் தத்துவத்தின்படி கூட அவர்களுக்கு உதவி புரிய ஏற்பாடு செய்யலாம்.

திரு. இரா. கருப்பையா : தலைவரவர்களே, இந்த விவசாயத் தொழிலாளர்களுக்காக அரசு நிறைவேற்றியுள்ள குறைந்தபட்சக் கூலி நிர்ணயச் சட்டத்தின்படி நிரந்தரமாக நல்ல முறையில் கூலி வழங்குவதற்கான நடவடிக்கை எடுப்பது சம்பந்தமாக, அந்தக் கூலியைப் பெற்றுத் தருவதற்கான நடவடிக்கை சம்பந்தமாக அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அறிவித்தார்கள். அரசு கால்நடைப் பண்ணை களில் இருக்கிற இந்தத் தொழிலாளர்களுக்கு இந்தச் சட்டத் தின்படி கொடுக்க வேண்டிய குறைந்தபட்சக் கூலி வழங்கப்பட வில்லை என்பது உண்மையா ? அப்படியானால் அந்தத் தொழி லாளர்களுக்கு (டைரி ஒர்க்கர்ஸ்) குறைந்தபட்சக் கூலி நிர்ண யிக்கப்பட்டிருக்கிறதா ? அதைக் கொடுக்க அமைச்சரவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, இது ஒரு குறிப்பிட்ட பகுதி தொழிலாளர்கள் பற்றிய கேள்வியாக இருக்கிறது. இதற்குத் தனிக் கேள்வி போட்டால் விரிவான பதிலை அரசு அளிக்கும்.

நகராட்சிகளின் வளர்ச்சிக்கு மத்திய அரசிடம் கோரப்பட்டுள்ள நிதியுதவி.

577— (*வினா எண் 20834) திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு நகராட்சிகளின் வளர்ச்சிக்கு மத்திய அரசிடம் கடன் கேட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், உள்ளாட்சிகளின் அபிவிருத்திக்கு மத்திய அரசிடம் ரூ. 11.20 கோடிகள் நிதி உதவி கோரப்பட்டு மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இத் தொகை 25 வருடாந்திர தவணைகளில் (5 ஆண்டு மந்தனக் காலம்) திரும்ப செலுத்தப்படவேண்டும். பெறப்பட்ட தொகைக்கு ஐந்து முதல் எட்டு சதவிகிதம் வட்டி செலுத்தப்பட வேண்டும் (வட்டி விகிதம் ஆண்டு தோறும் அரசால் நிர்ணயிக்கப்படும்).

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, இப்படி வழங்கப்படுகிற இந்தத் தொகை குறிப்பிட்ட நகராட்சிகளுக்கு செலவிடப்படுகிறதா, இல்லையா ? எல்லா நகராட்சிகளுக்கும் இந்தத் தொகை செலவிடப்படுகிறதா ? எப்படிப்பட்டப் பணிகளுக்கு இந்தத் தொகை செலவிடப்படுகிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, இது வரை இப்படி வாங்கப்படுகின்ற தொகை செலவிடப் படுவதற்காக 28 நகராட்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. இதன் மூலம் 28 நகராட்சிகளில் 179 திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. தேர்ந்தெடுக்கப்படுகிற நகராட்சிகள் ஒரு இலட்சத்திற்குக் குறைவான மக்கள் தொகை உடையதாக இருக்க வேண்டும் ; 40 இலட்சம் ரூபாய் மத்திய அரசும், 40 இலட்சம் ரூபாய் மாநில அரசும் ஆக 80 இலட்சம் ரூபாய் ஒவ்வொரு உள்ளாட்சிக்கும் கொடுக்கப்படுகிறது.

(முற்பகல் 9-50)

(1) சமுதாயத்தில் எளிய பிரிவினருக்கு உதவி புரியும் வகையில் அபிவிருத்தி செய்யப்பட்டு, வீட்டுமனைகள் வழங்கும் திட்டம் (Sites and Services Scheme).

(2) பேருந்து நிலையங்கள் மற்றும் சரக்குந்து நிலையங்கள் அபிவிருத்தி செய்தல், புதியதாகக் கட்டுதல் மற்றும் சாலை அபிவிருத்தித் திட்டங்கள்.



(3) வார அங்காடிகள், நாள் அங்காடிகள் மற்றும் கடைகள் கட்டுதல் போன்ற ஊராட்சிக்கு வருமானம் வரக் கூடிய திட்டங்கள்.

(4) குறைந்த செலவில் அடிப்படைச் சுகாதாரத் திட்டங்கள் (Low Cost Sanitation Scheme).

மேற்படி திட்டங்களுக்காக கடன் தொகை பெறப்பட்டு, 25 வருடங்களில் சுலபத் தவணைகளில் திருப்பி செலுத்தப்படும். 80 இலட்சத்திற்கு மேல்திட்டங்கள் வகுத்திவிடுவார்களேயானால் அதாவது 80 இலட்சத்திற்கு மேற்பட்ட தொகையை அந்தந்த உள்ளூர் ஊராட்சியே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, 28 நகராட்சி மன்றங்களில் இந்தத் திட்டம் செயல்படுவதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். நம்முடைய அரசு மத்திய அரசிடம் எத்தனை நகராட்சிகளில் இந்தத் திட்டத்தை செயல் படுத்த, கேட்ட தொகை எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இந்தப் புள்ளிவிவரம் இப்போது என்னிடத்தில் இல்லை. அந்த 28 நகராட்சிகளையும் படிக்க வேண்டுமென்று சொன்னால், நான் ஏற்கனவே படித்திருக்கிறேன்.

உதகமண்டலம், கரூர், தர்மபுரி, புதுக்கோட்டை, திருச்செங்கோடு, கோபிச்செட்டிப்பாளையம், மன்னார்குடி, மேட்டுப்பாளையம், செங்கற்பட்டு, குன்னூர், தாராபுரம், பழனி, ஆத்தூர் திருவண்ணாமலை, உடுமலைப்பேட்டை, நாமக்கல், கோவில்பட்டி, பொள்ளாச்சி, ராணிப்பேட்டை, வட ஆற்காடு, வாலாஜாபாத், தேனி—அல்லிநகரம், காரைக்குடி, நாகப்பட்டினம், பன்ருட்டி, ஆரணி, அரக்கோணம், ஒசூர் பேரூராட்சி, கள்ளக்குறிச்சி பேரூராட்சி.

திரு. கே. ஆர். சுந்தரம் : தலைவர் அவர்களே, மத்திய அரசிடமிருந்து கடன் பெற்று, 28 நகராட்சிகளுக்கு வழங்கப்படுவதாகச் சொன்னார்கள். அதுபோன்று, தமிழகத்தில் பல்வேறு நகராட்சிகள் நிதி நிலைமையில் பின்தங்கிய காரணத்தால், அவைகளும் வளர்ச்சி பெறுவதற்கு இந்த ஆண்டு மத்திய அரசிடமிருந்து நிதி உதவி பெற மாநில அரசு முயற்சி செய்யுமா ? அப்படி செய்யும் விதத்தில், எங்கள் மாவட்டத்தில், குடியாத்தம் இந்தத் திட்டத்திலே சேர்க்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** நிதி நிலைமையை மனதிலே நிறுத்தி, பரிசீலனை செய்து, பரிந்துரை செய்து, ஆவன செய்யப்படும்.

**திரு. செ. சிவசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசிடமிருந்து பெறக் கூடிய தொகையில், புதிய பாதாள சாக்கடைகள் திட்டம் சேர்த்துக்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்..

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** பாதாளசாக்கடைத் திட்டம் இதில் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. எது எது சேர்த்துக்கொள்ளப்படும் என்பதை நான் படித்துக் காண்பித்தேன்.

**திரு. ரா. இருஷ்ணன் :** தலைவர் அவர்களே, இப்போது வாசிக்கப்பட்ட பட்டியலில் திருநெல்வேலி மாவட்டத்தில் எதுவுமே இல்லை என்று நான் கருதுகிறேன். அங்கே 12 நகராட்சிகள் இருப்பதாகக் கருதுகிறேன். இதிலே ஒன்று கூட ஏடுக்கப்படவில்லை. அவைகள் எல்லாம் வளர்ச்சி அடைந்து விட்டன என்று அரசு கருதுகிறதா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தை வைத்து பரிசீலனை செய்யப்படும்.

**திரு. என். ஏ. பூங்காவனம் :** மாண்புமிகு அமைச்சரவர்கள் 28 நகராட்சிகளின் வளர்ச்சிக்காக மத்திய அரசாங்கத்திடமிருந்து கடன் பெற்று, அபிவிருத்திப் பணிக்காக, பணம் விநியோகிக்கப்படுவதாக சொன்னார்களே, இந்தப் பணத்தை மத்திய அரசே, நகராட்சி அபிவிருத்திக்காக இனாமாக, நன்கொடையாகக் கொடுக்கிறார்களா அல்லது திருப்பிக் கொடுக்க வேண்டுமா? அல்லது அதை நக்ராட்சி கொடுக்க வேண்டுமா அல்லது மாநில அரசாங்கமே கொடுக்க வேண்டுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** இதிலே 40 இட்சம் மத்திய அரசும், 40 இலட்சம் மாநில அரசும் தந்து விடுகிறது. 25 வருட தவணைகளில் இதைத் திருப்பிச் செலுத்த வேண்டும். முதல் 5 வருடம் மாரடோரியம்.

**திரு. ப. சுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருப்பத்தூர் நகராட்சியைப் பொறுத்தவரையில் ஏற்கனவே நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அதற்கு 7 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் இது வரையில் ஒதுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. திருப்பத்தூர் நகராட்சியைப் பொறுத்த வரையில், அங்குள்ள சாலைகளைப் புதுப்பிப்பதாகவும் தெரியவில்லை.



இந்தப் பட்டியலிலேயும் திருப்பத்தூர் நகராட்சி சேர்க்கப்படவில்லை. எனவே உடனடியாக அதைக் கவனித்து, திருப்பத்தூர் நகராட்சியும் இதிலே சேர்த்துக் கொள்ளப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் நகராட்சியில் ஒரு லட்சத்திற்கு மேல் மக்கள் இருக்கிறார்களா அல்லது குறைவாக இருக்கிறார்களா என்ற தகவல் என்னிடம் இல்லை. இந்தத் திட்டம் 1 லட்சத்திற்கும் குறைவாக இருக்கக் கூடிய சிறு நகரங்களைப் பொறுத்த திட்டம். எனவே இதைப் பற்றி பரிசீலனைதான் செய்ய வேண்டும்.

## Apex Society for the District Co-operative Printing Press.

578 - (*Q. No. 18031) **THIRU P. VENKATASUBRAMANIAM :** Will the Hon. the Minister for Handloom and Co-operation be pleased to state—

(a) Whether the Government will consider the request to start an Apex Co-operative Society for District Co-operative Printing Presses in the State ; and

(b) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** (a) and (b) கூட்டுறவு அச்சகங்களுக்கு ஓர் தலைமைச் சங்கம் அமைப்பதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற, சொரணம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுச் சங்கத்தினுடைய, இந்த அமைப்பினுடைய பிரதான நோக்கமே, குறைந்த லாபத்தின் அடிப்படையிலே, நல்ல முறையிலே ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். தரமான சரக்குகள் சப்ளை செய்யப்படவேண்டும், என்ற அடிப்படையிலே தான் இந்தக் கூட்டுறவு அச்சகங்களை ஆரம்பித்திருக்கிறார்கள். ஆனால் இந்தக் கூட்டுறவு அச்சகத்தில், சமீபத்திலே காலண்டர் அச்சடிக்க, கொட்டேஷன் கேட்ட போது, ஆயிரம் காலண்டருக்கு 4 ஆயிரம் ரூபாய், அதாவது 1 காலண்டருக்கு 4 ரூபாய் என்று சொல்கிறார்கள். ஆனால் பக்கத்திலே இருக்கக் கூடிய தனியார்களுடைய அச்சகத்தில் ஒரு காலண்டருக்கு 3 ரூபாய் என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட அதிகமான விலையேற்றத்தைத் தடுப்பதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

[1984 ஏப்ரல் 16

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி எல்லாம் பரிசீலிக்கவும், மேலும் மாவட்ட அளவிலே உள்ள கூட்டுறவு அச்சகங்களுக்குத் தேவைப் படுகின்ற இயந்திரங்கள், காகிதங்கள் போன்றவற்றை யெல்லாம் அவர்களுக்கு அளிக்கவும், மாநில அளவிலே ஒரு தலைமைச் சங்கம் ஏற்படுத்தவும் அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. ஆய்வாளரின் அறிக்கை, இதிலே ரிஜிஸ்ட்ரார் அறிக்கை எதிர் பார்க்கப்படுகிறது. அதற்குப் பின்னாலே நடவடிக்கை எடுக்கப் படும். தற்போது இருக்கிற விலையேற்றங்கள் குறித்து அரசு, அதுபற்றி கேட்டறிந்து தக்க நடவடிக்கை எடுக்கும்.

**வறட்சிப் பகுதிகளில் உள்ளோர் கூட்டுறவுத் துறையில் பெற்றுள்ள**
**கடனை நீண்ட காலக் கடனாக மாற்றிப் புதிய**
**கடன் வழங்கும் திட்டம்.**

579—(*வினா எண் 20553) **திரு. சி. கணேசன் :** மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வறட்சிப் பகுதிகளில் இருப்போர் கூட்டுறவுத் துறை யில் பெற்றுள்ள கடனை நீண்டகாலக் கடனாக மாற்றி அவர் கட்குப் புதிய கடன் கொடுக்கும் செயற்குறிப்பு அரசின் பரி சீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** (அ) ஆம்.

(ஆ) வெள்ளம், வறட்சி, புயல் போன்ற இயற்கையின் இடர்களால் பயிர் பாதிக்கப்பட்டு, வருவாய்த் துறையால் விளைச் சலின் அளவு 50 சதவீதத்திற்கும் குறைவென மதிப்பீடு செய்யப் பட்டும், நிலவரி தள்ளுபடி செய்யப்பட்டால், விவசாய சேவை கூட்டுறவுச் சங்கங்களில் பாதிக்கப்பட்ட உறுப்பினர்களின் குறுகிய கால கூட்டுறவுக் கடன்கள் 3 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும் நடுத்தர கால கடன்களாக மாற்றப்படுகின்றன. அப்படிப்பட்ட கடன்தாரர்களுக்கு புதிய கடன்கள் வழங்க வகையுண்டு.

**திரு. செ. இராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது குறுகிய காலக் கடன்களை மத்திய கால்க் கடன்களாக மாற்றுவதற்கு பதிலாக, அவர்களுக்கு உண்டான வட்டியை மட்டும், தள்ளிக் கொடுத்தாலே, சில விவசாயிகளாவது திருப்பிச் செலுத்த முடியும். எனவே அப்படிப்பட்ட யோசனை அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.



1984 ஏப்ரல் 16]

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற திட்டம் எதுவும் அரசினுடைய பரிசீலனையில் இல்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதைப் போலவே, 1982–83ஆம் ஆண்டில் ஏறக்குறைய 23½ கோடி ரூபாய்க்கான கடன்களை, குறுகியக் காலக் கடன்களை, நீண்டகாலக் கடன் களாக மாற்றி வைத்திருக்கிறோம். அப்படி மாற்றப்பட்ட இடங்களில் திருப்பி அவர்களுக்கு கடன் வழங்கப்படவும் வகை செய்யப்பட்டிருக்கிறது. தள்ளுபடி என்ற அந்தப் பேச்சு இப்போது இல்லை.

**திரு. உ. சுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கையின் சீற்றத்தால், பாதிக்கப்பட்ட பகுதி களுக்கு கடன் தள்ளுபடி பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார் கள். இதிலே 50 சதவீதம் விளைச்சல் இருந்தால் ரெவின்யூ துறை அதற்கு சலுகை கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். மொத்தமாக இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட பகுதி என்று அரசாங்கத்திற்குத் தெரிந்ததற்குப் பிறகு, 50 சதவீதம் என்று நிர்ணயம் செய்யாது, அது ரெவின்யூ அதிகாரிகளுடைய விருப்பு வெறுப்புக்கு ஆளாக வேண்டிய காரணத்தால், அரசாங்கம் மொத்தமாக அந்தப் பகுதிக்கு இந்தச் சலுகையை வழங்க முன் வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-00)

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, National Bank for Agricultural Rural Development என்கிற, சுருக்கமாக நாபாட் என்று அழைக்கப்படுகிற, தேசீய அளவிலான அந்த வங்கி, கடன்களை ரத்து செய்வதை, தள்ளுபடி செய்வதை அப்போதைக்கப்போது எதிர்த்து, இந்த டிரண்ட், அதாவது இந்தப் போக்கு நீடிக்குமே யானால், தமிழகத்திற்கு மேலும் கடன் தருகிற அந்த நிலையை மறு பரிசீலனைக்கு ஆட்படுத்த நேரிடும் என்று அடிக்கடி அச் சுறுத்தி வருகிறது. எனவே, இந்த நிலையில் முழுவதுமாக பாதிக்கப்பட்டிருந்தால் அவர்கள் கட்ட வேண்டியதில்லை. ஆனால், புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் 50 சத வீதத்திற்கு மேலே விளைச்சல் இருக்குமானால், அவர்கள் அவர் களுடைய கடன்களை அதுவும் இந்த ஆண்டிலே கூட. கட்ட கட்டாயப்படுத்தப்படாமல், அடுத்த 3 ஆண்டுகளிலே கட்டுவதற் கும், குறுகிய கால கடனை நீண்டகாலக் கடனாக மாற்றியும், அதேபோல மத்தியக் காலக் கடனையும் நீண்டகாலக் கடனாக மாற்றியும், அரசு விவ்சாயிகளுக்கு உதவி வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**திரு. பொ. உத்திராபதி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, வெள்ளத்தாலும் வறட்சியாலும் பாதிக்கப்பட்ட, ரெவின்யூ துறையால் பாதிக்கப்பட்டது என்று அங்கீகரிக்கப்பட்ட பகுதிகளில், குறுகிய கால கடன்கள், நீண்ட கால கடன்களாக மாற்றி அளிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். நான் கேட்டுக்கொள்வது, அப்படி மாற்றி அமைக்கப்பட்ட பகுதிகளிலேயே, குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம் மத்திய வங்கியின் கீழ் வரக்கூடிய பகுதிகளில், தற்போது இரண்டு தடவை நோட்டீஸ் கொடுத்து, வட்டியைக் கட்டினால்தான், இந்தக் கடன் ஒத்திவைக்கப்படும் என்று நிர்ப்பந்திக்கப்படுகிறார்களே, அது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அப்படி இருந்தால் அப்படிப்பட்ட போக்கை தடுத்து நிறுத்தி, அவர்களுக்கு மீண்டும் நீண்டகாலக் கடனாக மாற்றி, வரக்கூடிய சாகுபடிக்கு கடன் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனெவே சொன்னது போல 50 சதவீதத்திற்கும் விளைச்சல் குறைவாக இருக்குமானால் அந்தப் பகுதியிலே குறுகிய காலக் கடன்களை உடனடியாக கட்ட வேண்டும் என்கிற அந்தக் கட்டாயத்தை நிச்சயமாக மத்திய வங்கியோ, மன்ற சொஸைட்டிகளோ வற்புறுத்த மாட்டார்கள். 50 சதவீதத்திற்கு மேலே விளைச்சல் இருக்கிற இடங்களிலேகூட, முழுவதுமாக அந்தப் பகுதியிலே வெள்ளத்தால் பாதிப்பு இல்லை என்ற காரணத்தாலேதான், குறுகிய கால கடனை நீண்டகாலக் கடனாக மாற்றி வைத்திருக்கிறோம். ஆனால், இப்படி புயல், வெள்ளத்தால், பாதிக்கப்படாத மற்றப் பகுதிகளில் 10 ஏக்கர் நிலம் அல்லது அதற்கு மேலே வைத்திருப்பவர்களுக்கும், டிராக்டர்களுக்காக லோன் வாங்கியவர்களுக்கும், மற்றும் இப்படிப்பட்ட பெரிய விவசாயிகளுக்கும்தான், அவர்கள் வாங்கியிருக்கிற கடனை திருப்பித் தரும்படி கேட்கிறோம். அவர்கள் கடனை திருப்பித் தந்தால்தான், அதனை தேசிய வங்கியான நாபாட்டிற்கு செலுத்தி, நாம் திரும்பவும் கடனை பெற்று விவசாயிகளுக்கு உதவி செய்ய முடியும். எனவேதான் கொடுத்திருக்கிற கடனை திரும்பப் பெறவேண்டும் என்பதிலும் அரசு கவனமாக இருக்கிறது. அதே நேரத்தில் விவசாயிகள் தொல்லைகளுக்கு ஆளாக்கப்படுகிற நேரத்தில், வெள்ளத்தால், புயலால் அவர்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறபோது, அவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும் என்கிற இரண்டு உணர்வோடும் அரசு செயலாற்றுகிறது.

**திரு. எல். இளையபெருமாள்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது வட்டி





தள்ளுபடி செய்யப்படும் என்று சொன்னார்கள். வட்டி மட்டும், அல்ல, பெனாலிட்டி இன்டிரஸ்ட் என்றும் கூட போட்டு இந்தக் கஷ்டமான சந்தர்ப்பத்தில் வாங்கவேண்டும் என்று நினைப்பது நல்லது அல்ல. ஆகவே, அது மாதிரி வட்டியை மறுபடியும் தள்ளிக் கொடுக்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்ட வேண்டிய கடன் தவணைகளை முறைப்படி கட்டி வருவார்களேயானால், அதிலே பெனாலிட்டி இன்டிரஸ்ட் வருவதற்கு வாய்ப்பே இல்லை. ஆனால், பாதிப்பு என்று வருகிறபோது, பாதிக்கப்பட்டிருக்கிற ஆண்டிலேயே அவர்கள் வாங்கியிருக்கிற குறுகிய கால கடனை மாற்றி, அரசாங்கமே 3 ஆண்டுகளில் கொடுங்கள் என்று தவணையை நீடித்து விடுகிறது. எனவே, இந்த நேரத்திலே கட்டாததற்காக பெனாலிட்டி இன்டிரஸ்ட் வருவதற்கான வாய்ப்பு இல்லை. வருகிற 3 ஆண்டுகளிலேயும் தொடர்ந்து கட்டவில்லை என்றால்தான், இந்தப் பிரச்சினை வருகிறது. நான் ஏற்கெனவே சொன்னதுபோல், வாங்கிய கடனை திருப்பிக் கட்டினால், விவசாயிகள் அவர்களுக்கு அவர்களே உதவி செய்துகொள்வதாக பொருள். அவர்கள் வாங்கியிருக்கிற கடனை திருப்பிக் கட்டினால்தான், மத்திய வங்கிகள் மேலும் கடன் பெறுகின்ற அதிகாரத்தைப்பெறும். அதற்கு மாநில அளவில் இருக்கிற வங்கிகள் கடன் தரமுடியும். மாநில வங்கிகளுக்கு தேசிய அளவிலான வங்கி நாபார்ட் கடன் கொடுக்கவும் முடியும். அந்த வகையிலேதான் இதனைப் பார்க்க வேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

### சேலம் மாவட்டத்திலுள்ள கைத்தறி நெசவாளர்கள்.

580—(*வினா எண் 21492)—**திரு. இ. கணேசன்**: மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் மொத்த நெசவாளர்கள் எத்தனை பேர் ?

(ஆ) இவர்களில் கைத்தறி நெசவாளர்கள் எத்தனை பேர்?

(இ) இவர்களில் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ளவர்கள் எத்தனை பேர் ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு** : (அ) மற்றும் (ஆ) 3·89 இலட்சம்.

(இ) 1,53,540 நெசவாளர்கள்.

[1984 ஏப்ரல் 16

## விவசாயிகளுக்கான குறுகிய காலக் கடன் மீதான வட்டி விகிதத்தைக் குறைக்கும் திட்டம்.

581—(* வினா எண் 22093) திரு. இரா. தாமரைக்கனி ; மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகளுக்கான குறுகிய காலக் கடன் மீதான வட்டி விகிதம் குறைக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு குறைக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு வழங்கப்படுகிற கூட்டுறவுக் கடன் வட்டி வீதத்தைக் குறைக்கக்கூடிய திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். வட்டி வீதத்தைக் குறைப்பதோடு, இந்தக் கடனை மத்திய காலக் கடனாக மாற்றுவதற்கு அணாவாரி சான்று தேவை என்று அமைச்சர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். அணாவாரி சான்று வருவாய்த்துறை மூலமாகப் பெறுவதற்கு ஏராளமான சிக்கல்கள் இருக்கின்றன என்பதை மனத்திலே கொண்டு, வருவாய்த் துறையிலே குத்தகை சாகுபடியாளர்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற முறையிலே ஒரு சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது. அந்தச் சட்ட முன்வடிவிலே எந்த எந்தப் பகுதிகள் முழுமையாக பாதிக்கப்பட்டிருக்கின்றனவோ, அந்த அடிப்படையில் அவைகளுக்கு எல்லாம் குறுகிய காலக் கடனை மத்திய காலக் கடனாக மாற்றுவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, சென்ற கேள்விக்கான தொடர் கேள்வியைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். குறுகிய காலக் கடனை மத்திய காலக் கடனாக மாற்ற கோட்ட அளவிலே இருக்கிற அதிகாரிகளால் வருவாய்த் துறையால் விளைச்சலின் அளவு 50 சதவீதத்திற்கும் குறைவென மதிப்பீடு செய்யப்பட்டும் நிலவரி தள்ளுபடி செய்யப்பட்டால், விவசாய சேவை கூட்டுறவுச் சங்கங்களில் பாதிக்கப்பட்ட உறுப்பினர்களின் குறுகிய கால கூட்டுறவுக் கடன்கள் 3 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும் நடுத்தர காலக் கடன்களாக மாற்றப்படும் என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். கடன்களைப் பொறுத்தவரையில் ஏதாவது ஒரு கால வரம்பை நாம் நிர்ணயித்துத்தான் செய்யவேண்டும். எனவே ஆர்.டி.ஓ. அளவிலே வைத்துக்கொண்டு ஆர். டி. ஓ. பார்த்து 50 சதவீதத்திற்கும் குறைவாக விளைச்சல் இருக்கிறது என்று சொன்னால் அதற்கு ஒரு சர்டிபிகேட் கொடுத்து, அந்த அடிப்படையில் குறுகிய காலக் கடன்கள் மத்திய காலக் கடன்களாகத் தள்ளிவைக்கப்படுகின்றன.



1984 ஏப்ரல் 16]

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, இப்படி விவசாயிகள் பட்டிருக்கிற இந்த குறுகிய காலக் கடன்கள் நீண்டகாலக் கடன்களாக மாற்றப்பட வேண்டுமானால் 50 சதவீதம் அளவுக்கு விளைச்சல் குறைவாக இருந்தால் அளிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். 50 சதவீதம் என்பது எப்படிப் பொருத்தமாக இருக்கும் ? உதாரணமாக ஒரு ஏரியாவிலே 100 பேர்களுக்கு முழுமையும் பாதிக்கப்பட்டிருக்கிறது, இன்னொரு 100 பேர்களுக்கு விளைந்திருக்கிறது. இதையெல்லாம் ஒட்டுமொத்தமாக வைத்துக்கொண்டு விளைச்சல் 50 சதவீதம் குறைந்தால் தான் சலுகை என்று அறிவிக்கும்போது உண்மையாகவே பாதிக்கப்பட்டவர்களுக்கு சலுகைகள் கிடைக்காமல் போகிறது. உண்மையிலே பாதிக்கப்பட்டவர்களுக்கு சலுகை அளிக்கக்கூடிய முறையிலேயே புதிய மாற்றுத் திட்டத்தை அறிவிக்க அரசு யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, ஒரு பகுதியிலே 50 சதவீதம் விளைந்திருக்கிறதா என்று நாம் கணக்கு எடுப்பதில்லை. தனித்தனியாக விவசாயிகளுடைய விளைச்சல் 50 சதவீதத்திற்கு உட்பட்டு வந்து இருக்கிறதா அல்லது அதிகமாக வந்திருக்கிறதா என்ற அளவிலே கணக்கு பார்க்கப்படுகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, வறட்சியாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட பகுதி என அரசு இப்போது அறிவிப்பது இல்லை. அதே நேரத்திலே 50 சதவீதத்திற்கும் குறைவாக விளைச்சல் இருந்தால் அந்தச் சலுகை அளிக்கப்படும் என்று அமைச்சர் அவர்களும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் அடிக்கடி சொல்கிறார்கள். இப்போது கிராமங்களிலே போடப்பட்டுள்ள வி.ஏ.ஓ.க்கள் சாகுபடியை பார்ப்பதே கிடையாது. அவர்களுக்குப் போதுமான அனுபவம் இல்லாத காரணத்தினால் 50 சதவீதம் விளைச்சல் என்பதைச் சரியாக கணக்குப் பார்க்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே எப்படி இந்தக் கூட்டுறவுத் துறை கணக்கு எடுக்கப் போகிறது ?

ஐ. ஆர். 50 நெல்பற்றி வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது சொன்னார்கள். ஆகவே பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வட்டிக் குறைப்போ அல்லது 3 ஆண்டுகளுக்கு நீட்டிக்கிற சலுகையோ அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, விளைச்சலைச் சரிபார்ப்பதோ, பாதிக்கப்பட்ட பகுதிகள் இவை என்று கணக்கிடுவதோ கூட்டுறவுத் துறை அதிகாரிகளால் செய்யப்படுவதில்லை. வருவாய்த் துறை அதிகாரிகள் மூலமாகத்தான் செய்யப்படுகின்றது. அவர்களுடைய பரிந்துரையின் மேல்

[1984 ஏப்ரல் 16

கூட்டுறவுத் துறை நடவடிக்கை எடுக்கிறது. வருவாய்த் துறை அதிகாரிகள் பார்க்கவில்லை என்ற குற்றச்சாட்டு இருக்குமானால் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-10)

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலேயும், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலேயும் இந்தக் கூட்டுறவுக் கடன வசூல் தள்ளி வைக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதுபோல பெரியார் மாவட்டத்தில் உள்ள காலிங்கராயன் மற்றும் கீழ்பவானி பாசன பகுதிகளில் இந்த ஆண்டு பயிரிட்ட பயிர்களில் பூச்சியினால் பாதிக்கப்பட்டு விளைச்சல் பெரும் அளவுக்கு பாதிக்கப்பட்டுள்ளது. அதனால் விவசாய பெருங்குடி மக்கள் அந்தப் பகுதியில் பெருத்த நஷ்டத்திற்கு ஆளாகி இருக்கிறார்கள். ஆகவே அந்தப் பகுதிகளிலும் இந்த ஆண்டு கடனை தள்ளி வைப்பதற்கு, வட்டி விகிதங்களை முழுமையாக ரத்து செய்வதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதி பகுதியாக உத்திரவாதங்களை இப்போது வழங்க இயலாது. ஏற்கனவே மாநில அளவில் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள், பாதிக்கப்பட்ட பகுதிகள் என்ற அடிப்படையில் அந்தப் பகுதிகளில் இருக்கின்ற விவசாயிகளுடைய விளைச்சல் 50சதவீதத்திற்குக் குறைவாக இருக்குமானால் அவர்கள் பெற்று இருக்கின்ற குறுகிய கால கடன் நீண்ட கால கடனாக மாற்றி அமைக்கப்படும் என்ற உத்திரவாதத்தை முதலிலேயே சொல்லியிருக்கிறேன்.

புதிய சத்துணவு மையங்கள் அமைக்கும் திட்டம்.

582—(*வினா எண் 22479) திரு. மா. சின்னராசு : மாண்புமிகு சத்துணவுத் திட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாண்புமிகு முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தினால் பயன்பெற முடியாத கிராமங்களில் புதிய மையங்கள் அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) கோவை மாவட்டத்திற்குப் புதிய மையங்களுக்கான கோரிக்கை வரப் பெற்றுள்ளதா ?



1984 ஏப்ரல் 16]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : (அ) ஆம்

(ஆ) கோவை மாவட்டத்தில் ஆறு புதிய சத்துணவு மையங்கள் அமைக்க கோரிக்கைகள் வந்துள்ளன.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் என்னுடைய தொகுதியில் மட்டும் சுமார் 2 கிலோ மீட்டர், 3 கிலோ மீட்டர் தூர அளவுக்கு குழந்தைகள் சத்துணவு மையங்கள் இல்லாத இடங்கள் 6 இடங்கள் இருக்கின்றன. ஆகவே மாவட்டம் முழுவதும் 6 என்பது அதனுடைய முழுத் தேவையையும் நிறைவேற்றுவதாக இருக்காது. 2 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேல் 50-க்கும் மேற்பட்ட குழந்தைகள் சத்துணவு மையத்திற்கு வந்து உணவு உட்கொள்கிற அந்த வாய்ப்பு இல்லாமல் இருக்குமானால் அந்த இடங்களில் மையங்கள் அமைப்பதற்கு உத்திரவாதத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்குவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட குழந்தைகளுக்கு சத்துணவு வேண்டும் என்று அந்த இடங்களிலிருந்து கோரிக்கை மனு மாவட்ட ஆட்சித்தலைவரால் பெறப்படுகிறது. அப்படி கோவைமாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் தரப்பட்டு இருக்கிற அறிக்கையில் இதுவரையில் அவருக்கு அந்த மாவட்டத்தைப்பொறுத்த வரையில் வந்து இருப்பது 6 கோரிக்கை என்பதை சொல்லியிருக்கிறார்கள். அது பரிசீலிக்கப்பட்டு தேவையான அளவுக்கு குழந்தைகள் இருக்கிறார்களா என்பதைப் பார்த்து அந்த சத்துணவு மையம் அமைக்க அரசு ஆவன செய்யும்.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகிற ஆண்டில் இப்படி தேவைப்படுகிற புதிய சத்துணவு மையங்களை அமைப்பதற்கு கூடுதலாக திட்ட மதிப்பீடுகளை அரசு அளித்து இருக்கிறதா என்பதையும் கோவை மாவட்டத்தில் தற்போது இயங்கி வருகிற சத்துணவு மையங்கள் எத்தனை என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் எவ்வளவு சத்துணவு மையங்கள் இருக்கின்றன என்பதற்கு தற்போது என்னிடத்தில் விடை இல்லை. தனிக் கேள்விப் போட்டால் சொல்லாம். எல்லாக் குழந்தைகளும் உண்மையிலேயே அவர்கள் உணவு. பெறவேண்டிய நிலையில் இருப்பார்களானால் அவர்கள் அத்தனை பேரும் ஒரு வேளை சத்துணவு பெறவேண்டும் என்பது தான் நம்முடைய முதலமைச்சருடைய சத்துணவுத்

திட்டத்தின் குறிக்கோள் ஆகும். ஆகவே அப்படிப்பட்ட குழந்தைகள் இருக்கிறார்கள் என்று தெரிய வருமானால் அவர்களுக்கு சத்துணவு மையங்கள் அமைக்க ஆவன செய்யப்படும்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக கிராமங்களில் சேரிப் பகுதிகள் கிராமத்திலிருந்து தள்ளி இருக்கின்றன. ஒரு சில இடங்களில் ஒரு கிலோ மீட்டர் அளவுக்கு தள்ளியிருக்கிறது. அந்தப் பகுதியில் உள்ள சேரியில் குடிசைகளில் உள்ள மக்களுடைய குழந்தைகள் சத்துணவு மையங்களுக்கு வந்து சத்துணவு பெற வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே சேரிப் பகுதிகளில் சத்துணவு மையங்கள் அமைக்க ஆலோசனை அரசிடம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஜாதி பார்த்து சத்துணவு மையங்கள் அமைக்கப்படுவது இல்லை. ஜாதி கொடுமை ஒழிய வேண்டும் என்பதற்காக சத்துணவு மையங்களில் அனைவரும் ஒரே நிலையில் உட்கார்ந்து உண்ண வேண்டும் என்ற நிலையில் தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை கொண்டு வந்து இருக்கிறார்கள், அந்த முறையில் செயல்பட்டு வருகிறது. அப்படி ஏதாவது அதிகப்படியான குழந்தைகள் ஒரு பகுயில் இருந்து அவர்கள் நீண்ட தூரம் வரவேண்டிய நிலை இருந்து அப்படி வருகின்ற வழியில் அவர்களுக்கு ஏதாவது இடையூறு இருக்குமானால் அந்தப் பகுதிகளில் புதிய சத்துணவு மையங்கள் அமைக்க நிச்சயமாக அரசு ஆலோசனைகள் செய்யும்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த சத்துணவு மையங்கள் இருக்கும்படியான நிலையைப் பற்றி சில விவரங்களைக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். கோவை மாநகரத்தில் முதல் வார்டில் நான் குடியிருக்கிற வார்டில் சித்தாபுதூரில் இருக்கும்படியான தாழ்த்தப்பட்ட மக்கள் குடியிருக்கும்படியான காலனியின் ஓரத்தில் இருக்கும்படியான சத்துணவு மையங்களுக்காக கட்டப்பட்டுள்ள கட்டிடங்களில் 2 கட்டிடங்கள் வேலை செய்யாமல் இருக்கின்றன. அதிலே பிச்சைக்காரர்கள் உள்ளே புகுந்து படுத்துக்கொண்டு இருக்கிறார்கள். இந்த விவரங்களை மாண்புமிகு அமைச்சருக்கு தெரிவித்து இருக்கிறார்களா ? சிதம்பரம் பூங்காவில் உள்ளே செல்லும்பொழுது அங்கே கட்டப்பட்டிருக்கும் சத்துணவு மையக் கட்டிடத்தில், ஒரு கட்டிடம் முழுவதும் நாடோடிகளாக இருப்பவர்கள் உள்ளே தங்கி வாழ்ந்து கொண்டிருக்கின்ற தன்மைகள் அமைச்சருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதா? நான் குடியிருக்கின்ற வீட்டுக்குப் பக்கத்தில்—ஹரிபுரம் என்ற இடத்தில் கட்டப்பட்ட சத்துணவு மைய இடத்தில் அந்த மையத்



தில் வேலைகளும் செய்யப்படாமல், கட்டிடம் பயன்படுத்தப்படாமல் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகள் இருப்பதைத் தடுக்கின்ற பொறுப்பு மாநகராட்சிக்கு இருக்கிறதா அல்லது அரசுக்கு இருக்கிறதா ? இதற்கு யார் பொறுப்பாளி என்று அறிய விரும்புகிறேன். அமைச்சரவர்கள் கோவைக்கு வந்து சில இடங்களில் விசிட் செய்தபொழுது அங்கே ஊழல் செய்தவர்கள் பேரில்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் ஒரு கேள்வியைக் கேட்க வேண்டும். அதை விடுத்து, வீட்டுக்கு பக்கத்தில் உள்ள இடம், சிதம்பரம் பூங்காவிற்கு உள்ளே செல்லும் இடம் என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தால் உறுப்பினர் என்னென்ன கேள்விகள் கேட்டார் என்பதே ஞாபகத்தில் இருக்காது. எனவே, ஒரு சந்தர்ப்பத்தில் சுருக்கமாக ஒரு கேள்வியைக் கேட்க வேண்டும்.

திரு. கு. ரமணி : நான் பெரிய பேச்சாகப் பேச வேண்டும் என்ற எண்ணத்தில் சொல்லவில்லை. எந்த இடத்தில் அது அமைந்திருக்கிறது என்பது அமைச்சரவர்களுக்குத் தெரிய வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். இது குறித்து அமைச்சருக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறியத்தான் இவைகளைச் சொல்கிறேன். இந்த இடங்கள் பற்றிய விவரம் அமைச்சருக்குத் தெரியவில்லை என்றால் அவர்கள் எப்படிச் சென்று பார்க்க முடியும் ?

என்னுடைய வீட்டிற்குப் பக்கத்திலே இருக்கிறது என்பது முக்கியமல்ல; அந்த இடம் செயல்படாமல் இருப்பதால் அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதற்காகத்தான் சொல்கிறேன். எனவே, அங்கே ஊழல் செய்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ? எத்தனை பேர்களுக்குத் தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கோவை மாவட்டத்தில் சுற்றுப் பயணம் சென்றிருந்த பொழுது, நடைபெறாமல் இருக்கின்ற இத்தகைய சத்துணவு மையங்களைப் பற்றிய குறிப்புகள் என்னிடத்திலே தரப்பட்டு, நான் அவைகளை நேரிடையாகச் சென்று பார்த்தேன். ஆனால், அந்த இடத்திலே சத்துணவு மையம் நடைபெறவில்லையே. தவிர, அந்தக் குழந்தைகள் எந்த இடத்திற்கு வர முடியுமோ அந்த இடத்தில் தற்போது சத்துணவு மையங்களை நடத்தி வருகிறார்கள். இது மாநகராட்சி நிர்வாகத்திற்குட்பட்டது. அந்த இடத்திற்கு வர முடியாத சூழ்நிலையில், மற்றொரு பக்கத்தில் சுகாதாரக் கேடுகளும் இருப்பதால் அந்த இடத்தில் அவர்கள் சத்துணவு மையங்களை

நடத்த முடியாமல் இருக்கிறார்கள். ஆனாலும், இவைகளை நேரடியாகச் சுற்றிப் பார்த்துவிட்டு, உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். இந்தத் தவறுகளுக்குப் பொறுப்பானவர்கள் யார் யார் என்று கண்டு பிடித்து, இப்படிப்பட்ட கட்டிடங்களைக் கட்டியது யார் யார் என்று கண்டுபிடித்து, அவர்கள்மீது உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று மாநகராட்சி அதிகாரிகளிடத்திலே சொல்லி விட்டு வந்திருக்கிறேன். ஆகவே, அவைகள் வந்தபிறகு உங்களுக்கு நான் தெரிவிக்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்வதற்கு எத்தனை குழந்தைகள் இருக்க வேண்டு மென்று வரையறுக்கப்பட்டுள்ளதா ? இதற்கு மேல் இருக்கக் கூடாது என்று ஏதேனும் கட்டுப்பாடு இருக்கிறதா ? இதிலே, குழந்தைகளைப் பொறுத்தவரையில், தாயின் பராமரிப்பில் உள்ள குழந்தைகள் எவ்வளவு இருக்க வேண்டும்; சுதந்திரமாக வரும் குழந்தைகள் எவ்வளவு இருக்க வேண்டும் என்று வரை யறுக்கப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சத்துணவு மையத்தில் குறைந்த பட்சம் 70 குழந்தைகள் இருக்க வேண்டும். இதில் 40 குழந்தை கள் ப்ரீ ஸ்கூல் சில்ரன்—அதாவது மூன்றரை வயதுக்கு மேற் பட்டவர்களாக இருக்க வேண்டும்; பாக்கியுள்ள 30 குழந்தைகள் தாய்மார்களைக் கொண்டு ஊட்டும் விதத்தில் இரண்டு வயது முதல் மூன்றரை வயது வரையில் உள்ள குழந்தைகளாக இருக்க வேண்டும். அதிகபட்சம் 100 பேர் ஒரு மையத்தில் வைத்துக் கொள்ளப்படுவார்கள்.

டாக்டர் கே. சௌரிராஜன் : மாண்புமிகு பேரவைத் தலை வரவர்களே, இந்தக் கேள்வியின் அடிப்படை நோக்கமே, சத் துணவு பெறுவதற்காகக் குழந்தைகள் இரண்டு கிலோ மீட்டருக்கு மேல் நடந்து செல்லக் கூடாது என்பதுதான். அந்த அடிப்படை யில்தான் இந்தக் கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. இரண்டு கிலோ மீட்டருக்கு மேல் நடந்து சென்று சத்துணவு சாப்பிட்டால், அவர்கள் திரும்பி வருவதற்குள் ஜீரணித்து விடும். அதனால் எந்தவிதமான இலாபமும் இல்லாமற் போய்விடும். ஆகவே, Has the Governm nt got any policy to open Noon Meal Centres within a radius of 2 kilo metres, so that all the children who are benefited by the nutritious Meal Programme, will not be allowed to walk more then 2 kilo metres.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இரண்டு கிலோமீட்டர் தூரத் திற்கு மேலே நடக்கக் கூடாது என்று குறிப்பிட்டார்கள். ஆனால்



ஒரு கிலோமீட்டர் கூட அவர்களை நடக்கவிடாத அளவிற்கு மையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அப்படி மையங்கள் இல்லாத இடத்தில் சப் சென்டர் என்று இன்றைக்கு வைக்கப்பட்டு அதன் மூலம் உணவு அளிக்கப்படுகிறது. மேலும், ஓடி விளையாடு பாப்பா என்று பாரதியார் சொன்னதற்கேற்ப சாப்பிட்டவுடன் குழந்தைகள் கொஞ்சம் நடப்பதால் அவர்களுடைய உடல் வலிவு பெறுவதற்கு வாய்ப்பாகத் தான் அமையும்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிலயிடங்களில் மூன்று கிராமங்களுக்கு ஒரு சத்துணவு மையம் என்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சில கிராமங்களில் 40, 50 குழந்தைகள் இருக்கிறார்கள். ஆனால் அந்த இடங்களில் சத்துணவு மையங்கள் இருப்பது இல்லை. ஆகவே, அந்தந்தக் கிராமங்களில் சத்துணவு மையங்களை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10–20)

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, மூன்று கிராமங்களுக்கு ஒரு சத்துணவு மையம் என்றால் அந்த மூன்று கிராமங்களும் கிட்டத்தட்ட ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள்ளே அமைந்திருக்கும். அந்த வகையிலே ஒரே சத்துணவு மையம் அங்கே இருக்கும். ஆனால் அதற்கும் மேலே அதிக தூரம் சென்று குழந்தைகளும், தாய்மார்களும் உணவு எடுத்துக்கொள்ளவேண்டிய சூழ்நிலை இருந்தால் அங்கே வேறு மையங்களை உருவாக்கக்கூடிய வாய்ப்பளிக்கப்படும். ஆனால் 40 குழந்தைகள் 50 குழந்தைகள்தான் இருக்கிறார்கள், அதனால் அவர்களுக்குக் கிடைக்குமா என்று கேட்டால் சூழ்நிலை, சந்தர்ப்பம் ஆகியவற்றை வைத்து அவர்களுக்குத் தரவேண்டிய நிலமை இருக்குமானால் அந்த இடத்திலே அவர்களுக்குச் சத்துணவு மையங்களை அமைக்க ஏற்பாடு செய்யப்படும்.

திரு. செ. சிவசாமி : எங்களுடைய பகுதி போன்ற பிற்பட்ட பகுதிகளில் கிட்டத்தட்ட 100 வீடுகள், 150 வீடுகள் உள்ள கிராமங்களிலே இன்னும் சத்துணவுத் திட்டம் கொண்டுவரப் படாத நிலமைதான் இருக்கிறது. இளையாங்குடியில் 12 சத்துணவு மையங்கள் வேண்டும் என்று அரசுக்கு நாங்கள் அனுப்பி இருந்தோம். ஆனால், இதுவரையில் எந்தவிதமான சத்துணவுக் கூடத்திற்கும் சாங்ஷன் ஆகாமல் இருக்கின்றது. இப்படி பல கிராமங்கள் விடுபட்டுப் போய் இருக்கின்றன. அந்த கிராமங் களுக்கும் சத்துணவு மையங்களைக் கொண்டுவர ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்த கிராமங்கள் என்பதைக் குறித்துக் கொடுத்து எந்தெந்த கிராமங்

[1984 ஏப்ரல் 16

களில் எவ்வளவு குழந்தைகள் இருக்கிறார்கள் என்பதையும் என்னிடத்திலே தந்தால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### அபிஷேகப்பட்டியிலுள்ள கால்நடை ஆராய்ச்சி நிலையம்

583. (*வினா எண். 21862)— திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அபிஷேகப்பட்டியிலுள்ள கால்நடை ஆராய்ச்சி நிலையத்தில் ஆய்வுக்கூட அலுவலகக் கட்டிடம் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இதுபற்றிய விபரம் என்ன ?

(இ) மதிப்பீடு எவ்வளவு ?

(ஈ) எப்பொழுது வேலை துவங்கும் ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) அபிஷேகப் பட்டியில் கால்நடை ஆராய்ச்சி ஆய்வுக்கூடம் இல்லை.

(ஆ, இ மற்றும் ஈ) கேள்விக்கு இடமில்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, அபிஷேகப்பட்டியிலே கால்நடை ஆராய்ச்சி நிலையம் ஆரம்பிக்கவேண்டும் என்று ஏற்கெனவே 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் குறிக்கோள் அடிப்படையில் கொண்டுவரப்பட்டது. இப்போது அமைச்சர் அவர்கள் சொல்வதைப் பார்த்தால் அது கைவிடப்பட்டிருக்கின்றது என்று தெரிகின்றது. அது சரிதானா ? அந்தத் திட்டம் கைவிடப்பட்டது என்பது உண்மை என்றால் மீண்டும் பரிசீலித்து அந்தத் திட்டத்தைக் கொண்டுவர அரசு முன் முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் அபிஷேகப்பட்டியில் கால்நடை ஆராய்ச்சிக் கூடம் இப்போது அமைக்கப்படவில்லை. முதலிலே அமைக்கப்பட்ட விவரம் தற்போது என்னிடத்திலே இல்லை. இப்போது அமைக்கப்படவில்லை என்றாலும் தமிழ் நாடு வேளாண்மைக் கழகத்தின்மூலம் திருநெல்வேலியில் ஒரு கால்நடை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் துவக்கப்பட்டு இயங்கி வருகின்றது. 1980-லிருந்து அது இயங்கி வருகின்றது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, கேள்வியே இதனை ஆரம்பிக்க அரசிடம் திட்டம் உள்ளதா என்பதுதான். ஏற்கெனவே அமைச்சர் அவர்கள்



1984 ஏப்ரல் 16]

சொல்கின்றபோது 1980லே இருந்து இந்தத் திட்டம் இருப்பதாகச் சொல்லப்பட்டது. அந்தத் திட்டத்தின்படி ஆராய்ச்சிக் கூடங்களைக் கட்டி நல்ல முறையில் செயலாற்ற அரசாங்கம் விசேஷமாக முன் முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு கால்நடை ஆராய்ச்சிக் கூடம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது. வேளாண்மைத் துறையின் மூலமாக. ஆனால் கால்நடை பராமரிப்புத் துறையால் அபிஷேகப்பட்டியில் ஆரம்பிப்பதற்கான ஆய்வு இப்போது இல்லை.

திரு. ஆர். நவநீத கிருஷ்ணபாண்டியன் : தலைவர் அவர்களே அபிஷேகப் பட்டியில் இப்போது கோழிப் பிரிவு ஒன்றுதான் இருக்கின்றது. மற்றைய கூடங்கள் எல்லாம் பழுதடைந்த நிலையில் கூரைகள் எல்லாம் கீழே விழுந்துவிடக் கூடிய நிலைமையில் தான் இருக்கின்றன. ஆகவே, கோழிப் பிரிவு தவிர மற்றைய பிரிவுகளையும் அங்கே ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுடைய உணர்வுகளை அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### தமிழகத்திலுள்ள கால்நடைச் செல்வங்கள்.

584—(*வினா எண் 21920) திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கால்நடைச் செல்வங்கள் குறைந்து வருவது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) இல்லை, (ஆ) அது பற்றிய வினா எழவில்லை.

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு தமிழகத்தில் ஏற்பட்ட கடுமையான வறட்சி காரணமாக அண்டை மாநிலங்களுக்கு கால்நடைச் செல்வங்கள் கடத்திச் செல்லப்படுகின்றது என்று சொல்லப்படுகின்றது. அப்படிப்பட்ட நிலைமையில் இங்கே கால்நடைச் செல்வங்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டு வருகின்றது என்று பேசப்படுகின்றது,

அதுபற்றி பத்திரிகைகளில் வந்திருக்கிறது. அதை அரசு அறியுமா ? ஆகவே அந்த நிலைமையைத் தடுத்து நிறுத்த ஏதாவது சிறப்பான திட்டம் அரசிடம் இருக்கின்றதா ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** தலைவர் அவர்களே, இப்போதைய கணக்கெடுப்பின்படி கால்நடைச் செல்வங்களின் எண்ணிக்கை அதிகரித்துத்தான் உள்ளது. தமிழகத்தில் 1977ஆம் ஆண்டிலிருந்த கணக்கெடுப்பின்படி கால்நடைச் செல்வங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று பார்த்தால் 241.46 இலட்சம் ஆகும். இப்போது அதாவது 1982ஆம் ஆண்டிலே உள்ள கணக்கெடுப்பின்படி பார்த்தால் கால்நடைச் செல்வங்களின் எண்ணிக்கை 247.93 இலட்சம் ஆகும். ஆக, 1977ஆம் ஆண்டிலிருந்து 1982ஆம் ஆண்டு வரையுள்ள இந்த ஆண்டுகளில் 6.47 இலட்சம் கால்நடைச் செல்வங்கள் அதிகரித்ததாகத் தான் எனக்குத் தகவல் கிடைத்துள்ளது.

**திரு. எஸ். டி. உகம்சந்த் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்கின்ற நேரத்திலே 1982ஆம் ஆண்டு கால் நடைச் செல்வங்கள் அதிகரித்திருக்கின்றன என்று தெரிவித்துள்ளார்கள். ஆனால், சென்ற ஆண்டு கடுமையான வறட்சியின் காரணமாகவும் அதே நேரத்தில் கேரளா போன்ற அண்டை மாநிலங்களுக்கு அந்தக் கால்நடைச் செல்வங்கள் கடத்திச் செல்லப்படுகின்ற சில நிகழ்ச்சிகள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. ஆகவே, சென்ற ஆண்டு குறைந்திருக்கிறது. அண்டை மாநிலங்களுக்கு இந்தக் கால்நடைச் செல்வங்கள் கடத்திச் செல்லப்படுவதைத் தடுக்க ஏதாவது திட்டத்தை அரசு வகுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிற விவரத்தின்படி கால்நடைச் செல்வங்கள் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. சென்ற ஆண்டு வறட்சியின் காரணமாக கால்நடைச் செல்வங்கள் வெளி மாநிலங்களுக்குக் கடத்திச் செல்லப்பட்டதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். அது பற்றிய விவரம் என்னிடத்தில் இப்பொழுது இல்லை. தனிக் கேள்வி போட்டால், விவரம் கொடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உடுக்குறியிட்ட வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.



## (ஆ) உடுக்குறியிடாதத் வினாக்கள்.

### சிதம்பரம் நந்தனார் உயர்நிலைப் பள்ளி பெண்கள் விடுதியில் குளியலறை.

1—வினா 2764—திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் நந்தனார் உயர்நிலைப் பள்ளி பெண்கள் விடுதியில் பெண்களுக்குக் குளிக்கும் வசதியற்று இருப்பது உண்மைதானா ?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது.

விடை—

(அ) மற்றும் (ஆ) சிதம்பரம் நந்தனார் மகளிர் விடுதியில் பெண்களுக்குக் குளிக்கும் வசதி யாவும் உள்ளன. அதாவது 48 குளியலறைகளும், 48 கழிவறைகளும் உள்ளன. 705 மாணவிகளுக்குச் சராசரியாக 15 பேர்களுக்கு ஒரு குளியலறை மற்றும் ஒரு கழிவறை என்று ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் இவைகளுக்குப் பெரிய தண்ணீர் தொட்டியிலிருந்து தண்ணீர் வழங்கப்படுகிறது.

### பெருந்துறை வட்டம் ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து மருத்துவமனையாக மாற்றல்.

2—வினா 3620—திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை வட்டம் தலைநகரமாக்கப்பட்டும் ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து மருத்துவமனையாக மாற்றப்படாதது ஏன் ?

(ஆ) மாற்றும் உத்தேசம் உண்டா ? எப்போது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) பெருந்துறையில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றிவிட்டு அவ்விடத்தில் 20 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை ஒன்றைத் துவக்க ஒரு கருத்துரு இருப்பதாக மருத்துவம் மற்றும் குடும்பநலத் துறை இயக்குநர் தெரிவித்துக் கொண்டுள்ளார்.

### மைலம் பஞ்சாயத்து யூனியன் அகூர் கிராம ஏரி மதகு செப்பனிடப்படுதல்.

3—வினா 4519—திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டிவனம் சட்டமன்ற தொகுதி மைலம் பஞ்சாயத்து யூனியன் அகூர் கிராம ஏரி மதகு உடைந்துள்ளதை சீர் செய்ய அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

விடை—

இப்பணி முடிக்கப்பட்டுவிட்டது.

### ஆரம்பப் பள்ளி நடத்தாட்டிகளுக்கு மாத ஊதியம்.

4—வினா 4623—திரு. சி. சபாபதி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பணி புரியும் ஆரம்பப் பள்ளி நடத்தாட்டிகளுக்கு மாத ஊதியம் எவ்வளவு ?

(ஆ) தருமபுரி மாவட்டத்தில் இருக்கும் அனைத்து ஒன்றியங்களுக்கும் ஒரே மாதிரியான சம்பளமா ?

(இ) நிரந்தரம் செய்யப்பட்டவர்களா ?

(ஈ) அரூர் ஒன்றியத்தில் மட்டும் ரூ. 30 (மட்டும்) ஊதியம் பெறுகின்றனர். ஏன்

விடை—

(அ) ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிகளில் பணிபுரியும் முழுநேரப் பள்ளி நடத்தாட்டிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்ணயிக்கும் மார்க்கெட் விகிதத்தில் மாத ஊதியம் இதர படிகளுடன் வழங்கப்படுகிறது.

(ஆ) முழு நேர நடத்தாட்டிகளைப் பொறுத்தவரையில் தர்மபுரி மாவட்டத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றிய நடத்தாட்டிகளுக்கும் ஒரே மாதிரியான மாத ஊதியம் இதர படிகளுடன் வழங்கப்படுகிறது. அதேபோல் பகுதி நேர நடத்தாட்டிகளுக்கும் ஊராட்சி ஒன்றியங்களில் 1981 அக்டோபர் மாதத்திலிருந்து ஒரே மாதிரியான மாத ஊதியம் ரூ. 60 வழங்கப்படுகிறது. இவர்களுக்கு இதர படிகள் வழங்கப்படுவதில்லை.





(இ) சில்லரை செலவின் ஊழியர்களுக்கு பணி விதிகள் எதுவும் இல்லை, அதனால் அவர்கள் தற்காலிக பணியாளர்களாகக் கருதப்படுகிறார்கள்.

(ஈ) அரூர் ஊராட்சியத்தில் உள்ள பகுதி நேர நடத்தாட்டிகளுக்கு மாத ஊதியமாக ஊரக வளர்ச்சித் துறை ஆணை 322, நாள் 9—2—1971-ன்படி ரூ. 30 மட்டும் வழங்கப்பட்டு வந்தது. இவர்களுக்கும் 1981 அக்டோபர் மாதத்திலிருந்து ரூ. 60 மாதம் ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

### தாமல் ஏரியைப் பலப்படுத்தும் திட்டம்.

5—வினா 5495—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் வட்டத்தைச் சேர்ந்த தாமல் ஏரியை ஆழப்படுத்தவும் ஏரியைப் பலப்படுத்தவும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) தாமல் ஏரியை தூர் வாரி புனரமைக்கும் (Desilking-cum-Reclamation) திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்ய ரூ. 1.727 லட்ச செலவில் மதிப்பீடு 1937–4ல் அங்கீகரிக்கப்பட்டு பணியும் முடிக்கப்பட்டு விட்டது. தாமல் ஏரியின் கரையை பலப்படுத்தும் வேலையை 1982–83ஆம் ஆண்டில் பராமரிப்பு மற்றும் மராமத்து வேலைகளின்கீழ் எடுத்துக் கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### கொடைக்கானல்—கிளாவரை உள்ள கிராமங்களுக்குச் சாலை வசதி.

6—வினா 5796—திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) கொடைக்கானல்—கிளாவரை உள்ள 10 கிராமங்களுக்குச் சாலை வசதி ஏற்படுத்தித் தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஏற்படுத்தப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) கொடைக்கானலிலிருந்து கிளாவரை செல்ல பின்வரும் மூன்று சாலைகள் உள்ளன :—

1. கொடை—கொச்சின் சாலை,
2. கொடை—கோஷன் சாலை.
3. கோஷன்—கிளாவரை சாலை.

வரிசை எண் 1 மற்றும் 2-ல் குறிப்பிட்டுள்ள இரு சாலைகளும் அரசு மாவட்ட பெருஞ்சாலைகள். இவ்விரண்டு சாலைகளும் நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித் துறையினரால் நல்லமுறையில் பராமரிக்கப்படுகின்றன. வரிசை எண் 3-ல் குறிப்பிட்டுள்ள சாலை கொடைக்கானல் ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பிலுள்ள ஒன்றிய சாலையாகும்.

கொடை—கோஷன் சாலையின் கி.மீ. 48/2-ல் பிரிந்து பூம்பாறை கிராமத்திற்கு செல்லும் சாலையும் கி.மீ. 34/8-ல் பிரிந்து மண்ணவனூர் செல்லும் சாலையும் நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித் துறையினரால் பராமரிக்கப்படும் அரசு இதர மாவட்டச் சாலைகளாகும். இச்சாலைகளின் மேல்பரப்பு தார் சாலைகளாக உள்ளது.

மற்றும் கூக்குல், புதுபுத்தூர் மற்றும் பழம்புத்தூர், கும்பூர் கௌஞ்சி போளூர் ; கீழனாவாயல் மற்றும் பூண்டி ஆகிய கிராமங்களுக்கு செல்லும் சாலைகள் கொடை ஊராட்சி ஒன்றியத்தினால் பராமரிக்கப்படும் மண்சாலையாகவும் கல் பரப்பப்பட்ட சாலைகளாகவும் உள்ளன. கொடை—கோஷன் சாலையில் கி.மி. 32/4ல் பிரிந்து செல்லும் சாலையில் கிளாவரை கிராமத்திற்கு செல்ல வேண்டும். கொடை கோஷன் சாலையில் 23/4 முதல் 56/0வரை கல் பரப்பிய சாலையாகவும் கி.மீ. 56/0 முதல் 62/6 வரை தார் சாலையாகவும் உள்ளன. மேற்கண்டவாறு ஏற்கனவே இக் கிராமங்களுக்கு சாலை வசதி உள்ளதால் இவ்வினாவுக்கு இடமில்லை.

### கரூர் வட்டம், நாகம்பள்ளி விவசாய கூட்டுறவு நாணயச் சங்கத்தில் ஊழல் புகார்,

7—வினா 5929—திரு. சென்னிமலை என்கிற ப. செ. கந்தசாமி: மாண்புமிகு கைத்தறி கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் வட்டம், நாகம்பள்ளி விவசாய கூட்டுறவு நாணய சங்கத்தில் ஊழல் நடந்ததாக புகார் அரசுக்கு வந்துள்ளதா?



(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

(இ) சம்பந்தப்பட்ட நபர்கள் யார் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப் பிரிவு 65-ன் கீழ் விசாரணைக்கு ஆணையிடப்பட்டு கூட்டுறவு சங்கப் பதிவாளரின் அலுவலக தனிப்புலனாய்வுக் குழு விசாரணையை முடித்துள்ளது. இந்த விசாரணை அறிக்கையின்பேரில் கையாடல் செய்துள்ள குற்றவாளிகளின் பேரில் குற்ற நடவடிக்கைத் தொடர காவல் துறையினரால் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணையில் உள்ளது.

(இ) இதில் சம்பந்தப்பட்ட நபர்களின் விவரம் கீழ்வருமாறு :—

1. திரு. கே. பழனிச்சாமி—சங்க எழுத்தர்.

2. திரு. கே. இரகுநாதன்—சங்க எழுத்தர்.

3. திரு. ஆர். சுப்பிரமணியன்—சங்கச் செயலர்.

4. திரு. எஸ். இராமலிங்கம்—சங்கத் துணைத் தலைவர்.

5. திரு. எஸ். சதாசிவம்—சங்கத் தலைவர்.

### திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோவில் அர்ச்சகர்கள் பூக்காவடி கட்டணத்தில் பங்கை உயர்த்தக் கோரிக்கை.

8—வினா 5968—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோவில் அர்ச்சகர்கள் பூக்காவடிக் கட்டணத்தில் தங்கள் பங்கை உயர்த்தித்தர வேண்டுமென அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனரா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள முடிவு என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி ஆலய அர்ச்சகர்களுக்கு 1-8-1974-க்கு முன்புவரை புஷ்பக் காவடி காணிக்கைத் தொகை ரூ. 1.00-ல் 30 பைசாக்கள் பங்குத் தொகையாக கொடுக்கப்பட்டு வந்தது. 1-8-1974 முதல் புஷ்பக் காவடிக் காணிக்கைத் தொகையை ரூ. 1.50 ஆக உயர்த்தி அர்ச்சகர் பங்கு 0.30 பைசாவாக இருந்ததை 0.35 பைசாவாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இந்த 0.35 பைசா பங்குத் தொகை போதாது என ஆலய அர்ச்சகர்கள் ஆணையருக்கு மேல்முறையீடு செய்தனர். அம் மேல்முறையீடு மனு பரிசீலனைக்குப்பின் தள்ளுபடி செய்யப்பட்டது. அர்ச்சகர்கள் ஆணையர் உத்தரவை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்துள்ளனர். இந்த வழக்கு நிலுவையில் உள்ளது. மேலும் அவர்கள் அர்ச்சனை வகையரா, டிக்கட்டுகளுக்கான பங்குத்தொகை குறித்து அரசுக்கு மேல்முறையீடு செய்தனர். அம்மனு பரிசீலிக்கப்பட்டு 21-5-1982-ல் தள்ளுபடி செய்யப்பட்டது.

## விளவங்கோடு தாலுக்காவில் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே கட்டியுள்ள நேசமணி பாலத்தில் மின் இணைப்பு.

9—வினா 6721—திரு. டி. மணி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம், விளவங்கோடு தாலுக்காவில் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே கட்டியுள்ள நேசமணி பாலத்தில் மின் இணைப்பு கொடுப்பதற்கான நடவடிக்கை ஏதேனும் மேற்கொள்ளப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## சேலம் மாவட்டத்தில் வெள்ள நிவாரணத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை.

10—வினா 7024—திரு. இ. கணேசன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் வெள்ள நிவாரணத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?



(ஆ) 1977-78, 1979-80 ஆண்டு வாரியாக ?

(இ) ஒன்றிய வாரியாக.

விடை—

(அ) ரூ. 55.15 இலட்சம்.

(ஆ) மற்றும் (இ) 1977-78 முதல் 1979-80 ஆண்டு வாரியாகவும் ஒன்றிய வாரியாகவும் வெள்ள நிவாரணத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகையை குறித்து அறிக்கை ஒன்று கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

சேலம் மாட்வடத்தில் வெள்ள நிவாரணத்திற்காக ஒன்றிய வாரியாகக் கீழ்க்கண்ட தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

| | ஒன்றியம். | 1977–78. | 1978–79. | 1979–80. | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) | (5) |
| | **சேலம் மாவட்டம்—** | | | | |
| 1 | சேலம் .. .. | 30,000 | 40,000 | 5,00 | 75,000 |
| 2 | வீரபாண்டி .. .. | 37,000 | 1,04,000 | 45,000 | 1,86,000 |
| 3 | பனமரத்துப்பட்டி .. | .. | 50,000 | .. | 50,000 |
| 4 | ஏற்காடு .. .. | 34,000 | 60,000 | 5,000 | 99,000 |
| 5 | வாழப்பாடி .. .. | 28,000 | 1,10,000 | 51,000 | 1,89,00 |
| 6 | அ. பட்டணம் .. | 30,000 | 1,95,000 | 42,000 | 2,67,000 |
| 7 | பெ. பாளையம் .. | 48,000 | 1,80,000 | 42,000 | 2,70,000 |
| 8 | ஆத்தூர் .. .. | 28,000 | 1,85,000 | 5,000 | 2,18,000 |
| 9 | கெங்கவல்லி .. | 35,000 | 60,000 | 5,000 | 1,00,000 |
| 10 | தலைவாசல் .. .. | 35,000 | 0,000 | .. | 95,000 |
| 11 | ஓமலூர் .. .. | 38,000 | 1,60,000 | .. | 1,98,000 |
| 12 | தாரமங்கலம் .. | 88,000 | 85,000 | .. | 1,73,000 |
| 13 | காடையாம்பட்டி .. | 88,000 | 90,000 | 40,000 | 2,18,000 |
| 14 | கொளத்தூர் .. | 58,000 | 40,000 | .. | 98,000 |
| 15 | நங்கவல்லி .. .. | 38,000 | 70,000 | .. | 1,08,000 |
| 16 | மேச்சேரி .. .. | 35,000 | 96,000 | 2,000 | 1,33,000 |
| | மொத்தம் .. | 6,50,000 | 15,85,000 | 2,42,000 | 24,77,000 |
| | **நாமக்கல் கோட்டம்—** | | | | |
| 17 | புதுச்சத்திரம் .. | .. | 2,12,000 | 12,000 | 2,24,000 |
| 18 | திருச்செங்கோடு .. | 58,000 | 6,60,000 | 62,000 | 7,80,000 |
| 19 | பள்ளிப்பாளையம் .. | 8,500 | 3,37,000 | 44,000 | 3,89,500 |
| 20 | மல்லசமுத்திரம் .. | 7,500 | 19,000 | 27,000 | 53,500 |
| 21 | எலச்சிபாளையம் .. | 4,000 | 83,000 | .. | 87,000 |
| 22 | எருமைப்பட்டி .. | .. | 31,000 | 6,000 | 37,000 |
| 23 | இராசிபுரம் .. .. | 24,000 | 2,37,000 | .. | 2,61,000 |
| 24 | சங்ககிரி .. .. | 9,800 | 1,48,000 | 51,000 | 2,08,000 |

| ஒன்றியம். (1) | 1977–78. (2) | 1978–79. (3) | 1979–80. (4) | மொத்தம். (5) |
|---|---|---|---|---|
| 25 நாமகிரிப்பேட்டை .. | 24,000 | 14,000 | 14 000 | 52,000 |
| 26 வெண்ணந்தூர் .. | .. | 50,000 | 15,000 | 65,000 |
| 27 மகுடஞ்சாவடி .. | 5,000 | 15,000 | .. | 20,000 |
| 28 எடப்பாடி .. | 6,000 | 8,000 | .. | 14,000 |
| 29 மோகனூர் .. | 81,000 | 99,000 | .. | 1,80,000 |
| 30 கபிலமலை .. | 19,000 | 91,000 | .. | 1,10,000 |
| 31 சேந்தமங்கலம் .. | 27,000 | 38,000 | .. | 65,000 |
| 32 பரமத்தி .. | 5,600 | 22,000 | .. | 27,600 |
| 33 நாமக்கல் .. | 23,000 | 1,40,000 | .. | 1,63,000 |
| 34 கொல்லிமலை .. | 1,94,700 | 69,000 | .. | 2,63,700 |
| 35 கொங்கணாபுரம் .. | 2,900 | 34,000 | .. | 36,900 |
| மொத்தம் .. | 5,00,000 | 23,07,000 | 2,31,000 | 30,38,000 |

தொகுப்பு.

| | | | | |
|---|---|---|---|---|
| சேலம் கோட்டம் .. | 6,50,000 | 15,85,000 | 2,42,000 | 24.77,000 |
| நாமக்கல் கோட்டம் .. | 5,00,000 | 23,07,000 | 2,31,000 | 30,38,000 |
| பெரு மொத்தம் .. | 11,50,000 | 38,92,000 | 4,73,000 | 55,15,000 |



**போடிப்பகுதி ஏலக்காய் சுத்தம் செய்தல் மற்றும் இலவம் பஞ்சு பிரித்தெடுத்தல் செய்யும் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்சக் கூலி நிர்ணயம்.**

11—வினா 7111—திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போடிப் பகுதியில் நடைபெறும் ஏலக்காய் சுத்தம் செய்தல் இலவம் பஞ்சு பிரித்தெடுத்தல் செய்யும் தொழிலாளர் களுக்கு குறைந்த பட்சக் கூலி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் என்றால், அந்தச் சம்பளம் கொடுக்க வேண்டும் என்று அரசு வலியுறுத்துமா?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

**வட ஆற்காடு மாவட்டத்தில் காட்டிற்குள்ளிருக்கும் பட்டா நிலங்களி லிருந்து விறகு வெட்டி எடுத்துச் செல்லும் உரிமம்.**

12—வினா 7414—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் காட்டிற்குள் இருக்கும் பட்டா நிலத்தில் இருந்து விறகு வெட்டி எடுத்துச் செல்லும் உரிமம் சாத்தனூர் ரேஞ்சுகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ஒப்பந்ததாரர்கள் வருவாய் அதிகாரிகளிடம் படிவம் II என்ற அனுமதிப் படிவம் பெற்று பட்டா நிலங்களில் உள்ள மரங்களுடன் ஒதுக்குக் காடுகளில் உள்ள மரங்களையும் வெட்டுகின்றனர். இந்தப் படிவம் II என்ற அனுமதி உத்தரவு வரன்முறையில்லாமல் வழங்கப்படுவதால் குறிப்பாக வட ஆற்காடு மாவட்டம், சாத்தனூர் பகுதிகளில் வனச் செல்வங்கள் வெகுவாகக் குறைந்து வருவதாக அரசுக்குத் தெரியவந்தது. இவற்றைத் தடை செய்யும் பொருட்டு, வருவாய்த் துறை

அதிகாரிகள் ஒப்பந்ததாரர்கட்கு, பட்டா நிலங்களிலிருந்து மரங்களை வெட்டி அகற்றுவதற்குரிய படிவம் II என்ற அனுமதிச் சீட்டுகளை வழங்க வேண்டாமென உத்திரவு பிறப்பிக்குமாறு வட ஆற்காடு மாவட்ட ஆட்சியர் மற்றும் வனத் துறைத் தலைவர் ஆகியோர்கள் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளார்கள்.

**திருவாரூர் திருத்துறைப்பூண்டி சாலை பிரியும் இடத்தில் உள்ள கீழ்ப் பாலத்தை அகலப்படுத்தும் செயற்குறிப்பு.**

13—வினா 7430—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி நகரம் திருவாரூர் திருத்துறைப்பூண்டி சாலை பிரியும் இடத்தில் உள்ள கீழ்ப் பாலத்தை அகலப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இல்லை.

**முசிறி தாலுகா, நெய்வேலி கிராம ஆதி திராவிட பொதுமக்களிடமிருந்து வீட்டுமனைப் பட்டாக்கள் கோரி மனுக்கள்.**

14—வினா 7722—திரு. எம். கே. ராஜமாணிக்கம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தாலுக்கா நெய்வேலி கிராம ஆதி திராவிட பொதுமக்களிடமிருந்து வீட்டுமனைப் பட்டா கோரி எத்தனை மனுக்கள் வந்துள்ளன ?

(ஆ) ஆம் எனில் எத்தனை பேர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டது ?

விடை—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி வட்டம், நெய்வேலி கிராம ஆதி திராவிடர்களிடமிருந்து வீட்டுமனைப் பட்டா கோரி மனுக்கள் வரவில்லை.

(ஆ) இல்லை.



**தஞ்சை மாவட்டம் அருள்மிகு சுவாமிமலை ஸ்ரீ சாமிநாத சுவாமி கோவிலுக்குச் சொந்தமான சரவணப் பொய்கை கங்கணையர் குளம் ஆகிய இரண்டையும் சீர்செய்யும் திட்டம்.**

15—வினா 7819—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், அருள்மிகு சுவாமிமலை ஸ்ரீசாமிநாதசுவாமி கோவிலுக்குச் சொந்தமான சரவணப் பொய்கை, கங்கணையர் குளம் ஆகிய இரண்டையும் சீர் செய்யும் திட்டம் அறநிலையத் துறையிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரங்கள் யாவை ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : சரவணப் பொய்கை மற்றும் கங்கணையர் குளம் ஆகிய இரண்டிலும் தூர் எடுத்து சுத்தம் செய்யும் வேலைக்கு ஒவ்வொரு குளத்திற்கும் ரூ. 7,000 வீதம் மதிப்பீடு செய்யப்பட்டு 30—5—1981-ல் தஞ்சை இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை துணை ஆணையாரால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு தூர் எடுக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

**கோட்டூரில் குறுக்குச் சாலைக்குப் பணம் ஒதுக்கீடு.**

16—வினா 8517—திரு ஆர் கே. பெருமாள் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) கோட்டூருக்கு குறுக்குச் சாலை போக்குவரத்து வசதிக்காக பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் மதிப்பீடு எவ்வளவு ?

(இ) எப்பொழுது வேலை துவங்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) : இவ்வினாக்களுக்கு இடமில்லை.

புயலால் பாதிக்கப்பட்ட நிடாமங்கலத்தில் இருந்த சத்திரம் மற்றும் பயணிகள் தங்கும் விடுதி ஆகியவற்றினை மீண்டும் கட்டும் திட்டம்.

17—வினா 8761—திரு. த. வீராசாமி : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீடாமங்கலத்தில் இருந் சத்திரம் பயணிகள் தங்கும் விடுதி புயலால் பாதிக்கப்பட்டு விட்டதா ?

(ஆ) இதனை மீண்டும் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தற்போது இல்லை.

காரைக்குடி நகராட்சியில் உள்ள சிவில் சப்ளை கடைகள்.

18—வினா 9510—திரு. ச. அங்குசாமி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி நகராட்சியில் சிவில் சப்ளைக் கடைகளை அதிகரிக்க ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில் அரசின் நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி நகராட்சியில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூன்று நியாய விலைக் கடைகளையும் கூட்டுறவுச் சங்கங்கள் ஏழு கடைகளையும் நடத்தி வருகின்றன. இந்த பத்து கடைகளிலும் 16,620 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தால் நடத்தப்படும் மூன்று கடைகளிலும் மொத்தம் 3,666 குடும்ப அட்டைகளை இணைக்கப்பட்டுள்ளன. இந்த மூன்று கடைகளில் 2,000 அட்டைகளுக்கும் குறைவாகவே பதிவு செய்யப்பட்டுள்ள காரணத்தால், நுகர் பொருள் வாணிபக் கழகத்தினால் மேலும் நியாய விலைக் கடைகளைத் திறக்க அவசியம் ஏற்படவில்லை.

கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் ஏழு கடைகளில் மூன்று கடைகளில் மட்டும் 2,187, 2,271, 2,371 அட்டைகள் பதியப் பட்டுள்ளன. 2,000க்கும் அதிகப்படியான அட்டைகளின் எண்ணிக்கை மிக அதிக அளவில் இல்லாததினால், இந்த மூன்று கடைகளை பிரித்து புதிய கடைகளைத் திறக்கும் சாத்தியக் கூறு ஏதும் இல்லை.



1981—சனவரி சென்சஸ்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் எண்ணிக்கை.

19.—வினா 9893—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1981 சனவரி சென்சஸ் குறிப்புப்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் எத்தனை பேர்?

(ஆ) அவர்களில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் விபரம் என்ன ?

விடை—

1981ஆம் ஆண்டு மக்கட் தொகைக் கணக்கெடுப்பின்படி நம் மாநிலத்தில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் எண்ணிக்கை, அவர்களில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் விபரம் பின்வருமாறு :—

| | | மொத்த மக்கட் தொகை. | எழுதப் படிக்க தெரிந்தவர்கள். |
|---|---|---|---|
| ஆதி திராவிடர் .. | ஆண் | 4,485,332 | 1,823,222 |
| | பெண் | 4,395,963 | 811,927 |
| பழங்குடியினர் .. | ஆண் | 264,288 | 70,592 |
| | பெண் | 255,938 | 35,829 |

வட ஆற்காடு மாவட்டத்தில் குடிநீர் வடிகால் பொறுப்பில் உள்ள துளைக் கிணறுகளின் எண்ணிக்கை.

20—வினா 9921—திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் குடிநீர் வடிகால் பொறுப்பில் உள்ள துளைக் கிணறுகள் எவ்வளவு ?

(ஆ) இதில் தற்போது எத்தனை நல்ல நிலையில் உள்ளன?

விடை—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் 2,462 துளைக் கிணறுகள் குடிநீர் வடிகால் வாரியப் பொறுப்பில் உள்ளன.

(ஆ) 2,210 ஆழ்துளைக் கிணறுகள் நல்ல நிலையில் இயங்கி வருகின்றன.

[1984 ஏப்ரல் 16

12ஆம் வகுப்பிற்கான பொருளாதாரப் பாடப் புத்தகம் கிடைப்பதில் தாமதம்.

21—வினா 10046—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேல் நிலைக் கல்வி பயிலும் மாணவர்களுக்கு 12ஆம் வகுப்பிற்கான பொருளாதாரப் பாடப் புத்தகம் பள்ளி திறந்து ஒரு மாதமாகியும் சப்ளைக்கு வரவில்லையென்பதை தமிழக அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இதனைத் தவிர்க்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தாமதத்தைத் தவிர்க்க இனி பாட நூல்களில் கையெழுத்துப் பிரதிகள் தயாரிக்க கால வரம்பு நிர்ணயம் செய்து பாட நூல் ஆசிரியர்களை நியமித்து அக்குறிப்பிட்ட காலத்திற்குள் கையெழுத்துப் பிரதிகளைப் பெற்று தாமதமின்றி பாட நூல்களை வெளியிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அனைத்து கையெழுத்துப் படிகளும் மே திங்கள் இறுதிக்குள் பாட நூல் நிறுவனத்திற்கு இறுதி வடிவில் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று பாட நூல் கையெழுத்து படிகள் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் நூலாசிரியர்கள் மேலாய்வாளர்கள் அனைவருக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

ஓமலூர்—மேட்டூர் நெடுஞ்சாலையை அகலப்படுத்தும் பணி.

22—வினா 10176—திரு. செ. செம்மலை : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் ஓமலூர் — மேட்டூர் நெடுஞ்சாலையை அகலப்படுத்தும் பணியின் தற்போதைய நிலை என்ன?

(ஆ) எப்போது அந்தப் பணி முடிவடையும் ?

(இ) அதற்காக செலவு செய்ய ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?



1984 ஏப்ரல் 16]

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ)—ஓமலூர்—மேட்டூர் நெடுஞ்சாலை என்ற பெயரில் சாலை ஏதும் இல்லை. ஓமலூரையும் மேட்டூரையும் பின்வரும் 3 சாலைகள் இணைக்கின்றன:—

1. ஓமலூர்—மேச்சேரி சாலை—கி.மீ. 0/0—14/6.

2. மேச்சேரி—சோனப்பாடி சாலை கி.மீ. 0/0—00/4.

3. தொப்பூர்—மேட்டூர்—பவானி சாலை கி.மீ.18/4—38/8.

மேற்கண்ட சாலைகளின் அகலம் முறையே 3.66 மீ., 7 மீ., மற்றும் 7 மீ. ஆகும். இதில் ஓமலூர்-மேச்சேரி சாலை ஒன்று தான் அகலம் குறைவாக இருந்தது. இச்சாலையையும் அகலப்படுத்தி தார் பரத்தல் ஆகிய பணி பராமரிப்பு நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்பட்டு வேலைகள் அனைத்தும் 31—7—1982-ல் முடிவடைந்து விட்டன.

குளச்சலில் உள்ள தும்புத் தொழிற்சாலையில் கிடைக்கும் வருமானம்.

23—வினா 10538—திரு. டி. மணி: மாண்புமிகு கதர் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் குளச்சலில் செயல்பட்டு வரும் தும்புத் தொழிற்சாலையின் மூலம் 1978–79, 1979–80, 1980–81 ஆண்டுகளில் கிடைத்த வருமானம் எவ்வளவு?

(ஆ) இத்தொழிற்சாலைக்குச் சொந்தமான $4\frac{1}{2}$ ஏக்கர் வளாகத்தினுள் உள்ள 200-க்கு மேற்பட்ட தென்னை மரங்களிலிருந்து 1978–79, 1979–80, 1980–81-ம் ஆண்டுகளில் வருமானம் எவ்வளவு ?

விடை—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் குளச்சலில் செயல் பட்டு வரும் தும்பு சுத்திகரிப்பு நிலையத்தில் பக்குவப்

படுத்தப்பட்டு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. தும்பு வியாபார விவரங்களாவன :—

| ஆண்டு. | விற்பனை அளவு (டன்). | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1978–79 .. .. .. | 751 | 34.36 |
| 1979–80 .. .. .. | 685 | 44.44 |
| 1980–81 .. .. .. | 430 | 25.01 |

(ஆ)—

| ஆண்டு. | வருமானம் (ரூபாயில்). |
|---|---|
| 1978–79 .. .. .. .. | 9,776.90 |
| 1979–80 .. .. .. .. | 12,930.00 |
| 1980–81 .. .. .. .. | 13,384.37 |

### சேந்தமங்கலம் தொகுதியில் ஆதி திராவிட மக்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்குதல்.

24—வினா 11016—திரு. சீ. சிவுப்பிரகாசம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நல அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் தொகுதிக்குட்பட்ட நஞ்சுண்டாபுரம் அரிசனத்தெரு, மிதிகுண்டு, துத்திக்குளம், ஈச்சம்பட்டி, நத்தமேடு, ராஜகவுண்டனூர், காமராஜநகர், சிங்கலியன், கோம்பை அருந்ததியார் தெரு (காளப்பநாயக்கன்பட்டி) சேந்தமங்கலம் 1-வது வார்டு ஆகிய இடங்களில் வசிக்கும் ஆதி திராவிடர் மக்களுக்கு விரைவான வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை, எடுக்கப்படுமா ?

விடை—

மிதிகுண்டு மற்றும் நத்தமேடு இடங்களில் வசிக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு முறையே 3—8—1982-லும், 25—8—1981-லும் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. மற்ற இடங்களில் வசிக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை விரைந்து எடுக்கப்பட்டு வருகிறது.





### 1980இல் காவல் துறையினருக்கும் நக்ச்லைட்டுகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதலின் விளைவுகள்.

25—வினா 11074—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1980 ஆம் ஆண்டு ஜனவரி முதல் தேதியிலிருந்து டிசம்பர் முடிய போலீசுக்கும் நக்ஸலைட்டுகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் (encounters) சுட்டுக்கொல்லப்பட்ட காயமடைந்த நக்ஸலைட்டுகள் எவ்வளவு பேர்கள் ?

(ஆ) காவல் துறையினர் எவ்வளவு பேர்கள் ?

விடை—

| | இறந்தவர். | காயமுற்றவர். |
|---|---|---|
| (அ) .. .. | 11 பேர். | 20 * பேர் |
| (ஆ) .. .. .. | 3 பேர் ** | 35 பேர். |

### நன்னிலத்தில் சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட் மற்றும் முன்சீப் கோர்ட் அமைக்கச் செயற் குறிப்பு.

26—வினா 11554—திரு. அ. கலையரசன் : மாண்புமிகு சட்டம்—தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் நன்னிலத்தில் சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட், முன்சீப் கோர்ட் அமைக்க அரசின் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

விடை—

தஞ்சை மாவட்டம் நன்னிலத்தில் இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றம் அமைப்பதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால் அரசாணை (நிலை) எண் 2105 உள்துறை, நாள் 11—8—1982இல் நன்னிலத்தில் மாவட்ட முன்சீப் நீதிமன்றமொன்றை அமைப்பதற்கான ஆணையை அரசு பிறப்பித்துள்ளது.

---

*இவர்களில் ஒருவர் காவல் துறையினருடன் சண்டையிட்டு காயமுற்று பின்னர் மருத்துவமனையில் இறந்துவிட்டார். இந்த மோதலில் துப்பாக்கிச் சூடு ஏதும் நடத்தப்படவில்லை.

** ஒரு காவல் துறை ஆய்வாளரும் இரண்டு காவல் துறை சிப்பாய்களும் சிவலிங்கம் என்ற தீவிரவாதியால் 6—8—1980 அன்று காரில் திருப்பத்தூருக்கு வந்து கொண்டிருக்கையில் வெடி குண்டு வீசி கொல்லப்பட்டவர்கள் ஆவர்.

[1984 ஏப்ரல் 16

**V.I.P. பயணங்களுக்குப் பாதுகாப்பாகச் செல்லும் காவல் துறையினருக்கு சைரன் பொருத்தப்பட்ட கார்களைப் பயன்படுத்த திட்டம்.**

27—வினா 11724—திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) V. I. P. பயணங்களுக்குப் பாதுகாப்பாகச் செல்லும் காவல் துறையினருக்கு, ஜீப்புகளுக்குப் பதிலாக சைரன் பொருத்தப்பட்ட மோட்டார் கார்களைப் பயன்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) இல்லையெனில், அது நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள அறநிலையங்களில் தணிக்கைப் பிரிவினரால் தணிக்கை மேற்கொள்ளாத நிறுவனங்களின் எண்ணிக்கை.**

28—வினா 11951—திரு. செ. செம்மலை : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள அறநிலையங்களில் தணிக்கை பிரிவினரால் தணிக்கை மேற்கொள்ளாத நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) இதில் பரம்பரை அறங்காவலர், நிர்வாக அறங்காவலர் மற்றும் நிர்வாக அதிகாரியின் நிர்வாகத்தின்கீழ் உள்ளவைகளின் எண்ணிக்கை என்ன ?

(இ) கணக்குகளைத் தணிக்கைக்கு அளிக்காத நிர்வாகிகளின் மீது அரசு மேற்கொண்ட தீவிர நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள அறநிலையங்களில் தணிக்கை பிரிவினரால் தணிக்கை மேற்கொள்ளாத நிறுவனங்களின் எண்ணிக்கை தற்போது 2,191 ஆகும்.



1984 ஏப்ரல் 16]

(ஆ)—

| | |
|---|---|
| (1) பரம்பரை அறங்காவலர்கள் நிர்வாகத்தின்கீழ் உள்ளவை .. .. .. | 928 |
| (2) நிர்வாக அறங்காவலர் நிர்வாகத்தின்கீழ் உள்ளவை .. .. .. .. | 1,187 |
| (3) நிர்வாக அதிகாரிகளின்கீழ் உள்ளவை .. | 76 |

(இ) தணிக்கை கணக்குகளை ஆஜர் படுத்தாத நிறுவனங்களின் நிர்வாகிகளை கணக்குகளைத் தணிக்கைக்கு ஆஜர் படுத்தக் கேட்டும், அப்படி ஆஜர் படுத்தத் தவறினால் சம்பந்தப்பட்ட நிர்வாகிகளின் மீது மேல் நடவடிக்கை எடுக்கவும் துணை ஆணையர்கள் மற்றும் உதவி ஆணையர்களால் ஆலய நிர்வாகிகளுக்கு நோட்டீஸ் அனுப்பியும் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டும் வருகின்றது.

**வட மதுரை அருள்மிகு சௌந்தரராஜப் பெருமாள் கோவில் நிலங்களின் மூலம் வருமானம்.**

29—வினா 12103—திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தாலூகா, வடமதுரை அருள்மிகு சௌந்தரராஜப் பெருமாள் கோவிலுக்கு சொந்தமான நிலங்கள் எவ்வளவு ?

(ஆ) எந்தெந்த கிராமங்களில் உள்ளது ?

(இ) அந்நிலங்களில் இருந்து வரும் ஆண்டு வருமான எவ்வளவு ?

விடை—

(அ) வேடசந்தூர் தாலூக்கா, வடமதுரை அருள்மிகு சௌந்தரராஜப் பெருமாள் கோயிலுக்குச் சொந்தமாக 16.60 ஏக்கர் நிலங்கள் உள்ளன.

(ஆ) மேற்படி நிலங்கள் சித்தூர் மற்றும் வடமதுரை கிராமங்களில் உள்ளன.

(இ) அந்த நிலங்களிலிருந்து கிடைக்கும் மொத்த ஆண்டு வருமானம் ரூ. 13,580.00 ஆகும்.

[1984 ஏப்ரல் 16

கிறித்துவ ஆதிதிராவிட மாணவர்களுக்கு பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் (Admission fees) வாங்குவதில் விலக்களிக்கப்படல்.

30—வினா 12204—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிறித்துவ ஆதிதிராவிட மாணவர்களுக்கு பள்ளிகள், கல்லூரிகளில் (Admission fees) வாங்குவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அப்படி வசூலிக்கப்பட்ட கட்டணங்கள் மாணவர்களுக்கு திருப்பிக் கொடுக்க உத்தரவிடப்படுமா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

தண்டாரம்பட்டு தொகுதியில் பாலவாடி பாடசாலைகள் அமைக்கப்படாத கிராமங்களில் அப்பாடசாலைகள் அமைத்தல்.

31—வினா 12781—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு மாவட்டம், தண்டராம்பட்டு தொகுதியில் பால்வாடி பாடசாலைகள் அமைக்கப்படாத கிராமங்களில் அப்பாடசாலைகளை நிறுவ அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

விடை—

1—7—1982 முதல் செயல்படும் முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்தின்கீழ் தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியத்தில் இயங்கி வரும் 71 மையங்களையும், அதற்கு முன் வரகூர் கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டு நடந்து வரும் ஒரு மையத்தினையும் சேர்த்து மொத்தம் 72 குழந்தை நல மையங்கள் தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியத்தில் இயங்கி வருகின்றன.



ஏற்காட்டில் நீர் வீழ்ச்சி விழும் இடம்.

32—வினா 12809—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) ஏற்காட்டில் நீர்வீழ்ச்சி விழும் இடம் தனியாருக்கு சொந்தமானதா ?

(ஆ) ஆம் எனில் அவ்விடத்தை அரசு கைப்பற்ற நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தற்போது இல்லை.

மதுரை மீனாட்சி கோவிலில் புதிய திருமண மண்டபம் கட்டும் செயற் குறிப்பு.

33—வினா 12816—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலைய அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மீனாட்சி கோவிலில் புதிய திருமண மண்டபம் கட்டும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயத்தில் உள்ள திருக்கல்யாண மண்டபத்திற்கு எதிரில் உள்ள காலி இடத்தில் பக்தர்கள் பயன் படுத்துவதற்காக முற்றிலும் ஆலய நிதியிலிருந்து ஒரு மண்டபம் கட்டும் வேலை 18—11—1981-ல் தொடங்கி முடிக்கப்பட்டு விட்டது. இந்த மண்டபத்தில் பக்தர்கள் திருமணம் செய்து கொள்ள அனுமதிக்கப்படுவர். மேலும் இத்திருக்கோயில் பிரகாரத்தில் அருள்மிகு மீனாட்சி அம்மன் திருக்கல்யாண உற்சவம் நடத்தப்பட்டு வரும் இடத்தில் புதிதாக ஒரு திருக்கல்யாண மண்டபம் ஒன்றை ரூ. 1,00,000 செலவில் கட்ட உத்தேசிக்கப் பட்டு, இவ்வேலையை செய்வதற்கு 4—11—1980 தேதியன்று நிர்வாக அனுமதியளிக்கப்பட்டு, 1—12—1981-ல் இவ்வேலைக்

கான ஒப்பந்தப் புள்ளியும் அங்கீகரிக்கப்பட்டு திருக்கல்யாண மண்டபம் கட்டப்பட்டு சித்திரைப் பெருவிழாவின் போது 4—5—1982 அன்று திருக்கல்யாண உற்சவம் நடைபெற்றது.

கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் செவிலியர் வேலை நிறுத்தம்.

34—வினா 12852—திரு. செ. செம்மலை : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 9—12—1981அன்று கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் செவிலியர்கள் திடீர் வேலை நிறுத்தம் செய்தது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஆண் செவிலியராகப் பணிபுரியும் திரு. எஸ். சீதாராமன் ஏழுமலை என்ற போலீஸ்காரர் தூக்கியதால் 9—12—1981 அன்று காலை சுமார் 3 மணி நேரம் செவிலியர்களும் அடிப்படை ஊழியர்களும் வேலை செய்ய மறுத்து பணியினின்று வெளியில் வந்து நின்று விட்டனர். துணை ஆணையர் (சட்டம் ஒழுங்கு) திரு. கே. சுப்பையா அவர்கள் மருத்துவமனைக்கு விரைந்து வந்து குறிப்பிட்ட நபர் மீது தக்க நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதி அளித்ததன்பேரில் எல்லோரும் 9 மணியளவில் வேலைக்கு சென்று விட்டனர். திரு. ஏழுமலை 12—12—1981-லிருந்து தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டு பின் 25—12—1981 அன்று பணியில் அமர்த்தப்பட்டார். அவர்மீது துறை நடவடிக்கை எடுக்கப்பட்டு இரண்டாண்டுகளுக்கான இரண்டு ஊதிய உயர்வுகள் இந்நபரின் இரண்டாண்டு பணிக்காலம் வரை அவரது சம்பள விகிதத்தில் குறைக்கப்பட்டு சென்னை காவல் துறை ஆணையாளரால் உத்தரவிடப்பட்டுள்ளது.





சென்னையில் ஜேப்படி திருடர்களைப் பிடிக்க விசேஷ போலீஸ் படை.

35—வினா 12901—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையில் அதிகரித்து வரும் ஜேப்படித் திருடர்களை பிடிக்க "விசேஷ போலீஸ் படை" அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

சென்னையில் ஜேப்படிக் குற்றங்கள் அதிகரித்துவருவதில்லை. தேவைப்படும்போது காவல்படையை கூடுதலாக்கி, ஜேப்படித் திருடர்களைக் கண்டுபிடிக்கும் பணி தீவிரப்படுத்தப் படுகிறது. விசேஷ போலீஸ் படை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

தமிழ்நாடு சுற்றுலா அபிவிருத்திக் கழக அதிகாரிமீது கையாடல் புகார்.

36—வினா 12973—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சுற்றுலா அபிவிருத்திக் கழக அதிகாரி ரூபாய் 5 லட்சம்வரை கையாடல் செய்துள்ளதாக 1971-ம்ஆண்டு இறுதியில் அரசுக்கு புகார் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைமை கணக்கு அலுவலர் மற்றும் செயலாளராக பணியாற்றிய திரு. பி. ராம்ஜி மீது குறித்தகால வைப்பு நிதியிலிருந்து 1980-81ல் ரூபாய் 1.00 இலட்சம் கையாடல் செய்ததற்காகவும் கணக்குகளை பொய்யாக வைத்ததற்கும் காவல் துறையினரால் 6—2—1982ல் குற்றம் சாட்டப்பட்டு சென்னை நகர் குற்றவியல் இணை நீதிபதி நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்கு நிலுவையில் உள்ளது.

[1984 ஏப்ரல் 16

**வெட்டாறு ஆற்றின் குறுக்கே பணவெளி கிராமம் அருகே பாலம் கட்டும் திட்டம்.**

37—வினா 12985—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் வெட்டாறு ஆற்றின் குறுக்கே பணவெளி கிராமம் அருகே பாலம் கட்டும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு மதிப்பீட்டில் பாலம் கட்டப்படும் ?

விடை—

(அ) ஆம். இப்பணியை இதர சாலைகள் திட்டத்தின்கீழ் செயல்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது.

(ஆ) ரூ. 11.50 லட்சம் மதிப்பீட்டில் பாலம் கட்டப்படும்.

**கோவை மாநகராட்சி உட்பட்ட பாப்பநாயக்கன்பாளையம், பாரதிபுரம், அம்மன் குளம் போன்ற பகுதிகளில் குடியிருப்போருக்கு வீட்டு மனைப் பட்டா.**

38—வினா 31185—திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகராட்சிக்கு உட்பட்ட பாப்பநாயக்கன் பாளையம், பாரதிபுரம், அம்மன் குளம் போன்ற பகுதிகளில் குடியிருக்கும் சுமார் 200 குடும்பங்களுக்கு வீட்டுமனை பட்டா கொடுக்கவில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் எப்போது பட்டா வழங்கப்படும் ?



1984 ஏப்ரல் 16]

விடை—

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு உட்பட்ட கிருஷ்ணராய புரம், பாரதிபுரம், பாப்பநாய்க்கன்பாளையம், அம்மன் குளம் ஆகிய பகுதிகளில் புல எண். 1071/2-ல் உள்ள 9 ஏக்கர் 31310 சதுர அடி பரப்பளவுள்ள நிலம் வருவாய்ப் பதிவேடுகளில் ''அம்மன்குளம் புறம்போக்கு'' என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட நிலத்தில் 7 ஏக்கர் 15171 ச. அடி, நிலம் ஏற்கெனவே 1071/4 என உட்பிரிவு செய்யப்பட்டு நத்தமாக மாற்றப் பட்டு அதிலுள்ள 135 ஆக்கிரமிப்பாளர்களுக்கு ஒப்படை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதில் 97 நபர்கள் நிலக்கிரையமின்றி வீட்டு மனை பட்டாக்கள் பெற்றுள்ளார்கள். மீதமுள்ள 38 நபர்கள் நிலக்கிரயம் செலுத்த கோரப்பட்டுள்ளது. அதே நிலத்தில் கோயம்புத்தூர் மருத்துவ மனைக் கல்லூரி துப்பு றவு பணியாளர்களுக்கு மனையிலும் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் 39 அரசு ஊழியர்களுக்கு (பிராஸஸ் சர்வர்ஸ் மற்றும் கடைநிலை ஊழியர்கள்) நிலக்கிரயத்தின் பேரில் பட்டா வழங்க உத்திர விடப்பட்டு அதில் 20 நபர்கள் பட்டா பெறும் முன் அவர்களது இடத்தில் வேறு சிலர் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள். இது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று அரசு ஊழியர்களால் தொடரப்பட்டு அது நிலுவையில் உள்ளது. அவ்வழக்கு முடிந்த வுடன் மீதமுள்ளவர்களுக்கு பட்டா வழங்கப்படும். புல எண் 1071/2-ல் நத்தமாக மாற்றப்பட்ட பகுதியை தவிர மீதமுள்ள 2 ஏக்கர் 16138 ச.அடி பரப்பளவுள்ள நிலம் தற்சமயம் குளமாக இல்லையாதலால் அதில் குடிசைகள் மூலம் ஆக்கிரமிப்பு செய்துள்ள 100 பேர்களுக்கு விரைவில் பட்டா வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**அரியலூர் திருமாந்துரை சாலையையும் திட்டக்குடி நகரத்தையும் இணைக்கும் பாலம் வெள்ளாற்றின் குறுக்கே கட்டும் திட்டம்.**

39—வினா 13236—திரு. ஆர். சுந்தரமூர்த்தி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரியலூர் திருமாந்துரை சாலையையும் திட்டக்குடி நகரத்தையும் இணைக்கும் பாலம் ஒன்று வெள்ளாற்றின் குறுக்கே கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

தற்பொழுது இத்திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்றாலும் அரசின் நிதி நிலைமை, பணியின் முக்கியத்துவம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு 1983-84ஆம் ஆண்டின் இரண்டாம் பாகத் திட்டத்தின் கீழ் இப்பணிக்கு ஒப்புதல் அளிப்பது குறித்து பரிசீலனை செய்யப்படும்.

**தனியார் ஆக்கிரமித்துள்ள வனத் துறைப் பகுதியின் விஸ்தீரணம்.**

40—வினா 13404—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டின் வனத்துறையில் தனியார் ஆக்கிரமித்துள்ள வனத்துறைப் பகுதியின் விஸ்தீரணம் எவ்வளவு?

விடை—

தமிழ்நாட்டின் வனத்துறையில் தனியார் ஆக்கிரமித்துள்ள வனத்துறைப் பகுதியின் விஸ்தீரணம் சுமார் 20,900 ஹெக்டேர்கள் ஆகும்.

**தூத்துக்குடி ஒன்றியத்திலுள்ள பள்ளிகளுக்கு மதிய உணவு வழங்குதல்.**

41—வினா 13429—திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி ஒன்றியத்திலுள்ள பள்ளிகளுக்கு மதிய உணவு வழங்க ஒன்றியம் மூலம் வழங்கப்படும் 5 பைசா 1974ஆம் ஆண்டு முதல் 1979ஆம் ஆண்டு வரை அதன் செயலாளர்களுக்கு வழங்கப்படவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக வழங்க அரசு முன்வருமா?

விடை—

(அ) மற்றும் (ஆ) நிதிப் பற்றாக்குறை காரணமாக, தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம் அந்நிலுவைத் தொகைகளை வழங்க இயலவில்லை என ஊரக வளர்ச்சித்துறை இயக்குநர் தெரிவித்துள்ளார். உள்ளாட்சி மன்றங்கள் அத்தகைய நிலுவைத் தொகைகளை வழங்கத் தேவையில்லை என்றும் அரசு 20—12—1982 அன்று ஆணையிட்டுள்ளது.

**பள்ளிப்பட்டு வட்டத்திற்கு வட்ட வர்த்தக கூட்டுறவுச் சங்கம் அமைத்தல்.**

42—வினா 13629—திரு. பூ. மு. நரசிம்மன்: மாண்புமிகு கைத்தறி கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பள்ளிப்பட்டு வட்டத்திற்கு வட்ட வர்த்தக கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திருநெல்வேலி மாவட்டத்தில், நுகர்பொருள் வாணிபக் கழகம் வழங்கியுள்ள நெல்லை, அரிசியாக திருப்பிக் கொடுக்காத தனியார் அரிசி ஆலைகளின் எண்ணிக்கை.**

43—வினா 13710—திரு. இ. முத்துராமலிங்கம்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் எவ்வளவு தனியார் அரிசி ஆலைகள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் இருந்து வழங்கப்பட்ட நெல்லை இதுவரை அரிசியாக திருப்பி கொடுக்காமல் உள்ளன?

(ஆ) கொடுக்கப்பட்ட நெல்லின் மொத்த அளவு எவ்வளவு?

(இ) எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

விடை—

(அ) 9.

(ஆ) 6643, 140.300 மெட்ரிக் டன்கள்.

(இ) மேற்கண்ட ஒன்பது அரைவை முகவர்களில் அறு பேர் அவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையினை எதிர்த்து வழக்கு தொடர்ந்துள்ளனர். மீதமுள்ள மூன்று பேர்களிடமிருந்தும் வர வேண்டிய தொகையை வசூலிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**திருவில்லிப்புத்தூர் கூட்டுறவு பண்டகசாலை நிர்வாகிகள் மீது புகார்.**

44—வினா 13726—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கைத்தறி-கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகவை மாவட்டம், திருவில்லிப்புத்தூர் கூட்டுறவு பண்டகசாலை நிர்வாகக் குழு தலைவர் உறுப்பினர்கள் பொது மக்களுக்கு குடும்பக் கார்டுகளுக்கு வழங்க வேண்டிய சீனி முதலியவைகளில் முறைகேடு செய்து வருகின்றனர் என்று 1981ஆம் ஆண்டு பொது மக்களிடம் இருந்து புகார் மனு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், மேற்படி சங்க நிர்வாகிகள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

(இ) தொடர்ந்து, இச்சங்கம் முறைகேடுகளினால் நட்டத்தில் இயங்குவதால் பண்டக சாலை செயலிழந்து இருப்பது உண்மையா?

விடை—

(அ) திருவில்லிப்புத்தூர் கூட்டுறவு சிப்பந்திகள் மன்றம் என்ற பெயரில் கையெழுத்திடப்படாத மனு ஒன்று திருவில்லிபுத்தூர் துணை கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அலுவலகத்தில் 25—11—1981 அன்று பெறப்பட்டது.

(ஆ) உணவுப் பொருள் வழங்குதுறையானது திருவில்லிப்புத்தூர் கூட்டுறவு பண்டக சாலைத் தலைவர் மற்றும் அதன் நிர்வாக இயக்குநர்கள் மீது அத்தியாவசியப் பொருள் கட்டுப்பாடு சட்டத்தின் கீழ் வழக்கு தொடரப்பட்டு, தேவக்கோட்டை குற்றவியல் நீதி மன்றத்தில் பரிசீலனையில் உள்ளது. வழக்கு தொடரபட்டதின் விளைவாக மாவட்ட ஆட்சியாளருக்கு மேற்கூறிய பண்டகசாலைக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்கும் உரிமையை ரத்து செய்யுமாறு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதன்படி, மாவட்ட ஆட்சியாளர் உரிமையை ரத்து செய்துள்ளார். மேற்கூறிய இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியாளரின் ரத்தை ஆட்சேபித்து சங்கத்தின் தலைவர் உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்து, அமுல்படுத்துவதை நிறுத்தும் பொருட்டு, இடைக்கால தடை உத்தரவு வாங்கியுள்ளார். அதனால் மேற்கூறிய சங்கம் தற்போது அத்தியாவசியப் பொருட்களை குடும்ப அட்டை உள்ளவர்களுக்கு வழங்கி வருகின்றது.

(இ) குடும்ப அட்டை மூலம் வழங்கப்படும் பொருட்களைத் தவிர மற்ற வியாபாரங்களை சரிவர செய்யாமல் அந்த சங்கம் நட்டத்தில் நடைபெறுகிறது. அதனால் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அவர்கள் மேற்கூறிய சங்கத்தை மூடிவிடுவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராயும்படி சரக இணைப் பதிவாளருக்கு அறிவுரை வழங்கியுள்ளார். அதன் மீது சரக இணைப் பதிவாளர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

**ஊராட்சி வரிகளின் கேட்பு, நிலுவை பாக்கி பதிவேடுகளில் 1981–82 ஆண்டுக் கணக்குகள்.**

**45—வினா 13833—திரு. எஸ். என். இராமசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமக் கர்ணங்களால் எழுதப்பட்டு வந்த ஊராட்சி வரிகளின் கேட்பு, நிலுவை பாக்கி பதிவேடுகள் ஊராட்சி பகுதி நேர எழுத்தர்களால் எழுதப்பட்டு 1981–82ஆம் ஆண்டுக்கு கணக்குகள் முடிக்கப்பட்டதா?



(ஆ) அதற்கான ஊதியம் எந்த முறையில் நிர்ணயிக்கப்பட்டு வழங்கப்பட்டது?

(இ) மேற்குறித்த ஊதியம் குறித்து உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளதா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) ஊராட்சி வரி கேட்பு, நிலுவை, பாக்கி பதிவேடுகளை எழுதுவது பகுதி நேர எழுத்தர்களின் வேலையின் ஒரு பகுதியானதால் இது குறித்து அவர்களுக்கு தனி ஊதியம் ஏதும் வழங்கும் அவசியம் ஏற்படவில்லை. இருப்பினும், 29—7—1981 நாளிட்ட ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அரசாணை எண். 1350 (நிலை) அரசாணையில் ஊதியம் கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

1. 5,000-க்கும் அதிகமான மக்கள் தொகை உள்ள பஞ்சாயத்துக்களில் வேலை செய்வோருக்கு ரூபாய் 90 வரையறுத்த சம்பளமாகவும் மக்கள் தொகை 4,000-க்கு அதிகமாகவும் 5,000-க்கு குறைவாகவும் உள்ள பஞ்சாயத்துக்களில் ரூபாய் 75 வரையறுத்த சம்பளமாகவும் மக்கள் தொகை 3,000-க்கு அதிகமாகவும் 4,000-க்கு அதிகப்படாமலும் உள்ள இடங்களில் ரூபாய் 60 வரையறுத்த சம்பளமாகவும் மக்கள் தொகை 2,000-க்கு அதிகமாகவும் 3,000-க்கு உட்பட்டுள்ள இடங்களில் ரூபாய் 52·50 வரையறுத்த சம்பளமாகவும் மக்கள் தொகை 1,500-க்கு அதிகமாகவும் 2,000-க்கு மேற்படாமல் உள்ள இடங்களில் ரூபாய் 45 வரையறுத்த சம்பளமாகவும் மக்கள் தொகை 1,500-க்கும் அதற்குக் குறைவாகவும் உள்ள இடங்களுக்கு ரூபாய் 37·50 வரையறுத்த சம்பளமாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த சம்பளம் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து நிதியிலிருந்து கொடுக்கப்படுகிறது.

மேலும், 5,000-க்கும் அதிகமான மக்கள் தொகை உள்ள ஊராட்சியில் பகுதிநேர எழுத்தர் 3-க்கு மேற்பட்ட ஊராட்சிகளில் பணியாற்றக் கூடாது. அதாவது ஒரு பகுதி நேர எழுத்தருக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 300 மிகாத வரையில் சம்பளம் பெறக்கூடியவாறு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

[1984 ஏப்ரல் 16

அரசூர் பூச்சிக்காட்டில் நியாய விலைக் கடை.

46—வினா 13834—திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தாங்குளம் தொகுதி, அரசூர் பூச்சிக்காட்டில் நியாய விலைக் கடை ஒன்று திறக்க செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கடை திறக்கப்படும்.

விடை—

(அ) மற்றும் (ஆ) 6—7—1982-ல் நடைபெற்ற கிராமப் புறக்கடை திட்டத்தின் உயர்மட்டக் குழுவின் நடவடிக்கைகளின் படி வருவாய் கிராமத்திற்கொரு நியாய விலைக் கடைக்கு மேல் திறக்க இயலாது. பூச்சிக்காடு கிராமம், அரசூர் வருவாய் கிராமத்தில் உள்ள மதுரா கிராமமாகும். தற்போது அரசூரில் ஒரு விவசாய சேவை கூட்டுறவு சங்கமும் மற்றும் அரசூரின் மதுரா கிராமமான இடைச்சிவிளையில் உள்ள தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழக விற்பனை நிலையமும் செயல்பட்டு வருகின்றன. எனவே மதுரா கிராமமான அரசூர் மற்றும் பூச்சிக்காட்டில் மற்றொரு நியாயவிலைக் கடை திறக்க இயலாது.

திருநெல்வேலி சந்திப்பில் உள்ள பாரதியாரின் சிலைக்கு முன்னால் ரோட்டில் கடைகள் கட்டி ஆக்கிரமிப்பு செய்துள்ளதை அகற்றுதல்.

47—வினா 13836—திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி சந்திப்பில் உள்ள பாரதியாரின் சிலைக்கு முன்னால் ரோட்டில் கடைகள் கட்டி ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களை அகற்றி ரோட்டை போக்குவரத்துக்கு வசதியாக ஆக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது மேற்கொள்ளப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி சந்திப்பில் பாரதியார் சிலைக்கு முன்புறம் சாலையில் இருந்து ஆக்கிரமிப்புகள் யாவும் 8—7—1982-இல் அகற்றப்பட்டுவிட்டன.



1984 ஏப்ரல் 16]

சேலம் மாவட்டம் மேட்டூரில் துணைச் சிறைச்சாலை அமைத்தல்.

48—வினா 13849—திரு. செ. செம்மலை : மாண்புமிகு சட்டம்—தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மேட்டூரில் துணைச் சிறைச்சாலை (Sub-Jail) அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

ஆம். மேட்டூரில் ஒரு துணைச் சிறைச்சாலை அமைப்பதற்கு நிலம் ஒதுக்கீடு செய்யுமாறு சேலம் மாவட்ட ஆட்சியாளர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். நிலம் ஒதுக்கீடு செய்த பின்னர், பொதுப் பணித்துறையிடமிருந்து திட்ட மதிப்பீடு மற்றும் வரை படங்கள் பெறப்பட்டு அரசு பரிசீலித்து மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும்.

பத்து ஆண்டு பணி முடிந்த உதவிப் பேராசிரியரை பேராசிரியராக்குதல்.

49—வினா 13917—திரு. மு. ஜான் வின்சென்ட் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1981ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1ஆம் நாளுக்குப் பிறகு 10 ஆண்டு பணி முடித்த உதவிப் பேராசிரியரை பேராசிரியராக்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

பரிசீலனை முடிந்து அரசு ஆணை நிலை எண் 2593, நாள் 24—11—1982-ல் ஆணை வெளியிடப்பட்டுவிட்டது.

காஞ்சிக் கோயில் அரிசன காலனியாகிய அவிநாசிலிங்கம் நகர், ஆர். கே. வி. நகர் ஆகிய பகுதிகளிலுள்ள மக்களுக்கு இருக்கும் சுடுகாட்டை முழுமையாக ஒதுக்குதல்.

50—வினா 14113—திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நல அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை வட்டம், காஞ்சிக் கோவில் அரிசன காலனியாகிய அவிநாசிலிங்க நகர், ஆர். கே. வி. நகர் ஆகிய பகுதிகளிலுள்ள மக்களுக்கு இருந்த சுடுகாட்டை பக்கத்து பூமிக்காரர் ஆக்கிரமத்துக் கொண்டது உண்மையா?

(ஆ) மாற்று இடம் அவர்களுக்கு சுடுகாட்டிற்கு ஒதுக்கப் பட்டுள்ளதா?

[1984 ஏப்ரல் 16

விடை—

(அ) மற்றும் (ஆ) பெரியார் மாவட்டம் பெருந்துறை வட்டம், காஞ்சிக் கோவில் கிராமம் ச. எண். 336 புறம்போக்கில் அவிநாசிலிங்கபுரம், ஆர். கே. வி. நகர் ஆகிய பகுதி ஆதி திராவிடர்கள் மயானமாக பயன்படுத்தி வந்தனர். அதில் பக்கத்து பட்டாதாரர்கள் சோளம் சாகுபடி செய்து ஆக்கிரமிப்பு செய்திருந்தனர். தற்போது ஆக்கிரமிப்பை அகற்றி மயானம் முழுமையாக சம்பந்தப்பட்ட ஆதி திராவிட மக்களது உபயோகத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

### கோட்டூர் யூனியன் அலுவலகம் அருகில் முள்ளியாற்றில் வண்டிப் பாலம் கட்டும் திட்டம்.

51—வினா 14161—திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், கோட்டூர் யூனியன் அலுவலகம் அருகில் முள்ளியாற்றில் வண்டிப்பாலம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் திட்ட மதிப்பீடு என்ன?

(இ) எப்பொழுது கட்டப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இவ்வினாக்களுக்கு இடமில்லை.

### கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை டீன் உபயோகத்திற்கு கார் வாங்குதல்.

52—வினா 14215—திரு. கு. ரமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை டீன் அவர்களின் உபயோகத்திற்கு ஒரு கார் வாங்கிக்கொள்ள அரசு அனுமதி அளித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்பொழுது வாங்கப்பட்டது? அதற்கு செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு?



1984 ஏப்ரல் 16]

விடை—

(அ) ஆம். அரசு ஆணை எண் 449, சுகாதாரம், நாள் 17-3-1981 மற்றும் அரசு ஆணை எண். 1338, சுகாதாரம், நாள் 21—7—1981-ல் கோவை மருத்துவக் கல்லூரி முதல்வரின் உபயோகத்திற்காக ஒரு அம்பாசிடர் கார் வாங்க அனுமதிக்கப்பட்டது.

(ஆ) மேற்படி கார் 24—6—1982 அன்று டெலிவரி எடுக்கப்பட்டு தற்பொழுது உபயோகிக்கப்பட்டு வருகிறது. கார் வாங்கியதற்கு அரசு செலவிட்ட மொத்தத் தொகை ரூபாய் 68,394.64 ஆகும். (இதில் போக்குவரத்து செலவுக்கான தொகை ரூபாய் 3,975.91 அடங்கும்.)

### THE PREVALANCE OF LEPROSY DURING THE LAST FIVE YEARS.

53—வினா 14331—திரு. ப. வெங்கடசுப்ரமணியம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(a) The prevalance of Leprosy in the State of Tamil Nadu during the last 5 years Districtwise, and

(b) The steps taken by the Government to reduce this disease.

விடை—

இதுபற்றிய விவர அறிக்கை கீழே கொடுக்கப்பெற்றுள்ளது:—

விவர அறிக்கை.

தமிழகத்தில் தொழுநோயின் இருப்பு 1977ஆம் ஆண்டு 1,000 மக்கட் தொகைக்கு 20.4-ல் இருந்து 1981ஆம் ஆண்டு 1,000 மக்கட் தொகைக்கு 14.3 ஆகக் குறைந்துள்ளது. நோயாளிகளின் எண்ணிக்கையை காட்டும் மாவட்ட வாரியான புள்ளி விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:—

ஆயிரம் மக்கள் தொகைக்கு தொழு நோயாளிகளின் இருப்பு.

| மாவட்டம். | | 1977 | 1978 | 1979 | 1980 | 1981 |
|---|---|---|---|---|---|---|
| தென் ஆற்காடு | .. | 33.8 | 23.0 | 22.4 | 21.4 | 18.4 |
| வட ஆற்காடு | .. | 21.7 | 23.0 | 22.0 | 20.7 | 17.5 |
| செங்கல்பட்டு | .. | 22.05 | 25.0 | 24.5 | 19.1 | 16.8 |
| சேலம் | .. | 34.1 | 27.0 | 26.3 | 25.2 | 22.3 |

ஆயிரம் மக்கள் தொகைக்கு தொழு நோய்களின் இருப்பு—தொடர்ச்சி.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கோவை | .. | 8.4 | 11.9 | 11.4 | 5.6 | 5.6 |
| திருச்சிராப்பள்ளி | .. | 19.04 | 15.8 | 13.6 | 12.8 | 11.2 |
| தஞ்சாவூர் | .. | 20.6 | 25.2 | 22.2 | 17.3 | 13.7 |
| மதுரை | .. | 15.4 | 19.0 | 17.5 | 17.1 | 14.9 |
| இராமநாதபுரம் | .. | 19.33 | 19.2 | 18.9 | 13.6 | 13.9 |
| திருநெல்வேலி | .. | 12.09 | 12.0 | 11.5 | 10.9 | 10.8 |
| கன்னியாகுமரி | .. | 7.29 | 6.5 | 6.3 | 5.1 | 5.8 |
| தர்மபுரி | .. | 20.8 | 18.0 | 15.7 | 14.8 | 10.6 |
| புதுக்கோட்டை | .. | 16.1 | 15.0 | 14.8 | 14.9 | 14.8 |
| பெரியார் | .. | .. | .. | .. | 16.7 | 16.4 |
| மொத்தம் | .. | 20.4 | 18.5 | 15.5 | 15.0 | 14.3 |

தற்சமயம் ' டாப்சோன் ' என்ற மருந்து தொழு நோயாளிகளுக்கு அளிக்கப்பட்டு வருகின்றது. ஆனால் கவனக் குறைவாலும், தொடர் சிகிச்சை எடுக்காததாலும், விட்டு விட்டு இந்த மருந்தினை தொழு நோயாளிகள் சாப்பிடுவதால் தொழு நோய்க் கிருமிகள் சாவதற்குப் பதிலாக, இம்மருந்தினை எதிர்க்கும் சக்தியினைப் பெறுகின்றன. எனவே பல மருந்துக் கலவையின் மூலம் தொழு நோயினை குணப்படுத்த வட ஆற்காடு மாவட்டத்தில் புதிய மருந்து அளிக்கும் மாதிரித் திட்டம் (Multi-drug Reginan) ஒன்று துவங்கப்பட உள்ளது.

**போக்குவரத்துக் கழகப் பேருந்துகளுக்கு மாற்று டயர், ஜாக்கி போன்ற உபகரணங்கள்.**

54—வினா 14393—திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு போக்குவரத்துக் கழகங்களில் உள்ள பேருந்துகளுக்கு மாற்று டயர், ஜாக்கி போன்ற உபகரணங்கள் இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதை நீக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

விடை—

(அ) அரசு போக்குவரத்துக் கழகங்களில் எல்லா வெளியூர் பேருந்துகளிலும் மாற்று டயர், ஜாக்கி போன்ற உபகரணங்கள் இருக்கின்றன. குறைந்த தூரம் செல்லும் நகரப் பேருந்து



களில் மட்டும் இந்த வசதி செய்யப்படவில்லை. இந்த பேருந்துகள் செல்லும் வழித் தடங்களில் பணிமனைகள் அமைத்திருப்பதால் இப்பேருந்துகளுக்கு பழுது ஏற்பட்டால் உடனே அருகாமையிலுள்ள பணிமனைகளிலிருந்து தகுந்த பராமரிப்பு பெற்றுக் கொள்ள அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**ஆதி திராவிட நலத்துறையில் விடுதி மாணவர்களுக்குப் பலவகை செலவுக்காக வழங்கும் பணத்தை உயர்த்தும் செயற்குறிப்பு.**

55—வினா 14458—திரு. எல். இளைய பெருமாள் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆதி திராவிட நலத்துறையில் விடுதி மாணவர்களுக்கு அரசு ஒரு மாதத்திற்கு ரூபாய் 2 வீதம் வழங்கப்படுவதை உயர்த்திக் கொடுக்கும் உத்தேசம் உண்டா ?

விடை—

ஆதி திராவிடர் நலத் துறையில் விடுதி மாணவர்களுக்கு அரசு ஒரு மாதத்திற்கு ரூபாய் 2 வீதம் பலவகை செலவிற்காக வழங்குவதை உயர்த்துவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம் கப்பலூருக்குக் குடி நீர் வழங்க மேலும் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி.**

56—வினா 14511—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கப்பலூருக்கு குடிநீர் வழங்க தற்போதுள்ள தரைநில நீர்த்தேக்கத் தொட்டி (Ground Level Water Tank) போதுமானதாக இல்லாததால் மேலும் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) ஆம். திருமங்கலம் உள்ளாட்சி ஒன்றியத்திலுள்ள கப்பலூர் கிராமத்திற்கு ஒரு தரை மட்ட நீர்த்தேக்கத் தொட்டியும் இரண்டு அடிக் குழாய்களும் உள்ளன.

[1984 ஏப்ரல் 16

அங்குள்ள மக்களுக்கு போதுமான அளவு குடிநீர் வசதி இல்லாததால் ஒரு மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கான கருத்துருவை ஊராட்சி ஒன்றிய ஆணையர், மதுரை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாகப் பொறியாளருக்கு அனுப்பியுள்ளார். வேலையை உடன் துவக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**ஆசிரியர் குறை தீர்க்கக் குழுக்கள் அமைத்தல்.**

57—வினா 14622—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆசிரியர்களின் குறை தீர்க்கக் குழுக்கள் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

ஆசிரியர்களின் குறைகளை களைய கல்வி மாவட்டம், வருவாய் மாவட்டம் மற்றும் மாநில அளவிலான குழுக்கள் அமைக்கப்பட்டு அரசாணை நிலை எண் 1690, கல்வி அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை, நாள் 28–7–1982-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

**ஆற்காடு நகரில் இரண்டாம் நிலை நூலகத்திற்குக் கட்டடம்.**

58—வினா 14652—திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு நகரில் இரண்டாம் நிலை நூலகத்திற்கு கட்டடம் அமைக்கும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது எவ்வளவு தொகையில் அமைக்கப்படும்.

விடை—

(அ) இதற்கான ஆணை 10–6–1982-ல் வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) ரூபாய் 3.57 இலட்சம் செலவில் நூலகக் கட்டிடம் கட்டுவதற்கு 30–8–1982 அன்று அடிக்கல் நாட்டப்பெற்றுஉள்ளது.



1984 ஏப்ரல் 16]

**பெருந்துறை வட்டம், எக்கட்டாம்பாளையம் கிராமம் தட்டாங்காட்டுப் புதூரில் சுடுகாடு ஆக்கிரமிப்பு.**

59—வினா 14662—திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை வட்டம், எக்கட்டாம்பாளையம் கிராமம் தட்டாங்காட்டுப் புதூரில் சுடுகாட்டை தனிப்பட்டவர்கள் ஆக்கிரமித்து விட்டார்கள் என்று அரசிற்கு புகார் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) பெருந்துறை வட்டம், எக்கட்டாம்பாளையம் கிராமம் தட்டாங்காட்டுப்புதூரில் பொது மக்களால் சுமார் 25 அல்லது 30 ஆண்டுக் காலமாக மயானமாகப் பயன்படுத்தப்பட்டு வந்த இடத்தின் மேற்புறமுள்ள இடத்தை சமீபத்தில் கிரயம் பெற்ற சென்னியங்கிரிவலசு குழந்தைசாமி கவுண்டர் என்பவரின் மகன் சின்னசாமிக் கவுண்டர் என்பவர் தனது பட்டா நிலம் புல எண் 378/1க்குச் செல்வதற்காக மயானத்தின் வழியாக ஒரு பாதை அமைக்க ஏற்பாடுகளைச் செய்து வந்தார். மேற்படி மயானம் உள்ள இடம் சென்னிமலை காங்கேயம் சாலையில் புல எண் 373/1ல் பட்டா பூமியில் அமைந்துள்ளது. கிராமப் புலச் சுவடியிலும், ஆர். எஸ். ஆரிலும், உட்பிரிவுகள் தனியாக ஏதுமின்றி பிளான் மார்க் மட்டுமே செய்யப்பட்டுள்ள நிலையில் மயானம் இருந்து வருகிறது.

(ஆ) இந்த இடத்தை 17–3–1982 அன்று சென்னிமலை நில வருவாய் ஆய்வாளரும், சென்னிமலை பராமரிப்பு நில அளவரும், நேரடித் தணிக்கை செய்து, திரு. சின்னசாமிக் கவுண்டர் என்பவர் செய்யவிருந்த ஆக்கிரமிப்பைத் தடுத்து, மயானம் அடங்கிய பகுதியின் எல்லையை அளந்து, மயானத்திற்குரிய வேலிகள் முன் போலவே ஊர் மக்களால் மீண்டும் அமைக்கப்பட்டுவிட்டது. எனவே, தற்பொழுது மேற்படி மயானத்தில் எவ்வித ஆக்கிரமிப்பும் இல்லை.

**மதுரை மாவட்டத்தில் கைத்தறி நெசவாளர்களுக்குச் சிறு வீடுகள் கட்டித்தரும் திட்டம்.**

60—வினா 14703—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கைத்தறி நெசவாளர்களுக்கு சிறு வீடு கட்டித்தரும் திட்டத்தில், மதுரை மாவட்டத்தில் 1981–82-ல் எத்தனை வீடுகள், எந்தெந்த கிராமத்தில் கட்டப்பட்டது ?

[1984 ஏப்ரல் 16

விடை—

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தின் கீழ், மதுரை மாவட்டத்தில் 1981–82-ல் கட்டப்பட்டுள்ள வீடுகள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு :—

| வரிசை எண். | சங்கத்தின் பெயர். | கிராமத்தின் பெயர். | வீடுகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| 1. | மதுரை மகாலக்ஷ்மி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம். | திருப்பரங்குன்றம் திருநகர் பஞ்சாயத்து, மதுரை தாலூகா. | 80 |
| 2. | ஒட்டஞ்சத்திரம் கற்பகத்தரு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம். | கூத்தம்பூண்டி, பழனி தாலூகா, மதுரை மாவட்டம். | 30 |
| | | மொத்தம் .. | 110 |

அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகள் சொந்த மாவட்டத்தில் பணி புரிய தடை.

61—வினா 14731—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளை சொந்த மாவட்டத்தில் பணிபுரியக் கூடாது என அரசு ஏதேனும் தடை விதித்துள்ளதா ?

விடை—

முன்னாள் அரசிதழ் பதிவு பெற்ற அரசு அலுவலர்களை (தற்போதைய 'ஏ' மற்றும் 'பி' பிரிவு அலுவலர்களை) சொந்த மாவட்டத்தில் பணி புரிய அனுமதிக்கக் கூடாது என்று தடை விதிக்கவில்லை.

2. தமிழ் நாடு அரசு அலுவலர்கள் நடத்தை விதிகள் 1973, விதி எண் 7 (14) (பி)யின்படி, பொதுவாக, ஓர் அரசு அலுவலர், அவர் பணிபுரியும் வருவாய் மாவட்டத்தை தவிர, பிறவற்றில் அசையாத சொத்துக்கள் வாங்க அனுமதிக்கப்படுவர். ஆனால்,



1984 ஏப்ரல் 16]

அவரது அசையாச் சொத்து உள்ள மாவட்டத்திற்கு அவருக்கு மாற்றல் ஏற்பட்டால் சம்பந்தப்பட்ட அரசு அலுவலர் துணை விதி 17-ன் படி சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு இது பற்றி அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். ஏனெனில், சம்பந்தப்பட்ட அதிகாரி அவரை வேறு மாவட்டத்திற்கு (அதாவது அவருக்கு அசையாச் சொத்தில்லாத மாவட்டத்திற்கு) மாற்றக்கூடும். பொது நன்மையை முன்னிட்டு அந்த அதிகாரியை வேறு மாவட்டத்திற்கு மாற்ற இயலாவிடில், சம்பந்தப்பட்ட அதிகாரி அந்த அசையாச் சொத்தை தனது உடமையிலிருந்து விலக்க வேண்டும், (Divert himself of such property)

நீலகிரி மாவட்டம் தேயிலை கூட்டுறவு தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் தேயிலையை நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் விநியோகித்தல்.

62—வினா 14738—திரு. கே. உச்சி : மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டத்தில் உள்ள பதினொன்று தேயிலை கூட்டுறவுத் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் பதப்படுத்தப்பட்ட தேயிலையை நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக மாநிலம் முழுவதும் விநியோகம் செய்ய அரசு முன் வருமா ?

விடை—

தமிழ் நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் கூட்டுறவுத் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் பதப்படுத்தப்பட்ட தேயிலை விநியோகிக்கும் உத்தேசம் அரசுக்கு இல்லை.

திருப்பத்தூரில் சப்டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட், முன்சிப் கோர்ட் உள்ள இடத்தில் கழிப்பிடம் சிறுநீர் கழிக்கக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு.

63—வினா 14756—திரு ப. சுந்தரம் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூரில் உள்ள சப்-டிவிஷனல் மாஜிஸ்டிரேட் கோர்ட், முன்சீப் கோர்ட் உள்ள இடத்தில் கழிப்பிடம், சிறு நீர் கழிக்க ஒரு கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 3—7—82 நாளிட்ட அரசு ஆணை (நிலை) எண். 1705-ல் வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூரில் உள்ள மாவட்ட முன்சீப் நீதிமன்ற வளாகத்தில் நீதிமன்றப் பணியாளர்களுக்கு கழிப்பிடம், சிறுநீர் கழிக்க கழிவறை கட்டுவதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டது. மாவட்ட முன்சீப் நீதிமன்றம் மற்றும் உட்கோட்ட குற்றவியல் நடுவர் நீதிமன்றம் ஆகியவைகள் ஒரே வளாகத்தில் அமைந்திருப்பதால் கட்டப்படவுள்ள கழிவறை மற்றும் சிறுநீர் கழிப்பிடம் ஆகிய வசதிகளை இரு நீதிமன்றப் பணியாளர்களும் பயன்படுத்தலாம்.

## திருநெல்வேலி மாவட்டம் குருவிகுளம் ஒன்றியம் திருவேங்கடம் பேரூராட்சிக்குக் குடிநீர் வழங்கும் திட்டம்.

64—வினா 14791— திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம் குருவிகுளம் ஒன்றியத்திலுள்ள திருவேங்கடம் பேரூராட்சிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் எந்நிலையிலுள்ளது ?

விடை—

திருவேங்கடம் பேரூராட்சி மற்றும் அதைச் சுற்றியுள்ள நிலத்தடி நீர், நிசபநதி, கல் ஓடை மற்றும் திருவேங்கடத்திலிருந்து 12 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள வெம்பக்கோட்டை நீர்த்தேக்கம் ஆகியவற்றை ஆதாரமாகக்கொண்டு ரூ. 1,25,000 மதிப்பீட்டில் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

## பழனி நகரில் கலப்படத் தடைச் சட்டத்தின்கீழ் வழக்குகள் பதிவு.

65—வினா 15004—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி நகரில் கடந்த மூன்று ஆண்டுகளில் கலப்படத் தடைச் சட்டத்தின் கீழ் எவ்வளவு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன ?

(ஆ) எத்தனை வழக்குகளில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?



விடை—

(அ) மற்றும் (ஆ) பழனி நகராட்சிப் பகுதியில் கடந்த மூன்று ஆண்டுகளில் உணவு கலப்பட தடுப்புச் சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட உணவு மாதிரிகளின் எண்ணிக்கை, பதிவு செய்யப்பட்ட வழக்குகள், விதிக்கப்பட்ட தண்டனை பற்றிய விவரங்கள் வருமாறு :—

| ஆண்டு | உணவு மாதிரிகள் எடுக்கப்பட்டவைகளின் எண்ணிக்கை. | கலப்படம் எனக் கண்டு பிடிக்கப்பட்டவை. | அபராதமும் தண்டனையும் பெற்றவைகள். | தள்ளுபடி செய்யப்பட்டவை. | நிலுவை. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1979–80 | 144 | 17 | 4 | 13 | .. |
| 1980–81 | 137 | 12 | 1 | 2 | 9 |
| 1981–82 | 121 | 20 | .. | .. | 20 |
| | 402 | 49 | 5 | 15 | 29 |

## பழைய ஆயக்குடி சட்டப்பாறை சாலையைத் தார்ச் சாலையாக மாற்றுதல்.

66—வினா 15020—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி வட்டம் பழைய ஆயக்குடி சட்டப்பாறை சாலையை தார்ச் சாலையாக மாற்றித்தரக் கோரி மதுரை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு விண்ணப்பம் எதுவும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) விண்ணப்பம் ஏதும் வரவில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

### சங்கரன்கோவில் வட்டம் தனியார் மூலம் ஆசிரியைப் பயிற்சிப் பள்ளி துவக்குதல்.

67—வினா 15302—திரு. பி. துரைராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில் வட்டத்திலிருந்து தனியார் எவரேனும் ஆசிரியைப் பயிற்சிப் பள்ளி துவக்க அரசிடம் அனுமதி கோரியுள்ளனரா ?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்த முடிவு என்ன ?

விடை—

(அ) ஆம்,

(ஆ) இக்கோரிக்கையை ஏற்பதிற்கில்லை என முடிவெடுக்கப்பட்டது.

### சங்கரன்கோவில் ஒன்றியம் வீரசிகாமணி கிராமம் குடிநீர்த் தொட்டி

68—வினா 15309—திரு. பி. துரைராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில் ஒன்றியம் வீரசிகாமணி கிராமத்திலுள்ள குடிநீர்த் தொட்டி செயலற்ற நிலையிலிருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் விரைவில் செயல்பட அரசு துரித நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) மற்றும் (ஆ) சங்கரன்கோயில் ஊராட்சி ஒன்றியம் வீரசிகாமணி கிராமத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து அனைத்து வார்டுகளிலுள்ள தெருக்களுக்கு குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய ரூ. 62,000 மதிப்பீடு தயார் செய்து அதற்கான பொறியியல் ஒப்புறுதி 6—5—1982-ல் பெறப்பட்டுள்ளது. மேலும் ஊராட்சியிலிருந்து இவ்வேலைக்கு நிர்வாக ஒப்புறுதியும் அளிக்கப்பட்டுள்ளது. தற்போது இந்த ஊராட்சியில் நிதிநிலை பற்றாக்குறையினால் சங்கரன்கோயில் ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து முன்பணமாக வழங்கி மேற்படி வேலையை செய்ய டெண்டர் கோரி வேலை துவக்கப்படும்,





### கம்பம் தொகுதி ஹைவேஸ் நகரியம்.

69—வினா 15433—திரு. ஆர். டி. கோபாலன் : மாண்புமிகு உள்ளாட்சி அமைச்சர் கீழ்க்கண்ட , வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கம்பம் தொகுதியிலுள்ள ''ஹைவேஸ்'' நகரியம் ஏற்கனவே ஊராட்சியாக இருந்தது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் அதை நகரியமாக மாற்றியதன் அவசியம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ஹைவேஸ் பகுதி ஒரு தொழில் நிறைந்த பகுதியாதலால் அது நகரியமாக்கப்பட்டது.

### குளித்தலை அரசு மருத்துவமனையில் பிரசவ விடுதி அமைத்தல்.

70—வினா 15444—திரு. இரா., கருப்பையா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை அரசு மருத்துவமனையில் பத்து படுக்கைகள் கொண்ட பிரசவ விடுதி அமைக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது நிறைவேற்றப்படும் ?

விடை—

(அ) தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### குளித்தலை தாலூகா தோகமலை அரசு மருத்துவமனையில் படுக்கை வசதி.

71—வினா 15446—திரு இரா. கருப்பையா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் குளித்தலை தாலூகா தோகமலையில் உள்ள அரசு மருத்துவமனையில் பத்து படுக்கைகள் அமைத்துத்தரும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

[1984 ஏப்ரல் 16

விடை—

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம் குளித்தலை தாலூகா தோகைமலையில் உள்ள அரசு மருந்தகத்தில் 6 படுக்கைகள் கொண்ட வார்டு மகப்பேறு அறை, அறுவைச் சிகிச்சை அரங்கு மற்றும் சமையல் அறையுடன் கட்ட அரசு ஆணை எண் 368, சுகாதாரம், நாள் 2–3–70-இல் உத்திரவிடப் பட்டு கட்டிடமும் கட்டி முடியும் தருவாயில் உள்ளது.

தமிழ்நாடு அரசு கடைநிலை ஊழியர்கள் மாநில சங்க வெள்ளி விழா.

72—வினா 15566—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசின் அனுமதி பெறாமல் தமிழ்நாடு அரசு கடைநிலை ஊழியர்கள் மாநிலச் சங்கம் வெள்ளி விழா என்ற பெயரில் நன்கொடை வசூல் செய்து வருவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், இதன் நிமித்தம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

விடை—

(அ) தமிழ்நாடு அரசு கடைநிலை ஊழியர்கள் மாநிலச் சங்கம் வெள்ளிவிழா என்ற பெயரில் நன்கொடை வசூல் செய்யவில்லை என்று தெரிவித்துள்ளது. உறுப்பினர்கள் சந்தா பணத்தைக் கொண்டு வெள்ளி விழாவும் 17-வது மாநில மாநாடும் நடத்தப் பெற்றதாக தமிழ்நாடு கடைநிலை ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

(ஆ) நிதி வசூல் செய்யாததால் நடவடிக்கை எடுக்கும் அவசியம் ஏற்படவில்லை.

சென்னை கொத்தவால்சாவடி கன்னிகா பரமேஸ்வரி கோவில் திருப்பணி செய்தல்.

73—வினா 15570—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை கொத்தவால்சாவடி கன்னிகா பரமேஸ்வரி கோவில் திருப்பணி செய்யும் உத்தேசம் உள்ளதா ?

விடை—

இக்கோயிலுக்கான திருப்பணி வேலைகள் முடிக்கப்பட்டு 18—5—82 அன்று ஆயிரம் சங்கு நன்னீராட்டு விழாவும் நடைபெற்று முடிவு பெற்றுள்ளது.



1984 ஏப்ரல் 16]

மதுரை அழகர் கோவிலுக்கும் பழமுதிர்ச் சோலைக்கும் இழுவை இரயில்.

74—வினா 15575—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை அழகர் கோயிலுக்கும் பழமுதிர்ச் சோலைக்கும் இழுவை இரயில் விடும் உத்தேசம் உள்ளதா ?

விடை—

மதுரை அழகர் கோயிலுக்கும் பழமுதிர்ச் சோலைக்கும் ''மினிபஸ்'' மற்றும் 'ஜீப்' ஆகியவற்றின் மூலம் முருகன் கோவில் மற்றும் நூபுரகங்கை தீர்த்தம் வரை சென்று வர பக்தர்களுக்கு ஆலய நிர்வாகம் வசதி செய்து இருப்பதால் இந்த இரண்டு இடங்களுக்கும் மின் இழுவை இரயில் விடும் உத்தேசம் இல்லை.

வேளச்சேரியில் சில பகுதிகளில் தெரு விளக்குகள் அமைத்தல்.

75—வினா 15643—திரு. பம்மல் நல்லதம்பி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை 148-வது வட்டம் வேளச்சேரியில் உள்ள குடியேற்றப்பகுதிகளாக பிருந்தாவன் நகர், தண்டீஸ்வரர் நகர், டான்சி நகர் ஆகிய பகுதிகளில் தெரு விளக்குகள் அமைக்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) (1982–83) நிதி ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யாததினால் பிருந்தாவன் நகரில் தெரு விளக்குகள் போடுவதற்கான கருத்துரு இல்லை. அடுத்த நிதி ஆண்டில் நிதி நிலைமையைப் பொருத்தும் இந்நகரினை பொதுவானது என்று அறிவிப்பு செய்தது உட்பட்டு இந்நகரில் தெரு விளக்குகள் போடுவது பற்றி பரிசீலிக்கப்படும். தண்டீஸ்வரர் நகர், டான்சி நகர் ஆகியவைகளின் தெரு விளக்குகள் போடுவது இந்த நடப்பு நிதியாண்டிற்குள் முடிவடையும்.

[1984 ஏப்ரல் 16

**பொள்ளாச்சியில் போக்குவரத்துச் சாலைகளின் இருமருங்கிலும் மஞ்சி நிரப்பப்படுவதைத் தடுக்க நடவடிக்கை.**

76—வினா 15702—திரு. எம். வி. இரத்தினம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி பகுதியில் போக்குவரத்து சாலைகளில் இரு பக்கங்களிலும் மஞ்சி (தேங்காய் மட்டைக்கழிவு) நிரப்பப் படும் இடமாக ஆக்கப்பட்டு வருவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) பரந்து கிடக்கும் நெடுஞ்சாலைத்துறை சாலைகளில் இரவு நேரங்களில் லாரிகளில் கழிவு மஞ்சி நார்களை கொட்டுவதால் எங்கிருந்து வருகிறது, யார் கொட்டுகிறார்கள் என்ற விபரம் அறிய முடியவில்லை. மேலும் மஞ்சி நார்களை தீயிட்டுக் கொளுத்தி விடுகிறார்கள். இதன் விளைவாக நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான மரங்களும் எரிந்து சாம்பலாகி விட்டன. அருகிலுள்ள மஞ்சிநார் நிறுவனங்கள் தமக்கும் இந்நிகழ்ச்சிக்கும் சம்பந்தமில்லை என்று கூறிவிடுகின்றனர். இந்த மஞ்சிநார் இன்ன நிறுவனத்தில் இருந்து வந்தது என உறுதியிட்டு கூற போதிய ஆதாரம் இன்மையால் குறிப்பிட்ட நிறுவனங்களின் மீது உறுதியாக நடவடிக்கை எடுக்க இயலவில்லை. எனவே மஞ்சி நார் கொட்டுவதை கண்காணிக்க நெடுஞ்சாலைத்துறையைச் சேர்ந்த இளம் பொறியாளர், உதவி பொறியாளர், சாலை ஆய்வாளர் மற்றும் பணியாளர்களுக்கு போதிய உத்திரவுகள் இடப்பட்டுள்ளன. கோவை மாவட்ட ஆட்சியாளர் ஊரக வளர்ச்சி இயக்குநர் மற்றும் காவல்துறை ஆய்வாளர் ஆகியோருக்கும் இதைத் தடுக்கும் பொருட்டு தக்க நடவடிக்கைகளை எடுக்குமாறு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

**வேடசந்தூர் பகுதி ராசகோபாலபுரத்தில் பால் கறவையாளர்களிலிருந்து பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க கோரிக்கை.**

77—வினா 15708—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், வேடசந்தூர் வட்டம், வேடசந்தூர் பகுதி ராசகோபாலபுரத்தில் பால் கறவையாளர்களிடமிருந்து அங்கு ஒரு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம்



1984 ஏப்ரல் 16]

அமைக்கக் கோரி 1981 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் மதுரை துணைப்பதிவாளர் (பால் வளம்) அலுவலகத்திற்கு கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) இது குறித்து எடுக்கப்பெற்ற நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மதுரை மாவட்டம், வேடசந்தூர் வட்டம், ராசகோபாலபுரத்தில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று அமைக்க; திண்டுக்கல் பால் சேகரிப்புக் குழுத் தலைவர் அனுப்பிய பிரேரணையின் அடிப்படையில் திரு.கா. யூசுப் அவர்கள் முதன்மை அமைப்பாளராக நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் மேற்படி சங்கத்தில் சேர்ந்து பயன்பெற விரும்பும் பால் உற்பத்தியாளர்களிடம் இருந்து ஆரம்பப் பங்குத் தொகையை வசூலித்து வங்கியில் செலுத்திவிட்டு விபரம் தெரிவிக்கக் கோரப்பட்டிருக்கிறார். ஆரம்பப் பங்குத் தொகை செலுத்திய விபரம் தெரிவிக்கப்பட்டவுடன் சங்கம் பதிவு செய்யப்பட்டு துவக்கப்படும்.

**வேடசந்தூர் வட்டத்தில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை.**

78—வினா 15729—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் வட்டத்தில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் எத்தனை இயங்குகிறது ?

(ஆ) எந்தெந்த இடங்களில் ?

(இ) அரசு செய்யும் உதவி என்ன ?

விடை—

(அ) வேடசந்தூர் வட்டத்தில் 51 பால் உற்பத்தியாளர் கள் கூட்டுறவு சங்கங்களும், 4 கூட்டுறவுப் பால் வழங்கும் சங்கங்களும் இயங்கி வருகின்றன.

(ஆ) தென்னம்பட்டி, வெள்ளபொம்மன் பட்டி, வடமதுரை, கொப்பம்பட்டி ஆகிய 4 இடங்களில் பால் வழங்கும் சங்கங்களும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள 51 இடங்களில் பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களும் இயங்கிவருகின்றன:—

1. அழகாபுரி.
2. வள்ளிப்பட்டி.
3. கம்பூர்.

[1984 ஏப்ரல் 16

4. ஆர். வெள்ளோடு.
5. பல்லநத்தம்.
6. சேர்வைகாரன் பட்டி.
7. டி. கூடலூர்.
8. கே. ஆணைப்பட்டி.
9. வெள்ளப்பாறை.
10. வி. அம்மாபட்டி.
11. வி. புளியம்பட்டி.
12. கே. ராமநாதபுரம்.
13. உசிலம்பட்டி.
14. எஸ். தேவநாயக்கன்பட்டி.
15. நத்தப்பட்டி.
16. வெள்ளை கவுண்டனூர்.
17. வரதராஜபுரம்.
18. பாகநத்தம்.
19. நல்லயன்னார்கோட்டை.
20. பண்டிதகாரனூர்.
21. வாணிக்கரை.
22. புதுவாணிக்கரை.
23. பி. கோம்பை.
24. நாகக்கோணத்தூர்.
25. சி. அம்மாபட்டி.
26. முதலியார்பட்டி.
27. புதுரோடு.
28. அம்மையப்ப கவுண்டன் புதூர்.
29. ஸ்ரீராமபுரம்.
30. ஏ. கோவில்பட்டி.
31. லந்தக்கோட்டை.
32. குவக்காப்பட்டி.
33. எஸ். புதூர்.
34. வெள்ளம்பட்டி.
35. பாரைப்பட்டி.
36. குப்பமுத்துப்பட்டி.
37. பண்ணைப்பட்டி.
38. சொக்கலிங்கபுரம்.



1984 ஏப்ரல் 16]

39. தாசரிபட்டி.
40. விருதலைப்பட்டி.
41. ரெங்கநாதபுரம்.
42. தல்வார்பட்டி.
43. காசிபாளையம்.
44. தேவிநாயக்கன்பட்டி.
45. மினுக்கம்பட்டி.
46. ஒட்டநாகம்பட்டி.
47. கோடாங்கிபட்டி.
48. மாரம்பாடி.
49. முத்தனன்கோட்டை.
50. கலனம்புட்டி.
51. வேடசந்தூர்.

(இ) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 50 சதவீத மான்ய உதவியுடன் பால் குவளைகள் மற்றும் மூன்று சக்கர வண்டிகள் சங்கங்களுக்கு வழங்க ஒப்பளிப்பு அளிக்கப் பட்டுள்ளது. சங்க உறுப்பினர்கள் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கறவை மாட்டுக் கடன் பெறவும் ஆவன செய்யப் பட்டுள்ளது.

### சேந்தமங்கலம் நகரத்தில் நெடுஞ்சாலைத் துறை மூலம் பயணியர் விடுதி அமைத்தல்.

**79—வினா 15764—திரு. சி. சிவப்பிரகாசம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் நகரத்தில் நெடுஞ்சாலைத் துறை மூலம் பயணியர் விடுதி அமைக்க அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

[1984 ஏப்ரல் 16

சேந்தமங்கலம் தொகுதியில் ஆதிதிராவிட மக்களுக்குக் கொடுக்கப்பட்ட வீட்டு மனைப்பட்டா.

80—வினா 15765—திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் தொகுதிக்குட்பட்ட நாமகிரிபேட்டை; புதுசத்திரம், கொல்லிமலை, சேந்தமங்கலம் ஆகிய ஒன்றியங்களில் 1981-82ல் ஆதி திராவிட மக்களுக்கு கொடுக்கப்பட்ட வீட்டுமனைப்பட்டா எவ்வளவு?

விடை—

சேந்தமங்கலம் தொகுதிக்குட்பட்ட நாமகிரிப்பேட்டை, புதுசத்திரம், கொல்லிமலை, சேந்தமங்கலம் ஆகிய ஒன்றியங்களில் 1981-82.ல் ஆதி திராவிட மக்களுக்கு கொடுக்கப்பட்ட வீட்டுமனைப்பட்டா மொத்தம் 253.

மதுராந்தகம் தொகுதியில் கையும்புகளின் எண்ணிக்கை.

81—வினா 15803—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் தொகுதியில் எத்தனை கைபம்புகள் உள்ளன?

(ஆ) அவற்றில் எத்தனை செயல்படுகின்றன?

விடை—

(அ) மதுராந்தகம் தொகுதியில் 75 கைபம்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

(ஆ) அவற்றில் 66 கை பம்புகள் நல்ல நிலையில் இயங்கி வருகின்றன.

திண்டிவனம் சட்டமன்ற தொகுதியில் ரெட்டணை கிராமத்தில் காவல் நிலையம் அமைத்தல்.

82—வினா 15897—திரு. கே. எம். தங்கமணி: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டிவனம் சட்டமன்ற தொகுதி ரெட்டணை கிராமத்தில் காவல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?



1984 ஏப்ரல் 16]

விடை—

திண்டிவனம் சட்டமன்ற தொகுதியில் உள்ள ரெட்டணை கிராமத்தில் புதிய காவல் நிலையம் அமைப்பதற்கான கருத்து ஏதும் தற்பொழுது இல்லை.

கோவை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மின்கட்டண உயர்வினால் கிடைத்த அதிக வருமானம்.

83—வினா 15973—திரு. கு. ரமணி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு மின் கட்டணம் ஜூன் மாதத்திலிருந்து உயர்த்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் முன்பிருந்த கட்டணம், உயர்த்தப்பட்டுள்ள கட்டண விகிதங்கள் என்ன?

(இ) இக்கட்டண உயர்வால் மாநகராட்சிக்கு வருடத்தில் அதிக வருமானம் எவ்வளவு வரும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) முன்பிருந்த கட்டணம் யூனிட் 1க்கு 40 பைசா, உயர்த்தப்பட்டுள்ள கட்டண விகிதம் யூனிட் 1க்கு 50 பைசா.

(இ) அதிகபட்சமாக, ஆண்டுக்கு, ஒரு கோடி ரூபாய் வருமானம் வரும் என ஆணையர் தெரிவித்துள்ளார்.

பெரியார் மாவட்டத்தில் தனியார் நடத்தும் கலைக் கல்லூரிகளின் எண்ணிக்கை.

84—வினா 16001—திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டத்தில் தனியார்கள் நடத்தும் கலைக் கல்லூரிகள் எத்தனை உள்ளன?

(ஆ) அரசுக் கலைக் கல்லூரி ஏதாவது உள்ளதா?

விடை—

(அ) ஐந்து.

கோபி கலைக் கல்லூரி, கோபி.
சிக்கைய நாய்க்கர் கல்லூரி, ஈரோடு.
ஈரோடு கலைக் கல்லூரி, ஈரோடு.
ஸ்ரீவாசவி கலைக் கல்லூரி, ஈரோடு.
வெள்ளாளர் கலைக் கல்லூரி (மகளிர்), ஈரோடு.

(ஆ) இல்லை.

**திருநெல்வேலி தாலுகா திருப்பணிக்கரிசல்குளம் கிராமத்திற்குக் குடிநீர் வழங்கும் திட்டம்.**

85—வினா 16024—திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி தாலூகா திருப்பணிக்கரிசல்குளம் கிராமத்திற்குக் குடிநீர் வழங்கும் திட்டத்துக்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(ஆ) அந்தத் திட்டம் முறையாகச் செயல்படுகிறதா ?

(இ) அங்குள்ள ஆதி திராவிட மக்களுக்கு குடிநீர் வழங்கப் படுகிறதா ?

விடை—

(அ) திருநெல்வேலி வட்டத்திலுள்ள திருப்பணிக்கரிசல் குளம் என்னும் கிராமக் குடிநீர்த் திட்டத்திற்காக ரூபாய் 1.21 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டது.

(ஆ) ஆம்.

(இ) ஆம்.

**மதுராந்தகம் நகராட்சியில் புதிய பள்ளிக் கட்டிடங்கள் சாலைகள் மேம்பாடு செய்ய அரசின் நிதி உதவி.**

86—வினா 16033—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் நகராட்சியில் புதிய பள்ளிக்கட்டிடங்கள், சாலைகள் மேம்பாடு செய்ய அரசின் நிதி உதவி கோரப்பட்டு உள்ளதா ?



(ஆ) ஆதி திராவிடர் குடியிருப்புகளின் சாலை வசதி மேம்படுத்த அரசு நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளதா ?

விடை—

(அ) ஆம். 1982–83ஆம் ஆண்டில் மதுராந்தகம் நகராட்சிக்கு அரசு உதவியுடன் 3 ஆரம்பப் பள்ளி கட்டிடங்கள் கட்ட அனுமதி அளிக்கப்பட்டு முதல் தவணை மானியத் தொகை ரூபாய் 76,500 வழங்கப்பட்டுள்ளது. 1982–83ஆம் ஆண்டில் சாலைகள் மேம்பாட்டிற்காக நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை.

(ஆ) ஆம். ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியான பெரிய காலனி சாலைகள் மேம்பாட்டிற்கு 27–4–1981-ல் அரசு ரூபாய் 50,000 மான்யம் வழங்கியுள்ளது.

**பழனியில் இருந்து கொடைக்கானல் செல்லும் தார்ச் சாலையை அகலப் படுத்தி செப்பனிட அரசின் நடவடிக்கை.**

87—வினா 16103—திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பழனியில் இருந்து கோடைக்கானல் செல்லும் தார்ச் சாலையை அகலப்படுத்தி செப்பனிட அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

1978–79ஆம் ஆண்டில் பழனியில் இருந்து கொடைக்கானல்
செல்லும் தார்ச் சாலையைப் பராமரிக்க தேசிய நெடுஞ்சாலைத்
துறை வசமிருந்த நெடுஞ்சாலைத் துறைவசம் ஒப்படைக்கப்
பட்டது. மேற்படி சாலை மாவட்ட பெருஞ்சாலையாக நெடுஞ்
சாலைத் துறையினரால் நிதி நிலைக்கேற்ப பராமரிக்கப்பட்டு
வருகிறது. மேற்படி சாலையை இரு வழிப்பாதையாக அகலப்
படுத்தி தார் போட சுமார் ரூபாய் 120 இலட்சம் தேவைப்படும்.
இப்பணி எவ்வித அங்கீகரிக்கப்பட்ட திட்டத்திலும் இடம்
பெறவில்லை. மேலும் மேற்படி சாலையில் வாகனப் போக்கு
வரத்தின் நெரிச்சல் (Intensity of traffic) அதிகம் இல்லாததால்
சாலையை உடனடியாக இரு வழிப்பாதையாக அகலப்
படுத்த தேவையில்லை எனக் கருதப்படுகிறது.

### திருவண்ணாமலை நகராட்சி சார்பில் திரை அரங்கம் கட்டும் செயற் குறிப்பு.

88—வினா 16174—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு திருவண்ணாமலை நகரத்தில் நகராட்சி சார்பில் திரை அரங்கம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம், எனில், அதன் விவரம் யாது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

### திருப்பூர் நகரில் சுற்றுலா சார்பில் தங்கும் விடுதி கட்டுதல்.

89—வினா 16191—திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு செய்தி அறநிலைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகரில் சுற்றுலாத் துறை சார்பில் தங்கும் விடுதி கட்டும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

விடை—

திருப்பூர் நகரில் சுற்றுலாத் துறை சார்பில் தங்கும் விடுதி கட்டும் உத்தேசம் அரசிடம் இல்லை.

### அரசு ரப்பர் தோட்டங்களில் ரப்பர் திருட்டைத் தடுக்க எடுத்துள்ள நடவடிக்கை.

90—வினா 16222—திரு. டி. மணி : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுத் தோட்டங்களில் நடைபெற்றுவரும் ரப்பர் திருட்டைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

(ஆ) கீரிப்பாறை அரசு ரப்பர் தோட்டத்திலிருந்து திருடப்பட்ட ரப்பர் ஸ்கிராப்பையும், திருடிய நபர்களையும் அதே ரப்பர்தோட்டக் காவலர்கள் 30—6—1982-ல் பிடித்துள்ளது உண்மையா ?

(இ) ஆம் எனில் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?





விடை—

(அ) கோட்ட வன அலுவலர், வனச் சரகங்கள் மற்றும்
வனவர்கள் ஆகியோர் திடீர் ஆய்வு நடத்தி ரப்பர் திருட்டை
கண்டுபிடித்து, குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுத்து வரு
கிறார்கள். மேலும் 23—8—1982 அன்று நடைபெற்ற அரசு
ரப்பர் தோட்டத்திற்கான ஆளுகைக் குழுவின் முடிவிற்கிணங்க,
அரசு ரப்பர் தோட்டத்தில் ரப்பர் திருட்டை தடுப்பதற்கு ஒரு
பறக்கும் படை அமைக்க ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) மற்றும் (இ).—வினாவில் குறிப்பிட்டுள்ளபடி
30—6—1982-ல் திருட்டு ஏதும் நடைபெறவில்லை. ஆனால்
30—5—1982-ல் காளிகேசம் பிரிவிலுள்ள பால் வெட்டும் தொழி
லாளர்கள் ரப்பர் திருடியது கண்டு பிடிக்கப்பட்டது. திருடிய
வர்கள், நிலை ஆணைப்படி தற்காலிக வேலை நீக்கம் செய்யப்
பட்டு பின்னர் வேலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் மீது நேரடி விசாரணை நடத்தப்பட்டு மேற்
கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இறுதி ஆணை
இன்னும் வழங்கப்படவில்லை.

### மதுராந்தகம் நகராட்சி சின்ன காலனிக்கு செல்ல பாதை அமைத்தல்.

91—வினா 16255—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகம் நகராட்சி சின்ன காலனிக்கு செல்ல சரியான பாதை வசதி இல்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் பாதை அமைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

விடை—

(அ) சரியான பாதை வசதி உண்டு.

(ஆ) பாதை வசதி உள்ளதால் இக்கேள்விக்கு இடமில்லை.

[1984 ஏப்ரல் 16

ஏற்காடு நகரில் தங்குவதற்குச் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் குறைந்த கட்டணத்தில் அறைகள்.

92—வினா 16276—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு நகரை கண்டு களிக்கவரும் ஏழை எளியவர் களுக்கென குறைந்த கட்டணத்தில் சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தின் மூலம் தங்குவதற்கு அறைகள் கட்டிவிடப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

விடை—

(அ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் ஏற்காட்டில் இளைஞர் விடுதிகட்டப்பட்டுள்ளது. அந்த விடுதி குறைந்த கட்டணத்தில் இளைஞர் மற்றும் குறைந்த வருவாய் உள்ள ஏழை எளிய சுற்றுலாப் பயணிகளுக்கு வாடகைக்காக விடப்பட்டு வருகிறது.

(ஆ) ஏற்காட்டில் 2—8—1981-ல் இளைஞர் விடுதி தொடங்கி வைக்கப்பட்டது. இவ்விடுதி 30 படுக்கை வசதிகள் கொண்டது. ஒரு நபருக்கு பருவ காலத்தில் ரூ. 7.50 என்றும், மற்ற காலத்தில் ரூ. 5 என்றும் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

குருங்குளம் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையில் காகித ஆலை துவங்கும் திட்டம்.

93—வினா 16278—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குருங்குளம் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையில் காகித ஆலை துவங்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ? எப்பொழுது முதல் இயங்க ஆரம்பிக்கும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



1984 ஏப்ரல் 16]

தஞ்சை மருத்துவக் கல்லூரி—மருத்துவ மனையில் உள் நோயாளிகளுக்கான கட்டிலுடன் கூடிய படுக்கைகளின் எண்ணிக்கை.

94—வினா 16282—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தற்போது உள் நோயாளிகளுக்கான கட்டிலுடன் கூடிய படுக்கைகள் எவ்வளவு ?

(ஆ) 15—7—1982 தேதியில் மொத்தம் உள் நோயாளிகள் எவ்வளவு ?

விடை—

(அ) 618

(ஆ) 640

சோழன் பேருந்துகளில் டிக்கட் இல்லாமல் பயணம் செய்தவர்களின் எண்ணிக்கை.

95—வினா 16283—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் சோழன் பேருந்துகளில் 1982ஆம் ஆண்டு ஜனவரி முதல் தேதியிலிருந்து ஜூலை 31-ம் தேதி முடிய டிக்கெட் இல்லாமல் பயணம் செய்தவர்கள் எத்தனை பேர்கள் ?

விடை—

3,485 பேர்கள்.

தஞ்சை மாவட்டத்தில் உள்ள அன்பு இல்லங்கள்.

96—வினா 16284—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் எத்தனை அன்பு இல்லங்கள் உள்ளன ?

(ஆ) ஒவ்வொரு அன்பு இல்லத்திலும் எத்தனை பேர்கள் உள்ளனர் ?

விடை—

(அ) மற்றும் (ஆ): தஞ்சை மாவட்டத்தில் திருக்கோயில்களின் சார்பில் மொத்தம் ஆறு அன்பு இல்லங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. திருக்கோயிலின் பெயரும் அன்பு இல்லங்களில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | திருக்கோயிலின் பெயர். | அன்பு இல்லங்களில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| | (1) | (2) |
| 1 | அருள்மிகு சுவாமிநாத சுவாமி திருக்கோயில், சுவாமிமலை .. .. .. | 62 |
| 2 | அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், எட்டிக்குடி .. .. .. | 29 |
| 3 | அருள்மிகு அக்னீஸ்வர சுவாமி திருக்கோயில், திருப்புகலூர் .. .. .. | 7 |
| 4 | அருள்மிகு தியாகராச சுவாமி திருக்கோயில், திருவாரூர் .. .. .. | 32 |
| 5 | அருள்மிகு பிரசன்னமாரியம்மன் திருக்கோயில், மயிலாடுதுறை .. .. .. | 15 |
| 6 | அருள்மிகு பவஔஷதீஸ்வரர் திருக்கோயில், திருத்துறைப்பூண்டி .. .. .. | 18 |

திருச்சி மத்திய சிறையில் பணிபுரியும் சிறைக் காவலர்களுக்குக் குடியிருப்புக் கட்டும் திட்டம்.

97—வினா 16286—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மத்திய சிறையில் பணிபுரியும் சிறைக் காவலர்களுக்குக் குடியிருப்புக் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், குடியிருப்புகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

(இ) சிறைக் காவலர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?



விடை—

(அ) ஆம்.
(ஆ) 98.
(இ) 152.

தமிழ் நாட்டில் 1981-82ஆம் ஆண்டு சர்க்கரை உற்பத்தி விவரம்.

98—வினா 16294—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1981–82ஆம் ஆண்டு சர்க்கரை உற்பத்தி எவ்வளவு ?

(ஆ) அதற்கு முந்தின ஆண்டை விட உற்பத்தி அதிகரித்துள்ளதா ?

விடை—

(அ) 30—9—1982 உடன் முடிவடைந்த 1981—82ஆம் சர்க்கரை ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரையின் அளவு 7,55,070 டன்களாகும்.

*(ஆ) ஆம். முந்திய ஆண்டைவிட (1981—82 ஆம் சர்க்கரை ஆண்டில்) 3,24,872 டன்கள் சர்க்கரை அதிகப்படியாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

## 2. அறிவிப்புகள்.

### (அ) உறுப்பினர் திரு.ப. நெடுமாறன் கைது செய்யப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு, மதுரை தெற்கு மாவட்டக் காவல் துறை கண்காணிப்பாளர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி 14—4—1984 அன்று வரப் பெற்றுள்ளது.

" I have the honour to inform you that Thiru P. Nedumaran, M.L.A., of Tamil Nadu Kamaraj Congress Party has been arrested on 13th April 1984 at 18-30 hrs. in B4 Police Station Crime No. 793/84 under section 151 Cr.P.C. read with Section 7 (1) (A) Criminal Law Amendment Act by Inspector B-North Circle near Head Post Office Madurai Town while he was going to picket Pandian Express Train at Railway Station with his party condemning the attack of Tamilians at Sri lanka."

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக் குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[பேரவைத் தலைவர்]

[1984 ஏப்ரல் 16

'I ............I have the honour to inform you that Thiru P. Nedumaran, M.L.A., concerned in B4 Police Station Crime No. 793/84 under Section 151 Cr.P.C. read with Section 7 (1) (A) Criminal Law Amendment Act was remanded to Judicial Custody by Chief Judicial Magistrate, Madurai, and was lodged at Central Prison, Madurai on 14th April 1984 at 13.45 Hrs.".

திரு. ரா. கிருஷ்ணன் : பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரி விஷயமாக நான் ஏற்கனவே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முறையாக வர வேண்டும்.

திரு. ப. பொன்னுரங்கம் : பாய்ன்ட் ஆப் ஆர்டர், சார். நமக்கு சுப்ரீம் அத்தாரிட்டி நம் மன்றம்தான். அப்படியிருக்கும்போது இந்த மன்றத்தைச் சேர்ந்த ஒரு உறுப்பினர் தரம் தாழ்த்தி நடத்தப்படுவது இந்த மன்றத்தையே அவமதிப்பதாகும். ஒரே காரியத்தில் ஈடுபட்டார்கள் என்பதற்காக இந்த மன்றத்தைச் சேர்ந்த உறுப்பினர்..........................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வரப்போகிற ஒத்திவைப்புத் தீர்மானத்தில் நீங்கள் பேசுங்கள். அல்லது வேறு யாரையாவது பேசச் சொல்லுங்கள். ஆனால், இது பாய்ன்ட் ஆப் ஆர்டரில் வராது.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, பாய்ன்ட் ஆப் ஆர்டர், சேலம் மாவட்டம் இடைப்பாடி நகரத்திற்குப் பக்கத்திலே.................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கவன ஈர்ப்புத் தீர்மானம் வந்திருக்கிறது. பதில் வந்த பிறகு வைக்கப்படும்.

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்

### மதுரையில் கைது செய்யப்பெற்ற பலரும் விடுதலையான பின்பும் உறுப்பினர் திரு. ப. நெடுமாறன் விடுதலை செய்யப்படாதது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம், ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன், திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், திருவாளர்கள் ஏ. சாகுல் ஹமீது, அ. ரகுமான்கான், என். வரதராஜன், கே. ஆர். சுந்தரம்,



[பேரவைத் தலைவர்]

1984 ஏப்ரல் 16]

இரா. கருப்பையா, என். ஏ. பூங்காவனம், மு. அப்பாதுரை ஆகியோர் " அண்மையில் மதுரையில் மாண்புமிகு திரு முத்து, எம்.எல்.சி. மற்றும் திரு. ப.நெடுமாறன், எம்.எல்.ஏ. உட்பட சுமார் 100-க்கு மேற்பட்டவர் தடுப்பு நடவடிக்கை எனக் கூறி கைது செய்யப்பட்டுள்ளதாலும், திரு. முத்து மற்றும் சிலர் மட்டும் விடுதலை செய்யப்பட்டு, திரு, பா. நெடுமாறன் எம்.எல்.ஏ. வகையராக்கள் விடுதலை செய்யாது காவலில் வைக்கப்பட்டு உள்ளதாலும் இதனை ஆட்சேபித்து திரு. கிள்ளிவளவன் தலைமையில் இன்று (16—4—1984) சென்னையில் மறியல் நடைபெறுவதாலும் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் " என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-30)

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, ஒரு விளக்கம். நான்தான் இதுகுறித்து முதல்ல் கொடுத்தேன். 7.30 மணிக்கே எழுதி, முதலில் ஆள் அனுப்பி 8 மணிக்குக் கொடுத்து விட்டேன். அதற்குப் பிறகுதான் மற்றவர்கள் கொடுத்தார்கள். ஆனால் பெயர்களை வரிசைப்படுத்துவதில் என் பெயர் பின்னாலே வருகிறது. (குறுக்கீடு) திரு. என். வரதராசன் அவர்கள் முதலில் பேசுவதைப் பற்றி எனக்கு ஆட்சேபணையில்லை. ஆனால் நான்தான் முதலில் கொடுத்தேன்.. என் பெயர் பின்னாலே வந்திருக்கிறது என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அலுவலகக் குறிப்பின்படி திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் அவர்களின் பெயர் தான் முதலில் கொடுத்ததாகக் குறிக்கப்பட்டுள்ளது. அலுவலகத்தில் உள்ளவர்களுக்கு கட்சிப் பாகுபாடு கிடையாது. அறிவிப்பு வருகிறபோது நேரத்தைக் குறிக்கிறார்கள். நான் 8.30 மணிக்குத்தான் வந்தேன். ஆகவே, இதிலே ஒன்றும் பிரச்னையில்லை.

திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானம், இதற்குப் பின்னால் இருக்கும் பிரச்னை, தமிழ்நாட்டு மக்களின் ஆழ்ந்த கவலைக்கு உட்பட்டதாகும். கடந்த மூன்று வாரங்களுக்கு மேலாக இலங்கையிலே மீண்டும் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுகிற காட்சி தமிழ் நாட்டில் உள்ள கோடான கோடி மக்களுக்கு மிக்க வேதனையை

உண்டாக்கி இருக்கிறது. அங்கே இலங்கையிலே ஒரு இனப்
படுகொலை நடைபெறுகிறது என்ற உணர்வு தமிழ் மக்களின்
உள்ளத்திலே எழுந்து இருக்கிறது. இப்படிப்பட்ட கொடுங்
கோன்மையை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வன்மையாகக்
கண்டித்துள்ளது. தேசத்தில் உள்ள அனைத்து ஜனநாயக சக்தி
களும் அதை வன்மையாகக் கண்டித்துள்ளன.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்றைக்கு வட்டமேசை மாநாட்டை ஒத்திவைத்து விட்டு,
சமரசப் பேச்சுக்களை தூக்கி எறிந்து விட்டு, படுகொலையை
நடத்திக் கொண்டு, 100 இந்தியா வந்தாலும் நான் சமாளிப்பேன்
என்று திமிரோடு ஜெயவர்த்தனே கூட்டம் பேசிக்கொண்டு
இருக்கிறது. இந்தக் கொடுங்கோன்மைக்கு மத்தியிலே, அந்தத்
தமிழ் மக்கள் வாழும் பகுதியிலே, ஆசியாவிலேயே முக்கியமான
யுத்த கேந்திரமான பகுதியாக இருக்கும் அந்த திருகோணமலை
யைக் கிட்டத்தட்ட அமெரிக்க ஏகாதிபத்தியம் விழுங்கிக்
கொண்டு இருக்கிற நிலையில், அதனுடைய ஆதரவோடு
பிற்போக்காளர்கள் இலங்கையில் கொட்டம் அடிக்கிறார்கள்.
தமிழ் மக்களை நாசப்படுத்துகிறார்கள்.
இலங்கைக்கும் எதிரியாக திகழ்கிறார்கள். இந்தியாவுக்கும்
கரமான விளைவுகளை எதிர்நோக்கியிருக்கிறோம். ஆகவே நாம் பயங்
யான விளைவுகளை எதிர்நோக்கி இருக்கிறோம். கொடுமை
நிலையில் நாம் நம்முடைய உணர்வுகளை வெளிப்படுத்த வேண்டி
யிருக்கிறது. இந்தக் கொடுங்கோன்மையை எதிர்த்து தமிழ்
மக்கள் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்த வேண்டியிருக்கிறது.
இதற்கு ஒரு சரியான தீர்வு காண நாம் நிர்ப்பந்தம் கொண்டு
வர வேண்டி இருக்கிறது. அப்படிப்பட்ட நிர்ப்பந்தத்தை
ஏற்படுத்த ஜனநாயக வழியில் இன்றைக்கு நாம் செயல்பட
வேண்டியிருக்கிறது. அந்த வகையில்தான் இன்றைக்கு மதுரை
திருநகரில் மதுரையின் முன்னாள் மேயர் திரு. முத்தண்ணன்
அவர்கள் பாண்டியன் எக்ஸ்பிரஸ் ரயிலை மறிக்க புறப்படுகிறார்.
அதன் மூலம் தன் உணர்வுகளை வெளிப்படுத்த அவர்
முயற்சித்தார். அதை நான் வரவேற்கிறேன். அவர்கள் கைது
செய்யப்படுகிறார்கள். கைது செய்யப்பட்டவர் உடனே
விடுதலை செய்யப்படுகிறார். விடுதலை செய்யப்பட்டதையும்
நாம் வரவேற்கிறோம். ஆனால் அதே அடிப்படையில் அவரோடு
அந்த மறியலில் ஈடுபட்ட தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ்
தலைவர், நமது சக சட்டமன்ற உறுப்பினர் திரு. நெடுமாறன்
அவர்களும், அவர்களைச் சேர்ந்த 100 பேர்களையும் கைது
செய்து சிறையில் அடைக்கப்பட்டு இருக்கிறார்கள். எனக்கு
ஆச்சரியமாக இருக்கிறது. திரு. முத்து அண்ணன் அவர்கள்
கைது செய்யப்பட்ட அதே காரணத்திற்காகத்தான் மாண்புமிகு
உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்களும் கைது செய்யப்
பட்டார்கள். ஆனால் திரு. முத்து அவர்கள் விடுதலை செய்யப்





பட்டு, திரு. நெடுமாறன் அவர்கள் விடுதலை செய்யப்படாமல்
இருப்பதற்கு என்ன காரணம்? ஏன் இந்த பாகுபாடு என்று
ஆச்சரியப்பட வேண்டியிருக்கிறது. ஒருகால் திரு. நெடுமாறன்
அவர்கள் எதிர் வரிசையில் இருந்து அரசை எதிர்த்து பல
கொள்கைகளில் கடுமையாக விமரிசிக்கிறார் என்ற காழ்ப்பு
உணர்ச்சியால் கைது செய்து அவரை உள்ளே
வைத்திருக்கிறார்களோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது.

கடந்த 9-ந் தேதி மாண்புமிகு முதலமைச்சர் காவல் துறை
மானியக் கோரிக்கையின் மீது இங்கே போர்முழக்கம் செய்தார்கள்.
ஜெயவர்த்தனாவைக் கண்டனம் செய்தார்கள். அவர்களுடைய
உணர்வோடு நாங்களும் ஒன்றி நிற்கிறோம். ஆனால் அப்படிப்
பட்ட உணர்வுக்கு மாறாக திரு. நெடுமாறன் அவர்களை கைது
செய்து இன்றைக்கு உள்ளே வைத்திருக்கிறீர்களே, அது ஏன்?
அதனால்தான் இது அரசியல் காழ்ப்பு உணர்ச்சியா என்ற கேள்வி
இயற்கையாக எழுகிறது. இதற்கு அமைச்சரவர்கள் பதில்
சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இன்றைக்கு இந்தக் கொடுங்கோன்மையை எதிர்த்து,
தமிழ்நாட்டில் இருக்கிற கோடானுகோடி தமிழ் மக்களின் உணர்வு
களுக்கு ஒரு வாய்க்காலை நாம் கண்டு பிடித்தாக வேண்டும்.
இன்றைக்கும் நாளைக்கும் அதற்குப் பின்னாலும் எதிர்க்கட்சிகள்
இதுபற்றி வாதாடுகின்ற ஒரு காலம் இன்றைக்கு வந்திருக்கிறது.
தமிழ் மக்களின் ஜனநாயக உணர்வு பொங்கி எழுகின்ற ஒரு
காலம் வந்திருக்கிறது. தமிழக அரசும் இந்திய அரசும் இந்த
உணர்வுகளை மதித்து, நம்முடைய உணர்வுகளை மையமாக
வைத்து, இந்தப் பிரச்சனையை அணுகாமல், இந்தப்
பிரச்சனையை தீர்க்க நடவடிக்கை எடுக்காமல் வேறு வகையிலே
நடவடிக்கை எடுக்க முயற்சி செய்வது ஒரு தவறான போக்காக
அமைந்துவிடும். திரு. நெடுமாறன் அவர்கள் கைது செய்யப்
பட்டு, சிறையில் அடைக்கப்பட்டிருப்பதால் அதனுடைய
எதிரொலிப்பு சென்னையிலும் இருக்கிறது. அவர்கள் சிறையில்
அடைக்கப்பட்டிருப்பதற்குக் கண்டனம் தெரிவித்து, அந்தக்
கட்சிச் செயலாளர் திரு. கிள்ளிவளவன் அவர்களும் மற்றும்
பலரும் உண்ணாவிரதப் போராட்டம் நடத்த கோட்டைக்கு
ஊர்வலம் வருவதாக அறிவித்திருக்கிறார்கள். அதனால் கைது
செய்யப்பட்டிருக்கிற எல்லோரையும் உடனடியாக விடுதலை
செய்ய வேண்டும். இந்தப் பிரச்னையில் நம்முடைய எதிர்ப்பைக்
காட்டுகின்ற வகையில் அனைத்துக் கட்சிகளையும் ஒன்று சேர்க்க
வேண்டிய பொறுப்பு இந்த அரசுக்கு இருக்கிறது என்பதை
எடுத்துச் சொல்லி, இந்தப் பிரச்னைக்கு ஒரு தீர்வு காண மேலும்
பல பிரச்னைகள் பற்றி விரிவாக விவாதிக்க வேண்டியிருப்பதால்
அவையின் இன்றைய இதர அலுவல்களை ஒத்தி வைத்து.இதுபற்றி
விவாதிக்க வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவரவர்களே, இலங்கையிலே நிராயுத
பாணியான தமிழர்கள்மீது இராணுவம் வெறிகொண்டு தாக்கி,
தமிழர்களை கொன்று குவித்து வருகின்ற நிலைமைக்கு வந்த
பிறகும் மத்திய அரசு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க
வில்லை என்பதை உணர்த்த, மத்திய அரசுக்கு தமிழ் மக்களுடைய
உணர்வுகளை உணர்த்துவதற்காக மதுரையில் மாண்புமிகு திரு.
முத்து அண்ணன், எம்.எல்.சி. அவர்கள் பாண்டியன் எக்ஸ்பிரஸ்
இரயில்முன் மறியல் செய்வதாக அறிவித்திருந்தார்கள். ஆனால்
13—4—1984 அன்று இரயில் மறியல் செய்வதற்கு திரு. முத்து
அண்ணன், எம்.எல்.சி. அவர்கள் புறப்படுகின்ற நேரத்தில் கைது
செய்யப்பட்டார்கள். மறியலுக்கு அவர்கள் வரவில்லை
என்பதைத் தெரிந்து, அவர்களுடைய ஆணையை நிறைவேற்ற
வேண்டுமென்ற எண்ணத்தில் திரு. நெடுமாறன் அவர்கள் அந்த
இரயில் மறியலை செய்ய சென்றபோது அவரைக் கைது செய்து,
அவரோடு சென்ற நூற்றுக் கணக்கானவர்களைக் கைது செய்து
சிறையில் அடைத்திருக்கிறார்கள். அன்றைக்கு இரவில் மதுரை
திரு. முத்து அண்ணன் அவர்களைப் பார்த்து, நீங்கள் விடுதலை
செய்யப்பட்டிருக்கிறீர்கள், மற்றவர்களைக் கைது செய்திருக்
கிறோம் என்று அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு
திரு.முத்து அண்ணன் அவர்கள் என்னை மட்டும் விடுதலை செய்
வது நியாயமில்லை; திரு. நெடுமாறன் அவர்களையும் மற்றவர்
களையும் விடுதலை செய்ய வேண்டுமென்று குரல் எழுப்பியிருக்
கிறார்கள். அதற்கு அதிகாரிகள் நீங்கள் அறிவிப்பு செய்த பிறகு
போராட்டத்திலே ஈடுபட்டீர்கள். ஆனால் நெடுமாறன் அறிவிக்
காமலே போராட்டத்திற்கு ஈடுபட்டதால் கைது செய்திருக்
கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

திரு. நெடுமாறன் அவர்களை விடுதலை செய்யவில்லை என்
றால் நான் மறியல் செய்வேன் என்று திரு. முத்து அண்ணன்
அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். நீங்கள் மறியல்செய்தால் கைது
செய்வோம் என்றுசொல்லி, அதிகாரிகள் கைதுசெய்திருக்கிறார்கள்
ஆனால் என்ன காரணத்தாலோ திரு. முத்து அண்ணன் அவர்கள்
விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள் ; திரு. நெடுமாறன்
அவர்கள் 15 நாள் ரிமாண்டில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். இது
நாம் இலங்கைத் தமிழ் மக்கள்மீது காட்டுகின்ற உணர்வுகளைக்
குறைத்து மதிப்பிடுவதாக அமையும் என்று நாங்கள் நம்புகிறோம்.
நாணயத்தில் தமிழ் பெயர் இருக்கும் ஒரே நாடு இலங்கைதான்.
நாணயத்தில் தமிழ்எழுத்து இருக்கக்கூடாது என்ற எண்ணத்தோடு
சிங்கள வெறியர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். இதுபோன்ற
பல்வேறு காரணங்களுக்காக நம்முடைய உணர்வுகளை வெளிப்
படுத்துகின்ற அடிப்படையில் திரு. நெடுமாறன் அவர்கள்
போராட்டத்தில் ஈடுபட்டார்கள். அவர்களைக் கைது செய்து,
சிறையில் அடைத்திருக்கிறார்கள். அவர்களை உடனடியாக
விடுதலை செய்யவேண்டும். இந்தப் பிரச்சனை சம்பந்தமாக





மேலும் பல்வேறு விஷயங்கள் பற்றி விவாதிக்க வேண்டியிருப்பதால் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு திரு.நெடுமாறன் அவர்களும், முன்னாள் மேயர் மாண்புமிகு திரு. முத்து அவர்களும் இலங்கையில் மீண்டும் கொடுமைகள் நடப்பதைக் கண்டித்து போராட்டத்தில் ஈடுபட்டார்கள். இலங்கையில் கொடுமைகள் நடக்கின்றன; கொலைகள் நடைபெறுகின்றன. தமிழ் மக்களை கொன்று குவித்துக் கொண்டிருக்கிறார்கள். இதுபற்றி நாம் பேசாமல் விட்டுவிட்டால் தமிழ் இனத்தையே அழித்து விடுவார்கள் என்பதை எடுத்துச் சொல்லி, மத்திய அரசுக்கு நம்முடைய உணர்வுகளைத் தெரிவிக்க ஒரு அறிவிப்பைக் கொடுத்து, நியாயமான முறையிலே, ஜனநாயக உணர்வோடு பாண்டியன் எக்ஸ்பிரஸ் இரயில் முன் மறியல் செய்வதாக அறிவித்திருந்தார்கள்.

(முற்பகல் 10-40)

மறியல் செய்வதாக அறிவித்திருந்தும், மாலை 6 மணிவரையில் நானும் நெடுமாறனும் பேசிக் கொண்டிருந்தோம். அப்போது அவர் மாலை வாங்கிக் கொண்டு வந்தார்கள். இந்த மறியலை முத்து அவர்கள் செய்யப் போகிறார், நான் அவரை வழி அனுப்புவதற்காக மாலை போட்டுவிட்டு வருகிறேன் என்று சொல்லி 6-30 மணிக்குச் சென்றார்கள். இதற்குள்ளாக முன்னாள் மதுரை மேயர் முத்து அவர்களையும், அவருடன் 6 நபர்கலளயும் சேர்த்து அந்த இடத்திலேயே கைது செய்துள்ளார்கள். கைது செய்யும்போது அவர் சொல்லி இருக்கிறார், நான் அண்ணா அவர்களின் சிலைக்கும், தந்தை பெரியார் அவர்களின் சிலைக்கும் மாலை அணிவித்து விட்டு ஊர்வலமாக வருகிறேன், அப்போது என்னை அங்கே கைது செய்யுங்கள் என்று சொல்லி இருக்கிறார். அப்படிச் சொன்னபோது, மாலை அணிவித்திருக்க விட்டு வைத்திருக்க வேண்டும். ஆனால் அதைக் கூட கேட்காமல், அங்கேயே கைது செய்து விட்டார்கள். பிறகு நெடுமாறன் அவர்கள் மாலை அணிவித்துவிட்டு வரவேண்டுமென்பதற்சாக தலைமை தபால் ஆபீசிற்குச் சென்றார்கள். அங்கே 2,000 பேர்களுக்கும் மேற்பட்ட தொண்டர்கள் நின்று கொண்டு இருந்தார்கள். அங்கே ஒரே பரபரப்பாக இருந்தது. அந்த பரபரப்பின் போது முத்து அவர்களை அரெஸ்ட் செய்து விட்டார்கள். எனவே அந்த நேரத்திலே ஏதாவது செய்ய வேண்டுமென்பதற்காக அங்கே இருக்கின்ற மக்களிடத்திலே டென்ஷன் அதாவது பரபரப்பு ஏற்பட்ட நேரத்தில், அதை அடக்குகின்ற முறையில், அதை நிதானப்படுத்துவதற்காக நெடுமாறன் அவர்கள், முத்து வராவிட்டாலும்கூட, நான் தலைமை தாங்கி நடத்திச் செல்லுகிறேன் என்று சொல்லிவிட்டு அவர்கள் புறப்பட்டுச் சென்றார்கள்.

இது எப்படி இருக்கிறது என்றால் 1952-ஆம் ஆண்டு நம்முடைய ஒப்பற்ற அறிவுலக மேதை இராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில், இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடந்தது. தந்தை பெரியார் இரயில்வே நிலையங்களிலுள்ள இந்தி எழுத்துக்களை அழிப்போம் என்று சொல்லியிருந்தார்கள். அப்போது ராஜாஜி அவர்கள் அறிவில் சிறந்தவராக இருந்த காரணத்தால், அவர்களுக்கு போலீஸ் பந்தோபஸ்து கொடுத்தார்கள். அந்த இடத்திற்குச் சென்று எழுத்துக்களை அழிக்கும்வரையில் பந்தோபஸ்து கொடுத்து, பிறகு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அமைதியாக வீட்டிற்குத் திரும்பினார்கள். நம்முடைய போலீஸ் இலாகாவும், நம்முடைய அமைச்சரவையும் இதைத்தான் செய்திருக்க வேண்டும். திரு. நெடுமாறன் வருகிறாரா அவருக்குப் பின்னால் ஆயிரக் கணக்கான தொண்டர்கள் இருக்கிறார்களா என்று பார்க்க வேண்டும். அவர்கள் என்ன கோஷம் போடப் போகிறார்கள்? இலங்கைப் பிரச்னை பற்றிக் கோஷம் போடப்போகிறார்கள். கொல்லாதே, கொல்லாதே, மத்திய அரசும் மாநில அரசும் தலையிடுங்கள் என்று சொல்லப் போகிறார்கள். எனவே அவர்களை இரயில்வே ஸ்டேஷனுக்குப் போக விட்டிருக்க வேண்டும். அந்த இடத்திற்குப் போன பிறகு, அரெஸ்டு செய்திருந்தால், அது நன்றாக இருந்திருக்கும். அதை ஒரு குரோத மனப்பான்மை காரணமாக, அவருடைய குரல்வளையை நசுக்க வேண்டுமென்ற காரணத்தால், நம்முடைய போலீசுக்கு உத்தரவு போட்டு, நெடுமாறனை மட்டும் கைது செய்யுங்கள் என்று செய்தால் இந்த ஜனநாயக நாட்டில், அது தர்மம் ஆகுமா? அது எப்படி நியாயம் ஆகும் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு அவை முன்னவர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. முன்னாள் மதுரை மேயர் அவர்கள் என்னை கைது செய்கிறீர்கள், ஆனால் என்னை வழியனுப்ப வந்த காங்கிரஸ் தலைவரை எந்த காரணத்தால் அரெஸ்டு செய்கிறீர்கள் என்று கேட்டுவிட்டு, மீண்டும் போராட்டம் நடத்துவேன் என்று மாஜிஸ்டிரேட்டிடம் வாதாடியிருக்கிறார்கள். அப்படி வாதாடியதற்குப் பிறகு மறுபடியும், அரெஸ்டு செய்வதாக ஷோ காட்டி விட்டு, காரிலே அழைத்துச் சென்று மீண்டும் வீட்டிலே விட்டிருக்கிறார்கள். இது எவ்வளவு கொடூரமான செயல்.

மாண்புமிகு முதலமைச்சரவர்கள் 9ஆம் தேதியன்று உணர்ச்சி வசப்பட்டு பேசினார்கள். நாங்கள் எல்லாம் மகிழ்ச்சியடைந்தோம், சந்தோஷப்பட்டோம். இன்றைக்கு எங்கே தமிழர்கள் பாதிக்கப்பட்டாலும், அந்த தமிழர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் நெடுமாறன் அவர்கள் சின்ன வயதாக இருந்தாலும், பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள். அப்படி பணியாற்றுகின்ற எம்.எல்.ஏ-வை —ஒரு கட்சியின் தலைவரை குரோத மனப்பான்மையின் அடிப்படையில்,





நெடுமாறனை வெளியில் விடக்கூடாது என்பதற்காக செய்யப்படுகிறது. ஆளும் கட்சிக்கு ஒன்றும், எதிர்க்கட்சிக்கு ஒன்றும் என்ற முறையில், ஒரு கண்ணில் வெண்ணெயும், மறு கண்ணில் சுண்ணாம்பும் என்ற முறையில் ஈட்டியால் குத்துகின்ற அளவிற்கு நிலைமை உருவாகியிருக்கிறது என்றால், அதைவிட கொடூரமாக வேறு என்ன இருக்க முடியும் என்பதை வருத்தத்தோடு கேட்டுக்கொள்கிறேன்.

எனவே இந்தச் சூழ்நிலையில், நெடுமாறனையும், அவரோடு சேர்த்து கைது செய்யப்பட்ட அத்தனை தொண்டர்களையும் விடுவிக்கும் முறையில், நாம் இந்தப் பிரச்சினையை அணுக வேண்டுமென்பதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இதுபற்றி வாதிக்க வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

திரு. ஏ. சாகுல் ஹமீது: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இலங்கையிலுள்ள, தமிழ் சிறுபான்மை சமுதாயத்திற்கு எதிராக, தமிழர்களைச் சுட்டுப் பொசுக்கி, கொலை வெறி நடத்திக் கொண்டு இருக்கின்ற காடையர்களுடைய கொடுமையை எதிர்த்து இன்றைக்கு தமிழகத்திலே குரல் எழுகிறது என்றால், அந்தக் குரலை அடக்குவதற்கு தமிழ்நாடு அரசு உதவுகிறது என்றால் என்ன நியாயம்? இன்றைக்கு இலங்கையில் என்ன நடக்கிறது? தமிழ்ப் பெண்கள் கற்பழிக்கப்படுகிறார்கள். கொலைசெய்யப்படுகிறார்கள், தமிழர்களுடைய தலைகள் துண்டாக்கப்படுகின்றன. அங்கே வாழ்கின்ற தமிழ்ச் சமுதாயம் நிம்மதியற்ற நிலைமையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையிலே இன்றைக்குத் தமிழகம் கொந்தளித்து எழுந்து இருக்கவேண்டாமா? இன்றைக்குத் தமிழகம் இலங்கையில் நடைபெறுகின்ற கொடுமையை எதிர்த்து, போராட்டத்திலே இறங்கியிருக்கவேண்டாமா? இன்றைக்கு மத்திய சர்க்கார் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றால், நம்முடைய இனத்து மக்கள் அங்கே நடக்கும் கொடுமைகளில் இருந்து விடுதலை பெற்று, அவர்கள் நிவாரணம் பெறவேண்டும் என்றால், இன்றைக்குத் தமிழகம் ஒட்டுமொத்தமாகக் கிளர்ந்து எழுந்தால் தான் தமிழகம் மத்தியஅரசை நிர்ப்பந்தித்தால்தான், அதற்கு ஒரு விடிவு ஏற்படும். அந்த நிலையிலேதான் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூட அன்றைக்கு காவல் துறை மானியத்திலே பேசும்போது சவால் விட்டார்கள். அந்தச் சவாலின் அடிப்படையிலேதான், மதுரையிலே நம்முடைய மூத்த தலைவர் முத்தண்ணன் அவர்களும், தமிழ்ச் சமுதாயத்திலுடைய நீண்டகால பாரம்பரியத்தின் தலைவரும், அன்பிற்குரிய நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்களும், ரெயில் நிறுத்த மறியல் போராட்டத்தில் கலந்து கொண்ட நேரத்தில் அப்படிக் கலந்து கொண்டு தங்களுடைய இந்தத் தமிழ்ச் சமுதாயத்தினுடைய ஒட்டுமொத்த உணர்வை,

மான உணர்வைப் பிரதிபலிக்கின்ற நேரத்திலே, கைது செய்யப் படுகிறார்கள் என்றால் என்ன அர்த்தம்? அப்படிக் கைது செய்யப்படுகின்ற நேரத்திலே, நம்முடைய முத்தண்ணன் அவர்களை விடுவித்துவிட்டு நம்முடைய நெடுமாறன் அவர்களை மட்டும் கைது செய்வது என்றால், அது என்ன நியாயம்? இது பாரபட்சம் இல்லையா? நம்முடைய முதல்வர் அவர்கள் சவால் விட்டார்களே, ஒட்டுமொத்தமாக கிளர்ந்து எழுவோம், இலங்கை சர்க்காரின் சவாலை சமாளிப்போம், தேவைப் பட்டால் படையைக் கூட நடத்துவோம் என்று சொன்னார்களே, ஆனால் இன்றைக்குத் தமிழகம் முழுவதும் எழுகின்ற அந்த உணர்வை நீங்கள் அடக்குகிறீர்கள் என்றால், அது என்ன நியாயம் என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், திரு. முத்தண்ணன் அவர்கள் விடுதலை செய்யப்படுகிறார்கள். ஆனால் இளஞ்சிங்கம் திரு. நெடுமாறன் அவர்கள் கைது செய்யப்படுகிறார்கள். அதற்கு மறுநாள், மாஜிஸ்ட்ரேட் அவர்களிடம் சென்று, என்னையும் கைது செய்யுங்கள் என்று இவர்கள் சொல்கிறார்கள். ஆனால், முன்பு போலீஸ் கொடுத்த ரிப்போர்ட்டிலே உங்களை ரிமாண்டு செய்வதற்கு உத்தரவு இல்லை என்று சொல்கிறார்கள். அப்படி யானால் இந்தக் காவல் துறை பாரபட்சமாக ஏன் நெடுமாறன் அவர்களை மட்டும் கைது செய்யச் சொல்கிறது. ஆகவேதான் இன்றைக்கு அந்த எழுச்சியை, ஒட்டுமொத்தமாக, அத்தனை தமிழ்ச் சமுதாயத்தைச் சேர்ந்த தலைவர்களும் அரசியல் வேறுபாடற்ற முறையில், இன்றைக்கு ஒன்றுகூடி வாழ்கின்ற மைனாரிட்டி மக்களுக்காகப் இலங்கையில் வேண்டும்.' தேவைப்பட்டால் எத்தனை உயிர்கள் போராடியாக மூனாலும், அதைக் கொடுப்பதற்குத் தமிழகம் வேண்டு தயாராக இருக்கிறது. ஆகவே, இன்றைக்கு போர் இன்றைக்குத் படை நடத்திப் பேர் கண்ட தமிழகம் இன்றைக்கு பல கண்டு, எழாமல், சும்மா இருக்கிறது என்றால், அது என்ன கிளர்ந்து என்று நான் கேட்க விரும்புகிறேன். ஆகவே, கைது செய்யப்பட்ட நியாயம் இளஞ்சிங்கம் நெடுமாறன் அவர்களை விடுதலை செய்யவேண்டும் என்றும், தமிழகம் ஒட்டுமொத்தமாக கிளர்ந்து எழவேண்டும் என்றும், எனவே இதுபற்றி விரிவாக விவாதிப்பதற்காக அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து இதே அவையிலே நம்முடைய முதல்வர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இலங்கையிலே நடைபெறும், தமிழர் களுக்கு எதிராக நடைபெறும் இனப் படுகொலை, இலங்கை வெறியர்களாலும், ஜெயவர்த்தனே அரசாலும் தொடர்ந்து நீடிக்கப்படுமானால், நான் உணர்ச்சி வசப்பட்டுச் சொல்கிறேன்,





தமிழ்நாடு போர்க்களமாக மாறும், சட்டம் ஒழுங்கைப் பற்றிக் கவலைப்படமாட்டேன் என்று நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் இதே அவையில் கருத்தை தெரிவித்திருக்கிறார்கள். அண்மையிலே மன்னார்குடியிலே பேசுகின்றபோது ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். 100 இந்தியாக்கள் வந்தாலும், பார்க்கலாம் என்கிற ஜெயவர்த்தனேவுக்குச் சொல்கிறேன், அகில இந்திய அண்ணா தி.மு.க. தொண்டர்கள் ஆவேசம் கொண்டு எழுவார்களேயானால், ஆயுதம் தாங்குவார்களே யானால், ஜெயவர்த்தனே சர்க்கார் தாக்குப் பிடிக்காது. ஆயுதத்திற்கு எங்கே போவீர்கள் என்று கேட்கிறீர்களா, ஜெயவர்த்தனே ராணுவத்திலே இருக்கிற ஆயுதங்களை பயன்படுத்துவோம், மற்றவை மக்கள் தீர்ப்புக்கு விட்டுவிடு கிறேன் என்று சொல்கின்ற அளவிலே நம்முடைய முதல்வர் அவர்கள் இலங்கைப் பிரச்சனை குறித்து அவர்களுடைய உணர்ச்சியை சிறப்பாக எடுத்துக் சொல்லியிருக்கிறார்கள். இப்படி உணர்ச்சிகளை வெளிப்படுத்துகின்ற இந்தக் காலகட்டத் திலே, நம்முடைய அமைச்சர்கள், எஸ்.டி.எஸ். போன்றவர்கள், காளிமுத்து போன்றவர்கள், இலங்கைக்கு ராணுவத்தை, மத்திய அரசு அனுப்பவேண்டும், அப்படி அனுப்பக் கூடாது என்று சொல்பவர்கள்தான் மிகவும் தவறானவர்கள் என்று பலமுறை அவர்களுடைய உணர்ச்சிகளை எல்லாம் வெளிப்படுத்தி இருக் கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அந்த அடிப்படையிலேதான், திராவிட இயக்கம் என்கிற மாபெரும் ஒரு ஸ்தாபனத்தினுடைய ஒரு தூணாகத் திகழ்ந்து வரும் முத்தண்ணன் அவர்கள்—இன்றைக்கு ஆயிரம் கருத்து வேறு பாடுகள் இருந்தாலும், எங்களைப் போன்றவர்களுக்கு எல்லாம் அவர்கள் ஒரு காலத்திலே ஆசானாக இருந்தார்கள்—அப்படிப் பட்ட முத்தண்ணன் அவர்கள் அகில இந்திய அண்ணா தி.மு.க. விலே இருந்தாலும் கூட, மத்திய சர்க்கார் ராணுவத்தை அனுப்பியே தீரவேண்டும் என்ற உணர்ச்சியை பிரதிபலிக்கின்ற வகையிலே இன்றைய தினம் ஒரு மறியல் போராட்டத்தை ஆரம் பித்தார்கள்.

(முற்பகல் 10-50)

மதுரையிலிருந்து சென்னைக்குப் போகும் பாண்டியன் எக்ஸ் பிரஸ் முன்பு,ஒரு அடையாளமாக, மக்களை இந்தப் பிரச்சினையில் திரட்டுவதற்காக, மாநில சர்க்கார் ராணுவத்தை இலங்கைக்கு அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை, இலங்கையிலே இருக்கக்கூடியவர்கள் ராணுவத்தை அனுப்பு என்று கேட்டார்களா என்று பேசிக் கொண்டிருப்பதை மாற்ற, மாநில சர்க்கார் இனியும் அப்படி இருக்கக் கூடாது என்பதற்காக, ராணுவத்தை அனுப்ப வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தினால் உலக யுத்தம் வந்து விடும், தமிழ்நாட்டின் மீது குண்டுகளைப் போடுவார்கள், அது உள் நாட்டு விவகாரம், நாம் ராணுவத்தை அனுப்பினால், வல்லரசுகள் தலையிட நேரிடும், இது என்ன சினிமா படமா என்று பாதுகாப்பு

[திரு. அ. ரகுமான்கான்] [1984 ஏப்ரல் 16

அமைச்சர் வெங்கட்ராமன் போன்றவர்கள் பேசியதை எதிர்க்க
பாதுகாப்புத் தரவேண்டியவர்கள் இப்படிப் பேசலாமா என்பதற்
காக, ஒரு அடையாளமாகத்தான், சட்டம் ஒழுங்கை கெடுக்க
வேண்டும் என்பதற்காக கூட அல்ல, இலங்கைத் தமிழர் பிரச்னை
யில் தம்முடைய உணர்ச்சியைக் காட்ட ஒரு அடையாளமாக
அந்த மறியல் போராட்டத்தை அறிவித்தார்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் கூட கல்லக்குடி போராட்டம்
என்று, ரயில் நிறுத்தப் போராட்டத்தை அறிவித்தது உண்டு.
ரயில் நிறுத்தப் போராட்டம் என்று செய்வது ஒரு
அடையாள மறியல் தான். அது அறிஞர் அண்ணா அவர்களுடைய
வழி தான். ஆனால் இதிலே அறிவித்தவர்கள் யார்?
முன்னாள் மதுரை மேயர் திரு. முத்து அண்ணன் அவர்கள். அவர்
களுக்கு ஆதரவு கொடுத்தது யார்? நம்முடைய மாண்புமிகு
உறுப்பினர் நெடுமாறன் அவர்கள். ஆனால் திரு. முத்தண்ணன்
அவர்கள் வீட்டைவிட்டு இதற்காக வெளியே வருவதற்கு
முன்னாலேயே கைது செய்யப்பட்டுவிட்டார்கள். கைது செய்து
அவரை காவல் நிலையத்திற்குக் கொண்டு போய் விட்டார்கள்.

அவர்கள் சொன்ன இடத்திற்கு வருவார்கள் என்று திரு. ப. நெடு
மாறன் அவர்கள் காத்திருந்தார்கள். அவர் கைது செய்யப்பட்டு
விட்ட காரணத்தால் வரவில்லை. ஆகவே திரு. முத்தண்ணன்
அவர்கள் சொன்ன அந்த மறியல் போராட்டத்தை நானே முன்
நின்று நடத்துகிறேன், ஏனெனில் வேறு வழியில் சட்டம்-ஒழுங்கு
கெடுவதற்கு இடம் அளிக்கக்கூடாது என்று, காவல் துறையை
சார்ந்தவரிடமிருந்தே மைக்கை வாங்கி பேசிவிட்டு, மறியலில்
கலந்து கொள்ளாத தொண்டர்களை அமைதியாக கலைந்து
போகும்படிச் சொல்லிவிட்டு, சாத்வீகமான முறையில் மறியலை
முறையாக நடத்துவதற்காகச், சென்ற திரு. நெடுமாறன் அவர்
களும், மறியலை நடத்துவதற்கு முன்பாகவே கைது செய்யப்
பட்டிருக்கிறார்கள்.

இதிலே இரண்டு பேர்கள். ஒருவர் மறியலை செய்ய புறப்
பட்டுவிட்டார் என்ற காரணத்திற்காக கைது செய்யப்பட்டார்.
அவர் நம்முடைய மதிப்பிற்குரிய திரு. நெடுமாறன் அவர்கள்.
இன்னொருவர், மறியல் செய்ய புறப்பட்டதற்காக வீட்டிலேயே
கைது செய்யப்பட்டார். காரணம் ஒன்றுதான், ஆனால்
இரண்டு பேருக்கும் இரண்டு நிலை. திரு. நெடுமாறன் அவர்களுக்கு
15 நாள ஜெயிலிலே ரிமாண்ட். திரு. மதுரைமுத்து அவர்களுக்கு
விடுதலை. திரு. மதுரை முத்து அண்ணன் அவர்களுக்கு ஜெயில்
தண்டனை கொடுக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை.
தமிழன் உணர்ச்சியை வெளிப்படுத்தியதற்காக தண்டனை
வழங்க வேண்டும் என்று சொலலக்கூடிய அளவிற்கு தரம்
தாழ்ந்தவன் அல்லன் நான். ஆனால் நான் ஒன்று சொல்ல
விரும்புகிறேன்.



1984 ஏப்ரல் 16] [திரு. அ. ரகுமான்கான்]

திரு. மதுரை முத்து அவர்களிடம் போலீசார் சொலலுகிறார்கள்.
நீங்கள் எந்த தப்பும் செய்யவில்லை, எனவே உங்களை ரிமாண்டில்
வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று. அதற்குத் திரு. முத்து
அண்ணன் அவர்கள் கேட்கிறார், ஏன் திரு. நெடுமாறன் அவர்
களுக்கு 15 நாள் ரிமாண்ட்? வழி அனுப்ப வந்தவருக்கு 15 நாள்
ரிமாண்ட், மறியலை அறிவித்த எனக்கு விடுதலை என்று சொல்வது
என்ன நியாயம் என்று கேட்கிறார். அதற்கு ஒரு பதில்
சொல்லப்படுகிறது. திரு. முத்து அவர்கள் தப்பு செய்யவில்லை.
திரு. நெடுமாறன் அவர்கள் இருந்த இடத்தில் தடை உத்தரவு
அமலில் இருககிறது. திரு. முத்து அண்ணன் இருந்த இடத்தில்
தடை உத்தரவு இல்லை. ஆகவே அங்கே தடை உத்தரவு இருந்த
காரணத்தினாலேதான் திரு. நெடுமாறன் அவர்களைக் கைது
செய்து 15 நாள் ரிமாண்டிலே வைத்திருப்பதாக ஒரு பதில்
சொல்லப்பட்டது.

அப்படியானால் இந்த மாமன்றத்தினுடைய தலைவர்
அவர்களே, உங்கள் மூலமாக நான் தெரிந்து கொள்ள விரும்பு
கிறேன். விலைவாசி போராட்டம் என்ற பெயரால் ஒரு
போராட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகமும், கம்யூனிஸ்ட்
இயக்கமும், மற்ற இயக்கங்களும் சேர்ந்து ஒரு போராட்டத்தை
நடத்தின. திரு. நாராயணசாமி நாயுடு போன்றவர்களும்
விவசாய போராட்டம் நடத்தினார்கள். அப்போதும் தடை
உத்தரவு இருந்தது. ஆனால் கைது செய்யப்பட்டவர்கள், அன்று
மாலையே வீட்டுக்கு அனுப்பப்பட்டோமே தவிர, 15 நாள்
ரிமாண்டில் வைக்கப்படவில்லை. நானும் அப்போது சேர்ந்து
கைது செய்யப்பட்டவன் தான். என் மீது 15 நாள் ரிமாண்ட்
கிடையாது. அப்போது பொருந்திய இந்த விதி, இலங்கை
தமிழர் பிரச்னைக்காக, தமிழர்களுக்காக, ஒரு அடையாள மறியல்
செய்ய புறப்பட்ட திரு. நெடுமாறனுக்கு பொருந்தாதா என்று
கேட்க விரும்புகிறேன்.

விலைவாசி போராட்டத்திலே கலந்து கொண்டவர்களுக்கு
ஒரு நிலை. இலங்கைப் பிரச்னையிலே கலந்து கொண்ட
திரு. நெடுமாறனுக்கு ஏன் இந்த நிலை? ஏன் இலங்கை தூதுவர்
அகத்தின் முன்பாக திரு. குமரி அனந்தன் அவர்கள் ஊர்வலமாகச்
சென்றபோது அங்கே தடை உத்தரவு இருந்தது. இந்திரா
காங்கிரஸ் கட்சிக்காரர்கள் ஊர்வலமாக சென்றபோது அந்த
இடத்திலே தடை உத்தரவு இருந்தது. அது போன்று மாணவர்கள்
ஊர்வலமாகச் சென்ற போது அங்கே தடை உத்தரவு இருந்தது.
ஆனால் என்னைப் போன்றவர்கள், எங்கள் கட்சியைச் சேர்ந்த
வர்கள் அங்கே இருந்த தடை உத்தரவை மீறினோம் என்று
எங்களுக்கு 15 நாள் ரிமாண்ட் அளித்தீர்கள். அப்போதுகூட
இலங்கை தூதுவரகத்தின் முன்னால் மறியல் செய்ததாக என்மீது
வழக்கு பதிவு செய்யப்படவில்லை. மவுண்ட் ரோட்டிலே நின்று
கொண்டு, போகிறவர்கள், வருகிறவர்கள் மீது சோடா பாட்டில்
வீசினேன் என்று வழக்கு போடப்பட்டு, நான் சிறையிலே 15

நாட்கள் இருந்தேன். திரு. குமரி அனந்தன் அந்தப் பகுதியிலிருந்த
தடை உத்தரவை மீறினார்; 15 நாள் ரிமாண்ட் இல்லை ;
அதைப்போலவே இந்திரா காங்கிரஸ்காரர்கள் தடை உத்தரவை
மீறினார்கள். 15 நாள் ரிமாண்ட் இல்லை. மாணவர்கள்
தடை உத்தரவை மீறினார்கள், 15 நாள் ரிமாண்ட் இல்லை ;
ஆனால் நம்முடைய மதிப்பிற்குரிய உறுப்பினர் நெடுமாறன்
அவர்களுக்கு மட்டும், தடை உத்தரவை மீறினார்கள் என்று
15 நாள் ரிமாண்ட். ; அதுவும் இலங்கைப் பிரச்னைக்காக,
இலங்கைவாழ் தமிழர் பிரச்னைக்காக, ஒரு அடையாளப்
போராட்டமாக இரயில் நிறுத்தப் போராட்டம் என்கிற இந்த
அணுகு முறையில் ஈடுபட்டபோது மட்டும் 15 நாள் ரிமாண்ட்
என்று சொல்வதிலே என்ன நியாயம் இருக்கிறது ? சர்வ
கட்சிக் கூட்டம் கூட்டி, இலங்கைத் தமிழர் பிரச்னைக்காக
பேசப் போகிறோம் என்று சொல்லிவிட்டு, இந்தப் பிரச்னையில்
மிகவும் ஈடுபாடு கொண்டிருக்கிற மாண்புமிகு உறுப்பினர்
நெடுமாறன் அவர்கள், இந்தப் பிரச்சினையில் உறுதியாக இருக்கக்
கூடிய திரு. நெடுமாறன் அவர்கள், அந்த சர்வகட்சி கூட்டத்திலே
கலந்துக் கொள்ள முடியாத விதத்திலே, 15 நாள் ரிமாண்டில்
வைத்திருப்பது எந்த விதத்திலே நியாயம் என்று தெரிந்து
கொள்ளவிரும்புகிறேன். அமெரிக்க தூதுவர் அலுவலகத்திற்கு
முன்னால் ஒரு வாரத்திற்கு முன் விடுதலைப் புலிகள் உள்ளே
நுழைந்து சட்டவிரோதமாக நடந்தார்கள் என்று கம்ப்ளெய்ன்ட்.
ஆனாலும் அவர்களுடைய வழக்கு வாபஸ். அவர்கள் 15
நாட்கள் ரிமாண்டில் வைக்கப்படவில்லை. விடுதலை செய்யப்
பட்டிருக்கிறார்கள். அதைப்போலவே முகுந்தன் சிறைச்
சாலையில் வைக்கப்பட்டவர், துப்பாக்கிச் சண்டையின்
காரணமாக அவர்மீதுள்ள வழக்கு வாபஸ். விடுதலைப் புலிகள்
பலர் கைது செய்யப்பட்டு உள்ளே வைக்கப்படவில்லை.
வைக்கப்பட வேண்டுமென்று சொல்லவில்லை. இதற்கெல்லாம்
எந்த அணுகுமுறையோ அதே அணுகுமுறைதான்
திரு. நெடுமாறன் அவர்களுக்கும் பொருந்தும் என்பதை நான்
கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இந்தப்
பிரச்சினையை மாநில சர்க்கார் ஒரு சட்டம் ஒழுங்குப்
பிரச்சினையாக தயவு செய்து கருதக் கூடாது. ஆனால் சட்டம்
ஒழுங்குப் பிரச்சினையாக இந்த சர்க்கார் கருதுவது எந்த
விதத்திலே நியாயம் என்று எனக்குப் புரியவில்லை. வாளா
விருக்க மாட்டோம். நாங்கள் வாளாக இருப்போம் என்று
சொல்லிவிட்டு இன்னும் சொல்லப் போனால் சட்டம் ஒழுங்கு
பற்றி கவலைப்படமாட்டோம் என்றும் சர்வ கட்சி கூட்டத்தைக்
கூட்டி முடிவு எடுக்கப் போகிறோம் என்றும் சொல்லி விட்டு
திரு. நெடுமாறன் அவர்களைக் கைது செய்து வைப்பது நியாய
மல்ல. காரணம் இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை தீர்ந்து
விட்டது என்று நாம் நமக்குள்ளே பேசிக்கொண்டு பிரச்சினையைத்
திசை திருப்புவதை விட்டு விட்டு திரு. நெடுமாறன் அவர்களை
விடுதலை செய்ய வேண்டும் யாழ்ப்பாணத்திலே ஊரடங்குச் சட்டம்



பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. பலர் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.
யாழ்ப்பாணத்தோடு மற்ற மாவட்டத் தொடர்பு ரத்தாகி
யிருக்கிறது. யாழ்ப்பாணம் கடலோரப் பகுதியை இலங்கை
இராணுவம் முற்றுகையிட்டு இருக்கிறது, யாழ்ப்பாணத்துத்
தெருக்களிலே இராணுவம் ரோந்து வருகிறது. வட்டமேசை
தோல்வி அடைந்து விட்டது. நேற்று டெல்லியிலிருந்து புறப்
பட்ட பாதுகாப்பு அமைச்சர், சொல்லியிருக்கிறார். அந்தப்
பேச்சே தோல்வி அடைந்து விட்டது என்று திரு. அமிர்தலிங்கம்
சொல்லியிருக்கிறார். இன்னும் சொல்லப்போனால் இந்தியா
டுடே பத்திரிகைக்கு பேட்டி கொடுத்த ஜெயவர்த்தனா
சொல்கிறபோது நாங்கள் யாரோடும் கூட்டு வைத்துக்
கொள்வோம், அதைக் கேட்பதற்கு யார் என்று
கேட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பத்திரிகையிலே என்ன
என்ன வந்ததோ அதையெல்லாம் சொல்லிக் கொண்டே போனால்
நான் என்ன செய்ய முடியும்? திரு. நெடுமாறனை விடுதலை
செய்ய வேண்டுமா வேண்டாமா அதைப்பற்றிச் சொல்லுங்கள்.

**திரு. அ. ரகுமான்கான் :** யாழ்ப்பாணத்திலே இப்படிப்பட்ட
சூழ்நிலை இருந்து கொண்டிருக்கின்ற நேரத்திலே இராணுவத்தை
அனுப்ப வேண்டுமா என்று பாதுகாப்பு அமைச்சர்
திரு. வெங்கடராமன் போன்றவர்கள் பேசிக் கொண்டு இருக்கிற
கால கட்டத்திலே இராணுவம் அனுப்பப்பட வேண்டும் என்று
சட்டமன்றத்திலே ஒரு தீர்மானம் போட வேண்டும். இந்த
அரசு இரட்டை வேடம் போடாமல் மாநில அமைச்சரவை
இந்தப் பிரச்சினையில் ராஜிநாமா செய்யுங்கள், நாங்களும்
ராஜிநாமா செய்யத் தயாராக இருக்கிறோம், இந்தியாவுக்கும்
அகில உலகத்திற்கும் இதைக் காட்டுவோம் என்று சொல்லி
உரையை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இரண்டு பேர்களும்
ராஜிநாமாச் செய்துவிட்டு திரு. நெடுமாறனை உள்ளேயே
வைத்திருக்க வேண்டியதா ?

**திரு. இரா. கருப்பையா :** தலைவர் அவர்களே, இலங்கையில்
தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகள் ஒரு
தொடர் நிகழ்ச்சியாக நடந்து கொண்டிருக்கிறது. அங்கே
இனப் படுகொலைகள் தொடர்ந்து நீடிக்கின்றன. அங்கே
இருக்கின்ற ஜெயவர்த்தனா தலைமையில் இருக்கின்ற அரசு
திட்டமிட்டு இதைச் செய்து கொண்டிருக்கிறது. அவர்கள்
செய்வது மட்டுமல்ல, சமீபத்திலே பத்திரிகையிலே வந்திருக்கிற
ஜெயவர்த்தனே அவர்களுடைய பேச்சு 100 இந்தியாக்கள்
சேர்ந்தாலும் என்னை ஒன்றும் செய்ய முடியாது என்கின்ற
முறையிலே பேசியிருக்கிறார். அந்த அளவுக்குப் பேசுவதற்கு
துணிச்சல் எங்கிருந்து வந்திருக்கிறது என்பதுதான் கேள்வி.
அமெரிக்க ஏகாதிபத்தியத்தினுடைய ஆதரவோடு அதனுடைய

துணிச்சலோடு, உதவியோடு இங்கே ஒரு நிலையை உருவாக்க
வேண்டுமென்கின்ற முறையில் திட்டமிட்டு நடக்கக் கூடிய
நிகழ்ச்சிகளாக இருக்கின்றன.

(முற்பகல் 11-00)

அது மட்டுமல்ல, திரிகோணமலையில் ஏகாதிபத்தி
யத்தினுடைய தளமாக அதை அமைக்க வேண்டுமென்ற
முயற்சியின் தொடர் நடவடிக்கையாக தொடர்ந்து
முயற்சி இன்றைக்கும் நடந்து வருகிறது. இன்றைக்கு
நடைபெறக் கூடிய சம்பவங்கள் தமிழர்கள் பெருவாரியாக
இருக்கக் கூடிய ஈழத்தில் தொடர்ந்து இந்தப் படுகொலைகள்
நடந்து கொண்டு வருகின்றன. அந்தப் படுகொலைகளைக்
கண்டிக்கக் கூடிய முறையிலே இலங்கைத் தமிழர்களுக்கு
நியாயத்தைப் பெற்றுத் தருவதற்கும், அவர்களுக்குப்
பாதுகாப்பைப் பெற்றுத் தருவதற்கும், தொடர்ச்சியாக
தமிழகத்தில் இருக்கின்ற அனைத்துக் கட்சிகளும் இந்திய அரசும்
பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டு வந்து இருக்கிறது என்றாலும்
நாம் எதை விரும்பினோமோ எதை அவர்களுக்கு அந்த இலங்கைத்
தமிழ் மக்களுக்குப் பெற்றுத் தர வேண்டும் என்று நாம்
விரும்பினோமோ அதை அடைய முடியாத சூழ்நிலை தான் தினசரி
உருவாகிக் கொண்டிருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்பு
கிறேன். ஆகவே தான் அந்த உணர்வினுடைய வேகத்தில்
நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட இந்த
அவையில் தமிழகத்தில் இருக்கிற 5 கோடி மக்களையும் நான்
அழைத்துச் சென்று எந்த நடவடிக்கையிலும் ஈடுபடுவதற்குத்
தயாராக இருக்கிறேன் என்ற முறையில் இந்த அவையில் அவர்கள்
அறிவித்து இருக்கிறார்கள். ஆனால் இன்றையதினம் நடப்பது
என்ன? மத்திய அரசுக்கு இந்தப் பிரச்சினையிலே ஏற்பட்டு
இருக்கின்ற கடுமையான தன்மையைப் பற்றி உணர்த்துவதற்கு
மதுரை மாநகராட்சியின் முன்னாள் மேயர் நம்முடைய மேலவை
உறுப்பினர் மாண்புமிகு திரு. முத்து அவர்கள் அடையாள
பூர்வமாக பாண்டியன் துரித ரெயிலை நான் மறியல் செய்யப்
போகிறேன் என்ற மு றயில் அறிவித்து இருக்கிறார்கள்.
அதற்கான முறையில் செல்வதாக அவர்கள் அறிவித்து
இருக்கிறார்கள். அவர்களை வாழ்த்துவதற்காக நம்முடைய
தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் நம்மு டய
சட்டமன்ற உறுப்பினரும் ஆகிய மாண்புமிகு திரு. நெடுமாறன் அவர்
கள், அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவிப்பதற்காகப் புறப்பட்டு இருக்
கிறார்கள். அப்படிப் புறப்பட்ட நம்முடைய மாண்புமிகு சட்ட
மன்ற உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்கள் கைது
செய்யப்பட்டு இருக்கிறார்கள். திரு. முத்து அவர்களும் கைது
செய்யப்பட்டு காவல் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு
அங்கே விடுதலை செய்யப்பட்டு இருக்கிறார்கள். இந்த
நடவடிக்கையிலே ஏன் இந்த மாதிரியாக ஏற்பட்டு இருக்கிறது
என்பதைப் பற்றி எங்களைப் போன்றவர்களால் புரிந்துகொள்ள
முடியவில்லை. புரிந்துகொள்ளமுடியவில்லை என்றால் அரசாங்கம்





வேண்டும் என்றே ஏதோ ஒரு நிகழ்ச்சியை உருவாக்க வேண்டும்
என்ற முறையில் திட்டமிட்டுச் செய்து இருக்கிறதோ என்ற
சந்தேகம் எங்களைப் போன்றவர்களுக்கு ஏற்படுகிறது. காரணம்
இந்தச் சட்டமன்றத்தில் சமீபத்தில் நடைபெற்ற விவாதங்களின்
போது நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. நெடுமாறன்
அவர்கள் கடுமையான முறையில் அரசாங்கத்தினுடைய கொள்
கையை விமர்சித்துப் பேசினார்கள் என்பதும் அரசாங்கத்தின்
தரப்பில் கடுமையான வாக்கு வாதங்கள் இந்த மன்றத்தில்
நடைபெற்ற நிகழ்ச்சியும் இன்றைக்கும் நம்முடைய நெஞ்சங்
களில் பசுமையாக நிற்கின்றன.

அது மட்டும் அல்ல, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள் அனைத்துக் கட்சிகளுடைய தலைவர்களின் கூட்டத்தை
கூட்டுவதற்கு என்றைக்கு வசதியான தேதியை வைத்துக்
கொள்ளலாம் என்ற முறையில் கேட்டு அதற்கான தேதியும்
இன்றையதினம் நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது. நம்முடைய சட்ட
மன்றத்தில் இருக்கின்ற அனைத்து சட்டமன்றக் கட்சித் தலைவர்கள்
கூட்டம் இன்றையதினம் மாலை 4 மணிக்கு கூட்டப்பட இருக்
கிறது. ஆகவே இந்த நிலையில் அவர் கைது செய்யப்பட்டு
இருக்கிறார். அது தான் ஆச்சரியம். அதுவும் கைது செய்யப்
பட்டு இருப்பது எந்த பிரிவின்கீழ் என்றால் சி.ஆர்.பி.சி
151 ஆவது பிரிவு (Crimin l L w Amendment Act) அது
வெள்ளைக்காரன் காலத்தில் போடப்பட்ட சட்டம்.
அந்த நிலையில் அது தொடர்கிறது. இது தடுப்பு நடவடிக்கைக்
காக உபயோகப்படுத்தக்கூடிய பிரிவு என்பது அனைவரும்
அறிவோம். அதன்படி கைது செய்யப்பட்டு சிறைக்குள்
அடைக்கப்பட்டு இருக்கிறார்கள் என்றால் அதற்
கான காரணம்-நான் கருதுகிறேன்-இன்றைய தினம் சட்டமன்ற
கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ள விடாமல்
தடுக்கவேண்டும் என்ற நோக்கமா அரசாங்கத்திற்கு.

ஒரு சட்ட மன்ற உறுப்பினர் சட்டமன்றக் கூட்டம் நடை
பெற்றுக் கொண்டு இருக்கும் நேரத்தில் அந்த உறுப்பினர்கள் தங்க
ளுடைய கடமைகளை இந்தச் சட்டமன்றத்தில் ஆற்ற வேண்
டிய மிகப் பெரிய பொறுப்பும் கடமையும் இருக்கிறது என்
பதை அனைவரும் ஏற்றுக்கொள்வோம். அனைவரும் சொல்
கிறோம். ஆனால் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு.
நெடுமாறன் அவர்கள் தடுப்பு நடவடிக்கைக்காகக் கைது
செய்யப்பட்டவர், இன்றைக்குச் சிறைக்குள்ளே காவல் கைதி
யாக வைக்கப்பட்டிருக்கிறார் என்றால், அவர் இந்தக் கூட்டத்
தில் கலந்து கொள்ளக் கூடாது என்ற நோக்கத்தில் தானோ,
அவர்கள் கடுமையாக விமர்சனம் செய்து வந்த காரணத்தினால்
இப்படிச் செய்திருக்கிறார்களோ, அந்த நோக்கம்தான் அர
சாங்கத்திற்கு இருக்கிறதோ என்று என்னைப் போன்றவர்கள்
நினைக்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதைத் தெரி
வித்துக்கொள்கிறேன்.

[திரு. இரா. கருப்பையா] [1984 எப்ரல் 16

அந்த முறையிலே, இன்றைக்குத் தமிழ்நாட்டிலே இதன் காரண
மாகத் தமிழக மக்கள் மத்தியிலே ஏற்பட்டிருக்கின்ற கொந்
தளிப்பான உணர்வுகளை நாம் அனைவரும் நன்றாக அறிவோம்.
தமிழ் நாட்டு மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தச் சென்
றவர் கைது செய்யப்பட்டு, அதிலும் ஒருவர் கைது செய்யப்பட்டு
சிறைக்கு அனுப்பப்படுவதும், இன்னொருவர் வெளியே விடு
விக்கப்படுவதும் என்கின்ற இந்த பாரபட்சமான நடவடிக்கைகள்
அரசாங்கத்திற்கு நல்ல பெயரை உண்டாக்கிக் கொடுக்காது என்
பதை நான் நிச்சயமாக எடுத்துக் கூற விரும்புகிறேன். ஆகவே,
அந்த முறையிலே நெடுமாறன் அவர்கள் கைது செய்யப்பட்டிருப்
பது தவறானது என்பதை நா[illegible] தெரிவித்துக்கொள்
கிறேன் ; இதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். இன்
றைக்கு உள்ள நிலைமைகளில்கூட, சட்டமன்றக் கட்சித்
தலைவர்களின் கூட்டத்தில் அவர் கலந்து கொள்ள வேண்டும் ;
சட்டமன்றக் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்ற
நிலையில் அதற்கான வாய்ப்பை உருவாக்க வேண்டிய அர
சாங்கமும், காவல்துறையினரும் இன்றைக்கு வாய்மூடி மௌனி
யாக இருந்து, எதுவுமே செய்யாமல் இருப்பதால் ஏதோ திட்ட
மிட்டு, வேண்டுமென்றே எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கை
தான் இது என்று நான் கருதுகிறேன். ஆகவே, இப்படிப்பட்ட
நடவடிக்கைகளுக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்க வேண்டுமென்று
இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற இன்னல்
களைப் போக்குவதற்காக, அவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற
கொடுமைகளைப் போக்குவதற்காக, தமிழர்களுக்குக் கொடுக்
கப்பட வேண்டிய நியாயமான பாதுகாப்புக்களைப் பெற்றுத்
தருவதற்கு, புதிதாக ஏற்பட்டுள்ள நிலைமைகளுக்கு ஏற்ப
என்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பது குறித்து
அனைத்துக் கட்சியினரும் கலந்து பேச வேண்டிய அவசியம்
இருக்கிறது ; சட்டமன்றத்திலேயும் அதைப்பற்றிப் பேசி,
நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது.
ஆகவே, அரசாங்கத்தையும், நம்முடைய முன்னவர் அவர்
களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், கைது செய்யப்பட்டு,
இன்றைக்குக் காவலில் வைக்கப்பட்டிருக்கின்ற நம்முடைய
தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், சட்ட
மன்ற உறுப்பினரும் ஆகிய நெடுமாறன் அவர்களை உடனடி
யாக விடுதலை செய்ய வேண்டும். இந்தப் பிரச்னையில் தீர்வு
காண்பதற்கான நடவடிக்கைகளில் எல்லோரும் சுதந்திரமான
உணர்வோடு பங்குகொள்கின்ற நிலைமைகளை ஏற்படுத்த
வேண்டும். இது குறித்த முழுமையான மற்ற நடவடிக்கை
களைப் பற்றி ஆராயவும், பரிசீலனை செய்யவும் வேண்டிய
நிலைமை இருப்பதால் இந்த அவையின் இன்றைய இதர அலு
வல்களை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்க வேண்டுமென்று
அவைத்தலைவரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



1984 எப்ரல் 16]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு
பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது இலங்கையில்
ஏற்பட்டிருக்கின்ற சூழ்நிலையை ஒட்டி இங்கே மதுரையில்
நடந்த சம்பவத்தை அடுத்து மாண்புமிகு உறுப்பினர்
திரு. நெடுமாறன் அவர்களும் மேலவை உறுப்பினர்
திரு. மதுரை முத்து அவர்களும், அவர்களைச் சேர்ந்த
மற்றவர்களும் கைது செய்யப்பட்டது பற்றியும்,
அவர்களைச் சிறையில் அடைத்ததைப் பற்றியும் இங்கே ஒத்தி
வைப்புத் தீர்மானம் கொண்டு வந்து மாண்புமிகு உறுப்பி
னர்கள் கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள்.

இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு முழுப் பாதுகாப்பு
வேண்டும் ; அவர்களுடைய உயிருக்கும், உடைமைகளுக்கும்
பாதுகாப்பு வேண்டும் ; அவர்கள் வாழ்வு உரிமைகள் அத்
தனையையும் பெற வேண்டும் ; அவர்கள் ஒரு நாட்டிலே
வாழ்கின்ற சிறுபான்மையினர் எப்படிப்பட்ட அடிப்படையில்
அவர்களுக்குள்ள உரிமைகளைப் பெற்று வாழ்வார்களோ அந்த
அளவிற்கு இவர்களும் வாழ வேண்டும் என்ற இப்படிப்பட்ட
கருத்துக்களிலே இந்த மன்றத்திலே இருக்கின்ற எந்தக் கட்சி
யினருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. நல்லதொரு சூழ்நிலை
ஏற்பட வேண்டும் என்ற ஆர்வத்தைத்தான் இந்த மன்றமும்
பல தடவை வெளிப்படுத்தியிருக்கிறது. இந்த மன்றம் மட்டும்
அல்ல ; தமிழகத்திலே உள்ள ஐந்து கோடி மக்களும் தங்
களுடைய ஒருமித்த உணர்வைப் பல்வேறு வகைகளில் வெளிப்
படுத்துகின்ற அளவிற்கு ஏற்கனவே நாம் நிலைநாட்டி இருக்
கின்ற அந்தக் கருத்துக்களில் மாறுபாடு இல்லை. ஆகவே,
இலங்கையில் வாழ்கின்ற தமிழர்கள் அச்சமின்றி வாழ வேண்டும் ;
அவர்களது உயிருக்கும், உடைமைகளுக்கும் நல்ல பாதுகாப்பு இருக்க
வேண்டும் ; அவர்கள் அடிப்படை உரிமைகளைப் பெற்று—
சிறுபான்மையினருக்கு இருக்கின்ற அத்தனை உரிமைகளையும்
பெற்று வாழ வேண்டும் என்பதிலே எந்தக் கருத்து வேறுபாடும்
இல்லை.

(முற்பகல் 11-10)

ஆனால், அந்த நிலையை எப்படிச் செய்வது என்பதிலே
வேண்டுமானால் கட்சிக்குக் கட்சி கருத்து மாறுபாடுகள் இருக்கக்
கூடும் ; அணுகு முறையில் மாறுபாடுகள் இருக்கக் கூடும்.
ஆனால் அந்த உணர்ச்சியைப் பொறுத்தவரையில் இந்த
அரசுக்கு எவ்வித மாறுபட்ட எண்ணமும் இல்லை. அரசே
முன்னின்று, தமிழக மக்களின் சார்பாக ஒரு பொது வேலை
நிறுத்தம், பொது கதவடைப்பு என்று எல்லாக் கட்சியினரின்
முழு ஒத்துழைப்போடு, எல்லாத் தரப்பு மக்களின் முழு ஆதர
வோடு நடத்தி ஒருமித்த உணர்வை வெளிப்படுத்தினோம் என்
பதையும் நாம் நன்றாக அறிவோம்.

அந்த வகையில்தான் மத்திய அரசுக்குத் தூதுக்
குழுவாகச் சென்று நிலைமையை எடுத்துச் சொன்
னோம். மத்திய அரசும் தங்களால் இயன்ற
அளவுக்கு அந்தப் பிரச்சினைகளில் ஈடுபட்டு ஒரு சுமுகமான
சூழ்நிலை ஏற்படும் என்று கருதுகிற அளவுக்கு நடவடிக்கைகள்
எடுக்கப்பட்டு வந்தன. வட்ட மேஜை மாநாடு ஒரு முடிவான
தீர்வினைத் தரும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் வட்ட
மேஜை மாநாடு ஒரு தீர்வினைத் தராத அளவில் அந்த மாநாடு
ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்றது. இந்தச் சூழ்நிலையில் அங்கே
கலவரங்கள் ஏற்பட்டு, மீண்டும் துப்பாக்கிச் சூடுகளும்,
மற்றவைகளும் ஏற்பட்டு, கொள்ளைகளும், கொலைகளும்
நடப்பது தமிழக மக்களுக்குப் பெருத்த கவலையையும்,
பெருத்த துன்பத்தையும், துயரத்தையும் அளிக்கக்கூடியதாக
இருக்கின்றது, என்பதை நாம் அனைவரும் அறிவோம். அந்த
வகையிலே இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துச்
தெரிவித்த கருத்துக்களிலே அரசும் ஒன்றிப்போய் இருக்
கின்றது என்பதையும் மாண்புமிகு முதல்வர் அவர்களும், மற்ற
வர்களும் அந்தக் கருத்தினையே தெளிவுபட எடுத்துத்
தெரிவித்திருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்
கொள்கிறேன்.

ஆனால் மதுரையிலே நடைபெற்ற சம்பவம் இந்தக் கருத்
தினை அவர்கள் வெளிப்படுத்தினார்கள் என்பதற்காக அல்ல.
உள்ளபடியே இந்தக் கருத்திற்காக அவர்கள் யாரும் கைது
செய்யப்படவில்லை. அதாவது அந்தக் கருத்தினை வெளிப்
படுத்துகின்ற அந்தத் தன்மைக்காகவும் அவர்கள் கைது
செய்யப்படவில்லை. இன்னும் சொல்லப்போனால் இலங்கை
வாழ் தமிழர்களுக்காக இந்திய அரசு இலங்கைக்கு இராணு
வத்தை அனுப்பவேண்டும் என்று கோரிக்கை விடுவதைக் கூட
தடுத்துநிறுத்தவில்லை. அவ்வாறு கோரிக்கை விடுவது அவர்
களுடைய விருப்பம். ஆனால் அதை எந்த நேரத்தில் செய்
வது, எப்படிச் செய்வது, அல்லது செய்யாமல் இருப்பது
என்பன பற்றி எல்லாம் முடிவு கட்டவேண்டியது மத்திய
அரசினுடைய பொறுப்பு. ஆகவே கருத்து வேறுபாடு உடை
யவர்கள் என்பதற்காகவோ, அல்லது அப்படிப்பட்ட கருத்
களை வெளிப்படுத்துகிறார்கள் என்ற தன்மையாலோ அவர்
களை அடக்கி வைக்கவேண்டும் என்ற நிலைமை இல்லை.
மதுரையிலே இருப்பவர்கள் இப்படிக் கருத்துக்களை வெளிப்படுத்திய
வர்கள் அத்தனை பேர்களும் கைது செய்யப்படவில்லை. ஊர்வலங்கள்
நடத்துகின்றவர்கள் அத்தனை பேர்களும் கைது செய்யப்படவில்லை.
பேரணி நடத்துகின்ற அத்தனை பேர்களும் கைது செய்யப்படவில்லை.
மிகத் தீவிரமான கருத்துக்களை சொல்கின்ற அளவுக்கு தங்களுடைய
எண்ணங்களை வெளிப்படுத்துகின்றவர்கள் எல்லாம் கைது செய்யப்
படவில்லை, ஆனல் சட்டம், ஒழுங்கை மீறுகின்ற நடவடிக்கை
என்று வருகின்றபோதுதான். சட்டத்தைக் காப்பாற்ற வேண்டிய
பொறுப்பிலே இருக்கின்ற அரசு சிலபல நடவடிக்கைகளை எடுக்க
வேண்டி வருகின்றது.





இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பையா அவர்கள் பேசுகிறபோது திரு. நெடுமாறன் அவர்கள் இங்கே காரசாரமாகப் பேசியதை அடிப்படையாக வைத்துதான் அவர்களைக் கைது செய்திருக்கிறார்களோ என்று ஐயப்படவேண்டியிருக்கின்றது என்று சொன்னார்கள். ஆனால் உள்ளபடியே திரு. நெடுமாறன் அவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் எப்போதுமே காரசாரமாகப் பேசியது இல்லை. இன்னும் சொல்லப்போனால் திரு. கருப்பையா அவர்களைவிட திரு. நெடுமாறன் அவர்கள் காரசாரமாகப் பேசியதில்லை. மேலும் இங்கே அதைவிட தீவிரமாக கருத்துக்களை வழங்குகின்றவர்கள் எல்லாம் பலபேர் இருக்கின்றபோது அந்தக் காரணத்தை வைத்துத்தான் அவர்களை கைது செய்து உள்ளே அடைத்துவிட்டு இந்த மன்றத்தை நடத்திச் செல்லவேண்டும் என்ற சூழ்நிலை இல்லை என்பதை இந்த மன்றத்தின் நடவடிக்கைகளைத் தொடர்ந்து கூர்ந்து கவனித்துக் கொண்டிருப்பவர்கள் நன்கு அறிவார்கள். ஆகவே, அந்த முறையிலே அவர்களைக் கைது செய்து வைக்கவேண்டிய நிலைமை இல்லை.

திரு. மதுரை முத்து அவர்களைப் பொறுத்தவரையிலே இலங்கை வாழ் தமிழர்களைக் காக்க இந்திய அரசு இராணுவத்தை அனுப்பவேண்டும் என்று அவர்கள் வற்புறுத்துவதிலே தவறில்லை. ஆனால் அதற்காக மதுரையில் இரயில் நிறுத்தப் போராட்டத்தை நான் நடத்துவேன் என்று சொல்லிக்கொண்டு இரவு 7.25 மணிக்குக் கிளம்புகின்ற பாண்டியன் எக்ஸ்ப்ரஸ்ஸை நான் நிறுத்துவேன் ; மறியல் செய்வேன் என்று சொல்லியதின் காரணத்தால்தான் சட்டம், ஒழுங்கைக் காப்பற்றவேண்டிய பொறுப்பு அரசுக்கு ஏற்படுகின்றது. இரவு 7-25 மணிக்கு ஒரு பெருங்கூட்டம் சென்று இரயிலை அடையாளமாக நிறுத்தி விடும் என்கின்றபோது இப்படிப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளை, நாட்டிலே கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கின்ற ஒரு அரசு அதைத் தடுத்து நிறுத்தவேண்டிய ஒரு கட்டத்துக்கு வருகின்றது. ஆகவே அவர்கள் மறியல் செய்வேன் என்று சொன்னதின் காரணமாக, அதைத் தடுத்த நிறுத்தவேண்டிய . அவசியம் அரசுக்கு ஏற்பட்டதன் காரணமாக மதுரை முத்து அவர்களையும், அவர்களைச் சேர்ந்த ஹீராபாய், சின்னசாமிக்கோனார், பாரதியன், ஜான் மோஸஸ், ஜகதீசன் ஆகியவர்களையும் வீட்டை விட்டுக் கிளம்புகின்றபோதே தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் முன்கூட்டியே அவர்களைத் தடுத்து நிறுத்துகின்ற வகையிலே 151 செக்ஷன் மூலமாக அவர்களைக் கைது செய்து பின்னர் அவர்களை விடுதலை செய்தார்கள். ஊர்வலம் எங்கிருந்து துவங்கும் என்று சொல்லி, அங்கே இருந்து கிளம்பி ஊர்வலமாகச் சென்று இரயிலை நான் நிறுத்துவேன் என்று சொன்ன இடத்திலே அவர்களை வழியனுப்புவதற்காக திரு. நெடுமாறன் அவர்கள் வந்தார்கள் என்று சொல்கிறார்கள். அது உண்மை. அவர்கள் வழியனுப்ப வந்ததற்காகவும் அவர்கள் கைது செய்யப்படவில்லை; அவர்கள் போராட்டத்திற்காக வந்தார்கள் என்பதற்காகவும் அவர்கள் கைது செய்யப்படவில்லை. ஆனால் திரு. முத்து கைது

செய்யப்பட்டுவிட்டார் என்ற செய்தி வந்த உடனே 'நானே ஊர்வலத்திற்குத் தலைமை தாங்கி நானே சென்று மறியல் நடத்துவேன்' என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்கள் அறிவித்தார்கள். அங்கே தடை உத்தரவு இருப்பதன் காரணமாக மறியல் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என்பதற்காக அவர்கள் அத்தனை பேர்களும் கலைந்து செல்லவேண்டும் என்று போலீசார் பல தடவை எச்சரித்தும் கூட 'நான் தலைமை தாங்கி நடத்துவேன்' என்று சொல்லிக்கொண்டு 78 பேரோடு மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்கள் புறப்பட்டு 'மறியலுக்காகப் போகிறேன்' என்று சொல்லி அந்த ஸ்பாட்டிலே தடை உத்தரவை மீறிய காரணத்தால்தான் அவர்களையும், அவர்களைச் சேர்ந்தவர்களையும் கைது செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதற்குப் பிறகு ஒரு அரை மணி நேரம் கழித்து 37 பேர் நாங்களும் புறப்படுவோம் என்று சொல்லி அந்த இடத்திலே இருந்து புறப்பட்டார்கள். அவர்களும் கைது செய்யப்பட்டார்கள். அவர்களிலே கிட்டத்தட்ட 23 பேர்கள் சொந்த ஜாமீனில் வந்தார்கள். மற்றவர்கள் அத்தனை பேரும் அடைக்கப்பட்டார்கள். திரு. நெடுமாறன் மட்டும் அடைக்கப் பட்டிருக்கிறார் என்று அல்ல. இந்தக் குற்றத்தைச் செய்தார்கள் என்பதற்காக அவர்கள் அடைக்கப்பட்டார்கள். ஒரே குற்றத்தைச் செய்த இரண்டு பேருக்கு இரு வேறு தண்டனையா என்றார்கள். திரு. முத்து பிரிவன்டிவ் டிடென்ஷன் என்ற அளவுக்கு, ஒரு குற்றத்தைச் செய்வதற்கு முன்னாலே அவர்கள் கைது செய்யப்பட்டதன் காரணமாக, 151-ன்கீழ் கைது செய்வதும் அந்த நிகழ்ச்சிகள் நடந்து முடிந்த பிறகு விட்டுவிடுவதும் அவர்கள் மேல் எந்த வழக்கும் தொடுக்காமல் இருப்பதும் தொடர்ந்து நாம் அரசியலிலே கண்டுகொண்டிருக்கின்றவைதான். ஆனால், திரு. நெடுமாறனைப் பொறுத்தவரையில் நான் மீறுவேன் என்று சொன்னதோடு மட்டும் இல்லாமல் 78 பேர்களை வைத்துக்கொண்டு மீறிச் சென்றதன் காரணமாக அந்த வழக்கு அவர்கள் மீது போடப் பட்டிருக்கிறது. ஆகையினாலேதான் அவர்கள் கைது செய்யப் பட்டு சிறையிலே அடைக்கப்பட வேண்டிய அவசியம் வந்தது. திரு. மதுரை முத்து கூட மறுபடியும் உள்ளேதான் போவேன் என்று சொல்லி உட்கார்ந்து கொண்டு மறியல் செய்த காலத்திலே அவர்களை மறுபடியும் கைது செய்து விட்டிருக்கிறார்கள். இப் பொழுதிருக்கிற சூழ்நிலையில் அவர்களை உள்ளே வைக்க வேண்டுமென்ற எண்ணம் கிடையாது.

இன்றைக்கு மாலை 4 மணி அளவிலே சட்டமன்ற மேலவை- பேரவையைச் சேர்ந்த எல்லா கட்சித் தலைவர்கள் அடங்கிய ஒரு கூட்டத்தை மாண்புமிகு முதல்வர் கூட்டி, ஓரளவுக்கு எல்லோருடைய கருத்தையும் . : (திரு துரைமுருகன் குறுக்கீடு) பிரிவென்டீவ் டிடென்ஷன் என்று சொல்லும்போது வீட்டை விட்டுக் கிளம்பும்போது கூட 151 பிரிவுப்படி கைது செய்யப் படலாம்.





திரு. துரைமுருகன் : ஒரு விளக்கம் . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 3 பேர்கள் பேசுவது என்ற வழக்கம் வைத்துக் கொள்ளாதீர்கள். உங்கள் கட்சியின் சார்பிலே நீங்கள் பேசுவதாக இருந்தால் பேசுங்கள். அல்லது உங்களைவிட தெளிவாக, திரு. ரகுமான்கான் பேசுவாரானால் அவரைப் பேச விடுங்கள். ஒவ்வொருவரும் எழுந்து இந்த மாதிரி பேசாதீர்கள்.

திரு. துரைமுருகன் : நீங்கள் சொன்னால் நான் உட்கார்ந்து விடுகிறேன். திரு. முத்து குறுக்கே உட்கார்ந்து மறித்திருக் கிறார். அவரைக் கைது பண்ணினார்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள்.

திரு. அ. ரகுமான்கான் ; பொது ஊழியரைத் தடுத்தார் என்று வழக்கு போட்டு கைது செய்து பழையபடி விட்டு விட்டார் கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதிகாரி களைத் தடுத்ததன் காரணமாகக் கைது செய்யப்பட்டார். தொடர்ந்து பல ஆட்சிக் காலங்களிலே பார்ப்போமானால், எந்த, எந்த வழக்குகளில், எந்த, எந்தச் சூழ்நிலைகளில், எப்படி, எப்படி முறைகளைக் கடைப்பிடித்திருக்கிறார்கள் என்பதும் எந்த, எந்த அளவுக்கு நடத்தப்பட்டது என்பதும் தெரியும். (குறுக்கீடு) திரு. முத்துவைக் கைது செய்தது ரெயிலை மறியல் செய்கின்ற செயலுக்காக அல்ல. அதிகாரிகளை வேலை செய்ய விடாமல் தடுத்ததற்காக அவர்கள் கைது செய்யப்பட்டு, அந்த வகையிலே விடப்பட்டார். திரு. நெடுமாறன் அதே முறையில் ஈடுபட்டிருப்பார்களானால் விடப்பட்டிருப்பார். ஆனால் ரெயிலை நிறுத்த வேண்டுமென்று போனதற்காக, அதைத் தடுத்து நிறுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டதன் காரணமாக, அவர்கள் கைது செய்யப்பட்டு விடப்பட்டிருக்கிறார்களே தவிர, இப்பொழுதுகூட தெளிவான அளவுக்கு அது அன்றோடு நின்று விட்டது, இனிமேல் தொடராது, இனிமேல் அத்தகைய நிலைமை இருக்காது. மறுபடியும் ரெயில் நிறுத்தப் போராட்டம் நடத்த வேண்டிய அவசியம் இல்லையென்ற சூழ்நிலை ஏற்படுமானால் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் எடுத்துச் சொன்ன கருத்துக் களின் அடிப்படையிலே அரசு அதைப்பற்றிச் சிந்தித்து நல்ல தொரு முடிவு எடுக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் எடுத்து தெரிவித்துக் கொள்கிறேன். அதைத்தான் நான் சொல்ல வந்தேன். மாலை 4 மணிக்கு, சட்டமன்ற பேரவை — மேலவை யைச் சேர்ந்த தலைவர்கள் அத்தனை பேர்களுடைய கூட்டம் நடைபெற இருக்கிறது. அதிலே ஒருமித்த கருத்தை எடுத்துச் சொல்வதற்கு வழியும் இருக்கிறது. இந்தப் பிரச்னையைப் பொறுத்தவரையில் எதிர் காலத்தில் நாம் எடுத்துக் கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் என்ன என்பது பற்றி ஆராயவும் வழி இருக்கிறது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1984 ஏப்ரல் 16

அது மட்டுமல்லாமல், சட்டமன்றத்திலே இருக்கிற கட்சிகள் மட்டும் அல்லாமல், வெளியிலே இருக்கிற கட்சிகள் அத்தனை பேரும் சேர்ந்து இன்றைக்கு எடுக்கின்ற முடிவின் அடிப்படையில் நாளைக்கும் பேசுவதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் முடிவெடுத்திருக்கிறார்கள். ஏன் இதையெல்லாம் நான் சொல்ல முடி வருகிறேன் என்றால், எந்த உள்நோக்கத்தையும் சொல்ல கொண்டு, காழ்ப்புணர்ச்சியை வைத்துக் கொண்டு, வைத்துக் உறுப்பினர் திரு. நெடுமாறன் இந்தக் கூட்டத்திலே மாண்புமிகு கொள்ளக் கூடாது என்ற நோக்கத்தின் அடிப்படையிலே கலந்து என்பதையும் சட்டதிட்டம் ஒழுங்கு காப்பாற்றப்பட இல்லை மென்ற தன்மையினுடைய அடிப்படையிலேதான் வந்தது, வேண்டு தொடராது, இதற்கு ஒரு தெளிவு இருக்கிறது என்று இது திலே அல்லது அவரைச் சேர்ந்தவர்களிடத்திலேயிருந்து அவரிடத் ஒரு அறிக்கையும் இது தொடராது, ரெயில் எந்த போராட்டம் நடைபெறாது என்ற நிலைமையில் நிறுத்தப் அப்படி இருக்குமானால் அரசு அதைப்பற்றித் தக்கதொரு முடிவை, வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களின் அடிப்படையிலே எடுக்கும் என்பதை மட்டும் இந்த வாய்ப்பிலே நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே, காழ்ப்புணர்ச்சி எதுவும் இல்லை. இருக்கிற சட்டதிட்ட ஒழுங்கைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகத்தானே தவிர வேகமாக கருத்துக்களை வெளிப்படுத்தினார்கள் என்பதற்காக அல்ல. பல்வேறு வகையிலே, இன்னும் சொல்லப்போனால், பல்வேறு வகையிலே காரசாரமாகக் கூட, இன்னும் கொஞ்சம் கடுமையாகக் கூட விமர்சிக்கின்ற யார் மீதும் எந்த விதமான நடவடிக்கைகையும் இந்த அரசு எடுக்கவில்லை, எடுப்பதும் இல்லை. ஆனால் ஒருமித்த கருத்தின் அடிப்படையில் வந்து இலங்கை வாழ் தமிழர்களுக்கு நல்ல உரிமையும், அவர்களுக்குப் பாதுகாப்பும் அளிக்கவேண்டும் என்பதுதான் அரசின் நோக்கம். அந்த நோக்கத்தை நிறைவேற்ற எல்லா அரசியல் கட்சித் தலைவர் களும் தங்களுடைய முழு ஒத்துழைப்பையும், ஆதரவையும் தர வேண்டும் என்று கேட்டு, இதற்கு மேல் இது குறித்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று குறிப்பிட்டுக் கூறி முடிக் கிறேன்.

(முற்பகல் 11-20)

திரு. அன்பில் தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, இன்று மாலை நடக்கும் கூட்டத்திற்கும், நாளை நடைபெற இருக்கும் கூட்டத்திற்கும் தமிழ் நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சியின் சார்பில் திரு. நெடுமாறன் அவர்கள் கலந்து கொள்ள இருக் கின்றார். எனவே அவரை அரசு விடுதலை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விடுதலை செய்தாலும், எப்படியும் இன்றைய கூட்டத்திற்கு மதுரையிலிருந்து வந்து கலந்து கொள்ள முடியாது.



1984 ஏப்ரல் 16]

திரு. என். சங்கரய்யா : தலைவர் அவர்களே, அமைச்சரின் பதில் திருப்தியாக இல்லை. அரசாங்கம் பாரபட்சமாக நடந்து கொள்கிறது என்ற தோற்றம் ஏற்படுகிறது. ஆகவே, இந்தப் பிரச்னையின் தன்மையை உத்தேசித்து மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அவரை விடுதலை செய்யவேண்டும், நிபந்தனை இன்றி விடுதலை செய்ய வேண்டும் என்று வற்புறுத்துகிறோம். அவர் விடுதலை செய்யப் பெறாததைக் கண்டித்து அவையை விட்டு நாங்கள் வெளியேறுகிறோம்.

[கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்ஸிஸ்ட்) உறுப்பினர்கள் வெளி நடப்பு செய்தனர்.]

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது காழ்ப்புணர்ச்சியோடு, உள் நோக்கத்தோடு கைது செய்யப்படவில்லை என்று சொன்னார்கள். ஒரே விதமான போராட்டத்தில் கலந்து கொண்ட ஒருவரை விடுதலை செய்து விட்டு, ஒருவரை வேண்டுமென்றே சிறைச் சாலையில் வைத்து இருப்பது காழ்ப்புணர்ச்சியோடும், உள் நோக்கத்தோடும் செய்யப்பட்டது என்று நாங்கள் கருதுகிறோம். ஆகவே, விடுதலை செய்ய வேண்டும் என்று நாங்கள் அத்தனை பேரும் கோரிக்கை வைத்தும், அதை ஏற்றுக்கொள்ளாத காரணத் தால், அதைக் கண்டிக்கும் முறையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் வெளிநடப்பு செய்கிறோம்.

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்)

திரு. அன்பில் தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, இன் றைக்குக் கூட ஜெயவர்த்தனே, தமிழர்களைக் கூண்டோடு அழித்து விடுவேன் என்று சொன்னதற்குப் பிறகும் கூட, அதற்காக, தமிழர்களுக்காகப் போராடிய திரு. நெடுமாறன் அவர்களை விடு தலை செய்யாதது, இந்த அரசு இந்திய அரசு இலங்கை அரசுக்குத் துணையாக இருக்கிறதோ என்று கருதி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்)

* * * * *

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் சொன்ன பதிலில் அதை அறிவித்தது அவர் கட்சியைச் சேர்ந்த மூத்தத் தலைவர், அவர் அடையாளப் போராட்டம் நடத்துகிறேன் என்று சொன்னதாகச் சொன்னார். ஆனால் அவரை வரவிடாமல் தடுத்து நிறுத்தி விட்டார்கள். அவரை வாழ்த்தி அனுப்புவதற்கும், ஆதரவு கொடுத்து அனுப்புவதற்கும் எங்கள் தலைவர் சென்றார். அங்கே தொண்டர்கள் மத்தியில் ஏற்பட்ட டென்ஷனைக் குறைப்பதற்

மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

காக, தொண்டர்கள் மத்தியில் இருந்த பரபரப்பைக் குறைப்பதற்காக அவர்கள் சொன்னார்கள். நானே தலைமை தாங்கி நடத்துகிறேன். அமைதியாக வாருங்கள் என்று சொன்ன ஒரே காரியத்தைத் தவிர வேறு எந்தக் குற்றத்தையும் செய்யாத திரு. நெடுமாறன் அவர்கள் இன்றைக்கு கைது செய்யப்பட்டு, இத்தனை கட்சிக்காரர்கள் சொல்லியும் கூட, இன்றைக்கும் அவரை விடுதலை செய்யமாட்டோம், அதைப் பார்த்துக் கொள்ளலாம் என்று அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்களானால், இது எத்தகைய கொடூரமான செயல் என்பதை நான் இந்த மன்றத்தில் கடுமையாகக் கண்டித்து, எங்கள் தலைவர் நெடுமாறன் அவர்களை விடுதலை செய்யாத காரணத்தினாலும், இந்தப் பிரச்சினையில் ஓரவஞ்சனையாக இந்த அரசாங்கம் நடந்து கொள்கிறது என்ற காரணத்தினாலும், நான் இந்த அவையை விட்டு வெளியேறுகிறேன்.

(தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் வெளிநடப்பு செய்தார்.)

**திரு. ஆர். நவநீத்கிருஷ்ண பாண்டியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காகப் போராடிய மாண்புமிகு நெடுமாறன் அவர்களை 15 நாட்கள் ரிமாண்டில் வைத்து இருப்பதைக் கண்டித்து காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் நான் வெளிநடப்பு செய்கிறேன்.

(காந்தி —காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் வெளிநடப்பு செய்தார்.)

**திரு. ஏ. சாகுல் ஹமீது :** தலைவர் அவர்களே, இன்றைக்கு எதிர்க்கட்சிகள் அனைத்தும் கூட நம்முடைய உறுப்பினர் நெடுமாறன் அவர்களை விடுதலை செய்யவேண்டும் என்று கோரியதை இந்த அரசு புறக்கணித்த காரணத்தால் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சார்பில் நான் வெளிநடப்பு செய்கிறேன்.

(இந்திய யூனியன் முஸ்லீம் லீக் உறுப்பினர் வெளிநடப்பு செய்தார்.)

**திரு. பொ. விஜயராகவன் :** தலைவர் அவர்களே, இன்றைக்கு எல்லா அரசியல் கட்சிகளும் இந்த நிகழ்ச்சியை வன்மையாகக் கண்டித்தும் (குறுக்கீடு)—அவர்களும் மனதளவிலே கண்டித்துக் கொண்டு இருப்பார்கள் —அரசு இந்த அளவிற்கு இந்தப் பிரச்சினையிலே மிகக் கடுமையாக இருந்து, சட்டமன்றம் நடந்து கொண்டு இருக்கும் நேரத்தில் சட்டமன்ற உறுப்பினராக இருக்கும் நெடுமாறன் அவர்கள் சட்டமன்றத்திற்கு வந்து நிகழ்ச்சிகளிலே கலந்து கொள்ள வழிவகை செய்யாமல் அவரைக் கைது செய்து வைத்திருப்பதும், அவரை விடுதலை செய்யாமல் இருப்பதும் கண்டிக்கத்தக்கது. அதைக் கண்டிக்கும் வகையில் ஜனதா கட்சியின் சார்பில் நான் வெளிநடப்பு செய்கிறேன்.

(ஜனதா கட்சி உறுப்பினர் வெளிநடப்பு செய்தார்.)





**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மீண்டும் ஒன்றை நினைவு படுத்த விரும்புகிறேன். இலங்கை அதிபர் ஜெயவர்த்தனே அவர்களை எதிர்ப்பதற்கோ, அவருடைய அட்டூழியங்களை கண்டிப்பதற்கோ, அங்கே நடைபெறுகின்றவைகளைக் கண்டித்து தீர்மானம் மற்றவைகள் போடுவதற்கோ இந்த அரசு எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அங்கே தமிழர்கள் பாதுகாக்கப்படவேண்டும் என்று கூறி எடுத்துச் சொல்லப்படுகிற எல்லாக் கருத்துக்களுக்கும் இந்த அரசு இடம் தந்து வருகிறது. மத்திய அரசு எப்படி நடக்கிறது, எப்போது எப்படி நடக்க வேண்டுமென்று பலரும் பல்வேறுவிதமான கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். கருத்துக்களைச் சொல்ல உரிமை இருக்கிறது. அந்த அடிப்படையில்தான் சில கட்சிகள் இராணுவத்தை அனுப்ப வேண்டுமென்று சொல்கிறார்கள். சிலர் தமிழ் இனத்தை அழித்துக் கொண்டிருக்கிறார்கள், இந்த அநியாயத்தைத் தடுத்து நிறுத்த வேண்டும். தடுத்து நிறுத்தவேண்டிய கடமை நமக்கு இருக்கிறது என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட கருத்துக்கள் எடுத்துவைப்பதை யாரும் தடுக்கவில்லை.

திரு. நெடுமாறன் அவர்கள் மீது இந்த அரசுக்கு காழ்ப்பு உணர்ச்சி இருக்கிறது. அவர் கடுமையாக அரசின் கொள்கைகளை விமரிசிக்கிறார் என்று சொன்னார்கள். திரு. நெடுமாறன் அவர்கள் எந்தக் கட்டத்திலும் காரசாரமாகப் பேசினார் என்றோ, கடுஞ்சொல்லைப் பயன்படுத்தினார் என்றோ நாங்கள் கருதவில்லை. அவர் அப்படி நடந்துகொள்வார் என்ற அச்சம் எங்களுக்குச் சிறிதும் இல்லை. இந்த மன்றத்தில் அவர்கள் கலந்து கொண்டு நல்ல ஆலோசனைகளை வழங்க வேண்டும் என்றுதான் நாங்கள் விரும்புகிறோம்.

அவர் ஏன் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்பதற்கான காரணங்களை நான் ஏற்கெனவே விளக்கினேன். நானே தலைமை தாங்குவேன். நானே மறியல் செய்வேன் என்று சொல்லி, அந்த முயற்சியிலே ஈடுபட்டதால்தான் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இலட்சக்கணக்கான மக்கள், கோடிக்கணக்கான மக்கள் தங்களுடைய உணர்வுகளை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் அவர்கள் எல்லாம் கைது செய்யப்படவில்லை. நண்பர் நெடுமாறன் அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்னால் காரசாரமாகப் பேசியிருக்கிறார்கள். என்றாலும் அவர் கைது செய்யப்படவில்லை. அவர் காரசாரமாகப் பேசினார் என்பதற்காக அவர்மீது நாங்கள் கட்சிமாச்சரியம் கொள்ளவில்லை. அன்று இரவு 7-25 மணிக்கு இரயில்வே ஸ்டேஷனுக்குப் போகிறார்கள். அப்போது அவரை மறியல் செய்ய விடாமல், கைது செய்யாமல் விட்டிருந்தால் என்ன நிலைமை ஏற்பட்டிருக்கும், என்ன விளைவுகள் ஏற்பட்டிருக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்கள் பெயரால் சமூக விரோதிகள் தகாத முறையில் நடந்து கொண்டால் ஏதாவது

அசம்பாவிதங்கள் நடைபெற்றிருந்தால் அப்போதும் இந்த
மன்றத்தில், "ஏன் இந்த அளவுக்கு விட்டீர்கள், ஏன் முன்
கூட்டியே நடவடிக்கை எடுக்கவில்லை, ஏன் முன்கூட்டியே
தடுக்கவில்லை, 151-வது செக்ஷனை ஏன் பயன்படுத்தவில்லை"
என்று கேட்பார்கள். அது மட்டுமல்ல. நீங்கள் தடுத்திருக்கலாம்.
இதற்கு முன்னால் ஏற்கெனவே இருந்த அரசு எப்படி நடந்திருக்
கிறது, எப்படி அமைச்சர்கள் நடந்துகொண்டிருக்கிறார்கள்
என்றெல்லாம் அறிவுரை கூறுவார்கள். ஆகவேதான் இப்படிப்
பட்ட சந்தர்ப்பங்களில் 151-வது செக்ஷன்படி நடவடிக்கை
எடுக்கிறார்கள், தடுக்கிறார்கள். கைது செய்கிறார்கள்,
விடுதலை செய்கிறார்கள்.

நண்பர் திரு. ப. நெடுமாறன் அவர்கள் மறியல் செய்வேன் என்று
சொன்னார்கள். நீங்கள் அந்த முயற்சியில் ஈடுபடக்கூடாது.
ஊர்வலம் நடத்த தடை இருக்கிறது, ஆகவே ஊர்வலம்
நடத்தக் கூடாது என்று அதிகாரிகள் சொன்னார்கள். 78 பேர்
களுடன் திரு. நெடுமாறன் அவர்கள் ஊர்வலமாக வந்திருக்கி
றார்கள். அவர்களை எல்லாம் கைது செய்திருக்கிறார்கள்.
நண்பர் நெடுமாறன் அவர்களுடன் 37 பேர்களை கைது செய்
திருக்கிறார்கள். திரு. நெடுமாறன் அவர்களை ஏன் விடுதலை
செய்யவில்லை என்று கேட்டார்கள். 151-வது பிரிவின்கீழ்
காங்கிரஸ் ஆட்சியிலும் கைது செய்திருக்கிறார்கள். அதற்குப்
பின்னாலே கலைஞர் ஆட்சியிலும் கைது செய்திருக்கிறார்கள்.
அப்படி கைது செய்யப்படுபவர்கள், காலை கைதானால் மாலை
யில் விடுதலை செய்வது வழக்கம். ஆனால் நண்பர் நெடுமாறன்
அவர்கள் கைது செய்யப்பட்டது வேறு செக்ஷனிலே வருகிறது.
ஆகவேதான் அவர்கள் விடுதலை செய்யப்படவில்லை.
தொடர்ந்து இரயில் நிறுத்தப் போராட்டம் நடக்காது
என்ற சூழ்நிலை இருந்தால், தொடர்ந்து அவர்களை சிறையில்
வைக்க வேண்டுமா என்பதை எல்லாம் முதலமைச்சர் அவர்கள்
கவனிப்பார்கள் என்று நான் சொன்னேன். அது மட்டுமல்ல,
இன்று மாலை சர்வ கட்சிகள் கூட்டம் நடக்கவிருக்கிறது.
அங்கே அனைவரும் கருத்துத் தெரிவிக்கும் வாய்ப்பு இருக்கிறது
என்பதை மட்டும் நான் இந்த நேரத்தில் அவைக்குத் தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவரவர்களே, திராவிட
முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. அன்பில் தர்மலிங்கம் அவர்கள்
வெளிநடப்புச் செய்கிறபோது இலங்கை அரசுக்குத் துணையாக
இந்த அரசும் மத்திய அரசும் காரியங்களைச் செய்கிறார்கள்
என்று சொல்லி வெளிநடப்புச் செய்தார்கள். அதற்கு எங்க
ளுடைய கடுமையான ஆட்சேபனையைத் தெரிவித்துக்கொள்
கிறேன். இப்படிப்பட்ட செய்திகள் வெளியே போனால் மக்கள்
மத்தியிலே ஒரு தவறான எண்ணம் உருவாகிவிடும். இந்தியப்
பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையாரைப் பொறுத்தவரை
யில், அரசியல் ரீதியாக இதற்கு ஒரு தீர்வு காணவேண்டுமென்று
விரும்புகிறார்கள். அந்தக் கருத்திலேதான் நாங்கள் எல்லாம்
இருக்கிறோம். நாம் இலங்கை தமிழர்களுக்குத் துணையாக



இருக்க வேண்டும் என்பதும், நமக்குள்ள உணர்வுகளைக் காட்டுவது என்பதும் வேறு பிரச்சனை. ஆனால் அவர்கள் கூறிய வார்த்தைகள் தவறான எண்ணத்தை ஏற்படுத்துவதால் அவைக் குறிப்பிலிருந்து அவற்றை நீக்கிவிடுவது நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவர் இந்திய அரசு, தமிழக அரசு இரண்டையும் சேர்த்துதான் சொல்லியிருக்கிறார். அவைக் குறிப்பிலிருந்து நீக்கக்கூடிய அளவுக்கு ஒன்றும் இல்லை என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறும்போது இரண்டு அரசுகளையும் குற்றஞ்சாட்டிச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் அதற்கு ஆட்சேபனை தெரிவிக்கிறார்கள். மத்திய அரசோ, மாநில அரசோ இந்தப் பிரச்சனையில் இலங்கை அரசுக்குத் துணையாக இருக்கவில்லை. அங்கே இருக்கிற தமிழ் மக்களுடைய வாழ்வுக்கு இரண்டு அரசுகளும் பாடுபடுகின்றன என்ற கருத்தை நான் தெரிவித்துக் கொள்கிறேன். நான் தெரிவித்திருக்கிற இந்தக் கருத்துகளோடு அவர்களுடைய கருத்துக்களும் இருக்கலாம், நீக்க வேண்டியதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர்கள் வெளியேறும்போது எழுப்பிய கோஷங்கள் எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அவை முன்னவரின் விளக்கத்திற்குப்பின், பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

(முற்பகல் 11-30)

### 4. கவன ஈர்ப்பு.

### அம்பத்தூரில் தொழிற்பேட்டை தொழிலாளர் குடியிருப்புப் பகுதியில் கழிவு நீர் குடிநீரோடு கலப்பது.

**திரு. ஜே. சி. டி. பிரபாகரன் :** தலைவர் அவர்களே, "அம்பத்தூர் தொழிற்பேட்டையிலுள்ள தொழிலாளர் குடியிருப்புப் பகுதியில் குடிநீரோடு கழிவு நீர் கலப்பது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[1984 ஏப்ரல் 16

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் :** மாண்புமிகு மாற்றுத்<br>தலைவர் அவர்களே, அம்பத்தூர் தொழிற்பேட்டையில் உள்ள<br>தொழிலாளர் குடியிருப்புப் பகுதியில் வழங்கப்படும் குடிநீரில்<br>அசுத்தம் கலந்ததாக 1982 ஜனவரி மாதத்தில் அறியப்பட்டது.<br>உடனடியாக விரிவான சோதனைகள் செய்யப்பட்டன. கழிவுநீர்க்<br>குழாயிலும், தொழிலாளர் குடியிருப்புக்கு குடிநீர் வழங்கும்<br>குழாயிலும், துருபிடித்து அக்குழாய்கள் ஒன்றோடொன்று<br>குறுக்காக செல்லுமிடத்தில் கசிவு ஏற்பட்டுள்ளது, இந்தச்<br>சோதனைகள் மூலம் கண்டறியப்பட்டது. இதனால்<br>தொழிலாளர் குடியிருப்புப் பகுதிக்கு செல்லும் குடிநீர்<br>தூய்மையற்றதாகிவிட்டது.

உடனடியாக இதேமாதிரியான இடங்களில் உள்ள கழிவு<br>நீர் குழாய்கள் மற்றும் குடிநீர்க் குழாய்கள் பரிசோதிக்கப்பட்டன.<br>குடிநீர்க் குழாய்கள் மாற்றியமைக்கப்பட்டு சீர் செய்யும் வேலை<br>கள் செய்யப்பட்டுள்ளன. தனியாக மேல்மட்ட தண்ணீர்<br>தொட்டி ரூ. 1·2 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது.<br>மேலும் தொழிலாளர் குடியிருப்புப் பகுதிகளில் தனியாக குடிநீர்<br>இணைப்புகள் ஏற்படுத்துவதுபற்றி பரிசீலிக்கப்பட்டு வருகிறது.<br>கழிவு நீர்க் குழாய்களும், குடிநீர்க் குழாய்களும் ஏறத்தாழ 20<br>ஆண்டுகளுக்கு முன்பு அதாவது 1964-ம் ஆண்டில் போடப்பட்ட<br>தால் இந்தக் குழாய்களில் பாதிப்பு ஏற்பட்டது.

அம்பத்தூர் தொழிற்பேட்டையில் தொழிலாளர் குடியிருப்<br>பில் வழங்கப்படும் குடிநீர் அசுத்தமடையாமல் தடுக்க<br>சிட்கோ நிறுவனம் உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

**திரு. ஜே. சி. டி. பிரபாகரன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர்<br>அவர்களே, அந்தத் தொழிலாளர்களுடைய குடியிருப்பிலுள்ள<br>பொதுமக்கள் பிரச்சினையில் இதுவரைக்கும் எந்த நடவடிக்கையும்<br>எடுத்ததாகத் தெரியவில்லை. எல்லா குடியிருப்புகளுக்கும் நல்ல<br>குடிநீர் கொடுக்கவேண்டும். சாக்கடை நீர் வெளியேற்றப்படு<br>கின்ற இடத்தில் அடைப்பு இருந்துகொண்டிருக்கிறது. அதைச்<br>சரிசெய்யவேண்டுமென்ற கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள்.<br>அவைகளை எல்லாம் சரிசெய்யவேண்டும். உடைந்த குழாய்<br>களை புதுப்பித்து மாற்றவேண்டும். 22, 23, 24 பிளாக்குகளுக்கு<br>உடனடியாக டிரைனேஜ் அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்<br>கிறேன். புதிய குடியிருப்புகள் தெரு விளக்குகள் இல்லாமல்<br>இருக்கிறது. அதைப்போல் மாடிப் படி ஏறுகிறபோது அங்கே<br>மின்சார பல்புகள் இல்லாத காரணத்தால் மக்கள் மிகவும் அல்லல்<br>களுக்கும், தொல்லைகளுக்கும் ஆளாகியிருக்கிறார்கள். சிறுவர்<br>சிறுமியர்கள் விளையாடுவதற்கு விளையாட்டுத் திடலும்,<br>விளையாட்டு சாதனங்களும் அளித்திடவேண்டும். குடியிருப்<br>பின் கிழக்குப் பகுதியிலே மதில் சுவர் இல்லாத காரணத்தினால்<br>திருடர்களுடைய பயமும், வழிப்போக்கர்கள் உள்ளே நுழைந்து<br>விடுகின்ற நிலைமையும் இருக்கிறது. எனவே, கிழக்குப் பக்கத்<br>தில் மதில் சுவர் கட்டவேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்



கிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்தத் துறையின்<br>சார்பில் இந்தப் பணிகளைச் செய்வதோடு, அங்கே வாடகைக்<br>குடியிருப்பில் உள்ளவர்களுக்கு, சொந்தக் குடியிருப்புகளாக<br>மாற்றித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச்<br>செய்தால், அந்த வசதிகளை அவர்களே செய்துகொள்வதற்கு<br>வாய்ப்பு இருக்கும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் கே. சமரசம்):**<br>நீங்கள் கேட்பதற்கும் கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கும் சம்பந்தம்<br>இல்லாமல் இருக்கிறது. அம்பத்தூர் தொழிற்பேட்டையிலுள்ள<br>தொழிலாளர்களின் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்ப்பதற்கு<br>ஆவன செய்ய வேண்டுமென்று கேட்பதோடு நிறுத்திக்<br>கொள்ளுங்கள்.

**மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் :** மாண்புமிகு மாற்றுத்<br>தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய அத்தனை<br>கருத்துக்களில், வீடுகளைச் சொந்தமாக ஆக்குவது தவிர, மற்ற<br>அனைத்திற்கும், உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். வீடுகள்<br>சொந்தமாக்கப்படுவது குறித்து, நடைமுறைச் சிக்கல்கள் இருக்<br>கின்றன. காரணம் சிட்கோ நிறுவனங்களில், அங்கே தொழிலதி<br>பர்கள் தொழில் செய்யும் நேரத்தில், தொழிலாளர்களுக்காக<br>வீடுகள் ஒதுக்குகிறார்கள். அதே சமயத்தில் வேறு பகுதிகளிலும்<br>தொழில்களை நடத்துகிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில்<br>வீடுகள் கொடுக்கப்பட்ட பிறகு, அந்தத் தொழிலாளர்கள் ஒரு<br>பகுதியிலிருந்து, வேறொரு பகுதிக்கு மாற்றப்படுகின்ற நேரத்<br>தில், வீடுகளை காலி செய்யவேண்டிய நிர்பந்தம் ஏற்படுகிறது.<br>ஆகவே வேலை செய்பவர்களுக்குத்தான் வீடுகள் என்ற விதி<br>இருக்கிறது. தற்போது உரிமையாக ஆக்கப்படுவது பற்றி அரசின்<br>பரிசீலனையில் இல்லை. என்றாலும் தக்க நேரத்தில் அது பற்றி<br>நடவடிக்கை எடுக்க அரசு தயாராகயிருக்கிறது.

**திரு. ஜே. சி. டி. பிரபாகரன் :** மாற்றுத் தலைவர் அவர்களே,<br>ஒரிஜினலாக 1964-ல் ஒதுக்கப்பட்ட அந்தத் தொழிலாளர்களுக்கு<br>மட்டும், அதே வீடுகளில் தொடர்ந்து இருப்பார்களேயானால்,<br>அவர்களுக்கு அந்த வீடுகளை நிரந்தரமாக்குவதற்கு அரசு பரி<br>சீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் :** மாண்புமிகு பேரவை<br>மாற்றுத் தலைவர் அவர்களே, நான் முன்பே சொன்னதைப்<br>போல ஏற்கனவே இருப்பவர்களுக்கு இப்போது வீடுகள் கொடுக்<br>கப்பட்டு வருகின்றன. என்றாலும் அதிக ஆண்டுகள் அவர்கள்<br>வேலை செய்வதால் அவர்களுக்குச் சொந்தமாக்கப்படவேண்டும்<br>என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அது<br>மட்டுமல்லாமல், தற்போது புதிதாக வேலைக்கு வருபவர்<br>களுக்கும், அங்கே வீடுகள் கொடுக்க வேண்டியிருக்கிறது. எனவே<br>அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

5. வரவு-செலவுத் திட்டம், 1984-85 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண். 25 சின்கோனா.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 25 சின்கோனா என்ற தலைப் பின்கீழ் ரூ. 3,07,90,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும் ".

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, To discuss Policy நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 25— சின்கோனா என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,07,90,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் ".

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 25—சின்கோனா என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,07,90,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**திரு. சு. ரமணி:** மாற்றுத் தலைவர் அவர்களே, நீலகிரி மலையிலும், வால்பாறை மலையிலும் உள்ள அரசு சின்கோனா தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு மாநில அரசு போனஸ் குறைந்தபட்சத் தொகை கொடுக்காமலிருப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழி கிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 25—சின்கோனா என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,07,90,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் ".

(ஆ) கோரிக்கை எண். 45—காட்டுவளத் துறை.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 45—காட்டுவளத் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 12,11,58,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ".



**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, To discuss Policy நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 45—காட்டுவளத் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற, ரூ. 12,11,58,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும். "

**திரு. த. வேணுகோபால்:** மாற்றுத் தலைவர் அவர்களே, இயற்கைக் காடுகள் அழியாமல் பாதுகாக்க வேண்டும் என்பதைப் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 45— காட்டுவளத் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 12,11,58,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

(இ) கோரிக்கை எண். 47—செய்தி, சுற்றுலா திரைப்படத் தொழில் நுட்பவியல்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 47.— செய்தி, சுற்றுலா, திரைப்படத்தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,37,13,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, To discuss Policy நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 47— செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,37,13,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**திரு. ப. சுந்தரம் :** மாற்றுத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள ஏலகிரி மலை சுற்றுலா இடம் ஆக்கப்பட வேண்டும் என்பதைப் பற்றி விவாதிக்க நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 47— செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2, 37,13,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

(ஈ) கோரிக்கை எண். 55—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 55—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 17,37,50,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, To discuss Policy நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை, மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 55—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 17,37,50,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் "

**திரு. சு. பாலன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 55—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,7,37,50,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் ".

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் கே. சமரசம்):** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்காக வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சின்கோனா, வனத்துறை, செய்தி சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் துறைகள் பற்றிய மானியக் கோரிக்கைகளின் மீது, இந்தத் துறைகளினுடைய கொள்கை விளக்கக் குறிப்புகள் *அச்சடிக்கப்பெற்று, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பெற்று உள்ளன. அவைகளை நான் இந்த அவையில் ஆற்றிய உரையாக பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் வழங்குகின்ற கருத்துக்களை எல்லாம் கேட்டு, அரசின் சார்பிலே விளக்கங்கள் அளிக்க வேண்டியிருப்பின், இறுதியிலே பதில் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

*195-278-ம் பக்கங்களில் இணைப்பு I, II, III, IV ஆக அச்சிடப்பெற்றுள்ளன.





(முற்பகல் 11-40)

**திரு. ந. சிவஞானம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, காட்டு வளத் துறை, செய்தி, திரைப்படம், சுற்றுலா, சின்கோனா போன்ற மானியக் கோரிக்கைகளின் மீது நான் சார்ந்திருக்கிற காங்கிரசின் சார்பிலே சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

காட்டு வளம் என்பது தென்னாட்டைப் பொறுத்த வரையில், இயற்கையிலேயே நல்ல அமைப்போடு இருந்தால்தான் அது நன்றாக இயங்கமுடியும் என்ற நோக்கத்தை முதலில் நாம் உணரவேண்டும். உலகத்தின் மூன்றில் ஒரு பங்கு காட்டு வளம் வேண்டும் என்ற நிலையில் நாமெல்லாம் இருந்தாலும், தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் 15 சதவீதம்தான் காட்டு வளம் உள்ளது என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். ஆகவே, தமிழ் நாட்டில் இயற்கையான காட்டு வளத்தை நாம் பேணி காக்க வேண்டியது தலையாய கடனாகும்.

இன்றையதினம் காட்டு வளத்திலே, சமூக காடு வளர்ப்பு திட்டம் என்ற ஒரு திட்டம் இருக்கிறது. மிக அருமையான திட்டம். இந்தத் திட்டம் வெளிநாட்டின் உதவி கொண்டு செய்யப்படுகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு கன்று வளர்ப்பது என்பது மட்டும் அல்ல. ரோட்டிலே வளர்க்க வேண்டுமென்பது மட்டுமல்ல, எங்கெங்கே புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றனவோ அங்கேயெல்லாம், இந்த சமூகக்காடு வளர்ப்பு திட்டத்தின்கீழ் மரங்களை நடுகிற பணியை, எந்தவிதமான கட்சி வேறுபாடும் இன்றி செயல்படுத்த வேண்டும். அந்த வகையிலேதான் மைய அரசினுடைய உதவி கொண்டு, தேசிய ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழும், 20 அம்ச பொருளாதாரத் திட்டத்தின் கீழும், இந்த மரம் நடுகிற பணியில் ஈடுபட்டு நாம் அருமையாக செயலாற்றிக் கொண்டிருக்கிறோம்.

இதில் குறிப்பாக யுக்கலிப்டஸ் மரம் நடுவதைப் பற்றி ஒரு சர்ச்சை இருக்கிறது. அரசியல்வாதிகள் மட்டத்திலும் வெளியிலேயும் சில வதந்திகள் பரப்பப்படுகின்றன. இந்த யூக்கலிப்டஸ் மரங்கள் நடுவதால் நாட்டினுடைய வளம் குறைகிறது. சதுப்பாக இருக்கின்ற நிலமெல்லாம் வறட்சியாக காட்சி அளிக்கிறது என்று வாதம் ஏற்பட்டு, இந்த யூக்கலிப்டஸ் மரத்தை நடக்கூடாது என்று ஒரு தரப்பிலே வாதம் செய்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட, சென்ற ஆண்டு இந்த மானியக் கோரிக்கையில் பதில் அளித்த நேரத்தில், இதனால் கெடுதல் இல்லை, யூக்கலிப்டஸ் மரத்தை நன்றாக வளர்க்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனாலும் வெளியிலே இப்படிப்பட்ட ஒரு சர்ச்சை தொடர்ந்து இருக்கிற காரணத்தாலே அரசாங்கம் இதனை மறுபரிசீலனை செய்து, இதனால் இன்னல்கள் ஏற்படுமா, நாட்டின் வளம் குறையுமா என்பதைப் பரிசீலனை செய்து, அந்த யூக்கலிப்டஸ் மரங்களை வளர்த்தால் என்ன நிலை என்பதை, வல்லுநர்கள் மூலமாக சற்று ஆராய்ந்து உடனடியாக செய்திட வேண்டும் என்று வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து புறம்போக்கு நிலங்களில் சமூக காடு வளர்ப்புத் திட்டம். இந்தத் திட்டத்தின் மூலமாகவும் யூக்கலிப்டஸ் மரங் களை வளர்க்கிறார்கள். இதனால் நாட்டுக்கு ஏதேனும் கெடுதல் ஏற்படுமா? வன வளம் பாதிக்கப்படுமா? இயற்கையின் சீற்றத் தால் பல்வேறு கோளாறுகள் ஏற்படுமா என்றெல்லாம் உணர்ந்து யூக்கலிப்டஸ் மரங்களை நடுவதற்கு அரசாங்கம் மறு பரிசீலனை செய்து, அதற்கான கொள்கை, அல்லது லட்சியத்தை விரைவாக எடுத்து, அதைத் தீவிரமாக நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும் என்று வேண்டி விரும்பி நான் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், குறிப்பாக ஊட்டியில் நல்ல வளமான காடுகள் இருக்கின்றன. வளமான காடுகள் நாட் டிற்கு தேவை என்பது, காடுகள் மூலம் மழை பெய்யும் என்ற கருத்து பண்டைய காலத்திலிருந்து இருக்கின்ற ஒன்று. காட்டை வளர்க்க வேண்டும், அதன் மூலம் நாட்டை வளர்க்க வேண்டும் என்ற கொள்கையை கையாண்டு, இயற்கையான காடுகளோடு செயற்கையான காடுகளையும் வளர்க்க, முனைப்போடு செயல் பட, இந்த சமுதாயமும், அரசும் சேர்ந்து செயலில் ஈடுபட்டால் தான் அது மிக நன்றாக இருக்கும். அந்த வகையிலே சமூகக் காடுகளை வளர்ப்பதை நாம் ஆதரிக்க வேண்டும். ஒத்துக்கொள் கிறேன். ஆனால் இந்தத் திட்டத்தைத் மிக நல்ல முறையிலே செயல்படுத்த நடைமுறைகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும். அதிலும் நமக்கு அன்னியச் செலாவணியை அதிகமாக ஈட்டித் தருகிற சந்தன மரம் போன்ற மரங்களை அதிகமாக வளர்க்க முயற்சிக்க வேண்டும்.

அன்னியச் செலாவணியை அதிகரிப்பதற்காக மட்டும் அல்ல, நம்முடைய நாட்டினுடைய கலை நுட்பத்தை வளர்க்கவும் இத்த கைய மரங்கள் மிகவும் உபயோகமாகின்றன. இத்தகைய மரங் களை இன்னும் அதிக அளவில் வளர்த்து, வெளிநாடுகளுக்கு அதிக அளவில் ஏற்றுமதி செய்ய வேண்டும். அதிலே மைய அரசின் குறுக்கீடு ஏதோ இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். எத்த கைய குறுக்கீடாக இருந்தாலும், மத்திய அரசை வலியுறுத்தி, சந்தன மரத்தை அதிக அளவில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து, அந்நியச் செலாவணியை அதிகப்படுத்தி, தமிழகத்தி னுடைய வருமானத்தையும் பெருக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் வலியுறுத்த விரும்புகிறேன்.

நீங்கள் கொடுத்திருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பில், 1983 -84ஆம் ஆண்டில் 6.92 கோடி ரூபாய் சந்தன மரங்களிலிருந்து நமக்கு வருமானம் வருகிறது என்று சொல்லியிருக்கிறீர்கள். இது மிக மிகக் குறைவு. தமிழ் நாட்டிற்கு மட்டும் அல்ல, இந்தியாவிற்கே அதிக வருமானம் தரக்கூடிய சந்தன மரத்தை நாம் இன்னும் மிகத் தீவிரமாக வளர்க்க வேண்டும். மிகக் குறைந்த ஏலத்தில் இந்த சந்தன மரத்தை விடுவதை தவிர்த்து, அவைகளை வெளிநாட்டிற்கு அனுப்புவதன் மூலம், தமிழ் நாட்டினுடைய வருமானத்தை பெருக் குகிற ஒரு லட்சியத்தில் நீங்கள் ஈடுபட வேண்டும் என்று தீவிரமாக சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.





குறிப்பாக வன வளம் என்பதை, மரங்களை மாத்திரம் அல்ல. வன விலங்குகளையும் சேர்த்துத்தான் சொல்ல வேண்டும். ஆகையினால் பாட புத்தகங்களிலேயே இவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். வன வளத்தைப் பற்றியும், வன விலங்கு களைப் பற்றியும், ஆரம்பப் பள்ளியிலேயும், உயர் நிலைப் பள்ளியிலேயும், மாணவர்கள் விவரமாக உணரும் பொருட்டு, அதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து நடத்தினால்தான், வருகிற காலங்களிலே வன வளத்தைப் பாதுகாக்க அது உதவியாக இருக்கும். ஆகவே, ஆரம்பப் பள்ளிகளிலும் உயர் நிலைப் பள்ளிகளிலும், வன வளம் பற்றியும், வன விலங்குகள் பற்றியும் பாடங்களை மிகச் சிறப்பாக சேர்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக சுற்றுலாத் துறை. இந்தத் துறை தமிழ் நாட்டிலே ஒரு புதிய நடையைப் போட்டுக் கொண்டு வளர்ந்து வருகிறது. வளர்ந்து வருவதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக் கிறோம். அதிலும் வருமானம் இருக்கிறது. அது மட்டும் அல்ல. தமிழகத்தினுடைய பண்பாட்டையும், நாகரிகத்தையும், கலை நுட்பத்தையும் அறிந்து கொள்வதற்கு வாய்ப்பாகவும் சுற்றுலாத் துறை இருந்து வருகிறது. இந்தச் சுற்றுலாத் துறை மூலமாக வெளிநாட்டு பயணிகளும், உள்நாட்டு பயணிகளும் கல்வி அறிவு பெறுகிறார்கள். இப்படி கல்வி அறிவைப் பெருக்குகின்ற சுற்றுலாத் துறைக்கும், பயணிகளுக்கும் வேண்டிய வசதிகளை கொடுக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தினுடைய கடமையாகும். அருமையாக, தேச முக்கியத்துவம் வாய்ந்த, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பல இடங்கள் தமிழகத்தில் இருக்கின்றன. குறிப்பாக மகாபலிபுரம் இருக்கிறது. இராமேஸ்வரம் இருக்கிறது, கன்னியாகுமரி இருக்கிறது. இந்த இடங்களில் உள்ள இயற்கை அழகை வைத்துக் கொண்டு சுற்றுலாத் துறை மூலமாக பல்வேறு வாய்ப்பு வசதிகளை செய்து கொடுக்கவேண்டிய கடமையில் நாம் இருந்துகொண்டிருக் கிறோம். இந்தக் கொள்கை குறிப்பிலே கொடுக்கப்பட்டிருக்கிற நல்ல பல திட்டங்களை நான் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். மாமல்லபுரத் திட்டத்திற்காக 6 கோடி ரூபாய், இராமேஸ்வரம் திட்டத்திற்காக 28 கோடி ரூபாய், கன்னியாகுமரி திட்டத்திற்காக 16 கோடி ரூபாய் என்ற அளவுக்கு ஒதுக்கி மைய அரசும் மாநில அரசும் ஒன்றாகச் சேர்ந்து ஈடுபட்டுக்கொண்டிருக் கிறார்கள். அங்கங்கே வருகின்ற பயணிகளுக்கு நல்ல வசதி யான கட்டடம் இருக்க வேண்டும், தரமான உணவு வேண்டும், இவைகளையெல்லாம் செய்து கொடுப்பது சுற்றுலாத் துறையின் கடமை என்பதால் அதைச் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இளைஞர் விடுதிகள். சாதாரணமாக எல்லா மக்களும் தங்குகிற நிலையில் இருக்கிறார்கள். குறிப்பிட்ட சில இடங்களில் தான் விடுதிகள் கட்டப்படுகின்றன. மாமல்லு

புரமாக இருந்தாலும், இராமேஸ்வரமாக இருந்தாலும், கன்னியா குமரியாக இருந்தாலும் மக்கள் வந்து தங்கிக் காணக் கூடிய முறையிலே எல்லா இடங்களிலுமே இளைஞர் விடுதிகள் ஏழை எளிய மக்கள் பார்த்து பயன் அடையக்கூடிய அளவுக்கு கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சமீபத்திலே குற்றாலத்திலே பெய்த மழையின் காரணமாக அங்கே அருவி பாதிக்கப்பட்டிருக்கிறது. அந்த அருவியை உடனடியாக பழுது பார்த்து நல்ல சூழ்நிலையை சுற்றுலாத் துறை ஏற்படுத்த வேண்டும். அமைச்சர் அவர்களும் மாவட்ட ஆட்சித் தலைவரும் கலந்து அழிவுற்ற நிலையில் உள்ள அந்த அருவியைக் கருத்தில்கொண்டு மழையால் ஏற்பட்ட சீரழிந்த நிலையை மாற்ற சீர்செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சமீபத்திலே உங்களுக்கு எல்லாம் தெரியும், தேரெழுந்தூரிலே கம்பன் கோட்டத்தை அமைச்சர் அவர்கள் துவக்கியிருக்கிறார்கள். விரைவில் அது முடிவடையும் என்று சொல்லியிருக்கிறார்கள். தஞ்சையிலே ராஜராஜன் கட்டிய பெரிய கோவில் இருக்கிறது. பிரகதீஸ்வரர் கோயில் இருக்கிறது. அந்தப் பெரிய கோயிலைக் கட்டிய ராஜராஜனுக்கு ஒரு கோட்டத்தை தஞ்சையிலே ஏற்படுத்த வேண்டும். நான் பல காலமாக அமைச்சர் அவர்களிடம் இதை வற்புறுத்தி வருகிறேன். தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய ராஜராஜனுக்கு கோட்டமாகட்டும், கலைக்கூடமாகட்டும், கட்டித் தரவேண்டுமென்றுக்கேட்டுக் கொள்கிறேன். தஞ்சைக்கு உள்நாட்டுப் பயணிகளும், வெளிநாட்டுப் பயணிகளும் நிறைய வருகிறார்கள். அங்கே சுகாதாரக்கேடு ஏற்படுகிறது. அந்த சுகாதாரக் கேட்டைப் போக்கி பல்வேறு வசதிகளைச் செய்து கொடுக்க சுற்றுலாத் துறை ஏற்பாடு செய்யவேண்டும். தஞ்சை பெரிய கோவிலுக்கு எதிராக 40, 50 ஏக்கர் நிலம் காலியாக இருக்கிறது. அங்கே கீழே கடைகளையும் மேலே இளைஞர் விடுதிகளையும் கட்டிக்கொடுக்க வேண்டும். நகராட்சியும் சுற்றுலாத் துறையும் கலந்து வெளி நாட்டு, உள்நாட்டுப் பயணிகளைக் கவரத் தக்க அளவுக்கு அங்கே பார்க்குகளையும், தோட்டங்களையும் அமைத்து மேம்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் பவானிசாகர் அணை சிறந்த அணை. மண்ணால் கட்டப்பட்ட நல்ல அணையாக இருக்கிறது. அதை சுற்றுலா மையமாக்க வேண்டும். கொள்கை குறிப்பிலே அது விடப்பட்டு இருக்கிறது. ஆகவே பவானி சாகரிலே சுற்றுலா மையத்தை ஏற்படுத்த வேண்டும். அதைப் போலவே மதுரைக்கு பக்கத்திலே அழகர் மலையை சுற்றுலா மைய மாக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பத்திரிகை என்பது நாட்டிலே தர்மத்தை வெளியிடுகின்ற ஒரு பகுதி. பத்திரிகைகள் உண்மையான செய்திகளை வெளியிட வேண்டும். எல்லோ பேப்பர் என்று சொல்லக்கூடிய அளவில் பல்வேறு புகார்கள் வரக்கூடிய நிலைமை இருக்கிறது. பத்திரிகைகள் செய்திகளை தர்மமாக வெளியிட்டு வளர்ச்சியடைய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





தமிழ்நாட்டிலே எல்லா இடங்களிலும்
தொலைக்காட்சி மக்களுக்காக அவர்கள் பயன்பெறுகிற
அமைக்க, ஏழை எளிய செய்யப்படுகிறது. மைய அரசினுடைய
அளவுக்கு ஏற்பாடு இருந்தாலும் மாநில அரசு அதற்குத் துணை
கொள்கையாக அது தமிழ்நாட்டிலே எல்லா இடங்களிலும் தொலைக்
யாக இருந்து ஏற்படுத்துவதற்கு பெரிய முயற்சிகளைச் செய்
காட்சி வசதிகள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
தால் நன்றாக இருக்கும்

அரங்குகள் இன்றைக்கு இருக்கின்றன.
பல இடங்களிலே இருக்கின்றன. குறிப்பாக சென்னையிலே
அவைகள் நன்றாக அரங்கு இருக்கிறது. பராமரிப்பு போது
உள்ள கலைவாணர் என்ற குற்றச்சாட்டு இருக்கிறது.
மான அளவுக்கு இல்லை மற்றவைகள் பராமரிப்பு குறைவாக
குளிர்சாதன வசதிகள் அரசாங்கத்திலிருந்தால் பராமரிப்பு நன்றாக இல்லை
இருந்தாலும் எடுக்காமல் நல்ல முறையிலே பராமரிப்புச் செய்
என்ற பெயர் நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியம் என்று நான்
வதற்கு காட்ட விரும்புகிறேன்.
கோடிட்டுக்

(முற்பகல் 11–50)

பொருட்காட்சியும் பலயிடங்களில் காட்டுகிறார்
அதேபோல் சென்னை மாநகரத்திலும் பொருட்காட்சி
கள். இப்போது ஆகவே அதேபோல் பல்வேறு மாவட்ட
நடத்தப்பட்டது. பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன.
தலைநகரங்களில் தஞ்சாவூர் போன்ற பகுதிகளில் பொருட்காட்சி
கும்பகோணம், இன்றைக்கு பல்வேறு பணங்கள் மாவட்ட
களின் மூலமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.
ஆட்சித் தலைவர்களிடம் தஞ்சைக்கு ஒரு கலை அரங்கம் வேண்டும்.
ஆகவே இன்றைக்கு இருக்கின்ற மதுரையிலும் இருப்பது
திருச்சியிலும் பக்கத்தில் கலை அரங்கம் கட்ட அதற்கான
போல் இந்தத் துறை மூலமாக ஆகவே தஞ்சையில் நவீன கலை
பணங்கள் இருக்கின்றன. கட்டிக் கொடுக்கவேண்டும் என்று
அரங்கத்தை விரைவில் அவர்களை நான் வேண்டி விரும்பி
மாண்புமிகு அமைச்சர்
கேட்டுக்கொள்கிறேன்.

சுற்றுலாத் துறை சம்பந்தமாக வெளிநாடுகளில்
கடைசியாக அமைப்புகள் இருக்கின்றன. குறிப்பாக
பல்வேறு இடங்களில் போன்ற இடங்களில் இருக்கின்றன என்று
சிங்கப்பூர், சிலோன் ஆகவே கிழக்கு இந்திய நாடுகளில்
நான் நினைக்கிறேன். உறுப்பினர் அங்கே செல்வதைப்
இங்கே உள்ள சட்டமன்ற பண்பாட்டையும் வளர்ச்
போல நம்முடைய தமிழகத்தினுடைய கவர்கின்ற அளவுக்கு அங்கே
சியையும் அதிகமான பயணிகள் ஏற்படுத்த, குறிப்பாக ஜப்பான்
மையங்களை வெளிநாட்டில் போன்ற நாடுகளில் அதை
மற்றும் கிழக்கு இந்தியா ஆசியா தமிழக அரசுக்கும், சுற்று
ஏற்படுத்துவதன் மூலமாக குறிப்பாக தருகின்ற அளவுக்கு அதை
லாத்துறைக்கும் வருமானத்தைத் இந்த நேரத்தில் கேட்டு விடை
செய்து கொடுக்கவேண்டும் என்று வணக்கம்.
பெறுகிறேன். நன்றி.

திரு. ஆர். ரங்கசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு செய்தி மற்றும் வனத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள 1984–85ஆம் ஆண்டு மானியக் கோரிக்கைகளான சின்கோனா, காட்டு வளம், வனத் துறை, செய்தி சுற்றுலா, திரைப்படத் துறை ஆகிய மானிய கோரிக் கைகளை வரவேற்று ஒரு சில கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன். தமிழகத்தில் காட்டு வளத்தைப் பெருக்க மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களுடைய அரசு, கொண்டு வந்துள்ள கொள்கை குறிப்பில் சுருக்கமாக சிறப்பாக எடுத்து விளக்கியுள்ளது. தட்ப வெட்ப நிலையினைக் கட்டுப் படுத்துதல், மண்வளம், நீர்வளம், உயிரினம் ஆகிய தினை வளம் காத்தல். மக்கள் நுகரும் பொருட்டு எரிபொருள், தடிமரம், கால்நடைத் தீவனம், எண்ணெய் வித்துக்கள், பழங்கள் போன்ற பொருட்களை பெரும் அளவில் தொடர்ந்து வழங்கல், தொழில் துறைகளுக்குத் தேவையான மூலப் பொருட்களை உற்பத்தி செய்தல், பொழுதுபோக்கு மையங்களை ஏற்படுத்தல், வேலைவாய்ப்புக்களைப் பெருக்குதல், கலாச்சார மரபி னைக் காத்தல் போன்ற பல்வேறு லட்சியங்களை மனத்தில் கொண்டு ஒரு பல் நோக்குத் திட்டமாக இன்றையதினம் தமிழகத் தில் வனத் துறை செயல்படுகிறது என்று நான் மனபூர்வமாக பாராட்ட விரும்புகிறேன்.

1982-83ஆம் ஆண்டில் மொத்த வனப் பரப்பு 21.95 லட்சம் எக்டேராக இருந்தது. 1983-84ஆம் ஆண்டில் மொத்த வனப்பரப்பு 22.04 லட்சம் எக்டேராக உயர்ந்து உள்ளது. இந்த புள்ளிவிவரக் கணக்கை பார்ப்பார்களானால் இந்த அரசு வனத்துறையை பாதுகாக்கிறது, வளர்த்து வருகிறது என்பதை ஏற்றுக்கொள்வார்கள். காடுகளின் மூலம் வருவாய்களையும், செலவுகளையும் நாம் பார்க்கிறபோது 1983-84ஆம் ஆண்டில் காடுகளின் மூலம் 21.38 கோடி ரூபாய் வருவாய் கிடைக்கும் எனவும், 1984-85ஆம் ஆண்டில் இந்த வருவாய் 23.79 கோடி ரூபாயாக உயருமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வருவாயில் பெரும்பகுதி சந்தன மரத்திலிருந்தும் காடுபடு பொருட்களை அடிப்படையாகக் கொண்டு இயங்கிவரும் தொழில்களுக்கு மூலப் பொருட்களை வழங்குவதன் மூலமும் தான் கிடைக்கிறது. ஆனால் 1983-84ஆம் ஆண்டில் 29.51 கோடி ரூபாயும், 1984-85ஆம் ஆண்டில் 29.13 கோடி ரூபாயும் செலவு இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில் வருவாயைவிட 17 கோடி ரூபாய் அதிகமாக செலவிடப்படு கிறது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் கூட பேசக்கூடும். வருவாயைவிட அதிகமான செலவைக் காட்டி இதிலே சாதனை இருக்கிறது என்று சொன்னால் அதை எப்படி நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியும் என்று கேட்கக் கூடும். ஆனால் இந்த தொகையில் பெரும் பகுதி காடுகளின் வளர்ச்சிக்காக செயல் படுத்தப்படும் மூலதன முதலீடாக பயன்படுத்தப்படுகிறது. வெட்டு மரம், விறகு மரம், தொழில்களுக்கான மரம், ஏனைய தொழில்களுக்கு இன்றியமையாத தேவைகளைப் பூர்த்தி செய்ய காப்பு வனங்களின் உள்ளேயும், வெளியேயும், பெருமளவில் மரங்கள் வளர்க்க பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.



புரட்சித் தலைவர் அரசு மக்களின் எதிர்காலத்தை எண்ணிச் செயல்படும் அரசு என்பதற்கு எடுத்துக் காட்டாகச் சத்துணவுத் திட்டம், வீட்டுக்கு ஒருவருக்கு வேலைவாய்ப்புத் திட்டம் என்பவைகளைக் கொண்டு வந்ததைப்போல, வனத் துறையின் எதிர்காலத்தைக் கருத்தில்கொண்டு, அதனை நல்ல வருவாய் தரு கின்ற துறையாக மாற்றுகின்ற வகையில் இந்தத் திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன.

இந்த அதிகச் செலவு ஏற்பட்டதற்கும் காரணம் மத்திய அரசு தான். எனக்கு முன் பேசிய மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். சந்தன மரங்களில் இவ்வளவு குறைந்த வருவாய் காட்டியிருக்கிறீர்கள். இதை அதிகப் படுத்தும் வகையில் நடத்தவேண்டுமென்று சொன்னார்கள்.

தமிழகத்தில் இருந்த சந்தன மரங்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. கடந்த சில ஆண்டுகளாக ஏற்றுமதி செய்வதற்குத் தடை விதித்துள்ளது. தடை செய்வதற்கு முன்னால் ஒரு கிலோ 80 ரூபாய்க்கு விற்ற சந்தனமரம் தற் பொழுது 25 ரூபாய். 25 ரூபாய் அளவிற்குத்தான் ஏலத்திலே போவதாகச் சொலலப்படுகிறது. மூன்றில் ஒரு பங்குதான் விலை கிடைக்கிறது. இதனால் சுமார் ஆண்டுக்கு 15 கோடி ரூபாய் வனத் துறைக்கு நஷ்டம் ஏற்படுகிறது. மத்திய அரசுக்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு வனத்துறை அமைச்சர்அவர்களும் பலமுறை எடுத்துச் சொல்லியும் மத்திய அரசு செவிசாய்க்காமல் இருக்கிறது.

சந்தனமரம் ஏற்றுமதி செய்வதால் மத்திய அரசுக்கு ஏற்படும் நஷ்டம் என்ன என்று புரியவில்லை. இதன் மூலம் கிடைக்கும் அன்னியச் செலாவணியைத் தடுப்பதன் நோக்கம் என்ன என்ற வினாவை இம்மாமன்றத்தின் மூலம் வைக்க விரும்புகிறேன்.

குறைந்த வருவாயைக் கொண்டு மக்களுக்குத் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தும் மாநில அரசின் வருவாயில் கை வைக்கும் போக்கை மத்திய அரசு மாற்றிக்கொள்ளும் வகையில் மீண்டும் சந்தனமரம் ஏற்றுமதி செய்ய அனுமதிக்க வேண்டுமென்று இம் மாமன்றத்தின் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்யுமேயானால் வனத் துறையில் ஆண்டுக்கு குறைந்தது 15 கோடி ரூபாய் நமக்கு அதிக வருமானம் கிடைக்கும் வாய்ப்பு ஏற்படும் என்பதையும் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தைப் பொறுத்தவரையில், இன்றைக்குத் தமிழகத்தில் ஒரு மிகப் பெரிய அளவிற்குப் பேசும் திட்டமாக இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஸ்வீடன் நாட்டு நிதி உதவியுடன்இயங்கிவரும் இந்தத் திட்டத்தின் மூலம் பெரும் பயன்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 45 கோடி ரூபாயில் செயல்படுத்தும் இந்தத் திட்டத்தின் மூலம் 1981–82, 1982–83-ல் சமவெளிப் புறம்போக்கு நிலங்களில் 52,480

எக்டேரில் மரங்கள் வளர்க்கப்பட்டுள்ளன. 1983–84ஆம் வருடத்தில் 871·72 இலட்ச ரூபாய் செலவில் சமநிலைப் புறம் போக்கு நிலங்கள் ; தொடர் தோட்டங்கள், மரக் கன்றுகள் வளர்த்து வழங்குதல் போன்ற ஆக்கபூர்வமான பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. சமூகக் காடுகள் வளர்ப்பதன் மூலம் ஏற்படும் நன்மைகளைப் பார்த்தால், இன்றைக்கு வனப் பகுதிகள் அதிகமாக அழிக்கப்பட்ட காரணமே அல்லது விறகு களைத் திருடிக்கொண்டு போவதற்கான காரணமே எரிபொருள் எந்த விதத்திலேயும் அவர்களுக்குக் கொடுக்க முடியாத சூழ்நிலை தான். எப்படியும் எரிபொருளைப் பயன்படுத்தியே ஆக வேண்டு மென்று பொது மக்களுக்கு நிர்பந்தம் இருக்கின்ற சூழ்நிலையில், அது ஏதாவதொரு வழியிலே செல்லுகின்ற சூழ்நிலை இருக்கிறது. இந்தச் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் மூலம் இது வனங்கள் அழிக்கப்படுவதைத் தடுக்கின்ற ஒரு மாபெரும் சத்தியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்பொழுது புறம்போக்கு நிலங்கள் என்று சொல்லப்படுகின்ற இடங்களிலும், மற்றும் பல இடங்களிலும் கால்யாக, தரிசாக இருக்கின்ற நிலங் களில் இந்தச் சமூகக் காடுகளை வளர்ப்பதன் மூலம் விறகுக்கான மரங்களை அதிகமாக வளர்க்க முடிகிறது ; விறகு மரங்களை ஓரளவிற்குக் குறைந்த விலையில் மக்களுச்கு வழங்கி அதை எரி பொருளாகப் பயன்படுத்துகின்ற நிலைமைகளை ஏற்படுத்தினால் காடுகளை நாம் பாதுகாக்க முடியும் என்ற வகையில் இந்தப் பெரிய திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

வறட்சிக் காலங்களில் கால்நடைகளுக்குத் தீவனம் இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது. இந்தச் சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தின் மூலம் கால்நடைகளுக்குத் தீவனம் தருகின்ற பெரிய பணியையும் செய்ய முடியும் என்ற வகையில் இந்தத் திட்டத்தின் அடிப்படையில், இந்தச் சமூகக் காடு வளர்ப்புத் திட்டம் தமிழகத்தில் பெரும் புரட்சியை ஏற்படுத் தும் என்பனத நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

(நண்பகல் 12–00)

பழங்குடியினர்களுக்கு வனத் துறை செய்து வரும் சேவைகள் மகத்தானது. பல நோக்குத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தி காடுபடு பொருட்கள் கடுக்காய், பூச்சக்காய், கல் பாசம், மரப்பாசம் இன்னும் பல பொருட்கள் குத்தகைக்குக் கொடுக்கப்படுகிறது. இதனால் தமிழகத்தில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், இந்த விற்பனை கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இதன் மூலமாகப் பல இலட்சக்கணக்கான பழங்குடியினர் பயன் பெறு கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரியப்படுத்திக் கொள்கிறேன். அத்தோடு என்னுடைய பகுதியிலே மலைவாழ் மக்கள் விற்பனைச் சங்கம் என்ற ஒரு சங்கம் இந்தத் துறையின் மூலமாக மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு ஆண்டுக்காண்டு அந்த மக்களுக்குத் தேவையான நன்மைகளைச் செய்து வரு கின்றார்கள். கடந்த சில தினங்களுக்கு முன்னால் கூட நான்கு



இலட்சம் ரூபாயிலே அவர்களுக்கு ஒரு கட்டிடம் கட்டிக்கொடுத்து அதையும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமாக மாற்றுவதற்காக அரசுக்குப் பரிந்துரை அனுப்பப்பட்டிருக்கிறது. அதையும் செய்து கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மலைப் பகுதிகளிலே மழைக்காலங்களில் காட்டாற்று வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகின்றது. அந்தத் தண்ணீரை விவசாய நிலங் களில் பயன்படுத்துவதற்கான திட்டங்களைத் தமிழக அரசு தீட்டு கின்றது. ஆனால் வனத் துறையின் மூலமாக மத்திய அரசு அந்த வனப் பகுதிகளிலிருக்கின்ற நிலங்களில் அணைகளைக் கட்டித் தண் ணீரைத் தேக்கக்கூடாது என்று தடை விதித்திருக்கின்றது. நான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புவது என்னவென்றால் வனங்களில் நடுப்பகுதிகளிலே இல்லை என்றாலும், வன ஓரப் பகுதிகளில் அதாவது ரெவின்யூ நிலத்திற்கும், வனப்பகுதிக்கும் இடையிலே இருக்கின்ற அப்படிப்பட்ட பகுதிகளிலே அவ்வாறு அணைகளைக் கட்டுவது வனங்களைப் பாதுகாப்போடு வைப்பதற்கும் உதவும்; மேலும் மழைக்காலங்களில் தண்ணீர் பல கிராமங்களின் உள்ளே யும் செல்லாத வகையில் ஒரு பாதுகாப்பாக இருக்கும் ; அடர்ந்த காடுகள் அங்கே வளர்வதற்கான வாய்ப்புக்களும் ஏற்படும்.

தற்போது மழை இல்லாத காலங்களில் வன விலங்குகள் ஊருக்குள் வருகின்ற சூழ்நிலை இருப்பதன் காரணத்தால் இப்படிப்பட்ட ஏற்பாடுகளைச் செய்தால் அது தடுக்கப்படும். மேலும் அந்தப் பகுதிகளில் வன விலங்குகளுக்குத் தேவையான தண்ணீர் கிடைக்கும். ஆகவே இது குறித்து மறுபரிசீலனை செய்து வன ஓரங்களில் சிறு சிறு அணைகளைக் கட்டுவதற்கு இருக்கின்ற அந்தத் தடைகளை நீக்க நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுக்கவேண்டும என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மேற்கு மலைத் தொடர்ச்சித் திட்டத்தின்கீழ் மலைப் பகுதி களில் பல சாலைகள் அமைக்கப்படுகின்றன ; காடுகள் வளர்க்கப் படுகின்றன. இந்தத் திட்டம் நீலகிரி மாவட்டத்தில் செயல் படுத்தப்படுகின்றது. ஆனால் நீலகிரி மாவட்டத்தின் ஒரு தொடர்ச்சியாக இருக்கின்ற சத்தியமங்கலம், தலமலை பகுதி களில் இந்தத் திட்டம் விரிவுப்படுத்தப்படவில்லை. தலைமலைப் பகுதியில் திப்புசுல்தான் சாலை என்று ஒரு ரோடு மிக நெடுங் காலத்திற்கு முன்பு உள்ள ஒரு பழமையான ரோடாக இருக்கின்றது. அந்த அமைப்பதன் மூலம் கர்நாடக மாநிலத் திற்கு உள்ள தூரத்தில் 25 கிலோ மீட்டர் தூரம் குறைகின்ற

வாய்ப்பு ஏற்படும். அந்த வாய்ப்பின் காரணமாக அது ஒரு சுற்றுலா மையம் போல் சிறப்பாக அமையும். ஆகவே இந்த மேற்குமலைத் தொடர்ச்சித் திட்டத்தின்கீழ் அதையும் சேர்த்துச் செய்து கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இயற்கை அழகு நிறைந்த ஆசனூர் மலைப் பகுதியைச் சுற்றுலா மையமாக ஆக்க வேண்டும் என்ற கோரிக்கையை இந்த நேரத்திலே நான் வைக்கிறேன். அந்தத் துறையின் மூலம் பரிந்துரை செய்யப்பட்டு அரசுக்கு வந்திருக்கின்றது. மேலும் இந்தப் பகுதி கர்நாடக மாநிலத்தையும், தமிழகத்தையும் இணைக்கின்ற நெடுஞ்சாலைப் பகுதியாகும். எனவே இயற்கை அழகு நிறைந்த இந்தப் பகுதியில் அந்த சுற்றுலா மையத்தை ஏற்படுத்திக் கொடுத்து அந்தப் பகுதியிலே ஒரு , சிறப்பை ஏற்படுத்த வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தலைமலைப் பகுதியினை வன விலங்குகளின் சரணாலயமாக ஆக்க வேண்டும் என்ற கோரிக்கை அரசுக்கு வந்திருக்கிறது. அந்தப் பகுதி மிகச் சிறப்பான மலைப் பகுதியாகும். அங்கே யானைகள் நிறைய இருக்கின்றன. காட்டெருமைகள் இருக்கின்றன. கரடி, புலி, சிறுத்தை, கடமான், புள்ளிமான் கேலையாடு, செந்நாய் போன்ற வன விலங்குகள் நிறைய இருக்கின்றன. எனவே அந்தப் பகுதியினை வனவிலங்குகளின் சரணாலயமாக மாற்றுவதற்குரிய அத்தனை தகுதிகளும் இருப்பதன் காரணத்தால் அந்தப் பகுதியினை வனவிலங்குகளின் சரணாலயமாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையினை இந்த நேரத்திலே நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, தமிழக அரசு, அரசாங்கத்திலே பணியாற்றுகின்றவர்கள் இடையிலே இறந்து விட்டால் உதவி, கட்டடத் தொழிலாளர்கள், மரம் ஏறும் தொழிலாளர்கள் போன்றவர்கள் இறந்து விட்டால் உதவி என்ற வகையிலே பல உதவிகளை வழங்குகின்றது. ஆனால் காடுகளில் வாழ்கின்ற பழங்குடி மற்றும் பிற்பட்ட மக்கள் யானை மிதித்து இறந்து விட்டால் அவர்களுக்கு இதுவரை ஒன்றும் கிடைக்கவில்லை. புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியில் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகின்றது. அப்படி இல்லாமல் மற்றவர்களுக்கு வழங்குவதுபோல் யானை மிதித்து அல்லது வேறு பல மிருகங்களால் தாக்கப்பட்டோ அந்த மலைப் பகுதியில் உள்ள மக்கள் இறந்து விட்டால் அவர்களுக்கும் 5 ஆயிரம் ரூபாய்





வழங்குகின்ற அந்தத் திட்டத்தை கொண்டு வர வேண்டும் என்று மிகப் பணிவோடு நான் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது.)

இந்தத் துறையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறுவதற்கு முன்னால் இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்று விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. பா.பு. ஜனார்த்தனன் : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, சின்கோனாத் துறை, காட்டு வனத்துறை, சுற்றுலா, செய்தி, திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு ஆகிய மானியக் கோரிக்கைகளிலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்தைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

சின்கோனாவைப் பொறுத்தவரையிலே, குறிப்பாக அதிலே ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் தரப்படவில்லை என்பது நீண்ட நாட்களாக இருக்கிற குறை. அரசுத் தரப்பிலேயே சரிவர அவர்களுக்குக் கூலி தரப்படவில்லை ; அதுவும் போனஸ் போன்றவைகள் எல்லாம் தரப்படவில்லை ; அதிலே ஈடுபட்டிருக்கிற மலைவாழ்த் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆண்களுக்குக் குறைந்த பட்சம் ரூ. 20, ரூ. 25-க்கு மேலும், அதேபோல் பெண்களுக்கு ரூ. 15, ரூ. 20-க்கு மேலும் கூலி தரப்பட வேண்டுமென்று கோரிக்கை நீண்ட நெடுங்காலமாக இருக்கிறது. அதை அரசு உடனடியாகக் கவனித்து, அதிலே ஈடுபட்டிருக்கிற மக்கள், மிக ஏழை, எளிய மக்கள், வறுமையிலே வாடுகின்ற மக்கள், காட்டுப் பகுதியிலே வாழுகின்ற மக்கள் என்று கருதி, அவர்களுக்கு எல்லாம் கூலியை உயர்த்திக் கொடுப்பதோடு, வெளியே இருக்கிற தொழிலாளர்களுக்குக் கிடைப்பது போல் போனஸ் போன்ற மற்ற சலுகைகளைத் தர அரசு முயற்சி எடுக்கும் என்று நம்புகிறேன்.

அதற்கடுத்து, குறிப்பாக, வனத் துறை, காட்டு வளம் பொறுத்த வரையிலே, காட்டுப் பகுதிகளிலே, வளருகின்ற சந்தன மரங்களிலே நமக்குப் பன்னெடுங்காலமாக, ஏராளமாக வருமானம் வரக்கூடிய நிலை இருக்கிறது. குறிப்பாக வட ஆற்காடு மாவட்டத்திலேயே ஓரளவு நல்ல வருமானம் வரக் கூடிய அளவுக்கு இன்னும் சிறப்பான முறையிலே கவனம் செலுத்தினால், நல்ல வருமானம் கிடைக்கும் என்ற எண்ணத்தை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

வனத்துறை பற்றி கொடுக்கப்பட்டிருக்கிற விவரக் குறிப்பிலே 1982-83ஆம் ஆண்டு 384 சந்தன மர கடத்தல் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று குறிப்பிட்டுள்ளார்கள். அவற்றின் மதிப்பு ரூ. 19,47,901.65 என்ற அளவிலே இருக்கிறது. அதிலே வழக்குகள் 384 என்று இருக்கிறது: எடுத்துக் கொள்ளப்பட்ட வழக்குகளிலே கிடைத்த பலன் குறைவாக இருக்கிறது. இன்னும் தீவிரமாக எல்லா வழக்குகளையும் நாம் பரிசீலனை செய்து போதிய அளவுக்கு தீவிரம் செலுத்தினால், அரசுக்கு நல்ல வருமானம் அளிக்கக் கூடிய ஒரு வாய்ப்பாக இந்தச் சந்தன மரம் பொறுத்தவரையிலே, காட்டு இலாகாவிலே தாராளமாக வழி ஏற்படும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக இங்கே ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள்.. பலதரப்பட்ட மானியக் கோரிக்கைகள் இதிலே இருக்கின்ற காரணத்தால், அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சொல்வதற்கு எனக்கு வாய்ப்பளிக்க வேண்டுமென்று மாண்புமிகு மாற்றுத் தலைவரைக் கேட்டுக் கொள்கிறேன். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் சிவஞானம் அவர்கள் யூகலிப்டஸ் பற்றி ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். யூகலிப்டஸ் பொறுத்த வரையிலே அதைப் பயிரிடுவதால், பூமியிலுள்ள சத்துக்களை எல்லாம் அது இழுத்து விடுவதாகப் பரவலாக ஒரு கருத்து இருக்கிறது. அது எந்த அளவு உண்மை, அதிலே உண்மை இருக்கிறதா என்பதை அரசு தெளிவாக விளம்பரம் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

யூகலிப்டஸ், காட்டு முள் செடிகள் மற்றும் வேல் மரச் செடிகளை ஏரிகளுக்குள்ளேயே காட்டு இலாகாவினர் பயிர் செய்து விடுகிறார்கள். காட்டு இலாகாவினருக்கு யாரையும் கேட்க வேண்டிய அவசியம் இல்லாத காரணத்தினால், அத்தகைய சலுகை இருக்கிற காரணத்தால், ஏரிகளுக்குள்ளேயே அந்த மரங்களை வளர்க்கின்ற காரணத்தினால், ஏரிக்களுக்குள்ளே தூர் வாருகின்றபொழுது அதிலே பிரச்னைகள் எல்லாம் வருகிறது. ஆகவே ஒரு எல்லைக்கு அப்பால் இந்த யூகலிப்டஸ், முள்வேலி, வேல மரங்களை நடச் செய்ய வேண்டும். ஏரிகளுக்குள்ளேயே செல்லாமல், 1 கிலோ மீட்டர் அளவுக்கு வெளியே அந்தக் காடுகளை வளர்ப்பதற்கு அரசு தீவிரமாகச் செய்ய வேண்டும். அப்படிச் செய்யவில்லை என்று சொன்னால் நாளடைவில் அந்த ஏரிகளிலே, கண்மாய்களிலே, குளங்களிலே தூர் வாருகின்ற நேரத்தில் அதையெல்லாம் விட்டுவிட்டுச் செய்ய வேண்டிய நிலைமையேற்படும். அப்போது அவற்றின் ஆழம குறைந்து விடும். ஆகவே, இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.





(பிற்பகல் 12-10)

இந்தக் கொள்கைக் குறிப்பின் 6-வது பக்கத்திலே ஒரு குறிப்பு சொல்லப்பட்டு இருக்கிறது. 1982-83ஆம் ஆண்டில் மூலப் பொருட்கள் விற்பனை செய்ததன் மூலம கிட்டிய வருவாய் 3.04 கோடி ரூபாயாகும். வழங்கப்பட்ட மூலப் பொருளின் அளவு 1,32,292 டன்கள். 1983-84-ல், 99,326 டன்கள் வழங்கப்பட்டு 2.17 கோடி ரூபாய் வருவாய் பெறப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது என்று சொல்லி, சவுத் இந்தியா விஸ்கோஸ் நிறுவனத்தார் காலக் கெடுவின்படி கட்டைகளை எடுத்துச் செல்லாததால் இந்த ஆண்டு வருவாய் குறைவு ஏற்பட்டுள்ளது என்றும் ஒரு கருத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள். ஆகவே, இந்த வகையில் இதற்கு முந்திய ஆண்டு வருவாயைப் பார்த்தால் ஏறக்குறைய ஒரு கோடி ரூபாய்க்கு மேல் சௌத் இந்தியா விஸ்கோஸ் கம்பெனி மரக் கட்டைகளை எடுத்துச் செல்லாத காரணத்தால், வன இலாகா அது குறித்து சரியாக ஒப்பந்தம் செய்யாத காரணத்தால், நமக்கு வர வேண்டிய வருவாய் குறைந்து போய் விட்டது என்பது இந்தக் குறிப்பிலிருந்து நமக்குத் தெரிகிறது. ஆகவே, தெளிவான முறையில் சௌத் இந்தியா விஸ்கோஸ் நிறுவனத்துடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டு இருந்தால், இப்படிப்பட்ட நஷ்டம் நமக்கு ஏற்பட்டு இருக்காது. அரசுத் துறையிலே இருக்கிறவர்கள் என்ன காரணத்தாலோ தெரியவில்லை இதிலே கவனம் செலுத்தவில்லை.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்துக் கொண்டு இருக்கிற கருத்து நிர்வாகக் கோளாறுகளின் காரணமாக ஏற்பட்டது அல்ல. 1982-83ஆம் ஆண்டு இறுதியிலும், 1983-84ஆம் ஆண்டிலும், நீண்டகாலமாக அந்த சௌத் இந்தியா விஸ்கோஸ் நிறுவனத்தில் வேலை நிறுத்தம் இருந்ததாலும், அதற்குப் பிறகு அங்கே வேறு பல்வேறு நிர்வாக சிக்கல்கள் இருந்த காரணத்தாலும, தண்ணீர் இல்லை போன்ற பல காரணங்களாலும அந்த நிர்வாகம் நிறுவனத்தை மூடி வைத்து விட்டார்கள். ஆகவே, அவர்கள் மரங்களை எடுத்துக் கொள்ள வில்லை. அதன் காரணமாகத்தான், அவர்கள் ஒப்புக் கொண்டபடி மரங்களை எடுத்துக் கொள்ளவில்லை என்று இதிலே போடப்பட்டு இருக்கிறது. இதுதான் காரணமே தவிர், வேறு நம்முடைய குறை அதிலே ஒன்றும் இல்லை. இந்த விஸ்கோஸ் நிறுவனம்தான் அதிகமான விலை கொடுத்து மரங்களை எடுக்கிறது. அதாவது டன் ஒன்றுக்கு 280 ரூபாய் என்று கொடுத்து, ப்ளுகம் என்ற மரத்தை எடுத்துக் கொள்கிறார்கள். அந்த மரம் எடுக்கப்படாமல் நின்றுபோன காரணத்தால் நமக்கு வர வேண்டிய வருமானத்தில் பெரிய வித்தியாசம வந்திருக்கிறது. நம்முடைய

நிரகக் குறைவு காரணமாக இது ஏற்படவில்லை. விஸ்கோஸ் நிர்வனம் வேலை நிறுத்தம் செய்த காரணத்தாலும், வேறு பலபிரச்னை காரணமாகவும் அது நீண்ட காலமாக மூடியிருந்த தாலும்தான் இந்த வித்தியாசம.

**திரு. பாபு ஜனார்த்தனன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்த தற்கு நன்றி. அந்தத் தொழிற்சாலை ஏதோ நீண்ட காலமாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு, மூடிக்கிடந்த காரணத்தாலும், தண்ணீர் தட்டுப்பாடு இருந்த காரணத்தாலும், மரங்களை எடுத்துக் கொள்ளவில்லை, அதனால் அவர்கள் இப்படி ஏற்பட்டது என்று சொன்னார்கள். நான் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்வது எல்லாம் அப்படி ஒப்பந்தம் செய்கிறபோது இப்படிப்பட்ட செய்கைகளின் காரணமாக எந்தவிதமான நஷ்டமும் அரசுக்கு ஏற்படக்கூடாது என்ற வகையில் செய்து கொள்ள வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு ஒப்பந்தம் என்று செய்கிறபோது— நிர்வாகத்திற்கு பல்வேறு சங்கடங்கள் வரலாம், வேலை நிறுத்தம் வரலாம், நிர்வாகச் சிக்கல் வரலாம், மின்சாரத் தடை வரலாம், எப்படிப்பட்ட சூழ்நிலைகள் வந்தாலும்— அரசுக்கு இழப்பு இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இந்த காலத்திற்கு இந்த விலைக்குத் தருகிறோம் என்று குறிப்பாகச் சொல்லியிருக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட காலக்கெடு முடிந்த பின்னாலும் அந்த நிர்வாகம் மரங்களை எடுத்துக் கொள்ளவில்லை. என்ன காரணம் இருந்தாலும், பிஸ்னஸ் மென்டாலிட்டி என்ற அடிப் படையில், ஒப்பந்தம் செய்த அடிப்படையில் நமக்கு நஷ்டம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்திருந்தால் நமக்கு நஷ்டம் வந்திருக்காது.

**மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் :** இதில் நஷ்டம் என்பது இல்லை. அந்த நிர்வாகத்திற்கு இவ்வளவு மரங்கள் தருகிறோம் என்று ஒப்புதல் அளித்திருக்கிறோம். அவர்கள் தேவைப்பட்டபோது, வெட்டி எடுக்கிறார்கள் ; நாம் அனுமதிக்





கிறோம். அந்தத் தொழிற்சாலை நடக்காத காரணத்தால் இந்தக் குறிப்பிட்டக் காலத்தில் அவர்கள், வெட்டி எடுக்கவில்லை. வெட்டி எடுக்காததனால் யாருக்கும் நஷ்டம் இல்லை. நமமுடைய மரங்கள் நம்முடைய வனத்தில்தான் இருக்கின்றன. இந்த ஆண்டு எடுக்கவில்லை என்றால் அடுத்த ஆண்டு எடுக்கிறார்கள். இப்போது நம்முடைய சொத்து நம்மிடமதான் இருக்கிறது. வருமானக் கணக்குக் கொடுக்கும்போது, விற்பனை குறைந்த காரணத்தால், குறைவு ஏற்பட்டிருக்கிறது ; அதில் நஷ்டம் என்கிற பிரச்சனை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பாபு ஜனார்த்தனன் :** அதிலே நமக்கு கிடைக்கிற வருமானம் குறைந்து விட்டது என்று கொள்கைக் குறிப்பில் இருப்பதால் நான் அதை விவாதத்திற்கு எடுத்துக் கொண்டேன். இந்த ஆண்டு இந்த காட்டிலாகா தன்னுடைய வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதற்கு நாம் பெரும் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று முதலிலே என்னுடைய கருத்தாகச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

வடாற்காடு மாவட்டத்தில் சேத்துப்பட்டு என்ற இடத்தில் 9.25 ஏக்கர் நிலத்தில் சந்தனத் தைலம் தயாரிக்கும் தொழிற் சாலை அமைக்க வேண்டுமென்று ஏற்கனவே திரு. சுந்தரம் அவர்கள் பலமுறை கேட்டிருக்கிறார்கள். உடனடியாக அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். ஏற்கனவே ஆரம்பிப்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தால் அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏலகிரி மலையை சுற்றுலா இடமாக்க வேண்டுமென்பது அந்தப் பகுதி மக்களின் நீண்டகால கோரிக்கையாக இருந்து கொண்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களும் பலமுறை அதுபற்றி சொல்லியிருக்கிறார்கள். அங்கே நல்ல கன்காட்சி இருக்கிறது. நல்ல வசதி இருக்கிறது, ஏர்கண்டிஷன் செய்யப் பட்டதுபோல நல்லமுறையில் அமைந்திருப்பதால் அதை விரைவிலே ஒரு சுற்றுலா இடமாக ஆக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று திருப்பத்தூர் சந்தன டெப்போவில் வேலை செய்கின்ற தொழிலாளர்களை எல்லாம் நிரந்தரமாக்க வேண்டு மென்று கோரிக்கை இருக்கிறது ; அதையும் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. பாபு ஜனார்த்தனன்] [1984 ஏப்ரல் 16

அடுத்து, டெல்லியில் இருக்கிற நம்முடைய தமிழ்நாடு இல்லத் திற்கு உறுப்பினர்கள் சென்றிருந்தபோது பார்த்தோம். அங்கே ஆங்கில பத்திரிகை மட்டும்தான் வரவழைக்கப்படுகிறது ; தமிழ் பத்திரிகை இல்லை. தமிழ்நாடு இல்லத்தில் ஆங்கிலப் பத்திரிகை வேண்டாமென்று சொல்லவில்லை ; ஆனால் தமிழ் பத்திரிகையும் அங்கே வருவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று, வேலூரில் அண்ணா கலையரங்கத்தில் நிர்வாகக் குறைபாடுகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பி னர்கள் அதுபற்றி இங்கே தெரிவித்திருக்கிறார்கள். 1982-83ஆம் ஆண்டு வருமானத்தைப் பார்த்தால் 1.55 இலட்சம்தான் வந்தி ருக்கிறது. ஒரு பெரிய நகரத்தில் வருகின்ற வருமானம் என்று பார்க்கும்போது அது போதுமானதாக இல்லை. தனியார் யாருக் காவது விட்டிருந்தால்கூட 10 அல்லது 12 இலட்சம் ரூபாய் வந்திருக்கும். ஆகவே, அங்கே சரியான நிர்வாகம் இல்லை என்று இந்த சட்டமன்றத்திலே பல உறுப்பினர்கள் தெரிவித் திருக்கிறார்கள். அதை மாற்றியமைக்க வேண்டும். நிர்வாகத் கத்தில் இருக்கிறவர்கள் பல தவறுகளைச் செய்கிறார்கள். தவறுகள் நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கலைவாணர் அரங்கிலே 3.42 இலட்சம் ரூபாய்தான் வருமானம் வந்திருக்கிறது. சென்னை மாநகரில் ஏராளமான வருமானம் வரக்கூடிய அளவுக்குச் செய்யலாம். அதையும் அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று செய்தித் துறையில் இருக்கிற நிலைமை களைப்பற்றிச் சொல்வது என்னுடைய கடமை என்று கருது கிறேன். தமிழரசு பத்திரிகை என்று ஒன்று வருகிறது. அரசாங்க பத்திரிகை அது. அந்தப் பத்திரிகையிலே எதிர்க் கட்சித் தலைவர்கள் சொல்லுகின்ற எந்தவிதமான கருத்தும் வருவதில்லை. ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்று இருந்தாலும் ஆளும் கட்சியின் கருத்து மட்டுமே அரசாங்கப் பத்திரிகையில் வரவேண்டுமென்ற எண்ணம் இல்லாமல் ஜனநாயக முறையில் எதிர்க்கட்சித் தலைவர்கள் கருத்தும் வரவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

அதேபோல் முரசொலி, எதிரொலி போன்ற பத்திரிகை களுக்கு விளம்பரம் கொடுப்பதில்லை. லாட்டரிச் சீட்டினுடைய விளம்பரங்கள் கூட, அரசு தரவில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.



1984 ஏப்ரல் 16] [திரு. பாபு ஜனார்த்தனன்]

அதேபோல் லாட்டரி விளம்பரங்களை, முரசொலி, எதிரொலி குங்குமம், விடுதலை, முத்தாரம் போன்ற பத்திரிகைகளில் போடுவதில்லை , என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். பத்திரிகை ஆரம்பித்து 6 மாதகாலம் கழித்து விளம்பரம் தர வேண்டும். ஆனால் அந்த முறையை அரசு அனுசரிக்காமல், மன்ற முரசு, நியூஸ் டுடே போன்ற பத்திரிகை களுக்கு உடனடியாக விளம்பரங்கள் தரப்பட்டிருக்கின்றன. ஆகவே எல்லாக் கட்சிப் பத்திரிகைகளுக்கும் அந்த முறையை அனுசரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதைக் கேட்டால், அமைச்சரவர்கள் சொல்வார்கள். நீங்கள் ஆளும் கட்சியில் இருந்தபோது, நீங்கள் இதைச் செய்யவில்லையா என்று கேட்பார்கள். அவருடைய கருத்துப்படி நாங்கள் தான் செய்தோம். நாங்கள் தான் அனுபவிக்கிறோம். நீங்களும் அப்படி அனுபவிக்க வேண்டுமென்று முடிவு எடுத்தால், அப்படியே செய்யுங்கள், வேண்டாம் என்று சொல்லவில்லை.

அடுத்து சுற்றுலாவைப் பொறுத்தவரையில், 9 மாதம் தமிழ் படம் காட்ட வேண்டுமென்ற ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். அதை வரவேற்கிறேன்.

ஆனால் 5 நட்சத்திர ஹோட்டல் இன்றைக்கு எப்படி இருக்கிறது என்றால், ஆங்கிலப் பாடல்கள் தான் போடப்படு கின்றன. தமிழ்ப் பாடல்கள் போடப்படுவதே கிடையாது. உங்கள் நிர்வாகத்தில் உள்ள அவைகளையும் களைய வேண்டும். தமிழ்ப் பாட்டிற்கு ஒரு சலுகை தருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல ஜவ்வாது மலை கலசபாக்கம் தொகுதியில் பாரெஸ்டு மேனேஜ்மெண்டில் இருக்கக் கூடிய உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஜவ்வாது மலைப் பகுதியில் பல பகுதிகள் சுற்றுலா பகுதிகளாக மாற்றத் தக்க தகுதி உடையதாக இருக்கிறது. அதையும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு விஷயத்தை கன்கரெண்டு லிஸ்ட்டிலே மாற்ற வேண்டு மென்று அரசையும் மாண்புமிகு அமைச்சரையும் கேட்டுக் கொள்கிறேன். அது என்னவென்றால், ஒரு கிராமத்திலிருந்து மற்றோரு கிராமத்திற்கு ஒரு பாதை போட வேண்டுமென்றால், நடுவிலே காடு இருக்கிறது என்று சொன்னால், தமிழக அரசே, பாரஸ்டு இலாகாவே அந்தப் பாதையைப் போடுவதற்கான அதிகாரம் கிடையாது. அதை மத்திய அரசு அனுமதி செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. இப்படி சாதாரண விஷயத்தில் கூட இந்த அனுமதி தேவையாயிருக்கிறது. அதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த உரிமையைப் பெற்றுத் தர வேண்டும். கிராமத்திற்கு கிராமம் பாதை போடும் இந்த நிலைமை வேகமாக தீவிரப்படுத்தப்படும் நேரத்தில், அப்படி பாதை போடும்

நிலையில், மத்திய அரசை அணுக வேண்டும். மத்திய அரசு அனுமதித்தால் தான் அது நடக்கும் என்று சொன்னால் அது மிகவும் சங்கடமான நிலைமையை உண்டாக்கும். உதாரணத்திற்கு ஒன்று சொல்ல வேண்டுமென்றால், கண்டப்பன் தாங்கல் என்ற இடத்தில் உள்ள இடம். அங்கே பாரஸ்டு இலாகா அனுமதித்து விட்டார்கள். 18—11—1982ல் அங்கேயிருந்து பரிந்துரை செய்யப்பட்டது. ஆனால் டில்லியிலிருந்து இன்று வரை அனுமதி வராத காரணத்தினால் அப்படியே இருக்கிறது. அவர்கள் அனுமதித்தால் தான் ஒன்றியத்திலிருந்து பாதை போட முடியும் என்ற நிலைமை இருக்கிறது. குறிப்பாக அமைச்சரவர்கள் டில்லிக்குச் செல்கின்ற நேரத்திலே அந்த உரிமையைப் பெற்று, கிராமங்களுக்கு பாதை வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று திருப்பத்தூர் அருகில் இருக்கின்ற சந்தனத் தொழிற்சாலையில் அந்தப் பகுதியிலே உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பை தர வேண்டுமென்று கருத்தை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து சாத்தனூர் அணை சுற்றுலா மையம் அமைக்கும் வகையில் இருக்கக்கூடிய நல்ல அணை. அதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கூறி நான் விடை பெறுகிறேன்.

திரு. கோவைத் தம்பி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு செய்தி, சுற்றுலா, வனத்துறை மற்றும் சின்கோனாதுறை அமைச்சர் அவர்களால் கொண்டு வந்திருக்கக் கூடிய இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்று. ஒருசில கருத்துக்களை இந்த மாமன்றத்திலே எடுத்து வைக்க விரும்புகிறேன்.

வனத்துறையைப் பொறுத்தவரையில் மக்கள் வாழ்க்கைக்கு மிகவும் அத்தியாவசியமான பிண்ணணியாக இந்தத் துறை இருக்கிறது என்ற காரணத்தால், அதைப் பலப்படுத்த வேண்டிய கட்டாயத்திற்கு தமிழக அரசும், ஏன் இந்திய அரசும், உலகமுமே அதில் கவனம் செலுத்தக் கூடிய நிலையில், இந்த வனத்துறை பற்றிய மானியக் கோரிக்கையை மகிழ்ச்சியோடு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்ததற்கு நான் மனதாரப் பாராட்டுகிறேன். இந்தத் துறையைப் பொறுத்த அளவிலே இன்று தமிழகம் சமுதாயக் காடு வளர்ப்புத் திட்டம் என்ற ஒரு திட்டத்தை, மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக் காட்டாக மிகவும் தீவிரமாக செயல்படுத்தக் கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தி, கிராமப்புறங்களில், அரசினுடைய தரிசு நிலங்களில், புறம்போக்கு நிலங்களில், மலையோரப் பகுதிகளில், இந்தத் திட்டத்தை வேகப்படுத்துவது பாராட்டுக்குரியது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். எந்த அளவிற்கு இந்தத் திட்டத்தை வேகப்படுத்தி, அரசு முயற்சி செய்திருக்கிறதோ, அந்த அளவிற்கு இந்தத் திட்டத்தை கண்காணிக்கின்ற பொறுப்பையும் இந்தத்



துறை வேகத்தோடு, விவேகத்தோடு அதிக அக்கறையோடு எடுத்துக் கொள்ளக் கூடிய ஒரு சந்தர்ப்பம் இன்றைய சூழ்நிலையில் ஏற்பட்டிருக்கிறது என்ற என் மனக் கருத்தையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

50 விழுக்காடுகளாவது இந்த சமுதாய காடு வளர்ப்புப் பணி வெற்றி பெறக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவதற்கு பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும் என்ற ஒரு எண்ணத்தை அரசு அதிகாரிகளும், ஆட்சி போடுகின்ற திட்டம், இந்த சமுதாய காடு வளர்ப்பால் தமிழகம் வளர்கிறது என்ற உணர்வு அரசு அதிகாரிகளுக்கும் ஏற்படக் கூடிய விதத்தில் இந்த சமுதாய காடு வளர்ப்புத் திட்டம் வேகமாக செயல்படக் கூடிய ஒரு சூழ்நிலையில் கொஞ்சம் ஜாக்கிரதையாக கண்காணிக்கக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று நான் பணிவன்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

அத்தோடு சுயவேலைவாய்ப்பு, தன்னிறைவுத் திட்டம் என்ற திட்டங்களின் அடிப்படையில், வேலையற்றவர்களுக்கு வேலைப் பணிகளை அமர்த்தித் தருகின்ற இந்த தமிழக அரசு, இந்த சமுதாயக் காடு வளர்ப்புத் திட்டத்தை ஒரு பெரிய திட்டமாக ஏற்றுக் கொண்டு, சமுதாயத்தில் நாட்டுப் பற்றோடு, தேச பக்தியோடு இருக்கின்ற இளைஞர்களுக்கு இந்த உணர்வோடு வேலைவாய்ப்புக்களை இந்தத் துறையின் மூலமாக, இந்த திட்டங்களின் மூலமாக அளிக்க முன் வந்தாலும், அதைப் பாதுகாக்கவும், இந்த திட்டத்தை பலப்படுத்துவதற்கும் ஏதுவாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து ரப்பர் வாரியம் ஒன்றை அமைத்து, ரப்பர் வாரியத்தின் மூலமாக அந்த ரப்பர் வாரியம் செயல்படுத்தக்கூடிய ஒரு சூழ்நிலையை, ரப்பர் தோட்டங்களை பலப்படுத்தக் கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று அரசு விரும்பியது. அதற்கு என்று ரப்பர் வாரியம் ஒன்றை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைப்பதாக இந்த மாமன்றத்தில் சொன்னார்கள். அமைத்தார்கள். அதற்கு இன்று மத்திய அரசு ஒப்புதல் பெறுவதற்காக இந்தத் துறையின்மூலமாக சென்றிருக்கிறது என்றும், அது மத்திய அரசின் கிடப்பில் கிடக்கிறது என்ற செய்தியும் நாட்டில் உலவிக் கொண்டிருக்கிறது என்பதையும் இந்த ரப்பர் வாரியத்தை எவ்வளவு வேகமாக அமைக்க முடியுமோ, அவ்வளவு வேகமாக அமைத்து செயல்படுத்தக்கூடிய ஒரே தன்மையை உருவாக்கினால்தான், இந்தியாவிலேயே ரப்பர் அதிகமான அளவிலே விளைகின்ற பகுதியாக தமிழகம் இருக்கிறது என்பதையும், அதிலே முதல் தரமான ரப்பரை, கன்னியாகுமரி மாவட்டத்தில் பெற்றுக் கொண்டிருக்கிறோம் என்பதையும், ஆகவே இந்த ரப்பர் வாரியம் என்பது மிகவும் முக்கியமான ஒரு வாரியமாக இருக்கிறது என்ற காரணத்தால், இந்த வாரியத்தை வேகமாக அமைத்து செயல்படுத்துவதற்கு அரசு, மத்திய அரசை விரும்பி கேட்டுக் கொள்ள வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம் பெருவாரியான முதல் தரமான ரப்பரை இந்தியாவிற்கு தந்தாலும், ரப்பர் சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகள் கன்னியாகுமரி மாவட்டத்தில் இல்லாதது ஒரு துரதிருஷ்டமானது என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மூலப்பொருள்கள் கிடைக்கின்ற இடத்திலே, மூலப் பொருள்களுக்கு சம்பந்தப்பட்ட தொழிற்கூடங்கள் ஏற்படாதது வருந்தத்தக்கது என்பதையும், அப்படிப் பட்ட ரப்பர் தொழிற்சாலைகளை அங்கே ஏற்படுத்துவதற்கு, மத்திய அரசின் துணையோடு மாநில அரசு முழு முயற்சியை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன். (குறுக்கீடு).

(பிற்பகல் 12-30)

மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, என் பேச்சில் இடையில் குறுக்கிட்டு, மாண்புமிகு உறுப்பினர் சொரணம் அவர்கள், மற்ற உறுப்பினர்கள் வேகமாக ஆளும் கட்சி பக்கம் வருவதைத்தடுக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

இன்று சுற்றுலாத் துறை மூலமாக, இளைஞர்களாக இருப்பவர்களும், குறைந்த வருவாய் உள்ளவர்களும் நண்பர்களாகவோ, அல்லது குழுக்களாகவோ வந்து தங்குவதற்கு வசதியாக அவர்களுக்கு குறைந்த வாடகை கொடுத்து தங்குவதற்காக, தங்கும் விடுதி கட்டித் தந்திருப்பதற்காக இந்தத் துறையை நான் மனதார பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்று தமிழ்நாடு ஓட்டல் என்ற பெயரில் பல மாவட்ட தலைநகரங்களில், 'ஓட்டல் தமிழ்நாடு' இயங்கி வருகிறது. ஆனாலும் சில மாவட்ட தலைநகரங்களில் அந்த நிலையங்கள், அல்லது அந்த விடுதிகள் அல்லது அந்த ஓட்டல்கள் இல்லை என்பது அரசுக்குத் தெரியும். ஆகவே, எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் அதை வேகமாக செயல்படச் செய்யும் வகையில் எல்லா இடங்களிலும் ஏற்படுத்த ஏற்பாடு செய்யுமாறு நான் விரும்பி வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

மலையோரப் பகுதி மேம்பாடு திட்டத்தின்கீழ், அதிக வாய்ப்புகள் நிறைந்த, மலைப் பகுதிகள் நிறைந்த, இயற்கை வளம் பொருந்திய இடங்களில் எல்லாம் உணவு விடுதிகளை உல்லாச பயணிகள் தங்குவதற்குரிய ஒரு சூழ்நிலையில் கட்டுவதற்கு உரிய முழு முயற்சியை இந்த அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. இந்த முயற்சிக்கு சற்று வேகம் கொடுத்து, பல்வேறு மாவட்டங்களிலும் இந்த உணவு விடுதிகளை மலை மேம்பாடு திட்டத்தின்கீழ் கட்டிக் கொடுக்க, சற்று வேகமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விரும்பி வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.





கடலோரப் பகுதிகளில் பயணிகள் சென்று வருகிற பல இடங்களில் சுற்றுலா மையங்கள் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை இந்த அரசுக்கு வந்திருக்கின்றது. பாண்டிச்சேரி எல்லைப் பகுதி, புதுக்கோட்டை மாவட்டத்தில் மனோரா பகுதி, அதே மாதிரி தஞ்சை மாவட்டத்தில் ஓடிய கரைப் பகுதி போன்ற இடங்களில் எல்லாம் இப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிறது. இந்தக் கடலோரப் பகுதிகளில் பயணிகள் தங்குவதற்கு, சுற்றுலா வாரியத்தின் மூலமாக விடுதிகள் கட்டித் தர முன் வர வேண்டும் என்று நான் பணிவோடு விரும்பி வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

இன்று ஏ.சி. கார்கள் சுற்றுலாத்துறை மூலமாக வாங்கப் பட்டிருக்கின்றன. அந்தக் கார்களை வெளிநாட்டு பயணிகள் பயன்படுத்தக் கூடிய ஒரு சூழ்நிலையை, தமிழ்நாட்டின் பொருளாதாரத்தின் அடிப்படையில், ஏற்படுத்துவதற்கு, இந்தத் துறை முழு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். வாங்கப்பட்டிருக்கிற இந்த ஏ.சி. கார்களுக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிற வாடகையை கொஞ்சம் குறைக்க கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தி, அதைப் பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கையை அதிகமாக்க வேண்டும் என்று நான் விரும்பி வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

இன்று தாய்லாந்து நாட்டில் தங்களுடைய கலாசாரத்தை எடுத்துக் காட்டுவதற்காகவும், தங்களுடைய தீரத்தை, வீரத்தை எடுத்துக் காட்டுவதற்காகவும், தங்களுடைய பண்பாட்டை தங்களுக்கிருக்கிற கலாச்சார உறவுகளை, தங்களுக்கென்று இருக்கிற பாரம்பரியப் பெருமைகளை வெளிப்படுத்திக் காட்டுவதற்காகவும், ஆண்டு முழுவதும், கலாச்சார நிகழ்ச்சிகளை தாய்லாந்து நாட்டில் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அது போல நம்முடைய பண்பாட்டை, நம்முடைய கலாச்சாரத்தை, நம்முடைய வீரத்தை, நம்முடைய பாரம்பரியத்தை எடுத்துக் காட்டும் வகையில், தீவுத் திடலிலோ, அல்லது மகாபலிபுரத்திலோ வெளிநாட்டினர் வரும்போது அவர்கள் அறிந்துக் கொள்வதற்கு வசதியாக, ஆண்டு முழுவதும் கலாச்சார நிகழ்ச்சியை நடத்துவதற்கு அரசு முழு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

இன்று வீடியோ கேசட்டு ரிக்கார்டுகள் போன்றவைகள் மிக அதிகமாக பெருகி, அரசுக்கு வருவாய் வரக்கூடிய ஒரு நிரந்தர தொழிலாக இருக்கக்கூடிய, திரைப்படத் தொழிலை மிகவும் பெரிதாக பாதித்திருக்கிறது என்பதை இந்த அரசு நன்றாக உணர்ந்திருக்கிறது என்பதில் எங்களைப் போன்ற உறுப்பினர்களுக்கு எந்தவிதமான சந்தேகமும் இல்லை என்று சொன்னாலும் இந்த வீடியோ கேசட்டுகளை பறி முதல் செய்யும்போது, காவல்துறையினர் கள்ளச் சாராயத்தை ஒழிக்கும் நடவடிக்கையை கையில் எடுத்துக் கொள்ளும்போது, அந்தச் சாராயப் பானைகள் எப்படி உடைக்கப்படுகிறதோ, நொறுக்கப்படுகிறதோ. மற்றவர்களுக்கு பயன்படுத்த முடியாமல் எப்படி அந்தக் கள்ளச் சாராயம் ஆற்றில் கொட்டப்படுகிறதோ, அதே மாதிரி, அரசு அனுமதி

இல்லாமல், பால் இயல் உணர்வுகளைத் தூண்டி, நம்முடைய பண்டைய பண்பாட்டை கெடுக்கின்ற உணர்வுகளை உடைய அந்த வீடியோ கேசட்டுகளையும், காவல் துறையினர் கைப்பற்றும் போது, அல்லது வேறு ஏதோ துறையினர் கண்டு பிடித்து கைப் பற்றும்போது, அதை முழுவதுமாக அழிக்கக் கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று நான் வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

இன்று மாவட்ட வாரியாக மக்கள் தொடர்புத்துறை என்ற அடிப்படையில் மக்கள் தொடர்பு அதிகாரி ஒருவர் இயங்கி வருகிறார். அதே சூழ்நிலையில் ஒன்றிய வாரியாக ஒருவர் இயங்குவதற்குரிய சூழ்நிலையை அரசு ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய தினம் திரைப்படத்துறை மிகவும் கவலை அளிக்கக் கூடியதாக இருக்கிறது என்பதை நான் இந்த மாமன்றத்தின் மூலமாக மாண்புமிகு உறுப்பினர்கள் சார்பாக மன்றத்தினுடைய தலைவர் அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைய முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் சினிமாப் படங்களில் நடித்துக் கொண்டிருக்கும் போது வரலாற்றுச் சிறப்பு மிக்க நம்முடைய பண்டைய நாகரிகம் பற்றியும் நம்முடைய மூதாதையர்கள் பற்றியும் நம்முடைய முன்னோர்கள் பற்றியும் நம்முடைய வீரம் செறிந்த மூவேந்தர்கள் பற்றியும் நம்முடைய பரம்பரையினர் பற்றியும் பாரம்பரியத்தைப்பற்றியும் நம்முடைய கலாச்சாரத்தைப்பற்றியும் பல சினிமாக்கள் வந்த காட்சியை நாம் பார்க் கிறோம். ஆனால் என்று முதல்வர் அவர்கள் அந்தத் துறையை விட்டு விலகினார்களோ அன்றிலிருந்து நம்முடைய பாரம்பரியத்தைப் பற்றியோ வீர வரலாறுகள் பற்றியோ நம்முடைய நாகரீகம் பற்றியோ தமிழ்ப் பண்பாட்டைப் பற்றியோ சினிமாப் படங்கள் வருவது குறைந்திருக்கின்றன. குறைந்திருக்கின்றன என்று சொல்வதற்குக் காரணம் இன்றைய நாகரிக உணர்வுகளுக்கு மத்தியில் அந்தப் படங்கள் எடுத்தால் நடிப்பதற்கு ஆள் இல்லை என்ற பிரச்சினை இருந்தாலும் அதை நாட்டு மக்கள் பார்க்க மாட்டார்கள் என்பது இரண்டாவது பிரச்சினையாக இருந்தாலும் அந்தச் சோதனையில் அந்தத் துறையில் யாரும் ஈடுபடுவதில்லை என்பதை நாம் பார்க்கிறோம். நம்முடைய முதல்வர் அவர்கள் ராஜா தேசிங்கு போன்றும், மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன் போன்றும், மதுரைவீரன் போன்றும், ராணி சம்யுக்தா, நாடோடி மன்னன் போன்ற நம்முடைய வரலாறுகளை மையமாக வைத்து படங்களை எடுத்து நாமும் இந்த இந்தியச் சமுதாயத்தில் இருந்து கொண்டிருக் கிறோம் என்ற உணர்வுகளை ஏற்படுத்தினார்கள். அப்படிப் பட்ட உணர்வுகளை ஏற்படுத்துவதற்கு இன்று வழியில்லை என்று சொல்வதைவிட அந்த நிலையில் ஒருவரும் இல்லை என்ற காரணத்தினாலே தமிழக அரசே இந்த செய்தித் துறையே இந்த



வீர வரலாறுகளைப் பற்றிய சிறப்பு மிக்க படங்களை எடுத்து இலவசமாக நம்முடைய முந்தையவர்களுடைய நாகரீகத்தைப் பற்றி, வீரத்தைப்பற்றி, பாரம்பரியத்தைப்பற்றி, பரம்பரையைப் பற்றி தமிழ் உணர்வுகளைப்பற்றி, தமிழ்நாட்டின் உணர்வுகளைப் பற்றி வெளியிட வெண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் இந்தச் செய்தித்துறை சினிமாத் துறையை வைத்திருக்கின்ற அமைச்சர் அவர்களுக்கு நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன், ஸ்ரீலங்கா பிரச்சினையை வைத்து ஆயிரம் நல்ல காரியங்களை செய்து கொண்டு வருகிற இந்தத் தமிழக அரசை மிகவும் அருவறுக்கத்தக்க வகையில் தமிழ் மக்கள் மத்தியில் மிகவும் மோசமான நிலையில் தமிழ் மக்கள் உள்ளங்களில் பதிய வைக்கக் கூடிய அளவுக்கு தவறான பிரச்சாரத்தை உண்மைக்குப் புறம்பான பிரச்சாரத்தை செய்து வருகிறார்கள் என்பதை நான் இந்த மாமன்றத்திற்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

மிகவும் சக்தி வாய்ந்த இந்தத் துறை இந்த அரசு, சினிமாத்துறை, இவ்வளவு ஒரு மோசமான நிகழ்ச்சிக்கு தமிழக அரசை, தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களை அடையாளம் காட்டியதற்குப் பிறகு வாளா இருப்பது தவறானது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். இன்று ஸ்ரீலங்காவில் என்ன நடந்து கொண்டி ருக்கிறது என்பதைப்பற்றியும் ஸ்ரீலங்கா பிரச்சினையில் மாநில அரசு என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது என்ப தையும், இந்திய அரசு என்ன செய்து கொண்டிருக்கிறது என்பதைப்பற்றியும் தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவர் என்ன என்ன பணிகளை ஆற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் இந்தச் செய்தித்துறை உடனடியாக ஒரு சினிமாப் படமாக எடுத்து மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பேச வைத்து அல்லது அனைத்து தேசிய கட்சித் தலைவர்களையும் பேச வைத்து ஸ்ரீலங்காவில் என்ன நடக்கிறது, தமிழக அரசு என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது, இந்திய அரசு என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை கிராமப்புறங்களிலே எல்லாம் அது போய்ச் சேருகிற அளவில் எல்லா சினிமா கொட்டகைகளிலும் காட்டப்படுகிற ஒரு சூழ்நிலையை உடனடி யாக ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படக்கூடிய ஒரு சந்தர்ப்பம் இந்தத் துறையின் மூலமாக வேகமாக ஏற்படாவிட்டால் தமிழ்நாட்டில் குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க முயற்சி செய்கிறவர்கள் ஆதாயம் தேடுகிற அளவுக்கு அருவறுக்கத்தக்க அரசியலாகப் போய்விடும் என்பதால் நான் இந்தத் துறை அமைச்சர் அவர் களுக்கு என்னுடைய பணிவான வேண்டுகோளாக தெரிவித்து ஸ்ரீலங்கா பிரச்சினைப்பற்றி நம்முடைய முதல்வர் அவர்கள் என்ன கருதுகிறார்கள் என்பதை முதல்வர் அவர்களே செய்திப் படத்தில் பேசுவதாக தேசியத் தலைவர்கள் என்ன கருதுகிறார்கள் என்பதை அந்தத் தேசியத் தலைவர்கள் பேசுவதை, எந்தக் கட்சியாக இருந்தாலும் அந்தத் தலைவர்களின் பேச்சை மக்கள்

பேசுவதை மக்கள் பார்க்கக் கூடிய முறையிலே ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொண்டு ஸ்ரீலங்கா பிரச்சினையைப்பற்றி உடனடியாக செய்ய வேண்டும். பத்திரிகை சுதந்திரம் என்ற பெயரில் தவறான தகவல்களைத் தருவது சமுதாயத்திற்கு மாத்திரமல்ல, தமிழ்நாட்டிற்கு மாத்திரமல்ல, இந்தியாவின் சுதந்திரத்திற்கே ஸ்ரீலங்கா பிரச்சினை மூலமாக ஆபத்து ஏற்பட்டு இருக்கிற காரணத்தினால் அபாயக் குரலை நான் இந்த மாமன்றத்திலே ஒலிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக "இந்தியா டுடே" என்ற பத்திரிகையிலே எழுதியிருக்கிற எழுத்துக்கள் கூட இந்தியாவின் சுதந்திரம் பலகீனப்படுத்தக் கூடிய நிகழ்ச்சியாக மட்டுமல்ல, பத்திரமில்லாத நிகழ்ச்சியாக ஆக்கியிருக்கிறது என்பதையும் இந்தத் துறை மனத்திலே கொண்டு ஆவன செய்யுமாறு நான் அமைச்சர் அவர்களை பணிவன்போடு வேண்டி விரும்பி கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

*திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை குறிப்பில் அரசு ரப்பர் தோட்டங்களுக்கு ஒரு கார்ப்பரேஷன் ஏற்படுத்துவதற்கு அரசு முடிவு எடுத்து இருக்கிறது. அதை அமுல் படுத்துவதற்கு தீவிரமான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று சொல்லப்பட்டு இருக்கிறது. ஆனால் 2 வருட காலமாகவும் அந்த அறிவிப்பு வந்த பிறகு அந்த நடவடிக்கையில் எந்த முடிவும் ஏற்படவில்லை என்ற காரணத்தால் அந்த தொழிலாளர்களுக்கு ஏற்கனவே எக்ஸ் கிரேஷ்யா என்ற முறையில் ஒரு மாத ஊதியம் கொடுக்கப்பட்டது. பிறகு கொடுக்காமல் இருக்கிற சூழ்நிலை ஏற்பட்டு விட்டது என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கார்ப்பரேஷன் ஆகவில்லை என்ற காரணத்தால் அந்தத் தொழிலாளர்களுக்கு அது கொடுக்கப்படாமல் இருப்பது சரியல்ல. அதைக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கொள்கை குறிப்பில் 17.13 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டது என்றும் அதே நேரத்தில் 13.48 கோடி ரூபாய் தான் வருவாய் என்றும் சுட்டிக்காட்டப்பட்டு இருக்கிறது. ஆனால் Capital expenditure-ஐ சேர்த்து இப்படி சொல்லியிருப்பது சரியல்ல என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது என்ன என்றால் ஒரு சில நடவடிக்கைகள் அந்த தோட்ட வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள் நலன்களுக்காக செய்யப்பட்டு இருந்தாலும் இன்னும் சில நடவடிக்கைகளை உடனடியாக செய்ய வேண்டிய தேவை இருக்கிறது. கோதையாறு போன்ற மிகப் பின் தங்கிய பகுதிகளில் தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஏதாவது நோய் ஏற்பட்டால் இரவு நேரங்களில் சிகிச்சை



பெறுவதற்காக போக வாகன வசதி இன்னும் சரிவர செய்யவில்லை. குத்தியற்றில் ஒரு ஓடாத வண்டி அங்கே கொடுக்கப்பட்டு இருக்கிறது. சமீபத்தில் அங்கே ஒரு விபத்து ஏற்பட்ட நேரத்தில் —குடும்பக் கட்டுப்பாட்டுக்காக செல்லும்போது—அங்கே தோட்டத்தில் வேலை செய்யக்கூடிய 3 தொழிலாளிகளை மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்வதற்கு அந்த வாகனம் உபயோகப்படவில்லை. அதை உபயோகப்படுத்த முடியவில்லை. அதே நேரத்தில் அங்கே டிரைவர்கள் தங்குவதற்கு ஏற்பாடுகள் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதிலும் இப்படிப்பட்ட மலை ஓரத்தில் தோட்டங்களில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள் மருத்துவ மனைக்கு செல்வதற்கு வாகன வசதி செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மற்றும் குழந்தைகள் பள்ளிக்கூடங்கள் செல்வதற்கு வாகன வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். இவைகள் கட்டாயமாக செய்வதற்கு முன்னுரிமை கொடுக்கப்படவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் வலியுறுத்தி தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதே நேரத்தில் அங்கே உள்ள டிஸ்பென்சரியில் போதுமான அளவுக்கு மருந்துகள் கிடையாது. மேலும் அதிகமான, தேவையான மருந்துகளை வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் இந்த கொள்கை குறிப்பில் 981 வீடுகள் கட்டப்பட்டு இருக்கிறது என்று சொல்லப்பட்டு இருக்கிறது. 2,500 தொழிலாளர்கள் வேலை செய்யக்கூடிய இடத்தில் 981 வீடுகள் போதுமான அளவுக்கு இல்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களே ஒத்துக்கொள்வார்கள். ஆகவே மேலும் அதிகமான வீடுகளை கட்டுவதற்கும் அந்த வீடுகளை பராமரிப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். மணலோடையில் குடி தண்ணீர் கிடைப்பதற்கான வேலை முடிக்கப்படவில்லை.

மரங்களைப் பொறுத்தவரையில் மெயின்டெனன்ஸ் போதாது. இரப்பர் மரங்களுக்குச் சீக்கு வரும் நேரத்தில் அந்தப் பகுதிகளை வெட்டுவது என்பது வழக்கமான மெயின்டெனன்ஸ். ஆனால் அது இன்றைக்குச் சரிவர செய்யப்படவில்லை.

பெருஞ்சாணி பகுதியில் உள்ள பேக்டரியில் ஸ்மோக் ஹவுஸிற்காகக் (Smoke house) கட்டப்படவேண்டிய இடம் கட்டப்படவில்லை.

காண்ட்ராக்ட் முறையில் தொழிலாளர்களை வேலைக்குவைத்து இருக்கிறார்கள். கோவைத் தம்பி அவர்கள் சொன்னதைப் போல, இவ்வளவு அதிகமாக இரப்பர் உற்பத்தி செய்யும் அந்த இடத்தில் இரப்பர் தொழிற்சாலை ஏற்படுத்தப்படவில்லை என்ற குறை இருக்கிறது. 1974 ஆம் ஆண்டிலே கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகமும், கவர்ன்மெண்ட் இரப்பர் ப்ளாண்டேஷனும் சேர்த்து ஒரு டயர் பேக்டரியை, போக்குவரத்துக் கழகங்களுக்குத் தேவையான டயர்களுக்காக பேக்டரியை

ஏற்படுத்துவதற்கான ஒரு ஸ்கீமைத் தயார் செய்து, ப்ராஜக்ட் ரிப்போர்ட்டும் தயார் செய்யப்பட்டது. ஆனால் இன்னும் அது நடைமுறைக்கு வரவில்லை. அதிகமான அளவிற்குத் தரமான இரப்பர் உற்பத்தி செய்யும் இந்த இடத்தில் டயர் உற்பத்தித் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கு ப்ராஜக்ட் ரிப்போர்ட்டில் கூறியுள்ளவைகளை அமல்படுத்த முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சின்கோனாவைப் பொறுத்தவரையில், நீலகிரி, வால்பாறை போன்ற தொழிற்சாலைகளை எடுத்துக் கொண்டோமானால் அங்கே உள்ள தொழிலாளர்களுக்கு எக்ஸ்கிரேஷியா கொடுக்கப் படாமல் இருக்கிறது. இந்த மன்றத்தில் கடந்த சில ஆண்டு களாக அது குறித்து வற்புறுத்தி வந்தும் அது தரப்படவில்லை. உடனடியாக அவர்களுக்கு ஒரு மாத சம்பளம் எக்ஸ்கிரேஷியா கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். அந்தத் தொழிலாளர்களுக்கு, தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குக் கிடைக்கின்ற குறைந்த பட்சக் கூலி கூட கொடுக்கப்படாமல் இருப்பது வருந்தத் தக்கது. அவ்வாறு செய்வது தவறானது. எனவே, தேயிலைத் தோட் டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படு கின்ற குறைந்தபட்சக் கூலியையாவது அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு பண்டகசாலையை அந்தத் தொழிலாளர்களுக்கு உடனடியாக ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கொள்கைக் குறிப்பிலே, சின்கோனா பகுதியில் உள்ள தொழிலாளர்களில் 60 சதவீதம் பேர் ஷெட்யூல்ட் காஸ்டைச் சேர்ந்தவர்கள் என்றும், 30 சதவீதம் பேர் பேக்வார்ட் க்ளாஸ் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் என்னவென்றால், இப்படிப்பட்ட குறைந்த பட்சக் கூலிக்கு அப்படிப்பட்டவர்கள்தான் கிடைக்கிறார்கள் என்பதுதான் இதில் உள்ள மிகவும் மோசமான அம்சம் ஆகும். ஆகவே, இன்று அப்படிப்பட்ட குறைந்தபட்ச ஊதியத்திற்கு ஆட்களை வைப்பது சரியல்ல. எனவே, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்குக் கிடைக்கின்ற அளவிற்காவது—அருகில் உள்ள இடத்தில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்குக் கிடைக்கின்ற அளவிற்காவது அவர்களுக்கு ஊதியம் கொடுப் பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

காடு வளர்ப்பது என்பதும், பாதுகாப்பது என்பதும் கொள்கை விளக்கக் குறிப்பில் மிகவும் முக்கியமான அம்சமாகச் சொல்லப் படுகிறது. அதை நாங்கள் வரவேற்கிறோம்; அதை நாங்கள் ஆதரிக்கிறோம். ஆனால், நடைமுறையில், காடுகளைப் பாது காப்பது என்ற பெயரில், வளப்படுத்துவது என்ற பெயரில் ஏழை





எளிய விவசாயிகளை வெளியேற்றுகின்ற முயற்சி நடக்கிறது. அது சரியல்ல. இன்றைக்கு வனங்களைப் பாதுகாக்கிறேன் என்ற பெயரில் விவசாயிகளை, வெளியேற்றுவது என்பது It hould not be at the cost of the poor peas..ts என்பதைத் தெள்ளத் தெளிவாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், கன்னியாகுமரி மாவட்டத்தில் 40, 50 வருஷ காலமாக விவசாயம் செய்து கொண்டிருக்கிற ஏழை எளிய விவசாயிகள் பத்துக்காணி, பேச்சிப் பாறை, மிஞ்சிலாமடக்கு, தடிக்காரணக்கோணத்திற்கு அருகி லுள்ள கடுக்காதிட்டு, குலசேகரத்திற்கு அருகிலுள்ள கில்லிக் கோணம் போன்ற பகுதிகளில் இருக்கிறார்கள். அவர்களை வெளியேற்றுவதற்கு வன இலாக்காவினர் முயற்சி செய்கிறார்கள். இந்த நேரத்தில் ஒன்றைச் சொல்கிறேன். ஒரு காலத்தில் அந்த நிலம் புறம்போக்கு நிலமாக இருந்தது; ரெவின்யூ புறம்போக்கு என்பதற்கு பி மெமொ இருக்கிறது. அப்படியிருந்தும், வன இலாக்காவைச் சேர்ந்தவர்கள் தவறாக அந்த இடத்தைப் பிடித்துக் கொண்டு,—கில்லிக்கோணம் என்ற பகுதியிலே இருக் கின்ற ஷெட்யூல்ட் காஸ்ட் வகுப்பைச் சேர்ந்தவர்கள் விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள்—அவர்களை வெளியேற்றுவதற்கு முயற்சிக்கிறார்கள், விண்ணப்பம் கொடுத்து, பெரிய அதிகாரி களோடு பேசினால், விவசாயிகளை எந்தவிதமான தொந்தரவும் செய்வதில்லை என்று சொல்கிறார்கள். ஆனால் விவசாயிகள் விவசாயம் செய்து அறுவடை செய்கின்ற நேரத்தில், இந்த வன இலாக்கா அதிகாரிகள் வந்து நாசப்படுத்தும் நடவடிக்கைகள் நடந்து வருகின்றன. காடுகளை வளப்படுத்துவதை வரவேற்கும் அதே நேரத்தில், இப்படி ஏழை எளிய விவசாயிகளை நிச்சயமாகத் தொந்தரவு செய்யக்கூடாது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12—50)

அதே போன்று ரெவின்யூ இலாக்காவின் கையிலே இருந்த நிலங்களைப் பொறுத்தவரையிலே அவற்றிலே விவசாயம் செய்து வருபவர்களுக்குப் பட்டா கொடுப்பதற்கான நடவடிக்கையைத் தான் வன இலாக்காவினர் எடுத்துக் கொள்ளவேண்டுமே தவிர அவற்றையும் வன இலாக்கா நிலங்களாக மாற்றுவதற்குரிய நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபடுவது சரியல்ல; அதை வர வேற்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காட்டுப் புறம்போக்கு என்று சொல்லி கன்னியாகுமரி மாவட்டத்தில் பல ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. அந்தக் காட்டுப்புறம்போக்கு நிலங்களையும் ரிசர்வ் ஃபாரஸ்ட்டாக ஆக்குவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்ற வகையிலே முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிகின்றது. ஆனால் ரிசர்வ் ஃபாரஸ்ட் என்பதும், காட்டுப்புறம்போக்கு என்பதும் ஒரே தன்மை உள்ளதல்ல. ஆனால் இன்றைக்கு என்ன நடக் கின்றது என்றால் ஏற்கனவே விவசாய நிலங்களுக்குச் செல்வதற்

கர்க பாதைகளாகப் பயன்படுத்தப்பட்ட அந்த இடங்களைக் கூட பாதைகளாகப் பயன்படுத்தக்கூடாது என்ற முறையிலே தொந்தரவு செய்கின்ற நிலைமை இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்றது. உதாரணமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் குலசேகரத்திற்கு அருகே சேனங்கோடு, கிள்ளிக்கோணம், வேட்டி போன்ற பகுதிகளிலே வேலை செய்கின்ற மலைவாழ் மக்கள் பயன்படுத்தி வந்த பாதைகளைக் கூட பயன்படுத்தவிடாமல் அவர்களுக்கு மிகப் பெரிய தொந்தரவுகள் கொடுத்துக்கொண்டிருக்கின்ற நிலைமையில் பல விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டும் இன்னும் அதற்கான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை ; உரிய பாதுகாப்பு அளிக்கப்படவில்லை.

மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம் என்ற பெயரால் பழத்தோட்டம் வைப்பது என்று சொல்லி ஆங்காங்கே இருப்பவர்களை எல்லாம் வெளியேற்றுகின்ற முயற்சி நடந்து வருவதாகத் தகவல் வருகின்றது. ஆகவே அவர்களே வெளியேற்றுவதற்குப் பதிலாக அவர்கள் அங்கே விவசாயம் செய்ய அனுமதித்து அந்த நிலங்களை ரெகுலரைஸ் பண்ணக்கூடிய முறையில் பட்டா கொடுக்கக்கூடிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து வடாற்காடு மாவட்டத்தில் ஜம்னாபுத்தூர் போன்ற பகுதிகளில் உள்ள மலை வாழ் மக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் பயிரிட்டு வருகின்ற நிலத்தை அவர்களுக்கே பட்டா செய்துகொடுக்க உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அதேபோன்று இந்த நேரத்திலே இன்னொரு விஷயத்தையும் நான் சொல்ல விரும்புகிறேன். ஒரு பக்கத்திலே வனங்களைப் பாதுகாப்பது என்ற பெயராலே அந்தப் பகுதிகளிலே வேலை செய்யக்கூடிய விவசாயிகளை வெளியேற்றுகின்ற நடவடிக்கையை எடுப்பவர்கள் இன்னொரு புறத்திலே பெரும் பணக்காரர்கள் பெரிய தடிகளை எல்லாம் வெட்டிக்கொண்டு போவதைத் தடுக்காத நிலைமை இருக்கின்றது. மதுரை மாவட்டத்திலே வருஷநாடு என்ற பகுதியிலே 400 வருஷங்கள், 500 வருஷங்களாக இருந்து வருகின்ற பெரிய மரங்களை எல்லாம் வெட்டிப் போட்டு அதன் காரணமாக சமீபத்திலே பெய்த பெருமழை காரணமாக அந்த மரங்கள் எல்லாம் வந்து மோதி பல வீடுகளை அழிக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டது. இப்படி மரங்கள் எல்லாம் அழிக்கப்படுவது என்பது பற்றி வன இலாக்கா அதிகாரிகளுக்குத் தெரியாதா ? ஆனால் அவை எல்லாம் பெரிய ஆட்கள் செய்கின்ற காரியம் என்பதால் ஒருவேளை வன இலாக்கா அதிகாரிகளின் கண்ணுக்கு தெரியாமல் போய்விட்டதோ என்ற சந்தேகம் ஏற்படுகின்றது என்று சொல்கிறார்கள். தடிக்காரன் கோணத்திலும் ஒரு பெரியவர் தலைமையிலும் இதுபோல் நடக்கிறது.



இன்னொரு முக்கியமான விஷயம் : இன்று பல இடங்களிலே இந்தத் தடிகளை எல்லாம் வெட்டிச் செல்வதைத் தடுக்க ரேஞ்ச் ஆஃபீஸர்களுக்குப் போதுமான வாகன வசதி இல்லை என்று சொல்கிறார்கள் . ஆகவே ரேஞ்ச் ஆபீசர்களுக்கு போதிய வாகன வசதியினை உடனடியாகச் செய்து தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து டூரிசம் வளரவேண்டும் என்பதற்காக சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதை வரவேற்கிறோம். ஆனால் லோ இன்கம் குரூப் மக்களைப் பொறுத்தவரையில் சுற்றுலாவினுடைய அந்தப் பயன்களை எல்லாம் அனுபவிக்க முடியாத நிலைமைதான் இருக்கின்றது. அங்கே செய்யப்படக்கூடிய வசதிகள் எல்லாம் வசதி உள்ளவர்களால் மட்டுமே பயன்படுத்தப் படக்கூடிய நிலைமை இருக்கின்றது. இங்கே டாமிட்டரிஸ் அமைக்கப்படுவது பற்றி கொள்கைக் குறிப்பிலே கூட குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அவை போதாது என்பதைத் தெரிவித்துக் கொள்ள நான் விரும்புகிறேன். லோ இன்காம் குரூப்பிலே இருக்கின்ற மக்கள் பயன் அடையக்கூடிய வகையிலே வசதிகளையும், அவர்கள் தங்குவதற்கான வசதிகளையும், கம்மியான விலையிலே உணவுப் பொருட்கள் கிடைக்கின்ற வகையிலேயும் தக்க வசதிகளைச் சுற்றுலா இடங்களில் செய்து தர வேண்டும்.

நாகூர், திருவாரூர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில் திற்பரப்பு போன்ற இடங்களை சுற்றுலா இடமாக மாற்றுவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

திரு. கே. உச்சி : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, சின்கோனா, வனத்துறை மற்றும் செய்தி சுற்றுலா ஆகிய மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். சின்கோனாவைப் பொறுத்த வரையில் அது உடலைக் காக்கக்கூடிய மருந்துகளைத் தயாரிக்கும் ஒரு தொழில். அதற்குப் போதுமான எதிர்காலம் இருந்ததா என்றால் பல நேரங்களில் இல்லையென்று சொல்லலாம். இதற்குக் காரணம் மத்திய அரசு கொயினா வில்லைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய மிகவும் தடையாக இருந்தது. அதனால் அந்தத் தொழில் நம் நாட்டில் நசிந்து போகக்கூடிய நிலை உருவாகியது. அதனால் அந்தத் தொழிலாளர்களுக்குப் போதுமான சம்பளமே கிடைக்கவில்லையென்ற குறைகூடச் சொல்லப்பட்டது. ஆனால் தற்சமயம் மத்திய அரசு அந்தத் தடையை நீக்கியிருப்பதாக அறிகிறோம். அதையொட்டி, தற்சமயம் மாநில அரசு இந்தச் சின்கோனா துறையில் மிகவும் அக்கறை காட்டி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் மார்க்கெட்டைத் தேடி, அதை வெளிநாடுகளுக்கு அனுப்ப வேண்டும் என்ற என்னுடைய ஆசையை இங்கே கோட்டிட்டுக் காட்டுகிறேன். சின்கோனா துறையைப் பொறுத்தவரையில் எத்தனையோ அரிய மருந்துகளைத் தயாரித்துக் கொண்டிருக்கிறது. இருதய நோயைக் கட்டுப்படுத்துகின்ற குணைக்குன்

இன்னும் குனைன் சல்பேட் போன்ற பல மருந்துகளைத் தயாரித்
துக் கொண்டிருக்கிறது. பலவாசனை திரவிய செடிகள் பயிரி
டப்பட்டு. வாசனை திரவியங்கள் தயாரிக்கப்படுகின்றன.
இன்னும் கொசுக்களை விரட்டும் குளோரைடையும் இன்னும்
பலவிதமான தரை சுத்தம் செய்யும் மருந்துப் பொருட்களையும்
உற்பத்தி செய்கிறார்கள். இதையெல்லாம் அடிப்படையாகக்
கொண்டு அந்தப் பகுதியிலே கிட்டத் தட்ட 2,180 நிரந்தரத்
தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். 1,335
பேர்கள் தற்காலிகமாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்.
அவர்களுக்கெல்லாம் குறைந்த கூலியாக 9.75 காசு கொடுக்கப்
படுகிறது. நம்முடைய அரசு அந்தத் தொழிலாளர்கள் மீது
நல்லெண்ணம் கொண்டு அதை அதிகரித்துக்கொடுக்க வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

• அது மாத்திரமல்ல, நீலகிரி மாவட்டத்தில் பல்வேறு காடுகளை
வளர்ப்பதிலே நம்முடைய அரசு மிகவும் அக்கறை காட்டியிருக்
கிறது. முதுமலை விலங்குகள் புகலிடத்திலும் மற்றும் சுற்றியுள்ள
இடங்களிலும் தடுப்பு அணைகள், சிறு பாலங்கள் முதலியன
கட்டுவதற்கும், அந்தக் காடுகளில் 100 ஹெக்டேரில் மென்
மரங்களை வளர்ப்பதற்கும் இன்னும் புதிய கோட்டம் ஒன்றை
ஏற்படுத்தி 50 ஹெக்டேரில் ஏலத் தோட்டங்கள் ஏற்படுத்தவும்
இன்னும் 40 ஹெக்டேர் பரப்பில் கால்நடைத் தீவன மரங்கள்
வளர்க்கவும் முயற்சிகள் எடுத்துக் கொள்வதை நான் பாராட்டு
கிறேன்.

அது மாத்திரமல்ல, தமிழக அரசுக்குச் சொந்தமான வனத்
தேயிலைத் தோட்டக் கழகம் ஒன்று இருக்கிறது. அங்கே பல
தொழிலாளர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இலங்கை
தமிழர்கள் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிற நேரத்தில் நாம்
எல்லாம் அவர்களைப் பற்றி இங்கே பேசிக் கொண்டிருக்கும்
நேரத்தில் தமிழக அரசு—புரட்சித் தலைவர் அரசு—என்னுடைய
தொகுதியைச் சேர்ந்த சேரங்கோட்டுப் பகுதியில் கிட்டத்தட்ட
ரூ. 1½ கோடி செலவில், அங்குள்ள தொழிலாளர்கள் பணி
யாற்ற தேயிலைத் தொழிற்சாலையைக் கட்டி, திறந்து வைத்து
இப்பொழுது செயலாற்றிக் கொண்டிருப்பதை நான் பாராட்டி
அந்த மாவட்ட மக்களின் சார்பாகவும், என் தொகுதி மக்களின்
சார்பாகவும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், புரட்சித்
தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, அந்தத் தேயிலைத் தோட்டத்தில் பணி
யாற்றக் கூடிய தொழிலாளர்களுக்கு வீடுகளைத் தாராளமாக
கட்டித் தந்திருக்கிறோம்.

அது மட்டுமல்ல, சரித்திரம் காணாத அளவுக்கு ரூ. 11.35
ஆக இருந்த கூலியை, கிட்டத்தட்ட ரூ. 2.65 சேர்த்து,
இப்போது ரூ. 13.90 என்று அளிக்கும் விதத்தில் உயர்த்தி,
அவர்களுக்கு கூலி தர வேண்டுமென்று நிர்ணயித்து அதற்கான
ஒப்பந்தம் கையெழுத்தாகியிருப்பதை பாராட்டுகிறேன்.





அடுத்து, இலங்கை தமிழர்கள் எல்லோருக்கும் வீடு கட்டித்
தர வேண்டும். முன்பு ஒரு காலத்தில் ஒரு குடும்பத்தில்
ஒருவருக்குத்தான் அந்தப் பகுதியிலே வேலை கொடுத்திருந்தோம்.
இப்பொழுது நாளடைவில் ஒரு குடும்பத்தில் இருவருக்கு வேலை
கொடுக்கிறோம்.

அதையும் மாற்றி ஒரு குடும்பத்திற்கு மூவர் என்ற அளவிலே,
தனிக் குடும்பத்திற்கு ஒருவர் என்ற அளவிலே, மொத்தமாக
10 பேர் கொண்ட குடும்பத்திற்கு 3 பேர் என்ற அளவிலே
அவர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தரவேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00)

இங்கே ஏறத்தாழ அந்நிய நாட்டுச் செலாவணியை ஈட்டித்
தரும் தேயிலையை நாம் வெளிநாடுகளுக்கு அனுப்பிக்கொண்டு
இருக்கிறோம். டயலின் என்ற தொழிற்சாலையில் இருந்து
உண்டாகக்கூடிய தேயிலையை இன்றைக்கு நாம் வெளிநாடு
களுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறோம். கிட்டத்தட்ட
தொடர்ந்து இரண்டு ஆண்டுகாலமாக இதை நாம் வெளிநாடு
களுக்கு அனுப்பிக்கொண்டு இருக்கிறோம். இது நல்ல லாபம்
ஈட்டித் தரும் அளவிற்கு இருப்பதால், அந்தத் தேயிலைத்
தோட்டம் அந்த வகையில் அமைந்து இருப்பதால், அங்கே ஒரு
தேயிலை வாரியம் அமைக்க வேண்டும் என்று நான் நம்
முடைய அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டம் சமூகக் காடுகள் வளர்ப்பதில் மிகவும் முன்
னோடியாக இருக்கிறது. அங்கேயுள்ள காடுகள் ஏறத்தாழ
ரெவின்யூ நிலங்களில் ஏராளமாக இருக்கின்றன. சாலை ஓரங்
களில், ரயில் சாலை ஒட்டிய பகுதிகளில், அங்கே சமூகக்காடுகளை
ஏராளமாக வளர்த்துக்கொண்டு இருக்கிறோம். ஆகவே,
அந்த நீலகிரி மாவட்டத்தை தற்போது திருப்பூர் கோட்டத்
தோடு இணைத்துள்ளார்கள். அது முற்றிலும் மாறுபட்டது
என்ற காரணத்தால், நீலகிரி மாவட்டத்தை தனிக் கோட்டமாக
அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சுற்றுலா வாரியத்தைப் பொறுத்தவரையில், உதகை சேரிங்
கிராசிலிருந்து தொட்டபெட்டா வரை கம்பமூலம் இழுவை ரயில்
ஏற்படுத்தித் தரவேண்டும். ஊட்டி சேரிங்கிராசைச் சுற்றி
புதிதாக ஒரு பூங்கா அமைத்துத் தரவேண்டும். அதைப்போலவே
சுற்றுலா பாதை ஒன்று அமைக்க 6 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்
பதைப் பாராட்டுகிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் உள்ள மக்கள் — தமிழகத்தில் பல்வேறு
பகுதிகளில் உள்ள ஏழை எளிய மக்கள் டி.வி. பார்க்கிறார்கள்
—அந்த டி. வி. படத்தைப் பார்க்க முடியவில்லை. அந்த
டி. வி. படம் நீலகிரி மாவட்டத்தில் தெரியவில்லை என்று 'இந்து'
போன்ற பத்திரிகைகள் கூட எழுதியிருக்கிறார்கள். ஆகவே,
நீலகிரி மாவட்ட மக்களும் அந்த டி.வி. பார்க்கும் வாய்ப்பை
நம்முடைய அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தரவேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

உதகையில் மான்கள் வளர்ப்பதற்காக 25 லட்ச ரூபாய், ஏரியைச் சுற்றி ஒளி விளக்குகள் அமைக்க 10 லட்ச ரூபாய், சோடியம் விளக்குகள் அமைக்க 5 லட்ச ரூபாய், மின் வசதிகளை அதிகரிக்க 5 லட்சம் ரூபாய், பூங்காவில் கலங்கரை விளக்குகள் அமைக்க 0,35 லட்ச ரூபாய் ஒதுக்கி இருப்பதைப் பாராட்டுகிறேன்.

நடுவட்டம் பேரூராட்சி மிகவும் பெரிய பணம் படைத்த பேரூராட்சி. அந்தப் பேரூராட்சி வழியாகத்தான் பெங்களூரில் இருந்து உதகைக்கு வரவேண்டும், உதகையில் இருந்து பெங்களூர் செல்பவர்களும் அந்த வழியாகத் தான் செல்ல வேண்டும். அந்த வகையில் அந்தப் பேரூராட்சி மக்களுக்கு அதிகப் பயன்படுவதாலும், அந்தப் பேரூராட்சி அதிக நிதியை வைத்து இருப்பதாலும் அங்கே சினிமாக் கொட்டகை கட்ட அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்திலே அந்த பஸ் ஸ்டாண்டையும் விரிவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முதுமலைப் பகுதியில் காட்டு விலங்குகளைப் பார்வையிடவும், அங்கே வருகின்றவர்கள் இரவு வரை நின்று அவற்றைப் பார்வையிடவும், வாட்சிங் டவர் கட்டியிருப்பதைப் பாராட்டுகிறேன். மோயார் நீர் வீழ்ச்சியை அழகுபடுத்தி, அந்த நீர்வீழ்ச்சியை மக்கள் வந்து பார்க்க வசதியாக இருக்கும் வகையில் இரு கரைகளையும் அழகுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சுற்றுலாப் பயணிகளைக் கவரும் அளவிற்கு தெப்பக்காடு பகுதியில் கிட்டத்தட்ட 30 லட்சம் செலவில் இளைஞர் விடுதி அமைத்துத் தந்ததையும் பாராட்டி, இந்த வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன், வணக்கம்.

திரு. ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் இந்த அவைமுன் மொழியப்பட்ட சின்கோனாத்துறை, காட்டுவளத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். சின்கோனா சமபந்தப்பட்ட முறையில் அது ஆரம்பிக்கப்பட்டு கிட்டத்தட்ட 123 ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது என்று இந்தக் கொள்கைக் குறிப்பிலே பெருமையாகவும் பிரதானமாகவும் குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆனால் அந்தத் துறையில் பணிபுரிந்து கொண்டிருக்கிற தொழிலாளர்களின் எண்ணிக்கை—நிரந்தரத் தொழிலாளர்கள் 2,180 ; டெம்பரரி தொழிலாளர்களுடைய எண்ணிக்கை 1,333. அவர்கள் எப்போதிலிருந்து நிரந்தரமாகவும் டெம்பரரியாகவும் வேலை செய்கிறார்கள் தெரியுமா ? 123 ஆண்டு காலமாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அது மட்டும் அல்ல. அந்தத் தொழிலாளர்கள் ஒரு நாளைக்குப் பெற்றுவருகிற ஊதியம் எவ்வளவு தெரியுமா ? வெட்கத்தோடு, மானத்தை இழந்து சொல்கிறேன். ஒரு





நாளைக்கு 9 ரூபாய் 78 காசு சம்பளம் வாங்குகிறார்கள். இது நியாம்தானா ? இப்படி கொடுக்கலாமா ? ஒரு நாளைக்கு 9 ரூபாய் 78 காசு கூலி வாங்கி, அவன் வாழ வேண்டும். அவனுடைய மனைவிக்கு உணவு கொடுக்க வேண்டும் ; தாய், தந்தைக்கு உணவு கொடுக்க வேண்டும் ; அவனுடைய குழந்தை குட்டிகளைக் காப்பாற்ற வேண்டும். இது முடியுமா ? அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவர்கள் வாழ்க்கை நடத்தக் கூடிய அளவுக்கு ஒரு நிவாரணம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் இந்த அவைக்குள்ளே நுழைந்து நான்கு ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது. 4 ஆண்டுக் காலமாக இந்த சின்கோனா தொழிலாளர்கள் பற்றி கூறிக்கொண்டே இருக்கிறேன். மறுபடியும் என்னுடைய சங்கை இந்த அவையில் இன்றைக்குக் கடைசியாக ஊதுகிறேன். நீங்கள் அந்தத் தொழிலாளர்களுக்கு நியாயமான கூலி கொடுக்கத் தவறினால் அங்கே என்ன செய்வார்கள் ? போராட்டம் நடத்துவார்கள், மனைவி மக்களோடு பட்டினி கிடப்பார்கள். வேறு என்ன என்ன செய்வார்கள் என்று இப்போதே பட்டியல் போட முடியாது. ஆகவே, அந்தத் தொழிலாளர்கள் நிலைமையை எண்ணிப் பார்த்து, அவர்களுடைய வறுமையைப் போக்க, பசியைப் போக்க, பட்டினியைப் போக்க விலைவாசி உயர்வைக் கணக்கிட்டுப் பார்த்து, அந்தத் தொழிலாளர்களுக்கு ஒரு நாளைக்கு 20 ரூபாயாவது சம்பளம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்றேன்.

அதுமட்டுமல்ல. போனஸ் கொடுப்பதில்லை. ஆனால் பக்கத்தில் வேலை செய்கிற தனியார் நிறுவனத் தொழிலாளர்களுக்கு ஒரு நாளைக்கு 15 ரூபாய் கூலி கொடுக்கிறார்கள். அந்தத் தனியார் கம்பெனியில் நிரந்தரத் தொழிலாளர்கள், டெம்பரரித் தொழிலாளர்கள் எல்லோருக்குமே ஒரு நாளைகு 15 ரூபாய்க்கு மேல் சம்பளம் கொடுக்கிறார்கள். இன்செண்டிவ் எல்லாம் சேர்த்து ஒரு நாளைக்கு 20 ரூபாய்க்கு மேல் சம்பளம் கிடைக்கிறது ; 30 ரூபாய் வரையில் கிடைக்கிறது. ஆனால் நம்முடைய சின்கோனா தொழிலாளர்களுக்கு ஒரு நாளைக்கு 9 ரூபாய் 78 காசு தான் சம்பளம் தருகிறார்கள். தனியார் கம்பெனித் தொழிலாளர்கள் பெறுகின்ற சம்பளம் அளவுக்கு சின்கோனா தொழிலாளர்களுடைய சம்பளத்தையும் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிச் சம்பள உயர்வுக்கு போராடிக் கொண்டிருக்கிற நேரத்தில் மாண்புமிகு அமைச்சரவர்கள் இரண்டு முறை அந்தத் தொழிலாளர்களை நேரடியாகச் சந்தித்தார்கள். அவர்களோடு பேசினார்கள். நிறைய விவரங்களை எல்லாம் அமைச்சரிடம் சொன்னார்கள். அவர்களுடைய கஷ்ட நஷ்டங்களைச் சொன்னார்கள், வறுமை நிலைமைகளைச் சொன்னார்கள்.

இருந்தாலும் அவர்களுக்கு எந்தவிதமான பயனும் இதுவரையில் கிடைக்கவில்லை. ஆகவே, அது சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் சிந்தித்து, முடிவு செய்து, அந்தத் தொழிலாளர்களுக்கு சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கனவே நான் பேசினேன். அமைச்சரவர்களும் இந்த அவையிலே சின்கோனாத் துறையில் வேலை செய்கின்ற நிரந்தரத் தொழிலாளர்களுடைய பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்குச் சென்று வருவதற்கான போக்குவரத்துப் படியைக் கொடுப்பதாக அறிவித்தார்கள். ஆனால் இதுவரையில் கொடுக்கவில்லை. அங்கே இருக்கிற சூப்பிரண்டைக் கேட்டால் எங்களுக்கு உத்தரவு வரவில்லை என்று சொல்கிறார். உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை என்றால் உடனடியாக அந்தப் பிள்ளைகளுக்கு பள்ளிக்கூடத்திற்குச் சென்று வருகிற டிக்கட்டுக்கு ஆகும் செலவை படியாக வழங்க ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. ஏராளமான நிலப்பரப்பு அங்கே வீணாகக் கிடப்பது அமைச்சர் அவர்களுக்குக் கூடத் தெரியும். அந்த இடத்திலே புல், பூண்டு, உன்னிச் செடி நிறைந்திருக்கிறது ; தரிசாகக் கிடக்கிறது. சிலோனில் இருந்து வந்திருக்கிற ஆயிரக்கணக்கான அகதிகள் நிலம் இல்லாமல் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நல்ல முறையில் அந்த இடத்தில் பயிர் செய்து தங்களுடைய வாழ்க்கையை நடத்திச் செல்ல, தரிசாகக் கிடக்கிற அந்த இடத்தை அவர்களுக்கு கொடுக்கலாம். சின்கோனாவில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கும் அந்த தரிசு நிலத்தைக் கொடுக்கலாம். அவர்கள் எல்லாம் தேயிலை உற்பத்திச் செய்து, தங்களுக்கு ஒரு நிரந்தரமான தொழிலைத் தேடிக்கொள்வார்கள். நிரந்தரமான வருமானத்தைத் தேடிக் கொள்வார்கள். அதற்கு நீங்கள் தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டும். அந்த முறையில் நீங்கள் அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-10)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதுமட்டுமல்ல. இன்றைக்கு எங்கே பார்த்தாலும், மின் விளக்கு போடப்பட்டிருக்கிறது என்று பெருமையோடு சொல்லிக் கொள்கிறோம். ஆனால் சின்கோனாவில் இருக்கின்ற அந்த தொழிலாளர்களுக்கு அந்த குறை இருக்கிறது. மின் இணைப்பை அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். அதுமட்டுமல்ல. அந்த தொழிலாளர்களுக்கு, பல பேர்களுக்கு வீடே கிடையாது. ஆடு, மாடுகளைப்போல் ஒரே வீட்டில் 4, 5 குடும்பங்களை நடத்துகிறார்கள். அதையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு, வீட்டுமனை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.





அதுமட்டுமல்ல, கோளினார் என்ற அணை ஒன்றிருக்கிறது. அந்த அணை எப்போது ஆரம்பிக்கப்பட்டதோ, அப்போதிருந்தே சிலோன் அகதிகள் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். அவர்களை அங்கிருந்து துரத்துவதற்காக பாரெஸ்டு டிபார்டுமென்டைச் சேர்ந்தவர்கள் பல நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எங்கே போவது ? அவர்கள் கொஞ்சம் கொஞ்சம் நிலங்களை மேடு பள்ளங்களைச் செப்பனிட்டு, பயிர் செய்துகொண்டு, அங்கே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் அங்கே குடியிருந்து, நிரந்தரமான வாழ்க்கை நடத்துவதற்கு வழிவகை செய்யவேண்டும். அவர்கள் தொழில் செய்வதற்கும் வாய்ப்பு கொடுக்க வேண்டும். அந்த பாரஸ்டு அதிகாரிகள் அங்கே போய், மிரட்டாமல், உருட்டாமல், அவர்களை குடியிருப்பிலிருந்து துரத்தாமல் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

செய்தித் துறையைப் பொறுத்தவரையில் வீடியோக்களைப் பற்றி சில விஷயங்களைச் சொல்லியே ஆக வேண்டும். உண்மையிலேயே நான் வேதனையோடு சொல்லிக்கொள்கிறேன். இங்கே சட்டம் கொண்டு வருகிறீர்கள். எதற்காக இந்த சட்டம் ? மறுபடியும் வீடியோக்களைப் போடுகிறீர்கள். டிக்கட் கூட இல்லாமல், வெளியிலே செல்லும் மாணவர்கள் பார்க்கும் வகையில், வீடியோக்களை திறந்து காட்டி வருகிறார்கள். அவர்களுக்கு காட்டுகிற துர்ப்பாக்கியமான நிலைமையை உண்டாக்கியிருக்கிறீர்கள்.

என்னுடைய தொகுதியில் கூட, எத்தனையோ வீடியோக்களை போலீசார் கைப்பற்றி நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். 6 மாதமாக நான் சொன்னேன். பள்ளிக்கூடத்திற்கு முன்னால், மேல்நிலைப்பள்ளிக்கு முன்னால், மாணவமாணவியர்கள் பள்ளிக்கூடத்திலிருந்து வெளியே வரும் நேரத்தில், வீடியோக்களைப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களும் அங்கே போய் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பள்ளிப் படிப்புக் கெட்டுக் கொண்டிருக்கிறது. அதைப்பற்றி போலீசாருக்கு ரிப்போர்ட் பண்ணினேன். ஆனால் அவர்கள் ஒன்றும் செய்யவில்லை. சில மிரட்டல், உருட்டலுக்கு பயந்து, பல மாதங்களுக்குப் பிறகு, இப்போது நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். மறுபடியும் வீடியோக்களை ரோடுகளிலே போடாமல், வேறு சில ஒதுக்குப்புறமாக வீடியோக்களை போடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அடுத்து, நான் வனப் பகுதியில் குடியிருக்கிறேன். வனத் துறையைச் சம்பந்தப்பட்ட வரையில், இந்த நேரத்தில் வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வால்பாறை மலைப் பகுதியில் மரங்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன. அதை யாரிடத்தில் சொல்வது ? யாரிடத்திலும் சொல்ல முடியாது. சொன்னால் மிரட்டல், உருட்டல், பாரஸ்டு அதிகாரிகளைக் கேட்டால், நாங்கள் என்ன செய்வது என்று சொல்கிறார்கள்,

[திரு. ஏ. டி. கருப்பையா] [1984 ஏப்ரல் 16

வனங்களைப் பாதுகாப்பது அரசின் பிரதான கடமை என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். எனவே பாது காப்பதற்கான துரிதமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். கண்காணிப்பதற்காக, ஒரு குழுவை அமைக்கவேண்டும். பாரஸ்டு அதிகாரிகள் மீது எனக்கு நம்பிக்கை இல்லை. அவர்களே உடந் தையாக இருக்கிறார்கள். அவர்களே ஒத்துழைக்கிறார்கள். அவர்களே லாரியில் ஏற்றி விடுகிறார்கள். கண் துடைப்பிற் காக ஏதோ 2 பேர் மீது வழக்குத் தொடுக்கிறார்களே தவிர, உண்மையாகவும், நேர்மையாகவும், நல்ல நோக்கத்தோடும் அவர்கள் பணியாற்றுவது கிடையாது. ஆகவே வனங்கள் முழு வதையும் பாதுகாக்க வேண்டுமென்றால், உண்மையான, நேர்மை யான, நியாயமான ஒரு குழுவை அமைத்து பாதுகாக்க வேண்டு மென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

சிங்கோனா சம்பந்தப்பட்ட வரை அந்த தொழிலாளிகளுக்கு எந்தவித பாதுகாப்பும் கிடையாது. 4 ஆண்டு காலமாக சம்ப ளம் கொடுங்கள், சம்பளம் கொடுங்கள் என்று கேட்டும் கொடுக் கப்படவில்லை. அவர்களுக்கு எந்த விதமான வசதி வாய்ப்பும் இல்லை. அவர்களுடைய சம்பளமும் குறைவு. அவர்களுக்கு போனசும் கிடையாது. ஆட்களைப் பதிவு செய்வதும் கிடையாது. அவர்களுக்கு வீடுகளும் கிடையாது. மின் இணைப்பும் கிடையாது. தண்ணீர் வசதியும் கிடையாது. ஆகவே இந்த மான்யம் சம்பந்தப்பட்டவரை எனக்கு நம்பிக்கையும் கிடையாது. எனவே அந்த மானியத்தை கிழித்தெறிந்து விடை பெறுகிறேன்.

## 2. அறிவிப்புகள்— தொடர்ச்சி.

### (ஆ) பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று 16—4—1984 அன்று கூடிய அலுவல் ஆய்வுக்குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு இணங்க பேரவை நிகழ்ச்சிகள் கீழ்க்கண்டவாறு மாற்றி அமைக்கப்பட்டுள்ளது என்பதை பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்:—

| | |
|---|---|
| 17—4—1984 (செவ்வாய்க்கிழமை) | முதல் |
| 24—4—1984 (செவ்வாய்க்கிழமை) | முடிய ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி மாற்றம் ஏதுமில்லை. |
| 25—4—1984 (புதன்கிழமை) | எண். 5—முத்திரைத் தாள்கள் நிர்வாகம். |
| | எண் 6—பத்திரப் பதிவு. |
| | எண் 10—பால் வழங்கு திட்டங்கள். |
| | பேரவை மாலை 2.00 மணி வரையில் இருக்கும். |



1984 ஏப்ரல் 16]

[பேரவைத் துணைத் தலைவர்]

| | |
|---|---|
| 25—4—1984 புதன்கிழமை) | எண் 48—கிராமத் தொழில்கள். |
| | எண் 56—கிராமத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. |
| 26—4—1984 (வியாழக்கிழமை) | ஏற்கனவே அறிவித்தபடி மாற்றம் இல்லை. |
| 27—4—1984 (வெள்ளிக்கிழமை) | 1984–85ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு ஆய்வு செய்தலும் நிறைவேற்றுதலும் — விவாதமின்றி (2) அரசினர் சட்ட முன்வடிவு ஆய்வு செய்தலும் நிறைவேற்றுதலும். |
| 28—4—1984 (சனிக்கிழமை) | அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தலும் நிறைவேற்றுதலும். |
| | பேரவையின் நடப்புக் கூட்டத் தொடர் 28—4—1984 அன்று முடிவுறும். |

## 5. வரவு-செலவுத் திட்டம் 1984–85 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

*திரு. மா. சின்னராசு: பேரவைத் துணைத் தலைவர் அவர் களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவருடைய ஆட்சியில் மாண்புமிகு வனத்துறை, செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பில் முதல் முறையாக வனத்துறையின் இன்றைய நிர்வாகத் தினுடைய உண்மையான நோக்கங்களை, 6 மிகப் பெரிய நோக்கங்களை வரையறுத்துக் கூறியிருப்பதை நான் முதலிலே சுட்டிக்காட்டி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வனப் பாதுகாப்புத்துறை என்பது ஏதோ வனத்திலே ஏற்படு கிற திருட்டுக்களை மட்டும் கண்டுபிடித்து குற்றவாளிகளைத் தண்டிக்கிற ஒரு துறையாக இருந்ததுபோய், இது நாட்டினுடைய வளத்தை, 'ஏக்கராஜிக்கல் கன்டிசன்' என்று சொல்கிற, தட்ப வெட்ப நிலையை கருத்தில் கொண்டு, பல்வேறு நல்ல பணிகளை ஆற்றுவதற்காக இருக்கிற ஒரு துறை என்பதை இங்கு நிரூபிக்கிற வகையில் பல வளர்ச்சிப் பணிகள், பல பல நல்ல நோக்கங்களோடு நிகழ்ந்து வருவதை, இந்த நேரத்திலே நான் வரவேற்று, அதற் கான முழு முயற்சியோடு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய நிர்வாகத் திறமையை இந்த மன்றத்தின் மூலமாக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக் கிறேன். இதிலே வேலைவாய்ப்பைப் பெருக்குதல் என்ற முறையிலே கலாச்சார மரபினைக் காத்தலும், வனப் பகுதியிலே வாழ்கின்ற மலைவாழ் மக்களுடைய வாழ்க்கையைப் பேணிப் பாதுகாப்பது என்ற இரண்டு கொள்கைகளை இங்கே தனியான முறையில், சிறப்பான முறையில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[திரு. மா. சின்னராசு] [1984 ஏப்ரல் 16

மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் பேசுகிற நேரத்திலே ஏதோ ஆவேசமாக சில கருத்துக்களைச் சொன்னார்கள். ஆனால் தமிழ்நாடு ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்காக அரசு எடுத்துக்கொண்டிருக்கிற நடவடிக்கைகளைப் பார்க்கிறபோது, எந்த ஒரு தனிப்பட்ட தொழிற்சாலையிலும், எந்த நிர்வாகத்திலும் இதுபோன்று தொழிலாளர்களுக்காக அவர்களுடைய நலனுக்காக, நல்ல பணிகளை ஆற்றுவதாக எனக்குத் தெரியவில்லை. பல கோடி லாபம் சம்பாதிக்கிற முதலாளிகள்கூட, தனியார் தொழிலில் அவர்கள் பெறமுடியாத நல்ல பல நன்மைகளை, 700 மாணர்கள் படிக்கிற 4 பள்ளிகளை, அங்கு அமைத்து, மருத்துவமனைகள் போன்ற பல வசதிகளை இப்படி எதிர்பார்க்க முடியாத, அல்லது தொழிற்சங்கவாதிகள் கூட கேட்டுப் பெறமுடியாத நன்மைகளை, சமுதாய நலப் பணிகளை அந்தத் தொழிலாளர்களுக்காக தந்து இருப்பதை நான் இங்கே உதாரணமாக அவருக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல், இத் துறையில் நிரந்தரம் ஆக்கப்படாத பல நூறு தொழிலாளர்கள், இதிலே காவலர்களாக இருந்தவர்கள் நிரந்தரம் ஆக்கப்பட்டிருக்கிறார்கள். வேலைவாய்ப்புக் கொடுக்கிற முறையிலே ஆதிவாசி மக்களுக்கும், பல்வேறு பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் இந்தத் துறையில் கடந்த 3, 4 ஆண்டுகளிலே எத்தனை ஆயிரம் பேர்கள் வேலைவாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள் என்பதையும், நேரடியான வேலைவாய்ப்பு அல்லாமல் மறைமுகமான வேலைவாய்ப்பும் பலருக்கும் கிடைத்து இருப்பதற்கு இந்தத் துறையினுடைய முற்போக்கான திட்டங்கள்தான் காரணம் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேநிலையில், பல நிலையில் இருக்கிற வனத்துறையில் பணியாற்றுகிற ஊழியர்கள், அது அல்லாமல் செய்தித்துறையிலே பணியாற்றுகிறவர்களுக்கு பல்வேறு தரப்பட்ட பணியிலே பொறுப்பாற்றுகிற பல்வேறு ஊழியர்களுக்கு பல சலுகைகளையும், நிரந்தரமாக்கி அவர்களுடைய தொழிலுக்கும் வாழ்வுக்கும் பாதுகாப்பையும் கொடுத்திருக்கிறது புரட்சித் தலைவர் அரசு. அதில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்டிருக்கிற தீவிரமான நடவடிக்கைகளை அந்தத் துறையிலே பணியாற்றுகிற ஊழியர்கள் இன்று உணர்ந்து அவர்களுக்கு பாராட்டுச் சொல்லி வருவதை இந்த நேரத்திலே நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஆகவே அப்படி வனத்துறையி-னுடைய நோக்கங்களை பல்வேறாக பிரித்து, அதிலே குறிப்பாக கலாச்சார மரப்பினைக் காத்தல் என்ற முறையில் பழங்குடியினருக்கு, நல்ல வாழ்வு தருகிற ஒரு நல்ல திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்தியிருப்பதை நான் வரவேற்கிறேன். ஆகவே அந்த அடிப்படையில் நான் ஏற்கனவே சுட்டிக் காட்டியதைப்போல, எனது தொகுதியிலே இருக்கிற பாலமலை என்கிற மலைச் சாலையை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவு தந்து அதற்கான ஏற்பாட்டை செய்து தந்ததற்கு இந்த நேரத்திலே நன்றி சொல்லிக்கொள்கிறேன்.



1984 ஏப்ரல் 16] [திரு மா. சின்னராசு]

அதேபோல் இன்றும் சாதாரணமாக ஜீப் கூட செல்லமுடியாத நிலையில் ஒரு ஆஸ்பத்திரிக்கு வருவதென்றாலும் கூட, 2 நாள் ஆகிற அளவிற்கு ஒரு மலைப்பகுதி, சேம்புக்கரை தூங்மனூர் என்ற பகுதி என்னுடைய தொகுதியிலே இருக்கிறது. அந்த மலைப்பகுதிக்கு ஒரு சாலை அமைத்து, அங்கேயிருக்கிற மலைவாழ் மக்களுடைய உயிருக்கு பாதுகாப்புக் கொடுக்கிற ஒரு திட்டமாக இருக்கிற காரணத்தால், அந்தச் சாலையை, 8 அடியாக இருக்கிற அதை, 10 அடியாக ஆக்கினால் கூட ஜீப் போய் வருவதற்கு வாய்ப்பு ஏற்படும். ஆகவே அந்த அளவிற்கு இருக்கிற சமுதாய நலத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மத்திய அரசாங்கம் தடையாக இருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொள்கை ரீதியாக எதிர்த்து இருக்கிறார்கள். ஆகவே அதைப் பெற்றுத் தந்து அந்த உரிமைகளை மாநில அரசாங்கமே வைத்துக் கொண்டு பழங்குடியினருக்கு, ஆதிவாசி மக்களுக்கு உரிய சமுதாயப் பணிகளை நாமே, இந்தத் துறையே ஏற்று நடத்துகிற அளவிற்கு ஒரு நிலைமையை உருவாக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1—20)

இறுதியாக, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள், எனது
தொகுதியிலே சிறுவானி அடிவாரத்திலே இருக்கிற
சீங்கைப்பகுதி என்ற இடத்திலே கோவை குற்றாலம் என்று
மக்களால் இன்று பெரிதும் கவரப்படுகின்ற ஒரு சுற்றுலா
இடத்தை குற்றாலத்திற்கு ஒப்பான ஒரு இடத்தைப் பார்வை
யிட்டார்கள். ஆகவே, அதை சுற்றுலா மையமாக்குவதற்கு
நமது அரசு ஏற்பாடு செய்து நிறைவேற்றித் தரவேண்டும்
என்றும், அதை இந்த ஆண்டே நிறைவேற்றித் தரவேண்டும்
என்றும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். கடைசியாக, நம்
முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. உச்சி அவர்கள் கோவையிலே
இருந்து ஊட்டிக்கு, சுற்றுலா பயணிகள் விரைவாகப்
போய் சேருகிற அளவுக்கு ஹெலிகாப்டர் வசதி ஏற்படுத்தி தர
வேண்டும் என்ற கோரிக்கையை வைத்தார்கள். அந்தப் பகுதி
மக்களுடைய இந்த நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்று
வதற்கு மைய அரசாங்கத்தை வற்புறுத்தி, நமது அரசாங்கம்
முயற்சிகளை எடுத்து அதை நிறைவேற்ற வேண்டும் என்று
கேட்டுக் கொண்டு, வாய்ப்பளித்த மாண்புமிகு துறைத் தலைவர்
அவர்களுக்கு நன்றி சொல்லி, முடிக்கிறேன்.

* திரு. கே. கல்லன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,
சிங்கோனா, காட்டு வளம், செய்தி, சுற்றுலா, திரைப்பட
தொழில் நுட்பவியல் ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது நான்
சார்ந்திருக்கிற காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்
துக்களை சொல்ல விரும்புகிறேன். கடந்த சில ஆண்டுகளாக
சர்க்காரிடத்திலே இருந்து வருகிற நிரந்தர வேலைகளுக்கு
மேலாக, வறட்சி வெள்ளம் என்று தொடர்ந்து வந்துகொண்

டிருக்கிறது. இதற்குக் காரணம் காடுகளை அழித்தது தான் என்று வல்லுநர்கள் சொல்லுகிறார்கள். காடுகளை அழிக்காமல் இருந்திருந்தால், நாம் தட்ப வெப்ப நிலையை ஒழுங்காக வைத்திருந்தால், இந்த நிலை ஏற்பட்டிருக்காது. ஏறக்குறை 50 வருஷங்களாக, தமிழ்நாட்டிலும், இந்தியாவிலேயும், பெய்த மழை அளவைப் பார்த்தால் இந்த உண்மை நமக்கு நன்றாகப் புரியும்.

ஆகவே, இன்று தமிழ்நாட்டில் 16 சதவீதம் என்றே இருக்கும் இந்தக் காடுகளின் அளவை நாம் விரும்பத்தக்க 33 சதவீதத்திற்கு மாற்றி, மற்ற மாநிலங்களுக்கு நாம் ஒரு எடுத்துக்காட்டாக இருக்க, நல்ல விதமாக இந்த காடு வளர்ப்பு திட்டங்களை நடத்தி, நல்ல பெயர் எடுத்து பயன்பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதை நிறைவேற்றுவதினால் நமக்கு மட்டுமல்லாமல், பிற்காலத்தில் நமது சந்ததியினருக்கும் நாம் செய்கிற ஒரு பெரிய நன்மையாக இது இருக்கும் என்று நான் கருதுகிறேன். அதை உணர்ந்து நாட்டிலே நல்ல நிலைமையை ஏற்படுத்துவதற்காக, நமது பாரதப் பிரதமர் அவர்கள் இந்தத் துறையை முக்கியமாகக் கருதி, தன்னுடைய கவனத்தை நேரடியாக இதில் செலுத்தி வருகிறார்கள். ஆகையினால் தீவிரமாக இந்தத் திட்டம் இந்தியா முழுவதும் அமல் நடத்தப்படுகிறது. 20 அம்சத்திட்டதின் கீழ் பல திட்டங்களை நமது அரசு மற்ற மாநிலங்களை விட விரைவாக நல்ல விதமாக நிறைவேற்றி வருவதற்கு நான் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இந்த சமுதாய நலக் காடுகளை வளர்க்கும் திட்டத்தை, இன்னும் நல்ல முறையில் தீவிரமாகச் செயல்படுத்த வேண்டும்.

எனது மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இது நல்ல விதமாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆனாலும் நாம் எண்ணுகின்ற அளவிற்கு அந்தப் பரப்பளவைப் பூர்த்தி செய்ய முடியவில்லை. ரெவின்யூ பூமி, பாரஸ்ட் நிலம், பஞ்சாயத்து நிலம் என்று மட்டும் அல்லாமல், சாலை ஓரங்களிலும், ரயில்வே அருகிலும், இந்த திட்டத்தின் கீழ் பலவகையான மரங்களை நல்லவிதமாக வளர்த்து, இந்த சமுதாய காடு வளர்ப்பு திட்டத்தை செயல்படுத்தி, நாட்டின் வளர்ச்சியை மேம்படுத்துவதோடு கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பையும், அவர்களுக்கு வீடுகளில் எரிக்க விறகுகளையும் தரும் வகையில் இந்தப் பணிகளை சர்க்கார் செய்து தர வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

நீலகிரியைப் பொறுத்தவரையில், அங்கிருந்த காட்டின் ஒரு பகுதி அழிக்கப்பட்டதினால்தான் நாம் அதிகமாகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதை அமைச்சர் அவர்கள் நன்றாக அறிவார்கள். விஸ்கோஸ், டேன் இந்தியா போன்ற பல நிறுவனங்களுக்கு நாம் இன்று 230 ரூ. 270 ரூ. என்ற விகிதத்
ல் டன் ஒன்றுக்கு மரங்களை விற்றுக் கொண்டிருக்கிறோம்.
தினால் இன்று வெளி மார்க்கெட்டில், குச்சி விறகுக் கூட





600 ரூபாய்க்கு மேலே விற்கிறது. தேயிலைத் தொழிற்சாலைகள் கூட, 400 ரூ. 450 ரூ. க்கும் மேலாக தனியார்களிடம் கொள் முதல் செய்கிறார்கள். ஆகவே மக்களுக்குத் தேவையான விறகுகளை தயவுசெய்து நீங்கள் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். விஸ்கோஸ் நிறுவனம் நமது சர்க்காருக்கு ஏறக்குறைய 1 கோடி ரூபாய்க்கும் மேலே தரவேண்டும் என்று தெரியவருகிறது. ஒரு கோடி ரூபாய் வரையில் தரவேண்டும் என்கிற நிலைமையை ஏன் ஏற்படுத்தினார்கள் என்று அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்தில் சொல்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். மொத்தமாக சமுதாயக் காடுகளை வளர்ப்பதில், நாம் இப்போது யூக்கலிப்டஸ் மரங்களை மாத்திரம் அதிகமாக வளர்த்து வருகிறோம். அண்மையிலே கேரளாவிலே அகில இந்திய அளவில் ஒரு பெரிய கருத்தரங்கு நடைபெற்றது. இந்தியாவிலே உள்ள பல வல்லுநர்கள் அதற்கு வந்திருந்தார்கள். அவர்கள் பேசி கடைசியாக எடுத்த முடிவு என்ன சொல்கிறது என்றால், Ecological Study b for planting ucalyptus was suggest d என்று ஒரு பெரிய செய்தியை சொல்லியிருக்கிறார்கள். கேரளாவிலே இந்தக் கற்பூர மரங்களை நட்டதால் பலவிதமான கேடுகள் வந்தன என்று செமினாரிலிருந்து தெரிய வந்திருக்கிறது. ஆகவே இந்த கற்பூர மரங்களை பயிரிடுவதற்கு முன்பாக நல்ல விதமாக வல்லுநர்களை அமைச்சர் அவர்கள் கேட்டு ஏற்பாடு செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

நீலகிரியைப் பொறுத்தவரையில் விறகுக்காக சொந்த மரங்களைப் பயன்படுத்துகிறோம். இன்றைக்கு இருக்கிற சட்டத்தின்படி எங்களுக்கு வேண்டிய 10, 20 மரங்களைக் கூட வெட்ட முடியாத நிலையில் இருக்கிறோம். ஆகவே அதைத் தளர்த்தி 100 மரங்கள் சொந்தச் செலவிற்காக வெட்டிக்கொள்வதற்கு அனுமதி தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

அதேமாதிரி குச்சி விறகுகள் ஒரு இடத்திலிருந்து இன்னொரு தோட்டத்திற்கு அதாவது 5 மைல்களுக்கு அப்பால் அந்தப் பக்கம் நாங்கள் குடியிருக்கிற பகுதிகள் இருந்தால் அந்த இடத்திற்குக் கொண்டுபோக தடை இருக்கிறது, ஆகவே சொந்த உபயோகத்திற்காக எடுத்துச் செல்வதற்கு அந்த விதிகளைத் தளர்த்தி அனுமதி அளிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள் கொள்கிறேன்.

கீழ்கோத்தகிரி பகுதியில் இப்போதும் கடத்தல் நடந்து கொண்டு இருக்கிறது. அதைக் கண்காணித்து—முந்தைய நிலையைவிட இப்போது நன்றாக இருக்கிறது—முழுமையாக நீக்கு யைவிட அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[1984 ஏப்ரல் 16

[திரு. கே. கல்லன்]

சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரையில் நம் மாநிலங்களுக்கு ஏறக்குறைய இந்தியாவிற்கு வரும் அயல்நாட்டுப் பயணிகளில் 20 சதவீதம் பேர்கள் வருகிறார்கள் என்பதை மனவேதனையோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுக்குத் தகுந்த வசதி செய்து கொடுக்காததுதான் காரணம் என்று கருதுகிறேன். அவர்களுக்கு என்ன என்ன வசதிகள் வேண்டுமோ அவைகளையெல்லாம் செய்து அயல்நாட்டுப் பயணிகளை அதிகமாகக் கவர்ந்து அதிகமாக அன்னியச் செலவாணியை அமைச்சர் ஈட்டவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் நமக்கு இயற்கையாக வந்த செல்வம் மெரினா பீச். அது சரியாகப் பராமரிக்கப்படவில்லை. மீனவ சகோதரர்கள் வாழவேண்டியதுதான், அதற்காக அவர்களுக்கு ஒரு பகுதியை விட்டுவிட்டு மீதி இடத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மவுண்ட் ரோடிலே சில நேரங்களிலே நடக்கக்கூட முடியாத அளவுக்கு சுத்தமில்லாமல் இருக்கின்றது, அதையும் மற்ற நகரங்களையும் சுத்தமாக வைக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

உதகையிலே பொட்டானிக்கல் கார்டன்ஸ், ஏரி ஆகியவைதான் சுற்றுலா பயணிகளை அதிகமாகக்கவர்வது. ஊட்டி லேக்கின் கிழக்குப் பாகம் கால்பங்கு மூடப்பட்டிருக்கிறது. அங்கே 20,30லட்ச ரூபாய் செலவு செய்து லைட் போடுகிறோம். பாலம் கட்டுகிறோம், ஆனால் அதி சீக்கிரமாக அந்த லேக்கே இல்லாமல் போய்விடுமோ என்ற அச்சம் எனக்கு மட்டுமல்ல. அந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் அனைவருக்குமே உண்டு. சில்ட் எடுக்க உடனடியாக துறை நடவடிக்கை எடுக்கக் கூடிய முறையிலே அரசு ஆவனசெய்யும்படி நான் கேட்டுக்கொள்கிறேன்.

உதகையில் உல்லாசப் பயணிகள் உல்லாசமாக இருக்கவும், காலாற நடக்கவும் வருகிறார்கள். ஆனால் அங்கே உள்ள நெரிசல் காரணமாக அப்படி இருக்க முடியாமல் போய்விடுகிறது. உதாரணமாக ரேஸ் கோர்ஸ் சுற்றி 200, 300 பெட்டி ஷாப்ஸ் அசிங்கமாக வந்திருக்கின்றன, பார்ப்பதற்கே அருவறுப்பாக இருக்கிறது, ஆகவே அந்தப் பகுதியை சுத்தமாக வைத்துக் கொள்ள தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

எட்டின்ஸ் (Ettins) சாலையில் குதிரை லாடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட மையமான இடத்தில் அதை வைக்காமல் நகரத்திற்கு வெளிப் பக்கமாக கொண்டு போக வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.



1984 ஏப்ரல் 16]

[திரு. கே. கல்லன்]

உதகையில் 150 நாட்களுக்கு மேலாக Intervenue Bet என்ற ஒரு சூதாட்டம் நடக்கிறது. அதை உடனடியாக நிறுத்த வேண்டும். ரெகுலர் ரேசிங் உல்லாசப் பயணிகளுக்காக அரசு வைத்துக் கொள்ளலாம். ஆனால் ஒரு இளைய தலைமுறையையே கெடுக்கும் தீய கேன்சர் போன்ற அந்த சூதாட்டத்தை ரத்து செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

Aerial Ropeway அதிக சீக்கிரம் வரும் என்று இந்தக் கொள்கை குறிப்பில் சொல்லியிருக்கிறார்கள். இதைச் செயல்படுத்த வேண்டும்.

(பிற்பகல் 1–30)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. கே. கல்லன் :** அண்மையில் அமைச்சர் அவர்கள் ஒரு எவியாட் ஒன்றை ஊட்டியில் அமைப்பதற்கு சீக்கிரமாக நடவடிக்கையை எடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை தீவிரமாக அமுல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சின்கோனா துறையைப் பொறுத்த வரையில் இந்த துறைக்கு இன்றைக்கு நல்ல வாய்ப்புகள் இருக்கின்றன. ஜெரேனியம், மற்றும் வாசனை திரவியங்கள் செடிகள் நல்ல விதமாக அதிகமான ஏரியாவில் பயிரிட்டு ஏற்றுமதி செய்தால் நிச்சயமாக அதனால் நல்ல பலன்கள் கிடைக்கும். இதனால் இப்போது இருக்கும் 3,500 ஆட்களைவிட ஏறக்குறைய 10,000 ஆட்களுக்கு வேலைவாய்ப்பு இருக்கிறது அந்தத்துறையில். அதில் சற்று அதிகமான கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டு எனக்கு பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

***மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சின்கோனா, வனத்துறை, செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்ப இயல் துறையின் சார்பில் இந்த மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்பட்டுள்ள மானிய கோரிக்கைகளின்மீது பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் 9 பேர் தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். அனேகமாக எல்லா உறுப்பினர்களுமே பொதுவான கருத்துக்களை எடுத்துச் சொல்லி பல்வேறு தொகுதிகளில் நிறைவேற்றப்பட வேண்டிய கோரிக்கைகளையும் சில குறிப்பிட்ட நிகழ்வுகளில் அதற்கான விளக்கங்களையும் கேட்டு இருக்கிறார்கள் என்பதிலே எனக்கு பெரிய மகிழ்ச்சி. எனவே நான் பதில் அளிப்பதற்கு அதிகமான நேரம் எடுத்துக் கொள்ள மாட்டேன். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சீக்கிரத்தில் இந்த மானியத்தை நிறைவேற்றித் தந்து விட்டு பகல் உணவுக்குப் போகலாம் என்ற அந்த ஆர்வத்தோடு உட்கார்ந்து கொண்டு

இருக்கிறார்கள். ஆகவே முதலிலே சுற்றுலாத் துறையைப்
பொறுத்தவரையில் அது இன்றைக்கு இந்திய நாட்டிலேயும்,
மாநிலங்களிலேயும் வளர்ந்து கொண்டு வருகிற ஒரு துறை.
ஆனால் அதிலே மாநிலங்கள் எந்த அளவுக்கு முதலீடு செய்து
பல்வேறு சிறப்புமிக்க இடங்களை வளர்ச்சி பெறச் செய்ய
முடியும், அடிப்படை வசதிகளைச் செய்ய முடியும் என்பதிலே
இன்றைக்கு மத்திய அரசு கவனத்தில் எடுத்துக்
கொள்ள வேண்டும்.

நாம் அடிக்கடி இங்கே குறிப்பிட்டு இருப்பது
போல் தமிழகம் மிகச் சிறந்த சுற்றுலா ஸ்தலங்களைப்
பெற்று இருக்கிற ஒரு மாநிலம் ஆகும். ஆகவே இந்தியாவிலேயே
வேறு எந்த மாநிலத்திலேயும் சுற்றுலாத் துறைக்கு என்று
சுற்றுலா வளர்ச்சிக்கு என்று பெரும் திட்டங்கள் ' மாஸ்டர்
பிளான் ' வரைந்து மத்திய அரசுக்கு இதுவரை தரவில்லை.
ஆனால் தமிழகத்தில்தான் மாமல்லபுரத்திற்கும் ராமேஸ்வரத்
திற்கும் கன்னியாகுமரிக்கும் உதகமண்டலத்திற்கும் என்று
உலக புகழ் பெற்ற தேசீய முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலா
ஸ்தலங்களுக்காக நாம் மாஸ்டர் பிளான்களை வரைந்து மத்திய
அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். ஆகவே மத்திய அரசு
இன்றைக்கு வெளிநாட்டு செலாவணியாக இந்த சுற்றுலாத்
துறையின் மூலம் சுமார் ஆயிரம் கோடி ரூபாய் வருவாய்
பெற்றுக் கொண்டிருக்கிற இந்த சூழ்நிலையில் அவர்கள் இதை
இன்னும் ஒரு முக்கியத்துவம் கருதி இதற்கான நிதி ஒதுக்கீடுகளை
செய்ய வேண்டும். அப்படி அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்யவில்லை
யானால் உலகத்தினுடைய நிதி வழங்குகின்ற நிறுவனங்களிடத்தில்
மாநில அரசு நிதியைச் பெறுவதற்கு வழிவகைகளைச் செய்து தர
வேண்டும் என்று நாம் நீண்ட காலமாக கேட்டுக் கொண்டு
இருக்கிறோம். அதிலே மத்திய அரசு இன்னும் கவனம்
செலுத்தாமல் இருக்கிறது என்பதை மாத்திரம் இந்த நேரத்தில்
சொல்லி, குறிப்பாக வெளிநாடுகளிலிருந்து பயணிகள் வருகின்ற
போதும், நம்முடைய உள்நாட்டுப் பயணிகள் இந்திய துணைக்
கண்டத்திற்குள்ளே வேறு மாநிலங்களிலிருந்து வருகின்ற
போதும் அவர்களுக்கு 100 மைல் 150 மைல்களுக்
குள்ளே இருக்கின்ற முக்கியமான சுற்றுலா ஸ்தலங்களை பார்வை
யிடுவதற்காக, விமானப் பயண வசதிகள் வேண்டும் என்று நாம்
நீண்ட காலமாகக் கேட்டுக் கொண்டு இருக்கிறோம். அதிலே
மத்திய அரசு ஒரு 3-வது பிரிவாக ஒரு விமானப் பயணத்தை நாம்
ஆய்வு செய்யலாம், அறிமுகப்படுத்தலாம் என்று
தெரிவித்தார்கள். Third line Feeder Service என்று
பெயர் தந்தார்கள். அதையும் நாம் அதற்குப்
நகரங்களுக்கு அப்படி தொடர்பு படுத்தலாம் என்கின்ற திட்டத்
தையும் மத்திய அரசுக்கு தெரிவித்தோம். ஆனால் அவர்கள்
வேறு சில இடங்களிலே வாயுதூத் என்ற அந்தப் பெயராலே,
48 இருக்கைகள் கொண்ட ஆவ்ரோ விமானத்தைச் சிலயிடங்
களிலே, டெல்லி—ஜெய்ப்பூர், கோட்டா—கௌஹாத்தி,
டிப்ருவா என்கின்ற இடங்களுக்கெல்லாம் இந்த விமானப்
பயணத்தை அனுமதித்து இருக்கிறார்கள். அவர்கள் அங்கே
அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். ஆனால், தமிழகத்திலே





உள்ள மிகச் சிறப்பு வாய்ந்த இடங்களான கன்னியாகுமரி,
தஞ்சாவூர், சிதம்பரம் இன்னும் மலைகளிலே அழகு ராணி
என்று வருணிக்கப்படுகிற உதகமண்டலம் போன்ற இடங்களுக்கு
இந்த விமான சர்வீஸ்களை அறிமுகப்படுத்த வேண்டும் ;
இராமேஸ்வரத்திற்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்று நாம்
கேட்டுக் கொண்டதை இன்னும் அவர்கள் ஏற்றுக் கொள்ளாமல்
இருக்கிறார்கள். அதை மீண்டும் மீண்டும் வற்புறுத்திக்
கொண்டிருக்கிறோம்.

குறிப்பாக, தூத்துக்குடி துறைமுகம் வளர்ச்சி பெற்று, அந்தப்
பகுதி வியாபாரத் துறையிலேயும், வேறு வெளிநாட்டுத் தொடர்பு
களுக்கும் முக்கியத்துவம் பெற்று வருகின்ற, நம்முடைய தமிழகத்
தினுடைய தெற்கு முனையிலே, இருக்கிறது. அங்கே ஒரு விமான
தளம் அமைக்கப் பெற்றால் கன்னியாகுமரிக்கும் அது துணையாக,
வசதியாக இருக்கும் என்று சொல்லி, நம்முடைய பங்காக 30
இலட்சம் ரூபாயையும், 400 ஏக்கர் நிலத்தையும் நாம் அவர்கள்
கேட்ட இடத்திலே ஒதுக்கிக் கொடுக்கத் தயாராக இருந்தும்.
ஜனதா ஆட்சி புரிந்த அந்தக் காலத்திலே தொடங்கப்
பெற்ற அந்தக் கருத்து வடிவம் இன்றும் உறுப் பெறாமல்,
இன்றைக்கும் செயல்முறைக்கு வராமல் இருக்கிறது என்பதை
நான் இந்த நேரத்தில் உங்களின் மூலம் மாண்புமிகு உறுப்பினர்
களுக்கும், நம்முடைய நாட்டு மக்களுக்கும், மத்திய அரசுக்கும்
தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே, இந்த உணர்வுகளை மத்திய அரசு உணர்ந்து, நம்
முடைய நாட்டிலே சுற்றுலா வளர்ச்சியை அவர்கள் அதிகப்படுத்
துவதற்கு—அதன் மூலம் நாட்டினுடைய வருவாயைப் பெருக்கு
வதற்கு, வேலைவாய்ப்பை அதிகப்படுத்துவதற்கு—ஏனென்
றால் சுற்றுலா என்பதே உலகம் முழுவதும் இன்றைக்கு ஒரு
தொழிலாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதை இன்டஸ்டிரி
யாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே
அவர்கள் இதை அணுக வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

இதற்கிடையிலே நாம் ஒரு முயற்சியாக—முதல் முயற்சியாக
ஒன்றை நடைமுறைப்படுத்தலாமா என்கின்ற ஆலோசனை அர
சினிடத்திலே இருக்கிறது. அதை மத்திய அரசுக்கு எடுத்து
எழுதியிருக்கிறோம். இப்பொழுது சீசன் டைம் வருகிறது.
ஆகவே, ஊட்டிக்குப் பல்லாயிரக் கணக்கிலே மக்கள் பயணம்
செய்வார்கள். அங்கே ஒரு அற்புதமான வன விலங்கு சரணா
லயம் இருக்கிறது ; முதுமலை வன விலங்கு சரணாலயம். அங்கே
போவதற்கு வசதி படைத்தவர்கள் கார்களையெல்லாம் வைத்து,
நிறையச் செலவு செய்து கொண்டு செல்கிறார்கள். அப்படிப்
போகின்ற பயணிகளுக்கு நம்முடைய ஹெலிகாப்டரைப் பயன்
படுத்தி, ஒரு நாளைக்கு இரண்டு முறை அல்லது மூன்று முறை
ஊட்டிக்கும் முதுமலைக்கும் சென்று திரும்புவதற்கும், அந்த

மலைக் காட்சியையெல்லாம் மேலேயிருந்து பார்ப்பதற்கும் ஏற்ற வகையில் நாம் பயன்படுத்த முடியுமா என்கிற கருத்தை இன்றைக்கு ஆய்வு செய்து மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம். காரணம், அப்படிப் பயன்படுத்த வேண்டுமானால் மத்திய அரசினுடைய அனுமதி தேவைப்படுகிறது.

அதைப் போலவே, சென்னையிலேயிருந்து, சென்னையைச் சுற்றிப் பார்ப்பதற்கும், மாமல்லபுரம் சென்று வருவதற்கும், அப்படி வான்வெளியிலே சுற்றி இப்படிப்பட்ட பகுதிகளையெல்லாம் பார்ப்பதற்கும், சுற்றுலாப் பயணிகளைக் கவர்கின்ற வகையிலே அந்த ஹெலிகாப்டரைப் பயன்படுத்துவதற்கு ஒரு திட்டம் தீட்டியிருக்கிறோம். அதற்கும் அனுமதி கேட்டு எழுதியிருக்கிறோம். இப்படிப்பட்ட முயற்சிகளைச் செய்யும் பொழுது, இந்த வனத் துறையைப் பாதுகாப்பதற்கும் இப்படிப்பட்ட ஹெலிகாப்டரினுடைய பயணம் நமக்கு உதவியாக இருக்கும். நீலகிரியினுடைய மலை மேலே பறக்கும்பொழுது அங்கே வெளி மாநிலங்களிலிருந்து அந்த அடர்ந்த காடுகளுக்குள்ளே வந்து இந்த யானைகளைக் கொன்று, தந்தங்களைத் திருடிச் செல்லுகின்ற அந்தத் திருடர்கள், கொள்ளைக்காரர்கள், மரங்களை வெட்டிச் செல்பவர்கள், இவர்களையெல்லாம் உடனடியாகத் தெரிந்து கொள்ளவும், அதன் மூலம் தகவல்கள் தெரிவிக்கப் பெற்றால் அவர்களோடு தொடர்பு கொண்டு அதைத் தடுக்கவும் கூட, இந்த ஹெலிகாப்டர் பயன்பட வேண்டும் என்ற உணர்வோடு அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது..

கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் பேசுகின்ற பொழுது, குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு வசதிகள் வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அதற்காகத் தான் ஐந்து ரூபாய், ஏழரை ரூபாய் என்கிற விகிதத்திலே யூத் ஹாஸ்டல் என்கிற பெயராலே டார்மிட்டரி அமைத்துக் கொண்டு வருகிறோம். அதைத் தான் நாம் இன்றைக்கு அதிக அளவிலே விரிவு படுத்துவதற்கு இருக்கிறோம். நாகர்கோவில்—கன்னியாகுமரியிலேகூட புதிதாக ஒன்று உருவாகிக்கொண்டு இருக்கிறது. எல்லாயிடங்களிலேயும் இந்தத் திட்டங்களின் அடிப்படையிலேதான் இந்த டார்மிட்டரிகளை அதிகப்படுத்துகின்ற முயற்சியிலே ஈடு பட்டிருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே செய்தித் துறை பற்றிப் பல்வேறு கருத்துக்களைச் சுருக்கமாக எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாக நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் அவர்கள் பேசுகின்ற பொழுது, இந்த அரசின் மீது உள்ள அக்கறையின் காரணமாக, ஏதோ எங்களை நீங்கள் சுட்டிக் காட்டுவீர்கள் ; ஆனால் நாங்கள் தவறு செய்தோம் என்று இருந்ததினாலேதான் அப்படியெல்லாம் மாறி விட்டோம் ; ஆகவே, நீங்கள் அந்தத் தவறைச் செய்யாமல் இருக்க வேண்டுமென்று வாழ்த்தினார்கள். ஆகவே, அவர்களுடைய ஆலோசனையை ஏற்று, அப்படிப்பட்ட





தவறுகள்யெல்லாம் இல்லாமல், நீண்டகாலம் அவர்களுடைய பாராட்டைப் பெறும் வகையில் நாங்கள் நடந்து மக்களிடையே நன்மதிப்பை இப்பொழுது பெற்றுக் கொண்டு இருப்பதைப் போலவே என்றைக்கும் பெற்றுக்கொண்டிருப்போம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-40)

செய்தித்துறையினைப் பொறுத்தவரையிலேஇன்றைக்கு மத்திய அரசினிடத்திலே நாங்கள் சில வேண்டுகோள்களை வைத்திருக்றோம். டெலிவிஷன் என்பதைப் பொறுத்த வரையில் பல இடங்களில் குறைந்த சக்தியுள்ள ஒளிபரப்பு நிலையங்களை அமைக்கிறார்கள். அப்படி அவர்கள் அந்தத் திட்டத்தினை அறிமுகப் படுத்திய போது நாம் 10 இடங்களைச் சுட்டிக்காட்டி கேட்டோம். ஆனால் கடைசியாக அவர்கள் 6 இடங்களுக்குத்தான் அனுமதி தந்திருக்கிறார்கள். மற்ற நான்கு இடங்களைப் பொறுத்த வரையில் அவர்கள் தருவதற்கு முன்னாலே நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அது ஒரு மாவட்டத் தலைநகரம் என்ற வகையில் அதற்கு அந்தக் குறைந்த சக்தியுள்ள ஒளிபரப்பு நிலையம் நிச்சயமாக வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் மத்திய அரசுக்குத் தெரிவித்துக்கொண்டு மீண்டும் அதை வற்புறுத்துவதற்கு நாங்கள் முயலுவோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேநேரத்தில் அவர்கள் அளித்த வாக்குறுதி ஒன்றை அவர்கள் நமக்காக நிறைவேற்றாமல் விட்டுவைத்திருக்கிறார்கள். இந்தியாவில் நான்கு பிராந்தியங்கள் இருக்கின்றன. அந்த நான்கு பிராந்தியங்களில் மூன்று பிராந்தியங்களில் அவர்கள் வண்ண ஒளிபரப்புக் கருவிகளை வைத்திருக்கிறார்கள். ஏஷியாட் என்று சொல்லப்படுகின்ற ஆசிய விளையாட்டுப் போட்டியின்போது வரவழைக்கப்பட்ட அந்த கலர் O.B. வேன் என்று சொல்லப்படுகின்ற கருவியைப் பொறுத்தவரையில் அந்தப் போட்டி நடந்து முடிந்ததற்குப் பிறகு, கூட்டுசேரா நாடுகளின் மாநாடு நடந்து முடிந்ததற்குப் பிறகு, காமன்வெல்த் மாநாடு முடிந்ததற்குப் பிறகு அதனைத் தென்னகத்திற்கும் வழங்குவதாகச் சொன்னார்கள். ஆனால் ஒன்று கிழக்கு பிராந்தியத்திற்குப் போய்விட்டது. இன்னொன்று மேற்கு பிராந்தியத்திற்குப் போய்விட்டது. வடக்கே இன்றைக்கு இரண்டாக இருக்கின்றது. அது தெற்கே இன்னும் வழங்கப்படவில்லை. முன்னாலே இருந்த மத்திய செய்தி, ஒலிபரப்புத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டு ஒத்துக்கொண்டார்கள். ஆனால் அது நிறைவேற்றப்படவில்லை. இந்த நாடு முழுவதும் வண்ணத் தொலைக் காட்சியினை மக்கள்பார்த்து ரசிக்கின்ற நேரத்தில் மிக முக்கியமான பகுதியாகிய தென்னகப் பகுதி புறக்கணிக்கப்பட்டிருக்கின்றது ; நிராகரிக்கப்பட்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே நான் நினைவுபடுத்தி அதனை மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டுவருவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தற்போது அவர்களிடத்திலே இல்லை என்றாலும் அது ஒன்றும் மிகப் பெரிய செலவை ஏற்படுத்துகின்ற கருவிகள் அல்ல. நம்முடைய மாநாட்டிலேயே

அவர்களிடத்திலே நான் சொன்னேன் ; அமைச்சர்களிடத்திலேயும் சொல்லி இருக்கிறேன், ஆகவே தென் இந்தியாவிற்கு அந்த கலர் ஒளிபரப்புகின்ற கருவியை அவர்கள் ஒப்புதலளித்தபடி உடனடியாகத் தரவேண்டும் என்று அந்த உணர்வை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

வனத்துறையினைப் பொறுத்தவரையிலே எல்லோரும் அதைப் பாதுகாக்க வேண்டும் என்ற கருத்தினைத் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினைச் சேர்ந்த உறுப்பினர் திரு. கல்லன் அவர்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளை இன்னும் தீவிரமாக எடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினைச் சேர்ந்த உறுப்பினர்கள் வனப் பாதுகாப்பு என்ற பெயரால் அங்கே இருப்பவர்களை எல்லாம் வெளியேற்றக் கூடாது ; அவற்றை எல்லாம் விளை நிலமாக ஆக்க வேண்டும் ; வயல்களாக ஆக்க வேண்டும் என்ற கருத்தினைத் தெரிவித்தார்கள். இப்படிப்பட்ட கருத்து மோதல்களுக்கு இடையே, சிக்கல்களுக்கு இடையே காடுகளைப் பாதுகாக்க வேண்டிய கட்டாயத்திலே நாம் இருக்கிறோம்.

பாதைகள் போடுவதைப் பொறுத்தவரையில் உள்ள சிக்கல்களைப்பற்றி திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர்களும், மற்றவர்களும், எங்களுடைய கட்சியினைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னராஜ் போன்றவர்களும் எடுத்துச் சொன்னார்கள். இதனை ஒரு கொள்கைப் பிரச்சினையாக மத்திய அரசோடு விவாதித்துக் கொண்டிருக்கிறோம். மத்திய அரசு ஏனோ இதில் பிடிவாதமாக இருக்கிறார்கள். மத்திய அரசு பிடிவாதமாக இருக்கின்றது என்று ஒட்டு மொத்தமாகச் சொல்வதைவிட இந்த வனத் துறைக்குப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்ற வேளாண்மைத் துறை அமைச்சகம்தான் இதிலே இன்னும் பிடிவாதமாக இருக்கிறார்கள்.

சமீபத்திலே நடைபெற்ற வனத்துறை அமைச்சர்கள் மாநாட்டிலே மிகத் தெளிவாக தமிழக அரசின் சார்பிலேயும், வேறு சில மாநிலங்களின் சார்பிலேயும் இப்படி அன்றாடம் அந்த மக்களுக்குத் தேவையான சில திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக உங்களிடத்திலே அனுமதிக்காக எழுதி ஆண்டுக் கணக்கிலே, மாதக் கணக்கிலே, காத்துக் கொண்டிருப்பது சரியல்ல ; வனங்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதில் உங்களுக்கு எவ்வளவு அக்கறை இருக்கின்றதோ அவ்வளவு அக்கறை மாநில அரசுக்கும் இருக்கின்றது ; மேலும் நீங்களே புதிய 20 அம்சத் திட்டத்தின் கீழே மலைவாழ் மக்களுக்காகத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்கிறீர்கள் ; அப்படி மலைவாழ் மக்களுக்காகத் திட்டங்களை நிறைவேற்ற முனைகின்றபோது அவர்களுக்குப் பாதை வசதி செய்து கொடுக்க வேண்டும் என்றாலும் உங்களிடத்திலே விளக்க வேண்டும் ; குடிநீர் கொடுக்க வேண்டும் என்றாலும் உங்களிடத்திலே விளக்க வேண்டும் ; மின்சாரம் கொடுக்க வேண்டும் என்றால் அதற்காக கம்பி இழுப்பதற்கும், கால் நடுவதற்கும் கூட உங்களிடத்திலே அனுமதி கேட்க வேண்டும் என்றெல்லாம் நிலைமைகள் இருக்கின்றன என்பது பற்றிச் சொல்லப்பட்டது. மேலும் தண்ணீர் கொடுக்க வேண்டும் என்றால் கூட அங்கே ஒரு சின்ன கிணறு தோண்ட வேண்டும் என்றாலும் அதற்கும் அவர்களிடத்திலே அனுமதி வாங்க வேண்டும் ; பாதை போடுவதற்கும் அவர்களிடத்திலே அனுமதி வாங்க வேண்டும் என்றெல்லாம் சொல்கிறார்கள் ; ஆகவே இவை எல்லாம் நடைமுறையிலே எப்படி சாத்தியமாக இருக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.



பிற்பட்ட மக்களுக்காக, ஒதுக்கப்பட்ட மக்களுக்காக முன்னேற்றத் திட்டங்களை நிறைவேற்றுகின்றபோது ஒவ்வொரு தடவையும் எழுதிக் கேட்டுக் கொண்டிருந்தால் எப்படி விளக்க முடியும் ? தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மாநில அரசுதான் முடிவை எடுக்கின்றது. ஆகவே, அங்கே நேரடியிலே அவர்களுக்குத்தான் அனுபவம் இருக்கிறது. காடு என்று ரெக்கார்டிலே கூட இருக்கலாம். ஆனால், அது மரங்கள் இல்லாத இடமாக இருக்கிறது என்று சொன்னால் அதையே அமைச்சர் பிடித்துக் கொண்டார். இப்படித்தான் சொல்கிறீர்கள், எல்லாவற்றையுமே அழித்து விட்டீர்கள் என்று அவர் பதில் சொல்கிறார். ஐயா, காடு என்று பாரஸ்ட் லான்ட் என்று ரெக்கார்டிலே இருக்கிறது. ஆனால் அந்த இடம் ஊர் எல்லையில் இருக்கலாம். அல்லது மரங்கள் இல்லாமல் இருக்கலாம். ஒரு எல்லை வரையறுக்கப் பட்டபொழுது அது பாரஸ்ட் லான்ட் என்று இருக்கிறது. ஆகவே Non-forest purposes என்று நீங்கள் எடுத்துக் கொள்கிறீர்கள். நீங்கள் 1,500 மைலுக்கு அப்பாலிருக்கிற உங்களுடைய அதிகாரிகளுக்கு அந்தச் சூழ்நிலைகள் எல்லாம் தெரியாது என்று எடுத்துச் சொன்ன பின்னாலே அந்த மாநாடெல்லாம் முடிந்ததற்குப் பிறகு சமீபத்திலே ஒரு செய்தி பத்திரிகையிலே வந்தது. Central Forest Board —உடைய கருத்துக்களை எல்லாம் பரிசீலித்து மத்திய அரசு இப்படிப்பட்ட அதிகாரங்களை மாநில அரசிற்குத் தருவதில்லை என்று முடிவு எடுத்திருக்கிறார்கள் என்று பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. எங்களுக்கு இன்னும் அதிகாரபூர்வமாக தெரிவிக்கப்படவில்லை. அந்த மினிட்ஸ்கள் எல்லாம் எங்களுக்கு வந்து, அவர்களுடைய கருத்துக்கள் வருமேயானால் மாநில அரசின் சார்பிலே மீண்டும் அதைக் கடுமையாக தெரிவிப்போம் எதிர்ப்போம். ஆனால் மத்திய அரசிலே இடம் பெற்றிருக்கிற உறுப்பினர்களைக் கொண்டிருக்கிற கட்சி, நான் எல்லா கட்சி, களையுமே சேர்த்து கேட்டுக் கொள்கிறேன். தயவு செய்து, மத்திய அரசு இதை விவாதத்திற்குக் கொண்டு வருகிறபொழுது அங்கே நீங்கள் இதற்காக வாதாட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். பிராக்டிக்கல் நாலட்ஜ் என்று சொல்கிற, அனுபவபூர்வமான எதையுமே அவர்கள் ஒத்துக் கொள்ளாமல் அதிலே சிக்கலை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதனாலேதான் பல சிக்கல்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் அவர்கள் ஏரிகளுக்குள்ளேயே செடிகள் நடுவதாலே, மரங்கள் நடுவதாலே, பின்னாலே தூர் வாருவதற்கு இடயூறாக இருக்கிறது என்று சொன்னார்கள். நான் விசாரித்தததில் நடுவிலே நடுகிறார்கள். எந்தப் பகுதியிலே போய் வண்டல் மண் சேருமோ, அந்த இடத்திலே நடக்கூடாது என்று இப்பொழுதும் விதி இருக்கிறது: அங்கே நடுவதில்லை. அதுதான் இன்றைக்கு இருக்கிற நடைமுறைப்படுத்துகின்ற முறை, கட்டுப்பாடு. எங்கேயாவது மீறப்பட்டிருக்குமானால், அதைத் தெரிவித்தால், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால், ஏரிக்குள்ளேயே நடுகிற பொழுது ஏரியினுடைய உள் வாயில் என்பது மத்தியிலே மண் சேராத இடத்திலே நடுகிறார்கள். கரை ஓரங்களிலே நடுகிறார்கள். வேகமாக வந்து எங்கே வண்டல் சேருகிறதோ அந்த இடத்திலே நடக்கூடாது என்பதுதான் இருக்கிற விதி.

அதைப்போல் யூகலிப்டஸ் மரங்களைப் பற்றி சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பாபு ஜனார்த்தனம் அவர்களும் சொன்னார்கள். இந்தப் பிரச்னை நீண்டகாலமாகவே விவாதிக்கப்பட்டு 15, 20 ஆண்டுகளாக இந்த மரம் நம்முடைய மாநிலத்திலே, இந்தியாவிலேயே வளர்க்கப்பட்டு வருகிறது. ஆனால் யூகலிப்டஸ் என்றால், எல்லாமே ஒரு ஜாதி மரம் அல்ல. 20,30 ஜாதி மரங்கள் இருக்கின்றன, யூகலிப்டசிலே. 4,000, 5,000, 6,000 அடி உயரத்திலே வருகின்ற மரங்கள் இருக்கின்றன. சாதாரண சம தளத்திலே வருகின்ற மரங்கள் இருக்கின்றன. அதையெல்லாம் Grand.s என்கிறார்கள், Blucgum என்கிறார்கள், Hybrid என்கிறார்கள். அதனுடைய வேர் 2 அடி. 2½ அடிதான் பூமிக்கு அடியிலே போகிறது ; ஆகவே, அது எங்கே ஆழத்திலே போய் தண்ணீரை எடுத்துக் கொள்கிறது. அதைப்பற்றி முன்னாலேயே, இந்திய அளவிலேயே ஒரு குழுவை நியமித்து, அதிலே சிறந்த வனத்துறை தலைமை ஆராய்ச்சியிலே உள்ளவர்கள் எல்லாம் ஒன்று கூடி, அதிலே தவறு இல்லை, அதனாலே ஆபத்து இல்லை என்று தெரிவித்து இருக்கிறார்கள், இருந்தாலும் நம்முடைய சமுதாயக் காடு வளர்ப்புத் திட்டத்தில் 5 அல்லது 7 சதவீதம்தான் நடுகிறோம். பாக்கி 90 சதவீதத்திற்குமேலே வேறு ஜாதி மரங்கள் நடப்படுகின்றன. ஆகவே, யூகலிப்டஸ் பற்றிய சந்தேகங்களை நாம் நிவர்த்தி செய்து கொள்ளலாம். அதனாலே அபாயம் இல்லை. நான் முன்பே இதே மன்றத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். புதுக்கோட்டை என்பது வறண்ட பூமி. அங்கேதான் இந்த ஹைபிரிட்டைப் போட்டு வளர்த்துக் கொண்டிருக்கிறோம். அங்கே தண்ணீரே இல்லை தரையிலே. தண்ணீர் இல்லாத தரையிலேயே அது வருகிறது என்றால் இன்றைக்கு விவசாயிகள் எல்லோருக்குமே இதிலே ஒரு ஆர்வம் இருக்கிறது. ஆகவே, 6 ஆண்டுகள், 7 ஆண்டுகளுக்குள்ளே அது வளர்ந்து பயன் தருகிற மரமாக இருக்கிறது. ஒருமுறை நாம் வைத்து வளர்த்து விட்டால் ஏறத்தாழ 3 முறை அதை வெட்டி விட்டால், அது தானாகவே வளர்ந்து கொள்கின்ற காப்பீஸ் என்று வருகிறது. அதற்கு





மேலே நாம் வேளாண்மை செய்ய வேண்டாம். 6 ஆண்டுக்கு 7 ஆண்டுக்கு ஒருமுறை வெட்டினால் அதை மீண்டும் இரண்டு மூன்று முறை வெட்டலாம். அந்த அளவுக்கு வளர்ந்து பலன் தருகிற மரமாக நம்முடைய வேளாண்மைத் துறையிலே ஈடுபட்டிருக்கிற விவசாயிகளுக்கெல்லாம் அதிலே அக்கறை உள்ள மரமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. ஆகவே, முரணான தகவல்கள் இந்த நிபுணர் குழுவினர்களாலே சில நேரத்திலே சொல்லப்படுவதை நம்பிக் கொண்டிருக்காமல் காரியம் செய்ய வேண்டும். நிபுணர்கள் சில வேளைகளில் நம்மைப் பிழைக்கவே விட மாட்டார்கள் போல் இருக்கிறது. பல நேரங்களிலே அப்படித்தான் ஆகி விடுகிறது. ஒரு நிபுணர் இது சரி என்று சொல்கிறார். ஒரு நிபுணர் இது தவறு என்று சொல்கிறார். ஆகவே, அவர்கள் சொல்வதைக் கேட்டால் மனிதன் வாழவே முடியாது என்பதைப்போல மரங்களை வைக்கவே முடியாது. வளர்க்கவே முடியாது. ஆனால் உலகம் முழுவதும் இன்றைக்கு யூகலிப்டஸ் மரங்களைப் பொறுத்த வரையில் அது பயிர் செய்யும் மரங்கள்தான், அது வளர்க்கும் மரங்கள்தான். அதிலே பல வகைகள் இருக்கின்றன. எந்த வகை எங்கே வரும் என்பதுதான் பிரச்னையே தவிர அதனால் அபாயம் ஒன்றும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-50)

•

விஸ்கோஸ் நிறுவனத்தைப் பொறுத்தவரையில் 1 கோடி ரூபாய்க்கு மேல் பாக்கி இருக்கிறதே, ஏன் விட்டு வைத்து இருக்கிறீர்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் கல்லன் அவர்கள் கேட்டார்கள். அதற்குக் காரணம் என்ன என்றால் 2 ஆண்டுகளுக்கு முன்னாலே நாம் வழங்கிய மரங்களுக்கு எல்லாம் அதிக விலை நிர்ணயித்தோம். ரிட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுத்து விலை போட்டோம். அப்படிப் போட்டதிலே 1½ கோடி ரூபாய் கட்ட வேண்டிய நெருக்கடி வந்து விட்டது. அதனாலே பாக்கி வந்தது. அதை கட்ட வில்லையென்றால் மரங்களைத் தர மாட்டோம் என்று தடுத்தோம், மறுத்தோம். ஆனால் அங்கேயுள்ள தொழிலாளர்கள் வேலை வாய்ப்பு இழந்து விடுவார்கள் என்று அவர்கள் வேண்டிக் கேட்டுக் கொண்டார்கள். தவணை முறையில் அவர்கள் அதைக் கட்ட ஒப்புக் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் நீதிமன்றத்துக்குப் போவதாக இருந்தார்கள். போனால் நாங்களும் அதைச் சந்திக்க தயாராக இருக்கிறோம் என்று சொன்னோம். ஆகவே, அந்த 1 கோடி ரூபாய் பாக்கி என்பது இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே நாம் வழங்கிய மரங்களுக்கு அதிக விலை நிர்ணயித்ததன் காரணமாக ஏற்பட்டதாகும். அதையும் சேர்த்துத் தர வேண்டும் என்று சொன்னோம்.

அப்படி சொன்னதற்குக் காரணம் அவர்களுடன் போட்ட ஒப்பந்தத்தில் அப்படி இருக்கிறது. அதிலே, இப்போது டென்டேடிவ்வாகத்தான் தற்காலிகமாகத்தான் விலையை நிர்ணயம் செய்கிறோம். பின்னாலே உங்களுடைய வரவு செலவுகளைப் பார்த்து, எங்களுடைய காஸ்ட் அக்கௌண்ட்டென்ட் உங்களுடைய கணக்கு வழக்குகளை எல்லாம் பரிசீலித்துப் பார்த்த பிறகு, அதனுடைய நன்மை தீமை அடிப்படையில், லாப-நஷ்ட அடிப்படையில் பின்னாலே ஒரு விலையை நிர்ணயிப்போம் என்று சொல்லி இருக்கிறோம். அதை நீங்க்ள் கட்ட வேண்டும் என்று சொல்லி இருக்கிறோம். அவர்களும் அதை ஏற்றுக் கொண்டார்கள். அதன்படி இரண்டு ஆண்டுகள் ஆகி விட்டது. அந்தக் கணக்கு வழக்குகளையெல்லாம் பார்த்தபிறகு, அந்தத் தொகையை முன்னாலே இருந்து நிர்ணயித்தோம். அதனாலே ஏற்பட்ட பாக்கியே தவிர வேறு பாக்கி வைக்கும் பிரச்னை இல்லை. பணத்தைக் கொடுக்கவில்லையென்றால் யாராக இருந்தாலும் மரத்தை எடுத்துப் போக முடியாது, உள்ளே நுழையவே அனுமதிப்பது இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்களுக்கு எதிலே அக்கறை என்பது தெரியும். அவர் எடுத்த உடனேயே நேராக 30,000அடி உயரத்திற்குப் போய் விட்டார். அவருடைய பிரச்னை கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ரப்பர் பிளான்டேஷனைப் பற்றியது அவர் சொன்ன கருத்துக்கள் எல்லாம், அடிக்கடி அவர் எங்களுக்குத் தெரிவித்துக் கொண்டு இருக்கிற ஒன்றுதான். நாங்களும் அதைப் பரிசீலித்துக் கொண்டு இருக்கிறோம். அதைப்பற்றி விவாதித்துக் கொண்டு இருக்கிறோம்.

அதைக் கார்ப்பரேஷனாக ஆக்க அனுமதி தந்து எவ்வளவோ நாளாகி விட்டதே என்று சொன்னார்கள். ஒரு அனுமதி கொடுக்கப்பட்டு விட்டது என்பதாலேயே, நீண்டகாலமாக ஒரு துறையின் பகுதியாக இருக்கும் நிறுவனத்தை கழகமாக மாற்றுவது என்பது சாதாரண பிரச்னை அல்ல. 11,000, 12,000 ஏக்கர் பரப்பளவுள்ள ரப்பர் தோட்டம் அது. ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் அங்கே வேலை செய்கிறார்கள். கோடிக் கணக்கான வருமானம் உள்ள, பெருமினமுள்ள வியாபாரம் அங்கே நடைபெறுகிறது. ஆகவே, மாண்புமிகு ஹேமச்சந்திரன் அவர்களுக்கு மகிழ்ச்சி தரும் ஒரு செய்தியைச் சொலகிறேன். அதற்காக ஒரு ஸ்பெஷல் ஆபீசராக, அடிஷனல் சிப் கன்சர்வேடர் ஆப் பாரஸ்ட்ஸ் ஒருவரை நியமித்தாகி விட்டது. மிக விரைவிலே, அநேகமாக 2—3 மாதத்திற்குள்ளேயே, அது கழகமாக வேலை செய்யத் தொடங்கி விடும்.

இங்கே பல்வேறு நேரங்களிம் உறுப்பினர் அவர்கள் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். நான் அதையெல்லாம் அவர்களோடு அடிக்கடி பரிசீலித்துக் கொண்டு இருக்கிறேன். ஒன்றை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். அது





கழகமாக அமைந்து பாணியாற்றுவதற்கு முன்னாலே அதற்கு ஒரு ஆலோசனை வழங்குவதற்காக அங்கே இருக்கும் சில சட்டமன்ற உறுப்பினர்களை, தொழிற்சங்கத் தலைவர்களை, சில பொது நலனிலே அக்கறை உள்ளவர்களைச் சேர்த்து, ஒரு ஆலோசனைக் குழு அமைப்பதற்கு அரசு உத்தேசித்துள்ளது என்பதை நான் அவர்களுக்குத் தெரிவிக்கிறேன். தரப்படுகின்ற கருத்துக்களை என்னிடத்தில் தருவதற்கு முன்பாகவே அந்தக் குழுவினிடத்தில் நேராகவே தெரிவித்தால் பலன் உள்ள வகையில் அது பணியாற்றும். நாட்டுக்கும் பயன்படும்.

இன்றைக்கு அந்த ரப்பர் கழகத்தினுடைய தொழிலாளர்களுக்கு பஞ்சப்படி, அகவிலைப்படி உயர்த்த அரசு முடிவு எடுத்து இருக்கிறது. அதைப்பற்றி இறுதியில் உங்களுக்குத் தெரிவிக்கிறேன். அதைப் போலவே, கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் கருப்பையா அவர்கள் மிக ஆவேசத்தோடு பேசினார். எப்போதுமே ஆவேசத்தோடு பேசுவாரே தவிர, அது ஆவேசமாகத் தோன்றுமே தவிர, அவர் அவ்வளவு ஆவேசத்திற்கு உரியவர் அல்லர். மிகுந்த அமைதியானவர். நிரம்ப நேரங்களில் என்னிடத்தில் விவாதித்து இருக்கிறார்கள். ஆனால் என்ன செய்வது? அவரவர்களுடைய தலைவிதி என்று ஆன்மீகத்திலே நம்பிக்கை இருப்பவர்கள் சொல்வார்கள். ஆனால் நாம் அப்படி நம்பவில்லை. ஆனால் பல பேர் சில கோடிக் கணக்கான ரூபாய் லாபம் தரும் தொழிற்சாலைகளில் நுழைந்து இருப்பார்கள். அவர்களுக்கு எடுத்த எடுப்பிலேயே 1000 ரூபாய் சம்பளம் கிடைக்கும். பல பேர் ரொம்ப நஷ்டம் அடையக் கூடிய தொழிற்சாலைகளில் நுழைந்து இருப்பார்கள். அவர்களுக்குக் குறைந்த அளவிற்குத்தான் சம்பளம் வரும். இந்த சின்கோனா துறை 120 ஆண்டுகள் பணியாற்றுகிறது என்பது பெருமைக்காகச் சொல்லப்பட்டதல்ல. 120 ஆண்டுகள் பணியாற்றியதாலே அது வயது முதிர்ந்து விட்டது, முதுமை அடைந்துவிட்டது என்பதற்காகத்தான் சொல்கிறோம். நியாயமாக அரசு என்ன செய்து இருக்க வேண்டும் என்று சொன்னால்— தனியாரராக இருந்தால், அவர்கள் அப்படித்தான் செய்து இருப்பார்கள்—அதை இழுத்து மூடி இருக்க வேண்டும். அரசாங்கம் என்பதாலே ஆண்டுதோறும் 20 லட்சம், 30 லட்சம், 40 லட்சம் என்று இழப்பு ஏற்படுவதைத் தாங்கிக் கொண்டு அங்கே பணியாற்றும் தொழிலாளர்களிலே 60 சதவிகிதம் ஆதிதிராவிடர்கள் என்பதைக் கருத்தில் கொண்டு, அவர்களைப் பட்டினி போடக் கூடாது, அவர்கள் வயிற்றில் அடிக்கக் கூடாது என்ற உணர்வோடு அந்த நஷ்டத்தைப் பொறுத்துக் கொண்டு அதை நடத்திக் கொண்டு இருக்கிறோம். காலத்தினுடைய வளர்ச்சியிலே அந்த மருந்து தேவையில்லாமல் போய் விட்டது. அந்த கொய்னா மாத்திரை மலேரியாவுக்கு என்று ஏற்படுத்தப் பட்ட ஒன்று. அது வெள்ளைக்காரன் காலத்தில் ஏற்படுத்தப் பட்டு, வெளிநாடுகளுக்குப் போய்க் கொண்டிருந்தது. அதுவும் மத்திய அரசினுடைய கருணையினாலே தடுத்து நிறுத்தப்பட்டது. இரண்டு மாநிலங்கள்தான் இதனால் துன்புறுகின்றன. இந்த

சின்கோனாவை வைத்துக்கொண்டு துன்புறுகின்ற மாநிலங்கள் மேற்கு வங்கமும் தமிழகமும்தான். ஆகவே, நாம் என்ன செய்வது? புலிமேலே சவாரி செய்கிற கதை சொல்வார்களே, அதைப்போன்று மாட்டிக் கொண்டு விழிக்கிறோம்.

மக்களுக்கு ஏதாவது நன்மை வர வேண்டும்; தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு கொடுக்க வேண்டுமென்று கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. கருப்பையா அவர்களுக்கு இருக்கிற அக்கறையைப்போல ஆயிரம் மடங்கு அக்கறை மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களுக்கு இருக்கிறது என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர்களுடைய கோபத்தை ஏன் கொள்கை விளக்கக் குறிப்பில் காட்டினார்கள் என்று தெரியவில்லை. கொள்கைக் குறிப்பு இருந்தால்தானே, இந்த மானியம் இருந்தால்தானே அரசாங்கத்திலிருந்து பணம் வாங்க முடியும். இந்தத் தொழில் நஷ்டத்தில்தான் நடந்து கொண்டிருக்கிறது. தனியார் துறையாகவோ அல்லது வேறு துறையாகவோ இருந்தால் இதற்கு முன்னாலே மூடிவிட்டுப் போயிருப்பார்கள். ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களிடம் அந்தத் தொழிலாளர்களைக் காப்பாற்றியாக வேண்டும், ஏதாவது ஊதிய உயர்வு தர வேண்டும் என்று கேட்டு, அவர்களும் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

அதைப்போன்று நம்முடைய தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் இன்றைக்கு ஊதிய உயர்வை அனுமதித்திருக்கிறோம். ஆகவே, இந்த வகையில் வனத்துறையைப் பொறுத்தவரையில் எந்த அளவுக்கு தீவிரமான நடவடிக்கை எடுக்க முடியுமோ அந்த அளவுக்கு கடந்த 5, 6 ஆண்டுகளில் எடுத்துக் கொண்டு வருகிறோம். எல்லாவற்றுக்கும் நிறைய புள்ளி விவரங்கள் என்னிடம் இருக்கின்றன.

நிர்வாகத்தைப்பற்றிக் கோபத்துக் கொண்டார்கள், யாரிடம் போய்ச் சொல்வது என்று. ஆனால் இதுவரையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பையா அவர்கள் ஒரு தவறைக்கூட, ஒரு குற்றத்தைக்கூட எங்களுக்குத் தெரிவிக்கவில்லை. இந்த இடத்தில் இன்னார் தவறு செய்தார், மரத்தை வெட்டிக் கொண்டு போனார் என்று தெரிவிக்கவில்லை. ஒரு நாளைக்கு வனத்துறை பற்றிய குற்றங்கள் என்று குறைந்தது 50 கடிதங்கள் எனக்கு வருகின்றன. ஆனால் திரு. கருப்பையா அவர்கள் இதுவரை என்ன காரணத்தாலோ அந்தக் குற்றவாளிகளைக் காண்பித்துக் கொடுக்க ஏன் முன்வரவில்லை என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. தவறு செய்கிறவர்கள் யாராக இருந்தாலும் எங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வாருங்கள், நடவடிக்கை எடுக்கிறோம். தவறு செய்கிறவர்கள் வனத்துறையைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, அல்லது பொது மக்களாக இருந்தாலும் சரி, பெரியவர்கள் சின்னவர்கள் என்ற பிரச்சனைக்கே இதில் இடமில்லை. யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



சின்கோனாத் துறையைப் பொறுத்தவரையில், இப்படிப்பட்ட சூழ்நிலையில் நாம் வேறு ஒன்றும் செய்ய முடியாத சூழ்நிலையில் மாட்டிக் கொண்டிருக்கிறோம். அது பிறக்கும்போதே சவலைக் குழந்தையாகப் பிறந்து, ஊனமுற்ற குழந்தையாக இருக்கிறது. முடிந்த அளவுக்கு சாப்பாடு போட்டு காப்பாற்றிக் கொண்டு வருகிறோம். அதைத் தவிர வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை.

இன்னும் பல்வேறு திட்டங்களைப் புதிய முறையில் வியாபார நோக்கோடு செய்து கொண்டிருக்கிறோம். இந்த நிலையில் புதிதாக சின்கோனா பயிரிடக் கூடாது என்று தடுத்திருக்கிறோம். அதனால்தான் நீங்கள் சொன்னீர்களே, காலி இடம் நிறைய கிடக்கிறது என்று, அந்தக் காலியிடம் ஏற்பட்டிருக்கிறது. தேவையில்லாத ஒரு பயிரை பயிர் செய்வதால் யாருக்கும் பயனில்லை. தேவைப்படுகிற பொருள்களை பயிர் செய்தால், நல்ல முறையில் வியாபாரமும் நடக்கும்; தொழிலாளர்களுக்கு நல்ல வேலை வாய்ப்பும் கிடைக்கும். அந்த வகையில் இன்றைக்கு சின்கோனாத் துறையில் பல்வேறு திட்டங்களை நாம் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையிலே இன்றைக்கு இருக்கிற கஷ்டத்திற்குள்ளேயும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்திருக்கிறார்கள். அது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்குமா என்பது தெரியாது. ஏனென்றால் கேட்கிறவர்கள் எப்போதும் கொஞ்சம் எல்லை இல்லாமல் கேட்கலாம். கொடுக்கிறவர்களுக்குத்தான் கஷ்டம் தெரியும். 'சட்டியிலே இருந்தால்தானே அகப்பையில் வரும்'. இங்கே சட்டியிலே இல்லை. ஆகவே, பக்கத்து சட்டியிலே இருந்து தோண்டி கொண்டு வந்து கொடுக்கிறோம்.

நம்முடைய சின்கோனாத் துறையில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு ஒரு நாளைக்கு 50 காசு ஊதியத்தை உயர்த்திக் கொடுக்க அனுமதித்திருக்கிறோம். ஒரு நாளைக்கு இளைஞர்களுக்கு 35 காசு, சிறார்களுக்கு 30 காசு ஊதியத்தை உயர்த்திக் கொடுக்க அனுமதித்திருக்கிறோம். இப்படிப்பட்ட கஷ்டத்திலேயும் இதனால் ஏறத்தாழ 4,12,000 ரூபாய் இந்த நஷ்டத்திற்கு மேலும் சேரப் போகிறது. ஆக, இந்த அளவுக்கு இன்றைக்கு நாம் அந்தத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு செய்ய அனுமதி அளித்திருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் இந்த அனுமதியை வழங்கியிருக்கிறார்கள். மேலும் அவர்களுக்கு என்ன நன்மைகளைச் செய்ய முடியுமோ அதைச் செய்வதற்கு இந்தத் துறையிலே நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு இரப்பர் தோட்டத்தைப் பொறுத்தவரையில் கடந்த 4 தவணை அகவிலைப் படியை உயர்த்திக் கொடுக்காமல் இருந்து வந்தோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதுபற்றி ஒரு முடிவை எடுத்து, அவர்களுக்கு 4 தவணைகளில் அந்த அகவிலைப் படிகளை வழங்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள்.

ஆகவே, அவர்களுக்கு 4 தவணைகளில் அகவிலைப் படி இந்த ஆண்டிலே கொடுக்க வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. அதனால் 26,05,254 ரூபாய் செலவு அரசு இரப்பர் தோட்டத்திற்கு வரவிருக்கிறது. ஆகவே அரசு இந்த அகவிலைப் படியை 4 தவணைகளில் வழங்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 2-00)

அதைப்போன்று நம்முடைய தேயிலைத் தோட்டக் கழகத்திலே, அதுவும் இன்னும் இலாபத்தில் வரவில்லை. சென்ற ஆண்டு தான் சாதாரணமாக அந்த வருடத்தைப் பொறுத்தவரையில், லாபம் காட்டியிருக்கிறோம். நாம் தொழிலாளர் தலைவர்கள், பிரதிநிதிகளோடு பேசினோம். பக்கத்திலே உள்ள தனியார்த் தோட்டத்திலே எந்த கூலியெல்லாம் உயர்வாகக் கொடுக்கிறார்கள் என்பதை எல்லாம் பரிசீலித்து, இன்றைக்கு ஏறத்தாழ பெரிய வித்தியாசம் இல்லாமல், ஆண்களுக்கு, பெரியவர்களுக்கு ரூ. 13.90, இளைஞர்களுக்கு ரூ. 10.61, சிறுவர்களுக்கு ரூ. 9.78 கொடுப்பது என்ற ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. தொழிலாளர் தலைவர்கள் எல்லாம் மனம் மகிழ்வோடு ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். தொழிலாளர்களும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இதற்காக ஆண்டு ஒன்றுக்கு அந்தக் கழகத்திற்கு சுமார் ரூ. 35 இலட்சம் கூடுதலாக செலவாக இருக்கிறது. இந்த அளவிற்கு தொழிலாளர்களுடைய நன்மைகளுக்காகவும், இந்தத் தொழிலினுடைய வளர்ச்சிக்காகவும், வனங்களை பாதுகாப்பதற்காகவும் நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

வருமானத்தையும், செலவையும் பற்றிக்கூட குறிப்பிட்டார்கள். இங்கே வனத்துறையைப் பொறுத்தவரையில், மாநில அரசிற்கு வருமானம் வருகிற ஒரு துறையாக இல்லாமல், இதை வளர்ச்சித் துறையாகக் கருதி, முதலீடு செய்து கொண்டிருக்கிறோம். அதனால் செலவு அதிகமாகவும், வருமானம் குறைவாகவும் இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இங்கே தொகுதி சம்பந்தப்பட்டவரை, வேண்டுகோள்களை தெரிவித்திருக்கிறார்கள். அவைகள் முறையாக பரிசீலிக்கப்படும். சுட்டிக்காட்டப்பட்ட குறைகளுக்கு ஆதாரம் இருக்குமானால், அந்த குறைகளை நீக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் யாராக இருந்தாலும், அவர்கள்மீது கடுமையான நடவடிக்கையை அரசு எப்போதும் எடுக்கும், இப்போதும் எடுத்துக் கொண்டுதான் இருக்கிறது. எனவே யாருக்கும் தயவு தாட்சண்யம் காட்டுவது கிடையாது.





கலைவாணர் அரங்கத்தைப்பற்றியும், வேலூரில் உள்ள கலை அரங்கத்தைப்பற்றியும் சொன்னார்கள். அதை இரண்டையும் இலாபமாகத்தான் நடத்திக் கொண்டிருக்கிறோம். அது வியாபார நோக்கத்தோடு நடத்தப்படுவது இல்லை. அரசாங்கம் என்றைக்கு வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளும் உரிமையை வைத்துக் கொண்டுதான் இருக்கிறது. செலவு போக 1, 2 இலட்சம் ரூபாய் வருகின்ற அளவிற்குத்தான் வைத்துக் கொண்டிருக்கிறது. அவ்வாறு நஷ்டம் வருகிறது என்று சொல்வதற்கு இது கமர்ஷியல் ஆர்கனேசேஷன் அல்ல, இன்ஸ்ட்டிடியூஷனும் அல்ல. யாராவது படம் போட்டுக் கொண்டிருந்தால், அந்த நேரத்தில் அரசாங்க விழா வருகிறது என்றால், அதை ரத்து செய்கின்ற அதிகாரத்தை நாம் வைத்துக் கொண்டிருக்கிறோம். ஒரு காட்சியைத்தான் நடத்தலாம். அந்த வகையிலே நடந்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவ்வாறு குறிப்பிட்ட குற்றச் சாட்டுக்கள் இருந்தால், அதை அரசு உடனடியாக பரிசீலிக்கும் என்று தெரிவித்து, பொதுவாக இந்தக் கருத்துக்கள் முழுவதையும் அரசு ஏற்று, அவைகளில் ஏற்றுக் கொள்ள வேண்டிய கருத்துக்களை அரசு பரிசீலிக்கும் என்று கூறி, மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களை பின்வாங்கிக் கொண்டு, இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண் 25—சின்கோனா.

திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், கு. ரமணி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண். 25—சின்கோனா என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,07,90,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண் 45—காட்டுவளத் துறை.

திரு. த. வேணுகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

திரு, என். எஸ். வி. சித்தன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

'' மானியக் கோரிக்கை எண் 45—காட்டு வளத் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 12,11,58,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் ''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண் 47—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல்.

திருவாளர்கள் என். எஸ். வி. சித்தன், ப. சுந்தரம் ஆகியோர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றவனவாகக் கருதப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி—

'' மானியக் கோரிக்கை எண் 47—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,37,13,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் ".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண் 55—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு.

திரு. சு. பாலன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.





திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

'' மானியக் கோரிக்கை எண் 55—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 17,37,50,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் ''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று. 17—4—1984 காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.05 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

எதுவுமில்லை.

(ஆ) அறிக்கைகள் அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

122. கோரிக்கை எண் 25—சின்கோனா துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1984–85 (தமிழ், ஆங்கிலம்).

123. கோரிக்கை எண் 45—வனத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1984–85 (தமிழ், ஆங்கிலம்).

124. கோரிக்கை எண் 47—செய்தி, திரைப்படத் தொழில் நுட்பவியல் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1984–85 (தமிழ், ஆங்கிலம்).

125. கோரிக்கை எண் 47—சுற்றுலா குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1984–85 (தமிழ், ஆங்கிலம்).

[1984 ஏப்ரல் 16

126. 1984–85ஆம் ஆண்டிற்கான சின்கோனாத் துறை பற்றிய சாதனைத் திட்டம் (ஆங்கிலம்).

127. 1984–85ஆம் ஆண்டிற்கான சின்கோனாத் துறை பற்றிய வணிக சம்பந்தமான வரவு-செலவுத் திட்டம் (ஆங்கிலம்).

128. 198485ஆம் ஆண்டிற்கான வனத் துறை பற்றிய சாதனைத் திட்டம் (ஆங்கிலம்).

129. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும் (ஆறாம் பட்டியல்).

## இணைப்பு !

[136-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.]

### சின்கோனாத் துறை.

### கொள்கை விளக்கக் குறிப்பு.

1984–85ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம்

கோரிக்கைகள் எண். 25— சின்கோனா மற்றும் 55—மூலதனச் செலவு

1. முன்னுரை.

1.1 சின்கோனாத் துறை கடந்த 123 ஆண்டுகளாக, குனைன் சல்பேட் மற்றும் குனைன் ஹைட்ரோ குளோரைடு போன்ற கொய்னாப் பொருட்கள் குனிடின் சல்பேட், மருந்து மற்றும் நறுமணத் தைலங்கள், முதலியவற்றை. உற்பத்தி செய்து வருகிறது. இஃது வணிக அடிப்படையில் தமிழக அரசின்கீழ் ஒரு துறையாக இயங்கி வருகிறது. 2,180 நிரந்தரத் தொழிலாளர்களும், 1,335 தற்காலிகத் தொழிலாளர்களும் ஆக மொத்தம் 3,515 தொழிலாளர்கள் இத்துறையில் பணியாற்றி வருகின்றனர். இத்துறை தயாரிக்கும் பொருட்களுக்குத் தேவையான மூலப் பொருட்கள், நீலகிரி, கோயமுத்தூர் மாவட்டங்களிலுள்ள ஆனைமலை, மதுரை மாவட்டத்திலுள்ள கொடைக்கானல் தாலுக்காவில் மேல் பழனிமலை ஆகிய இடங்களில் உள்ள இத்துறையின் தோட்டங்களிலேயே பயிரிடப்படுகின்றன. கோயமுத்தூர் மாவட்டம் ஆனைமலையிலுள்ள தொழிற்சாலையிலும், நீலகிரி மாவட்டம், நடுவட்டத்திலுள்ள தொழிற்சாலையிலும் அவ்வகை மூலப் பொருட்கள் யாவும் பதனிடப்படுகின்றன.

1.2. துறையின் தொழிலாளர்களின் பெரும்பான்மையோர் ஆதி திராவிடர்கள் (60 சதவிகிதம்) (Adi Dravidar Schedul Caste) பின்தங்கிய வகுப்பினர் (30 சதவிகிதம்) (Backward Classes) ஆவர் என்பதைக் குறிப்பிடுவதில் இத் துறை பெருமையடைகிறது.



1984 ஏப்ரல் 16]

சின்கோனாத் துறையின் நடவடிக்கைகள் இரு பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகின்றன. ஒரு பிரிவு மலேரியா நோயை ஒழிப்பதற்காக பயன்படுத்தப்படும் குனைன் சல்பேட் மருந்தையும், இதய நோய்களைக் குணப்படுத்தும் குனிடின் சல்பேட் போன்ற உயிர்காக்கும் மருந்துகள் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. மற்றொருபிரிவு, மருந்தும் மற்றும் நறுமணத் தைலங்களை தயாரிக்கிறது. மருந்து மற்றும் நறுமணத் தைலவகைத் தாவரங்களைப் பயிரிடும் பணியை, 1950ஆம் ஆண்டு முதல் இத்துறை மேற்கொண்டுள்ளது. துறையின் பணிகளைப் பலதிறப்படுத்துவதற்காக முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அண்மையில் இத்துறை முதலமைச்சரின் சத்துணவு வழங்கும் திட்டத்தின்கீழ் பற் பொடி தயாரித்து கிராமப்புறக் குழந்தைகளுக்கு வழங்கும் பணியை மேற்கொண்டுள்ளது.

2. தயாரிப்பு.

### சின்கோனாப் பொருட்கள்.

2.1. உலக நாடுகளின் தேவைகள், மற்றும் உள்நாட்டு தேவைகளுக்கேற்ப கொய்னாப் பொருட்களின் விற்பனை அமைந்துள்ளது. இரண்டாம் உலகப் போரின்போது, இப்பொருட்களுக்கான தேவை அதிகமாக இருந்தது. போர் முடிந்ததும் இப்பொருட்களின் தேவை குறைந்து விட்டது. ஆனால். 1960ஆம் ஆண்டிற்கும் 1970ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் உலக நாடுகளில் இப்பொருட்களின் தேவை அதிகரித்தது. இப்பொருட்களின் விற்பனை சீராக அதிகரித்து வரும் கொய்னாப் பொருட்களின் மலேரியா நோய் மீண்டும் தோன்றி நிலையில் நம் நாட்டில் பரவி வருவதால், மைய அரசு, 1978ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் கொய்னாப் பொருட்களின் வெளிநாட்டு ஏற்றுமதிக்கு தடைவிதித்தது, மாநில அரசு பலமுறை வேண்டியதற்கிணங்க 1978–79, 1979–80, 1980–81, 1981–82 மற்றும் 1982–83 ஆண்டுகளில் மத்திய அரசு இப்பொருட்களை ஓரளவிற்கு ஏற்றுமதி செய்ய அனுமதித்தது. ஆனால் இத்தகைய உயிர்காக்கும் மருந்துகள் தடையேதுமின்றி நிலையாக கிடைக்க வேண்டுமென்று அனைத்து நாடுகளும் கருதுவதால் இவற்றை ஏற்றுமதி செய்வதற்குத் திடீரென்று தடை விதிக்கப்பட்டதன் காரணமாக நீண்ட காலமாக நிலவிய அனைத்து நாடுகளுக்கான விற்பனை பெரிதும் பாதித்தது. மேலும் தொடர்ந்து ஏற்றுமதித் தடை விதிக்கப்பட்ட காலத்தில் அனைத்து நாடுகளிலும் விற்பனை செய்ய இயலாததால் ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்வது கடினமாகிவிட்டது. தற்போது மைய அரசு கொய்னாப் பொருட்களை ஏற்றுமதி செய்வதின் பேரிலிருந்த தடையை நீக்கி, ''பொது அனுமதியின்'' பேரில் ஏற்றுமதி செய்ய அனுமதி அளித்துள்ளது.

[1984 ஏப்ரல் 16

2·2. விற்பனை செய்யப்பட்ட கொய்னாப் பொருட்களின் அளவு மற்றும் அவற்றின் மூலம் கிடைத்த வருவாய் ஆகியவற்றின் விவரம் பின்வருமாறு :—

| ஆண்டு. (1) | விவரம். (2) | அளவு. (3) (கிலோ கிராமில்) | வருவாய். (4) (ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1980–81 (உள்ளபடி) | உள்நாட்டு விற்பனை | 1,792 | 14·56 |
| | வெளிநாட்டு விற்பனை | 1,600 | 17·42 |
| | மொத்தம் .. | 3,392 | 31·98 |
| 1981–82 (உள்ளபடி) | உள்நாட்டு விற்பனை | | |
| | குனைன் சல்பேட் மற்றும் குனைன் ஹைட்ரோ குளோரைடு. .. .. | 1,746 | 15·20 |
| | உள்நாட்டு விற்பனை சின்கோனா அல்கலாய்டு | 9,010 | 0·55 |
| | மொத்தம் .. | 10,756 | 15·75 |
| 1982–83 (உள்ளபடி) | உள்நாட்டு விற்பனை .. | 507 | 4·61 |
| | வெளிநாட்டு விற்பனை .. | .. | .. |
| | மொத்தம் .. | 507 | 4·61 |
| 1983–84 | உள்நாட்டு விற்பனை* .. | 611·070கி.கி. | 4·67 |
| | வெளிநாட்டு விற்பனை**. | 1900·000 | 14·48 |
| | | 2511·070 | 19·15 |

| | உள்நாட்டு விற்பனை. | வெளிநாட்டு விற்பனை. |
|---|---|---|
| குனைன்சல்பேட் .. | 569·970கி.கி. | 19,00கி.கி. |
| குனிடின் சல்பேட் .. | 5·100 | |
| சின்கோனா பெப்ரிபியூஜ் | 36·000 | |
| | 611·070 | 1900கி. |



1984 ஏப்ரல் 16]

| | | | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1984–85 | (எதிர்பார்க்கப்படுகிறது) உள்நாட்டு விற்பனை* | 1,000கி.கி. | 8·00 |
| | வெளிநாட்டு விற்பனை** | 3,000கி.கி. | 25.00 |
| | | 4,000கி.கி. | 33·00 |

| | உள்நாட்டு விற்பனை.* (கிலோ கிராம்.) | வெளிநாட்டு விற்பனை.** (கிலோ கிராம்.) |
|---|---|---|
| குனைன் சல்பேட் .. | 1,000 | 2,000 |
| குனைன் ஹைட்ரோ குளோரைடு. | .. | 1,000 |
| மொத்தம் .. | 1,000 | 3,000 |

தற்போது (1–3–1984) நாளன்று இருப்பிலுள்ள கொய்னாப் பொருட்கள் அவற்றின் மதிப்பு ஆகிய விவரங்கள் பின்வருமாறு.—

| | | (விலைகள் கிலோ கிராம் ஒன்றிற்கு ரூபாய்.) | | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|---|
| 1. | குனைன் சல்பேட் | 36,55.893 | ×788 | 28.81 |
| 2. | குனைன் ஹைட்ரோ குளோரைடு. | 20,50.020 | ×1,088 | 22.30 |
| 3. | சின்கோனா பெப்ரிபியூஜ். | 945.000 | ×215 | 2.03 |
| 4. | குனிடின் சல்பேட் | 1960 | ×1,313 | 0.03 |
| 5. | சின்கோனா ஆல்கலாய்டு. | 60,00.000 | ×6 | 0.36 |
| 6. | குனைன் சல்பேட் மாத்திரைகள். | 27,500 எண்கள். | | 0.07 |
| | | மொத்தம் .. | | 53.60 |

குறிப்பு.—இருப்பிலுள்ள எல்லா கொய்னாப் பொருட்களும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் 1983–84 மற்றும் 1984–85-ம் ஆண்டுகளில் விற்கப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. 1984–85-ம் ஆண்டில் வெளிநாட்டு ஏற்றுமதிக்கான

கொய்னாப் பொருட்களின் தேவை அதிகரிக்கலாம் என எதிர் பார்க்கப்படுகிறது. வெளிநாட்டு சந்தையில் கொய்னாப் பொருட் களின் தேவை மற்றும் அவற்றின் விலைகளில் சரிவு ஏற்பட்டமை யால் அவற்றின் உற்பத்தி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட் டுள்ளது. 1983–84 மற்றும் 1984–85 ஆம் ஆண்டுகளில் தேசிய மலேரியா ஒழிப்பு திட்ட நிறுவனத்திடமிருந்து கொய்னாப் பொருட்களுக்கான தேவை ஏதுமில்லை.

2.3. கொய்னாப் பொருட்களின் விற்பனை விலையை, மருந்துகள் விலை கட்டுப்பாட்டு ஆணையின்படி மைய அரசு நிர்ணயிக்கிறது. இவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட விலை கொய்னாப் பொருட்களின் உற்பத்தி விலையை விட குறைவாக உள்ளதால் விற்பனை விலையை உயர்த்த வேண்டுமென்று மாநில அரசு மைய அரசைக் கேட்டுள்ளது. இது மைய அரசின் ஆய்வில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| பொருட்களின் பெயர். | உற்பத்தி விலை (1982–83). | மைய அரசு நிர்ணயித்துள்ள விலை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (விலைகள் கிலோ கிராம் ஒன்றிற்கு ரூபாய்.) | |
| 1. குனைன் சல்பேட் .. .. (Quinine Sulphate) | 914.79 | 788.00 |
| 2. குனிடின் சல்பேட் .. .. (Quinidine Sulphate) | 3.552.14 | 1,313.00 |
| 3. குனைன் ஹைட்ரோ குளோரைடு (Quinine Hydro Chloride) | உற்பத்தி இல்லை. | 1,088 |
| 4. சின்கோனா பெப்ரிபியூஜ் .. (Cinchona Febrifuge) | 112.53 | |

**மருந்து மற்றும் நறுமணத் தைலங்கள்**

2.4. மருந்து மற்றும் நறுமணத் தைலங்கள் ஆகியவற்றின் வாயிலாக கிடைக்கும் வருவாய் சீராக அதிகரித்து வருகிறது. தற்போதுள்ள நிலையிலேயே வருவாய் விகிதத்தையும் அவற்றின் வளர்ச்சி வேகத்தையும் நிலைநிறுத்த முற்பட்டு வருகிறது.

பொதுமக்கள் விரும்புகின்ற சின்பிரஸ், சினோமாஸ் போன்ற புதிய பொருட்களை தனியார் ஏஜன்சி மூலமாக விளம்பரப்படுத்தி துறையின் விற்பனையை விரிவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும் மருந்து மற்றும் நறுமணத் தைலங்களின் விற்பனையை விரிவாக்க ''ஸ்பிக்'' நிறுவனத்துடன் இணைந்து சந்தை நிலவரம் பற்றி அறிந்து செயல்பட இத்துறை உத்தேசித்துள்ளது.



100 கிராம் எடையுள்ள 56,000 குழாய்களில் ''சினோமாஸ்'' களிம்பு தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டத் திற்கு 1982–83ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது. மருந்து மற்றும் நறுமணத் தைலங்களின் தேவை மக்களிடையே ஒரே சீராக இருந்து வருகிறது. அதன் விளைவாக ரூ. 10,195 மதிப் புள்ள துறையின் பொருட்கள் தமிழகமெங்குள்ள 55 தமிழ்நாடு காதி கிராப்ட் விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப் பட்டுள்ளது. 1983–84 மற்றும் 1984–85ஆம் ஆண்டுகளிலும் ரூ. 25,000 மதிப்புள்ள பொருட்கள் விற்பனையாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1982–83ஆம் ஆண்டில் ரூ. 40,455 மதிப்புள்ள பொருட்கள் மதுரை, கும்பகோணம், திருநெல்வேலி, சேலம், கோயமுத்தூர் மற்றும் சென்னை ஆகிய இடங்களில் நடைபெற்ற தமிழ்நாடு அரசின் சுற்றுலா மற்றும் தொழில் கண்காட்சிகளில் விற்பனை செய்யப்பட்டது. தமிழகத்தின் வெவ்வேறு மாவட்டங்களில் ஆங்காங்கு இனிமேல் நடைபெறும் கண்காட்சிகளில் இத்துறை பங்கேற்று துறையில் தயாரிக்கப்படும் பொருட்களை விளம்பரம் செய்தும், விற்பனை செய்தும் வருவாய் ஈட்டப்படும்.

1981–82ஆம் ஆண்டிலிருந்து மருந்து மற்றும் நறுமணத் தைல விற்பனை மூலம் துறைக்கு கிடைத்த வருவாயின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1981–82 (உள்ளபடி) .. .. | | 17.34 |
| 1982–83 (உள்ளபடி) .. .. | | 25.74 |
| 1983–84 (பிப்ரவரி 1984 முடிய)— | | |
| மருந்து மற்றும் நறுமணத் தைலங்கள். | 7,655 கி. கி. | 25.83 |
| சின்பிரஸ் | 36,162 லிட்டர்கள். | 2.27 |
| 1984–85 (எதிர்பார்க்கப்படுவது)— | | |
| மருந்து மற்றும் நறுமணத் தைலங்கள், | 11,665 கி.கி. | 35.35 |
| சின்பிரஸ் | 40,000 லிட்டர்கள். | 2.40 |

[1984 ஏப்ரல் 16

துறையில் தயாரிக்கப்படும் பொருட்களின் விவரங்கள் பின்வருமாறு :—

| | பொருட்களின் பெயர். | 1981–82 (உள்ளபடி). | 1982–83 (உள்ளபடி). | 1983–84 (திருத்திய மதிப்பீடு), | 1984–85 (திட்ட மதிப்பீடு). |
|---|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (அளவுகள் கிலோகிராமில்) | | | |
| 1. | யூகலிப்டஸ் தைலம் (சினியொல் அளவு 70 சதவீதத்திற்கு மேல்). | 1,393 | 1,735 | 1,500 | 1,500 |
| 2. | யூகலிப்டஸ் தைலம் ஐ.பி. | 2,056 | 2,550 | 2,500 | 2,500 |
| 3. | ஜெரேனியம் தைலம். | 1,533 | 2,453 | 2,870 | 2,920 |
| 4. | யூகலிப்டஸ் சிட்ரியோடோரா தைலம். | 3,304 | 3,046 | 3,030 | 3,790 |
| 5. | ஜாவா சிட்ரோனல்லா தைலம். | 1,861 | 2,819 | 5,800 | 8,850 |
| 6. | லெமென்கிராஸ் தைலம் | 45 | 9 | 10 | 10 |
| 7. | பச்சோலி தைலம். | 3 | 1 | 5 | 5 |
| 8. | விண்டர் கிரீன். தைலம் | 30 | .. | 10 | 10 |
| 9. | சின்னமமம் தைலம். | 10 | 3 | 5 | 5 |
| 10. | தொட்டபெட்டா மிஸ்ட். | .. | 17 | 20 | 20 |
| 11. | சினோரமா | .. | 14 | 15 | 15 |
| 12. | சினோமாஸ் | 539 | 5,583 | 5,000 | 5,000 |
| 13. | சின்ஸ்ப்ரே (லிட்டர்களில்). | 438 | 2,300 | 2,500 | 2,500 |
| 14. | சின்பிரஷ் (லிட்டர்களில்) | 33,500 | 37,560 | 40,000 | 40,000 |



1984 ஏப்ரல் 16]

## கற்பூரத் தைலம், கற்பூர வில்லைகளின் தயாரிப்பு

2.5. சின்கோனாத் துறையின் பல்திறத் திட்டத்தின் ஒரு பகுதியாக, நீலகிரி மாவட்டம் நடுவட்டம் என்னுமிடத்திலுள்ள மருந்து மற்றும் நறுமணத் தைலங்கள் தயாரிக்கும் தொழிற்சாலையில் 1980–81ஆம் ஆண்டு முதற்கொண்டு கற்பூரத் தைலம் மற்றும் கற்பூர வில்லைகள் தயாரிக்கப்படுகின்றன. இவைகளின் உற்பத்தி நிறைவளிக்கும் வகையில் உள்ளது. இதனை கீழ்வரும் அட்டவணையில் காணலாம்:—

| | உற்பத்தி. | விலை மதிப்பு. | விற்பனை. | வருவாய். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| 1983–84 (பிப்ரவரி 1984 முடிய) கற்பூரத் தைலம் (கிலோ கிராமில்). | 65 | 0.06 | 139 | 0.18 |
| கற்பூர வில்லைகள் (எண்களில்). | 73,485 | 0.03 | 1,37,300 | 0.07 |
| 1984–85 (எதிர் பார்க்கப்படுவது)— | | | | |
| கற்பூரத் தைலம். (கிலோகிராமில்). | 250 | 0.25 | 200 | 0.01 |
| கற்பூர வில்லைகள் (எண்களில்). | 2,00,000 | 0.10 | 2,00,000 | 0.25 |

2.6 மாநிலத்தின் இந்து-சமய அறக்கட்டளை துறையின் கீழ் இயங்கிவரும் திருக்கோயில்களுக்கு இத்துறையில் தயாரிக்கப்படும் கற்பூரவில்லைகள் விநியோகம் செய்யப்படுகிறது. துறையில் தயாரிக்கப்படும் இந்த இயற்கை கற்பூரம் நல்ல தரத்தைச் சேர்ந்தது.

## 3. மலைத் தோட்டங்கள்

3.1. பல்வேறு உற்பத்தி பொருட்களைத் தயாரிக்கத் தேவையான மூலப்பொருட்களைப் பெற இத்துறையின் மலைத் தோட்டங்களில் ஆப்பயிர்களைப் பயிரிடுவதற்கு பல்வேறு பணிகளை இத்துறையே மேற்கொண்டுள்ளது. 31–12–1983ஆம் நாளன்றின்

படி, 2,171.03 ஹெக்டேர் பரப்புள்ள சின்கோனா நிலங்களையும் மற்றும் 1,575.72 ஹெக்டேர் பரப்புள்ள மருந்து மற்றும் நறு மணத் தைல வகைப் பயிர்கள் கொண்ட நிலங்களையும் இத்துறை தனது நேரடி மேற்பார்வையில் கொண்டுள்ளது. அவற்றின் விவரம் பின்வருமாறு :—

| பயிர்கள். | நீலகிரி. | கோயமுத்தூர் மாவட்டத்திலுள்ள ஆனைமலை. | மதுரை மாவட்டத்திலுள்ள கொடைக்கானல். | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| (நிலப் பரப்பு ஹெக்டேர்களில்) | | | | |
| சின்கோனா | 512.32 | 1,658.71 | .. | 2,171,03 |
| மருந்து மற்றும் நறுமணத் தைலப் பயிர்கள். | 915.77 | 414.70 | 245.25 | 1,575.72 |
| மொத்தம் | 1,428.09 | 2,073.41 | 245,25 | 3,746.75 |

## 4. மலைத் தோட்ட திட்டங்கள்

4. 1. 1983–84ஆம் ஆண்டில், 100 ஹெக்டேர் நிலப்பரப்பில் புதிதாகவும் 20 ஹெக்டேர் நிலப்பரப்பில் பதியன் முறையிலும் சின்கோனா பயிரிடப்பட்டது, ஏற்கெனவே இருப்பிலுள்ள கொய்னாப் பொருட்களை விற்பனை செய்யும் வாய்ப்பு திருப்திகரமாக இல்லாமையால் 1984–85-ஆம் ஆண்டில் சின்கோனா புதிதாக பயிர் செய்யும் பணி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது. 1984–85 ஆம் ஆண்டில் பயிர் செய்யும் பருவக் காலம் தொடங்குமுன் வேறு நிலையான பயிரை சாகுபடி செய்வது பற்றி முடிவு செய்யப்படும். 1982–83ஆம் ஆண்டில் 216.50 ஹெக்டேர் நிலப் பரப்பில் மருந்து மற்றும் நறுமணத் தைலப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டன. அது 1983–84ஆம் ஆண்டில 173 ஹெக்டேர் நிலப்பரப்பிலும் 1984–85ஆம் ஆண்டில் 164ஹெக்டேர் நிலப்பரப்பிலும் சாகுபடி செய்யப்படும்.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஜாவா சிட்ரோனெல்லா புல் என்னும் நறுமணத் தைலப் பயிர் நீலகிரி மாவட்டத்திலுள்ள கூடலூர் தாலுக்காவில் சாகுபடி செய்யும் பணி மேற் கொள்ளப்பட்டது. இத்திட்டம் 1980ஆம் ஆண்டு, அக்டோபர் திங்களில் ஆரம்பிக்கப்பட்டது. 1983–84ஆம் ஆண்டில் 40 ஹெக்டேர் நிலப் பரப்பில் இப்பயிர் சாகுபடி செய்யப்பட்டது. 1984–85ஆம் ஆண்டில் இப்பயிர் 40 ஹெக்டேர் நிலப்பரப்பில் சாகுபடி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.



## 5. ஆராய்ச்சி

5.1. அதிக விளைச்சலைக் கொடுக்கக் கூடிய மருந்து மற்றும் நறுமணத் தைலப் பயிர்களையும் ஏனைய மருந்து மற்றும் நறு மண செடிவகைகளையும் வளர்க்கும் முறைகளை மேம்படுத்து வதில் ஆராய்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சின்கோனா மருந்து மற்றும் நறுமணத் தைலப் பயிர்கள் ஆகிய வற்றைக் குறித்து முறையான தீவிர ஆராய்சிகள் நடத்தும் நிலையம் ஒன்று 1976ஆம் ஆண்டு முதல் செயலாற்றி வருகிறது. 1982ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1ஆம் நாள் முதல் ஆராய்ச்சி அலுவலர் அமர்த்தப்பட்டு பணியாற்றி வரு கிறார். 1981–82ஆம் ஆண்டில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்துடன் இணைந்து சின்கோனா மருந்து மற்றும் நறுமணத் தைலப்பயிர்களை பயிரிடுதல் குறித்து ஆராய்சிகள் தொடங்கப்பட்டு அப்பணி முன்னேற்றமாக உள்ளது. இவ்வா ராய்சிப் பணிகளுக்காக செலவிடப்படும் தொகையை, தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகமும் சின்கோனாத் துறை யும் சமமாக ஏற்றுக்கொள்ளும். குனைனிலிருந்து குனிடின் தயாரிப்பது பற்றிய ஆராய்ச்சிப் பணி லக்னோவிலுள்ள மத்திய மருந்தாய்வுப் கூடத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த மத்திய மருந்தாய்வுக் கூடம் மேற்சொன்ன ஆராய்ச்சிப் பணியை 1982ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1ஆம் நாள் முதல் செய்து வருகிறது.

## 6. தொழிலாளர் நலன்

6.1. தொழிலாளர்கள் இத் துறையின் உற்பத்தி பணிகளில் பெரும் பங்காற்றி வருகின்றனர். மலைத் தோட்டங்கள் அமைக்கும் திட்டங்கள் ஆகியவை செவ்விய வகையில் செயற் படுவதில் நிர்வாகத்திற்கும் தொழிலாளர்களுக்குமிடையே நல்லுறவு நிலவுவதற்கும் தொழிலாளர் நலனைக் காப்பதற்கும் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. ஆடவர் மகளிர் ஆகிய இருபால் தொழிலாளர்களுக்கும் சமமான ஊதியம் வழங்கப் படுகிறது. விலைவாசிப் புள்ளியின் அடிப்படையில் அகவிலைப் படி வழங்கப்படுகிறது. வயது வந்த தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு கூலியாக ரூ. 9.78 வழங்கப்படுகிறது. 1,281 தரமான தொழிலாளர் குடியிருப்புகள் தற்போதுள்ள தொழி லாளர்களுக்கு வேண்டியுள்ளது. இதனை கருத்திற்கொண்டு புதிய குடியிருப்புகளைப் புதுப்பித்தல் கட்டுவது மற்றும் பழைய குடியிருப்புகளை புதுப்பித்தல் போன்ற பணிகளை முறையாக மேற்கொண்டு முடிக்கப்பட்டு வருகிறது. 1983–84ஆம் ஆண்டில் 50 புதிய தொழிலாளர் குடியிருப்புகள், 2 பணியாளர் குடியிருப்பு கள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் ரூ. 2 இலட்சம் செலவில் 75 தொழிலாளர் குடியிருப்பு களுக்கு மின்வசதி செய்து கொடுக்கும் பணியை 1983–84ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1984–85ஆம் ஆண்டில் 25 தொழிலாளர் குடியிருப்புகள் கட்ட ரூ. 7 இலட்சம்

மற்றும் 25 குடியிருப்புகளுக்கு மின்வசதி பொருத்த ரூ. 50 ஆயிரம், பகுதி 2 திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. இதுவரை 386 தரமான தொழிலாளர் குடி யிருப்புகளை இத்துறை கட்டி முடித்துள்ளது. மேலும் 225 குடியிருப்புகள் கட்டும் பணி செவ்வனே நடைபெற்று வரு கிறது. புதிய தொழிலாளர் குடியிருப்புகளில் மின்வசதி, நீரடிக் கழிப்பிட வசதி, பாதுகாக்கப்பட்ட குடிநீர் ஆகிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. பல்வேறு பிரிவு களிலுள்ள துறையின் மருந்தகங்கள் மற்றும் ஆனைமலை பிரிவிலுள்ள அனைத்து வசதிகளுடன் கூடிய மருத்துவ. மனை ஆகியவற்றின் வாயிலாக மருத்துவ வசதிகளும் இத்துறையின் தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன. நீலகிரியில் கூடலூரிலுள்ள அரசு மருத்துவ மனையில் சின் கோனாத் தொழிலாளர்களுக்கென்றே 5 படுக்கைகள் தனியாக ஒதுக்கப்பட்டுள்ளன. ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களின் நடமாடும் பிரிவு தொழிலாளர்க்குத் தேவையான நல்வாழ்வு மருத்துவ வசதிகளைச் செய்து கொடுக் கின்றன.

இத்துறையில் பணியாற்றும் தொழிலாளர்களின் குழந்தைகள் அரசினர் சின்கோனாத் தோட்டத்திலுள்ள குழந்தைகள் காப்பகத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். அக் குழந்தைகளின் உணவளிக்கும் தொகையை அரசு கீழுள்ளவாறு அதிகரித்துள்ளது.

இரண்டு அதற்கும் மேல் வயதுள்ள குழந்தைகளுக்கு நாளொன்றுக்கு ரூ. 0.50 பைசாவாக உள்ளதை ரூ. 1-க்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இரண்டு வயதுக்கு குறைவாக உள்ள குழந்தைக்கு நாளொன்றுக்கு ரூ. 0.30 பைசாவிலிருந்து 0.80 பைசாவிற்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

**7. துறையின் நிதி நிலைமை**

7,1. அனைத்து நாடுகள் சந்தைகளில் விலை ஏற்ற இறக்கம், மற்றும் கொய்னாப் பொருட்களின் ஏற்றுமதிக்கு இந்திய அரசு விதித்த தடை ஆகியவற்றின் விளைவாக இத்துறையின் பொருளாதாரம் பெருமளவில் பாதிக்கப் பட்டது. 1981-82ஆம் ஆண்டில் மூலதனத்தின் மீதான வட்டித் தொகை ரூ. 56.18 இலட்சங்கள் செலுத்தப்பட்ட பிறகு ரூ. 15.59 இலட்சங்கள் இழப்பு ஏற்பட்டுள்ளது. 1982-83ஆம் ஆண்டில் மூலதனத்தின் மீதான வட்டித் தொகை ரூ. 76.73 இல்ட்சங்கள் செலுத்தப்பட்ட பிறகு. ரூ. 25.80 (1982-83ஆம் ஆண்டின் அமைந்தப் படிவ கணக்கு களின்படி) இலட்சங்கள் துறைக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. 1983-84ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீட்டின்படி மூலதனத் தின் மீதான வட்டி ரூ. 93.50 இலட்சங்கள் செலுத்திய பின்னர்





ரூ. 20.07 இலட்சங்கள் (மதிப்பிடப்பட்டது) இழப்பாகவும் 1984-85ஆம் ஆண்டின் திட்ட மதிப்பீட்டின்படி மூலதனத்தின் மீதான வட்டி ரூ. 111.35 இலட்சங்கள் செலுத்திய பின்னர் 20.22 இலட்சங்கள் (மதிப்பிடப்பட்டது) இழப்பு ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1983ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாளின்படி நிலையான சொத்துக்கள் ரூ. 6.75 கோடி. பண்டகசாலை இருப்புகள், முடிக்கப்பட்ட பொருட் கள், நடைபெற்று வரும் பணிகள், சில்லறை கடன்கள் ஆகியவற்றின் வாயிலாக ரூ. 4.30 கோடி உட்பட இத்துறை யின் சொத்துக்கள் மதிப்பு ரூ. 11.05 கோடியாகும்.

**8. இத்துறையின் வளர்ச்சி திட்டங்கள்**

8.1. சின்கோனாப் பெப்ரிபியுஜியிலிருந்து குன்னன் சல்பேட், குனிடின் சல்பேட் ஆகியவற்றை தயாரித்தல், தேயிலை கழிவிலிருந்து ''கபீன்னை'' (Caffeine) தயாரித்தல் போன்ற பணிகள் இத்துறையின் அண்மைக் கால முக்கிய சாதனை களாகும். 1983-84ஆம் ஆண்டில் 2,500 கி.கி. எடையுள்ள '' கபீன் '' தயாரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. குடும்ப நலத் திட்டத்திற்காகத் தயாரிக்கப்படும் கருத்தடை மாத்திரை களில் உள்ள கார்டிசான் ஸ்ட்ராயிட் ஹார்மோன் போன்ற வற்றைத் தயாரிக்கத் தேவைப்படும் மூலப் பொருளான '' டயஸ்ஜெனின் '' என்ற பொருளை தயாரித்தல், கொசுக் களை விரட்டும் '' சினோமாஸ் '' என்ற களிம்பையும் '' சின்ஸ்ப்ரே '' என்ற தெளிப்பான் மருந்தையும் தரையைத் தூய்மையாகப் பயன்படுத்தும் கிருமிநாசினி '' சின்பிரஷ் '' என்ற தெளிப்பான் மருந்தையும் தயாரித்து விற்பனை செய்தல் '' சினோரமா '' '' தொட்டபெட்டாமிஸ்ட் '' ஆகிய வாசனை திரவியங்களை தயாரித்தல் போன்றவை உற்பத்தியைப் பல திறப்படுத்தும் இத்துறையின் பணிகளாகும்.

8.2. தற்போது கையிருப்பிலுள்ள கொய்னாப் பொருட் களின் அளவைக் கருத்திற்கொண்டு ஆனைமலையிலுள்ள கொய்னா தொழிற்சாலையில் சின்கோனாப் பட்டை பத மிடப்படும் பணி தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. இப்போது கையிருப்பிலுள்ள கொய்னாப் பொருட்கள் யாவும் விற்பனை செய்த பின்னர், உற்பத்திப் பணி மீண்டும் தொடரப் படும்.

இதற்கிடையே நீலகிரி, கோயம்புத்தூர், மற்றும் பெரியார் மாவட்டங்களில் முதலமைச்சரின் சத்துணவு வழங்கும் திட்டத்தின் கீழ் கிராமிய குழந்தைகளுக்கு இலவசமாக பற்பொடி வழங்குவதற்காக பற்பொடி தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. பற்பொடி தயாரிக்கும் பணி மற்றும் அதை விநியோகம் செய்யும் பணிகள் 1983ஆம் ஆண்டு மார்ச் திங்களிலிருந்து மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1983ஆம் ஆண்டு நவம்பர் மாத இறுதிவரை ரூ. 14,03,325 மதிப்புள்ள 30 கிராம் எடையுள்ள 33,41,250 பாக்கெட்டுகளில் பற்பொடி தயாரிக்கப்பட்டு மேற்சொன்ன மாவட்டங்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

### மாநிலத் திட்டப் பணிகள்

(1) சின்கோனாப் பயிரை முனைப்பு சாகுபடி மற்றும் பதியன் முறையில் பயிரிடுதல்.

(2) மருந்து மற்றும் நறுமணத் தைலச் செடி வகைகளை வாணிப முறையில் பயிரிடுதல்.

(3) மருந்து மற்றும் நறுமணத் தைலச் செடி வகைகளின் வளர்ச்சிக்காக முனைப்பு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளுதல்.

(4) இத்துறையின் தோட்டப் பிரிவுகளுக்கான அலுவலக கட்டிடம் மற்றும் தொழிலாளர் குடியிருப்புகள் கட்டுதல்.

(5) தொழிற்சாலையின் உற்பத்தியைப் பெருக்குவதற்காக தொழிற்சாலைக்குத் தேவையான கருவிகள் வாங்குதல்.

(6) தேயிலை கழிவிலிருந்து '' கபீன் '' தயாரித்தல்.

### மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் ஜாவா சிட்ரோனல்லா புல் பயிரிட்டு அதனின்று தைலம் எடுத்தல் பணி செயல்படுத்தப்படுகிறது. 1983-84ஆம் ஆண்டு வரை 80 ஹெக்டேர் நிலப்பரப்பில் இப்பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

### மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம்

மத்திய அரசு பொறுப்பேற்கும் மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சில பயனளிக்கும் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அவைகள் வருமாறு:—

(1) டயஸ்கோரியா பயிரிடுதல், அதிலிருந்து ஆண்டொன்றுக்கு 3 டன் டயஸ்ஜெனின் தயாரித்து பதப்படுத்துவதற்குத் தொழிற்சாலை நிறுவுதல். இதுவரை 115.50 ஹெக்டேர் நிலப் பரப்பில் டயஸ்கோரியா பயிரிடப்பட்டுள்ளது. 1983-84ஆம் ஆண்டில் 20 ஹெக்டேரில் டயஸ்கோரியா பயிரிடப்பட்டுள்ளது. ஸ்டிராய்டு தொழிற்சாலையில் இயந்திர தளவாடங்கள் யாவும் பொருத்தப்பட்டுள்ளன. டயஸ்ஜெனின் உற்பத்தி செய்யும் பணி வரும் 1984-85ஆம் ஆண்டு முதல் தொடங்கப்படும்.

(2) பேரிஜம் மற்றும் பெருமாள் மலை (பெரும்பள்ளம்) ஆகிய இடங்களில் ஜெரேனியம் பயிரிடுதல்.



9. திட்டப் பணிகளின்கீழ் செலவிடப்பட்டுள்ள மொத்தத் தொகையின் விவரம் வருமாறு :—

| ஆண்டு. | மாநிலத் திட்டப் பணிகள். | மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம். | மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம். | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| 1981-82 (உள்ளபடி) | 67.65 | 4.17 | 32.28 | 104.10 |
| 1982-83 (உள்ளபடி) | 43.52 | 3.86 | 28.97 | 76.35 |
| 1983-84 (உள்ளபடி) (திட்ட மதிப்பீடு) | 56.23 | 5.21 | 48.83 | 110.27 |
| 1983-84 (திருத்திய மதிப்பீடு) | 49.47 | 5.11 | 32.64 | 87.22 |
| 1984-85 (திட்ட மதிப்பீடு) | 50.55 | 9.22 | 43.13 | 102.90 |

10. வரவு-செலவுத் திட்டங்கள்

| விவரங்கள். | 1982-83 உள்ளபடி. | 1983-84 வரவு-செலவு திட்ட மதிப்பீடு. | 1983-84 திருத்திய மதிப்பீடு. | 1984-85 வரவு-செலவு திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| கோரிக்கை எண் 25 சின்கோனா—320 தொழில்கள். | | | | |
| நெறிமுறைபடுத்தல். | 14.65 | 14.20 | 14.03 | 14.27 |
| மலைத் தோட்டங்கள் (நீலகிரி ஆனைமலை). | 71.91 | 67.67 | 65.60 | 64.72 |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| தொழிற்சாலைகள் (மருந்து மற்றும் நறுமணத் தைலத் தொழிற்சாலை நடுவட்டம்- அரசு கொய்னாத் தொழிற்சாலை ஆனைமலை). | 15.16 | 14.57 | 21.84 | 26.09 |
| விற்பனை— | 2.42 | 1.89 | 2.10 | 2.52 |
| திட்டங்கள் (ஆராய்ச்சி திட்டங்கள் மாநில திட்டங்கள் மத்திய அரசு திட்டங்கள்) | 88.84 | 88.75 | 83.44 | 88.95 |
| வட்டி | 83.52 | 88.68 | 93.50 | 111.35 |
| மொத்தம் 320 தொழில்கள். | 276.50 | 275.76 | 280.59 | 307.90 |

கோரிக்கை எண் 55— 526. மூலதனச் செலவு.

| | | | | |
|---|---|---|---|---|
| கட்டிடங்கள் | 11.29 | 44.00 | 23.75 | 34.57 |
| இயந்திர தளவாடங்கள் | 0.10 | 2.00 | 2.00 | 2.09 |
| மொத்தம் 526 மூலதன செலவு. | 11.39 | 46.00 | 25.75 | 36.57 |
| பெரு மொத்தம். | 287.89 | 321.76 | 306.34 | 344.47 |



## இணைப்பு II.

(136-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.)

### வனத் துறை.

### கொள்கை விளக்கக் குறிப்பு.

### 1984–85

1.1. நமது காடுகள் புதுப்பிக்கப் புதுப்பிக்க புத்துயிர் பெற்றிடும் தன்மையுடைய ஒரு உன்னதமான சொத்தாகும். நாட்டுமக்களின் பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார ரீதியான அன்றாட தேவைகளாயினும், நீண்டகாலத் தேவைகளாயினும், அவைகளை, நிறைவு செய்யும் நோக்கத்தோடு இக்காடுகள் நிர்வகிக்கப்படுதல் வேண்டும். எனவே, காடுகளின் நிர்வாகம் கீழே குறிப்பிடப்படும் நோக்கங்களை அடையும் பொருட்டு செயல்படுத்தப்படும்:—

(அ) தட்ப வெட்ப நிலையினைக் கட்டுப்படுத்தல்.

(ஆ) மண்வளம், நீர்வளம் உயிரினம் ஆகிய தினைவளம் காத்தல்.

(இ) மக்கள் நுகரும் பொருட்டு எரிபொருள், தடிமரம், கால்நடைத் தீவனம், எண்ணெய் வித்துக்கள், பழங்கள் போன்ற பொருட்களை பெரும் அளவில் தொடர்ந்து வழங்கல்.

(ஈ) தொழில்துறைகளுக்குத் தேவையான மூலப்பொருட்களை உற்பத்தி செய்தல்.

(உ) பொழுதுபோக்கு மையங்களை ஏற்படுத்தல்.

(ஊ) வேலை வாய்ப்புக்களைப் பெருக்குதல்.

(எ) கலாச்சார மரபினைக் காத்தல்.

காடுகளை நல்ல முறையில் நிர்வாகம் செய்வதால் இது போன்ற பல்நோக்குப் பலன் உண்டு என்பதனைக் கருத்தில் கொண்டு, கொள்கை வகுக்கும் எந்தத் தருணத்திலும் வன நிர்வாகம் முக்கிய பங்கு பெறுவது அவசியமாகிறது.

1.2. இந்த ஒரு பின்னணியில், சமூகத்திற்கு நல்ல ஒரு சேவையினையும், பொருளாதார மேம்பாட்டினுக்கு வேண்டிய மூலப் பொருட்களையும் தரத்தக்க வகையில் உற்பத்தி திறனை பெருக்கி காடுகளைக் காக்க நல்லதொரு நீண்டகால

[1984 ஏப்ரல் 16

நோக்கோடு கொள்கையினை வகுத்து தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. இக்கொள்கை காரணமாக, காடுகளின் நிர்வாக நடவடிக்கைகள் கீழ்க்கண்டபடி அமைந்துள்ளது :—

(அ) காடுகளின் பரப்பளவை முடிந்த அளவு பெருக்குதல்.

(ஆ) வன விலங்குகளைக் காத்தல்.

(இ) புதிய காடு வளர்ப்புப் பணிகளை பெரும் அளவு கிராமப் புறப்பகுதிகளில் மேற்கொண்டு (சமூக நலக்காடுகள்), கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்புக்களைப் பெருக்குவதோடு வனச் செல்வத்தினையும் அதிகரித்தல்.

(ஈ) வனப்பகுதிகளில் வாழும் மலைவாழ் மக்களுக்கு வாழ்க்கை வசதிகளை அமைத்துத் தரும் பணியினை செவ்வனே செயல்படுத்தல்.

(உ) எரிபொருள், தடிமர உற்பத்தியினை கணிசமாக பெருக்குதல்.

(ஊ) தரம் தாழ்ந்த புதர்க்காட்டு நிலங்களில் அடர்த்தியான காடுகளாக செழுமை கூட்டும் பொருட்டு மரம் வளர்த்தல்.

(எ) தமிழகத்தில் வன ஆதாரங்களை நம்பி துவக்கப்பட்டுள்ள தொழில்களின் வளர்ச்சிக்குத் தேவையான மூலப் பொருட்களை வழங்குதல்.

(ஏ) சந்தனம், ரப்பர், தேயிலை, முந்திரி, புளி போன்ற காடுபடு பொருட்களை வர்த்தக ரீதியாக நிர்வகித்தல்.

(ஐ) வேளாண்மைப் பணியினை மரம் வளர்க்கும் பணியோடு இணைக்க ஊக்கம் தருதல்.

(ஒ) வனவளம் குறைக்கப்படுவதையும், அழிக்கப்படுவதையும் தடுக்க வன அமைப்புகளை நவீன முறையில் சீரமைத்தல்.

(ஓ) முக்கியமான ஆறுகளின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் குறிப்பாக வனப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புப் பணிகளை செய்வதற்கென தனி வனக் குழுக்களை ஏற்படுத்தல்.

**வனப் பரப்பு**

2. 1982–83ஆம் ஆண்டில் மொத்த வனப் பரப்பு 21.95 லட்சம் எக்டேராக இருந்தது. 1983–84ஆம் ஆண்டின் மொத்த வனப் பரப்பு 22.04 லட்சம் எக்டேர். காப்பு வனம் 18.24 லட்சம் எக்டேரும், காப்பு நிலங்கள் 3.24 லட்சம் எக்டேரும், பாகுபடுத்தப்படாத காடுகள் 0.56 லட்சம் எக்டேரும் ஆகும்.



1984 ஏப்ரல் 16]

**காடுகளில் இருந்து கிடைக்கும் வருவாயும், காடுகள் தொடர்பான செலவினங்களும்**

3.1. 1983–84ஆம் ஆண்டில் இறுதியாக காடுகளின் மூலம் 21.38 கோடி ரூபாய் வருவாய் கிட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. 1984–85ஆம் ஆண்டு இந்த வருவாய் 23.79 கோடி ரூபாயாக உயருமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வருவாயில் பெரும்பகுதி சந்தன மரத்திலிருந்தும், காடுபடு பொருட்களை அடிப்படையாகக் கொண்டு இயங்கி வரும் தொழில்களுக்கு மூலப் பொருட்களை வழங்குவதன் மூலம்தான் கிடைக்கிறது.

3.2. 1982–83ஆம் ஆண்டு காடுகள் தொடர்பாக ஆன செலவு 25.61 கோடி ரூபாய். 1983–84ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி 25.78 கோடி ரூபாய் செலவிடப்பட ஒதுக்கப்பட்டது. திருத்திய மதிப்பீட்டின்படி 1983–84ஆம் ஆண்டு 29.51 கோடி ரூபாய் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1984–85ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி 29.13 கோடி ரூபாய் செலவாகும். செலவில் பெரும்பகுதி காடுகளின் உற்பத்திப் பொருட்களை அதிகரிக்க வேண்டுமென்ற நோக்குடன் காடுகளின் மேம்பாட்டிற்காகச் செய்யப்படும் மூலதன முதலீடு குறித்ததாகும். வெட்டுமரம், விறகு மரம், தொழில்களுக்கான மரம், ஏனைய இன்றியமையாத உற்பத்திப் பொருள்கள் ஆகியவற்றின் தேவைகளை நிறைவு செய்ய, காப்பு வனங்களின் உள்ளேயும், வெளியேயும் பெருமளவில் மரங்கள் வளர்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

3.3. மத்திய மற்றும் மாநில திட்டங்களின்கீழ் 1984–85ஆம் ஆண்டு வளர்க்கப்படவிருக்கும் தோட்டங்களின் பரப்பு மொத்தம் 59,057 எக்டேர் ஆகும். இது தவிர, சாலை ஓர மரங்கள், இருப்புப்பாதை ஓர மரங்கள் 2,250 கிலோ மீட்டர் நீளத்திற்கு வளர்க்கும் பணியும், பொதுமக்களுக்கு 295 லட்சம் நாற்றுகள் வழங்கும் பணியும் மேற்கொள்ளப்படவிருக்கிறது. வனவளர்ப்பு பணி ஒரு நீண்ட கால திட்டமாகும். மரங்கள் முழுமையாக வளர்ந்து பலன்தர நீண்ட காலம் பிடிக்கும். தைல மரம், மிலாறு, கருவேல மரம் போன்ற விரைவில் வளரும் மர வகைகளை வளர்ப்பதற்காக கடந்த திட்ட காலங்களில் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் அரசு மேற்கொண்ட தனிக் கவனத்தாலும், மும்முர நடவடிக்கையாலும் நல்ல பலனை அளிக்கத் தொடங்கியுள்ளன.

[1984 ஏப்ரல் 16

திட்டப் பணிகள் செயல்படுத்தப்படுதல்.

4. 1984–85-க்கான திட்ட ஒதுக்கீடு வருமாறு :—

| | |
|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்) |
| மாநில அரசு திட்டப் பணிகள் .. .. .. | 1,547.76* |
| மண்வளப் பாதுகாப்புத் திட்டங்கள் .. .. | 78.32 |
| மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் .. | 178.40 |
| மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம். | 142.69 |
| மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் .. .. | 40.05 |
| மொத்தம் .. | 1,987.22 |

* (மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்காக மாநில அரசின் பங்கான ரூ. 89.20 லட்சம் இதில் அடங்காது.)

**வனப் பாதுகாப்பு**

5.1. வனச் செல்வத்தை நல்ல முறையில் பாதுகாக்கவும், காட்டுப்புறப் பணியாளர்களுக்கு உதவும் பொருட்டும் மாநில முழுவதும் 9 வனப் பாதுகாப்பு படைகள் பணியாற்றி வந்தன. ஒவ்வொரு குழுவும் ஒரு உதவி வனப் பாதுகாவலரின் தலைமையில் செயல்பட்டு வருகிறது. 1983–84-ல் நீலகிரி மாவட்டத்தில் மேலும் ஒரு வனப் பாதுகாப்புப் படையும், கன்னியாகுமரி கிழக்கு ரப்பர் மண்டலம், கன்னியாகுமரி மேற்கு ரப்பர் மண்டலம் ஆகியவற்றிற்கு ஒரோரு வனப் பாதுகாப்புப் படையும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மிகவும் முக்கியமான இடங்களில் 83 சோதனைச் சாவடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

5.2. 1984–85-ல் மேலும் 3 சோதனைச் சாவடிகள் கோவை மற்றும் நீலகிரி மாவட்டத்தில் ஏற்படுத்தப்படும். வனப் பாதுகாப்புப் படையிலுள்ள பணியாளர்கள் காடுபடு பொருட்கள் கடத்தப்படுவதை தடுப்பதுடன், வன நிலங்களை முறையற்று கையகப்படுத்துபவர்கள் மீது தீவிரமாகக் கண்காணித்து நடவடிக்கை எடுக்கின்றனர்.



1984, ஏப்ரல் 16]

5.3. காடுபடு பொருட்கள் கடத்தப்படுவதையும், திருட்டுப் போவதையும், தீவிரமாகக் கண்காணித்துத் தடுக்கவும், குற்றவாளிகள்மீது வழக்குத் தொடரவும், 1983–84-ல் மாநில அளவில் வனப் பாதுகாப்புப்படை ஒன்று, காவல் துறை துணைத் தலைவரின்கீழ் வேண்டிய பணியாளர்களுடன் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இந்தப் படை வனத் துறைத் தலைவரின்கீழ் வனக் குற்றக் கண்காணிப்பு வேலைகளைத் தீவிரமாகக் கண்காணித்து தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

5.4. வனச் செல்வத்தினை நெருப்பு, திருட்டு, வெட்டு, கடத்தல் போன்றவைகளிடமிருந்து காக்கும் பொருட்டு அரசு பலவித காப்புப் பணிகளை மேற்கொண்டுள்ளது. வனப் பாதுகாப்புப் பணியினை நவீன முறையில் நிறைவேற்றும் பொருட்டு மதுரை மாவட்டம் மேல்பழனி மலைப் பகுதிகளில் கம்பியில்லாத் தந்தி போன்ற கருவிகளைப் பயன்படுத்துவது பற்றி ஆய்வுப் பணிகள் மேற்கோள்ளப்பட்டு வருகின்றன. இக் கருவிகளைப் பொருத்த 18 லட்சம் ரூபாய் செலவிடப்படும். இந்த ஏற்பாட்டினை மாநில முழுவதிலும் விரிவுபடுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

5.5. 1982–83ஆம் ஆண்டில் 384 சந்தன மரக் கடத்தல் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இக்குற்றங்களில் கைப்பற்றப்பட்ட சந்தன மரங்களின் எடை 46,530.590 கிலோவாகும். அதன் மதிப்பு 19,47,901.65 ரூபாய் ஆகும். இக் குற்றங்களின் தொடர்பாக 672 நபர்கள் கைது செய்யப்பட்டு அவர்களில் 178 நபர்களின் மேல் நீதிமன்றங்களில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இக்கடத்தல் குற்றங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட 42 வாகனங்கள் கைப்பற்றப்பட்டன. 1983–84-ல் 21 வாகனங்கள் வனக் குற்றங்கள் சம்பந்தமாக கைப்பற்றப்பட்டன.

5.6. சென்னையில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் அதிகமாக உள்ளதால், மற்ற மாநிலங்களிலிருந்து பிடிக்கப்பட்ட பாம்புகளின் தோல்கள் சென்னைக்கு கடத்தி வரப்பட்டு பதப்படுத்தப்படுகின்றன. 1982–83-ல் 24,319 பாம்புத் தோல்கள் வனப்பாதுகாப்புத் படையினரால் கைப்பற்றப்பட்டன. நான்கு வனக் குற்றங்களில் பிடிக்கப்பட்ட இவற்றின் மதிப்பு 1 லட்ச ரூபாயாகும். 1983–84-ல் 64,445 பாம்புத் தோல்கள் 5 வனக் குற்றங்களில் பிடிக்கப்பட்டன. இதன் மதிப்பு 6.03 லட்ச ரூபாயாகும். பிடிபட்ட இந்தப் பொருட்கள் மத்திய அரசின் அறிவுரைப்படி திருவாளர்கள் பாரத் லெதர் கார்ப்பரேஷன் (மத்திய அரசு நிறுவனம்) வசம் ஒப்படைக்கப்பட்டன.

5.7. 1982–83-ல் பட்டியல் மரங்களை (Scheduled Timber) வெட்டியதற்காகவும், கடத்தியதற்காகவும் 1,507 குற்றங்கள் பதிவு செய்யப்பட்டு 540 நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 299 நபர்கள் மீது குற்ற வழக்கு தொடரப்பட்டுள்ளது. இக்குற்றங்களில் சம்பந்தப்பட்ட மரங்களின் மதிப்பு 5,82,142.50 ரூபாயாகும்.

5.8. 1982-83-ல் 44,341 வனக்குற்றங்கள் பிடிக்கப்பட்டன. 41,92,887 ரூபாய் இணக்கக் கட்டணம் வசூலிக்கப்பட்டது. நீதிமன்றத்தில் பதிவான வழக்குகளின் எண்ணிக்கை 8,732. 1,266 வழக்குகள் இந்த ஆண்டில் தண்டிக்கப்பட்டன.

5.9. நீலகிரி மாவட்டத்தில் காடுகள் சட்ட விரோதமாக அழிக்கப்படுவதைத் தடுக்கும் பொருட்டு மேலும் இரண்டு பறக்கும் காவல் படையினை தக்க அலுவலர்களோடு ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### காடுபடு பொருட்களை அடிப்படையாகக் கொண்ட தொழில்களுக்கு மூலப் பொருட்கள் வழங்குதல்

6.1. காடுபடு பொருட்களை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் தொழிற்சாலைகளுக்கு மிலாறு, கூழ் மரங்கள் வழங்குவதில் காடுகள் முக்கிய பங்கு வகிக்கிறது. கற்பூர தைல மர வகைகள் (புளுகம், கிராண்டிஸ், ஹைபிரிட்), மிலாறு பட்டைகள், மிலாறுக் கட்டைகள், மூங்கில் போன்ற மூலப் பொருட்கள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன. 1982-83ஆம் ஆண்டில் மூலப் பொருட்கள் விற்பனை செய்ததன் மூலம் கிட்டிய வருவாய் 3.04 கோடி ரூபாயாகும். வழங்கப்பட்ட மூலப் பொருளின் அளவு 1,32,292 டன்கள்.

6.2. 1983-84-ல், 99;326 டன்கள் வழங்கப்பட்டு, 2.17 கோடி ரூபாய் வருவாய் பெறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. சவுத் இந்தியா விஸ்கோஸ் நிறுவனத்தார் காலக்கெடுவின்படி கட்டைகளை எடுத்துச் செல்லாததால் இந்த ஆண்டு வருவாய் குறைவு ஏற்பட்டுள்ளது. இருப்பினும் 1984-85ஆம் ஆண்டில் 2,10,000 டன்கள் வழங்குவதன் மூலம் 5.20 கோடி ரூபாய் வருவாய் கிட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

6.3. தொழிற்சாலைகளில் நாளுக்குநாள் அதிகரித்து வரும் தேவையை ஈடு செய்வதற்காக, மாநிலத் திட்டப் பணிகளின் கீழும், மத்திய அரசு பொறுப்பேற்கும் மேற்குமலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழும் மிலாறு மற்றும் கூழ் மரங்கள் வளர்க்கப்படுகின்றன. 1983-84-ல், 6,650 எக்டேர் பரப்பில் தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் மரங்கள் வளர்க்கப்படும். 1984-85-ல் 8,125 எக்டேர் பரப்பில் தோட்டங்கள் வளர்க்கப்படும்.



### சந்தன மரம்

7.1. சந்தன மரங்கள் இயற்கையாகப் பீடபூமிகளிலும், வடஆற்காடு,சேலம்,தர்மபுரி,கோயம்புத்தூர் மாவட்டங்களிலும் உள்ள மலைப் பகுதிகளிலும், நீலகிரி, தென்ஆற்காடு, திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் குறைந்த அளவிலும் வளர்கின்றன. பட்டுப்போன சந்தன மரங்கள் மட்டுமே, மூன்றாண்டுகட்கு ஒருமுறை, வெட்டி எடுக்கப்படுகின்றன. வெட்டப்படும் சந்தன மரங்கள், கிடங்குகளுக்குக் கொண்டு வரப்பட்டு, சுத்தப்படுத்தப்பட்டு ஏலத்தில் விற்கப்படுகின்றன.

7.2. சந்தன மரத்தை ஏற்றுமதி செய்வதற்கு மத்திய அரசு தடை விதித்ததின் காரணமாக ஏலத்தில் விடப்படும் சந்தன மரங்களின் விலை குன்றந்ததால் இத்துறைக்கு கிடைக்க வேண்டிய வருவாய் பெருமளவு குறைந்தது. இவ்வரசு இது குறித்து அடிக்கடி மத்திய அரசிற்கு தொடர்ந்து பல வேண்டுகோள் விடுத்தும் மத்திய அரசு சந்தன மர ஏற்றுமதி மீதான தடையை அகற்றவில்லை. அயல் நாடுகளுக்கு சந்தன மரங்களை ஏற்றுமதி செய்வதை அனுமதித்து, மத்திய அரசின் ஏற்றுமதிக் கொள்கை திருத்தி அமைக்கப்பட்டால், இனிவரும் வருடங்களில் மேலும் அதிக வருவாய் சந்தன மரங்களிலிருந்து கிட்ட வழியுள்ளது. அத்துடன் கூடுதல்அந்நிய செலாவணியும் நாட்டிற்குக் கிடைக்கும். ஆகவே மேலும் காலம் தாழ்த்தாமல் இதில் நல்ல முடிவை விரைவில் மத்திய அரசு அறிவிக்கும் என எதிர் பார்க்கிறோம்.

7.3. 1982-83-ல், 1,947 டன் சந்தனமரம் ஏலத்தில் விற்கப்பட்டு 6.58 கோடி ரூபாய் வருவாய் பெறப்பட்டது. 1983-84-ல், 1,908 டன்கள் சந்தன மரம் விற்கப்பட்டு 6.92 கோடி ரூபாய் வருவாய் பெறப்பட்டது. திருப்பத்தூரில் உள்ள சந்தனக் கிடங்கில் ' இரட்டைப் பூட்டு முறை ' வழக்கத்தில் இருக்கிறது. திருப்பத்தூரில் மேலும் ஒரு கூரைக் கிடங்கு கட்டி முடிக்கப்பட்டுள்ளது. சேலத்திலும் ஒரு கிடங்கு கட்டும் வேலை நடைபெற்று வருகிறது.

7.4. திருப்பத்தூர் கோட்டத்தில் சந்தனத் தைலம் தயாரிக்கும் தொழிற்சாலையை நிறுவும் பணி மேற்கொள்ளப்பட்டு முடியும் தருவாயிலுள்ளது. இதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ. 94 லட்சமாகும். வடஆற்காடு மாவட்டம் வாணியம்பாடி வட்டத்திலுள்ள தெக்குப்பட்டு கிராமத்தில் 9.25 ஏக்கர் நிலப் பரப்பில் இது அமைந்துள்ளது. இத்தொழிற்சாலை 1984-85ல் செயல்படத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத் தொழிற்சாலையில் 400 முதல் 500 டன் சந்தனக் கட்டைகளைப் பயன்படுத்தி 18 முதல் 22 டன் சந்தனத் தைலம் உற்பத்தி

செய்யப்படும். தமிழக வனப்பகுதிகளிலிருந்து எடுக்கப்படும் சந்தனக் கட்டைகள், தமிழகத்தில் அரசால் முதன் முதலாக அமைக்கப்பட்டுள்ள இந்தத் தொழிற்சாலைக்கு எண்ணெய் தயாரிப்பதற்காக பயன்படுத்தப்படும். ஊதுபத்தி தயாரிப்புப் போன்ற சிறு தொழில்கட்கு ஆதரவு தரும் பொருட்டு சந்தனத் தூள் தொழிற்சாலை ஒன்று நிறுவும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

7.5. வருடாந்திர திட்டப் பணியின்கீழ் சந்தன மரங்களை செயற்கை முறையில் வளர்க்கவும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. 1983-84-ல் 150 எக்டேர் பரப்பில் சந்தன மரம் வளர்க்கப்படுகிறது.

7.6. 1984–85-ல் 114 எக்டேர் பரப்பில் சந்தன மரம் செயற்கை முறையிலும், இயற்கை முறையிலும் வளர்க்கப்படும்.

**கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசினர் ரப்பர் தோட்டங்களும், அரசினர் ரப்பர் தொழிற்சாலைகளும்.**

8.1. வனவளம் நிறைந்துள்ளதும், இரு பருவ மழைகளினால் பெருமளவு மழையைப் பெற்று வளமாகத் திகழ்வதுமான குமரி மாவட்டத்தில் சுமார் 4,800 எக்டேர் பரப்பளவில் ரப்பர் மரங்களை அரசு பயிரிட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கீரிப்பாறை என்னும் இடத்திலும், பெருஞ்சாணி என்னும் இடத்திலும் ரப்பர் தொழிற்சாலைகளை அரசு நிறுவியுள்ளது. இந்த தொழிற்கூடங்களில் ரப்பர்பொருட்களை ரப்பர் பாளங்கள், கிரேப் ரப்பர் மற்றும் அடர்த்தியான ரப்பர் பால் (Concentrated latex) ஆகியவைகள் உருவாக்கப்படுகின்றன. பெருஞ்சாணி தொழிற்சாலையில் ரப்பர் பாளங்கள் மட்டும் தயாரிக்கப்படுகின்றன.

8.2. இயற்கை காடுகளை அழிக்கலாகாது என்ற அரசின் கொள்கையினைக் கருத்திற்கொண்டு 1979–80ஆம் ஆண்டிற்குப் பிறகு மேலும் ரப்பர் தோட்டங்கள் உண்டாக்கப்படவில்லை. கன்னியாகுமரி மேற்கு ரப்பர் மண்டலத்தில் மேலும் இரு லேட்டக்ஸ் கான்ஸன்ட்ரேட்டர் நிறுவ ரூபாய் 26 லட்சம் முதலீடு செய்து அதற்கான இயந்திரங்களை ஸ்வீடன் நாட்டிலிருந்து பெறுவதற்கு ஆவன செய்யப்பட்டு வருகிறது.

8.3. 1982–83ஆம் ஆண்டுவரை சுமார் 17.13 கோடி ரூபாய் ரப்பர் தோட்டங்களுக்காக செலவிடப்பட்டு சுமார் 13.48 கோடி ரூபாய் வருவாய், ரப்பர் பொருட்களின் விற்பனை மூலம் கிட்டியுள்ளது.

8.4. அரசு ரப்பர் தோட்டத்தில் 2,500 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். இவர்களுக்குத் தேவையான குடியிருப்பு வசதிகள் படிப்படியாக செய்து கொடுக்கப்பட்டு வருகிறது. மேலும் பல குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும்





தோட்டத் தொழிலாளர்களுக்கு வேண்டிய வேறு சில அத்தியாவசிய தேவைகளான மருத்துவ வசதி, அவர்களின் குழந்தைகளுக்கான பள்ளிகள், காப்பகங்கள், மருந்தகங்கள் மற்றும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் ஆகியவற்றை அளித்துள்ளோம். 1983–84ஆம் ஆண்டில் கிழக்கு மற்றும் மேற்கு மண்டலத்தில் தொழிலாளர்களுக்கு ஒரு சமுதாயக்கூடம் நிறுவ அரசிடமிருந்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

8.5. 981 தொழிலாளர் குடியிருப்புகள் கட்டப்பட்டு அதில் 474 வீடுகளுக்கு மின் இணைப்பு தரப்பட்டுள்ளது. மேலும் 441 குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. குடியிருப்புகளில் தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இரண்டு மருத்துவமனைகள் இத் தோட்டப் பகுதிகளில் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. 8 குழந்தைகள் காப்பகங்கள் கட்டப்பட்டுள்ளன. 4 காப்பகங்களுக்கான கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. தொழிலாளர்களின் குழந்தைகளுக்காக நான்கு பள்ளிக்கூடங்கள் கட்டப்பட்டுள்ளன. சுமார் 700 மாணவ, மாணவியர் இப்பள்ளிகளில் படித்து வருகின்றனர். 1982–83ஆம் ஆண்டு வரை தொழிலாளர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்திட சுமார் 94.71 லட்ச ரூபாய் அரசு செலவு செய்துள்ளது. 1983–84 ஆம் ஆண்டிலும் ரூ. 12.94 லட்சம் செலவிடப்பட்டிருக்கிறது. 1984–85 ஆம் ஆண்டிற்கு ரூ. 13.47 லட்சம் தொழிலாளர்களின் நலனுக்காகவும், அவர்களின் தேவைகளுக்காகவும் செலவிட அரசு உத்தேசித்துள்ளது.

8.6. 285 இலங்கை அகதிக் குடும்பங்களை அரசு ரப்பர் தோட்டங்களில் வேலைக்கு அமர்த்தி இத்திட்டத்தின்கீழ் அவர்களுக்கு மறுவாழ்வு தரப்பட்டுள்ளது.

8.7. 1983–84ஆம் ஆண்டில் இந்த ரப்பர் தோட்டங்களிலிருந்து கிடைக்கும் வருவாய் சுமார் 4.50 கோடி ரூபாயாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1982–83ஆம் ஆண்டில் நடைபெற்ற வேலைநிறுத்தம் காரணமாக அந்த ஆண்டு விற்றிருக்கப்பட வேண்டிய ரப்பர் 1983–84-ல் விற்கப்பட்டது. எனவே 1983–84-ல் கூடுதலான வருவாய் கிடைத்தது. 1984–85ஆம் ஆண்டில் 4 கோடி ரூபாய் வருவாய் கிட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

8.8. 1984–85ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட திட்டங்களை வகுத்து அரசு ரப்பர் தோட்டங்களை மேலும் மேம்பாடு செய்ய ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது :—

| திட்டத்தின் பெயர். | ரூபாய் மதிப்பு. (லட்சத்தில்) |
|---|---|
| 1. மாநில ஐந்தாண்டுத் திட்டம், ரப்பர் .. | 23.66 |
| 2. மேற்குமலைத் தொடர் ரப்பர் வளர்ச்சி திட்டம். | 57.09 |
| மொத்தம் .. | 80.75 |

8.9. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அரசு ரப்பர்
தோட்டங்களையும், தொழிற்சாலைகளையும் தனி நிறுவனமாக
செயல்படும் வகையில் தமிழ்நாடு ரப்பர் தோட்டக் கழகமாக
மாற்றி அமைக்க அரசு ஆணை பிறப்பித்து உள்ளது. விரைவில்
தனியாக இயங்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு
வருகின்றன.

முந்திரி

9.1. தென்னாற்காடு, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை,
இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள பெரும்
பான்மையான முந்திரித் தோட்டங்கள் (23,948 எக்டேர்)
தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தைச் சார்ந்தவையாகும்.
இதுதவிர மேற்படி செங்கற்பட்டு, தென்னாற்காடு, திருச்சிராப்
பள்ளி, இராமநாதபுரம் மாவட்டங்களிலும் திருநெல்வேலி
மாவட்டத்திலும் உள்ள சுமார் 18,000 எக்டேர் முந்திரி தோட்
டங்களை வனத்துறை பராமரித்து வருகிறது. தற்போது 23,948
எக்டேர் .முந்திரித் தோட்டங்கள் தமிழ்நாடு வனத் தோட்டக்
கழகத்திடம் உள்ளன. இத் தோட்டங்களிலிருந்து பெறப்
படும் விளைச்சலை அதிகரிக்கும் பொருட்டு, வனத்துறையும்
தமிழ்நாடு வனத்தோட்டக் கழகமும் பலவித மேம்பாட்டுப்
பணிகளை மேற்கொண்டு வருகின்றன. தீவிர மண் வளப்
பாதுகாப்பு, உரமிடுதல், களையெடுத்தல், வேர் பறித்து அப்புறப்
படுத்தல், ஆகாசப் பதியன் கன்றுகள் (Air layer) நட்டு
தோட்டங்களை உருவாக்குதல் போன்றவை இந்த மேம்பாட்டு
பணிகளாகும்.

9.2. 1983–84ஆம் ஆண்டு வனத்துறையிலுள்ள முந்திரித்
தோட்டங்களிலிருந்து 10 லட்சம் ரூபாயும் வனத்தோட்டக் கழக
முந்திரித் தோட்டங்களிலிருந்து 65 லட்சம் ரூபாயும வருவாய்
கிட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

9.3. 1984–85ஆம் ஆண்டு வனத்தோட்டக் கழகம் முந்திரி
தோட்டங்களிலிருந்து 92 லட்சம் ரூபாய் வருவாய் எதிர்பார்க்
கிறது. வனத்துறையும் முந்திரித் தோட்டங்களிலிருந்து
11.00 லட்சம் ரூபாய் வருவாய் எதிர்பார்க்கிறது.

9.4. 1980–81 முதல் 1982–83வரை 669 எக்டேர் பரப்பில்
வனத்துறை முந்திரித் தோட்டங்கள் வளர்த்துள்ளது.
தமிழ்நாடு தோட்டக்கழகம் 1983-84-ல் 742 எக்டேர் பரப்பில்
முந்திரி தோட்டம் வளர்த்துள்ளது. 1983–84-ல் 180 எக்
டேரில் ரூ. 10.35 லட்சம் செலவில் வனத்துறை முந்திரித்
தோட்டங்களை பயிரிட்டுள்ளது. 1984-85-ல் ரூ. 10.39 லட்சம்
செலவில் 170 எக்டேர் பரப்பில் முந்திரி பயிரிடப்படும்.
இந்த ஒதுக்கீட்டில், மண் பாதுபாடு வேலைகள், தோட்டப்
பராமரிப்பு வேலைகள் முதலியன செய்வதற்கான செலவுகளும்
அடங்கும்.



காடுபடு சிறுபொருட்கள்

10.1. காட்டுப் பகுதிகளிலும் சுற்றுப் புறங்களிலும் வாழும்
பழங்குடியினர் பெரும்பாலும் வறுமையால் பீடிக்கப்பட்டவர்
களாகவே உள்ளனர். அவர்களது பொருளாதார நிலையை
மேம்படுத்தும் கருத்தோடு புளி, கடுக்காய், சீயக்காய் மரங்கள்
ஆகியன இத்திட்டத்தின்கீழ் . வளர்க்கப்படுகின்றன. காடு
படு சிறு பொருட்களை சேகரிக்கும் குத்தகைகள் '' லாம்ப் ''
கூட்டுறவு சங்கங்களுக்கு பெரும்பாலும் தமிழ்நாடு வனத்துறை
சட்டக்கோவை 130 ஆம் பிரிவின்கீழ் கொடுக்கப்படுகின்றன.
இச்சங்கங்களில் பழங்குடியினர் அங்கத்தினர்களாகவுள்ளனர்.
1982-83-ல் லாம்ப் கூட்டுறவு சங்கத்திற்கும் மற்ற கூட்டுறவு
சங்கங்களுக்கும் ரூ. 51.22 லட்சம் பெறுமானமுள்ள காடுபடு
சிறு பொருட்கள் குத்தகைகள் கொடுக்கப்பட்டன. '' லாம்ப் ''
அல்லது மற்ற கூட்டுறவு சங்கங்கள் எடுக்க முன்வராத குத்த
கைகள் மட்டுமே ஏல முறையில் குத்தகைக்கு விடப்பட்டு
அரசுக்கு இழப்பு நேரா வண்ணம் பார்த்துக் கொள்ளப்பட்டது.
காடுபடு சிறு பொருள்கள் மூலம் 1983-84-ல் 85.50 லட்சம்
ரூபாயும் 1984-85-ல் 91 லட்சம் ரூபாயும் வருவாய் எதிர்ப்
பார்க்கப்படுகிறது.

10.2. காடுபடு சிறு பொருள் வர்த்தகத்தினைப் பற்றி
விரிவாக ஆய்வு செய்யும் பொருட்டு அரசு ஒரு ஆய்வுக்
குழுவினை ஏற்படுத்தியுள்ளது. இக்குழுவின் அறிக்கை எதிர்
பார்க்கப்படுகிறது.

10.3. காடுபடு சிறு பொருள் வளத்தினை அதிகரிக்க
ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 75 லட்சம் ஒதுக்கப்
பட்டது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 3,405
எக்டேர் பரப்பில் மரங்கள் வளர்க்கப்பட்டன. 1983-84-ல்
417 எக்டேர் பரப்பில் ரூ. 21.68 லட்சம் செலவில் மரங்கள்
வளர்க்கப்படும்.

10.4. 1984-85-ல் 925 எக்டேர் பரப்பில் ரூ. 22.66 லட்சம்
செலவில் இத்திட்டம் செயல்படும். இந்த ஒதுக்கீட்டில் 700
எக்டேர் அளவில் மும்முர வளர்ச்சிப் பணிகளும் (Intensive
Cultural Operations) 5 கிலோ மீட்டர் தூரம் சாலை ஓர மரம்
நடும் பணியும் அடங்கும்.

10.5. 1984-85-ல் தர்மபுரி மாவட்டத்தில் ரூ. 4.90
லட்சம் செலவில் 100 எக்டேர் பரப்பில் மூங்கில் பயிரிடவும்
திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் கிராமப்புற மக்களுக்கு
நல்ல வேலை வாய்ப்பினை நல்கும்.

## தேக்கு மற்றும் கடின மரங்கள்

11.1. நமது மாநிலத்தின் வெட்டுமரத் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு தகுந்த இடங்களில் தேக்கு மற்றும் ஏனைய கடின மர வகைகள் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் வளர்க்கப்படுகின்றன. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ரூ.25.00 லட்சம், தேக்கு மற்றும் கடின மரங்கள் வளர்க்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1982-83வரை 1,355 எக்டேர் பரப்பில் தேக்கும், கடின மரங்களும் வளர்க்கப்பட்டுள்ளன. 1983-84-ல் ரூ. 7.69 லட்சம் செலவில் 480 எக்டேர் பரப்பில் இம்மரங்கள் வளர்க்கப்படும்.

11.2. 1984-85ஆம் ஆண்டு 495 எக்டேர் பரப்பில் ரூ. 8.19 லட்சம் செலவில் இம்மரங்கள வளர்க்கப்படும்.

## மென் மரம்

12.1. குறைவான மழையளவு காரணமாக காட்டுப் பகுதிகளில் மென்மரம் வளர்க்கும் சாத்தியக் கூறுகள் குறைவே என்றாலும் வனத்துறை தகுந்த நிலப் பகுதிகளில் மாநில திட்டங்களின்கீழ் மென்மர வகைகளை வளர்த்து வருகிறது. இதனால் மற்ற மாநிலங்களை, தீக்குச்சி செய்யும் மரத்திற்காக எதிர்பார்ப்பதும் குறைவாகிறது. திட்டப்பணிகளின்கீழ் ஆறாவது திட்ட காலத்தில் 1982-83வரை 350 எக்டேர் மென்மரத் தோட்டங்கள் வளர்க்கப்பட்டுள்ளன.

12.2. 1983-84-ல் 134 எக்டேர் பரப்பில் ரூ. 1.81 லட்சம் செலவில் மென்மரங்கள் வளர்க்கப்படும்.

12.3. 1984-85-ல் 210 எக்டேர் பரப்பில் ரூ. 2.31 லட்சம் செலவில் மென்மரங்கள் வளர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

12.4. மாநிலத் திட்டத்தின்கீழ் மென்மரம் வளர்ப்பதோடன்றி நீலகிரி, திருநெல்வேலி மாவட்டங்களில் மேற்கு மலை வளர்ச்சித் திட்டத்தின்கீழும் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழும் 1984-85-ல் 150 எக்டேர் பரப்பில் மென்மரம் வளர்க்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## விறகு மரத் திட்டம்

13.1. எரிபொருள் பற்றாக்குறையை நிறைவு செய்வதற்காக வனத்துறை, விரைவில் வளரும் விறகு மரத் தோட்டங்களை வனப் பகுதிகளிலும், வனப் பகுதியல்லாத நிலங்களிலும் மாநில திட்டங்களின்கீழும், மத்திய அரசு பொறுப்பேற்கும் சமூக நலக் காடுகள் கிராமப் புற விறகு மரத்திட்டங்கள் கீழும் வளர்க்கிறது.





13.2. கிராமப்புற விறகு மரத்திட்டம், கிராமப்புற மக்கள் தங்களது எரிபொருள் தேவைக்காக விலைமதிப்புள்ள நமது காடுகளை சார்ந்திராமல் வெளிப்புறங்களிலிருந்தும் விறகு மரத் தேவைகளை ஈடு செய்ய உதவுகிறது.

13.3. விறகு மரத் திட்டங்களின் கீழ் ஆறாவது திட்ட காலத்தில் 1982-83வரை கீழ்க்கண்ட சாதனைகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன :—

| காலம். | திட்ட இலக்கு. (எக்டேர்). | நிதி இலக்கு. (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. மாநில திட்டப்பணி .. | 15,202 | 200.18 |
| 2. மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம். | 13,785 | 203.00 |

13.4. 1983-84-ல் 9,675 எக்டேர் பரப்பில் இந்த இரண்டு திட்டங்களின் கீழ் தோட்டங்கள் வளர்க்கப்படும். இதற்கு ஆகவிருக்கும் செலவு ரூ. 2,23.44 லட்சம்.

13.5. 1984-85-ல் இவ்விரு திட்டங்களின் கீழும் 9,225 எக்டேர் பரப்பில் விறகு மரத் தோட்டங்கள் வளர்க்கப்படும். ஆகவிருக்கும் செலவு ரூ. 2,17.66 லட்சம். மத்திய அரசு பொறுப்பு ஏற்கும் கிராமப்புற விறகு மரத் திட்டம் செங்கற்பட்டு, திருச்சிராப்பள்ளி, தர்மபுரி, மதுரை ஆகிய நான்கு மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தை மேலும் தென்னாற்காடு, வடாற்காடு மாவட்டங்களில் விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## கூழ்மரத் தோட்டங்கள்

14.1. இம் மாநிலத்திலுள்ள மரம் சார்ந்த தொழிற்சாலைகளுக்கு ஏற்கிதக்கூழ் வழங்குவதற்கென்று தோட்டங்கள் வளர்ப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். ஆறாவது திட்ட காலத்தில் 1982-83 வரை 9,922 எக்டேர் கூழ்மரத் தோட்டங்கள் ரூ. 176.64 லட்சம் செலவில் மத்திய மற்றும் மாநிலத் திட்டங்களின்கீழ் வளர்க்கப்பட்டுள்ளன.

14.2. 1983–84-ல் 2,650 எக்டேர் பரப்பில் ரூ. 76.16 லட்சம் செலவில் இத்திட்டம் செயல்படும்.

14.3. 1984–85-ல் 5,710 எக்டேர் பரப்பில் தோட்டம் வளர்ப்பதுடன் தற்பொழுதுள்ள தோட்டங்களிலுள்ள இடைவெளிகளிலும் மரம் வளர்க்கப்படும். இத்திட்டம் மதுரை, கோவை, சேலம், திருச்சி, திருநெல்வேலி, வடாற்காடு, தென்னாற்காடு ஆகிய மாவட்டங்களில் ரூ. 95.14 லட்சம் செலவில் செயல்படும்.

### தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம்

15.1. தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம் 13–6–1974-ல் 2 கோடி ரூபாய் மூலதனத்துடன் துவங்கப்பட்டது. மூலதனத் தொகை முழுவதும் தமிழக அரசால் அளிக்கப்பட்டது. இதுவரை ஈட்டிய மூலதனம் ரூ. 72.06 லட்சம்.

15.2. வனத்துறையிலிருந்து இக்கழகத்திற்கு மொத்தம் 73,768.22 எக்டேர் மாற்றப்பட்டது. இதில் தோட்டங்கள் எழுப்பப்பட்ட 35,339.54 எக்டேர் பரப்பும் அடங்கும். கீழ்க்கண்ட வளர்ச்சிப் பணிகளை கழகம் மேற்கொண்டுள்ளது:—

(1) முந்திரித் தோட்டங்களில் மகசூலை அதிகரிக்க பழைய தோட்டங்களில் தீவிரப் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதும், புதியதாக முந்திரித் தோட்டங்களை வளர்ப்பதும்.

(2) தொழிற்துறைகளுக்குத் தேவையான மூலப் பொருட்களை வழங்கும் பொருட்டு கலப்பின தைல மரங்களை வளர்த்தல்.

(3) விறகு எரிபொருள் தேவைக்கு சவுக்கு மற்றும் பலசாது மரங்களை வளர்த்தல்.

15.3. இதுபோன்ற தோட்டங்களை வளர்ப்பதுடன் மதுரையிலுள்ள அரக்கு தொழிற்சாலையை வனத்துறையிடமிருந்து 1976-ல் குத்தகைக்கு எடுத்துக்கொண்டு, கிடைக்கும் வருவாயில் 20 விழுக்காட்டினை குத்தகைப் பணமாக இக்கழகம் 1980–81 லிருந்து செலுத்தி வருகிறது. இதனுடைய முக்கிய நோக்கம் வார்னிஷ் போன்ற பொருட்களை சிவகாசியிலுள்ள அச்சுத் தொழிலுக்கு வழங்குவதாகும். இததொழிற்சாலை பிரெஞ்சு பாலிஷ், முத்திரை அரக்கு போன்றவற்றை பட்டாசு தொழிற்சாலைக்கும், தீப்பெட்டி தொழிற்சாலைக்கும் வழங்கி வருகிறது. காடுகளிலிருந்து சேகரிக்கப்பட்ட தேனை மக்களுக்கு விற்பனை செய்யும் பணியினையும் இக்கழகம் செய்து வருகிறது.





15.4. 1983–84-ல் இக்கழகம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி தோட்டங்களை வளர்த்துள்ளது :—

| | | |
|---|---|---|
| கலப்பின கற்பூர மரம் .. | 2132.00 | எக்டேர் |
| முந்திரி .. .. .. | 742.00 | ,, |
| மும்மர தோட்டக் கலைப்பணி | 3,915.75 | ,, |

15.5. வறட்சி நிவாரண திட்டத்தின்கீழ் 1983-ல் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன :—

| | | |
|---|---|---|
| மும்மர தோட்டக் கலைப்பணி | 2,589.34 | எக்டேர். |
| கரை கட்டுதல் .. .. | 1,537.49 | ,, |
| கிணறுகள் .. .. .. | 4 | |
| வனவிலங்குகளுக்கு தண்ணீர் வழங்க குளங்களை ஆழப்படுத்தல். | 56 | |
| ஈரப்பசை பாதுகாப்பு பணி .. | 1,04,693.86 | கன.மீ. |
| ஊடுருவி உழுதல் .. .. | 15.00 | எக்டேர். |

15.6. முந்திரித் தோட்டங்களில் திருடுகள் முதலிய அபாயங்களுக்கு உட்படக்கூடும் என்ற பகுதிகளில் முந்திரிக்கொட்டைகளை சேகரம் செய்யும் உரிமை குத்தகைக்கு விடப்பட்டது. 1983-ல 11,148 எக்டேர் பரப்பில முந்திரி சேகர உரிமை பொது ஏலம் விட்டதில் 38.04 லட்சம் ரூபாய் வருவாய் கிட்டியது. எஞ்சியுள்ள பகுதிகளில் தோட்டக் கழகமே முந்திரி சேகரம் செய்தது. அதில் 385 டன் முந்திரி ஏலம் விட்டதில் 26.67 லட்சம் ரூபாய் வருமானம் கிட்டியது.

15.7. 1983–84-ல் தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்துல் எதிர்பார்க்கப்படும் வருவாய் பின்வருமாறு :—

| | (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|
| 1. கலப்பின கற்பூர மரம் .. .. .. | 130.00 |
| 2. முந்திரி .. .. .. .. .. | 92.00 |
| 3. சவுக்கு .. .. .. .. .. | 8.00 |
| 4. மூங்கில் .. .. .. .. .. | 0.60 |
| 5. விறகு முதலியன .. .. .. .. | 15.00 |
| 6. காடுபடு பொருட்கள் .. .. .. | 0.70 |
| மொத்தம் .. | 246.30 |

[1984 ஏப்ரல் 16

## தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம்

16.1. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் 1-4-1976 முதல் செயல்படத் துவங்கியது. இக்கழகம் வனத்துறையிடமிருந்து 945 எக்டேர் தேயிலைத் தோட்டங்களை பொறுப்பேற்றுக் கொண்டது. மேலும் தொடர்ந்து 2,394 எக்டேர் பரப்பில் தேயிலை தோட்டங்களை விரிவுபடுத்தியது.

16.2. 1983-84-ல் 7.27 கோடி ரூபாய் செலவிடப்படும். இவ்வாண்டு வரவு 5.67 கோடி ரூபாய் 'Revenue Receipt' ஆகவும் 1.60 கோடி ரூபாய் 'Capital Receipt' ஆகவும் பெறப்படும்.

16.3. தற்பொழுதுள்ள தேயிலைத் தோட்டங்களிலிருந்து 1983-84-ல் 15,193 டன் தேயிலை தளிர் பெறப்படும். 3,494 டன் பதப்படுத்திய தேயிலை 1983-84-ல் தயாரிக்கப்படும். 6 கோடி ரூபாய் வருவாய் கிட்டும். 1984-85-ல் 17,000 டன்கள் தேயிலை தளிர் மகசூல் கிட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. 37,501 டன் பதப்படுத்திய தேயிலை 1984-85-ல தயாரிக்கப்படும். இதன்மூலம் 7.27 கோடி ரூபாய் வருவாய் கிட்டும்.

16.4. 1984-85-ல் 27.25 எக்டேர் பரப்பில் தேயிலை தோட்டங்கள் வளர்க்கப்படும்.

16.5. அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி வர்த்தகம் செய்வது மிக்க ஊக்கமளிக்கும் வகையில் அமைந்துள்ளதால் டைகர் ஹில் தேயிலையை நேரிடையாக அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் பணியில இக்கழகம் ஈடுபட்டுள்ளது. 1983-84-ல் 50,000 கிலோ பதப்படுத்திய தேயிலை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டு 20 லட்சம் ரூபாய் வருமானம் வரும். 1984-85-ல் ஒரு லட்சம் கிலோ பதப்படுத்திய தேயிலை ஏற்றுமதி செய்யப்படும். 38 லட்ச ரூபாய் வருவாய் எதிர்பார்க்கப்படுகிறது.

16.6. தற்பொழுது சேரங்கோட்டிலும், டைகர் குன்றிலும் இரண்டு தேயிலைத் தொழிற்சாலைகள் உள்ளன. இது தவிர சேரம்பாடியில் ஆண்டு ஒன்றுக்கு 15 லட்சம் கிலோ கிராம் தேயிலைத் தூள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று நிறுவப்பட்டு விரைவில் செயல்பட உள்ளது.

16.7. டிசம்பர் 1983 வரை 2,325 இலங்கை நாடு பெயர்ந்தோர் குடும்பத்தினரைச் சார்ந்த 4,464 நபர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு இக்கழகத்தில் அளிக்கப்பட்டுள்ளது. 2,325 தொழிலாளர்கள் குடியிருப்பு கட்டப்பட வேண்டியதில் 2,115 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 210 குடியிருப்புகளும் கட்டி முடிக்கப்படும்.



1984 ஏப்ரல் 16]

## சமூகக் காடுகள்

17.1. சமூகக் காடுகள் திட்டம் ஸ்வீடன் சர்வதேச மேம் பாட்டு திட்ட நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. இதன் திட்ட காலம் 1981-82 வருடம் முதல் ஐந்தாண்டு காலமாகும். திட்ட மதிப்பீட்டு தொகையான ரூ. 45 கோடியில் 10 கோடி ரூபாய் அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் வருடத்தில் செல விடப்படும். திட்ட காலத்தில் முதல் இரு வருடங்களில் (1981-'82 மற்றும் 1982-83) சமநிலை புறம்போக்கு நிலங்களில் 52,480 எக்டேர் நிலப் பரப்பிலும், தொடர் வரிசை தோட்டங்களில் 3,138 கி.மீ. தூரத்திற்கும் தோட்டம் வளர்க்கப்பட்டுள்ளன. இதற்காக 1205.98 லட்ச ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. 1983-84ஆம் வருடத்தில் 871.72 லட்ச ரூபாய் செலவில் பின்வரும் வேலைகள் செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளன :—

1. சமநிலை புறம்போக்கு நிலங்கள் .. 29,410 எக்டேர்
2. தொடர் தோட்டங்கள் .. .. 1,925 கி.மீ.
3. மரக் கன்றுகள் வளர்ந்து வழங்குதல். 248 இலட்சம்.

17.2. 1984-85ஆம் வருடத்தில் 983.48 லட்ச ரூபாய் செலவில் கீழ்க்கண்ட வேலைகள் செய்யத் திட்டமிடப் பட்டுள்ளது: —

1. சமநிலை புறம்போக்கு நிலங்கள் .. 24,525 எக்டேர்.
2. தொடர் தோட்டங்கள் .. .. 1,720 கி.மீ.
3. மரக்கன்றுகள் வளர்த்து வழங்குதல் 2,85.25 இலட்சம்.

17.3. 1984-85ஆம் வருடத்தில் வளர்க்க திட்டமிடப் பட்டுள்ள சமநிலை பரப்பளவு 1983-84ஆம் வருட இலக்கினை விட குறைவாயிருந்தாலும் வளர்க்கப்படும் செடிகளின் எண் ணிக்கை ஏறக்குறைய அதே அளவாகும். குறிப்பிட்ட பரப்பள வில் சென்ற வருடத்தை விட அதிக செடிகள் வளர்ப்பதன் மூலம் அதாவது செடிகளுக்கு இடையிலுள்ள இடைவெளியினைக் குறைப் பதன் மூலம் இது சாத்தியமாகும். மேலும், பொது மக்களுக்கு அவர்களுடைய நிலங்களில் நடுவதற்காக வழங்கப்படும் மரக் கன்றுகளும் அதிக அளவினதாகும். இத்திட்டம் செயல்படுவதை மதிப்பீடு செய்வதற்கும், இதனை செயல்படுத்துவதிலுள்ள இடர் பாடுகளை அறிவதற்கும் ஏழு அங்கத்தினர்கள் கொண்ட "ஸ்வீ டன் மிஷன்" தமிழ்நாட்டிற்கு வந்து மதிப்பீட்டு நிலையங்களை யும் கிராம மக்களையும் சந்தித்து விவாதித்தனர். பின், வனத் துறை அதிகாரிகளுடனும் அரசு செயலர்களுடனும் விவாதித்தனர். அவர்கள் இந்த திட்டம் செயல்படுத்துதலின் முன்னேற்றத்தில் திருப்தியடைந்து பாராட்டினர்.

17.4. புதிதாக உருவாக்கப்பட்ட இந்த சமூகக் காடுகள் திட்டத்தின் வெற்றி இதில் பொதுமக்களுடைய ஈடுபாட்டையே சார்ந்துள்ளது. இந்த திட்டத்தில் படிப்படியாக பொதுமக்களை ஈர்த்து இதை செயல்படுத்துவதில் அவர்கள் தங்களையே ஈடுபடுத்திக் கொள்ளும்படி செய்வதாகும். கிராமங்களிலுள்ள, மற்ற உபயோகங்களுக்குப் பயன்படாத நிலங்களில் தோட்டம் வளர்த்து சமுதாயத்திற்கு தேவையான விறகு மரம், சிறு மரம், விவசாய கருவிகள், கால்நடை தீவனம் முதலியவை பெறுவதற்கு இத் திட்டம் செயல்படுகிறது. காப்புக் காடுகளுக்கு வெளியே செயல்படும் இத்திட்டத்தின் பலனாக காப்புக் காடுகள் அதிக அளவு பாதிக்கப்படாது. இத்திட்டத்தில் சாலை மரங்கள், கால்வாய் ஓரம், ரயில்பாதை ஓரங்களிலும் மற்ற எல்லா காலி நிலங்களிலும் மரம் நடப்படுகிறது. நாளடைவில், பணியாளர் குழு பராமரிப்பு பாதுகாப்பு, அறுவடை செய்து பகிர்ந்தளித்தல் முதலிய எல்லா வேலைகளையும் வனத்துறையிலிருந்து கிராமக் குழுக்களே ஏற்றுக் கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாநில, மாவட்ட, வட்ட மற்றும் கிராம குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன, 31—12—1983 வரை 1,858 கிராம அளவிலான குழுக்கள் நிறுவி செயல்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் நியமிக்கப் பட்டுள்ள தொழில் நுட்ப வல்லுநர்கள் விரிவாக்கம் மற்றும் சமுதாயமுறைகளில் பொதுமக்கள் பங்கேற்று பாராட்டும் வகையில் பயிற்சியளிக்கப்படுகின்றனர். சமூகக் காடுகள் கிளையிலுள்ள 132 வனச் சரகர்களும், மண்டலத்தில் 30 வனச் சரகர்களும் கோவை வேளாண்மை பல்கலைக் கழகத்தில் பயிற்சியளிக்கப் பட்டுள்ளனர். ஊரக மேம்பாட்டு துறையைச் சார்ந்த ஊரக விரிவாக்கப்பயிற்சி நிலையங்களில் இதுவரை 575 வனவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

17.5. 1,068 சமூக காடு ஊழியர்கள் பயிற்சியளிக்கப்பட்டுள்ளனர். இது தவிர 1983-84ஆம் வருடத்திலேயே இன்னும் 800 பேர்களுக்கு பயிற்சி அளிக்கத்திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டம் செயல்படுத்தப்படுவதிலுள்ள அன்றாட பிரச்சினைகளை எதிர்கொள்ள பணியிடைப்பயிற்சியும் (Inservice Training) அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. கிராமத் தலைவர்களுக்கும், விவசாயிகளுக்கும் பயிற்சி அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. வன விக்ஞான் கேந்திரங்களும், வன விரிவாக்க நிலையங்களும் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. இந்த தோட்டங்கள் மூலம் கிடைக்கும் வருவாய் அரசுக்கும், பஞ்சாயத்துக்கும் சமமாக பகிர்ந்துகொள்ளப்படும். மரம் வளர்ப்பு காடுகளாகவும், நிழல் மரங்களாகவும் காற்றுத் தடையாகவும், சூழ்நிலை அடிப்படையிலும், காற்று அரிப்பிலிருந்து பாதுகாக்கவும், நிலத்தடி நீர் பராமரிப்புக்கும், ஆரோக்கியமான தட்ப வெப்ப நிலைக்கும் நிலவள மேம்பாட்டுக்கும் பயன்படுகிறது. வனத்துறை, வழங்கும் மரக் கன்றுகளைக் கொண்டு பொதுமக்களுக்கு தங்கள் நிலங்களிலும் விவசாய நில வரப்புகளிலும் மரம் வளர்ப்பது மாநிலத்திற்கு நிரந்தர உடைமையாகும். இந்த திட்டம்



கிராமப்பகுதி மக்களின் தேவையைப் பூர்த்தி செய்வதுடன் மேலும் வர்த்தக முன்னேற்றத்திற்கும் வழி வகுக்கும். பொது மக்களுக்கு 500 மரக்கன்றுகள் வரை விலையின்றியும் 500-க்கு மேற்பட்டவைகளுக்கு குறைந்த சலுகை விலையிலும் வழங்கப் படுகின்றன.

17.6. பொருளாதார நிலையில் பின்தங்கிய மக்களுக்கு உதவி செய்வதற்காக அவர்களுடைய கிராம எல்லைக்குள் வளர்க்கப்பட்ட மரங்களில், கிளை கழிவுகளை, பகிர்ந்தளிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

17.7. 1984-85ஆம் வருடத்தில் 1,000 சமூக வன ஊழியர்களை நியமிக்க திட்டமிடப்பட்டுள்ளது. முதல் மூன்று வருடங்களில் நியமிக்கவேண்டிய இலக்காகிய 3,000 ஊழியர்களில் 2,072 கிராம வன ஊழியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மீதமுள்ள ஊழியர்கள் இவ்வருட முடிவுக்குள் நியமிக்கப்படுவர்.

### புதிய 20 அம்சத் திட்டம்—மரம் வளர்ப்பு

18.1. பிரதம மந்திரியின் புதிய 20 அம்சத் திட்டம் நம்முடைய மாநிலத்தில் தீவிரமாக செயல்படுத்தப்படுகிறது. 1983-84ஆம் ஆண்டு குறியீட்டு இலக்கின்படி 1,000 லட்சம் மரக் கன்றுகள் நடப்பட வேண்டும். இதில் 1984ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் முடிய 1,142 லட்சம் மரக் கன்றுகள் நடப்பட்டு விட்டன.

18.2. இத்திட்டத்தின் கீழ் 1984—85ஆம் வருடத்தில் பின் வரும் வேலைகள் செய்து முடிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது:—

| | | |
|---|---|---|
| 1. | மரத்தோட்ட வளர்ப்பின் கீழ் எழுப்பப்படவேண்டிய கன்றுகள். | 1,050 லட்சம். |
| 2. | சமூக காடுகள் திட்டத்தின் கீழ் தோட்டம் எழுப்பவேண்டிய பரப்பளவு. | 40,000 எக்டேர். |
| 3. | வனப்பண்ணை திட்டத்தின் கீழ் பொது மக்கள், நிறுவனங்கள், தனியார் நிறுவனங்களுக்கு வழங்க வேண்டிய கன்றுகள். | 270 லட்சம். |

### வறட்சிக்குள்ளாகும் பகுதி திட்டம்

19. தர்மபுரி, ராமநாதபுரம் மாவட்டங்களில் மத்திய அரசு பொறுப்பேற்கும் வறட்சிக்குள்ளாகும் பகுதி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. காடு வளர்ப்பு, மேய்ச்சல் நில அபிவிருத்தி

ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய பணியாகும். 1983-84-ல் இத்திட்டம் 33-36 லட்ச ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். 1984-85-ல் 44.78 லட்ச ரூபாய் செலவில் இத்திட்டம் தொடர்ந்து இந்த இரு மாவட்டங்களிலும் செயல்படும்.

**பணியாளர்—தொழிலாளர் நலம்**

20.1. அடிப்படை வசதிகள் கூட இல்லாத உள்ளடங்கிய காட்டுப் பகுதிகளில் வாழும் வனப்பணியாளர்களுக்கும்; தொழிலாளர்களுக்கும் வேண்டிய வசதிகளை செய்து தருவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் பணியாளர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் குடியிருப்புகள் கட்டுதல், குடிநீர் வழங்குதல், பொழுதுபோக்கு வசதிகள் செய்து தருதல், மருத்துவம், கல்வி போன்ற வசதிகள் செய்து தரப்படுகின்றன.

20.2. இது வரையில் வனச்சரகர் நிலை வரையிலுள்ள பணியாளர்களுக்கு சீருடைகளும், அரசு ரப்பர் தோட்டத்திலும், தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்திலுமுள்ள பணியாளர்களுக்கு மருத்துவ வசதியும் தரப்பட்டுள்ளது. அரசு ரப்பர் தோட்டத்திலும், மற்றப் பகுதிகளிலுமுள்ள தொழிலாளர்களுக்கும், பணியாளர்களுக்கும் வேண்டிய வீட்டு வசதிகள் படிப்படியாக செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன. அரசு ரப்பர் தோட்டங்கள் மற்றும் தேயிலைத் தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர் மற்றும் பணியாளர்கள் குழந்தைகளின் கல்வி வசதிக்காக பள்ளிகள் நடத்தப்படுகின்றன. தமிழ்நாடு தோட்டத் தொழிலாளர் விதிகளின் கீழ் செய்து தரப்பட வேண்டிய வசதிகள் அனைத்தும் திட்டமிடப்பட்டு படிப்படியாக அளிக்கப்பட்டு வருகின்றன.

**பழங்குடியினர் மேம்பாடு**

21.1 வனப் பகுதிகளில் வசிக்கும் பழங்குடியினர் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்காக, வனத்துறை பல்வேறு நல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. வனத்துறை மேற்கொண்டுள்ள பல்வேறு நல நடவடிக்கைகள் பற்றிய விவரம் வருமாறு :—

(1) பயிரிடுவதற்காகவும் கும்ரி சாகுபடி செய்வதற்காகவும் நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது (1,219.52 எக்டேர்).

(2) பழங்குடியினர் வசிக்கும் வேலூர், தர்மபுரி, திருப்பத்தூர், சேலம் ஆகிய பகுதிகளில் கால்நடைகள் மேய்ச்சல் நிலங்களில் இலவசமாக மேய்ப்பதற்கு அவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.



(3) வனத்துறையில் அவர்கள் தொழிலாளர்களாக நியமிக்கப்படுகின்றனர். தகுதியுடைய பழங்குடியினர் வனச்சரக அலுவலர், வனப் பணியாளர், வனக் காப்பாளர், வனக் காவலாளர், யானைப்பாகன், காவடிகள் (Cavadics) போன்ற பணிகளில் இத் துறையில் நியமிக்கப்பட்டுள்ளனர். விபரம் வருமாறு :—

| | |
|---|---|
| வனச்சரக அலுவலர் | 1 |
| வனவர் | 7 |
| வனக்காப்பாளர் | 20 |
| வனக் காவலர்கள் | 52 |
| யானைப் பாகன், காவடி மற்றும் மாலி | 98 |
| ஆசிரியர் | 2 |
| அடிப்படை ஊழியர் | 1 |
| மொத்தம் | 181 |

(4) வட ஆற்காடு மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் பழங்குடியினருக்காக 15 தொடக்கப் பள்ளிகளையும், 2 உயர் நிலைப் பள்ளிகளையும் வனத்துறை நடத்தி வருகிறது. இப் பள்ளிகளில் மொத்தம் 1,984 மாணவர்களும், 45 ஆசிரியர்களும் உள்ளனர்.

(5) பழங்குடியினர் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு நண்பகல் உணவு, சீருடைகள், புத்தகங்கள் எழுது பலகைகள் முதலியன வனத்துறையினரால் இலவசமாக வழங்கப்படுகின்றன. (1,548 குழந்தைகள்).

(6) புதூர், ஜம்னாமரத்தூர் ஆகிய இடங்களில் பழங்குடியினர் குழந்தைகளுக்கு தங்கும் விடுதி வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. ஜம்னாமரத்தூர் விடுதியில் 150 மாணவர்களும், புதூர் விடுதியில் 100 மாணவர்களும் உள்ளனர். மேலும் கூடுதலாக கல்யாணமந்தை, நெல்லிவாசல், மற்றும் பெரும்பள்ளி ஆகிய இடங்களில் விடுதிகள் கட்டப்பட்டுள்ளன.

(7) டாப்சிலிப், முதுமலை ஆகிய பகுதிகளில் மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. டாப்சிலிப்பில் உள்ள மருத்துவ மனை ஒரு உதவி மருத்துவர் தலைமையில் இதர பணியாளர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. முதுமலையிலுள்ள மருத்துவ மனை மருந்தாளுநர் மற்றும் இதர பணியாளர்கள் உதவியுடன் செயல் பட்டு வருகிறது. விரைவில் இது ஒரு முழுமையான மருத்துவ மனையாக மாற்றப்பட உள்ளது.

(8) காடுபடு பொருள்கள் பழங்குடியினர் கூட்டுறவு சங்கங்களுக்கு 10 சதவீத சலுகை வீதத்தில் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. 1982—83ஆம் ஆண்டில் ரூ. 7·98 லட்சம் மதிப்புள்ள காடுபடு பொருள்கள் இந்த கூட்டுறவு சங்கங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

(9) பழங்குடியினருக்கு பயனளிக்கும் வகையில் 19 தொழிலாளர் கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

[1984 ஏப்ரல் 16

(10) முதலமைச்சர் சத்துணவு திட்டத்தின் கீழ் 5 வயதிலிருந்து 9 வயது வரையுள்ள 1,548 குழந்தைகளுக்கு வனத்துறையால் நடத்தப்படும் பழங்குடியினர் பள்ளிகளில் சத்துணவு வழங்கப்படுகிறது.

(11) பழங்குடியினரின் குடிசைத் தொழிலுக்கு தேவையான மூலப் பொருட்களான மூங்கில், பிரம்பு மற்றும் சிறிய மரங்கள் முதலியவை சலுகை விலையில் வழங்கப்படுகின்றன. மேலும் விவசாயம் செய்வதற்கு தேவையான சிறிய மரம் மற்றும் வனப் பொருட்கள் இலவசமாக பழங்குடியினருக்கு வழங்கப்படுகிறது.

21.2. பழங்குடியினர் ஒருங்கிணைந்த மேம்பாட்டு திட்டப் பணிகளின் கீழ் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் இத்துறை பின்வரும் பணிகளை நிறைவேற்றி வருகிறது—

(1) மலைத் தோட்டங்களை வளர்த்தல் (வருடத்திற்கு 1,500 எக்டேர் வரை).

(2) சாலைகள் போடுதல் (வருடத்திற்கு 5 முதல் 10 கி.மீ. வரை.)

(3) பள்ளிக் கட்டிடங்கள் ஆசிரியர்களுக்கான குடியிருப்புகளை கட்டுதல் (வருடத்திற்கு 5 முதல் 10 வரை குடியிருப்பு இல்லங்களும் ஒன்று அல்லது இரண்டு பள்ளி கட்டிடங்களும்).

21.3. இவற்றைத் தவிர தென்னாற்காடு, வட ஆற்காடு, சேலம், திருச்சிராப்பள்ளி, தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் (வனப் பகுதிகளுக்கு வெளியே) சமூகக்' காடுகள் திட்டப் பணிகள் செயல்படுத்தப் பட்டு வருகின்றன. இந்த திட்டத்தின் கீழ் ஒவ்வொரு குடும்பத்திற்கும் பயன் தரும் செடிகளான பழ வகைகள், புல் வகைகள், 500 நாற்றுகள் தங்களுடைய சொந்த நிலங்களில் பயிரிட இலவசமாக கொடுக்கப்பட்டுள்ளன.

21.4. பழங்குடியினர் ஒருங்கிணைந்த மேம்பாட்டு திட்டத்திற்காக 1981–82ஆம் ஆண்டு மற்றும் 1982–83ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடும் திட்டப் பணிகளுக்காக செய்யப் பட்ட செலவு விவரமும் பின் வருமாறு :—

| வருடம். | நிர்ணயிக்கப் பட்ட நிதி இலக்கு. | நிறைவேற்ற பட்டவை. |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| (1) | (2) | (3) |
| 1981–82 .. .. .. | 32.02 | 33.77 |
| 1982–83 .. .. .. | 46.52 | 49.96 |



1984 ஏப்ரல் 16]

21.5. 1983–84ஆம் ஆண்டிற்கு ரூ. 44.19 லட்சமும் 1984–85ஆம் ஆண்டிற்கு ரூ. 53.53 லட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சாலைகள்**

22.1. வனங்களில் சாலைகள் நன்கு அமைக்கப்படுவதால் வன மேம்பாட்டுப் பணிகளை செம்மையாக நிறைவேற்ற இயலும். நல்ல போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்துவதால் வனங்களில் இருந்து வருவாய் பெருமளவில் கிடைக்கும். மேலும் பொருளாதார மேம்பாடு அடையாத வனங்களில மையப் பகுதிகளில் வாழும் பழங்குடியினர் பொருளாதார அளவில் நலிந்த பிரிவினர் ஆகியோரை அவர்கள் எளிதில் செல்லக் கூடிய வனப் பகுதிகளுக்கு வெளியே உள்ள வளர்ச்சி நிலங்களுடன் தொடர்பு கொள்ள வகை செய்து நாட்டின் முன்னேற்றப் பாதையில் அவர்களையும் நடத்திச் செல்ல வகை செய்யப்படும். இக் கொள்கையின் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் புதுச் சாலைகள் அமைக்கும் பணியும் ஏற்கனவே இருக்கும் சாலைகளை முன்னேற்றம் செய்யும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 1982ஆம் ஆண்டு வரை 77.18 லட்ச ரூபாய் செலவில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டது. 1983–84 ஆம் ஆண்டில் ரூபாய் 36.89 லட்சம் செலவில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

22.2. 1984–85 ஆம் ஆண்டில் இம்மாநில திட்டத்தில் 16.06 லட்சம் ரூபாய் செலவில் சாலை போடும் பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

**இதரத் திட்டங்கள்.**

**வனச் செயல் திட்டங்கள்**

23.1. செயல் திட்டங்கள் வனங்களை நிர்வகிப்பதற்கு அடிப்படையாக அமைகின்றன. ஒவ்வொரு கோட்டமும் செயல் திட்டம் ஒன்றினை கொண்டுள்ளது. அத் திட்டம் 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை திருத்தி அமைக்கப்படுகிறது. காடுகளை மீண்டும் உருவாக்குதல், அவற்றைப் பயன்படுத்துவதில் வன நிர்வாகத்தின் ஏனைய அனைத்துக் கூறுகள் ஆகியவற்றிற்குக் குறிப்பிட்ட முக்கியத்துவத்தை இச்செயல் திட்டங்கள் தருகின்றன. வனச் செயல் திட்டம் திட்ட மரங்களின் இருப்பு பற்றிய மாதிரிக் கணக்கெடுப்பு, நில அளவைப் பணிகள் போன்ற களப் பணிகள் செய்யப்படுகின்றன. ஆறாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் 1982–83 ஆம் ஆண்டு வரை ரூபாய் 0·63 லட்சம் இத் திட்டத்திற்கு செலவிடப்பட்டுள்ளது. 1983–84ஆம் ஆண்டில் இத் திட்டத்திற்கு ரூ. 0.70 லட்சம் செலவில் நிறைவேற்றப்படுகிறது.

23.2. 1984–85ஆம் ஆண்டில் 1·75 லட்சம் ரூபாய் செலவில் இத்திட்ட வேலைகளை தொடர்ந்து நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது.

[1984 ஏப்ரல் 16

**வன ஆராய்ச்சி**

24.1, பல்வேறு தட்வெட்ப நிலை, மண்வளம் ஆகியவற்றிற்
கேற்ப வளர்க்கத்தக்க மர வகைகள் அவற்றை உற்பத்தி செய்
வதற்கான தொழில நுட்ப உத்திகளைக் கண்டறியும் நோக்குடன்
காடு வளர்ப்பு, அது தொடர்பானவை குறித்து ஆய்வு நடத்த
இத்துறையின் ஆராய்ச்சித் திட்டம் வகை செய்கிறது.

24.2. 1982-83 ஆம் ஆண்டு வரை 25.31 லட்ச ரூபாய்
செலவில் இத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. ஆராய்ச்சிப்
பணிகள் நடத்தும் பொருட்டு மாதிரித் தோட்டப் பகுதிகளைத்
தேர்ந்தெடுத்து அவற்றின் வளர்ச்சி விகிதம், நோய் பீடிப்பு
பற்றிய விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. டாப்சிலிப்
தேரி, நாகர்கோவில், அரிமளம், சோளபுரம், சாண்டி நல்லா,
கவர்னர் சோலை, மேல் பவானி, விருத்தாசலம், அரியலூர்,
காட்டாங்குளத்தூர், உதகமண்டலம், மரக்காணம், கிண்டி,
இராமேஸ்வரம், தங்கச்சிமடம், கோடைக்கானல், பேரிஜம்,
குண்டார், கல்ராயன், கொல்லிமலை, உளுந்தூர் பேட்டை,
சேஷன் சாவடி, சிறுமலை, சிவகங்கை, வைகை அணை, தேன்கனிக்
கோட்டை போன்ற இடங்களில் பல்வேறு இனம் பற்றிய
ஆராய்ச்சி செய்ய சோதனைப் பர்த்திகள் அமைக்கப்பட்டு விபரங்
கள் (data) சேகரிக்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ், பல்
வேறு இன மரங்களிலிருந்து தரமான விதைகள் சேகரிக்கப்பட்டு,
தரம் பிரித்து, சுத்தம் செய்யப்பட்டு எல்லா வனக் கோட்டங்
களிலும் மரம் வளர்ப்புப் பணிக்காகத் தேவைப்படும் அளவிற்கு
விதைகள் வழங்கப்படுகின்றன. தவிரவும், இந்த விதைகள்
மற்ற மாநிலங்களுக்கும் விலைக்கு விற்கப்படுகின்றன. 1983-84
ஆம் ஆண்டில் 5·67 லட்சம் ரூபாய் செலவில் இத்திட்டம் நிறை
வேற்றப்படுகிறது. 1984-85ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்
வேலைகளை செய்ய ரூபாய் 16·15 லட்சம் செலவாகும் என
திட்டமிடப்பட்டுள்ளது.

**தரக் குறைவான காடுகளைப் புதுப்பித்தல்**

25·1. பல ஆண்டுகளாக அழிந்துபட்டுள்ள காடுகளின்
உற்பத்தித் திறனை இடத்திற்கு தகுந்த மரவகைகளை ஏற்படுத்து
வதன் மூலம் மேம்படுத்துவது என்பது இத்திட்ட நோக்கமாகும்.
இத்திட்டம் சேலம், தர்மபுரி, பெரியார், கோவை, திருச்சி,
வடாற்காடு மற்றும் செங்கற்பட்டு மாவட்டங்களில் செயல்படுத்
தப்பட்டு வருகிறது.

25·2. 1982-83ஆம் ஆண்டு வரை இத்திட்டத்தில் ரூபாய்
150·18 லட்சம் செலவில் 9,294 எக்டேர் பரப்பில் தகுந்த மரத்
தோட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. 1983-84ஆம் ஆண்டில்
ரூபாய் 48·53 லட்சம் செலவில் 3,125 எக்டேர் பரப்பில் தோட்



1984 ஏப்ரல் 16]

டங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. 1984-85ஆம் ஆண்டில்
ரூபாய் 52·97 லட்சம் செலவில் 3,188 எக்டேர் பரப்பில் இத்திட்
டத்தில் தோட்டங்கள் ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**வனங்களை ஒருங்கிணைத்தல்**

26·1. முன்னாள் ஜமீன் வனப் பகுதிகளைச் சேமக் காப்பு
வனங்களாக அமைப்பதன் மூலம் வன வாயில்களை தொகுக்கும்
பணி மேற்கொள்ளப்படுகிறது. 1982-83ஆம் ஆண்டில் 184·82
சதுர கிலோ மீட்டர் வனப்பரப்பினை முடிவாகத் தொகுக்கும்
பணி மேற்கொள்ளப்பட்டது. 1982-83ஆம் ஆண்டு முடிய
3,236·92 சதுர கிலோ மீட்டர் பரப்பில் உள்ள காடுகள் தொகுக்
கப்பட வேண்டிய நிலையில் உள்ளன. இப்பணி விரைவாக மேற்
கொள்ளப்பட்டு வருகிறது. 1982-83ஆம் ஆண்டு வரை இத்
திட்டப் பணிகளுக்காக ரூ. 10·39 லட்சம் செலவில் நிறைவேற்றப்
பட்டுள்ளன.

26·2. 1983-84ஆம் ஆண்டில் 7·63 லட்ச ரூபாய் செலவில்
இப்பணிகள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.
1984-85ஆம் ஆண்டில் இப்பணிகள் தொடர்ந்து செயல்பட
ரூபாய் 9·12 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**விளம்பரம்**

27·1. இத்துறை பொது மக்களுக்கு, குறிப்பாக கிராமப்புற
மக்களுக்கும், பள்ளிக் குழந்தைகட்கும் நமது மதிப்பு மிக்க வன
வளத்தையும் அவ்விடங்களிலுள்ள வன விலங்குகளையும் பாது
காப்பதன் அவசியத்தினை விளம்பரம் மூலமாக புகட்டி வருகிறது.
மற்றும் வனங்களால்தான் சுற்றுப்புற சூழ்நிலை தூய்மையுடன்
இருப்பதாயும் வலியுறுத்தி சொல்லப்பட்டு வருகிறது. திட்ட
மிட்ட பிரசாரத்தின் மூலமும், படக் காட்சிகள் மூலமும் இத்
துறை விளம்பரம் செய்யும் பணியினை செய்து வருகிறது.
1982-83ஆம் ஆண்டு முடிய இத்திட்டம் 3·90 லட்ச ரூபாய்
செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளது. 1983-84ஆம் ஆண்டில்
ரூபாய் 5·57 லட்சம் செலவில் இத்திட்டம் நிறைவேற்றப்படு
கிறது.

27·2. 1984-85ஆம் ஆண்டில் இத்திட்டப் பணிகளுக்கு
2.86 லட்ச ரூபாய் செலவிடப்படும்.

**வெட்டுமரப் பணிகளும் வனப் பயன்பாடும்**

28·1. அடர்ந்த அடவிப் பகுதிகளினூடே பணியாற்றும்
பணியாளர்களுக்கு வசதிகள் செய்து தருவதும் வெட்டுமரப்
பணிகளில் நவீன முறைகளை மேற்கொள்ளுதலும் வெட்டு
மரங்களையும் மற்றும் இதர காடுபடு பொருட்களையும் கொண்டு
செல்ல நல்ல போக்குவரத்து வசதிகள் செய்தலும் இத்திட்டத்
தின் நோக்கமாகும்.

28·2. 1982-83ஆம் ஆண்டு வரை இத்திட்டம் 29·48 லட்ச ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டது. 1983-84-ல் இத்திட்டம் 4·06 லட்ச ரூபாய் செலவில் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. யானைகளுக்கு வேண்டிய அணிகலன்கள் வாங்குதல், குடியிருப்புகள் கட்டுதல் போன்றவை இதில் அடங்கும்.

28·3. 1984-85-ல் 3·73 லட்ச ரூபாய் செலவில் இத்திட்டத்தில் பணிகள் தொடர திட்டமிடப்பட்டுள்ளது.

**மேட்டூர் ஸ்டான்லி நீர்பிடிப்புப் பகுதியிலும், வைகை நீர்த் தேக்கப் பகுதியிலும் மண்வளப் பாதுகாப்புத் திட்டங்களை செயல்படுத்துதல்**

29·1. மேட்டூர் நீர்தேக்கப் பகுதியிலும் வைகை நீர்த்தேக்கப் பகுதியிலும் மண் அரிப்பினை தடுப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் ஆகும். நீர்ப்பிடிப்பு பகுதியில் மண் அரிப்பினை தடுப்பதற்காக அதிக அளவில் மரங்கள் நடப்பட்டு வருகின்றன.

29.2. ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் 1982-83 ஆம் வருடம் முடிய மண் வளப் பாதுகாப்பு பணிகள் மேற்கொண்டதோடல்லாமல் ரூ. 141.22 லட்சம் செலவில் 14,625 எக்டேர் நிலப்பரப்பில் மரங்கள் நடும் பணி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டது. 1983-84ஆம் வருடம் மேற்படி இரு நீர்ப்பிடிப்பு பகுதிகளிலும் 76.74 லட்ச ரூபாய் செலவில் 4,770 எக்டேர் நிலப்பரப்பில் மரம் வளர்ப்பு பணி மேற்கொள்ளவும் மண் வளப் பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

29.3. 1984-85ஆம் வருடத்தில் இவ்விரு நீர்ப்பிடிப்பு பகுதிகளிலும் ரூ. 78.32 லட்சம் செலவில் சுமார் 4,100 எக்டேர் பரப்பில் மரம் நடும் பணியும் மண் வளப் பாதுகாப்பு பணியும் மேற்கொள்ள உத்தேசிக்கப்படுகிறது.

**நிர்வாகச் சீரமைப்பு**

30. இயற்கையான காடுகள் நிறைந்த நீலகிரி மலைப் பகுதியைப் பாதுகாக்கவும், தொழிற் துறைகளுக்கு தேவையான மூலப் பொருட்களை நல்கும் காடுகளை செவ்வனே பாதுகாக்கவும் கூடலூர் பகுதியில் முறைகேடாக அரசு நிலத்தினை கையகப்படுத்துவோரை தடுத்து நிறுத்தவும் கள்ளத்தனமாக மரங்கள் வெட்டப்படுவதை கண்காணித்து தடுக்கவும், மத்திய மற்றும் மாநில அரசுகளால் அங்கீகரிக்கப்படும் பல்வேறு மேம்பாட்டுத் திட்டப் பணிகள் செம்மையாக நடைபெறுகிறதா என்பதனை கண்காணிக்கவும் நீலகிரி மாவட்டத்தில், உதகமண்டலத்தை தலைமையிடமாக கொண்டு ஓர் தனி வன மண்டலம் 1-9-83 முதல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.





**இயற்கைப் பாதுகாப்பு**

31.1. நம் மாநிலத்தில் பல வகையான வன விலங்குகள் உள்ளன. அவற்றைப் பேணி பாதுகாப்பதற்காக அரசு பல சரணாலயங்களை அமைத்து இருக்கிறது. 1984-85ம் வருடத்தில் இச்சரணாலயங்களை அபிவிருத்தி மற்றும் மேம்பாடு செய்வதற்காக ரூ. 35.43 லட்சம் செலவிடப்பட இருக்கிறது. மத்திய அரசு உதவியுடன் கோடியக்கரை. களக்காடு, முதுமலை, நீலகிரி, தார் மற்றும் கிண்டி தேசியப் பூங்கா போன்ற சரணாலயங்களில் அபிவிருத்தி வேலைகள் செய்யப்பட்டு வருகிறது. அழிவை நோக்கியுள்ள முதலை இனங்களைப் பெருக்கும் திட்டத்திற்கும் மத்திய அரசு உதவி புரிந்து வருகின்றது. 1984-85ஆம் ஆண்டு மத்திய உதவி பெறும் இத்திட்டங்களுக்கு ரூ. 33.75 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வனத் துறையிலுள்ள வன விலங்கு பிரிவு கடலாமைகளை பாதுகாக்கும் திட்டத்தை 1982-83லிருந்து செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தினை செயல்படுத்தி தமிழ்நாடு வனத்துறை இந்தியாவில் முன்னோடியாக உள்ளது.

இத்திட்டத்தைப்பற்றிய விபரம் கீழே கொடுக்கப்படுகிறது:—

| கோட்டம்/குஞ்சு பொரிக்குமிடம். | மொத்த முட்டைகள் சேகரம் செய்தது. | முட்டையில் இருந்து வந்த குஞ்சுகள். | கடலில் விடப்பட்ட குஞ்சுகளின் எண்ணிக்கை. | தேர்வாய்வு செய்ய இருப்பில் உள்ள குஞ்சுகளின் எண்ணிக்கை. | சதவீதம். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. வன விலங்கு காப்பாளர், தஞ்சாவூர்— | | | | | |
| (அ) கோடியக்கரை .. .. | 10,692 | 8,526 | 8,326 | 200 | |
| (ஆ) ஆற்காடு துறை .. .. | 8,683 | 6,910 | 6,910 | | |
| (இ) வானவன் மகாதேவி | 10,717 | 8,964 | 8,964 | | |
| மொத்தம் .. | 30,092 | 24,400 | 24,200 | 200 | 81% |
| 2. வனவிலங்கு காப்பாளர், சென்னை— | | | | | |
| (அ) பெரிய நீலங்கரை .. | 32,710 | 29,485 | 29,151 | 334 | |
| (ஆ) வடநெமிலி .. .. | 25,765 | 21,237 | 20,987 | 250 | |
| மொத்தம் .. | 58,475 | 50,722 | 50,138 | 584 | 86.7% |
| 3. வன விலங்கு காப்பாளர், களக்காடு— | | | | | |
| (அ) வீரபாண்டியன் பட்டினம் .. | 4,993 | 1,891 | 1,601 | 2,90 | |
| (ஆ) கன்னியாகுமரி .. | 210 | 17 (6 இறந்தது) | 11 | | |
| (இ) உவரி .. .. .. | 103 | 92 | 92 | | |
| மொத்தம் .. | 5,306 | 2,000 | 1,704 | 2,90 | 37.5% |
| ஆக மொத்தம் .. | 93,873 | 77,122 | 76,042 | 1,074 | 82% |

(6 இறந்தது)

31.2. இத்திட்டம் 1983-84ஆம் ஆண்டு 3.48 லட்சம் ரூபாய் செலவில் எட்டு இடங்களில் செயல்பட்டு வருகிறது. 1984-85ஆம் ஆண்டு 6.25 லட்ச ரூபாயில் இத்திட்டம் செயல் படுத்தப்படும். மத்திய அரசு திட்டத்திற்கு 50 சதவீதம் பண உதவி செய்ய சம்மதம் தெரிவித்துள்ளது. கிண்டி தேசியப் பூங்காவில் நிரந்தர கண்காட்சி அமைப்பதற்கான வேலை மத்திய அரசு உதவியுடன் செயல் பட்டு வருகிறது. அரசு வன விலங்குகளைப் பாதுகாப்பதை பொது மக்களுக்கு வலியுறுத்த சிறு வெளியீடுகளும் ஒட்டிகளும் தயாரித்து வருகிறது.

31.3. அரசு 1983-84 ஆம் வருடம் பள்ளிச் சிறுவர்களை வன விலங்கு சரணாலயத்திற்கு கூட்டிச் சென்று சரணாலயங் களை காண்பிப்பதற்கு ஓர் திட்டத்தை 3.26 லட்ச ரூபாய் செலவில் அங்கீகரித்துள்ளது. முதலில் இத்திட்டம் இரண்டு இடங்களில் அதாவது சென்னையிலும் உதகமண்டலத்திலும் செயல்படுத்தப்பட்டு பின் மற்ற இடங்களுக்கு விரிவுபடுத்தப் படும். இயற்கை பற்றிய கல்வி புகட்டுவதற்காக குழந்தைகளுக்கு புத்தகங்களும் விநியோகிக்கப்படும்.

31.4. மிகச் சிறந்த இயற்கைச் சூழ்நிலைகளில், பல்வேறு உயிரினங்கள் நிறைந்த ஆனைமலை வன விலங்கு சரணாலயத்தை தேசியப் பூங்காவாக மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. வல்லு நர்கள் இது பற்றிய அறிக்கை ஒன்று தயாரித்துள்ளனர். இது அரசின் பரிசீலனையிலுள்ளது.

### 1983-8 'ஆம் வருடத்தில் வறட்சி நிவாரண வேலைகள்

32. 1983-84-ல் தமிழ்நாடு முன் எப்போதும் காணாத கடும் வறட்சியை சந்திக்க வேண்டியிருந்தது. இவ்வாறான சிதோஷ்ண நிலையைக் கட்டுப்படுத்த தோட்டம் வளர்த்தல் ஒரு நிரந்தர தீர்வாகவும் நிரந்தர வனச் சொத்துக்களை அதிகரிப் தற்கு வழிவகுக்குமென்றும் கருதப்பட்டது. வன விலங்கு சரணாலயங்களில் மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் தண்ணீர் வசதி வழங்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டது. வறட்சி நிவாரணத்தின் கீழ் மேற்கொண்ட வேலைகளுக்காக ரூ. 152.95 லட்சம் செலவிடப்பட்டது.

### வண்டலூர் உயிரியல் பூங்கா அமைத்தல்

33.1. சென்னை மத்திய இரயில்வே நிலையத்தை விரிவுபடுத்துவதற்காக தற்போது சென்னை மாநகராட்சி கட்டுப்பாட்டில் உள்ள விலங்ககம் அமைந்துள்ள இடத்தை கொடுக்கும்படி இந்திய ரயில்வேத் துறை வேண்டியதற்கிணங்க சென்னை மாநகரத்திலிருந்து 30 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள வண்டலூர் ஒதுக்கக் காட்டில், நவீன விலங்ககம் ஒன்றை வனத் துறையின் நிர்வாகத்தின்கீழ் அமைக்க அரசு முடிவு செய்தது. செங்கற்பட்டு மாவட்டம், வண்டலூர் ஒதுக்க





காட்டில் இந்த நவீன வசதியுடன் கூடிய விலங்ககம் அமைப் பதற்கு அரசு மொத்தமாக 300 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து முதல் கட்ட பணிகளுக்காக 105 லட்ச ரூபாய் அனுமதி வழங்கியுள்ளது. தற்சமயம் முதல் கட்ட பணிகள் யாவும் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

33.2. இந்த விலங்ககம் முதலில் 350 எக்டேர் நிலப்பரப்பில் அமைக்க திட்டமிடப்பட்டது. ஆனால் எதிர்கால வளர்ச்சி யினை கருத்தில் கொண்டு தற்சமயம் இவ் விலங்ககம் 510 எக்டேர் பரப்பில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இந்த 510 எக்டேர் பரப் பில் வன விலங்குகளுக்கு தீவனப் பயிர் வளர்க்க 120 எக்டேர் ஒதுக்கப்பட்டுள்ளது. அழகிய இயற்கை சூழல் மிக்க இப்பகுதி விலங்குகளும், பறவைகளும் இயற்கையாக வசித்து வருவதற் கேற்ற சூழ்நிலையை ஏற்படுத்தும். தீவன பயிர் செய்ய ஒதுக்கப் பட்டுள்ள பகுதியில் தோட்டப் பயிர்கள், தீவனப்புல், கொழுக் கட்டைப்புல், சூபாபுல், அகத்திச் செடி, தென்னை போன்ற செடி, புல் வகைகள் மிருகங்களுக்காக வளர்க்கப்பட்டு வரு கின்றன.

33.3. தற்சமயம், இந்த உயிரியல் பூங்காவில் கீழ்க்கண்ட மிருகங்களும் பறவைகளும். மாநகராட்சி மிருகக்காட்சிசாலையிலிருந்து வண்டலூருக்கு மாற்றப்பட்டுள்ளன: —

8 சிறுத்தைகள், 3 ஆப்பிரிக்கா சிங்கங்கள், 7 யானைகள், 8 நீர் யானைகள், 1 வெள்ளை நாரை, 1 கரண்டி மூக்கன். இந்த உயிரியல் பூங்காவில் தற்சமயம் மொத்தமாக 241 வகை யான பறவை இனங்களும், 149 வகையான மிருகங்களும் மற்றும் 15 ஊர்வன வகையை சேர்ந்த பிராணிகளும் அடைப்புகளில் விடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும் இந்த விலங்ககத்திற்கு தேவையான மிருகங்களும் வெளியிடங்களிலிருந்து கொண்டு வரப்படுகின்றன. இந்த விலங்ககம் நாளுக்கு நாள் அதிகமாக மக்கள் கூட்டத்தை கவர்ந்து வருகிறது.

33·4. 1983-84ஆம் ஆண்டில் டிசம்பர் மாத இறுதி வரையில் இந்த விலங்ககம் அமைப்பதற்காக திட்டப் பணியின்கீழும், திட்டம் சேராப் பணியின்கீழும் 51·12 லட்ச ரூபாய் செலவிடப் பட்டுள்ளது. தற்சமயம் இந்த விலங்ககத்தின் இரண்டாவது மற்றும் மூன்றாவது திட்ட வேலைகளுக்காக ரூ. 100·00 லட்சம் செலவிற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. மேற்கண்ட இரண்டாவது மற்றும் மூன்றாவது கட்ட வேலைகள் யாவும் 1984ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதிக்குள் செய்து முடிக்கப்படும்.

33·5. 1984-85ஆம் ஆண்டிற்கு ரூ. 68·71லட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.

[1984 ஏப்ரல் 16

34. இங்கு குறிப்பிடப்பட்ட திட்டங்களுள் பலவும் மாநிலத் திட்டங்களாக செயல்படுத்தப்படுகின்றன. கிராமப் புற விறகு மரத் தோட்ட வளர்ப்புத் திட்டம், மேற்கு மலைத் தொடர் அபிவிருத்தித் திட்டம், மற்றும் வறட்சிக்குள்ளாகும் பகுதி திட்டம் ஆகிய ஒரு சில திட்டங்கள் மத்திய அரசு பொறுப் பேற்கும் திட்டங்களாகும்.

**மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்**

35·1. மாநில திட்டங்கள் தவிர இத்துறை கீழ்க்கண்ட திட்டங் களையும் மத்திய அரசு உதவியுடன் செயல்படுத்தி வருகிறது.

மேற்கு மலைத் தொடர் மேம்பாடு திட்டம்—

(1) நீலகிரி மாவட்டத்தில் தேயிலைத் தோட்டங்கள் வளர்த்தல்.

(2) கன்னியாகுமரி மாவட்டத்தில் கிராம்பு தோட்டங்கள் வளர்த்தல்.

(3) கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தோட்டங்கள் வளர்த்தல்.

(4) மதுரை மாவட்டத்தில் கூழ்மரத் தோட்டங்கள் வளர்த்தல்.

35·2. இத் திட்டங்களுக்கு மத்திய அரசிடமிருந்து 90 விழுக் காடு மானியமாகவும் (Grant) 10 விழுக்காடு கடனாகவும் (Loan) பெறப்படுகிறது.

35·3. இத்திட்டங்கள் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத் தின் ஆரம்ப காலக் கட்டத்திலேயே துவங்கப்பட்டு இனம் 4-ல் குறிப்பிடப்பட்ட திட்டம் தவிர மற்ற திட்டங்களின்கீழ் மரம் நடும் பணி முடிக்கப்பட்டுவிட்டது. முன்னர் வளர்க்கப்பட்ட தோட்டங்களின் பராமரிப்பு, குடியிருப்பு கட்டிடங்கள் கட்டுதல், சாலைகள் அமைத்தல் போன்ற வேலைகள் இத்திட்டத்தின் கீழ் தொடர்ந்து செய்யப்பட்டு வருகின்றன.

35.4. 1983–84-ல், இத்திட்டங்கள் 108.57 லட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

35.5. 1984–85-ல் இத்திட்டங்களை 127.11 லட்சம் ரூபாய் செலவில் தொடர உத்தேசிக்கப்பட்டுள்ளன.



1984 ஏப்ரல் 16]

36. மேற்கூறிய இத்திட்டங்களை செயல்படுத்துவதுடன் இல்லாமல், 1984–85-ல் கீழ்க்காணும் புதிய திட்டங்களும் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது—

(1) திருநெல்வேலி மாவட்டத்தில் 50 எக்டேர் பரப்பில் மென்மரத் தோட்டங்கள் வளர்த்தல்.

(2) கோவை மாவட்டத்தில் உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி தாலுக்காக்களில் 200 எக்டேர் பரப்பில் புதிய கோட்டம் உருவாக்கி கத்தாழைத் தோட்டங்கள் வளர்த்தல்.

(3) மதுரை மாவட்டத்தில் வைகை ஆறு நீர்ப்பிடிப்பு வருசநாடு பகுதியிலுள்ள வேளாண்மைக்கு தகுதியற்ற நிலங் களில் மண் வளப் பாதுகாப்பு வேலைகளை மேற்கொள்ள 1984–85-ஆம் ஆண்டு ஒரு புதிய கோட்டம் நிறுவப்படவுள்ளது. 400 எக்டேர் பரப்பில் இப்பணி மேற்கொள்ளப்படும்.

37.1. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நீலகிரி மாவட்டத்தில் காடு வளர்ப்பு மற்றும் சாலை போடும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 1983–84-ல் இதற்கு ஆக இருக்கும் செலவு 31.28 லட்சம் ரூபாயாகும்.

37.2. 1984–85-ல் இத்திட்டம் 36.05 லட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1984–85-ல் தொடர்ந்து செயல்படுத்தப்படவிருக்கும் இத்திட்டங்கள் தவிர கீழே குறிப்பிடப்படும் புதிய திட்டங்களும் மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நீலகிரி மாவட்டத்தில் செயல்படுத்தப்படும்—

(1) சேகூர் சரகத்தில் 200 எக்டேர் பரப்பில் விறகு மரத் தோட்டங்கள் வளர்த்தல்.

(2) முதுமலை விலங்குகள் புகலிடத்திலும் மற்றும் சுற்றி யுள்ள இடங்களிலும் தடுப்பு அணைகள், சிறு பாலங்கள் முதலியன கட்டுதல்.

(3) நீலகிரி மாவட்டத்தில் மென் மரத் தோட்டங்கள் 100 எக்டேர் பரப்பில் வளர்த்தல்.

(4) நீலகிரி மாவட்டத்தில் ஒரு புதிய கோட்டத்தை ஏற்படுத்தி 50 எக்டேர் பரப்பில் ஏலத் தோட்டங்கள் வளர்த்தல்.

(5) 40 எக்டேர் பரப்பில் கால்நடைத் தீவன மரங்கள் வளர்த்தல்.

38. இத்துறையின் பல்வேறு திட்டப் பணிகளுக்காகச் செலவிடப்பட்ட தொகையும் நிதி ஒதுக்கீடும் வருமாறு :

| திட்டம். | 1982–83 (கணக்குகள்) | 1983–84 (வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு). | 1983–84 திருத்த மதிப்பீடு. | 1984–85 (வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு). |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1. மாநிலத் திட்டம் .. .. | 1,311.84 | 1,396.90 | 1,620.42 | 1,547.76 |
| 2. மண்வளப் பாதுகாப்புத் திட்டம் .. | 60.52 | 75.77 | 76.74 | 78.32 |
| 3. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் (மாநிலத் திட்டம்). | 41.13 | 32.91 | 31.28 | 40.05 |
| 4. மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள். | 105.80 | 163.65 | 186.52 | 178.40 |
| 5. மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம். | 100.02 | 105.15 | 108.57 | 142.69 |
| மொத்தம் .. | 1,619.31 | 1,774·38 | 2,023.53 | 1,987.22 |



வரவு–செலவுத் திட்டம்.

39. வனத் துறையின் வரவு-செலவுத் திட்ட விவரம் வருமாறு.

| கணக்கின் தலைப்பு. | 1982–83 (கணக்குகள்) | 1983–84 (வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு) | 1983–84 (திருத்த மதிப்பீடு). | 1984–85 (வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| மானியக் கோரிக்கை—45 | | | | |
| 1. 259 பொதுப் பணிகள் .. .. | 0.02 | 0.10 | 0.20 | 0.20 |
| 2. 288 சமூக பாதுகாப்பும் நலனும் .. | 125.91 | 15.79 | 34.41 | 21.26 |
| 3. 307 மண்வள நீர்வளப் பாதுகாப்பு. | 19.19 | 18.75 | 21·24 | 21.89 |
| 4. 308 பகுதி மேம்பாடு .. | 7.94 | 8.91 | 10.19 | 15.57 |
| 5. 313 காடுகள் .. .. .. | 1,058.05 | 975.11 | 1,122.46 | 1.147.76 |
| 6. 320 சந்தன எண்ணைத் தொழிற்சாலை. | 0.24 | 0.99 | 1.42 | 0.98 |

மானியக் கோரிக்கை—55

| | | | | |
|---|---|---|---|---|
| 1. 488 சமூகப் பாதுகாப்பு நலன் குறித்த மூலதனச் செலவு. | 23.44 | 32.01 | 32.01 | 32.01 |
| 2. 506 சிறு பாசனம், மண்வளப் பாது காப்புப் பகுதி மேம்பாடு குறித்த மூலதனச் செலவு. | 86.73 | 90.47 | 87.56 | 88.48 |
| 3. 513 காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு. | 1,216.73 | 1,416.47 | 1,616.82 | 1,580.43 |
| 4. 526 சந்தன எண்ணெய் தொழிற்சாலை நிறுவுதல் குறித்த மூலதனச் செலவு. | 22.60 | 19.29 | 25.00 | 0.01 |
| மொத்தம் .. | 2,560.85 | 2,577.89 | 2,951.31 | 2,912.59 |

| கணக்குத் தலைப்பு. | 1982—83 (கணக்குகள்) | 1983—84 திருத்த மதிப்பீடு. | 1984—85 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் லட்சத்தில்) | |
| மொத்த மானியக் கோரிக்கை—45 .. .. | 1,211.35 | 1,189.92 | 1211.66 |
| மொத்த மானியக் கோரிக்கை— 55 .. .. | 1,349.50 | 1,761.39 | 1,700.93 |
| மொத்தம் .. | 2,560.85 | 2,951.31 | 2,912.59 |



முடிவுரை

40. வனச் செல்வத்தினை செவ்வனே நிர்வகிக்கும் நோக்கோடு அரசின் கொள்கைக்கொப்ப தொடர்ந்து வனத்துறை செயல்படும். நாட்டின் சமூக, தொழில்வள, பொருளாதார மேம்பாட்டுக்கான வளர்ச்சிப் பணிகள் தொடர்ந்து தீவிரமாக மேற்கொள்ளப்படும். காடுகளல்லாத வன நிலத்தில் மகத்தான அளவில் ஒரு முற்றிலும் மாறுபட்ட நோக்கோடு செயல்படுத்தப் பட்டு வரும் சமூக நலக் காடுகள் திட்டம் ஏழை எளிய மக்களையும் இத்திட்டத்தில் ஆர்வத்துடன் ஈடுபடுத்தி அவர்களிடையே காடுகளின் முக்கியத்துவம் பற்றிய ஓர் நல்லுணர்வையும், சரியான ஒரு அணுகு முறையையும் ஏற்படுத்துகிறது. அரசு எடுத்து வரும் முயற்சிகள் காரணமாக அரசின் கொள்கைகள் நல்ல வகை யில் நிறைவேற்றப்பட்டு பயன் தந்து வருகின்றன. தொடர்ந்து இதே கொள்கைப் பிடிப்போடு சமூகத்தின் நலன் ஒன்றினையே குறிக்கோளாகக் கொண்டு சரியான திசை நோக்கி நடைபோட்டு நாம் செயல்படுவோம் எனக் கூறி அமர்கிறேன்.

## இணைப்பு III.

(136-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.)

கோரிக்கை எண். 47.

### செய்தி, திரைப்படத் தொழில் நுட்பவியல் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.

மக்களின் ஆற்றலை ஆக்கப் பணிகளில் ஈடுபடுத்தவும், நாட்டை எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு முன்னேற்றம் எய்தவும் செய்தித் துறை, அரசின் சார்பில் சீரிய பங்கைத் தொடர்ந்து ஆற்றி வருகிறது. பல்வகை மக்கள் தொடர்பு தகவல் சாதனங்கள் வாயிலாக மக்களை அணுகியும், அவர்களுக் கான பணிகளைச் செய்தும், இத்துறை தன் கடமைகளை நிறை வேற்றி வருகிறது. அரசின் திட்டங்களை மக்களுக்கு விளக்கு வதோடு, அவர்களின் திறன்களைப் பயன்படுத்தி, மேன்மேலும் ஆக்கப் பணிகள் விரைந்து நடந்தேற இத்துறை அதன் பொறுப்பி லுள்ள பல்வேறு பிரிவுகளையும் ஒருமுகப்படுத்திச் சிறப்பாக இயங்கி வருகிறது.

அரசின் பல்வேறு துறைகளும், அரசின் பொறுப்பிலுள்ள பல்வேறு கழகங்கள், வாரியங்கள், நிறுவனங்கள் ஆகியவைகளும் தருகின்ற விளம்பரங்கள் அனைத்தும் இந்தத் துறையின் வாயி லாக வெளியிடப்படுகின்றன. செய்தி-மக்கள் தொடர்புத் துறையும் தன் பொறுப்பில் பல விளம்பரங்களைத் தயாரித்து அரசின் சார்பில் வெளியிடுகிறது. பொதுவாக அரசின் கொள்கை களையும், திட்டங்களையும், அறிவிப்புகளையும் பொதுமக்களுக்கு விளக்கும் முறையில் இந்த விளம்பரங்கள் அமைகின்றன.

[1984 ஏப்ரல் 16

அனைத்து விளம்பர சாதன ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் ஒவ்வொரு மாத இறுதியிலும் மத்திய அரசின் சார்பில் சென்னை யில் கூட்டப்பட்டு வருகிறது. புதிய 20 அம்சத் திட்டத்தில் காணும் பொருட்களைப்பற்றி மேற்கொள்ளப்பட்ட சாதனைகள் குறித்து விவாதிக்கப்பட்டு, அந்த முடிவுகளின்மீது தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாகவும், செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் கள் மூலமாகவும் புதிய 20 அம்சத் திட்டப் பணிகளை அவ்வப் போது மாநிலத்திலுள்ள கிராம மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் இத்துறை விளம்பரம் செய்து வருகிறது. புதிய 20 அம்சத் திட்டத்தைப் பற்றிய பல கையேடுகள் தயாரித்து, எல்லா மாவட்டங்களுக்கும் அனுப்பி விளம்பரம் செய்ய ஏற்பாடு செய்கிறது.

### பல்துறை விளக்கப் பணிவிழா

மத்திய அரசின் பல்வேறு விளம்பரப் பிரிவுகளும், மாநில அரசுத் துறைகளும் ஒருங்கிணைந்து புதிய இருபது அம்சத் திட்டத்தை மக்களிடையே விளக்கித் தெளிவுபடுத்தும் பொருட்டு, முதன் முறையாக பல்துறை விளக்கப் பணிவிழா மாவட்ட அளவில் இவ்வாண்டு தொடங்கப்பட்டது. இவ்விழா புதுக் கோட்டையில் 1983ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 21 முதல் 27 வரை ஏழு நாட்கள் சிறப்பாக நடைபெற்றது. அப்போது பல்வேறு துறைகள் பங்கேற்ற பொருட்காட்சிகளும் கலை நிகழ்ச்சிகளும் நிகழ்ந்தன. புதுக்கோட்டை மாவட்டத்தில் இவ் விழா நாட்களில் ஏறத்தாழ 400 கிராமங்களில் பல்வேறு வளர்ச்சித் துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் தங்களது துறைகள் ஆற்றும் பணிகள் குறித்த செயல் விளக்கங்களைத் தெரிவித்ததுடன், படக் காட்சிகள், பொருட்காட்சிகள், நாடகங்கள் ஆகிய பயனுள்ள நிகழ்ச்சிகளையும் நடத்தினர். இவ்விழா நாட்களில் கிராமப் பொதுமக்கள் பல்லாயிரக் கணக்கில் கலந்து கொண்டு பயனடைந்தது குறிப்பிடத் தக்கதாகும். இத்தகைய விளக்கப் பணி விழாக்களை இவ்வாண்டும் பல மாவட்டங்களிலும் இத்துறை தொடர்ந்து நடத்தும்.

### கள விளம்பரப் பணி

ஒவ்வொரு மாவட்டத்திலும், செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள் மேற்பார்வையில் மாவட்டங்களிலுள்ள 63 திரைப்பட ஓட்டுநர்கள் மாதம் ஒன்றுக்கு ஒவ்வொருவரும் சரா சரியாக 20 படக் காட்சிகள் நடத்தி, அரசின் கொள்கைகளையும் திட்டங்களையும் மக்கள் அறிந்து கொள்ள உதவும் வகையில் விளம்பரப் பணி ஆற்றுகின்றனர். மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு, குடும்ப நலம் மற்றும் சிறுசேமிப்பு முதலியன குறித்துப் பொதுமக்களுக்கு தெரிவிக்க சிறிய அளவிலான பொருட்காட்சி



1984 ஏப்ரல் 16]

கள் மற்றும் விளக்கக் கூட்டங்கள் நடத்தப்படுவதுடன் வில்லுப் பாட்டு, நாடகம் முதலிய கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்படு கின்றன. மாவட்டங்களின் வளர்ச்சித் திட்டங்களின் சாதனை களைப் பத்திரிகைகள் மூலமாக வெளியிட்டு மக்களுக்கு விளக்கி வருகின்றனர்.

அண்மையில் சென்னையில் நடைபெற்ற அனைத்திந்திய சுற்றுலா-தொழில் பொருட்காட்சியில் எல்லா மாவட்டங்களின் சாதனைகளையும், கலை, சுற்றுலாச் சிறப்புகளையும் விளக்கும் எழில்மிக்க அரங்குகள் அமைக்கப்பட்டன.

### பத்திரிகைத் தொடர்பு

இத்துறையின் செய்தித் தொடர்புப் பிரிவில் அரசால் மக்களுக்குத் தெரிவிக்க வேண்டிய பொது முக்கியத்துவம் வாய்ந்த செய்திகள், செய்தி வெளியீடுகளாக வெளியிடப்படுகின்றன.

அரசின் பல்வேறு திட்டங்கள், சாதனைகள் குறித்து மக்க ளுக்குப் பத்திரிகைகள் மூலம் தெரிவிப்பதற்குத் தகுந்தவாறு பத்திரிகையாளர்கள் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் அழைத் துச் செல்லப்படுகின்றனர். கடந்த ஆண்டு அக்டோபர் திங்களில் தமிழ்நாடு அரசு ஒவ்வோர் ஆண்டும் நடத்தி வரும் வனவிலங்கு வார விழாவையொட்டிப் பத்திரிகையாளர் பயணம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும், இலவசப் பற்பொடித் திட்டம் செயல்படுவதை நேரில் கண்டறிவதற்கு செங்கற்பட்டு மாவட் டத்தில் சில முக்கிய இடங்களுக்குப் பத்திரிகையாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். மாவட்டங்களிலுள்ள செய்தி யாளர்களும் அனைத்துத் திட்டங்கள் செயல்படுவதை நேரில் கண்டறிய அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

அரசின் பல்வேறு திட்டங்கள், பணிகள் பற்றி மக்கள் அறிந்து கொள்வதற்கு மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் அரசுச் செயலர் களுக்காக 'வளரும் தமிழகம்' என்ற தலைப்பில் மாதம் இரு முறை வானொலியில் உரையாற்ற இத்துறை ஏற்பாடு செய் கிறது. அவ்வப்போது தொலைக்காட்சியிலும் அரசின் வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

அரசின் பல்வேறு ஆக்கப் பணிகள் மற்றும் அரசு விழாக்கள் ஆகியவற்றை மக்கள் அறியும் வகையில் தொலைக்காட்சி, திரைப்படம் மூலமும், புகைப்படம் மூலமும் விளம்பரப்படுத்த இத்துறை ஏற்பாடு செய்கிறது.

வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள், தொலைக்காட்சியினர், திரைப்படப் பிரிவினர், வானொலிப் பிரிவினர் மற்றும் வெளி மாநிலப் பத்திரிகையாளர்கள் இந்த மாநிலத்தின் பல்வேறு பகுதி களுக்கும் சென்று அரசின் பணிகள் பற்றித் தெரிந்து கொள்ளவும், செய்திகள் சேகரிக்கவும் இத்துறை ஏற்ற முறையில் ஏற்பாடுகள் செய்து வருகிறது.

128-47—32

[1984 ஏப்ரல் 16

சென்னை நகரிலுள்ள பத்திரிகையாளர்கள், மாவட்டத் தலைநகரிலுள்ள பத்திரிகையாளர்கள் செய்தி சேகரிப்பதற்கு உதவியாக இத்துறை அரசுச் சான்றிதழ் வழங்குகிறது. இவ் வாண்டில் ஏற்பட்ட வறட்சி நிலையின் போதும், வெள்ளத் துயர்நிலையின்போதும், அரசின் துயர் துடைப்புப் பணிகள் செய்தி வெளியீடுகள் மூலமும் புகைப்படங்களைப் பத்திரிகைகளுக்கு வழங் குவதன் மூலமும், தனியான செய்தி விளக்கப் படங்கள் மூலமும் மக்களுக்கு விளக்கப்பட்டன. இம்மாநிலத்தில் அச்சிடப்படும் நூல்களை இத்துறை பதிவு செய்து வருகிறது.

### தொலைக்காட்சி நிலையங்கள்

தமிழ்நாட்டில் கொடைக்கானலில் உயர்சக்தி கொண்ட தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையமும், வேலூர், ஏர்க்காடு, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, கும்பகோணம், நெய்வேலி ஆகிய இடங்களில் குறைந்த சக்தி கொண்ட தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்களும் இவ்வாண்டு இறுதிக்குள் செயல்பட உள்ளன. கொடைக்கானல், கோயம்புத்தூர் ஆகிய ஊர் களில் நிலமும், வேலூர், ஏற்காடு ஆகிய இடங்களில் கட்டிடங் களுடன் கூடிய நிலமும் இவ்வரசால் கொடுக்கப்பட்டுள்ளன. இந்நிலையங்கள் அமைவதற்கான பணிகள் விரைவில் நடைபெற அனைத்து ஒத்துழைப்பையும் இந்த அரசு அளித்து வருகிறது. நாகர்கோவிலில் அமைக்கப்படும் வானொலி நிலையத்திற்கான நிலமும், கட்டிடமும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

### விழாக்கள்

நாட்டு மக்களுக்கு வலராற்று நிகழ்ச்சிகளையும் மக்களுக் காகப் பாடுபட்ட தலைவர்களின் பெருமைகளையும் எடுத்து விளக்குவதற்காக விழாக்களையும், தலைவர்களின் பிறந்த நாள் விழா நினைவு நாள் நிகழ்ச்சிகளையும் இத்துறை நடத்தி வருகிறது. இவ்வாண்டு வறட்சியின் காரணமாகப் பல்வேறு விழாக்கள் 1983-84-ல் நடத்துவது நிறுத்தி வைக்கப்பட்டது.

புதுடெல்லியில் இந்த ஆண்டு குடியரசு தின விழா அணி வகுப்பில் பெரியார் மாவட்டத்திலிருந்து 30 பேர்கள் அடங்கிய புலியாட்டக் குழு தமிழ்நாடு அரசு சார்பில் கலந்து கொண்டது. சென்னையில் இந்த ஆண்டு நிகழ்ந்த குடியரசு நாள் விழா அணிவகுப்பிலும் தமிழகத்து நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகளும் அலங்கார ஊர்திகளும் ஏற்பாடு செய்யப்பட்டன.

### மகாகவி பராதியார் நூற்றாண்டு விழாத் தொடர்பான பணிகள்

மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழாவினை 1981 டிசம்பர் முதல் 1982 டிசம்பர் வரை அரசு சிறப்பாகக் கொண்டாடியது. நூற்றாண்டின் நினைவாக மகாகவி பாரதியாரின் படைப்புக் களைக் கவிதை, கட்டுரை, கதை என்ற மூன்று தொகுதிகளாகத்



1984 ஏப்ரல் 16]

தொகுத்து வெளியிட அரசு முடிவு செய்துள்ளது. இப்பணி தஞ்சாவூரிலுள்ள தமிழ்ப் பல்கலைக் கழகத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. இப்பணிக்காக அரசு ரூபாய் மூன்று இலட்சம் நிதி ஒதுக்கீடும் செய்துள்ளது. டில்லியில் பாரதியாரின் பத்தடி உயரத்தில் முழு உருவச் சிலையினை ஒரு முக்கியமான இடத்தில் நிறுவிடவும் அரசு முடிவு செய்துள்ளது. பாரதியார் பிறந்த இடமான எட்டயபுரத்தில் கலைக்கூடம் ஒன்று சிறந்த முறையில் அமைக்கும் கருத்துருவினையும் அரசு பரிசீலித்து வருகிறது.

### தந்தை பெரியார் நூற்றாண்டு விழாத் தொடர்பான திட்டங்கள்

தந்தை பெரியார் நூற்றாண்டு விழாக்களின் தொடர்ச்சியாகப் பெரியாரின் பொன்மொழிகள் அடங்கிய 'பெரியார் புரட்சி மொழிகள்' என்ற நூல் பத்தாயிரம் பிரதிகள் மலிவுப் பதிப்பாக வெளியிடப்பட்டது. அந் நூலின் மறு பதிப்பு ஒன்று மீண்டும் வெளியிடவும், ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யவும் நட வடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தந்தை பெரியார் நூற் றாண்டு விழாக் குழுவின் பரிந்துரையின்படி, தந்தை பெரியார் வாழ்க்கை வரலாற்றைச் சிறுவர்களுக்கு விளக்கும் வகையில் அவரது வாழ்க்கை வரலாற்றுச் சித்திரப் படத்தொகுப்பை இத்துறை தயாரித்து வருகிறது.

1924ஆம் ஆண்டு கேரளத்தில் 'வைக்கம்' என்ற இடத்தில் பெரியார் அவர்கள் தீண்டாமைக்கு எதிராகப் போராடிய வரலாற்றின் நினைவாக, வைக்கத்தில், 'பெரியார் வளாகம்' அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற் காக, 91 சென்ட் நிலப்பரப்பினை கேரள அரசு இலவசமாகத் தரத் தகுந்த ஆணை பிறப்பித்துள்ளது. நிலம் ஒப்படைவு செய்யப்பட்டவுடன் தந்தை பெரியார் சிலையும், நூலக அரங் கமும், பூங்காவும், இளைஞர் விளையாட்டுத் திடலும் ரூ. 11.5 இலட்சம் செலவில் வைக்கத்தில் நிறுவிட உத்தேசிக்கப் பட்டுள்ளது.

சென்னையில் பெரிய அளவில் மாநாட்டு அரங்கம் ஒன்றையும், அறிவியல் ஆய்வகம் ஒன்றையும் தந்தை பெரியார் நினைவாக அமைத்திடும் கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது.

எல்லா மாவட்டங்களிலும் பெரியாரின் பொன் மொழி களைக் கொண்ட பெரியார் நூற்றாண்டு நினைவுத் தூண்கள் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, இதுவரை 14 மாவட்டங்களில் தூண்கள் வைக்கப்பட்டுள்ளன. விரைவில் சென்னையிலும், நாகர்கோவிலிலும் நினைவுத் தூண்கள் அமைக்கப்படும்.

**பொருட்காட்சிகள்**

பொதுமக்களுக்குப் பொழுதுபோக்காக அமைவதுடன், பொது அறிவை அளிக்கும் வகையிலும் பொருட்காட்சிகள் பயன்பட்டு வருகின்றன. சேலம், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப் பள்ளி, வேலூர், கும்பகோணம், திருநெல்வேலி ஆகிய நகரங் களில் 1978ஆம் ஆண்டு முதல் 1984 பிப்ரவரி முடிய அரசு நடத்திய மொத்தம் 19 பொருட்காட்சிகளில் நுழைவுக் கட்டணம், கடை வாடகை, புழு உரிமை ஏலம், மின் இணைப்புக் கட்டணம் மூலம் கிடைத்த மொத்த வருமானம் ரூ. 2 கோடியே 48 இலட்சம். இதில் கட்டுமானச் செலவுகள், மின் செலவுகள், கலை நிகழ்ச்சிகள் செலவு மொத்தமாக ரூ. 1 கோடியே 17 இலட்சம். பொருட் காட்சியில் பங்குகொண்ட அரசுத் துறைகளின் மொத்தச் செலவினம் ரூ. 59 இலட்சம். அரசுக்குக் கிடைத்துள்ள நிகர வருமானம் ரூ. 72 இலட்சமாகும். பொதுவாக செலவினங்களை மட்டுமே மேற்கொள்ளும் இத்துறை, பொருட்காட்சிகள் நடத்துவதன் மூலம் அரசுக்கு வருவாய் ஈட்டித் தரும் துறையாகச் செயலாற்றி, இந்தியாவிலேயே தனித் தன்மையுடன் விளங்குகிறது.

மாநிலத்தில் அரசு பொருட்காட்சிகளை நடத்துவதுடன், பிற மாநிலங்களில் நடைபெறும் பொருட்காட்சிகளில் அரசின் சார்பாக இத்துறை பங்குபெற்று அரசின் பல்வேறு துறைகளின் செயல்பாடுகளையும் சாதனைகளையும் விளக்கும் பணியினை ஆற்றி வருகிறது.

தமிழ்நாட்டின் சார்பாக டில்லியில் 1983 அக்டோபர் மாதத் தில் நடைபெற்ற பூல்-வாலோன்-கி-சாயர் (மலர் ஊர்வலம்) விழாவிலும், டில்லியில் நவம்பர்-டிசம்பர் மாதங்களில் இந்திய உலக வர்த்தகப் பொருட்காட்சியில் அமைக்கப்பட்ட தமிழ்நாடு அரங்கிலும் இத்துறை பங்கு கொண்டது. அங்கு சிறப்பான வகையில் 'தமிழ்நாடு தினம்' கொண்டாட ஏற்பாடு செய்தது.

**நினைவகங்கள்**

சென்னையிலுள்ள வள்ளுவர் கோட்டம், அண்ணா சதுக்கம், காமராஜ் நினைவாலயம், இராஜாஜி நினைவாலயம், காமராஜ் நினைவு இல்லம், காஞ்சிபுரத்திலுள்ள பேரறிஞர் அண்ணா நினைவு இல்லம், ஈரோட்டிலுள்ள பெரியார் அண்ணா நினைவகம், தர்மபுரி மாவட்டம் தொரப்பள்ளியிலுள்ள இராஜாஜி நினைவு இல்லம், தில்லையாடியிலுள்ள வள்ளியம்மை நினைவு மண்டபம், விருதுநகரில் அமைந்துள்ள காமராஜ் நினைவு இல்லம், எட்டய புரத்திலுள்ள பாரதி மணி மண்டபம், ஒட்டப்பிடாரத்தி லுள்ள வ.உ. சிதம்பரனார் நினைவு இல்லம், கன்னியாகுமரி யிலுள்ள காந்தி மண்டபம் ஆகிய நினைவகங்கள் இத்துறையின் கண்காணிப்பிலுள்ளன.



சென்னை அண்ணா சதுக்கத்திற்கு வருகை தரும் பொது மக்கள் பயன்பெறும் வகையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் சொற்பொழிவு தானே இயங்கும் ஒலிப்பதிவு நாடாக்கள் மூலம் ஒலி பரப்பப்பட்டு வருகின்றது. பேரறிஞர் அண்ணா எழுதிய நூல்கள், மற்றும் அண்ணா பற்றிய பிறர் எழுதிய நூல்கள் அனைத்தும் அடங்கிய நூலகம் ஒன்று, அண்ணா சதுக்கத்தின் அருகில் அமைப்பதற்குக் கட்டிடம் கட்டும் பணி நடந்து வருகின்றது.

சென்னை வள்ளுவர் கோட்டத்தை மேலும் அழகுப்படுத்தும் வகையிலும் அங்கு வருகை தரும் மக்களுக்குப் புதிய வசதிகளை அளிக்கும் வகையிலும் ரூ. 10 இலட்சம் செலவு மதிப்பீட்டில், அங்காடிக் கட்டிடம், சிற்றுண்டி விடுதி, சுற்றுலாப் பேருந்துகள் நிறுத்த கொட்டில், சுற்றி மதிற்சுவர் கட்டுதல் மற்றும் தோரணவாயிலின் எழிலை மேலும் பெருக்கப் பூங்கா அமைத்தல் முதலிய மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கிண்டி, இராஜாஜி நினைவகத்தில் இராஜாஜி அருங்காட்சி யகம் அமைப்பதற்காக ரூ. 3 இலட்சம் செலவில் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு விட்டது. அருங்காட்சியகம் அமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து சென்னை நகருக்கு வரும் வழியில் கத்திப்பாரா சந்திப்பில் ரூ. 11.25 இலட்சம் மதிப்பீட்டில் ஜவஹர்லால் நேருவுக்கு உருவச் சிலை அமைத்து மாபெரும் நினைவுச் சின்னம் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

கன்னியாகுமரியிலுள்ள காந்தி மண்டபத்தில் ரூ. 1.15 இலட் சம் செலவு மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் கட்டுதல், பூங்கா, மற்றும் அழகிய புல்வெளிகள் அமைத்தல் போன்ற மேம்பாட்டுப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

நாகர்கோவிலில், செய்குத்தம்பி பாவலருக்கு ரூ. 4 இலட்சம் செலவில் நினைவு மண்டபம் அமைக்கும் பணி தொடங்கப் பட்டுள்ளது. எட்டயபுரத்தில் உமறுப் புலவர் நினைவாக நூலகம் ஒன்று அமைக்கும் பணியினைக் கல்வித் துறை மேற்கொண்டு வருகிறது.

குற்றாலத்தில் இரசிகமணி டி.கே.சிதம்பரநாதனார் வாழ்ந்த இல்லம், திருச்சிராப்பள்ளியில் விடுதலை வீரர் வ. வே. சுப்பிர மணியனார் வாழ்ந்த இல்லம், சென்னை திருவல்லிக்கேணியில் மகாகவி பாரதியார் வாழ்ந்த இல்லம், நாகர்கோவிலில் கலை வாணர் என். எஸ். கிருஷ்ணன் வாழ்ந்த இல்லம் ஆகிய இல்லங் களை நினைவகங்களாக மாற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

[1984 ஏப்ரல் 16

நாகர்கோவிலில் ஜீவானந்தம் சிலை, கன்னியாகுமரி மாவட் டத்திலுள்ள அதங்கோட்டில் அதங்கோட்டாசான் சிலை, சேலத் தில் காமராசர் மற்றும் விஜயராகவாச்சாரியார் சிலைகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. இவைகள் சீக்கிரமே திறந்து வைக்கப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. செங்கோட்டையில் வாஞ்சிநாதன் சிலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள திருமயத்தில் சத்திய மூர்த்தி நினைவாக ஒரு நூல் நிலையம் அமைப்பதற்கும், சிலை நிறுவுவதற்கும் உரிய நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் தொடங்க உள்ளன. தர்மபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டியில் சுப்பிரமணிய சிவா நினைவுத்தூண் அமைக்கும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

### செய்தி நிலையங்கள்

சென்னை, மதுரை, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் மூன்று செய்தி நிலையங்கள் இயங்குகின்றன. அவை நூலகம், படிப் பகம் கொண்டதாகவும், படக்காட்சிகள் நடத்திட வசதிகள் கொண்டதாகவும் உள்ளன. மக்களுக்கு அரசின் திட்டங்கள் குறித்துச் செய்திகளைக் கொடுக்க வசதிகள் இந்தச் செய்தி நிலையங்களில் உள்ளன. இவ்வாண்டு இந்த மூன்று செய்தி நிலையங்களில் இயங்கி வரும் நூலகங்கள், படிப்பகங்கள் ஆகிய வற்றில் 1.5 இலட்சம் பேர் பயன்பெற்றுள்ளனர்.

### கலைவாணர் அரங்கம்

அரசினர் தோட்டத்தில் உள்ள கலைவாணர் அரங்கம் அரசு பொறுப்பில் இயங்குகிறது. இந்தக் குளிர்சாதன அரங்கு, அரசு விழாக்கள், தனியார் நிகழ்ச்சிகள், கலை நிகழ்ச்சிகள் ஆகிய வற்றிற்கும் ஒதுக்கப்படுகிறது. தனியாருக்குக் கட்டணம் வசூ லித்தும், அரசுத் துறைகளுக்கு சலுகை கட்டணம் வசூலித்தும் ஒதுக்கப்படுகிறது. தினந்தோறும் படக்காட்சிகள் இங்கு நடத்தப்படுகின்றன. 1983 ஏப்ரல் முதல் 1984 பிப்ரவரி முடிய இவ்வரங்கத்தின் மூலம் நிகர வருவாயாக ரூ. 3.42 இலட்சம் அரசு ஈட்டியுள்ளது.

### அண்ணா கலையரங்கம், வேலூர்

வட ஆர்க்காடு மாவட்டம், வேலூரில் உள்ள அண்ணா கலையரங்கில் தினசரி படக்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. கலை நிகழ்ச்சிகளும் அரசு விழாக்களும் நடத்தப்படுகின்றன. 1983 ஏப்ரல் முதல் 1984 பிப்ரவரி முடிய இவ்வரங்கத்தின் மூலம் நிகர வருவாயாக ரூ. 1.55 இலட்சம் அரசு பெற்றுள்ளது.



1984 ஏப்ரல் 16]

### தமிழரசு

"தமிழரசு" தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிடப்படு கின்றன. இந்த இதழ்கள் அரசின் செய்திகளையும், கொள்கை களையும் அரசின் ஒருங்கிணைந்த திட்டங்களையும் பொதுமக்க ளுக்குத் தெரிவிக்கின்றன. தமிழ் இதழ் 45,000 இதழ்களும் ஆங்கில இதழ் 4,000 இதழ்களும் அச்சிடப்படுகின்றன. இவை முகவர்கள், சந்தாதாரர்கள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்டச் செய்தி, மக்கள் தொடர்பு அலுவலர்கள் மூலம் விற் பனையாகின்றன. ஆண்டுதோறும் சாதனை மலர்களும் அவ்வப்போது இலவச இணைப்புகளும் வெளியிடப்பட்டு அரசின் ஆக்கப் பணிகள் தெரியப்படுத்தப்படுகின்றன. அரசின் ஆக்கப் பணிகளையும் திட்டங்களையும் புத்தகங்கள், சிறு வெளியீடுகள், சுவரொட்டிகள் மூலமும் வெளியிட்டு வருகிறது. கடந்த ஆண் டில், இந்தியப் பிரதமரின் புதிய இருபது அம்சத் திட்டத்தினைச் செயல்படுத்த தமிழ்நாடு அரசு மேற்கொண்டு நிறைவேற்றியுள்ள திட்டங்கள் அனைத்தையும் சிறு வெளியீடுகள் வடிவில் வெளியிட்டு மக்களுக்கு அறிவித்துள்ளது. முதலமைச்சரின் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் பற்றிய பல்வேறு வெளியீடுகளை ஆங்கிலத் திலும் தமிழிலும் வெளியிட்டுள்ளதோடு வண்ணச் சுவரொட்டி களையும் அச்சிட்டு வழங்கியுள்ளது. இலவசப் பற்பொடித் திட்டம் குறித்தும் தமிழ்நாட்டின் நாட்டுப்புறக் கலைகள் குறித்தும் வெளியீடுகள் வெளியிட்டதுடன் அரசுத் துறைகளின் ஆக்கப் பணிகள் குறித்து இருப்பத்தைந்து சிறப்பு வெளியீடு களையும் தயாரித்து அளித்துள்ளது.

### தமிழரசு அச்சகம்

இவ்வாண்டு எச்.எம். டி. நிறுவனத்திலிருந்து இரண்டு அச்சு இயந்திரங்கள் ரூ. 5.38 இலட்சம் விலையில் வாங்கி நிறுவப் பட்டுள்ளன. அச்சகத்தை விரிவுபடுத்தும் நோக்கத்தோடு, அச்சகத்தை ஒட்டி ரூ. 6.5 இலட்சம் செலவில் புதிய கட்டிடம் கட்டிப் பயன்பட்டுவருகிறது. தமிழரசு இதழ்கள் அச்சிடத் தேவையான பத்திரிகைத்தாள்கள் இந்திய அரசு வர்த்தகக் கழகத்திடமிருந்து பெறப்படுகிறது. தமிழரசு அச்சகத்தில் 'தமிழரசு' (தமிழ்) மாதம் இருமுறை மற்றும் ஆங்கிலம் மாத மொருமுறை இதழ்கள் அச்சிட்டு வெளியிடப்படுகின்றன.

மேலும் கீழ்க்கண்ட இதழ்களும் அச்சிடப்படுகின்றன:—

(1) "திட்டம்" (மத்திய அரசு இதழ்) மாதம் இருமுறை வெளியீடு.

(2) "திருக்கோயில்" (இந்து சமய அறநிலையத் துறை) மாத இதழ்.

(3) "உழைப்பவர் உலகம்" (தொழிலாளர் நலம்) மாத இதழ்.

(4) ''தமிழகக் கல்வி'' (கல்வித் துறை காலாண்டு இதழ்)

(5) ''தமிழர் விளையாட்டு மடல்'' (விளையாட்டுத் துறை) மாத இதழ்.

இவை தவிர, அழைப்பிதழ்கள், துண்டுப் பிரசுரங்கள், விண்ணப்ப மனுக்கள், மடிப்பேடுகள், சுவரொட்டிகள் ஆகியவை யும் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன.

திரைப்படங்களுக்கு உதவித் தொகை, சிறந்த திரைப்படங்கள்—
கலைஞர்களுக்குப் பரிசுகள்.

தேசிய அளவில் மக்களின் நலத்தை அடிப்படையாகக்கொண்டு
சமூகப் பொருளாதார நிலைகளை முன்னேற்ற உதவும் கருத்துக்
களான மதுவிலக்கு, சாதி ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு, குடும்ப
நலம், நாட்டின் ஒருமைப்பாடு ஆகியவற்றை மையக் கருத்தாக
வைத்துத் திரைப்படம் தயாரிப்பவர்களுக்கு உதவுவதற்கான
''நிதி உதவித் திட்டம்'' 1978-ல் அறிமுகப்படுத்தப்பட்டது.
இத்திட்டத்தின் கீழ் ஒவ்வோர் ஆண்டும் ஒரு படத்திற்கு ஒரு
இலட்ச ரூபாய் வீதம் தேர்வு செய்யப்பட்ட 5 படங்களுக்கு அரசு
உதவித் தொகை அளித்து வருகிறது.

உயர்ந்த கலைத்திறமும், சிறந்த தொழில் நுணுக்கமும்
செறிந்த படங்கள் தயாரிப்பதை ஊக்குவிப்பதற்காக ஆண்டு
தோறும் பரிசுகள் வழங்கும் திட்டம் 1978-79ஆம் நிதி ஆண்டி
லிருந்து செயற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ்ச்
சிறந்த திரைப்படக் கலைஞர்கள் மற்றும் தொழில் நுட்ப
வல்லுநர்களுக்கும் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

குழந்தைக்ள் திரைப்படங்களுக்கு உதவி

இந்திய குழந்தைகள் திரைப்படச் சங்கத்தின் வேண்டு
கோளின்படி, சிறந்த குழந்தைகள் திரைப்படங்களைத் தமிழில்
தயாரிக்கவும், பிற மொழிகளில் தயாரிக்கப்படும் சிறந்த
குழந்தைகள் திரைப்படங்கள் தமிழில் மொழிமாற்றம் செய்யவும்,
ரூ. 4 இலட்சம் உதவி செய்ய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
இதில் ஏற்கெனவே ரூ. 3 இலட்சமும், இவ்வாண்டு ''எங்களாலும்
முடியும்'' என்ற படம் தயாரித்த குழந்தைகள் திரைப்படச்
சங்கத்திற்கு ஒரு இலட்சம் ரூபாயும் வழங்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் முதல் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் நினைவாக மூன்று சிறந்த குழந்தைகள் திரைப்படத் திற்கு பரிசுகள் வழங்கப்படுகின்றன. முதல் பரிசாக ரூ. 10,000





ரொக்கமும், ரூ. 5,000 மதிப்புள்ள தங்கப் பதக்கமும், மற்றும் இரண்டு சிறந்த குழந்தைகள் திரைப்படங்களுக்கு ஒவ்வொன்றுக் கும் ரூ. 5,000 மதிப்புள்ள தங்கப்பதக்கங்கள் வழங்கப்படுகின்றன.

தமிழ்நாடு திரைப்படம், தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம்.

இந் நிறுவனத்தில் திரைப்படத் தயாரிப்பு, தொலைக்காட்சி சம்பந்தப்பட்ட எல்லா பிரிவுகளிலும் பயிற்சி அளித்துத் தேர்வு நடத்தி வெற்றி பெற்றோர்க்கு சான்றிதழ் வழங்குவதுடன், திரைப்படத்திற்குள்ள ஆற்றலை மக்களுக்கு உணர்த்துதல், திரைப் படத் தொழில் பற்றிய ஆய்வு நிகழ்த்துதல் ஆகியவை இந்நிறு வனத்தின் குறிக்கோளாகும். இந்நிறுவனத்தில் அளிக்கப்படும். பயிற்சி பற்றிய விவரமும் பிற விவரங்களும் கீழே கொடுக்கப்பட் டுள்ளன:—

| பயிற்சிப் படிப்பு. | பயிற்சி ஆண்டு. | சேர்க்கப் படும் மாணவர்கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| திரைப்படம் இயக்குதல், திரைக்கதை வசனம் எழுதுதல். | 3 | 10 |
| ஒளிப்பதிவு .. .. .. | 3 | 15 |
| ஒலிப்பதிவு (ஒலிப்பொறியியல்) .. | 3 | 10 |
| படச்சுருள் கழுவுதல் .. .. | 3 | 10 |
| படத் தொகுப்பு .. .. .. | 2 | 10 |
| நடிப்பு .. .. .. | 1 | 20 (ஆண் 10) பெண் 10). |

இந்தியாவிலேயே படச்சுருள் கழுவுதல், நடிப்புத்துறை ஆகியவற்றிற்கான பயிற்சிகள் இந்நிறுவனத்தில்தான் கொடுக்கப் பட்டு வருகிறது.

படப்பிடிப்புத் தளங்களும், திரைப்படத் தொழில் நுட்பக் கல்லூரியிலுள்ள சாதனங்களும் விரும்புகின்ற தனிப்பட்ட திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கு வாடகைக்குக் கொடுக்கப் படுகின்றன. இதனால் வருமானம் ஓரளவு கிடைப்பதுடன் இத்தொழிலில் ஈடுபட்டுள்ள புகழ் பெற்ற தொழில் நுட்பப்

[1984 ஏப்ரல் 16

பணியாளர்களின் ஆற்றலை நேரில் கண்டு அவர்களோடு பணிபுரிய
மாணவர்களுக்கு நல்ல வாய்ப்பும் கிடைக்கிறது. இந்நிறு
வனத்தில் பயின்று வெற்றியுடன் திரும்பும் மாணவர்களுக்குப்
பொதுத்துறையிலும் தனியார் துறையிலும் வேலை வாய்ப்புகள்
நன்முறையில் உள்ளன. குறிப்பாக, தொலைக்காட்சி நிலை
யங்களிலும் சினிமாப் படத்துறையிலும் இவர்களின் பணி சிறந்து
விளங்குகிறது.

இந்நிறுவனத்திற்காகக் கடந்த ஆண்டில் இசை ஒலிப்பதிவு,
மறு ஒலிப்பதிவு ஆகிய துறைகளில் மாணவர்களுக்குப் பயிற்சி
அளிக்க ரூ. 20 இலட்சம் மதிப்புள்ள நவீன வசதிகள் கொண்ட
ஒலிப்பதிவுக் கருவிகள் இறக்குமதி செய்யப்பட்டன. அவைகள்
ஒலிப்பதிவுக் கூடத்தில் பொருத்தப்பட்டு, மாணவர்களுக்குப்
பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

மேலும், வண்ணப் படச் சுருள் கழுவுதல் பிரிவிற்காக
வண்ணப்படப் பிரதி எடுக்கும் கருவி, ரூ. 15.25 இலட்சம்
செலவில் இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது. மற்றும்,
வண்ணப்படம் கழுவும் கருவி ரூ. 6 இலட்சம் செலவில்
வாங்கி அவைகளுக்காக ரூ. 3 இலட்சம் செலவில் கட்டப்பட்ட
கட்டிடத்தில் நிறுவப்பட்டு வருகிறது. இப்பயிற்சி நிறுவனத்தின்
மாணவர்கள் விடுதி ரூ. 5 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது.

இந்நிறுவனத்தை விரிவுப்படுத்தும் திட்டத்தின்கீழ் வருகிற
ஆண்டு முதல் தொலைக்காட்சி தயாரிப்பு மற்றும் திரை
யரங்கு நிர்வாகம் பற்றிய துறைகளில் பயிற்சி அளிக்கும் புது
டிப்ளமோ படிப்புகள் தொடங்க ஆவன செய்யப்பட்டு வருகிறது.
இதற்காக வண்ணப்பதிவு செய்யும் தொலைக்காட்சிக் கருவிகள்
ரூ. 5 இலட்சம் செலவில் இறக்குமதி செய்வதற்கு அரசு
அனுமதி அளித்துள்ளது.

இது தவிர, உலக வங்கி மற்றும் ஜப்பான் நாட்டின் உதவி
பெற்று இந்நிறுவனத்தை மேலும் விரிவுபடுத்த அரசு திட்ட
மிட்டுள்ளது.

## தமிழ்நாடு திரைப்படப் பிரிவு

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு அரசின் ஆக்கப் பணிகளையும்
அரசின் சார்பில் மக்கள் பங்கேற்கும் எல்லா பொது நிகழ்ச்சி
களையும் செய்திப் படங்களாக எடுத்து மத்திய அரசின் திரைப்
பட வெளியீட்டுப் பிரிவின் மூலம் இம்மாநிலத்திலுள்ள திரை
யரங்குகளில் வெளியிடுகிறது.

இத்துடன் அரசின் பல்வேறு துறையின் பணிகளையும்
மக்களுக்குத் தேவையான செய்திகளையும் கருத்து விளக்கப்
படங்களாக (டாகுமெண்டரி) எடுத்து, இத்திரைப்படப்
பிரிவு வெளியிடுகிறது. இப்படங்கள் 35 மி.மீ. அளவில்



1984 ஏப்ரல் 16]

திரையரங்கங்களுக்கு மத்திய அரசு திரைப்படப் பிரிவின்
மூலம் வெளியிடப்படுகின்றன. கருத்து விளக்கப் படங்களையும்,
செய்திப் படங்களையும் 16 மி.மீ. அளவில் சுருக்கி அரசின்
மாவட்டச் செய்தி-விளம்பரம் பிரிவுகளுக்கு அனுப்பப்பட்டு
பொதுமக்களுக்குக் கிராமப்புறங்களில் காட்டப்படுகின்றன.
கிருஷ்ணா குடிநீர்த் திட்டம் பற்றி வண்ணத்தில் இந்த ஆண்டு
எடுத்த படம் பாராட்டைப் பெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

## தமிழ்நாடு திரையரங்குக் கழகம், சென்னை

தமிழ்நாடு திரையரங்குக் கழகம் பொறுப்பு வரையறுக்கப்
பட்ட அரசுத் தனி நிறுவனமாகத் தொடங்கப்பட்டது. தமிழ்
நாட்டில் பகுதி நிலைத் திரையரங்குகளைக் கட்டவும், அவற்றை
நிலையான திரையரங்குகளாக மாற்றவும், புதிதாக நிலையான
திரையரங்குகள், உலவும் திரையரங்குகள், திறந்த வெளித்
திரையரங்குகள் கட்டவும், திரைப்படக் கருவிகள் வாங்கவும்
நிதி உதவி செய்வது இக்கழகத்தின் நோக்கமாகும். இதுவரை
இக்கழகம் பகுதி நிலைத் திரையரங்குகள் கட்டவும், அவற்றை
நிலையான திரையரங்குகளாக மாற்றவும் மட்டுமே கடனுதவி
செய்துள்ளது. இக்கழகத்திற்கு அரசு முழுவதுமாகச் செலுத்திய
மூலதனம் ரூ. 35 இலட்சம். மேலும் ரூ. 15 இலட்சம் நீண்ட
காலக் கடனாக அரசு அளித்துள்ளது.

ஒரு திரையரங்கிற்கு உச்ச அளவு அளிக்கும் தொகை
ரூ. 1.20 இலட்சம் ஆகும். இக்கடன் தொகை ஆண்டு
ஒன்றுக்கு 17 சதவீத வட்டி வீதம் 60 சமமான தவணையில்
வசூலிக்கப்படுகிறது.

இந்நாள் வரையில் 80 பேருக்கு ரூ. 89.15 இலட்சம் கடன்
தொகை வழங்கியுள்ளது. இவர்களில் 76 பேர் திரையரங்கு
களைக் கட்டி முடித்துத் திரைப்படக் காட்சிகள் நடத்தி
வருகின்றனர். புதிதாகக் கடன் வழங்குவது பற்றிய கொள்கை
மறு ஆய்வில் உள்ளது. முன்பே கொடுக்கப்பட்ட கடன் பாக்கி
மற்றும் வட்டியாக உள்ள ரூ. 51.35 இலட்சத்தை வசூல் செய்ய
நீதிமன்றங்களில் 26 சிவில் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

இதுவரை தனியாருக்கு மட்டுமே கடனுதவி செய்துவந்த
இந்நிறுவனம் முதன் முதலாக ஏற்காடு நகரியத்தில் ரூ. 2.80
இலட்சமும் செலவு செய்து ஓர் திரையரங்கம் கட்டி முடித்
துள்ளது. 1983-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19-ம் நாள் முதல்
இது செயல்பட்டு வருகிறது.

*[1984 ஏப்ரல் 16*

**தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்கு படுத்துதல்) சட்டம் 1955 மற்றும் தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்கு படுத்துதல்) விதிகள் 1957.**

திரைப்படத் தொழில் தமிழ்நாட்டு மக்களில் பெரும்பகுதியினருக்கு, குறிப்பாக ஏழைஎளிய நடுத்தரமக்களுக்கு ஒரு பொழுது போக்கு சாதனமாக இருப்பதுடன் மட்டுமல்லாமல், ஊராட்சி நிறுவனங்களுக்கும் நகராட்சிகளுக்கும் கணிசமான வருவாயை வழங்கும் ஒரு முக்கிய சாதனமாக இருக்கிறது. அரசுக்கும் ஓரளவிற்கு வருமானத்தை அளிக்கிறது. திரைப்படத் தொழில் வளர்ச்சி அடைய ஊக்கம் அளிக்கும் வகையில் திரையரங்குகளை அதிகப்படுத்தும் முயற்சியாக விதிகள் எளிதாக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாகத் தமிழ் நாட்டின் முக்கிய நகரங்களில் எல்லாம் தரமான திரையரங்குகள் குறிப்பிடத்தக்க வகையில் பெருகியுள்ளன. பொது மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் உலவும் திரையரங்குகளில் எளிதில் தீப்பிடிக்கும் கூரைகளை அகற்றிவிட்டு, தீப்பிடிக்காத கூரைகளை அமைக்க வேண்டும் எனவும் இன்னும் மற்ற பாதுகாப்புகளையும் ஏற்படுத்துவது எனவும் உலவும் திரையரங்குகள் கட்டுவதில் தேவையான கட்டுப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அதனால் உலவும் திரையரங்குகளின் கட்டுமானச் செலவு உயர்ந்துள்ள நிலையில் உரிம காலத்தை 5 ஆண்டுகளாக உயர்த்த வேண்டும் என்ற பரவலான கோரிக்கைகளைத் தீவிரமாக ஆய்ந்து, இப்போது 5 ஆண்டுகளாக உயர்த்தப்பட்டுள்ளது. அதே சமயத்தில், திரைப்படங்களுக்குச் செல்லும்போது மக்களுக்குத் தேவையான எல்லா வசதிகளும், பாதுகாப்புகளும் கிடைக்குமாறு பார்த்துக் கொள்வதில் அரசு கண்டிப்பாக இருக்கிறது. பொதுமக்களின் பாதுகாப்பினை மனதிற்கொண்டு தீப்பிடிக்காத பெயிண்ட்டுகளை மரத் தூண்களிலும்; கூரைச் சட்டங்களிலும் அடிக்கும்படி வலியுறுத்தி வருகின்றது.

திரையரங்குகளில் நுழைவுச் சீட்டுக்களைக் கள்ளச் சந்தைகளில் விற்பதைத் தடை செய்ய உரிமம் பெற்றவர்கள் இத்தகைய கள்ள விற்பனையில் உடன்பட்டவர்களாக இருந்தால், அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கும்படி எல்லா உரிமம் வழங்கும் அதிகாரிகளுக்கும் அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 1955 அல்லது தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குபடுத்துதல்) விதிகள் 1957 இன் கீழ் இதற்காகத் தண்டனை அளிக்க வகை செய்வதையும் அரசு ஆய்வு செய்து வருகிறது.

மாநிலத்தில் ஆட்சி மொழியாக இருக்கும் தமிழ் மொழியினைப் பேசும் மக்களின் நலனைக் கருதி, ஓராண்டில் ஒன்பது மாதங்களுக்கு மேற்படாத கால அளவிற்குத் தமிழ்த் திரைப்படங்களை மாநிலத்திலிருக்கும் திரையரங்குகள் திரையிட வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கும் அதிகாரத்தை அரசுக்கு வழங்கும் அவசரச் சட்டம் ஒன்று பிறப்பிக்கப்பட்டு, பின்னர் இது சட்டாகவும் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டுள்ளது.



*1984 ஏப்ரல் 16]*

வீடியோ காசட் ரெக்கார்ட்டரைப் பயன்படுத்தி, தொலைக் காட்சிப் பெட்டிகள் மூலம் திரைப்படங்களைக் காட்டுவதால் ஏற்படும் சட்ட விரோதமான நடவடிக்கைகளத் தடுப்பதற்கும் கேளிக்கை வரி ஏய்ப்பைத் தடுக்கும் பொருட்டும் சமூக நெறியைக் காப்பதற்காகவும் தமிழ்நாடு தொலைக்காட்சி திரை மூலம் வீடியோ காசெட் ரெக்கார்டர் திரைப்படம் காட்டுதல் (ஒழுங்கு படுத்துதல்) அவசரச் சட்டம், 1984இல் பிறப்பிக்கப்பட்டு பின்னர் இது சட்டமாக இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டது.

இச் சட்டத்தினை முன்மாதிரியாகக் கொண்டு மற்ற மாநிலங்களும் இத்தகு சட்டம் இயற்றவேண்டுமென அண்மையில் நடைபெற்ற செய்தித் துறைச் செயலாளர்கள் மாநாட்டில் மத்திய அரசால் கோரப்பட்டுள்ளது.

திரைப்படம் சம்பந்தப்பட்ட ஆபாசமான சுவரொட்டிகள், விளம்பரத் தட்டிகள் போன்றவைகளை நீக்கவும், நகரத்தில் திரைப்பட விளம்பரங்களைத் தணிக்கை செய்யவும், போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கக்கூடிய வகையில் நிறுவப்படும் சாலையோர விளம்பரங்களைத் தடுக்கவும் அல்லது நெறிப்படுத்தவும் முறைப்படுத்தவும் சட்டம் ஒன்றினை இயற்ற அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

மேலும் 1955ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குபடுத்துதல்) சட்டத்தினை விரிவான முறையில் திருத்துவதற்கான சட்டமுன் வடிவு ஒன்றும் அரசின் ஆய்வில் உள்ளது.) இச்சட்டத் திருத்த வரைவு சட்டமாக ஆக்கப்பட்டால், 1955ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) சட்டத்திலுள்ள விதிகள் ஒழுங்குபடுத்துதல் மேலும் எளிதாக்கப்படும்.

## இணைப்பு IV

*(136 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

### சுற்றுலாத்துறை—கொள்கை விளக்கக் குறிப்பு

தமிழ்நாட்டில் இயற்கை எழில் கொஞ்சும் இடங்களும் வரலாற்றுச் சிறப்புமிக்க, பல்வேறு சமயத்தினரின் பெருமையை எடுத்தியம்பும் புனிதத் தலங்களும், நம்முடைய பண்பாட்டினை மிளிரவைக்கும் இடங்களும், தொல்பொருள் சிறப்பு வாய்ந்த கலைக் கருவூலங்களும் மனங்கவரும் அழகிய கடற்கரைகளும் அற்புதமான வனவிலங்கு உய்விடங்களும் ஏராளமாக உள்ளன. சுற்றுலாத்துறை விரைந்து வளர்வதற்கு இவை துணை நிற்கின்றன. வெளிநாடுகளிலிருந்தும் நம் நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் வருகின்ற சுற்றுலாப் பயணிகளின் ஆவலைத் தூண்டும் கண்கவர் சுற்றுலா மையங்கள் இங்கு கணக்கின்றி உள்ளன.

தென்னகத்தின் சிறப்பினை எடுத்துக் காட்டும் வண்ணம் தமிழ் நாடு, பண்டைய மரபினையும் வாழ்க்கை நெறிகளையும், பாரம்பரியப் பண்பாட்டினையும் சித்தரிக்கும் வகையில் கலைக்களஞ்சியமாகத் திகழ்கிறது. இயற்கை வளமும், பாரம்பரியப் பண்பாடும், கலைநயமும் தமிழகத்தில் செறிந்து விளங்கியபோதிலும் நம் நாட்டிலுள்ள மற்ற மாநில சுற்றுலா இடங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது வெளி நாடுகளிலிருந்து தமிழ்நாட்டிற்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருந்து வருகிறது. இந்தியாவிற்கு வரும் பயணிகளில் இப்போது 20 முதல் 23 சதவீதத்தினர்தான் தமிழ் நாட்டிற்கு வருகின்றனர். இதனை 40 சதவீதமாகவாவது உயர்த்த, அயல்நாட்டுப் பயணிகளைக் கவரும் வகையில் நம் மாநிலத்திலுள்ள சுற்றுலாத் தலங்களைப் பற்றி விரிவாக எடுத்து விளக்க வேண்டியது அவசியமாகும்.

இந்தியாவிற்கு வரும் ஏராளமான சுற்றுலாப் பயணிகளை தமிழகத்திற்குக் கவர்ந்திழுக்க இங்குள்ள சுற்றுலா மையங்களை மேம்படுத்த அரசு முயற்சி எடுக்கும் அதே சமயம் அதிக எண்ணிக்கையில், சுற்றுலாப் பயணிகள் இங்கு வருகின்றபோது அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தர வேண்டியது அவசியம் என்பதையும் அரசு உணர்ந்திருக்கிறது.

சுற்றுலாத்துறையின் மூலம் இந்திய அரசுக்குப் பெரும் அளவில் வெளிநாட்டுச் செலாவணியாக வருவாய் கிடைப்பதுடன், மக்களுக்கும் நல்ல பயன் கிட்டுவதைக் கருத்தில் கொண்டு இந்திய அரசின் உதவியோடு தமிழகத்தில் சுற்றுலா வளர்ச்சிக்குத் திட்டங்கள் பலவற்றைத் தீட்டி அவற்றைப் படிப்படியாகச் செயல்படுத்த மாநில அரசு விழைகிறது. அரசின் சுற்றுலா கொள்கை பற்றிய முக்கிய கூறுகள் வருமாறு :—

1. அயல்நாடுகளிலிருந்தும் நம் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் தமிழகத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு இங்கு அனைத்து நாட்டு, தேசீய முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலா மையங்களில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்துதல் ;

2. உள்ளூரிலுள்ள மக்கள், அருகிலுள்ள இடங்களுக்குச் சென்று மனச்சோர்வு நீங்கி, சற்றே களிப்புற்றிருக்க அங்குள்ள சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை மேம்படுத்துதல் ;

3. சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் இங்குள்ள சுற்றுலா மையங்களைப் பற்றி தகவல் தெரிவித்தல், விளம்பரப் படுத்துதல் ;

4. குறைந்த செலவில் சுற்றுலா மையங்களைக் காண விழையும் பயணிகளுக்கும், குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கும் சுற்றுலா இடங்களைக் காணும் வகையில் குறைந்த





செலவில் இட வசதியும், போக்குவரத்து வசதிகளும் செய்து கொடுத்தல் ; இதற்காகத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்திற்குப் போதிய நிதியுதவி அளித்தல் ;

5. இம்மாநிலத்தில் சுற்றுலா வளர்ச்சிக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பதில் தனியார் துறையினரும் பங்கு கொள்வதற்கு ஊக்கம் அளித்தல்.

## I. தேசிய முதன்மை வாய்ந்த இடங்களை மேம்படுத்துதல்

இத்திட்டத்தின்கீழ் பல மாநில அடிப்படையில் கண்டறியப் பட்ட '' சுற்றுலா சுற்றுவழிக் '' கோட்பாட்டினைக் கருத்தில் கொண்டு மாமல்லபுரம், இராமேஸ்வரம், கன்னியாகுமரி, உதக மண்டலம் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த மேம்பாட்டிற்காகப் பெருந்திட்டம் ஒன்று தீட்டப்பட்டு உள்ளது. இத்திட்டத்திற்கான மொத்த நிதிச் செலவு ரூபாய் 80 கோடி ஆகும். இதைச் செயல்படுத்துவதற்குக் கணிசமான அளவில் நிதி உதவி அளித்திட வேண்டுமென்று இந்திய அரசிடம் நாம் கேட்டு வருகிறோம். மத்திய அரசிடமிருந்து எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கப் பெறும் வரை இப்பெரும் திட்டங்களில் இருந்து தெரிந்தெடுக்கப் பட்ட சில இடங்களை அரசின் பல்வேறு துறைகளின்கீழ் வரும் திட்டப் பணிகளில் நாம் செயல்படுத்தி வந்துள்ளோம். பிற துறைகளால், தங்களது திட்டங்களில் சேர்த்துக் கொள்ளாத சில திட்டங்களையும் இத்துறை மேற்கொள்கிறது.

## II. மாமல்லபுரம்

மாமல்லபுரத்தை மேம்படுத்துவதற்காக ரூபாய் 6 கோடிச் செலவில் பெருந்திட்டம் ஒன்று தீட்டப்பட்டுள்ளது. முன்னுரிமை அடிப்படையில் பின்வரும் திட்டப் பணிகளை மேற்கொள்வதற்காக இந்திய அரசிடம் ரூபாய் 25 இலட்சம் கேட்கப் பட்டுள்ளது :

(i) சுற்றுச் சாலை அமைத்தல்.

(ii) போக்குவரத்து முனைகளை அமைத்தல்.

(iii) அங்காடிகள் மையம் அமைத்தல்.

(iv) எழில் வளாகம் அமைத்தல்.

(v) பொழுதுபோக்கு வசதிகள் அமைத்தல்.

இந்திய அரசிடமிருந்து நிதி உதவி எதிர்பார்க்கப்படுகிறது.

[1984 ஏப்ரல் 16

மாமல்லபுரத்தில். கீழ்க்கண்ட பணிகள் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டு உள்ளன :—

| | (ரூபாய் (இலட்சத்தில்). |
|---|---|
| (1) ஓய்வு விடுதி .. .. .. .. | 1.82 |
| (2) பயணியர் முகாமிடும் இட வசதி அமைத்தல், பாதுகாவலர் அறை கட்டுதல், வேலி போடுதல் .. .. .. .. | 7.33 |
| (3) இளைஞர் இல்லத்தில் 6 குடில்கள் கட்டுவதற்கு .. .. .. | 5.00 |
| (4) சுற்றுலா அலுவலகக் கட்டிடம் கட்ட. .. | 3.20 |

இவைகளைத் தவிர, பெருந் திட்டத்தில் குறிப்பிடப்பட்டு இத்துறையில் நிறைவேற்ற எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள சில முக்கிய பணிகளின் விவரங்கள் வருமாறு :—

1. திறந்தவெளி அரும்பொருட்காட்சியகம்

தமிழகத்தின் வளமார்ந்த பண்பாட்டுச் சிறப்புகள் தொன்மையான வரலாற்றுச் சிறப்புகள் ஆகியவற்றை நம் நாட்டவரும், வெளிநாட்டவரும் அறிந்து மகிழத்தக்க வகையில் திறந்தவெளி அரும்பொருட்காட்சியகம் ஒன்றை மாமல்லபுரத்தில் நிறுவுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அரசால் ஏற்படுத்தப்பட்ட உயர்மட்டக் குழு, இக் காட்சியகத்தில் இடம் பெறும் வகையில் 47 வகையான கலாச்சார சரித்திரக் கருத்துக்களை விளக்கும் வகையில் அமையும் சிற்பங்களாகத் தீட்டுவதற்குத் தெரிந்தெடுத்து உள்ளது. இதற்கு அரசும் ஒப்புதல் அளித்துள்ளது. இப்பணிக்காகச் செலவிட ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ. 68 இலட்சத்தில் ரூ. 27.09 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. திறந்த வெளி அரும்பொருட்காட்சியகத்தைச் சுற்றி மதில் சுவர் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேலும் அரும்பொருட்காட்சியகத்திற்காக சிற்பங்களை வடிவமைக்கும் பணியும் நடைபெற்று வருகிறது.

2. ஒலி-ஒளிக் காட்சித் திட்டம்

பெருந் திட்டத்தில் செய்யப்பட்ட பரிந்துரையை ஒட்டி, கடற்கரை கோயில் பகுதியில் ஒலி-ஒளிக் காட்சி அமைக்கும்



1984 ஏப்ரல் 16]

திட்டம் உருவாக்கப்பட்டது. இத்திட்டத்திற்கான மொத்த செலவு ரூபாய் 47 இலட்சம் ஆகும். இதற்கான செலவு பின்வரும் முறையில் பிரித்துக்கொள்ளக் கருதப்பட்டது :—

| | (ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|
| (1) சுற்றுலாத் துறை, இந்திய அரசு | 20.00 |
| (2) சுற்றுலாத் துறை, தமிழ்நாடு அரசு | 20.00 |
| (3) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் | 7.00 |

இந்திய அரசின் தொல் பொருள் ஆராய்ச்சித் துறையின் ஒப்புதல் இதுவரை கிடைக்கப் பெறாததால், திறந்தவெளி அரும்பொருட்காட்சியகத்திலேயே ஒலி-ஒளிக் காட்சி நடத்தும் திட்டம் தற்போது இத்துறையின் பரிசீலனையில் உள்ளது.

3. முட்டுக்காட்டில் படகு வசதிகள் செய்து கொடுத்தல்.

சென்னை-மாமல்லபுரம் கிழக்குக் கடற்கரைச் சாலையில் முட்டுக்காடு உப்பங்கழிப் பகுதி அமைந்துள்ளது. இந்தியா முழுவதிலும் பல கடற்கரைகள் இருந்த போதிலும், முட்டுக்காடு கடற்கரை தனியானதொரு இயற்கை வனப்பும், எழிலும் பெற்றுள்ளது என்று சுற்றுலா வல்லுநர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். இந்த இடத்தின் தட்பவெட்ப சூழ்நிலைகள் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுப்பயணிகளுக்கு ஏற்றதாக உள்ளன.

இக்கருத்தினை கவனத்தில் கொண்டு முட்டுக்காடுப் பகுதியைச் சுற்றுலாத் தலமாக மேம்படுத்த அரசு தீர்மானித்தது. படகுக் குழாம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு, படகு விடும் வசதி 8—1—1984 ஆம் நாளிலிருந்து தொடங்கப்பட்டது. உணவகம் ( Restaurant ), அங்காடிகள் ஆகியவற்றுடன் கூடிய நிரந்தரமான படகுத்துறை ஒன்றைக் கட்டுவதற்குக் கருதப்பட்டுள்ளது. எழில்மிகு தோட்டத்தையும் மனமகிழ்ச்சியளிக்கக் கூடிய வகையிலான வளாகத்தையும் ஏற்படுத்தி இப்பகுதியை மேம்படுத்துவதற்காகத் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. இந்த இடம் நீர் விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்கு ஏற்றதாகவும் அமைக்கப்படும்.

11. இராமேஸ்வரம்.

இராமேஸ்வரம், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளை ரூ. 28.00 கோடி செலவில் மேம்படுத்துவதற்காக பெருந் திட்டம் ஒன்று தீட்டப்பட்டுள்ளது. இப்பெருந் திட்டத்தை நிறைவேற்ற அனைத்து நாடுகள் நிதி உதவி நிறுவனங்களிடமிருந்து நிதி உதவி பெற்று வழங்கிட வேண்டுமென்று இந்திய அரசிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

[1984 ஏப்ரல் 16

இராமேஸ்வரத்தில் கீழ்க்கண்ட பணிகள் ஏற்கனவே எடுத்துக்
கொள்ளப்பட்டு உள்ளன :—

1. இராமேஸ்வரத்தில் துயில் இடங்கள் மற்றும் வசதிகள்.

இராமேஸ்வரத்தில் துயில் இடங்கள், சுற்றுலா தகவல்
நிலையம், குளிக்குமிடங்கள் ஆகியவற்றிற்கு ரூபாய் 3 இலட்சத்
திற்கு ஒப்பளிக்கப்பட்டு அப்பணிகள் முடிவுற்றன. குறைந்த
கட்டணத்தில் தங்கும் வசதி அளிக்கும் இளைஞர் விடுதிகள்
கட்டுவதற்கு ரூபாய் 10 இலட்சமும் ஒப்பளிக்கப்பட்டு பணிகள்
நடைபெற்று வருகின்றன.

மேலும், இராமேஸ்வரத்தில் குறைந்த வருவாய் உள்ள
சுற்றுலா பயணிகளுக்காக கூடாரங்கள், குடில்கள், சிற்றுண்டி
சாலையும் கட்டுவதற்கு ரூ. 40 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில்
திட்டம் ஒன்று தீட்டப்பட்டு, 1982-83-ல் இராமேஸ்வரத்தில்
உணவக தொகுதி ஒன்றும், மண்டபத்தில் குடில்கள் கட்டு
வதற்கும் ரூ. 20 இலட்சம் அனுமதிக்கப்பட்டு பணிகள் நடை
பெற்று வருகின்றன. மேலும், பணிகள் முடிவடைதவதற்கு
1983க84-ல் கூடுதலாக ரூ. 5 இலட்சம் அனுமதி அளிக்கப்பட்டு
உள்ளது.

2. இராமேஸ்வரத்தில் சுற்றுலா அலுவலகம்.

இராமேஸ்வரத்தில் புதிய சுற்றுலா அலுவலகம் ஒன்று
1983-84 நிதி ஆண்டில் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

3. மண்டபத்தில் முகாமிடம் அமைத்தல்.

மண்டபத்தில் ஏற்கனவே துயில் இடம், படகுத்துறை மற்றும்
உணவக தொகுதி கட்டுவதற்கு ரூ. 6.66 இலட்சம் ஒப்பளிக்
கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. குறைந்த வருவாய்
உள்ள சுற்றுலா பயணிகளுக்காக 6 குடில்கள் கட்டுவதற்கு
1983-84-ல் ரூ. 5 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு பணிகள் நடை
பெற்று வருகின்றன.

III. கன்னியாகுமரி.

கன்னியாகுமரி அழகுமிகுந்த கடற்கரையுடன் கூடிய புகழ்
மிக்க, உலகம் வியக்கும் ஒரு புனித சுற்றுலா மற்றும் யாத்திரைத்
தலமாகும். குமரி அன்னை ஆலயத்திற்கு அருகே தென்கிழக்குப்
பகுதியில் இந்துமகாகடலில் உள்ள பெரும்பாறையொன்றில்
கட்டப்பட்டுள்ள விவேகானந்தரின் நினைவாலயம் சுற்றுலாப்
பயணிகளைக் கவரும் மற்றுமோர் அம்சமாகும். எண்ணிலடங்கா
சுற்றுலாப் பயணிகள் கன்னியாகுமரியைக் கண்டுகளிக்க வரு
கின்றனர் என்ற காரணத்தால் கன்னியாகுமரியையும் அதனைச்
சூழ்ந்துள்ள பகுதியையும் மேம்படுத்துவதற்காக ரூ. 16 கோடி
செலவில் பெருந்திட்டமொன்று தீட்டப்பட்டுள்ளது. இத்
திட்டத்தை நிறைவேற்றுவதற்காக மத்திய அரசு, உலக
வங்கி ஆகியவற்றிடமிருந்து நிதியுதவியைப் பெற வேண்டுகோள்
வைக்கப்பட்டுள்ளது.



1984 ஏப்ரல் 16]

இப்பெருந்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கீழ்க் கண்ட சில
முக்கிய பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன :—

1. இளைஞர் இல்லம்—தங்குமிடம்

சுற்றுலாப் பயணிகளுக்குப் பெரும் செலவு ஏற்படுவதைத்
தவிர்க்கும் வகையில் கன்னியாகுமரியில் குறைந்த வாடகையில்
துயிலிடங்கள் கட்டுவதற்காக ரூ. 5.00 இலட்சத்திற்கு அனுமதி
வழங்கப்பட்டு, அப்பணி முடிவடையும் தருவாயில் உள்ளது.
1983-84-ல் ரூ. 24.90 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் ரூ. 10
இலட்சம் செலவில் குறைந்த கட்டணத்தில் வசதி அளிக்கும்
இளைஞர் இல்லம்—முகாமிடம் ஆகியவற்றைக் கட்டுவதற்கும்
குறுகிய கால அளவில் தங்கிச் செல்லும் சில சுற்றுலாப்
பயணிகளின் பயனுக்காக ரூ. 5.00 இலட்சம் செலவில் பயணக
வண்டிகள் நிறுத்தி வைக்கும் வசதியுடன் கூடிய ஓய்வகத்தை
கட்டுவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2. கலையரங்கு நிறுவுதல்

சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சியோடு பொழுது போக்க போதிய
வசதிகள், கலை நிகழ்ச்சிகள், பொருட்காட்சிகள் நடத்து
வதற்கு ஒரு கலை அரங்கை ரூ. 15 இலட்சம் மதிப்பீட்டில்
அமைக்க கருதப்பட்டு உள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்
கழகம் இப்பணிக்காக அனுப்பியுள்ள வரைபடங்கள் மற்றும்
திட்ட மதிப்பீடுகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

3. சுற்றுலா அலுவலகம்

1983-84-ல் கன்னியாகுமரியில் புதிய சுற்றுலா அலுவலகம்
கட்டி முடிக்கப்பட்டு தற்போது இவ்வலுவலகம் இப்புதிய கட்டி
டத்தில் செயல்பட்டு வருகிறது.

IV. உதகமண்டலம்

உதகமண்டலம் மற்றும் முதுமலை வனவிலங்கு உய்விடம்
ஆகிய இடங்களை மேம்படுத்துவதற்கு ரூ. 28 கோடி மூலதனச
செலவில் பெரும் திட்டம் ஒன்று தீட்டப்பட்டு உள்ளது.
பல்வேறு துறைகளிடமிருந்து தொகை பெறுவதன் மூலமும்
தனியார் நிறுவனங்களிடமிருந்து நிதி பெறுவதன் மூலமும்

[1984 ஏப்ரல் 16

மேம்பாட்டு திட்டங்களை முடிக்கக் கருதப்பட்டுள்ளது. உதகமண்டலம் மற்றும் முதுமலையை மேம்படுத்துவதற்காகக் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

1. உதகமண்டலத்தில் இளைஞர் இல்லம்

குறைந்த வருவாய் உள்ள சுற்றுலா பயணிகளின் பயனுக்காக உதகமண்டலத்தில் ரூ. 10 இலட்சம் செலவில் மலைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் குறைந்த கட்டணத்தில் தங்கும் வசதி அளிக்கும் இல்லம் ஒன்று கட்டப்பட்டுள்ளது.

2. படகு குழாம் மற்றும் சிறுவர் பூங்கா

ரூ. 6.50 இலட்சம் செலவில் கூடுதலாக படகு குழாம் ஒன்றை கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. ரூ. 11 இலட்சத்தில் சிறிய இரயில் வாங்கவும், இரயில் பாதை அமைக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டன. குழந்தைகளைக் களிப்பூட்டும் வகையில் சிறுவர் பூங்கா ஒன்று அமைக்கும் பணியும் நடைபெற்று வருகிறது. உல்லாச படகுகள் வாங்குவதற்காக ரூ. 1.92 இலட்சம் அனுமதிக்கப்பட்டு அதில் இதுவரை 5 படகுகள் வாங்கப்பட்டு உள்ளன. இன்னும் 8 படகுகள் வாங்கப்பட உள்ளன.

3. தொட்டபெட்டாவில் தொலை நோக்காடி இல்லம்

தொட்டபெட்டாவில் தொலை நோக்காடி இல்லம் ஒன்று ரூ. 4 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு உள்ளது.

4. உதகமண்டலம் நகரத்திலிருந்து தொட்டபெட்டாவிற்குக் கம்பி வழிப்பாதை

உதகமண்டல நகரத்தில் இருந்து தொட்டபெட்டா சிகரத்திற்குக் கம்பி வழிப்பாதை (Aerial Ropeway) அமைப்பதற்கான செயற்குறிப்பு பரிசீலனையில் இருக்கிறது. இத்திட்டத்திற்கான சாத்தியக் கூறுகள் குறித்துஆராய்ந்து தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகம் அறிக்கை ஒன்று அனுப்பி உள்ளது. மேற்கொண்டு இப்பணியைத் தொழில் நுட்பம் அறிந்த தனியார் நிறுவனத்துடன் இணைந்து செயல்படும் சாத்தியக்கூறு பற்றி ஆராய தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கேட்கப்பட்டு உள்ளது.

5. முதுமலையில் இளைஞர் இல்லம் அமைத்தல்

மலைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் முதுமலையில் இளைஞர் இல்லம் ஒன்று ரூ. 10 இலட்சத்தில் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டது. இப்பணி தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு தற்போது முடிக்கப்பட்டுள்ளது.



1984 ஏப்ரல் 16]

6. ஏரிப்பராமரிப்பு.

உதகமண்டலம் ஏரியில் வளரும் செடி கொடிகளை அப்புறப்படுத்துதல், தூர் வாருதல் போன்ற பணிகள் ரூ. 2 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

7. இதர பணிகள்.

உல்லாச இடங்களை மேம்படுத்துவதற்காகவும், உதகமண்டலத்தில் பயன்படுத்துவதற்காக சிறு பேருந்துகள் வாங்குவதற்கும், பழங்குடி வகுப்பைச் சேர்ந்த இளைஞர்களுக்கு வழிகாட்டி பயிற்சி வகுப்புகள் நடத்துவதற்காகவும், தோடர்களின் கலாச்சாரம், வாழ்க்கைமுறை ஆகியவை குறித்த விளம்பர அட்டைகள், ஏனைய பிரச்சாரப் பொருள்கள் அச்சிடுவதற்காகவும் ரூ. 6.25 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கீழ்க்கண்ட பணிகள் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 1983–84-ல் மேற்கொள்ளப்பட்டுள்ளன :—

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1. உதகமண்டலத்தைச் சுற்றியுள்ள பகுதிகளை மேம்படுத்துதல், ஏரித் தோட்டத்தைச் சுற்றி வேலி அமைத்தல், ஏரித் தோட்டத்தைப் பராமரித்தல் மற்றும் சிறிய பேருந்துகளுக்கு வண்டி கொட்டில் கட்டுதல். | 7.80 |
| 2. மலையேற்ற பயணிகள் செல்லும் பாதைகளில் முகாமிடும் இடங்கள் (Trekking Routes) அமைத்தல் மற்றும் இயற்கை எழில் மிகுந்த இடங்களில் வசதிகள் செய்து கொடுத்தல். | 5.50 |
| 3. கோத்தகிரியில் இளைஞர் இல்லம் கட்டுதல். | 4.50 |
| மொத்தம் .. | 17.80 |

1984–85-ல் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பின்வரும் திட்டப் பணிகள் மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளன:—

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| (i) உதகமண்டலம் ஏரியில் பாதசாரிகளின் பயனுக்காக பாலம் ஒன்றைக் கட்டுவது உட்பட சுற்றுப்புற சூழல் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளல். | 11.00 |
| (ii) உதகமண்டலத்தில் சிறு கலையரங்கம் (Mini Auditorium) கட்டுதல். | 10.00 |
| (iii) காளஹட்டி நீர்வீழ்ச்சிப் பகுதியை மேம்படுத்துதல். | 2.00 |

[1984 ஏப்ரல் 16

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஏற்பளிக்கப் பட்ட மேற்கண்ட திட்டங்கள் தவிர, நீலகிரி மாவட்டத்தை அழகுபடுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டத் திட்டப் பணி களைச் சுற்றுலாத் துறை கேட்டுக்கொண்டதற்கு இணங்க, பல்வேறு அரசுத் துறைகள் செயல்படுத்தி வருகின்றன.

1982–83, 1983–84ஆம் ஆண்டுகளில் மற்ற துறைகளால் நிறைவேற்றப்பட்ட சில முக்கிய திட்டங்களின் விபரம் பின் வருமாறு :—

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1. வனத்துறை— | |
| முதுமலையில் தொலை நோக்கப் பார்வை கோபுரம். | 1.68 |
| உதகமண்டலத்தில் மான்கள் சரணாலயம் ஏற்படுத்துதல். | 25.00 |
| 2. பொதுப்பணித் துறை— | |
| உதகமண்டலத்தில் உள்ள ஏரியைச் சுற்றி ஒளி விளக்குகள் அமைத்தல். | 10.00 |
| 3. ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறை— | |
| உதகமண்டலத்தில் உள்ள ஏரியைச் சுற்றி சோடியம் ஆவி விளக்குகள் அமைத்தல். | 5.00 |
| உதகமண்டலத்தில் உள்ள ஏரியைச் சுற்றி யுள்ள சாலையை மேம்படுத்துதல். | 6.00 |
| 4. மீன்வளத் துறை— | |
| மீன்பிடி வசதிகள் செய்து கொடுத்தல் | .. 5.00 |
| 5. வேளாண்மைத் துறை— | |
| உதகமண்டலம் தாவரவியல் பூங்காவில் அலங்கார வளைவுகள் ஏற்படுத்துதல். | 0.30 |

II. சுற்றுலா முதன்மை வாய்ந்த உள்ளூர்ப் பகுதிகளை மேம்படுத்துதல்.

(a) மாவட்டச் சுற்றுலா மையங்கள்

நடுத்தர, குறைந்த வருவாயுள்ள பிரிவினரும், மாணவர் களும் குறைந்த செலவில் சுற்றுலா சென்று, கண்டுகளித்து இன் புறும் வகையில் அண்மையிலுள்ள சுற்றுலா சிறப்பு மிக்க உள்ளூர்ப் பகுதிகளை மேம்படுத்த வேண்டும் என்பது அரசின் கொள்கை யாகும். இதற்கிணங்க, ஒவ்வொரு மாவட்டத்திலும் சுற்றுலா பயணத்திற்கு ஏற்ற இரண்டு இடங்களை மேம்படுத்த அரசு



1984 ஏப்ரல் 16]

தீர்மானித்துள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்டச் சுற்றுலா மையங்களை மேம்படுத்துவதற்கு ஏற்ற இடங்களைத் தெரிந்தெடுப்பதற்காக, மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமை யில் மாவட்ட அளவிலான ஒரு குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது, இத்திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு வழிகாட்டுவதற்கும். ஒருங்கிணைப்பதற்கும், ஆலோசனை வழங்குவதற்கும், மாநில அளவில் அரசு, செய்தி, சுற்றுலா மற்றும் (தமிழ்) பண்பாட்டுத் துறையின் ஆணையர்-செயலரின் தலைமையில், ஒரு குழு ஏற் படுத்தியுள்ளது.

1983–84-ல் பின்வரும் ஐந்து மையங்களை மாவட்டச் சுற்றுலா மையங்களாக மாற்றும் வகையில் மேம்படுத்துவதற்காக சுற்றுலாத் துறை ரூ. 10 இலட்சத்திற்கு அனுமதி வழங்கி யுள்ளது :

1. சித்தன்னவாசல் (புதுக்கோட்டை மாவட்டம்).
2. பவானி-கூடுதுறை (பெரியார் மாவட்டம்).
3. கங்கை கொண்ட சோழபுரம் (திருச்சி மாவட்டம்).
4. திருமூர்த்தி மலைக் குன்றுகள் (கோயம்புத்தூர் மாவட்டம்).
5. பாபநாசம் (திருநெல்வேலி மாவட்டம்).

மாவட்ட சுற்றுலா மையங்களை மேம்படுத்துவதற்காக மாநில அரசின் போக்குவரத்துக் கழகங்கள் ஒவ்வொன்றும் தங்க ளுடைய உபரி நிதியிலிருந்து ரூ. 3 இலட்சத்தை வழங்கத் தீர் மானித்துள்ளன. இதுவரையில் சேரன் போக்குவரத்துக் கழகம், கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம், பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகம், தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் ஆகியவை, பின்வரும் சுற்றுலா மையங் களின் வளர்ச்சிக்கென்று 1982–83, 1983–84 ஆம் ஆண்டுகளுக் கென மொத்தம் ரூ. 9·60 இலட்சம் வழங்கியுள்ளன. அவை வருமாறு :—

1. பவானி-கூடுதுறை (பெரியார் மாவட்டம்).
2. பேச்சிப்பாறை (கன்னியாகுமரி மாவட்டம்).
3. பிளவக்கல் (இராமநாதபுரம் மாவட்டம்).
4. ஏலகிரி மலை (வட ஆற்காடு மாவட்டம்).
5. கொடநாடு இயற்கைக் காட்சிப் பகுதி (நீலகிரி மாவட்டம்).
6. பாபநாசம் (திருநெல்வேலி மாவட்டம்).
7. விரகனூர் (மதுரை மாவட்டம்).

1984–85-ல் சுற்றுலாத்துறை, ரூ. 8 இலட்சம் செலவில் மேலும் சில இடங்களை மாவட்டச் சுற்றுலா மையங்களாக மேம்படுத்தக் கருதியுள்ளது.

மாநில அரசுக்குச் சொந்தமான போக்குவரத்து நிறுவனங்கள், மேலே குறிப்பிட்டுள்ள அரசு ஒதுக்கீட்டோடு, மேலும் சில மாவட்டச் சுற்றுலா மையங்களை மேம்படுத்த தொடர்ந்து நிதி யுதவி அளிக்கும்.

**(b) ஏனைய சுற்றுலா மையங்கள்**

(1) **சென்னை**—சென்னை மாநகருக்கு ஏராளமான சுற் றுலாப் பயணிகள் வந்த வண்ணமிருப்பதால் குறைந்த வருமான முள்ள சுற்றுலாப் பயணிகளுக்கும், திட்டமிட்டபடி ஒரு வருவாய்க்குள் செலவிட எண்ணிவரும் சுற்றுலாப் பயணிகளுக்கும், சென்னையில் தங்குமிட வசதி கிடைப்பது கடினமாக உள்ளது. ஆகவே, அரசு சென்னையில், ரூ. 25 இலட்சம் செலவில் சுற் றுலா முகாம் கட்டுவதென்று முடிவு செய்துள்ளது. ரூ. 12·50 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில் றுலா வளர்ச்சிக் கழகம் மேற்கொள்ளவிருக்கும் மற்றொரு பெருந் திட்டம் சென்னையில் பெரியதொரு ஜனதா ஓட்டல் கட்டுவ தாகும். இத்திட்டத்திற்கென தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குப் பங்கு மூலதன உதவியாக 1983–84-ல் அரசு ரூ. 71·40 இலட்சம் அனுமதித்துள்ளது.

(2) **திருச்சிராப்பள்ளி**—குறைந்த வருமானமுள்ள சுற்றுலாப் பயணிகளுக்குத் திருச்சிராப்பள்ளியில் போதிய தங்குமிட வசதி இல்லாததால், ரூ. 15 இலட்சம் செலவில் குறைந்த கட்டணத் தில் தங்கும் வசதி அளிக்கும் 'இளைஞர் விடுதி' கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது. இதில் ரூ. 10 இலட்சம் 1983–84 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளியில் சுற்றுலா அலுவலகக் கட்டிடம் ஒன்று கட்டுவதற்காக ரூ. 2·50 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

(3) **குற்றாலம்**— குற்றாலத்தைக் காணவரும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தங்குமிட வசதி அளிக்கும் பொருட்டு அங்கு 1978–79-ல் மேற்கு மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் துயில்கூடம் கட்டுவதற்கு ரூ. 7·97 இலட்சம் அனுமதிக்கப்பட் டுள்ளது. குற்றால நகரியத்திற்குச் சொந்தமான இடத்தில் இதைக் கட்டும்பொருட்டு, அப்பணி தற்போது அந்த நகரியத் திடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. குற்றாலத்தில் சுற்றுலாப் பயணிகளுக்குத் தங்குமிட வசதியை அதிகரிக்கும் பொருட்டு அங்கு பொருத்தமான தனியார் நிலத்தைக் கையகப்படுத்துவது பற்றி யும் அரசு பரிசீலித்து வருகிறது.





(4) **ஒகேனக்கல்**—ஒகேனக்கல்லில் ரூ. 3.30 இலட்சம் செல வில் சமூகக்கூடத்துடன் துயிலகம் கட்டும் பணி மேற்கொள்ளப் பட்டு முடிக்கப்பட்டது. மேலும் ஒகேனக்கல்லில் காவிரி ஆற் றின் குறுக்கே, கம்பியிலான தொங்கு நடைபாலம் ஒன்று அமைக்க ரூ. 7.50 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இப்பணியை மேற்கொண்டுள்ளது.

(5) **கொடைக்கானல்**—மேற்குமலைத் தொடர் மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ரூ. 1.60 இலட்சம் செலவில் இங்கு இரண்டு தொலை நோக்காடி இல்லங்கள் கட்டப்பட்டுள்ளன. இங்குள்ள ஏரியை அழகுபடுத்தும் நோக்கத்துடன், சில பணிகளை மேற் கொள்ள ரூ. 58,100 அனுமதிக்கப்பட்டு, பணி நிறைவு பெற் றுள்ளது. இங்கு ரூ. 11,95,000 செலவில் துயில்கூடம் ஒன்றும், சிற்றுண்டி விடுதி ஒன்றும் கட்டப்பட்டுள்ளன. இங்கு வரும் பயணிகள் தங்குவதற்கு மேலும் அதிக இட வசதி செய்து கொடுக்கும் பொருட்டு, பொருத்தமான தனியார் நிலத்தை வாங்கவும் அரசு பரிசீலித்து வருகிறது.

(6) **பிச்சாவரம்**—பிச்சாவரம் சுற்றுலா மையத்தில் துயிலக விடுதி, குடில்கள், படகுத் துறை, சிற்றுண்டியகம் ஆகியவற்றைக் கட்டுதல், படகுகள் வாங்குதல் முதலானவற்றுக்கு அரசு ரூபாய் 17.28 இலட்சங்கள் அனுமதித்துள்ளது. பணிகள் மூன்று கட்டங் களில் மேற்கொள்ளப்பட்டு, முடிவடையும் நிலையில் உள்ளன. இங்கு 4 குடில்கள் அமைக்கவும், படகுகள் வாங்கவும் ரூபாய் 5.00 இலட்சங்கள் அரசு அனுமதித்துள்ளது. ரூபாய் 7.50 இலட்சம் செலவில் இங்கு சிற்றுண்டி விடுதி கட்டவும், உல்லாசப் படகுகள் வாங்கவும் கருத்துரு பரிசீலனையில் உள்ளது.

(7) **பூம்புகார்**—தஞ்சாவூரில் உள்ள பூம்புகார் பகுதி மிக முக்கியமான சுற்றுலா மையமாகும். இங்கு சிலப்பதிகாரக் கலைக்கூடம், இலஞ்சி மன்றம், நெடுங்கல் மன்றம், பாவை மன்றம் ஆகியனவும் சிப்பி வடிவக் குடில்களும் உள்ளன. பூம்புகா ரில் சாலைகள் அமைக்கவும், மேல்நிலைத் தொட்டி ஒன்று கட்டவும் ரூ. 8.79 இலட்சத்தில் திட்டம் மேற்கொள்ளப்பட்டு பணி முடிவடைந்துள்ளது.

1984–85-ல் ரூ. 5.00 இலட்சம் செலவில் பூம்புகார்ப் பகுதிக்குச் சுற்றுச்சுவர் கட்டவும், திறந்தவெளி திரை அரங்கைப் பழுது பார்க்கவும் கருதப்பட்டுள்ளது.

(8) **மதுரை**—வரலாற்றுப் புகழ்மிக்க மதுரை திருமலை நாயக் கர் மகாலில் நாள்தோறும் ஒலி-ஒளிக்காட்சி நடத்தப்பட்டு வருகின்றது. தமிழரின் வரலாற்றுப் பெருமையை விளக்கும் விதத்தில் இந்த ஒலி-ஒளிக்காட்சி அமைந்துள்ளது.

### III. சுற்றுலாத் தகவல் கருத்துக்களைப் பரப்புதலும் மேம்படுத்தலும்.

(a) விளம்பரம்—சுற்றுலா மையங்களை உருவாக்குவதும்
அவை பற்றி விளம்பரம் செய்வதும் சுற்றுலா வளர்ச்சிக்கு அடிப்
படைத் தேவைகளாகும். இம்மாநிலத்திற்கு வரும் சுற்றுலாப்
பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க நட
வடிக்கை எடுக்கும் அதே சமயம் சுற்றுலா பயணிகளைக் கவரும்
வண்ணம் இங்கு உள்ள அடிப்படை வசதிகள்பற்றியும், சுற்றுலா
முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் குறித்து விளம்பரம் செய்வதும்
மிக முக்கியமாகும். அடிப்படை வசதிகளை உரிய அளவுக்குப்
பயன்படுத்திக் கொண்டு சீரான வளர்ச்சி பெற இது உதவும்.
இதனைக் கருத்தில் கொண்டு 1984–85-ல் பின்வரும் திட்டங்கள்
மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளன :—

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| (i) தகவல் விளக்கத் திரைப்படம் தயாரித்தல். | 2.00 |
| (ii) கையேடுகள், வழிகாட்டும் வரைபடம் தயாரித்தல். | 2.00 |
| (iii) திரைப்பட சுருள்களைக் கழுவும் அறைக்கு குளுமை வசதி செய்தல். | 0.40 |

(b) பொருட்காட்சிகளும் விழாக்களும்—பொருட்காட்சிகள்
விழாக்கள், கண்காட்சிகள் ஆகியவற்றை நடத்துவதன் மூலம்
சுற்றுலாத் துறை தக்க விளம்பரம் செய்கிறது. தமிழ்நாடு
சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மாநில அரசிடமிருந்து உதவி பெற்று
கடந்த பத்தாண்டுகளாக அகில இந்திய சுற்றுலாப் பொருட்
காட்சியை நடத்தி வருகிறது. இவ்வாண்டும் மாநில அரசிட
மிருந்து உரிய தொகை பெறப்பட்டு பெரிய அளவில் பொருட்
காட்சி நடத்தப்பட்டுள்ளது. இது தவிர தமிழக அரசும்,
தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும், ஏனைய மாநிலங்களில்
நடத்தப்பட்ட பொருட்காட்சிகளிலும் பங்கு பெறுகின்றன.
அண்மையில், புது தில்லியில் அவை மத்திய அரசு நடத்திய
இந்திய சர்வதேச வர்த்தகப் பொருட்காட்சியில் பங்கு பெற்றன.
சுற்றுலாத்துறை, ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட
ஆட்சியர்கள் நடத்தும் பொங்கல் விழாவுக்கு உதவி செய்கிறது.

சென்னையில் பொருட்காட்சி நடைபெறும் இடத்தை மேம்
படுத்தி நிலையான பொருட்காட்சியகமாக அமைக்க அரசு
கருதியுள்ளது. இத்தொகுதிக்கான வடிவமைப்பை முடிவு செய்ய
நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சுற்றுலாத் திடலில்
திறந்த வெளி உணவு விடுதி ஒன்று அண்மையில் அமைக்கப்பட்டு
நடைபெற்று வருகிறது.



(c) சுற்றுலாத் தகவல் நிலையங்கள்—பம்பாய் மற்றும் கல்கத்தா நகரங்களில் சுற்றுலா தகவல் நிலையங்கள் ஏற்படுத்தவும், புது தில்லியிலுள்ள தகவல் நிலையத்தில் கூடுதலாக சுற்றுலா அலுவலரை அமர்த்தவும் ஒப்புளிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 1984–85-ல் மொத்தம் ரூ. 37,000 செலவில், கொடைக்கானலிலும், மதுரைப் புகைவண்டி நிலையத்திலும் உள்ள சுற்றுலாத் தகவல் நிலையங்களுக்குத் தேவையான சாதனங்கள் வாங்கக் கருதப்படுகிறது.

(d) சுற்றுலா அலுவலர்களுக்குப் பயிற்சியளித்தல்—சுற்றுலாத் துறையைச் சேர்ந்த அலுவலர்களுக்கு அடிப்படை பயிற்சியளிக்கும் திட்டத்திற்கு 1983–84-ல் ரூ. 50,000 அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதுபோல், சுற்றுலா வரவேற்பாளர்கள், சுற்றுலா தகவல் உதவியாளர்கள் ஆகியோருக்கு (சுமார் 60 பேர்) சுற்றுலாபற்றிய நினைவுகூர் பயிற்சி வகுப்பு நடத்த 1984–85-ல் கருதப்பட்டுள்ளது. அவர்களுக்கு இரண்டு பிரிவாக வகுப்புகள் நடத்தப்படும். இதற்காக இந்திய அரசு சுற்றுலா வளர்ச்சித் துறை, சுற்றுலா வர்த்தக நிறுவனம் ஆகியவற்றின் ஆலோசனையுடன் ஏற்ற பாடத் திட்டம் தயாரிக்கப்படும். இப்பயிற்சித் திட்டத்தில் விரிவுரை வகுப்புகள் நடத்தப்படுவதுடன் முக்கியமான சுற்றுலா மையங்களுக்கும் அழைத்துச் செல்லப்படுவர். இத்திட்டத்திற்குச் சுமார் ரூ. 50,000 செலவாகும்.

### IV. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு நிதி உதவி.

சுற்றுலா வளர்ச்சிக்குத் தமிழக அரசு இருவழிகளில் உதவுகிறது. ஒன்று, சுற்றுலாத் துறை வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்கிறது. மற்றொன்று, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து தருகிறது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தனது திட்டப் பணிகளைச் செவ்வனே நிறைவேற்ற இத்துறை அதற்குப் பங்கு மூலதனமும் கடன் உதவியும் வழங்குவதுடன், திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பினை அக்கழகத்திடம் ஒப்படைத்து வருகிறது.

ஆறாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் முதல் நான்கு ஆண்டுகளில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குப் பங்கு மூலதனமாகவும், கடன் உதவியாகவும் ரூ. 171.40 இலட்சம் கொடுக்கப்பட்டுள்ளது.

பல்வேறு திட்டங்களை நிறைவேற்றும் பொருட்டு, 1984–85-ல் இக்கழகத்திற்கு ரூ. 10.00 இலட்சம் கடன் வழங்கக் கருதப்படுகிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 1971 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. சுற்றுலாப் பயணிகளுக்குத் தங்குமிட வசதி செய்து கொடுப்பதிலும், உல்லாசப் பேருந்துகளில் சுற்றுலாப் பயணங்கள் நடத்துவதிலும் இக்கழகம் ஆரம்பத்தில் கவனம் செலுத்தி வந்தது. ஆண்டுகள் பலவாக இக்கழகம் விரைந்து முன்னேறி ஏராளமான சுற்றுலா மையங்களுக்கு உல்லாசப் பயணிகளை அழைத்துச் செல்லும் நிலைக்கு இதன் பணி இன்று பல்கி பெருகியிருக்கிறது. தமிழ்நாட்டைக் காண வருகின்ற சுற்றுலாப் பயணிகள் இங்கு கழகம் அளித்துள்ள போக்குவரத்து வசதிகளையும், தங்குமிட வசதிகளையும் பாராட்டி அவற்றையே விரும்பிக் கேட்கின்றனர்.

குறிப்பிட்ட கால நீண்ட சுற்றுலாப் பயணங்களும், நகரில் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைக் கண்டு களிக்கும் பயணங்களும் மக்களிடையே பிரபலமடைந்துள்ளன. இவை, வெளிநாட்டுப் பயணிகளை முக்கியமாக, தென்கிழக்கு ஆசிய நாடுகளிலிருந்து வருகின்ற சுற்றுலாப் பயணிகளைப் பெருமளவில் கவர்ந்துள்ளன. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு, சிங்கப்பூரிலும், கோலாலம்பூரிலும் விற்பனை முகவர்கள் உள்ளனர்.

1983–84 ஆம் ஆண்டுடன் இக்கழகம் சுற்றுலாத் துறையில் அடியெடுத்து வைத்து 13 ஆண்டுகளாகின்றன. சுற்றுலா வளர்ச்சியை நோக்கி அனைத்து வழிகளிலும் விரைந்து முன்னேறி வருகிறது.

**ஓட்டல் வசதி—**

தமிழ்நாட்டைக் காணவரும் சுற்றுலாப் பயணிகள் வசதியுடன் தங்கவும், விரும்பும் உணவு உட்கொள்ளவும் ஓட்டல்களும், அவர்கள் செல்லும் வழிகளிலே இளைப்பாற பயணியர் இல்லங்களும், குறைந்த கட்டணத்தில் நிறைந்த வசதியளிக்கும் இல்லங்களும், கடற்கரைக்குச் சென்று கவலையை மறந்து களிப்புடன் பொழுது போக்கிட ஓய்வு இல்லங்களும், குளுமையை நாடி மலைப் பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள இயற்கையின் எழில் கொஞ்சும் காட்சிதனில் மனதைப் பறி கொடுத்து நிற்கும் பயணிகள் மேலும் மனமகிழ ஓய்வு இல்லங்களும் உள்ளன. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தனது சொந்த நிதியிலிருந்து மதுரை கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் 3-நட்சத்திர ஓட்டல்கள் கட்டியுள்ளது மகத்தான சாதனையாகும். தமிழ்நாடு முழுவதும் இக்கழகம் அமைத்துள்ள பலவகை ஓட்டல்கள் குறித்த விவரம் வருமாறு :—

| | |
|---|---|
| நட்சத்திர ஓட்டல்கள். | கோயம்புத்தூர். |
| | மதுரை. |
| ஓட்டல்கள். | சிதம்பரம். |
| | ஓகேனக்கல். |
| | கன்னியாகுமரி. |





| | |
|---|---|
| | மதுரை. |
| | இராமேஸ்வரம். |
| | தஞ்சாவூர். |
| | திருச்செந்தூர். |
| | திருச்சிராப்பள்ளி. |
| மலைப்பகுதி மனமகிழ் இல்லங்கள். | உதகமண்டலம். |
| | கொடைக்கானல். |
| | ஏற்காடு. |
| கடற்கரை மனமகிழ் விடங்கள். | மாமல்லபுரம் கடற்கரை மகிழ்விடம். முகாமிடம். மாமல்லபுரம். |
| குறைந்த கட்டணம் வசூலிக்கும் இல்லங்கள். (இளைஞர் இல்லங்கள்.) | ஓகேனக்கல். |
| | இராமேஸ்வரம். |
| | மண்டபம். |
| | கொடைக்கானல். |
| | உதகமண்டலம். |
| | ஏற்காடு. |
| | மாமல்லபுரம். |
| | முதுமலை. |
| காரில் வருவோருக்குப் பசி மாறும் வசதியுள்ள சிற்றுண்டிச்சாலை (டிரைவ்-இன்-ரெஸ்டாரண்ட்). | சுற்றுலாப் பொருட்காட்சித் திடல் சென்னை. |
| பயண வழி இல்லங்கள். | இராணிப்பேட்டை. |
| | உளுந்தூர்பேட்டை. |
| | கிருஷ்ணகிரி. |
| படகு இல்லங்கள் | உதகமண்டலம். |
| | ஏற்காடு. |
| | முட்டுக்காடு. |
| தொலை நோக்காடி இல்லங்கள். | கொடைக்கானல். |
| | ஏற்காடு. |
| | உதகமண்டலம். |

**போக்குவரத்து வசதி.**

இக்கழகத்தின் போக்குவரத்துப் பிரிவில் உள்ள பேருந்துகளின் எண்ணிக்கை வருமாறு :—

| | | |
|---|---|---|
| குளுமை வசதி கொண்ட பேருந்துகள் | .. | 3 |
| சொகுசுப் பேருந்துகள் | .. .. | 15 |
| சிறு பேருந்துகள் | .. .. .. | 2 |
| குளுமை வசதி கொண்ட அயல்நாட்டுக் கார்கள். | | 5 |
| சுற்றுலா வாடகைக் கார்கள் | .. | 3 |

**வர்த்தகப் பொருட்காட்சி**

நம்முடைய மாநிலத்தில் சுற்றுலாத் துறையும் தொழில் துறையும் வளர்ச்சிபெற இக்கழகம் ஆண்டுதோறும் "அனைத்திந்திய சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியை" நடத்தி வருகிறது. மத்திய-மாநில அரசைச் சேர்ந்த பல துறைகளும், நிறுவனங்களும் இப்பொருட்காட்சியில் பங்கேற்கின்றன.

**1983–84 ஆம் ஆண்டில் சாதனைகள்**

சென்னையில், பொருட்காட்சி நடைபெறும் தீவுத்திடலில், காரில் வருவோருக்குப் பரிமாறும் வசதியுள்ள சிற்றுண்டியகம், 30—12—1983-ல் தொடங்கப்பட்டது.

மாமல்லபுரம் கடற்கரை மன மகிழ்விடத்தில் மேலும் பல குடில்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அவை விரைவில் திறந்து வைக்கப்படவிருக்கின்றன.

முட்டுக்காட்டில் உள்ள படகு இல்லம் 8—1—1984 முதல் செயல்படத் தொடங்கியது.

அயல்நாட்டிலிருந்து குளுமை வசதி கொண்ட 5 டாட்சன் கார்களும், 3 அம்பாசிடர் கார்களும் வாங்கப்பட்டுள்ளன. அனுமதி பெற்ற வாடகைக்கார்களாக இவை இருக்கும்.

**வருங்காலத் திட்டங்கள்**

இக்கழகம் பின்வரும் திட்டங்களைச் செயல்படுத்தக் கருதியுள்ளது :—

1. கோயம்புத்தூரில் தற்போதுள்ள தமிழ்நாடு ஓட்டலில் ரூ. 35 இலட்சம் செலவில் கூடுதல் மாடி கட்டுதல்.





2. 1984–85 ஆம் ஆண்டில், தேனி, புதுக்கோட்டை, நாகப்பட்டினம், காரைக்குடி, மேல்மருவத்தூர் ஆகிய இடங்களில் பயணவழி இல்லங்கள் கட்டுதல்.

3. சென்னையில் 3 நட்சத்திர ஓட்டல் கட்டுதல்.

4. சென்னையில் உள்ள ஓட்டல் ஒன்றை விலைக்கு வாங்குதல்.

5. 4 புதிய சொகுசுப் பேருந்துகள் வாங்குதல்.

6. குறைந்த செலவில் சுற்றுலா மையங்களைக் காணவரும் பயணிகளுக்கும் நம் நாட்டுப் பயணிகளுக்கும் பல்வேறு சுற்றுலா மையங்களில், குறைந்த கட்டணத்தில் தங்குமிட வசதியளிக்கும் இல்லங்கள் கட்டுதல்.

இவை தவிர, பல்வேறு பிரிவு ஊழியர்களுக்கு 1–1–1984 ஆம் நாள் முதல் கீழ்க்கண்டவாறு நிலையான அகவிலைப்படியை உயர்த்தியதும் குறிப்பிடத்தக்கது :—

136255

**போக்குவரத்துப் பிரிவு**

| | | |
|---|---|---|
| ஓட்டுநர்கள் மற்றும் கம்மியர்கள். | .. | ரூ. 50 மாதந்தோறும். |
| மற்றவர்களுக்கு | .. | ரூ. 30 மாதந்தோறும். |

V211,31 N84
N84.65-3 F4

**ஓட்டல் பிரிவு**

| | |
|---|---|
| நிலையான அகவிலைப்படி பெறும் ஊழியர்கள் யாவருக்கும். | ரூ. 30 மாதந்தோறும். |

இந்தியத் துணைக் கண்டத்தில் சுற்றுலா வளர்ச்சியிலும் குறிப்பாக சுற்றுலா வளர்ச்சிக் கழக அமைப்பு, மற்றும் நிர்வாகத்திலும் தமிழ்நாடு சிறந்த பணிகளை ஆற்றிக் கொண்டு வருகிறது. இந்த முயற்சிக்கு இந்திய அரசின் சுற்றுலாத் துறை உதவி செய்ய முன் வர வேண்டுமென்று தமிழக அரசு எதிர்பார்க்கிறது.